ஆனந்தகந்தம்

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்.

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 15

ஆனந்தகந்தம்

பதிப்பாசிரியர் :

வைத்திய விசாரத, ஆயுர்வேத சிரோமணி,

S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரி

பாரத் ஆயுர்வேதசாலா, திருச்சிராப்பள்ளி.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்,

தஞ்சாவூர்.

2005 விலை : ரூ. 120-00

நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

நூற்பெயர்	:	ஆனந்தகந்தம்
பதிப்பாசிரியர் கள்	:	S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரி
வெளியிடுபவர்	:	இயக்குநர், சரசுவதி மகால் நூலகம்
வெளியீட்டு எண்.	:	15
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	பதிப்பு
வெளியீடு	:	, 2005
தாள்	:	TNPL 18.6 kg.
நூல் அளவு	:	21 செ. மீ x 14 செ.மீ.
பக்கங்கள்	:	360
படிகள்	:	1000
எழுத்து	:	12 புள்ளிகள்
அச்சிட்டோர்	:	சரசுவதி மகால் நூலக அச்சகம்
புத்தகக்கட்டு	:	மெலிந்த அட்டை
பொருள்	:	மருத்துவம்
விலை	:	ரூ. **120-00**

வெளியீட்டாளர் முகவுரை

பண்டைய மகரிஷிகளும், சித்தர்களும் தங்கள் அனுபவ ஞானத்தால் தோற்றுவித்த ஒரு மருத்துவ முறையே இரசவாதம் என்பதாகும். இதனை இரசவேதம் எனவும் குறிப்பர். பொதுவாக இரசவாதம் என்பது இரும்பையும் செம்பையும் தங்கமாக்கும் இரகசிய முறைகள் அடங்கிய சாத்திரம் எனப் பெரும்பாலானோர் கருதினாலும், அது மூலிகைகள் மட்டுமின்றி உலோக தாதுக்களிலிருந்தும், ரஸத்தின் கலவையாலும் அருமருந்துகளைத் தயாரிக்கும் அற்புத நெறியைக் கூறும் சாத்திரம் என்பதே உண்மை.

சரசுவதி மகால் நூலகத்தின் வெளியீடாக **ஆனந்தகந்தம்** என்ற பெயரில் மலரும் இந்நூல் ரச கண்டம், ரசாயன கண்டம், வாத கண்டம், சித்தி கண்டம் என்ற ரசசாத்திரத்தின் நான்கு உயர்நிலையை விளக்குவதாகும். மன்னர்களால் தஞ்சை அரண்மனை நூலகத்தில் சேகரிக்கப்பெற்ற கிரந்தச் சுவடிகள் வரிசையில் எண். 10776 என்ற ஏட்டுச் சுவடியை ஆதாரமாகக் கொண்டு இந்நூல் பதிப்பிக்கப்பெற்றுள்ளது. வடமொழி மூலத்தை சிறப்புற மொழிபெயர்த்து பதிப்பித்துத்தந்த வைத்திய விசாரத, ஆயுர்வேத சிரோமணி திரு. எஸ். வி. ராதாகிருஷ்ண சாஸ்திரி என்ற ஆயுர்வேத நிபுணரின் பணி என்றென்றும் பாராட்டுக்குரியதாகும்.

இந்நூல் சிறப்புற வெளிவரத் துணைநின்ற சரசுவதி மகால் நூலக நிருவாக அலுவலர் திரு. இரா. சுப்பிரமணியன், வெளியீட்டு மேலாளர் முனைவர். குடவாயில் பாலசுப்ரமணியன் ஆகியோருக்கும், பதிப்புத்துறை பணியாளர்களுக்கும் எனது பாராட்டுக்கள்.

இந்நூலினை அச்சிட நிதி உதவி நல்கிய நடுவண் அரசுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மா. வீர சண்முக மணி, இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்
19-7-2005

முன்னுரை

"**ஆனந்தகந்தம்**" என்ற பெருடைய இவ்வெளியீட்டில் ஓர் ரஸவாத நூல் அடங்கியுள்ளது. இதுவரையில் வெளிவந்திருக்கும் நூல்களைக்காட்டிலும் இது மிகவும் விரிவாகவும், தெளிவாகவும், உபதேசிக்கப்பட்ட ஓர் அரிய நூலாகும். நமது முன்னோர்கள் ரஸாயன சாஸ்திரத்திலும், ரஸவாதத்திலும் பழையகாலந்தொட்டு பல நூற்றாண்டுகளாக அரிய பாடுபட்டுத் தங்கள் அனுபவங்களைத் தமிழிலும் ஸம்ஸ்கிருதத்திலும் அநேக நூல்களில் எழுதி வைத்திருக்கிறார்கள். ஆனால் நமது விஞ்ஞான முன்னேற்றம், நம் நாட்டில் ஏற்பட்ட அமைதிக் குறைவால் சென்ற சில நூற்றாண்டுகளாகத் தடைப்பட்டுப் போயிற்று. ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் நாடு ஒன்றுபட்டு, நாட்டில் சமாதானம் நிலவியது. அவ்வாட்சியின் முதற்பகுதியில் ஆங்கிலேயர் நமது கலை, விஞ்ஞானம் முதலியவைகளைக் கண்டு வியந்து அதை வளர்க்க ஏற்பாடு செய்தன ரெனினும், நாளடைவில் ஆளும் மனப்பான்மை மேலிட்டு நம் நாட்டுக் கலை விஞ்ஞானங்களில் அவர்களுக்கிருந்த மதிப்புக் குறைந்து விட்டது. அதனால் நம் நாட்டினருக்கே நமது கலை விஞ்ஞானங்களில் பற்றுதல் குறைந்து அவற்றின் முன்னேற்றம் அறவே நின்று விட்டது எனலாம். இப் பொழுது நல்லகாலம் பிறந்துவிட்டது. நம்நாடு சுதந்திரம் அடைந்ததன் பயனாக நம் நாட்டுக் கலைச் செல்வங்களுக்குப் புத்துயிரளிக்க வேண்டும் என்ற பேரவா நமக்கு எழுந்திருக்கிறது. அதற்காக வேண்டிய ஆராய்ச்சியும் துவக்கப் பட்டிருக்கிறது. அவ்வித சேவையில், மொழி பெயர்ப்புடனும், முகவுரைகளுடனும் வெளிவந்துள்ள இவ்வரிய வெளியீடு முதற்படியாகும்.

இதில் அடங்கியிருக்கும் ரஸாயன, ரஸவாதப் பிரயோகங்களைச் செய்து பார்த்து அதன் முழு பிரயோஜனத்தையும் நம் நாட்டினர் அடையும்படி செய்வது நமது விஞ்ஞான ஆராய்ச்சியாளரின் கடமையாகும்.

இந்நூலை வெகு பாடுபட்டுத் தெளிவான தமிழ்மொழி பெயர்ப்புடனும், முகவுரையுடனும் பதிப்பித்து உதவிய ஆயர்வேதவிசாரத் ஸ்ரீ எஸ்.வி. ராதாகிருஷ்ண சாஸ்திரி அவர்களுக்கு எங்கள் நன்றி உரித்தாகும். ஆங்கிலத்தில் ஸ்ரீ கே. வாஸுதேவ சாஸ்திரி எழுதி உதவியிருக்கும் முகவுரை தற்கால விஞ்ஞான ஆராய்ச்சியாளர்களின் கவனத்தை இந்நூலின் சார்பாகத் திருப்பும் என்று நம்புகிறோம்.

இந்நூலையும் இதுபோன்ற பல அரிய நூல்களையும் பதிப்பிப்பதற்காகத் தகுந்த நிதியுதவி செய்து வரும் நமது சென்னை அரசாங்கத்தாருக்கு நாங்கள் என்றும் கடமைப் பட்டுள்ளோம்.

S. கோபாலன்,

தஞ்சை.

20.7.1952.

கவுரவக் காரியதரிசி.

ஸரஸ்வதி மஹால் நூல் நிலையம்,

INTRODUCTION.

"Anandakandam" or the **'Root of Bliss'** as the present work is called, is a part of Tantric literature. Tantras cover not only the modes of worship of deities, but also several arts and sciences. These are Architecture, Sculpture, Paintings, Music and Dance, which are necessayr adjuncts of worship, as also medicine, anatomy, chemistry and Atomic Science, Science of Breath, and higher Psychlogy, for producing rare powers of protecting and prolonging life, and acquiring superhuman powers called siddhis. The main object in view is of course spiritual progress which all these powers subserve. The present treatise has for its object the promotion of health and longevity with the help of medical recipes chiefly metallic preparations, and treatment with atomic energy from mercury. The transmutation of baser metals into gold and various chemical processes dealing with metals are by products in the processes.

Appropriately to the name **"Anandakandam"**, this work is divided into two **"Visaranties"** or places of restful peace. Peace, as every one knows, is a preliminary requsite of Ananda or Bliss.

The first part is called **"AMRITEEKARANA VISRANTI"** and deals with "Amriteekarana", or the art of defying old age, disease and death. This is sought to be achieved by what is known as Ras Vadha or tapping atomic energy from mercury. Another method by which Amriteekarana is achieved is by medical recipes known as "Rasayanas". These Rasayanas are some of them single herbs and single inorganic substances and others, combinations of these. Regulated diet and regulated

modes of life are prescribed for using these Rasayanas. The third method is the simple process of regulated diet and habit, by themselves. It may be mentioned in passing, that this thrid process has appealed itself to students of modern science; and the valuable hints about diet and modes of life to suit particular seasons and climatic conditions given in this work (chapter 17,18 and 19 of part I) deserve a close study by students of research. A fourth method is by Yoga or the control of breath and mind.

The second part is called **"KRIYAKARNA VISRANTI"** and deals with chemical processes involving metals, metallic ores, alloys, and precious stones so as to make them serve as medical agencies for fighting disease, old age death, and also with various rare and valuable herbs and their uses for a similar purpose.

TREATMENT WITH ATOMIC ENERGY.

Mercury is subjected to several process totaling18 in number before it attains a stage in which it yields atomic energy. The actual treatment is called **"Deha Vedha"** or boring into the body, as distinguished from **"Loha Vedha"** or boring into the metals resulting in transmutation of baser metal into gold, which is achieved by mercury in that state. **"Loha Vedha"** or boring into the metals is easily recongnised by modern studenrs of Atomic energy who are familiar with the process known as 'boring of the atom'. **"Deha Vedha"** is unknown to modern Science which has directed its attention in the first instance to the means of destruction, instead of to the means of protection of the human body. **"Deha Vedha"** can appropriately be called boring of the cell.

Mercury in the state of Vedha or 'boring state' is thus capable of boring into the atom and boring into the cell. The 18 Samskaras or processes to which mercury is subjected before it reaches the 'Vedha' state, yield mercury with different properties, at the end of each process. The names of the processes suggest that in the different processes, mercury is treated as if it were a living entity. The names are:-

1. **Swedena** or causing it to perspire by exposing it to medicated steam.
2. **Mardana:** Giving it blow.
3. **Murchhana:** making it lose consciousness and stop breath.
4. **Utthapana:** Reviving it.
5. **Patana:** Making it fall down.
6. **Nirodhana:** Confining it.
7. **Niyamana:** Bringing it under discipline.
8. **Deepana:** Increasing its appetite.
9. **Anuvasana:** Making it more energetic.
10. **Charana:** Feeding it with morsels (of mica).
11. **Jarana:** Helping it to digest the morsels.
12. **Garbhdruti:** Causing the food to become part and parcel of its body by liquifying it.
13. **Bahyadruti:** Feeding it with chemically digested food (of mica)
14. **Ranjan:** Adding to it colour and lustre.
15. **Sarana:** Preparing it for moving at will in all directions (by providing a vehicle of Diamond)
16. **Anusarana:** Further reptition of Sarana.
17. **Pratisarana:** Further repetition of Sarana.
18. **Vedha:** Helping it to broe through atoms and cells.

Special Chemical apparatus called yantras for

carrying out the several process are also describe in detail, as also the methods of preparing oils, decoctions and other ingredients for the several processes.

An extraordinary provision in this treatise is the disciplined life and propitiation of deities prescribed as a preliminary to the undertaking of the chemical and atomic processes described in this work. Their relevance and necessity are a matter for investigation. It must be mentioned that the subject of using mercury for tapping atomic evergy is dealt with by numerous ancient treatise both in sanskrit and Tamil, and in all these treatise, the preliminary discipline and propitiation called **"Rasa Deeksha"** is uniform prescribed. Trasmutation os metals is carried out by modern science by process involving the use of electricity. And it must be expected that if such trasmutation should be possibe by means of mercury in the Vedha stat, electricity must play a necessary part in the process. And how did the ancients get this electricity? As in everything else undertaking by the men of the East, the process has been subjective rather than objective. Electric energy is to be found in the human body, and the discipline prescribed, it may be safely guessed, has been intended to increase the quantity and power of human electricity so that anything touched by those who have undergone the disciple may be charged sufficiently for starting the atomic process that is involved in the process resulting in the Vedha state.

This explains the failure of many alchemists who have taken the trouble to get the details of the processes from books and men of the ascetic order who are known to have succeeded in the trasmutation, but have not cared to observe the discipline necessary for storing up the electric energy for starting the process. Celibacy is the first requisite in the descipline for storing up electric energy, and it is no wonder that those who are known to have all lived an ascetic life.

Although the process and the books containing them in more or less detail have been public property all along, in our country. Alchemy has in most cases proved a dangerous speculation resulting in the ruin of many a rich man. The reason is to be found in the neglect of the subjective process for storing up electricity which is uniformly prescribed in all the books. It is just possible that if either the discipline is undergone as a preliminary to the performance of the experiments resulting in Vedanta state, or if electricity is suppled by some other means for helping to start the reactions, that we may succeed in getting at the Vedha state which appears to be the state of the element in which is easily separable into neutrons capable of boring through metals and the cells of the human body in an orderly manner so as to produce the transmutation in the one case, and energisation in the other.

It must be remembered that the various energetic by-product that start out as a result of atomic fission are capable of absorption by suitable means, and it may be fairly surmised that in the method used for Loha Vedha and Deha Vedha the destructive rays are absorbed, while the constructive ones are allowed to have free play. The success in both the Vedhas open out possibility for protection of human life even from the effects of the explosion of the atomic bomb, and the accukulation of the precious metals to enrich the state treasury at will.

The various processes described in this book for purfying mercury and other metals and converting them into compounds that are easily assimilabel by the human body are themselves very valuable and they have long been used in the preparation of Siddha medicines for effecting cures in incurable deseases. Till some fifty years ago, mercury and its compounds and arsenic and its compound which are now dreaded by doctors, have been

treated by processes which have made diseases which are now declared incurable. A branch of medical science that has so long been successful is worth revival, and the sooner our students western medicine and western science shed their superiority complex and approach the accumulated experience of our countrymen based on the discoveries of Yogis, Siddhas and Rishis with due respect, the better for our country.

An English version of this work will soon be published so that even students who have not equipped themselves with the requisite knowledge of Sanskrit may easily follow the contents of this book. But it must be added that there is such a vast deal of cultural wealth and discovery of scientific value in the works of our wise men who have uniformly employed Sanskrit as their medium, that it is worthwhile for anyone, and more so for an India, to acquire aworking knowledge of Sanskrit without which no Indian can call his cultural complete.

It is hoped that students with an aptitude for research and institutions interested in scientific research will take up the work of understanding and adopting the chemical and atomic processes that are contained in this volume and other works of similar nature.

Saraswathi Mahal,
Tanjore,
24.7.1952.

K. VASUDEVA SASTRI,
Pandit for Research.

ஸ்ரீ:

முன்னுரை

தஞ்சை ஸரஸ்வதீ மஹாலய நூல் நிலையத்திலிருந்து இது காறும் வந்த வெளியீடுகளில் ஆயுர்வேதத்தின் ரஸசாஸ்திரம் என்ற பிரிவில் குறிப்பிடத் தகுந்த ஆநந்தகந்தம் என்ற இந்நூல் தனிப் பெருமை வாய்ந்தது. ரஸசாஸ்திரத்தின் உட்பிரிவுகளான ரஸகண்டம், ரஸாயன கண்டம், வாதகண்டம், ஸித்திகண்டம் என்ற ரஸ சாஸ்திரத்தின் உயிர்நிலையை விளக்கும்-நான்கு விஷயங்கள் இந்நூலில் கூறப்பட்டிருக்கின்றன. ஸரஸ்வதி மஹாலயத்தில், நெ.10776 உள்ள கிரந்த லிபியில் எழுதப்பட்டுள்ள சுவடியை ஆதாரமாகக் கொண்டு இது பதிப்பிக்கப்பெறுகின்றது. இந்நூல் தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் பிரசுரமானதால் கருத்துரை தமிழில் தனியே தொகுக்கப்பட்டிருக்கிறது. சிவ நெறியில் தழைத்தோங்கி வளர்ந்த இத்தமிழகத்தில் திருமுறைகள், தமிழ் மறைகள் பல இயற்றித் தமிழ் வளர்த்த குறுமுனி அகத்தியர் திருமூலர் போன்ற சித்தர்கள் பலரால் இயற்றப்பெற்ற ரஸக்கிரந்தங்களையும் இந்நூலையும் ஆராய்ச்சி செய்ய இக்கருத்துரை பெரிதும் உதவி புரியலாம்.

ரஸார்ணவம் ரஸரத்னாகரம் ரஸஹ்ருதயம் ரஸஸாரம் போன்ற ரஸநூல்களில் கிரமத்தொகுப்பு இல்லாமல் ஆங்காங்கு சிதறிக்கிடக்கும் பல அரிய விஷயங்கள் இதில் மிக அழகாகவும் எளிதில் அறிய முடியும் வகையிலும் சீராகவும் தொகுக்கப் பட்டிருக்கின்றன. விஷயங்களை அதிக விரிவில்லாமலும் அதிகச் சுருக்கமில்லாமலும் விவரித் திருப்பது இந்நூலின் தனிச்சிறப்பாகும்.

இந்நூலைப் பதிப்பிக்க ஸரஸ்வதீ மஹாலயத்தில் கிடைத்த ஏட்டுச் சுவடியைத் தவிர இந்நூலின் வேறு இரு பிரதிகள் எனக்குக் கிடைத்தன. 1. மைஸுரிலுள்ள அரசாங்க

பிராசீன கிரந்த நிலையத்தில் தெலுங்கு லிபியிலிருந்து மூலச்சுவடியிலிருந்து அப்புத்தக நிலயத்தாராலேயே நகல் செய்யப்பட்டு அனுப்பப்பட்டது. 2. நிகிலபாரத ஆயுர்வேத மஹாஸம்மேளன பத்திரிகையில் பல வருஷங்களுக்கு முன் தொடர்ச்சியாக வெளிவந்துள்ள அச்சுப்பிரதி. இது திருச்சி ஆயுர்வேதாசார்ய ஸ்ரீ V. B. நடராஜ சாஸ்த்ரீ அவர்களின் புத்தகாலயத்திலிருந்து கிடைத்தது. இவ்விரண்டு பிரதிகளிலும் நகல் செய்பவரின் தோஷத்தாலும் எழுத்து மறைவினாலும் ஏற்பட்ட அசுத்திகள் மிகுந்திருப்பினும் இவை புத்தகத்தின் பாடசுத்தியை நிர்ணயிப்பதற்கு மிகவும் உதவி புரிந்தன.

மற்றும் இது காறும் வெளிவந்துள்ள ரஸார்ணவம் ரஸரத்னாகரம் போன்ற ரஸக்கிரந்தங்கள் பலவற்றில் ஆநந்தகந்தத்திலுள்ள பலவிஷயங்கள் காணப்படுவதால் அவைகளின் உதவியாலும் சுத்த பாடத்தை நிர்ணயிப்பது எளிதாயிற்று.

மூலப்பிரதியான ஸரஸ்வதீ மஹாலயத்தின் ஏட்டுச் சுவடி அதற்கு முன்னிருந்ததெலுங்கு லிபியிலுள்ள ஏட்டுச் சுவடியிலிருந்தும் நகல் செய்யப்பட்டதாக ஊகிக்க இடமிருக்கிறது. ஏனெனில், தெலுங்கு லிபியிலுள்ள ச,ள,க என்ற எழுத்துக்களுக்கும் ந,ஸ, எழுத்துகளுக்கும் ஒன்றுக்கொன்று ஏற்படும் ஒற்றுமைத் தோற்றம் இந்தப் பிரதியில் பல இடங்களில் தவறான எழுத்துமாற்றத்திற்குக் காரணமாயிருக்கிறது.

பாரததேசத்தில் ரஸ-ரஸாயன சாஸ்திரங்களின் உற்பத்தி:

ஆநந்தகந்தத்தின் அமைப்பையும் தன்மையையும் இயற்றியவரையும் பற்றிய ஆலோசனை எழுமுன் பாரததேசத்தில் ரஸ சாஸ்திரத்தின் உற்பத்தியையும்

வளர்ச்சியையும் பற்றி அறிய வேண்டியிருக்கிறது. ரஸ சாஸ்திரங்களின் சரித்திரம் நன்கு அறியப்பட்டால் தான் ரஸசாஸ்திரங்களில் ஆநந்தகந்தத்தின் ஸ்தானத்தை நிர்ணயிக்க முடியும்.

மேல் நாடுகளில் ரஸ ரஸாயன பௌதிக சாஸ்திரங்களின் (Chemistry Physics etc.) உற்பத்தியைப் பற்றிச் சரித்திராசிரியர்கள் பிரஸ்தாபிக்கையில் தாம்ரம் ஈயம் போன்ற மட்ட உலோகங்களைத் தங்கமாக்கி அதனால் பெரும் பொருள் ஈட்ட அரும்பாடு பட்டு கண்டுபிடிக்கப்பட்ட தாதுவாதம் (Alchemy)என்ற கலையே பிற்காலத்தில் வியாதி சிகித்ஸையிலும் மற்ற ஏனைய கலைகளிலும் பரவி அவைகளில் ஏற்பட்ட ஆராய்ச்சியின் பயனாக நம் நாளில் ரஸாயனம் (Chemistry)பௌதிகம் (Physics)போன்ற மூல விக்ஞானங்களின் உற்பத்திக்குக் காரணமாகியது எனக் கூறுகிறார்கள். இப்பணியில் கிரேக்க விஞ்ஞானிகளின் ஆராய்ச்சி முறையே பெரிதும் உதவியிருக்கின்றது.

பாரததேசத்தில் ரஸ ரஸாயன சாஸ்த்ரங்களின் உற்பத்தியைப்பற்றி ஆராய்வோம். ரஸ ரஸாயனப் பொருள்களில் ஆராய்ச்சி செய்ய நம் பெரியோர்களின் மனம் சென்றதற்கு தாதுவாதத்தைக் காட்டிலும் வேறொரு அரிய லக்ஷ்யம் இருந்திருக்கின்றதென்பது அவர்களின் நூல்களை ஆராய்வோருக்கு எளிதில் விளங்கும். அந்த லக்ஷ்யத்தைப் பற்றியுள்ள நூல்களை ரஸேச்வர தர்சனமெனவும் சித்தர் முறை எனவும் கூறுகிறார்கள். இந்தியாவில் உள்ள ரஸவிக்ஞானங்களும் சாஸ்திரங்களும் தெய்வநெறியை யறிந்துணர்ந்து தெய்வ நிலையை எய்வதன் பொருட்டு தேகத்தைச் சித்தமாக்குவதையே லக்ஷ்யமாகக் கொண்டுள்ளன. அதாவது நோய் நரை திரை அகன்று வெகு நாட்கள் வாழக் கூடிய திடமான சரீரத்தைப் பெற்று யோகம் சரியை கிரியை இவைகளால் மனத்தைச் சுத்தமாக்கியும் திடப்படுத்தியும்

அடைந்த ஆன்ம ஞானத்தால் உயிருடனிருக்கும் பொழுதே ஸம்ஸாரபந்தங்களை விலக்கிக் கொள்வதையே நம் முன்னோர்கள் பெறவேண்டிய பெரும் பேறாக மதித்தனர். அவ்விதம் தேகம் திடம் பெற வழிகளை வகுக்குங்கால் ரஸகந்தகங்களின் சேர்க்கை முறைகளால் ஏற்படும் கட்டு வேதம் போன்ற பல அரிய முறைகளைக் கண்டுபிடித்தனர்.

சரீரத்திலுள்ள ஒவ்வொரு அணுவும் எப்பொழுது பிரதிநிமிடமும் உற்பத்தியாகியும் அழிந்தும் போவதாலேயே இவ்வுடலுக்குச் சரீரம் (அழியும் தன்மையையுடையது) எனப் பெயரிட்டனர். மேற்கூறிய வேதபந்தமுறைகளால் சரீரத்திலுள்ள ஒவ்வொரு அணுவிலும் வேதியான ரஸம் ஊடுருவிப் பரவி அதன் அழிவுத்தன்மையை அகற்றித் திடப்படுத்துவதாலேயே தேகம் பலநாள் வாழ்ந்திருக்க முடியும் என்பதே அச் சித்தர்களின் கருத்து. தேகத்தின் ஒரு அங்கமோ பகுதியோ திடப்பட்டு மற்றொரு அங்கமோ பகுதியோ திடப்படாவிடில் அழிவு ஏற்படலாமாகையால் சரீரத்தில் அந்த ரஸாயன முறைகளை எவ்வகையில் சேர்த்தாலும் அவை வெகு எளிதிலும் சீக்ரமாகவும் ஒவ்வொரு அணுவிலும் ஊடுருவிப் பாய்ந்து பரவி ஏற்படும் வகையில் ரஸத்திற்கு சக்தி ஏற்படுத்துவது அவசியமாகியது.

இவ்வித லக்ஷ்யம் பூர்த்தி அடைய தயாரிக்கப்பட்ட ரஸாயனத்தைப் பரீக்ஷிக்கவே துவாதத்திலும் ஆராய்ச்சி செய்த .ர்கள். சரீரத்தின் ஒவ்வொரு அணுவிலும் ரஸம் பரவியுள்ளதா என்பதைப் பரீக்ஷிப்பது எளிதல்ல அதனால் செயற்கை முறையில் வேறு பரீக்ஷைகள் செய்வது அவசியமாயிற்று. அதாவது தாம்ரம் ஈயம் போன்ற மட்டதாதுக்கள் ஒவ்வொன்றும் அதனதற்கே இன்றியமையாததான இயற்கையான குணங்களையும் அமைப்பையும் அதன் ஒவ்வொரு அணுவிலும் காட்ட வல்லன. இவ்வித மட்ட உலோகங்களின் இயற்கையான

சேர்க்கையையும் தன்மையையும் மாற்றும் வகையில் ஒவ்வொரு அணுவிலும் மாறுதல் ஏற்படுத்தவேண்டும். உலோகங்களின் உயர்வோ தாழ்வோ அதன் அணு சக்தியையும் பாரத்தையும் நெருப்பைத் தாங்கும் சக்தியையும் இயற்கையையும் பொறுத்திருக்கிறது. இவைகளை மாற்றுவதாலேயே தாழ்ந்த உலோகத்தை உயர்ந்த உலோகமாக்கமுடியும். இவ்வித உலோகமாற்ற முறையையே வேதம் (அணுபேதம்) என்று கூறுகிறார்கள். வேதமே பிற்காலத்தில் (ரஸ) வாதமாகிவிட்டது.

சித்தர்கள் உலோகத்தில் வேதத்தைப் பரீக்ஷையாகச் செய்தனர். உலோகத்தில் வேதம் ஏற்பட்டுத் தன்மை மாறினால் அம்முறை தேகத்தின் அழிவுத் தன்மையையும் மாற்றவல்லதாகும் என்பதையும் பரீக்ஷ முறையில் நிச்சயித்தனர். உலோகவேத முறையில் செய்யப்படும் எல்லா முறைகளும் தேகவேத முறையில் உபயோகப்படாதெனவும், தேகக்கூற்றில் சில வேதமுறைகள் கெடுதி விளைவிக்கக்கூடு மெனவும் கருதி தேகவேத முறையில் அதிக கவனம் செலுத்தியிருக்கிறார்கள். ஆனால் தேகவேத முறையிலுள்ள ரஸாயனங்கள் எல்லாம் உலோக வேதத்தில் பயன் படுபவையே.

உலோகத்தில் பெற்ற வேத சித்தியை ஒருவன் பேராசையினால் பெரும் பொருள் ஈட்டுவதில் உபயோகிப்பானேயாகில் அவனது சித்தி பயன்பெறாது என்பது ஆங்காங்கு பிரஸித்தி பெற்றுள்ள திருவள்ளுவர், திருமூலர், நித்யநாதர்போன்ற பல சித்தர்களின் சரித்திரத்தை ஆராய்ந்தால் நன்கு விளங்கும். அதனால் ரஸதந்திரம் இயற்றிய எல்லா சித்தர்களும் பொருளாசையகன்றவர்களும், தெய்வ நெறியைக் கடைப்பிடிப்பவர்களும் தெய்வ நிலை யடைந்தவர்களுமாகவுமே காணப்படுகிறார்கள். இவ்வித ரஸ ஸித்தாந்தங்களை இயற்றியவர்களில் சிலர் ஸித்தர்கள் எனவும் சிலர் நாதர்கள் எனவும் பெயர் பெற்று விளங்கினர்.

இச்சித்தர்களின் நாகார்ஜுனன் முதலிய ஒரு சில பௌத்தர்களைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் சைவ நெறியைக் கடை பிடித்தவர்களே. சிவன் பார்வதி பைரவர் நந்தி இந்நால்வரே ரஸஸித்தஸம்பிரதாயத்தை ஆரம்பித்து வைத்தார்கள். தமிழ்மொழியில் கிரந்தமியற்றிய சித்தர் அனைவரும் நந்தியையே தமது முதற்குருவாகக் கூறுகின்றனர். தனது நூல் உபதேசபரம்பரையைக் கூறுமிடத்து யூகிமுனிவர்,

சிவன் தானும் வடமொழியில் வாதமார்க்கம்
சிறப்பாக விரு லக்ஷங்கிரந்தந்தன்னை,
கவந்தானுமைந்தாம் வேதத்திற்சொன்னார்
கருணை பெற உமையவளுந் தமிழாய் செய்து
பவந்தானும் நந்திக்குச் சொன்னபோது
பார்த்தவரும் நந்தி தன்வந்தரிக்குச் சொன்னார்
தவந்தானும் தன்வந்தரி அசுவனிக்குத்
தகை பெறவே அசுவனியும் விசுவனிக்கு

சொன்னதொரு விசுவனியும் அகத்தியர்க்கு
சொல்லிடவே அகத்தியரும் புலத்தியருக்கு
சுன்னதொரு புலத்தியரும் தேரருக்கு
கருணை பெற தேரருமே யூகிக்குத்தான்

... ... (வாதகாண்டம்)

என்று சிவன் பார்வதி நந்தி இவர்களையே ஆரம்ப குருவாகக் கூறியுள்ளார்.

திருமூலரும்,

நந்தி அருள் பெற்ற நாதரை நாடிடின்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி

மன்றுதொழுத பதஞ்சலி வியாக்ரமர்
என்றிவரென்னோ டெண்மருமாமே. (திருமந்திரம்)

என தனது வரலாற்றைக் குறிப்பிடு மிடத்துக் கூறியுள்ளார்.

காலாங்கர் என்ற தமிழ் சித்தரும் திருமூலரின் சீடராவார். இவரே அஸிதாங்கரென்று ஆநந்தகந்தம் இரண்டாம் அத்தியாத்தில் பைரவர்களில் ஒருவராகக் குறிப்பிடப்படுபவர். இச்சித்தர்கள் பைரவர்கள் என்றும் நாதர்கள் என்றும் இருவகையாகக் கூறப்படுகின்றனர். கோரக்ஷ(க்க)நாதர் திருமூலர் (மூலநாதர்), நித்யநாதர் போன்றவர் நாதவழியைப் பின்பற்றுபவர் என்றம், காலாங்கர், மந்தானபைரவர், ஸ்வச்சந்தபைரவர், பைரவர், காசண்டீபைரவர் போன்றவர் பைரவவழியைச் சார்ந்தவர்கள் எனவும் கூறப்படுகின்றனர்.

இச்சித்தர்களின் காலத்தை நன்கறிய போதிய பிரமாணமில்லை. இச் சம்பிரதாயம் அதர்வண வேதத்திலும் நன்கு பிரசாரமாகியிருக்கினறது. ரஸத்திற்கு வேதம் வரையிலுள்ள 18 ஸம்ஸ்காரங்களும், வேதம் செய்யப்பட்ட ரஸத்தால் தங்கம் முடிப்பதும் சந்திரகுப்தனின் காலத்திற்கு (கி.மு.325) முன்பே நன்கு பழக்கத்திலிருந்ததாகத் தெரிகிறது. சந்திர குப்தனின்மந்திரியும், அர்த்தசாஸ்திரத்தில் வல்லவனுமான சாணக்கியன் தனது அர்த்தசாஸ்திரக் கிரந்தத்தில் தங்கம் வெள்ளி போன்ற உயர்ந்த விதக்கலப்படங்கள் கலப்படம் ஏற்படும் விதத்தையும் அவ்விதக்கலப்படங்கள் ஜனங்களை ஏமாற்றுவதற்காக உபயோகப்படுத்தப்படின் தண்டிக்கும் வழியையும் குறிப்பிடுமிடத்து தங்கத்திற்கு வேதஜம் என (வேதத்தினால் ஏற்படுவதென) ஒரு வகை இருப்பதாகக் கூறியுள்ளார்கள்.

மற்றும் சரகஸுச்ருதஸம்ஹிதைகளில் உள்ளுப யோகத்திற்கும் வெளியுபயோகத்திற்கும் எல்லாவித ரஸ-உபரஸ-உலோக-ரத்னங்களின் உபயோகங்கள் மிக விரிவில்லாமல் பல முறைகள் கூறப்பட்டுள்ளன.

திருமூலர் தன்னுடன் வியாகரண பாஷ்யம் செய்த பதஞ்சலியும், வியாக்ரபாதரும் நந்தியிடம் வித்யாப்யாஸம் செய்தவர் எனக் கூறுவதால் பதஞ்சலியின் காலமென தற்காலத்திய சரித்திர ஆராய்ச்சியாளர்களால் நிர்ணயிக்கப்பட்ட கி.மு.இரண்டாம் நூற்றாண்டில் திருமூலரும் இருந்தார் எனக் கொள்ளலாம். ஆக இக்காலவரைக்கு முன்னரே ரஸத்தின் ஸம்ஸ்காரங்களும் மற்ற உபரஸ-உலோக வகைகள், சிகித்ஸை முறையிலும் ரஸாயன முறையிலும் அதிகமாக உபயோகப்படுத்தப்பட்டு வந்தன என்பது நன்கு விளங்கும்.

ஆநந்தகந்தத்தின் காலமும் இயற்றியவரும்:

இக் கிரந்தத்தை இயற்றியவர் பைரவர் என்றும் மஹாபைரவர் என்றும் ஆங்காங்கு இந்நூலில் குறிப்பிடப்படுகிறது. ஆனால் நூல் முழுவதும் சிவனும் பார்வதியும் ஸம்பாஷிக்கும் முறையிலேயே தொகுக்கப்பட்டிருக்கிறது. சிவனே பைரவர் என்றும் அழைக்கப்படுகிறார். அதனால் இப் பைரவர் யார் என்பதை அறிய இயலவில்லை.

அதனால் பைரவ வழியைச் சார்ந்த ஒரு சித்தர் யோக நிலையில் தான் கண்டுகளித்த சிவபார்வதீ ஸம்பாஷணையையே இப்புத்தகரூபமாக வெளியிட்டார் என்று ஊகிக்கலாம்.

ஆகவே, கிரந்தமியற்றியவரை நிர்ணயிக்க முடியாதிருப்பதால் இதன் காலத்தையும் அறிவது சிரமமாயிருக்கிறது. ஆனால் இவ்வித சந்தர்ப்பங்களில் சரித்திராசிரியர்கள் கீழ்க்கண்ட வழிகளைப் பின்பற்று கிறார்கள். (1) கிரந்தத்தில் குறிப்பிட்டுள்ள விஷயங்களைப் பற்றி ஆலோசித்தல், (2) இந் நூலுக்கும் மற்ற சில நூல்களுக்குமுள்ள விஷய அமைப்பு ஒற்றுமைகளைக் கொண்டு கிரந்த ம் இயற்றப்பட்ட காலத்தை நிர்ணயித்தல் என, நாமும் இவ்வழி புகுவோம்.

ரஸார்ணவம் ரஸரத்னாகரம் இவ்விருகிரந்தங்களிலும் தொடர்பில்லாமல் ஆங்காங்கு சிதறியவைகளாகக் காணப்படும் பல விஷயங்கள் இங்கு விஷயவாரியாகத் தொகுக்கப்பட்டிருக்கின்றன. அங்கு கூறப்படாத ரஸம்-உபரஸங்கள்-உலோகங்கள் இவைகளின் சுத்தி பஸ்மமுறை இவைகளும் இங்கு கிரமமாகக் கூறப்பட்டுள்ளன. எல்லா ரஸக்கிரந்தங்களுக்கும் பிராசீனம் எனக் கருதப்படும் ரஸார்ணவத்தில் 11-15 படலங்களில் தொகுக்கப்பட்ட ரஸத்தின் விசேஷ ஜாரணை முறையும், மூலிகை-ஜல-ரத்ன பந்தங்களும் ஆநந்தகந்தத்தில் அதே ச்லோகங்களில் பதங்கள் கூட சிறிதும் மாறுபடாத வகையில் அதே முறையில் அமிருதீகரணவிச்ராந்தியின் 5,23,24 உல்லாஸங்களில் காணப்படுகின்றன. கி.பி. பதினோராவது நூற்றாண்டிற்குப் பின்னர் உபயோகத்திலிருந்து வருவதாகச் சரித்திராசிரியர்கள் கருதும் கஞ்சா, அபின் இவைகளின் உபயோக முறை இதனுள் கூறப்பட்டுள்ளது. பேரோஜம் ஸாபுணி போன்ற பிராகிருதபாஷையிலுள்ள பெயர்கள் ஆங்காங்கு உபயோகப்படுத்தப்படுகின்றன.

ரஸரத்னஸமுச்சயம், ரஸஸங்கேதகலிகை, ரஸப்பிரகாசஸுதாகரம், ஆயுர்வேதப் பிரகாசம், ரஸகாமதேனு இவைபோன்ற ரஸ நூல்களைவிட இது முற்காலத்தியது எனக் கருதவும் பல சான்றுகள் காணப்படுகின்றன. ரஸரத்னஸமுச்சயத்திலும், ஆயுர்வேதப்பிரகாசத்திலும் அக்கிரந்தங்கள் இயற்றிய சமயத்தில் துருதிகள் வழக்கிலில்லாததால் செய்வகை முழுவதும் அறியப் படவில்லை எனக் கூறப்பட்டு துருதி முறைகளும் விடப்பட்டன. ஆநந்தகந்தம் இயற்றிய காலத்தில் துருதிகள் வழக்கிலிருந்தன என்பதற்கு அம்முறைகள் கூறப்படும் வகையே தகுந்த சான்று.

ரஸரத்ன ஸமுச்சயத்திலும் மற்ற ஏனைய கிரந்தங்களிலும் கந்தகம் அப்பிரகம் இவைகளை ரஸங்கள்

எனவும், உபரஸங்கள் எனவும், மஹாரஸங்கள் எனவும் பிரிவுகளாக்கிக் கூறப்படுவது போல் இங்கு பாகுபாடு கிடையாது. யசதம் (Zinc) என்ற லோஹமே ஆநந்த கந்தத்தில் கூறப்படவில்லை. ஆனால் கர்பரம் என்ற உபரஸத்திலிருந்து ஸத்வம் எடுக்கும் முறை கூறப்படுகின்றது. அதையே (Zinc)யசதம் எனக் கருதுகின்றனர். ஆனால் அப்பிரக ஸத்வத்தை உலோகமெனக் கருதி உலோகவர்கத்தில் சேர்த்தது போல் இதையும் உலோகமாகக் குறிப்பிடாதது கவனிக்கத் தகுந்தது.

அதனால் ரஸரத்னஸமுச்சயத்திற்கும் ஏனைய மற்ற ஸங்கிரஹ க்ரந்தங்களுக்கும் முன்னரே இந் நூல் இயற்றப்பட்டிருக்கலாம் எனத் தெரிய வருகின்றது.

ஆநந்த கந்தத்திலுள்ள சில உல்லாஸங்கள் அவ்விதமே ரஸார்ணவத்தில் காணப்படுவதாக முன் குறிப்பிட்டோம். அவ்விதமே ரஸரத்னாகரத்தின் பல பாகங்கள் அதே முறையில் ஆநந்தகந்தத்தில் காணப்படுகின்றன.

ஆக, ஆநந்தகந்தம் - ரஸாரணவம் ரஸரத்னாகரம் இவைகளுக்குப் பின்பும், ரஸரத்னஸமுச்சயம் ரஸஸங்கேதகலிகா ஆயுர்வேதப் பிரகாசம் இவைகளுக்கு முன்பும் இயற்றப்பட்டதாகக் கொள்வது யுக்திக்கு விரோதமாகாது. ஆக கி.பி.10வது நூற்றாண்டிற்குப் பின்னும் பதிமூன்றாவது நூற்றாண்டிற்கு முன்னும் என்று இதன் காலத்தை வரையறுக்கலாம்.

ஆநந்தகந்தத்திலுள்ள ரஸதீக்ஷை முறை, ஸந்தியா வந்தனம், அமரீகல்பம், புல்லுருவி முறை-இவை பலவாறாக தமிழ் நாட்டில் சைவ நூல்களிலும், வைத்ய நூல்களிலும் பிரசாரத்திலிருப்பதாலும், ஸ்ரீ சைலத்தில் ஸித்திமுறையைப் போற்றிக் கூறியிருப்பதாலும் ஆநந்தகந்தம் தென்னாட்டின ராலேயே செய்யப்பட்டதாகக் கருதவும் இடமிருக்கிறது.

ஏனைய ரஸக்கிரந்தங்களில் காணப்படாத சில அபூர்வ விஷயங்கள் ஆநந்தகந்தத்தில் கூறப் படுகின்றன. அவையாவன:-

ஆரோட ரஸ உபயோக முறை.

பதினைந்து குடிகைகள் முறை.

திவ்ய மூலிகை கல்பங்கள்.

விடியற்காலையில் ஜலபான ரஸாயனமுறை.

தினசர்யையும் ருதுசர்யையும்.

யோக ரஸாயனம்.

கடீப்பிரவேசரஸாயன முறை.

ஆநந்தகந்தத்திலுள்ள விஷயங்கள் ஆராயுங்கால் தமிழ் நாட்டு சைவ சமயத்தினரால் ஜீவன் முக்திக்குச் சாதனமாகக் குறிப்பிடப்பட்டுள்ள யோகம், சரியை, கிரியை, ஞானம் என்ற நான்கும் பூர்ணமாக இதில் விளக்கப்பட்டிருப்பது புலனாகும்.

ஆனந்தகந்தத்திலுள்ள இடைச் செருகல்கள்:

இந்நூலில் அமிருதீகரணவிச்ராந்தியில் கடைசியிலிருக்கும் இருபத்தைந்தாவது உல்லாஸமும், இருபத்தாறாவது உல்லாஸமும் கிரியாகரணவிச்ராந்தியின் கடைசியிலிருக்கும் எட்டாவது உல்லாஸமும், ஒன்பதாவது உல்லாஸமும் பிற்காலத்தில் கிரந்தத்தின் அனுபந்தமாகச் சேர்க்கப்பட்டுள்ளதெனக் கருத இடமிருக்கின்றது. பரிபாஷைச் சொற்களின் விரிவுரையும் யந்திரம் முதலியவைகளின் விவரணமும் (அ.வி.25-26 உல்லாஸங்கள்) திவ்யௌஷதிகளின் விவரணமும் (கி.வி.8-வது உல்லாஸம்) ஸோமதேவரால் இயற்றப்பெற்ற ரஸேந்திரசூடாமணியிலிருந்து எடுக்கப்பட்டவை. எண்பத்தெட்டு மஹௌஷதி களின் விவரணம் (கி.வி.9-வது உல்லாஸம்)

தன்வந்தரி நிகண்டுவிலிருந்து ராஜநிகண்டுவிலிருந்தும் தொகுக்கப்பட்டுள்ளது.

இவ்விடைச்செருகலை நிரூபிக்க மேற்கண்ட உல்லாஸங்களே போதுமானவை. ஏனெனில், இந்நூலில் கொடுத்துள்ள அனுவாஸனம், வாஸனாமுக சாரணம், அம்லவர்கம், ச்வேதவர்கம், பீதவர்கம், நியாமகயந்திரம், ஸாரணாயந்திரம் போன்ற பல பரிபாஷைச் சொற்களின் விவரணம் அவ்விரிவுரையில் காணப்படவில்லை. கிரந்தத்திற் கூறப்படாத கிராஸமானம், உத்பாடனம், பிஞ்சரீ, ஆந்தராலிகயந்திரம், தாபிகாயந்திரம், கிரஸ்யந்திரம் போன்ற பல பரிபாஷைச் சொற்களின் விரிவுரை கூறப்படுகின்றது.

சில இடங்களில் பரிபாஷை விரிவுரைக்கும் பரிபாஷை உபயோகப்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்திற்கும் முரண்பாடு காணப்படுகின்றது. முக்கியமாக ரஸத்தின் மர்தன ஸம்ஸ்காரத்தில் கூறப்பட்டுள்ள ஔஷதங்களாலேயே மூர்ச்சன ஸம்ஸ்காரங்கள் சொல்லப்பட்டுள்ள முறைகளுக்குப் புறம்பானது. மற்றும் ஜாரணத்திற்கு ஸமுகம் எனவும் நிர்முகம் எனவும் பிரிவுகள் கூறப்பட்டுள்ளது முன்கூறப்பட்ட ஜாரணை முறைக்குப் பொருந்தாது. மற்றும் ஜாரணத்தின் இருவகைகளை விவரிக்கும்மிடத்து பீஜத்தைக் கிரகிப்பதால் ஸமுகம் எனவும் பீஜம் கொடுக்கப்படாவிட்டால் நிர்முகம் எனவும் விளக்கம் அளிக்கப்படுகின்றது. கந்தகாப்பிரக சாரணத்தால் முகம் உண்டாக்கும் முறை கூறப்பட்டுள்ளதே தவிர தங்கம் வெள்ளி இவைகளின் பீஜத்தால் முகம் உண்டாக்கும் முறை முன் கூறப்படவில்லை. மேலும் யந்திர லக்ஷணங்கள் கூறும் உல்லாஸமும் மஹௌஷதிகள் கூறும் உல்லாஸமும் மைஸூரிலிருந்து கிடைத்த பிரதியிலும் மஹாஸம்மேளனம் பத்திரிகையிலும் காணப்படவில்லை.

ஆகையால் இவை பிற்காலத்தில் ஒரு ரஸாசார்யனால் கிரந்தத்திற்குத் தேவையான பாகம் என்று பிற

கிரந்தங்களிலிருந்தும் அப்படியே எடுத்துக் தொகுக்கப் பட்டதெனக் கூறலாம். நாமும் அவ்விதமே மூலத்தில் கடைசியில் பரிசிஷ்டம் என ஒரு பாகத்தில் இக்கிரந்தத்தில் கூறியவைகளுக்கு விவரணம் அவசியமான இடங்களில் பொருள் விளக்கமளிக்க பிற கிரந்தங்களிலிருந்து பல விஷயங்களை ஒன்றாகத் தொகுத்துச் சேர்த்துள்ளோம். இம்மாதிரி அனுபந்தங்கள் பிற்காலத்தில மூல கிரந்தத்தின் ஓரம்சமாகவே கருதப்பட்டிருக்கலாம் என ஊகத்திற்கு இடமிருக்கிறது.

இந்நூலில் கூறப்பட்டவை.

ரஸோத்பத்தி :

நூலின் ஆரம்பத்தில் இது பற்றிய ஒரு இதிஹாஸம் கொடுக்கப்பட்டுள்ளது. ராமாயணம், பாரதம் முதலிய இதிகாசங்களில் இக்கதை பிரஸித்தமானதே. தமிழ் வைத்ய நூல்களிலும் இக் கதை காணப்படுகின்றது. கொங்கணரும் போகரும் சிவகணங்களால் காப்பாற்றப்பட்டுள்ள தேசங்களிலிருந்து அவர்களின் அனுக்கிரஹத்தால் ரஸம் கொண்டுவரும் வழியைப் பற்றிக் கூறுகிறார்கள். அனால் அக்கதையை வேறொரு உட்கருத்துக் கொண்டதாக சிலர் கருதுகின்றனர். உலகின் உற்பத்தியையும், முக்கியமாக ரஸம் பூமியிலிருந்து வெளிப்படும் வழியையும் கூறவே தந்திர சாஸ்திரத்தின் பரிபாஷையில் அவ்வரும் பொருளை ஓர் கதையாகக் கூறியிருக்கின்றனர். வேதாந்தக் கருத்துகளைக் கூற இம்மாதிரி பல கதைகள் புராணங்களிலும் வேதத்திலும் காணப்படுகின்றன.

மேகம் மின்னும் பொழுது அதனுள் அடங்கியிருக்கும் மின்சார ஜோதியைக் காண்கிறோம். அந்த ஜோதிக்கு சக்தி அபாரம். அந்த சக்தி எங்கும் நிறைந்து தானிருக்கிறது.

ஆனாலும் அது ஒரு சமயத்தில் தான் வெளிப்படுகின்றது. நீராவி மேகமாக மாறும் போது சில மேகங்களில் வல மின்சார அம்சமும் (+ Electricity), மற்றும் சில மேகங்களில் இட மின்சார அம்சமும் (- Electricity)பிரிந்து நிறைகின்றது. அக்காலத்தில் வல அம்சத்தால் நிரம்பியதும் இட அம்சத்தால் நிரம்பியதுமான இருமேகங்கள் ஒன்றையொன்று நெருங்கும் போது இம்மேகங்களிலுள்ள அம்சங்கள் ஒன்றுக்கொன்று தாவி மின்னலுருவமாக வெளிப்படுகின்றது. தண்ணீரிலும் மற்ற எல்லா வஸ்துக்களிலும் நிறைந்த மின்சாரம் இரண்டாகப் பிரிந்து பின்னர் திரும்பி ஒன்றாகச் சேரும் போதே ஜோதியும் சக்தியும் வட இடமாக ஜ்வலிக்கிறது, ஒலிக்கிறது . இரண்டாகப் பிரிவது சக்தியுடன் ஜ்வலிப்பதற்குத் தான். இதைத்தான் ஜடசக்தி சேர்க்கையாகவும் சிவசக்தி ஸம்மேளனனெவும் ஹரிஹர ஸம்மேளனமெனவும் ஆழ்வார்களும் நாயன்மார்களும் கருதுகிறார்கள்.

சிவனாயும் சக்தியாயும் பிரிந்து ஒரே பரம்பொருள் பிரிந்த இருவரும் அன்பில் ஒன்றுபட்டதில் எழுந்த ஜோதி முருகப்பெருமான். சிவபெருமானின் வீர்யத்தை நெருப்பென்பர். (கிருசானுரேதா) அவ்வித நெருப்பு வெளி வருவது மேகத்தில் மின்னுருக் கொண்டு, பூமியின் அடியில் இவ்வித ஜடசக்தி ஸம்மேளனம் ஏற்படின் பூமியில் குழப்பமதிகமாகின்றது. பூமி நடுங்கிப் பிளக்கின்றது. பூமியின் உள்ளிருந்த அமுக்கம் விடுபட்டு முதலில் புகையுருவில் அக்னி வெளி வந்ததும் ஜடசக்தி சேர்க்கையால் ஏற்பட்ட அதிர்ச்சி நிற்கின்றது. (அக்னிபகவானைக் கண்டதும் சிவன் தனது போகத்தை நிறுத்தினார்) பிறகு நெருப்புடன் மலையினுள் சேர்ந்த கந்தகம் முதலிய தாதுக்களுடன் ரஸம் வெளிப்பட்டு வென்னீர் ஊற்றுகளில் சேர்ந்து அதன் வழியே குளிர்ந்த பள்ளங்களில் வந்து சேருகின்றது. இவ்வுத்பத்தி வரலாற்றையே கதையுருவத்தில் எழுதியுள்ளனர் என்பது ஆராய்ச்சியாளரின் கருத்து.

ரஸத்திலுள்ள தோஷங்கள்:

வேதம் ரஸாயனம் முதலிய கார்யங்களில் ரஸத்தை உபயோகப்படுத்து முன் ரஸத்திலுள்ள தோஷங்களை அகற்ற வேண்டியிருக்கின்றது. மருந்திற்கு உபயோகப்படுத்தப்படும் எல்லாவிதத் திரவ்யங்களிலும் தனித்தனியே குணதோஷங் களைப்பற்றி ஆராயுங்கால் ஒவ்வொரு திரவ்யத்திலும் சரீரத்திற்குக் கெடுதி செய்யும் சில அம்சங்களும் உள்ளன என்பது விளங்கும். அக்கெடுதி விளைவிக்கும் அம்சங்ககளைப் போக்கி குணம் தரும் பாகத்தைச் சீர் செய்வதே வைத்யனின் முதற்கடமை.

ரஸத்திலுள்ள தோஷங்கள் இயற்கை தோஷங்கள் எனவும் செயற்கை தோஷங்கள் எனவும் இருவகைப்படும். செயற்கை தோஷங்கள் (ஔபாதிக) தோஷங்கள் எனவும் யௌகிக தோஷங்கள் எனவும் இருவகையாக ஆநந்தகந்தத்தில் கூறப்பட்டுள்ளன. மற்ற ரஸக்கிரந்தங்களில் இவ்விதம் செயற்கை தோஷங்களின் இருவகைப் பிரிவினை காணப்படவில்லை.

ஆனந்தகந்தத்தில் கூறப்பட்டுள்ள பதினைந்து வித இயற்கை தோஷங்களும் அவ்வளவு விரிவுடன் மற்ற கிரந்தங்களில் காணப்படவில்லை. அக்னி, சபலம், மலம், கௌரவம், மதம், தரபம் என்ற இவையே மற்ற கிரந்தங்களில் குறிப்பிடப்படுகின்றன. இதில் யௌகிக தோஷமாகக் குறிப்பிடப்பட்ட விஷதோஷம் மற்ற கிரந்தங்களில் இயற்கை தோஷங்களில் கூறப்படுகின்றது. விஷப் பொருள்களின் சேர்க்கையால் ஏற்பட்டதால் யௌகிகம் (சேர்க்கையால் ஏற்பட்டது) எனக் கூறப்படுகின்றது. ஆனால் தாம்ரம் வங்கம் முதலிய செயற்கைச் சேர்க்கை தோஷங்கள் எவ்வாறு பாதனம் முதலிய ஸம்ஸ்காரங்களால் தனியே பிரிக்கப் படுகின்றனவோ, அவ்விதம் இத்தோஷத்தைத் தனியே பிரிக்க இயலாமையைக் குறிப்பதற்கே இயற்கை தோஷங்களில் இதை மற்றவர் சேர்த்துள்ளனர்.

சஞ்சுகங்கள் என ஏழு ஔபாதிக தோஷங்கள் உள்ளன. காலிகா மலினீ கபோதீ ரக்தகஞ்சுகா ஸலோமீ கிரிஜா பிங்களா என அவைகளுக்கு ஆநந்தகந்தத்தில் பெயர் கொடுக்கப் பட்டுள்ளது. ஜலம் மலை பூமி இப்பொருள்களுடன் உற்பத்தி காலத்திலும் பிறகும் ஏற்பட்டுள்ள சேர்க்கையாலும், ஈயம் காரீயம் இவ்விருதாதுக்களின் சேர்க்கையாலும் ரஸத்தின் மேல் ஏற்படும் ஒருமெல்லிய படலம் போன்றுள்ள மாறுதலைக் குறிப்பிடுகின்றன. அப்படலத்தில் ஏற்படும் நிறமாறுதலை இவைகள் குறிப்பிடவே காலிகா (கருப்பு) மலினீ (அழுக்கானது) கபோதீ (புறநிற முள்ளது) ரக்தகஞ்சுகா (சிவந்தது) ஸலோமீ (மயிர் போன்ற வெடிப்புள்ளது) கிரிஜா (மலை நிறமுள்ளது) பிங்களா (கருஞ்சிவப்பு நிறமுள்ளது)எனப்பெயர்கள் இடப்பட்டுள்ளன. மற்றும் சில கிரந்தங்களில் இக்கஞ்சுகங்கள் பர்படீ ஃபாடினி பேதினி என மூன்று தோஷங்கள் முறையே பூமி மலை ஜலம் இவைகளின் சேர்க்கையாலும், திராவீ மலகாரி என இரு தோஷங்கள் காரீயச் சேர்க்கையாலும் அந்தகாரீ த்வாங்க்ஷீ என இரு தோஷங்கள் ஈயச் சேர்க்கையாலும் ஏற்படுவன எனப் பெயர் மாறுதலுடன் குறிப்பிடப்படுகின்றன. அக்கஞ்சுகங்கள் முறையே அப்பளம் போன்று காய்ந்திருத்தல் விரிதல், மலங்களைக் கழித்தல், சரீரதாதுக்களை உருக்குதல் தோஷங்களை அதிகமாக்குதல், குருடாக்குதல், தொண்டையில் கரகரப்பு ஏற்படுத்துதல் என இவ்வேழு காரியங்களையும் செய்வதால் இக்காரணப் பெயர்கள் ஏற்பட்டனவே தவிர வஸ்து ஸ்வரூபத்தில் மாறுதல் கிடையாது.

ரஸத்திற்கு பதினெட்டு ஸம்ஸ்காரங்கள்:

ரஸத்திற்குச் செய்யப்படும் ஸம்ஸ்காரங்கள்-சுத்தி ஸம்ஸ்காரங்கள் எனவும் வேதஸம்ஸ்காரங்கள் எனவும் இருவகைப்படும். சுத்தி ஸம்ஸ்காரங்கள் ஸ்வேதனம், மர்தனம், மூர்ச்சனம், உத்தாபனம், பாதனம், நிரோதனம், நியமனம்தீபனம், அனுவாஸனம் என ஒன்பது வகை.

ஊர்த்வபாதனம், அதப்பாதனம் திர்யக்பாதனம் என பாதனத்திற்கு மூன்று உட்பிரிவுகள் உள்ளன. இவைகளின் லக்ஷணம் ஆங்காங்கு கொடுக்கப்பட்டிருக்கின்றது.

ரஸஸாரத்திலும் ரஸமார்த்தாண்டத்திலும் மற்ற ரஸக் கிரந்தங்களிலும் பட்டஸாரணம் தாவனம் வீர்யாநயனம் மலாபகர்ஷணம் சுத்தி சுசி முகீகரணம் என சில ஸம்ஸ்காரங்கள் அதிகமாகக் கூறப்பட்டுள்ளன. இவைகளில் பட்டஸாரணம் என்பது ரஸத்தைத் துணியில் வடிகட்டுவதும் மலாபகர்ஷணம் என்பது சிற்சில விசேஷ ஒஷதிகளால் ரஸத்தை அரைத்து அலம்பி ரஸமலத்தைப் போக்கு வதுமாகும். இவ்விரண்டும் ஸ்வேதன ஸம்ஸ்காரத்தில் செய்யவேண்டியவை. அதனால் ஆனந்த கந்தத்தில் தனியே குறிப்பிடவில்லை. தாவனம் சுசி சுத்தி என்ற மூன்று ஸம்ஸ்காரங்களும் சிற்சில விசேஷ ஸம்ஸ்காரங்கள் செய்த பின் ரஸத்தை சூடான காடியினாலோ வென்னீரினாலோ அலம்புவதற்குப் பெயராதலால் தனியே குறிப்பிட அவசியமில்லை. வீர்யாநயனமும் போதனமும் நிரோதனத்தைச் சேர்ந்தவைகளே. முகீகரணம் என்பது தீபனத்தில் ஒரு வகை. ஆதலால் இவை தனியே ஆநந்தகந்தத்தில் குறிப்பிடப்படவில்லை.

இவ்வொன்பது ஸம்ஸ்காரங்களையும் ஸம்ஸ்கார ஸ்வரூபத்தை ஆதாரமாக்கொண்டு ஸ்வேதனம் மர்தனம் பாதனம் என மூன்று விதமாகக் கொள்ளலாம். மற்ற எல்லா வகைகளும் இதனுள் அடங்கி விடுகின்றன. ஸம்ஸ்காரங்களில் செய்யப்படும் காரியம் ஒரே வகையா யிருந்தும் ஒரு ஸம்ஸ்காரத்திற்கு முன் அல்லது பின் செய்யப்படவேண்டியிருப்பதால் ஒவ்வொரு ஸம்ஸ்காரத் திற்கும் தனிப் பெயர் இடவேண்டிவருகிறது.

வேதத்திற்கு உபயோகமாயுள்ள ஒன்பது ஸம்ஸ்காரங்கள்-சாரணம், ஜாரணம், கர்பத்துருதி,

பாஹ்யத்துருதி, ரஞ்சனம், ஸாரணம், அனுஸாரணம், பிரதிஸாரணம், வேதம் என ஒன்பது. அவைகளில் அனுஸாரணமும் பிரதி ஸாரணமும் ஸாரணத்தின் பேதமே. சில கிரந்தங்களில் ககனகிராஸப் பிரமாணம், கிராமணம், பக்ஷணம் என மூன்று ஸம்ஸ்காரங்கள் அதிகமாக் கூறப்பட்டுள்ளன. சாரணத்தில் அப்பிரகத்தின் அளவை நிர்ணயிப்பது ககனக்கிராஸப்பிரமாணம் என்பது. அதனால் அதைத் தனியே குறிக்காமல் சாரணத்தின் ஒரு அவஸ்தையாகக் கருதுகிறார்கள். கிராமணம் என்பது வேதி ரஸத்தை தேகத்திலோ லோஹத்திலோ எல்லாவிடங்களிலும் அணுவணுவாகப் பரவ உபயோகமாகும் சில யோகங்களுக்கு பெயர். அதனால் அதுவும் தனி ஸம்ஸ்காரமாகாது. பக்ஷணம் என்பது வேதிரஸத்தைச் சாப்பிடும் முறை. அதுவும் தனி ஸம்ஸ்காரமாகாது.

சாரணம் கர்பத்துருதி பாஹ்யத்ருதி ரஞ்சனம் இந்நான்கும் ஜாரணத்தினுடையவும், அனுஸாரணம் பிரதிஸாரணம் இவ்விரண்டும் ஸாரணத்தினுடையவும் வெவ்வேறு நிலைகளே. அதனால் ஜாரணம் ஸாரணம் வேதம் என்ற மூன்று ஸம்ஸ்காரங்களே பிரதானமாகும்.

தமிழ் நூல்களில் இவ்வாறு ஸம்ஸ்காரங்களின் கிரமத்தொகுப்பு காணப்படவில்லை. ஜாரணை சாரணை முதலிய ஸம்ஸ்காரங்கள் காணப்பட்டாலும் அவைகளும் நன்கு நிச்சயிக்கத்தக்க அளவில் விவரிக்கப்படவில்லை.

இந்த ஸம்ஸ்காரங்களில் ஸ்வேதனம் என்பது ரஸத்திலுள்ள எல்லா தோஷங்களும் நெகிழ்ந்து ரஸத்தை விட்டுப் பிரிவதற்காகச் செய்யப்படுகின்றது. நெகிழ்ந்த மலங்கள் ரஸத்துடன் சேர்த்தரைக்கப்பட்ட ஒஷதிகல்கத்துடன் கலந்து வெளிவர மர்தனம் என்கிற ஸம்ஸ்காரம் உபயோகமாகின்றது. மர்தனமும் மூர்ச்சனமும் செய்கை முறையில் ஒரே விதமாயிருப்பினும், ரஸத்தின் சுயஉரு

நாசமடைந்து சேர்த்தரைக்கப்பட்ட கல்க உரு அடையும் வரை அரைப்பதே மூர்ச்சனமாகும். மர்த்தனத்தில் இவ்வளவு அரைப்புத் தேவையில்லை. ரஸத்தின் சுய உருமறைந்ததும் ரஸத்தைப் பூதரயந்திரத்திலிட்டு எரித்துப் பிரித்தெடுப்பது உத்தாபனமாகும். பாதன ஸம்ஸ்காரத்திலும் உத்தாபனம் ஏற்படும்.

ஸ்வேதனம் மர்தனம் மூர்ச்சனம் உத்தாபனம் என்ற இந் நான்கு ஸம்ஸ்காரங்களும் தனித் தனியே இருபத்தொரு தடவை செய்வேண்டுமென ஆநந்தகந்தத்தில் கூறப்பட்டுள்ளது. மற்ற சில கிரந்தங்களில் தனித்தனியே மூன்று தடவை அல்லது ஏழு தடவை செய்யுமாறு உபதேசிக்கப் படுகின்றது. வேதம் வரை ஸம்ஸ்காரங்கள் செய்யுமிடத்து 21 தடவையும், ஔஷதங்களில் சேர்க்குமிடத்து மூன்று அல்லது ஏழு தடவை செய்வதும் உசிதமாகும்.

ரஸத்துடன் சேர்த்தரைக்கப்பட்ட ஔஷதிகளின் கல்கத்தில் ரஸத்திலுள்ள எல்லா தோஷங்களும் கரைந்து கலந்து விடுவதால் அக் கல்கங்கள் நீங்குகின்றன. இவைகளில் நீக்கமுடியாத உலோகக்கலப்பென்ற யௌகிகதோஷத்தை பாதனம் என்ற மூன்று ஸம்ஸ்காரங்களால் அகற்றி ரஸத்திற்கு நெருப்பைத் தாங்கும் சக்தி அதிகமாக்கப்படுகின்றது.

பாதனம் மூவகையாகக் கூறப்பட்டுள்ளது. ரஸத்துடன் கூடச் சேர்க்கப்படும் தாம்ரம் அப்பிரகம் அயம் தங்கம் போன்ற கன உலோகங்களுடன் ஈயமும் காரீயமும் சேர்ந்து ரஸத்திலிருந்து பிரிக்கப்படுவதற்காகவே இத்தகைய ஸம்ஸ்காரம் செய்யப்படுகின்றது. ஊர்த்வபாதனத்தில் இரும்பும் சுண்ணாம்பும் சேர்ப்பது சிலர் வழக்கம். இத்தாம்ரம் முதலிய உலோகங்களின் அளவு விஷயத்தில் பல கிரந்தங்களில் பெருத்த மாறுபாடுகள் காணப்பட்டாலும் அவைகளை சேர்ப்பதில் லக்ஷ்யம் ஒன்றே தான். யந்திரங்களிலும் மாறுபாடு சில கிரந்தங்களில் காணப்படுகின்றது. டமருயந்திரம்

சக்கிரயந்திரம் தீபிகாயந்திரம் இவைகளையும் பாதனத்தில் உபயோகப் படுத்தலாம் . பாதனத்தில் தாம்ரம் அப்பிரகம் இவைகளின் ஸ்தானத்தில் தங்கம் வெள்ளி ஸ்வர்ணமாக்ஷிகம் காந்தம் இவைகளைச் சேர்த்தால் சேர்த்த லோஹத்திற்குகந்தவாறு ரஸத்தில் சில விசேஷ குணங்கள் ஏற்படும்.

இம்மூன்று வகை பாதனங்களும் ரஸத்தை வேதத்திற்கு உபயோகப்படுத்தத் தகுதி ஏற்பட அவசியமே. ரஸத்தை சுத்தி செய்து மருந்து யோகங்களில் சேர்க்கப் பாதன முறைகள் லகுவானதாகப் பின் விசேஷ ரஸஸம்ஸ்காரங்களில் கூறப்படுகின்றன.

இவ்வைந்து ஸம்ஸ்காரங்கள் ரஸத்தை சுத்தி செய்வதில் சக்திவாய்ந்தவை.

ஸ்வேதன-மர்தன-பாதன ஸம்ஸ்காரங்களால் தளதளப்பும் வீர்யமும் உற்சாகமும் குன்றி ரஸம் பேடி போலாகின்றது. அதன் சக்தியையும் உற்சாகத்தையும் அதிகரிக்க நிரோதனம் என்ற ஸம்ஸ்காரம் செய்யப்படுகின்றது. இது கடயந்திரத்தில் செய்யப்படுகின்றது. நியமனம் என்ற ஸம்ஸ்காரமும் கடயந்திரத்தில் தான் செய்யப்படவேண்டும். கூடச்சேர்க்கப்படும் ஔஷதித்திரவியங்களின் மாறுபாட்டினால் நிரோதனம் நியமனம் என்ற பெயர் பெறுகின்றதே தவிர, செய்வகை இரு ஸம்ஸ்காரங்களிலும் ஒரு வகைப்பட்டதே. நியமனத்தால் ரஸத்திற்கு நெருப்பைத் தாங்கும் சக்தி அதிகமாகின்றது. சிறிய சிறிய திவலைகளாகப் பிரிந்து போகும் தன்மையும் மாறுகின்றது.

தீபனமும் அனுவாஸனமும் ரஸத்திற்கு கிராஸமாக கொடுக்க வேண்டியவைகளை ஜீர்ணம் செய்யும் சக்தியை உண்டாக்கவே செய்யப்படுகின்றன.

இவ்வாறு ஒன்பது ஸம்ஸ்காரங்கள் ரஸசுத்திக்காகவும் ஜாரணம் செய்ய தகுதி ஏற்படுத்தவும் செய்யப்படுகின்றன.

இவ்வொன்பது முறைகளையும் செய்ய வசதியற்றவன் ஸ்வேதனம் மர்தனம் பாதனம் என்ற மூன்று முறைகளாலேயே ரஸசுத்தியைப் பெறலாம் என பிறகு ஒன்பதாவது உல்லாஸத்திலும் இருபத்துமூன்றாவது உல்லாஸத்திலும் கூறப்படுகின்றது. சில கிரந்தங்களில் மர்தனத்தாலேயே ரஸசுத்தி செய்யும் விதம் கூறப்படுகின்றது. லிங்கத்திலிருந்து வித்யாதரயந்திரத்திலோ, ஊர்த்வபாதனயந்திரத்திலோ, திர்யக்காதனயந்திரத்திலோ எரித்தெடுக்கப்பட்ட ரஸம் ஒன்பது வித ஸம்ஸ்காரங்களால் சுத்தி செய்யப்பட்ட ரஸத்திற்குச் சமம் என ரஸேந்திர ஸாரஸங்கிரஹத்தில் கூறப்படுகின்றன. அவ்விதம் லிங்கத்திலிருந்து ரஸம் எடுக்கும் முறை இங்கு இருபத்துமூன்றாவது உல்லாஸத்தில் கூறப்படுகின்றது.

லிங்கத்திலிருந்து ரஸமெடுக்கும் விதத்தைப் பலர் பல விதமாக அபிப்பிராயப்படுகின்றனர். சிலர் அசுத்தமானதும் செயற்கையானதுமான உலாந்தா லிங்கத்திலிருந்து எடுத்த ரஸத்தை சுத்தமானதாகக் கருதவில்லை. ஏனெனில் அசுத்தமான ரஸத்தையும் கந்தகத்தையும் செயற்கை முறையில் சேர்த்துத் தயாரிக்கப்பட்டுள்ளதால் அந்த லிங்கத்திலிருந்து எடுக்கப் பட்டதும் அசுத்தமானதாக இருக்கும். சிலரோ ரஸத்தின் எல்லா தோஷங்களையும் போக்கவல்லதான கந்தகத்தின் சேர்க்கையால் எல்லா விதமான ரஸத்தின் அசுத்திகளும் போய்விடுகின்றன எனவும் கருதுகிறார்கள். இயற்கையாக தாதுப் பொருளாகக் கிடைக்கும் லிங்கத்திலிருந்து கிடைக்கும் ரஸமே ஒன்பது வித ஸம்ஸ்காரங்களால் சுத்தி செய்த ரஸத்திற்கு ஈடாகும் எனச்சிலர் கருதுகின்றனர். சிலர் அசுத்தமான ரஸத்துடன் சுத்த கந்தகம் சேர்த்தரைத்துக் குப்பியிலிட்டு வாலுகாயந்திரத்தில் எரித்து சிந்தூரித்துப் பின்னர் அதிலிருந்து லிங்கத்திலிருந்து எடுப்பது போல் ரஸத்தைப் பிரித்து எடுக்கின்றனர்.

இவ்விதமே வீரத்திலிருந்து பூரத்திலிருந்தும் ரஸம் எடுத்து சில யோகங்களில் உபயோகப்படுத்தப் படுகின்றது.

சிலர் தற்காலத்தில் நவீன விக்ஞான முறையில் பாதன (Distillation) முறையில் சுத்தி செய்யப்பட்டு சுத்தமான ரஸம் என்று கிடைக்கும் ரஸத்தை வேறு வித சுத்திகள் செய்யாமல் உபயோகிக்கலாம் எனக் கருதுகின்றனர்.

இவ்விதம் பலவாறு கிடைக்கும் ரஸத்தின் ஸ்வரூபமும் குணமும் ஒரே விதமா? ஒன்பது ஸம்ஸ்காரங்கள் செய்து சுத்தமான ரஸத்திற்கும், வேறு வகையில் எளிதான முறையில் சுத்தமான ரஸத்திற்கும் வேற்றுமை கிடையாதா? எல்லாவித சுத்த ரஸங்களும் வேதங்கள் வரையிலுள்ள ஸம்ஸ்காரங்களில் உபயோகிக்கத் தகுந்தவைதானா? லகுவான முறையில் சுத்தமான ரஸமே எல்லா பலன்களையுமளித்தால் எதற்காக ஒன்பது ஸம்ஸ்காரங்கள் செய்வது என்பது போன்ற பல சந்தேகங்கள் உண்டாகலாம்.

இவ்விஷயத்தைச் சற்று ஆராய்வோம். ரஸ சுத்தி என்பதும் ரஸ ஸம்ஸ்காரம் என்பதும் தனித் தனியான வழிகளே. ரஸ சுத்தி என்பது ரஸத்திலிருந்த தோஷங்களை மட்டும் விலக்குவது. அதில் நவீன விக்ஞான முறையில் பானத்தால் சுத்தி செய்யப்பட்ட ரஸம் அதில் இயற்கையாகவோ செயற்கையாகவோ ஏற்பட்ட உலோகக் கலப்பு அகற்றப்படுவதால் சுத்தம் என்பதில் ஐயமில்லை. இதை ஆயுர்வேத ரீதியிலுள்ள பாதனமுறையாலும் செய்யலாம். இதனால் யௌகிகதோஷங்கள் அகலலாமே தவிர நைஸர்கிகமென்ற ரஸத்தின் இயற்கையான கெடுதல் விளைவிக்கும் குணங்கள் மாறாது. அதற்கு ஸ்வேதனம் மர்தனம் மூர்ச்சனம் என்ற ஸம்ஸ்காரங்கள் தேவை. இவ்விரண்டு வித தோஷங்கள் அகன்றால் ரஸத்தைச் சரீரத்தில் சேர்ப்பதற்குத் தகுதி உண்டாகின்றன. இது தான் லகுவான ரஸ சுத்தி முறை. லிங்கத்திலிருந்து எடுக்கப்படும் ரஸமும் இவ்வகை சுத்தி அடைந்ததே. கஜ்ஜலிபர்படீ முதலியவைகளில் இந்த ரஸத்தை உபயோகப்படுத்தலாம்.

பஸ்மமோ ஸிந்தூரமோ (மூர்ச்சை) செய்யுமிடத்து ரஸத்திற்கு நிரோதனமும் நியமனமும் அவசியமாகின்றது. அவ்விரு ஸம்ஸ்காரங்கள் செய்த பிறகு தான் ரஸத்திற்கு நெருப்பைத் தாங்கும் சக்தி ஏற்படுகின்றது. ரஸத்தில் தங்கம் வெள்ளி அப்பிரகம் காந்தம் போன்ற உலோகங்களைச் சேர்த்து அரைத்து ஸிந்தூரங்களோ அல்லது வேதத்திற்குத் தேவையான ஜாரணமோ செய்யுமிடத்து தீபனமும் அனுவாஸனமும் கட்டாயம் செய்யவேண்டும். இல்லாவிட்டால் ஜாரணம் சரிவர ஏற்படாது. ரஸத்தில் அவ்வுலோகங்களின் சக்தி பரவாது. ஆக முதல் ஐந்து ஸம்ஸ்காரங்கள் தோஷங்களை அகற்றுவதற்கும் பின் நான்கு ஸம்ஸ்காரங்கள் சில விசேஷ குணங்களை உண்டாக்குவதற்கும் செய்யப்படுகின்றன. இவ்விசேஷ குணங்கள் லிங்கத்திலிருந்து எடுத்த ரஸத்தில் கிடையாது. உலாந்தா லிங்கத்தைக் காட்டிலும் இயற்கையாகவே கிடைக்கும் லிங்கத்திலிருந்தோ, ரஸஸிந்தூரத்திலிருந்தோ ரஸத்தைப் பிரித்தெடுப்பது உயர்ந்ததெனச் சிலர் கருதுவர். அங்கு நிரோதனம் முதலிய ஸம்ஸ்காரங்களால் ஏற்படும் குணங்கள் இருப்பதில்லை.

லிங்கம் பூரம் வீரம் போன்ற தாதுப் பொருள்களிலிருந்து கிடைக்கும் ரஸம் அமைப்பதிலும் உருவத்திலும் ஒரு வகைப் பட்டதாகக் காணப்பட்டாலும் கந்தகம் உப்பு இவைகளின் சேர்க்கையால் ரஸத்தில் உண்டாகும் குண விசேஷங்கள் தனித்துக் காணப்படுபவையே. வீரம் பூரம் இவைகளிலிருந்து கிடைத்த ரஸத்தில் தீக்ஷ்ண உஷ்ண விஷகுணங்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. அதனால் நாம் உபயோகப்படுத்தும் ரஸம் எவ்வித மூலப்பொருள்களிலிருந்து பிரித்து எடுக்கப்பட்டதென அறிவதும் அவசியமே. அவ்விதம் மூலப்பொருள்களை அறிந்தால் தான் ரஸத்தின் குணத்தையும் அறிவது ஸாத்யமாகும். மூலப்பொருள்களை அறிய முடியாவிடத்து லிங்கத்திலிருந்து ரஸம் எடுத்து உபயோகப்படுத்துவதையே சிறந்ததாகப் பெரியோர் கருதினர். லிங்கத்திலும் இயற்கை லிங்கமே

உயர்ந்தது. லிங்கத்திலிருந்து ரஸம் எடுக்க முடியாவிடத்து-ரஸத்திற்கு முன்கூறியுள்ள ஐந்து தோஷ சுத்தி ஸம்ஸ்காரங்களும் செய்ய வேண்டும்.

சுத்தி என்ற பதம் தோஷங்களை விலக்குவதை மாத்திரம் குறிக்கும். ஸம்ஸ்காரம் என்ற பதம் தோஷத்தை விலக்குவதுடன் நில்லாமல் ரஸத்திற்கே விசேஷகுணங்களையும் அளிப்பதையும் குறிக்கும். இவ்விரு விசேஷங்களை மனதிற் கொள்ளுவது அவசியமாகும். அதனால் வேதம் வரையிலுள்ள ஸம்ஸ்காரங்கள் செய்யு மிடத்து இவ்வொன்பது ஸம்ஸ்காரங்களையும் அவசியம் செய்ய வேண்டும் என்பதே ரஸாசாரியர்களின் கருத்து.

இவ்விதம் அனுவாஸனம் வரையிலுள்ள ஸம்ஸ்காரங்கள் செய்து ரஸத்திற்கு தன்னுடன் சேர்க்கப்டும் திரவ்யங்களை ஏற்று ஜீர்ணம் செய்யும் சக்தி ஏற்படுத்திய பின் அதில் அப்பிரகம் கந்தகம் தங்கம் காந்தம் எஃகு துவந்துவங்கள் பீஜங்கள் இவை தேவைக்குகந்தவாறு ஜாரணம் செய்யப் படுகின்றன. ஜாரணம் என்பது ரஸத்தில் சேர்க்கப்பட்ட திரவ்யங்கள் அத்துடன் ஒன்றாகக் கலந்து தனது அளவையும் உருவையும் இழந்து ஜீர்ணமாகி விடுவதைக்குறிக்கும். இது சாரணம், கர்பத்துருதி, பாஹ்யத் துருதி, ஜாரணம் என்ற நான்கு ஸம்ஸ்காரங்களால் பூர்த்தி அடைகின்றது. சாரணத்தால் அப்பிரகம் முதலியவை ரஸத்துடன் சேர்ந்தும், கர்பத்துருதி-பாஹ்யத்துருதி இவைகளால் ரஸத்தின் மத்தியிலுள்ள அவை திரவமாகியும், ஜாரணத்தால் ஒன்றாகக் கலந்து ஜீர்ணமாகின்றன. இவ்விதம் ஜீர்ணமானதும் ரஸத்தில் சேர்க்கப்பட்ட திரவ்யங்களின் உருவோ அளவோ கனமோ தனியே தெரிவதில்லை.

கர்ப்ப-பீஷ்டீ-கிராஸ முறைகளால் ரஸத்தில் அப்பிரகம் சாரணம் செய்யப்படுகின்றது. ரஸத்தில் அறுபத்து நான்கில் ஒரு பங்கு அளவிலிருந்து ஆரம்பித்து செலுத்தப்பட்ட அப்பிரகம்

கர்பத்துருதி முறையால் திரவமாகி ரஸ மயமாகின்றது. பின்னர் ஜாரணமுறையினால் ரஸத்துடன் ஐக்கியமாகின்றது.

அப்பிரகம் அப்பிரக ஸத்வம் காந்தம் துவந்துவங்கள் பக்வ பீஜங்கள் பீஜங்கள் இவை ஜாரணத்தில் மென்மேல் உயர்ந்தவை.

பாலஜாரணை பத்தஜாரணை என ஜாரணை இருவிதம். ரஸத்தைக் கட்டி பின்னர் ஜாரணை செய்வது பத்த ஜாரணை. இதை விருத்தஜாரணை என்பர். பால ஜாரணையில் ரஸத்தைக் கட்டாமலே ஜாரணை செய்து பின்னர் கட்டு செய்யப் படுகின்றது. தாளகம் கந்தகம் வைக்ராந்தம் முதலியவைகளால் முதலில் ரஸத்தைக் கட்டி பின்னர் ஜாரணம் செய்யப்படும் முறைகளும் பின்னர் கூறப்படுகின்றன.

காந்தம் அப்ரகம் முதலிய லோஹோபலோஹங்கள் ஜாரணை செய்யப்பட்டால் பூசரீ ஜாரணை எனவும் ரத்னங்கள் ஜாரணை செய்யப்பட்டால் கேசரீ ஜாரணை எனவும் மற்றும் இரு வகையாக ஜாரணை பிரிக்கப்படுகின்றது.

சாரணம் செய்யப்பட்ட பின் ரஸத்தைத் துணியில் வடிகட்டினால் சாரணம் செய்யப்பட்டவைகள் தனியே பிரியாது. ஆனால் பாதனம் செய்தால் தனியே பிரித்து விடலாம். கர்பத்துருதி செய்து ஜாரணம் செய்து விட்டால் பானத்தாலும் அந்த ரஸத்தைப் பிரித்தெடுக்க முடியாது. எடையும் அதிகமாகாது என்பதும் விசேஷம், தற்காலத்தில் மகரத்வஜம் முதலிய சில ரஸயோகங்களில் சாரண-ஜாரண முறைகள் செய்யப்படாததாலேயே தங்கம் அடியே தங்குகின்றது என்பது அறியத்தகுந்தது. சாரண ஜாரண முறைகளுடன் மகரத்வஜம் தயாரித்தால் தங்கமும் ஜீர்ணமாகி அதன் ரஸாயன சக்தியும் சொல்ல இயலா அளவிற்கு அதிகமாகும் என்பதில் ஐயமில்லை.

இவ்வித ஜாரண முறையிலேயே மல்லம் (வெள்ளைப் பாஷணம்) மனோசிலை தாளகம் இவைகளை ஜாரணை செய்து மூர்ச்சனை செய்தால் ஸிந்தூரமாகி ரஸாயனத்திலும் மருந்துகளிலும் உபயோகமாகின்றது. நாகபீஜம் வங்கபீஜம் இவை ஜாரணம் செய்தால் லோஹவேதத்தில் மாத்திரம் உபயோகப்படுகின்றது. ஸவர்ண-ரஜதபீஜங்கள் ஜாரணம் செய்யப்பட்டால் தேகவேதத்தில் உபயோகப்படுகின்றது.

ஜாரணம் செய்யவேண்டிய ரஸ-உபரஸ- லோஹங்களை சுத்தி செய்த பிறகே சேர்க்கவேண்டும். இல்லாவிடில் ஜாரணத்திலும் உபயோகத்திலும் கஷ்டங்கள் ஏற்படுகின்றன. அப்ரகம் ரஸத்துடன் சேர மாக்ஷிகம் மிகப் பயன்படுகின்றது. அதனாலேயே தனி அப்பிரகத்தைக் காட்டிலும் துவந்துவங்கள் ஜாரணத்தில் சிறந்தவையாகக் கருதப்படுகின்றன.

அப்பிரகத்தைத் தங்கம் வெள்ளி ஈயம் காரீயம் தாம்ரம் எஃகு என்ற ஆறு வித லோஹங்களுடன் மாக்ஷிகம் விமலம் ரஸகம் போன்ற அரிவர்க்கங்களின் சேர்க்கையால் கடுந்தீயில் ஊதப்பட்டு ஒன்றாக்குவதைத் துவந்துவங்கள் எனக் கூறுகிறார்கள். அரிவர்க்கம் சேர்ப்பதால் ரஸத்தில் திரவமாகி ஒன்றாகுவது எளிதாகின்றது. துவந்துவமாக்கப்பட்ட பின் லோஹவேதத்தில் உபயோகிப்பதாயிருந்தால் ரஞ்சனத்திற்காக நாகத்திரவத்திலும் ஈயத்திரவத்திலும் அபிஷேகம் என்ற ஸம்ஸ்காரம் செய்யப்படுகின்றது. இது தேஹவேதத்தில் பயன்படாது. தேஹத்தில் நாகவங்கங்களின் சேர்க்கை கெடுதி விளைவிக்குமென ரஸஹ்ருதயம் கூறுகின்றது.

தங்கத்திலோ வெள்ளியிலோ மற்ற உபரஸ உலோகங்களைச் சேர்த்து தங்கம் வெள்ளி மாத்திரம் மிகுதியாகும்படி ஊதி எடுப்பதே பீஜமாகும். துவந்துவத்தைக் காட்டிலும் இது உயர்ந்தது. காரீயமோ ஈயமோ சேர்த்து இப்பீஜம் தயாரிக்கப்பட்டால் அதை லோஹவேதத்தில் மாத்திரம் உபயோகிக்கலாம்.

ஜாரணம் விஷயத்தில் தமிழ் நூல்களிலும் ஸம்ஸ்கிருத நூல்களிலும் கூறப்படும் வெவ்வேறு முறைகளிலுள்ள விசேஷங்களைக் குறிப்பிடுவது ஸாத்யமாகாது. ரஸஸாரணத்தில் ஜாரணம் செய்யப்படும் திரவ்யத்தின் அளவிற்குத் தகுந்தாற்போல் யந்திரங்களையும் மாற்றுமாறு கூறப்படுகிறது. கால் வீசம் பங்கு வீதம் இரண்டு கிராஸங்களும் நாற்பதில் ஒரு பங்கு வீதம் நான்கு கிராஸங்களும் முப்பதில் ஒரு பங்கு வீதம் ஆறு கிராஸங்களும் இருபதில் ஒரு பங்கு வீதம் எட்டு கிராஸங்களும் கிரமமாகக் கொடுத்து இவைகளை ஸ்வேதயந்திரத்திலாவது டோலாயந்திரத்திலாவது, பன்னிரண்டில் ஒரு பங்கு வீதம் பத்து கிராஸங்கள் சக்கிரயந்திரம் வாலுகாயந்திரம் கூபீயந்திரம் இவைகளில் ஒன்றிலும் எட்டில் ஒரு பங்கு வீதம் ஒன்பது கிராஸங்கள் ஸ்தலகச்சபயந்திரத்தில் அல்லது ஜலகச்சபயந்திரத்திலும், கால் பங்கு வீதம் பதினாறு கிராஸங்கள் மூஷாயந்திரத்திலும், எரிக்க கிராஸங்கள் ஜீர்ணமாகின்றன. இவ்விதம் கிராஸங்கள் கொடுக்கும் அளவைப் பொறுத்து யந்திரங்கள் மாற்றுவது அவசியமாகின்றன. இவ்விதம் ரஸஹிருதயத்திலும் மாறுதல்கள் கூறப்படுகின்றன.

ஜாரணம் செய்யப்பட்ட திரவ்யங்களை யனுஸரித்து ரஸத்தில் சில விசேஷ மாறுதல்கள் குணத்திலும் உருவிலும் காணப்படுகின்றன என ரஸ ஸாரத்தில் கூறப்படுகின்றது. காரீயம் ஜாரணம் செய்யப்பட ஸ்னேஹமும், (பிசு பிசுப்பும்) அப்பிரகத்தால் ஸ்னேஹமும் பலமும் ஓடுதல் தடைபடுவதும், எஃகு ஜாரணம் செய்வதால் நிறமேறுவதும் தாம்ரத்தால் இவ்வெல்லா குணங்களும் ஏற்படுகின்றன. காரீயத்தை ஜாரணம் செய்ய ரஸம் சீக்ரம் வெட்டையாகி தனது லோஹகுணத்தை விட்டு விடுகின்றது.

கடினமான பீஜங்கள் ஜாரணம் செய்யப்பட்டால் ஈயம் காரீயம் போன்ற ஈன உலோகங்களும் வேதமடையும். மிருதுவான பீஜ ஜாரணத்தால் தாம்ரமும் பித்தளையும், நிறமதிகமுள்ள பீஜஜாரணத்தால் வெள்ளியும்

வேதமடைகின்றன. வெண்மை நிறமுள்ள ரத்னங்களின் ஜாரணத்தால் வெள்ளியாக்குவதும், சிவந்த ரத்னங்களின் ஜாரணத்தால் தங்கமாக்குவதும் எளிதாகின்றது.

அதனால் கோடம் பந்தம் ரஞ்சனம் வேதம் முதலிய காரியங்களில் தேவைக்குகந்தபடி பலவாறு ரஸத்தில் ஜாரணம் செய்யும் முறைகள் பலவாறாக கிரந்தங்களில் கூறப்படுகின்றன.

ரஞ்சனம் இருவகை. வெள்ளை ரஞ்சனத்தில் பீஜத்தை அதற்குகந்த முறையில் தயாரித்து ரஸத்தில் ஜாரணம் செய்ய அந்த ரஸம் வெள்ளியாக்கும் முறையில் உபயோகப் படுகின்றது. இவ்விதமே சிகப்பு ரஞ்சன முறையில் தயாரிக்கப் பட்ட பீஜத்தை ஜாரணம் செய்த ரஸம் தங்கமாக்கும் வேதத்தில் உபயோகப்படுகின்றது.

இவ்விதம் நிறமேற்றும் முறை பலவாறாக ரஸஸாரத்தில் கூறப்படுகின்றது. போடம் என்ற ஹிமயமலைச் சாரலிலுள்ள தேசங்களில் வஸித்த பௌத்தர்கள் இவ்வரணக் கலப்பு முறையில் மிகவும் தேர்ச்சி பெற்றவர்கள் எனவும், அவர்களிடமிருந்தே தாதுப் பொருள்களிலிருந்து வர்ணங்கள் இயற்கையாகவும் செயற்கை யாகவும் செய்யப்படும் முறை அறியப்பட்ட தெனவும் ரஸஸாரம் எழுதியவர் கூறுகிறார். அவைகளில் ஸ்திரமாயும் அஸ்திரமாயும் உள்ள பல வர்ணபேதங்களைக் குறிப்பிடு மிடத்து கந்தகம் பவழம் மனோசிலை தாளம் இவைகளி லிருந்து ரஞ்சன யோகங்கள் தயாரிக்கும் முறைகள் கூறப்படுகின்றன. ரஸஹிருதயத்திலும் . இவ்விஷயம் விரிவாக விவரிக்கப்படுகின்றது.

ஜாரணத்தால் ரஸம் ஸ்திரப்பட்டதும் உலோகத்திலும் தேஹத்திலும் பரவும் சக்தி பெற ஸாரணம் செய்யப்படுகின்றது. இரு நீண்ட குழாய் உருவுள்ள மூஷைகளில் ஒன்றில் ரஸத்தை ஸாரணாதைலத்துடன் போட்டு, மற்றொன்றில் ரஸத்தை ஸாரணாதைலத்துடன் போட்டு, மற்றொன்றில் பீஜத்தை உருக்கி

ரஸத்தில் சாய்த்துவிடுவதே ஸாரணமாகும். அவ்விதம் உருகிய லோஹபீஜம் ரஸத்தில் சாய்க்கப்படும் பொழுது திரவத்தில் விழுவதால் வெடித்து மேல் தெறிக்குமென்ற பயத்தால் ஈயம் முதலியவை சுத்தி செய்யும் பொழுது மூடுவது போல் ஸாரணதைலத்தில் நனைத்த பஞ்சாலேயே அம் மூஷையை மூடுவது அவசியமென ரஸஹ்ருதயம் கூறுகிறது.

ஆநந்தகந்தத்தில் ஸாரணமே இருமுறை செய்யப் படின் பிரதிஸாரணம் எனவும், மும்முறை செய்யப்படின் அனுஸாரணம் எனவும் பெயர் மாறுதல் கொடுக்கப் படுகின்றது. மற்றக்கிரந்தங்களில் ரஸத்தில் ஒரு மடங்கு பீஜம் ஸாரணம் செய்யப்பட்டால் ஸாரணம் எனவும், இரு மடங்கு ஸாரணம் செய்யப்பட்டால் பிரதி ஸாரணம் எனவும், மும்மடங்கு ஸாரணம் எனவும் வியவாகரம் உள்ளது.

ஸாரணத்திற்குப் பின் ஸாரணம் செய்யப்பட்ட பீஜம் ஜாரணம் கச்சபயந்திரத்தில் ஜாரணை முறைப்படி செய்யப்படவேண்டும். இவ்விதம் ஸாரணமும் ஜாரணமும் செய்வதற்கு சிருங்கலிகை (சங்கிலி) எனப்பெயர். இவ்விதம் பத்து சங்கிலித்தொடர்வரை ரஸத்தில் ஸாரண ஜாரணங் களின் செய்முறை ஆங்காங்கு கூறப் படுகின்றது.

ஸாரணத்திற்குப் பின் ரஸத்திற்கு முகபந்தம் செய்து ரஸம் கோடமாக்கப் படுகின்றன. கிராமணங்களுடன் அதை லோஹங்களிலும் தேஹத்திலும் சேர்க்க வேதம் ஏற்படுகின்றது. வேதத்திற்கேற்ப தேஹத்தை சித்திசெய்வதன் அவசியத்தை உணர்ந்த பெரியோர் தேகசுத்திக்காக ஸ்னேஹனம் ஸ்வேதனம் முதலிய ஐந்து முறைகளையும், சரீரத்திலுள்ள உப்பு க்ஷாரம் புளிப்பு சத்துகள் அதிகமாக இருப்பதைக் குறைக்கவும் கிருமிகளை அகற்றவுமுள்ள யோகங்களையும் கூறி, பின்னர் சரீரத்தைப் பதப்படுத்த க்ஷேத்ரீகரணம் என்ற முறைகளான தங்கம் அப்பிரகம் காந்தம் வைரம் ரஸம் இவைகளாலான ரஸாயன யோகங்களையும் அவைகளை ஸேவிக்கும் முறையையும் கூறியுள்ளார்கள். இவ்வித முன்னேற்

பாடுகளுடன் தான் வேதி ரஸத்தை உபயோகத்தால் தைலத்தன்மை அடைந்த தேகமும், ஆகாசத்தில் ஸஞ்சாரமும் பிறர் கண்ணுக்குப் புலப்படாமையும் இது போன்ற மற்றும் பல சித்திகளும் பெறும் பல வழிகள் கூறப்பட்டுள்ளன.

வேதி ரஸ உபயோகமில்லாமலே சில விசேஷ முறைகளில் மூலிகைகளைத் தயாரித்து அதனால் தேஹசித்தி பெறும் விதமும் திவ்ய மூலிகை கல்பங்களாகக் கூறப்பட்டுள்ளன. பூதகாலாந்தகரஸமென்று ஒரு பிரயோகம் தெளிவாக அறிய முடியாதவகையில் கூறப்பட்டுள்ளது. ஸ்ரீசைலத்தில் விசேஷஸித்திகளும் கட்டு, குடிகை, மணி இவைகளின் முறைகளும் அவைகளின் சித்திக்கு இன்றியமையாத மந்திரங்களும் பூஜா விதானங்களும் ஆங்காங்கு கூறப்பட்டுள்ளன.

இவ்விதம் பலவகைப்பட்ட ரஸாயனங் களுக்கிடையே ஆரோக்கியசித்தி அளிக்கவல்லதான தர்மவழி யிலுள்ள ஆசாரங்களைப் பாராட்டி, பிரதிதினமும் பற்பல ருதுக்களிலும் காலை முதல் இரவு வரை ஒவ்வொருவரும் செய்யவேண்டிய வைகளைப் பற்றி விரிவாகவும் அழகாகவும் கூறியுள்ளது இக் கிரந்தத்திற்குத் தனிச் சிறப்பளிக்கவல்லது. இவ்விரு உல்லாஸங்களும் சரக ஸுச்ருத வாக்படா சாரியர்களின் ஸம்ஹிதைகளைப் பெரும்பாலும் அனுஸரித் தாலும் இதன் சொல் வன்மை பெரிதும் பாராட்டத் தக்கதே.

தினசர்யையாலும் ருதுசர்யையாலும் ஆரோக்ய சித்தியும் மனச்சாந்தியும் பெற்ற மனிதன் மனதைக் கட்டுப்படுத்தி ஆத்மதர்சனத்தால் ஞானம் பெறும் வழி யோகாசாரரஸாயனத்தில் கூறப்பட்டிருக்கின்றது. ஆக தினசர்யை ருதுசர்யை யோகாசார ரஸாயனம் என்ற இம்மூன்று விஷயங்களும் ஏனைய ரஸக்கிரந்தங்களில் ஒன்றிலாவது காணப்படவில்லை என்பதே அவைகளைக் காட்டிலும் ஆநந்தகந்தம் ஆரோக்கியத்தில் அதிக சிரத்தையைக் காண்பித்திருக்கிறதென்பதற்குப் போதிய சான்றாகும்.

மருந்துகளில் ரஸம் கந்தகம் தங்கம் வெள்ளி முதலியவைகளை உபயோகிக்கத் தேவையான சுத்தி, பஸ்மஸிந்தூரமுறைகளும் ரஸாயனத்திற்கு உபயோகமான மூர்ச்சனை முறைகளும் கூறப்பட்டுள்ளன.

இந்நூலில் உலோகங்களில் அப்பிரகஸத்வத்தையும் சேர்த்திருப்பது ஒரு புதுமை. அது அப்பிரகத்திலிருந்து எடுக்கப்படும் ஸத்வத்தில் உலோகஸத்வம் மாத்திரம் மிகுதியாயிருக்கும்படி கூறப்பட்டிருக்கின்றது. அவ்வு லோகம் மற்ற ஒன்பது உலோகங்களைச் சேர்ந்ததல்ல என்பதும் தெரியவருகின்றது. இவ்விதமே ஸஸ்யகம் விமலம் என்ற இரு உபரஸங்கள் உபரத்னங்களாகவும் கூறப்பட்டுள்ளன. மற்ற ரஸக்கிரந்தங்களில் மஹாரஸங்கள் எனவும் உபரஸங்கள் எனவும் ஸாதாரண ரஸங்கள் எனவும் பிரிவுகள் கூறப்பட்டிருப்பதுபோல் இந்நூலில் பிரிவுகள் கூறப்படாமல் உபரஸங்கள் என்ற ஒரு பிரிவே கூறப்பட்டுள்ளதும் ஆராயத்தகுந்த விஷயமாகும்.

மணல், சாணம், கரி, மண், காசம் (கண்ணாடி?) அம்லவேதஸம், கோரோசனை, ஸர்ஜாஸம், குக்கில் அரக்கு முதலியவைகளையும் உபரஸங்களாகக் கூறியிருப்பதும் ஆலோசிக்கத்தகுந்ததே.

ரஸக்ரந்தங்களில் ரஸத்தைத்தவிர எல்லாவித தாதுப் பொருள்களும் லோஹம், மஹாரஸம், ஸாதாரணரஸம், உபரஸம், ரத்னம், உபரத்னம் என்ற ஆறு வகுப்புகளாக பிரிக்கப்படுகின்றன. இவைகளில் மஹாரஸம், ஸாதாரண ரஸம், உபரஸம் என்ற மூவகுப்புகளிலும் ஒவ்வொரு கிரந்தத்திலும் மாறுபாடு காணப்படுகின்றது. ஒரு கிரந்தத்தில் உபரஸமாகக் கூறப்பட்டுள்ளது மற்றொரு கிரந்தத்தில் மஹாரஸமாகக் கருதப்படுகின்றது. ஆகையால் இவைகளை உபரஸம் என்ற ஒரே வகுப்பில் ஆனந்தகந்தத்தில் அமைந்தது சிறந்ததே.

உலோகவகுப்பில் தனிப்பட்ட தங்கம் வெள்ளி முதலிய உலோகத்தை உலோகம் (Metal) எனவும், உலோகங்கள் வெட்டி எடுக்கப்பட்டு மற்ற திரவியங்களுடன் கலந்து காணப்படும் பொழுது தாதுக்கள் (Ore)எனவும் குறிப்பிடுகின்றனர். இவைகளில் தங்கம் வெள்ளி தாம்ரம் எஃகு, ஈயம் காரீயம் இவ்வாறு உலோகங்கள் ஸாதாரண (சுத்த) உலோகம் எனவும், பித்தளை வெங்கலம் வர்தலோஹம் இவை மிச்ரலோஹம் எனவும், ஈயம் காரீயமும் பூதிலோகம் (நாற்றமுள்ளது) எனவும், குறிப்பிட்டுள்ளனர். பிறகு கர்பரத்திலிருந்து எடுத்த துத்தநாகமும் ஸ்ரோதோஞ் சனத்திலிருந்து எடுத்த வரநாகமும், (Antimony) சபலத்திலிருந்து எடுத்த பிஸ்மத்தும் (Bismuthinum) படிக்காரமிருந்து எடுக்கப்பட்ட காங்க்ஷிஸத்வமும் (அலுமனியம்) உலோக வகுப்பைச் சார்ந்தவை என்றே கண்டு பிடிக்கப்பட்டன. காந்தம் சிலரால் தாதுப்பொருளாகவும், காந்தத்திலிருந்து எடுக்கப்பட்ட இரும்பு காந்தம் எனவும் கருதப்பட்டு அதுவும் உலோகவகையில் சேர்க்கப்பட்டது. இவ்வாறே அப்பிரகத்திலிருந்து எடுக்கப்பட்ட ஸத்வமும் உலோகவகுப்பில் ஆனந்தகந்தத்தில் இடம் பெற்றிருக் கின்றது. ஆனால் இவ்விதம் எடுக்கப்பட்ட ஸத்வங்கள் தனிப்பெயருடன் உலோகவகையில் இதுவரை குறிப்பிடப் படவில்லை.

தமிழ்மொழி பெயர்ப்பில் கையாண்ட முறை:

பிரதிபத மொழி பெயர்ப்பு முறையைத் தழுவாமல் கருத்துரை முறையே எல்லாவிடத்திலும் அனுஸரிக்கப்பட்டுள்ளது. சந்தேகநிலையிலோ பொருள் விளங்கா நிலையிலோ இருக்கும் இடங்களில் ஸம்ஸ்கிருத பதங்களாகவே குறிப்பிடப்பட்டுள்ளன. சிற்சில தாதுப்பொருள்கள் ஒவ்வொரு தேசத்திலும் வெவ்வேறு பெயர்களுடன் குறிப்பிடப்படுகின்றன. சில தேசங்களில் சில தாதுப்பொருள்கள் கிடைக்காததால் மாற்று திரவியத்தின்

உபயோகம் வழக்கமாக ஏற்பட்டுப் பிற்காலத்தில் மாற்று திரவியத்தை அத் தாதுப்பொருளாகக் கருதும் நிலை ஏற்பட்டுவிட்டது. அதனால் மூலத்தில் காணப்படும் தாதுப்பொருள்களின் உண்மை ஸ்வரூபத்தனைப்பற்றி ஆராயவேண்டியிருக்கிறது. ரஸக்ரந்தங்களில் இவைகளின் ஸ்வரூபத்தைப் பற்றிக் காணும் குறிப்பு பலவகைப் பட்டதாக இருப்பது மேலும் சந்தேகத்திற்கு இடமளிக்கின்றது. அதனால் ஸ்வரூப நிர்ணயம் செய்வது சிரமமாயிருப்பதால் ஸம்ஸ்கிருதப் பெயர்களை அவ்விதமே கொடுக்க வேண்டிய அவசியமேற்பட்டது. இந் நிலை மஹௌஷதி திவ்யௌஷதி விஷயங்களிலும் சமானமே.

ஆராய்ச்சி முறை:

ரஸ சாஸ்திரங்களில் மூன்று விதமாக ஆராய்ச்சி செய்யப்பட வேண்டும்.

1. தற்சமயம் ஆங்காங்கு சிதறிக் கிடக்கும் எல்லா ரஸக்ரந்தங்களையும் பிரசுரித்து பிறகு அவை களிலிருந்து விஷய வாரியாகத் தொகுத்துப் பிரசுரித்தல்.

2. திரவியங்களின் ஸ்வரூபநிர்ணயத்திலும் தாதுப் பொருள்களைச் சேகரிப்பதிலும், சுத்தி-பஸ்மம் முதலிய பல முறைகளைச் செய்யும் வழிகளிலுள்ள மாறுபாடுகளையும் அவைகளின் தராதரத்தை நிர்ணயிப்பதிலும், இயற்கை செயற்கை தாதுக்களின் ஸ்வரூபத்தை ஆராய்வதிலும் சாஸ்திரங்களில் கூறியுள்ள வழிகள் பயன்படுவதைப் பரீக்ஷித்துப் பார்த்தல்.

3. இவ்விதம் செய்யப்பட்ட மருந்துகளை தேஹத்திற்சேர்த்து அவைகளின் பலா பலன்களைப் பரீக்ஷிப்பதும், அவ்விதம் பரீக்ஷிக்கையில் ஆயுர்வேதத்தின் அடிப் படைத்

தத்துவங்களாக பஞ்சபூத-திரிதோஷ-ரஸ-வீர்ய-விபாக-ப்ரபாக சித்தாந்தங்களை அப்பிரயோகங்களில் ஸமன்வயித்துப்பார்த்தலும்.

ஆராய்ச்சியில் தமிழ் நூல்களின் ஸ்தானம்:

இம்மூன்று வகை ஆராய்ச்சிகளும் ஆயுர்வேத வளர்ச்சியில் பெரிதும் உபகாரம் செய்யும். இவ்வகை ஆராய்ச்சிகளில் தமிழ் நாட்டினருக்குப் பெரும் பங்கு உண்டு. இவ்விஷயத்திலும் அகஸ்தியர் போகர் யூகி கொங்கணர் முதலிய பல சித்தர்கள் தனது யோகசாதனையால் பல உண்மைகளைக் கண்டுபிடித்துள்ளனர்.

தமிழ் கிரந்தங்களில் 212 தாதுவகைகள் கூறப்பட்டுள்ளன. அவைகளில் உப்பும் இருபத்தைந்தும், பாஷாணங்கள் அறுபத்து நான்கும், உபரஸங்கள் நூற்றுப்பன்னிரெண்டும் உலோகங்கள் ஒன்பதும் ஆக இவ்விருநூற்றுப்பத்து தாதுக்களுடன் ரஸமும் கந்தகமும் சேர்த்து தாதுக்கள் கணக்கிடப்படுகின்றன. உப்புகள்: ஜலத்தில் கரைந்தும் நெருப்பில் வெடித்தும் புகைந்து எரியும் குணமுள்ளவை. பாஷணங்கள்: நெருப்பில் புகைந்துபோம்; ஆனால் ஜலத்தில் கரையாது. உபரஸங்கள்: ஜலத்தில் கரையாது; நெருப்பில் புகையவோ எரியவோ ஆவியாக மாறவோ செய்யாது. இவை மணல் சத்து சேர்ந்தவை. உலோகங்கள்: நெருப்பில் உருகி பிறகு கெட்டிப்படும். ஆனால் ஜலத்தில் கரையாது. ரஸம்: இளந்தீயிலும் ஆவியாகமாறிப் பறக்கும் சக்தியுள்ளது; அணுவணுவாகப்பிரியும் குணமுள்ளது; புருஷசக்தி கொண்டது. கந்தகம்: நெருப்பில் புகைந்தும் எரிந்தும் போகம்; ஸ்திரீ சக்திகொண்டது; ஜலத்தில் கரையாது. ஆக இவ்வறுவகை தாதுப்பொருள்களையும் ஜலம் நெருப்பு என்ற இருவகை இயற்கைப் பொருள்களாலேயே பரீக்ஷை செய்த குணங்களையும் வகுப்பையும் நிச்சயித்துள்ளார்கள்.

இவ்வறுவகை தாதுக்களின் இயற்கையான குணங்களை மாற்றி மற்றொரு தாதுவகையின் குணங்களை உண்டாக்குவதே வாதமாகும். அதாவது ஜலத்தில் கரையும் குணமுள்ள உப்பை ஜலத்தில் கரையாமலும், உலோகம் போல் உருகி திரவமாகும்படியும் செய்வதும், நெருப்பில் குறைவடையும் பாஷாணங்களுக்கு நெருப்பைத் தாங்கும் சக்தியையும் ஜலத்தில் கரையும் சக்தியையும் ஏற்படுத்துவதும், ஜலத்தில் கரையாததும் நெருப்பில் ஓடாததுமான உபரஸங்களை உப்பின் குணமுடையதாக்குவதும், இளந்தீயிலும் ஓடும் ரஸத்தை நிலைக்கும்படி செய்வதுமே வாதவித்தையாகும். இவ்விஷயத்தில் சில திவ்யௌஷதி களும் தாதுப்பொருள் சத்து கலந்த இயற்கை நீர்த் தேக்கங்களிலுள்ள ஜலமும் பெரிதும் உபயோகப்படுகின்றன.

இவ்விதமாக ஈனவகையைச் சேர்ந்த தாதுப்பொருளை உத்தம வகையைச் சார்ந்த தாதுப்பொருள்களாகச் செய்யும் பிரயத்னமே ரஸவாதமாகின்றது. நக்ஷத்திரங்களும் கிரஹகங்களும் தமது கிரணங்களால் இவ்வாதத்தில் மிகவும் உதவுகின்றன. இவ்வித்யை அகஸ்தியர் காலத்தில் 18 அங்கங்கள் கொண்டதாகவும், சட்டை முனிவர் காலத்தில் 21 அங்கங்கள் கொண்டதாகவும் இருந்ததாகத் தெரிகிறது.

இச்சித்தர்கள் அனேகமாக எல்லோரும் சைவ சமயத்தினரே. அவர்கள் தமது கிரந்தங்களில் ஆங்காங்கு சைவசமய ஸ்வரூபத்தை விவரித்துள்ளார்கள். அத்துடன் கிரியை, சரியை, யோகம், ஞானம் என்ற நாலங்கங்களின் கலப்பில்லாமல் வைத்ய முறைகளைக் கூறுவதில்லை.

தாதுக்களையும், அதன் உற்பத்தித் தலத்தையும் செயற்கைதாது செய்யும் விதங்களையும், லகுவான முறையில் வேதம் செய்யும் முறைகளையும் பற்றித் தமிழ் சித்தர்கள் பல விஷயங்களை வெளியிட்டுள்ளார்கள். ஆனால் குருசிஷ்ய பரம்பரையின் தொடர்பு அற்றுப்போய் விட்டதால் சில நூல்கள் இன்று கருத்தறிய முடியாத நிலைமையில்

கிடைக்கின்றன. ஆனாலும், இவை ரஸசாஸ்திர ஆராய்ச்சியில் பெருத்த உதவி அளிக்கும் என்பதில் ஐயமில்லை.

ரஸசாஸ்திர ஆராய்ச்சியில் முதன்மையானதும் முக்கியமானதுமான ரஸக்கிரந்தங்களை பிரசுரிப்பதில் தஞ்சை ஸரஸ்வதி மஹால் நூல் நிலையம் மிகவும் ஈடுபட்டுவருகிறது. இப்போது ஸம்ஸ்கிருதத்தில் ஆனந்தகந்தமும், தமிழில் கொங்கணர் சரக்கு வைப்பும் முதலில் வெளியிடப் படுகின்றன. இக்கிரந்தங்கள் பிரசுரிப்பதில் ஸரஸ்வதி மஹால் நூல் நிலையத்திற்குப் பெரும் பொருளுதவி புரியும் சென்னை சர்க்காருக்கு என்றென்றும் ஆயுர்வேத உலகம் நன்றி செலுத்தும்.

இவ்வரிய ஆயுர்வேத சேவையில் ஈடுபட எனக்கு அவகாசமளித்த ஸரஸ்வதீ மஹாலயக் கௌரவக் காரியதரிசி ஸ்ரீ. S. கோபால அய்யர் அவர்களுக்கும், ஆராய்ச்சி ஆசிரியர் ஸ்ரீ. K. வாஸுதேவ சாஸ்திரி அவர்களுக்கும், தனது புத்தகசாலையிலுள்ள ரஸக்கிரந்தங்களைப் பரிசீலனை செய்யக் கொடுத்துதவியதுடன் எனது சந்தேகங்களைப் போக்கி இக் கிரந்தப்பதிப்பு விஷயத்தில் பல ஆலோசனைகளையும் அளித்து வந்த திருச்சி ஆயுர்வேதசார்ய ஸ்ரீ. V. B. நடராஜ சாஸ்திரிகள் அவர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். மிகவும் ஆயாஸம் தரும் கிரந்தப்பதிப்பு விஷயத்திலும் ப்ரூப் திருத்தங்களிலும் தமிழ் மொழி பெயர்ப்பு விஷயத்திலும் எனக்கு ஏற்பட்ட சிரமத்தைக் குறைத்து என்னுடன் எல்லாவகையிலும் ஒத்துழைத்த ஸ்ரீ விலாஸம் பிரஸ்ஸின் தலைவரான பண்டித ஸ்ரீ S.M. ஸுந்தரராஜாசாரியர் அவர்களுக்கு என்றும் நான் கடமைப்பட்டுள்ளேன்.

S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரீ.

பாரத ஆயுர்வேதசாலை,
தெப்பக்குளம், திருச்சி,
6.3.1952.

ஶ்ரீ

ஆநந்தகந்தம்

(கருத்துரை)

முதல் உல்லாஸம்

ரஸத்தின் உற்பத்தி

தாரகாஸுரனின் பீடையினின்றும் உலகை உய்விக்க தேவர்கள் முதலானோர்களால் பிரார்த்திக்கப்பட்டு அத் தகுதிவாய்ந்த குமரவேளின் உத்பத்திக்காக ஹிமயமலையில் பார்வதியும் பரமேசுவரனும் கூடின பொழுது ஏற்பட்ட உலகக்ஷோபத்தைத் தடுக்க தேவர்கள் அக்னிபகவானை அத்தம்பதிகளின் போகத்தை நிறுத்துமாறு ஏவினர். அக்னிபகவான் புறா உருவத்தில் அந்தப்புரத்தில் நுழைந்ததைக் கண்ணுற்ற பரமேசுவரன் போகத்தை நிறுத்தி, அச்சமயம் வெளிப்பட்ட தமது தேஜஸ்ஸை அக்னியிடமளித்தார். அதனால் பொசுக்கப்பட்ட அக்னி அதை கங்கையிடம் அளிக்க, அதைப் பொறுக்க முடியாமல் கங்கை அதை தன்னிடமிருந்து வெளியேற்றிய பொழுது அது இரண்டாகப் பிரிந்து ஒன்று குமரவேளாகவும் மற்றொன்று ரஸமாகவும் ஆனது.[1] இந்த ரஸம்

1. இந்த சஸோத்பத்தியை நவீன பௌதிகவிஜ்ஞான முறையில் ஆராயும் பொழுது தற்சமயம் ரஸம் நமக்குக் கிடைக்கும் வழியை அழகாக விவரித்துக் கூறுவது போல் தோன்றுகின்றது. மலைகளின் ஜடசை தன்யசக்திகளிடையே ஏறபடும் மோதலால் பூமியினடியே பல மைல்கள் ஆழத்தில் உள்ள ஆக்னேய பதார்த்தங்கள் எரிமலை ஜ்வாலையாக வெளிவர ஆரம்பிக்கின்றன. ஆனால் பூகம்பம் ஏற்படுகின்றது. பூகம்பம் ஏற்பட்டு குமுறல் அடங்கியவுடன் பூகம்பமும் அடங்கிவிடுகின்றது. எரிமலையின் ஆக்னேய பதார்த்தங்கள் குளிர்ந்தவுடன் அதன் நடுவிலிருக்கும் ஆவியாக

நூறு யோஜனைகள் ஆழமுள்ள ஐந்து கிணறுகளில் தங்கிற்று. அதன் அழுக்கு (மல)ப்பொருளாக தாதுக் (லோஹ மூலப்பொருள்) களும் ரத்தங்களும் ஏற்பட்டன. இவ்வைந்து ரஸங்களும் அதனதன் இருப்பிடத்திற்கேற்றாப் போல் குணத்திலும் உருவத்திலும் நிறத்திலும் மாறுதலடைந்தன.

ரஸம் தனது அமோகமான சக்தியால் தன்னை ஸேவித்த எல்லோரையும் மூப்பு, பிணி, மரணம் அற்றவராகச் செய்வதைக் கண்ணுற்ற தேவர்களின் வேண்டுகோளின் பேரில் சிவன் ரஸத்தை தோஷங்கள், கஞ்சுகங்கள் இவைகளுடன் கூடியதாகச் செய்து இத்தோஷங்களை நீக்கவல்லவையான பதினெட்டு ஸம்ஸாரங்களையும் கூறினார்.

ரஸத்தின் (கதி) நிலை.

ரஸத்தை ஏதாவதொன்றுடன் சேர்த்தரைக்கும் பொழுது ஜலம் போன்ற ஓடும் கதியும் (ஜலகதி), அழுக்காகப்பிரிந்து நிற்கும் கதியும் (மலகதி) எத்தனைதடவை சேர்த்தரைத்தும் கல்கத்தை விட்டுப் பிரிந்து நிற்கும் கதியும் (ஹம்ஸகதி), எரிக்கும் பொழுது ஆவியாகும் கதியும், (தூமகதி) ஆக இந்த நான்கு கதிகளும் புலனுக்குத்தெரியக்கூடியவை. ஐந்தாவதான ஜீவகதி, சரீரத்தினுள் தனித்து நின்று சரீரத்தையே காப்பாற்றும் ஜீவசக்தி போன்று சரீரத்தில் சேர்ந்தவுடன் அதைக் காப்பாற்றும் தன்மையுடையதால் புலனுக்கப்பாலுள்ளது.

ரஸத்தின் தோஷங்கள்

(1) **ஸ்வபாவ தோஷங்கள்:-** பார்த்திவம், ஆப்யம், ஆக்னேயம், வாயவ்யம், ஆகாசஜம், கஜசர்மா, புண்டரீகம், விஸர்பம், ஹாரித்தரம், ரக்தசர்மா, நாரங்கம், ரக்தபிந்து,

---

மாறும் சில மூலப்பொருள்கள், கொதிக்கும் நீருடன் பூமியின் மேல் வந்து குளிர்ந்து ஆங்காங்கு தேங்குகின்றன. இவ்விதத் தேக்கங்கங்களின்றுதான், ரஸமாகவோ, லிங்கமாகவோ இன்று ரஸத்தை எடுக்கின்றனர். இவ்வபிப்ராயத்தையே முன்னரோர்கள் அவர்களது இயல்பான தாந்திரிக பாஷையில் சொல்லியிருக்கிறார்கள் எனத் தோன்றுகின்றது.

அஸஹ்யாக்னி, மண்டூகம், மலம் என்ற 15 தோஷங்களும், முறையே குஷ்டம், தோஷங்களைத் தூண்டுதல், எரிச்சல், வலி, செவிடு, உதும்பரகுஷ்டம், வைஸரி மோகம், சர்ம்கீலம், மூர்ச்சை - என்ற விகாரங்களை ஏற்படுத்துகின்றன.

(2) **ஔபாதிக தோஷங்கள்:-** சில வெளிப்படையான காரணங்களால் ஏற்படும் காலிகா, மலிநீ, கபோதீ, ரக்தகஞ்சுகா, ஸலோமீ, கிரிஜா, பிங்கலீ என்ற ஏழுகஞ்சுகங்கள், முறையே கருநிறம், மலக்கட்டு, ஸ்வரக்கம்மல், கொப்புளம், வாந்தி, ஜாட்யம், பார்வைக்குறைவு என்ற விகாரங்களை ஏற்படுத்துகின்றன.

(3) **சேர்க்கை தோஷங்கள்:-** விஷப்பொருள், காரீயம், ஈயம் இவைகளின் சேர்க்கை, முறையே மரணம், ஜாட்டியம், நாற்றம் இவைகளை ஏற்படுத்துகின்றன.

இரண்டாவது உல்லாஸம்

அரசனுடைய அனுமதியையும் உதவியையும் பெற்று நல்ல சிஷ்யர்கள் வாய்ந்த குரு, தான் ரஸ ஸம்ஸ்காரங்களையும் ரஸவாதத்தையுமறிந்தவனாகவுமிருந்து ரஸபைரவரையும், ரஸாங்குசாதேவியையும் நன்கு பூஜித்து, ஒருவித உபத்ரவமுமில்லாமலும் ஸாதனங்கள் நிரம்பியதும், அழகானதும், சுத்தமானதும், சாந்தமானதுமான பிரதேசத்தில் ரஸசாலையை நிறுவி, அதில் ரஸபைரவ (ரஸாங்குசர்) ரையும் அவர் - மடியில் வீற்றிருக்கும் ரஸாங்குசா தேவியையும் அவரவர்கள் மூலமந்திரஜபம், புரச்சர்யையுடன் பிரதிஷ்டைசெய்து, தாந்த்ரிக முறைப்படி ரஸஸந்தியாவந்தனம் செய்து பூஜித்து ரஸலிங்கத்தை பிரதிஷ்டை செய்யவேண்டும். ரஸேசுவரருக்கும் மற்ற ஸித்த தேவதைகளுக்கும் பலியளித்து, ரஸத்தை ஸ்தோத்ரம் செய்து தனது ஆசாரியர், குலோசாரியர், ரஸாசாரியர்கள், ரஸஸித்தர்கள் இவர்களை அர்ச்சித்து ரஸ ஸம்ஸ்காரத்தைத் துவக்கவேண்டும்.

மூன்றாவது உல்லாஸம்

சிஷ்ய தீக்ஷை

இது ஸாதக தீக்ஷை, ஸமயா தீக்ஷை, நிர்வாணதீக்ஷை, ஆசார்ய தீக்ஷை, ஸித்த தீக்ஷை என ஐந்து விதமாகக் கூறப்படுகிறது. இது சிறந்த ரஸஸித்தனான ஆசார்யன் தனது சிஷ்யனைத் தன்னளவில் சிறந்த ரஸஸித்தனாகச் செய்ய ஆசியும் அருளும் பெருகச்செய்து வைக்கும் ஸம்ஸ்காரம்.

ஸாதக தீக்ஷை

நல்ல வாரம், திதி, நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் ஆசார்யன் இரண்டுகலசங்களில் சிவனையும் பராசக்தியையும் ஆவாஹனம் செய்து பூஜித்து ரஸாங்குசீமூலமந்திரத்தை ஆயிரம் தடவை ஜபித்து ஹோமம் செய்து தாந்திரிகமுறைப்படியோகினீ முதலானோரை பூஜித்து, தன்னை சிவனாகத் தியானித்து, சிஷ்யனை சிவதிருஷ்டியால் பார்த்து புரோக்ஷித்து அவனது வலது காதில், ரஸாங்குசீ, கணபதி க்ஷேத்ரபாலர் இவர்களின் மூலமந்திரத்தை உபதேசம் செய்து, அத்தேவதைகளுக்காக ஹோமம் செய்து, தாந்திரிக முறைப்படி பூஜையானவுடன் ''சோம்பலில்லாமல் அவதானத்துடன் மந்திரங்களை ஜபித்தும், தேவ-குரு பூஜை செய்தும் நல்ல ஆசாரத்துடன் சாஸ்திர அத்தியயனம்செய்'' என ஆசீர்வதிக்கவேண்டும். சிஷ்யனும் ஆசாரியனின் அனுக்கரஹம் பெற்று, அவ்வாறே செய்து கொண்டு, ஆதிநாதர், மூலநாதர், கோரக்ஷேசர், கோங்கணேசர், சௌரங்கி முதலான நவநாதர்களையும், கோடாசூளி, வ்யாளி, நாகார்ஜுனர் முதலான ஸித்தர்களையும் பூஜித்து ஆசாரியசுச்ரூஷை செய்து வரவேண்டியது.

ஸமயா தீக்ஷை

தன்னைச் சிவனாகத் தியானித்து, சிஷ்யனை தனது ஔரஸபுத்ரனாக நினைத்து, ஆசார்யன் சிஷ்யனுக்கு கர்ப்பாதானம், பும்ஸவனம், ஸீமந்தம், ஜாதகர்ம, நாமகரணம் வரை செய்து ரஸபைரவ மந்திரத்தையும், ரஸகாயத்ரீயையும் உபதேசித்து, ஹோமம் முதலியவைகளைச் செய்து, சிஷ்யன் குருஸேவை செய்து வரவேண்டும்.

நிர்வாண தீக்ஷை

முன்போல் ரஸபைரவ மந்திரம் உபதேசித்ததும், சிஷ்யனுக்குப் புலித்தோல் ஆஸனம் அளித்து, ரஸசாஸ்திரத்தை உபதேசித்து, ''சிஷ்யனே ! நீ சிவனாகி, எல்லோருக்கும் நன்மைபுரிந்து உயர்ந்த சிகித்ஸகனாக ஆகுவாயாக'' என ஆசீர்வதிக்கவேண்டும்.

ஆசார்ய தீக்ஷை

நிர்வாண தீக்ஷை ஆனவுடன் குருபூஜை முதலியவைகளைச் செய்து சிஷ்யனுக்கு ஆசார்யனால் உபயோகிக்கத்தகுந்த ஆஸனம், வஸ்திரம், ஆபரணங்கள், யோகப்பட்டம், யோக தண்டம் முதலியவைகளை அளித்து ''சிஷ்யனே ! இன்று முதல் நீயும் ஆசார்யனாகி விட்டாய்'' என ஆசீர்வதிக்கவேண்டும்.

ஸித்த தீக்ஷை

ஆசார்ய தீக்ஷை அனவுடன் ரஸமந்திரத்தை புரச்சர்யாமுறைப்படி ஸித்தி செய்த சிஷ்யனை தன்னை ஸர்வதேவமயனாகக் கருதச்செய்து ஸித்தனாக்க வேண்டும்.

அந்நிலையில் அவனிடம் எல்லாதேவதைகளும் வஸிக்கிறார்கள். அவனது பார்வை உலகிற்கு எல்லாவித

க்ஷேமத்தையும் அளிக்கின்றது. அவனுக்கு பாபம், புண்யம், சுகம், துக்கம் போன்ற பந்தங்கள் ஏற்படாது. பசிதாகமற்று தன்னிலை மறந்து ஸித்தனாக, மனம் திருப்தியுடன் நிரம்பியவனாக ஆசை ஆவலற்று, சுகமாக இஷ்டப்படி ஸஞ்சரிப்பான். அன்று முதல் அவன் யாருக்கும் தாழ்ந்தவனல்ல, யாரையும் வணங்கக் கூடாது. அவன் ஜீவன் முக்தனாகின்றான். இது ஸித்த தீக்ஷை.[1]

நான்காவது உல்லாஸம்.

ரஸ ஸம்ஸ்காரங்கள்

ரஸ ஸம்ஸ்காரங்கள் பதினெட்டு வகையாகக் கூறப்பட்டுள்ளன. அவையாவன:-

1. ஸ்வேதனம்
2. மர்த்தனம்
3. மூர்ச்சனம்
4. உத்தாபனம்
5. பாதனம்
6. நிரோதனம்
7. நியமனம்
8. தீபனம்
9. அனுவாஸனம்
10. சாரணம்
11. ஜாரணம்
12. கர்ப்பத்துருதி
13. பாக்ஷ்யத்துருதி
14. ரஞ்சனம்
15. ஸாரணம்
16. அனுஸாரணம்
17. பிரதிஸாரணம்
18. வேதம்

இவைகளில் முதலில் கூறப்பட்டுள்ள ஒன்பது ஸம்ஸ்காரங்கள் ரஸத்தை சுத்தி செய்து ஔஷதங்களில் உபயோகிப்பதற்கு தகுதியுள்ளதாகச் செய்யவும், பின் கூறப்பட்டுள்ள ஒன்பது ஸம்ஸ்காரங்கள் சுத்தி செய்யப்பட்ட ரஸத்தை தேக்ஷவேதத்திற்கும் (ரஸாயனசிகித்ஸை) லோஹ

....

1. இரண்டாவது மூன்றாவது அத்தியாயங்களின் மூலத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளபடி, தீக்ஷையும் மந்திரஸித்தியும் பெற்றுரஸபைரவர் ரஸாங்குசீ இந்த தேவதைகளின் பிரஸாதத்தை அடைந்தாலல்லாது, ரஸஸம்ஸ்காரங்களை பின்கூறும் ரஸாயனங்களையம் செய்வதற்கோ, சிந்திற்கொடி, பிராம்மீ போன்றவைகளினால் ரஸாயனகல்பம் செய்து கொள்வதற்கோ இயலாது என்பது இந்த ரஸசாஸ்திரத்தின் முடிவு.

வேகத்திற்கும் (ரஸவாதம்) தகுதியுள்ளதாகச் செய்யவும். ரஸத்திற்கு செய்யவேண்டியவைகளாகக் கருதப்படுகின்றன.

1. ஸ்வேதனம்

ஒரு தடவை சுத்தி செய்வதற்கு 100 அல்லது 50 அல்லது 25 பலத்திற்குக் குறையாமல் ரஸத்தை எடுத்துக்கொள்ளவேண்டும்.

காந்தத்தினால்[1] செய்யப்பட்ட கல்வத்தில் ரஸத்தைப் போட்டு சுண்ணாம்பு, ஓட்டடை, கொடிவேலி வேர்பட்டை, திரிபலை, வெல்லம், ஆடு முதலியவைகளின் ரோமம் சுட்டசாம்பல், செங்கல், கற்றாழை, உப்பு, கண்டங்கத்திரி, முள்ளுக்கத்திரி, திப்பிலி, கடுகு, காட்டுப்புழு பாகலிலை இவைகளை வகைக்கு ரஸத்தின் பதினாறில் ஒரு பங்கு சேர்த்து தான்யாம்லம் விட்டு மூன்று தினங்களரைக்கவும்.

தான்யாம்லம் செய்யும் முறை.

யவை, கோதுமை, சிறுமணி அரிசி, உளுந்து, பயறு, கடலை, கேழ்வரகு, தினை போன்ற தான்யங்களைக் கிடைத்தமட்டில் உமி நீக்கி தான்யத்திற்கு நான்கு பங்கு ஜலத்தில் மட்குடத்தில் ஊறவைத்து, அதில் சிறுபுள்ளடி, பொன்னாங்கண்ணி, வெள்ளைச்சாரடை, சிகப்புச்சாரடை, சித்திரகம், கருசலாங்கண்ணி, விஷ்ணுக்கிரந்தி, தண்ணீர்விட்டான் கிழங்கு, ஈச்வரமூலி, கொட்டைக்கரந்தை, வெள்ளைக்காகணம், நெய் சட்டிப் பூண்டு, திரிபலை இவைகளைத் தான்யத்தின் நான்கில் ஒரு பங்கு சேர்த்துப் புளிக்கும் வரை வைத்துப் புளித்தவுடன் வடிகட்டி எடுக்கவும்.

தான்யாம்லத்தை மூன்று நாட்களரைத்த பின்சூடான காடி விட்டலம்பி ரஸத்தைத் தனிப்படுத்தவும். பிறகு உப்பு, கடுகு, திரிகடு, முள்ளங்கி, சித்திரகம், திரிபலை, வெள்ளைச்

1. காந்த லோஹத்தால் செய்யப்பட்ட கல்வம் கிடைக்காவிடத்து நன்னிக்கல் கல்வம் உபயோக்கிக்க நல்லது.

சாரடை, ஆடுதீண்டாப்பாளை, சிறுகீரை, காஞ்சூரி, இஞ்சி, மஞ்சள், நாகபலா (துத்தி?) நவச்சாரம் இவைகளை ஸம எடை எடுத்து தான்யாம்லம் விட்டு நன்கரைத்து ஒரு அங்குலகனமாகத் துணியில் தடவி, அதன் நடுவில் முன் தயாராயிருக்கும் ரஸத்தையிட்டு முடிச்சு கட்டி தான்யாம்லத்துடன் கூடிய தாம்ர பாத்திரத்தில் தோலாயந்திரத்தில்* ஒரு தினம் முழுவதும் எரித்து எடுத்து சூடான காடியாலலம்பி எடுக்கவும். இவ்விதம் 21 தடவை ஸ்வேதனம் செய்யவும்.

2. மர்த்தனம்

சுண்ணாம்பு, முதலிய ஸ்வேதனத்தில் கூறப்பட்டுள்ள சரக்குகளுடன் பேய்த்தும்மட்டி, சரக்கொன்னை அழிஞ்சில், கருஊமத்தை திரிகடு, இவை வகைக்கு ஸம எடை சேர்த்து ரஸத்தின் பதினாறில் ஒரு பங்கு ரஸத்துடன் கூட்டி *தப்த கல்வத்தின் தான்யாம்லத்தினால் ஒருநாள் முழுவதுமரைத்து சூடான காடியினாலலம்பவும். இவ்விதம் 21 நாள் செய்யவும். (பின் கூறப்படும் அப்ரகஜாரணம், பீஜஜாரணம் செய்த பிறகு, இந்த மர்த்தனம் செய்யரஸத்தின் அழுக்கைப் போக்கி ராகம் என்ற வர்ண மேற்றும் ஸம்ஸ்காரம் செய்வதற்கு உதவுகின்றது.)

3 – 4. மூர்ச்சனமும் உத்தாபனமும்

கடுகு, ஆடுதீண்டாப்பாளை, சித்திரகம், திரிபலை பால்முதுக்கன் கிழங்கு, காட்டுக்கருணை, ஈச்வர மூலி, மணத்தக்காளி, அவுரிவேர், வசம்பு, குருந்தோட்டி, கற்றாழை, கருஊமத்தை, ஆவாரை, விஷ்ணுக்கிரந்தி அழிஞ்சில், காவுஜபான் பாதாள கருடன்கிழங்கு, இவைகளின் சாரம், எருக்கம்பாலும் விட்டு ரஸத்தை தப்தகல்வத்திலிட்டு ரஸத்தின் உருவம் மாறும் வரை அரைத்து மூஷையிலிட்டு மூடி

---

*தோலாயந்திரம், தப்தகல்வம், பூதரயந்திரம் போன்று வரும் பரிபாஷை பதங்களுக்கு பின் பரிபாஷையைப்பற்றி 25 - வது உல்லாஸத்தில் விவரணம் கொடுக்கப்படும்.

பூதரயந்திரத்தில் எரிக்கவும். மறுபடியும் கடுகு முதலியவைகளைச் சேர்த்து இவ்விதம் 21 தடவை பூதரயந்திரத்தில் பாகம் செய்யவும். ரஸம் மூர்ச்சை (உருவம் மாறி மற்ற திரவியங்களுடன் ஒன்றாகக் கலத்தல்) அடையும். மூர்ச்சனை செய்தபிறகு ரஸத்தை சூடான காடியினாலாவது வென்னீரினாலாவது அலம்பி எடுக்கவும்.

5. பாதனம்

ஊர்த்வ பாதனம்.

வட்டத்திருப்பி, பிராம்மீ, சித்ரகம், புளியாரை, மணத்தக்காளி, வல்லாரை, விஷ்ணுக்ராந்தி, கற்றாழை, முன்னைஇலை, கருசலாங்கண்ணி, காவுஜபான், சங்கங்குப்பி, பூபாடலீ (?) நொச்சி, காக்கைச்சுண்டை, தண்ணீர்விட்டான், இஞ்சி, தேவதாளிப்பீர்க்கு, திலபர்ணீ (?) அவுரி இலை, சரக்கொன்னைப் பட்டை, பால் முதுக்கன், அழிஞ்சில், தேவதாரு இவைகளின் சாறு அல்லது கஷாயத்தில், ரஸத்தை அதன் நான்கில் ஒரு பங்கு சுத்தத்தாம்ரத்தில், ரஸத்தை அதன் நான்கில் ஒரு பங்கு சுத்தத்தாம்ரப்பொடியுடன் சேர்த்தரைத்து ஊர்த்வபாதன யந்திரத்தில் ஒரு நாள் எரித்துத் தானாக ஆறியவுடன் பிரித்து மேல் சேர்ந்திருக்கும் ரஸத்தை எடுத்து முன்கூறிய சரக்குகளின் சாறு அல்லது கஷாயத்ததால் நான்கில் ஒருபங்கு தாம்ரப்பொடியும் முன்போலச் சேர்ந்தரைத்து ஊர்த்வபாதனம் செய்யவும். இவ்விதம் 7 தடவை செய்யவும்.

அதப்பாதனம்

திரிகடு, உப்பு, திரிபலை, சித்ரமூலம், கடுகு, முருங்கைப்பட்டை, எல்லாம் ரஸத்திற்கு ஸமம் சேர்த்து தப்த கல்வத்தில் தான்யாம்லம் விட்டரைத்து மேலிருக்கம் பானையினுள் த்டவி, மேல் பானையின் மேல் லகுபுடம் போட கீழ் பானையில் ரஸம் வந்து தங்கும். இவ்விதம் 7 தடவை செய்யவும்.

திரியக்பாதனம்

தான்யாப்ரகம் ரஸத்திற்கு ஸம எடை கூட்டி ஒருசாமம் தான்யாம்லத்தினாலரைத்து திரியக்பாதன யந்திரத்தில் கடுந்தீயிலிட்டெரித்து எடுக்கவும், இவ்விதம் அப்ரகத்தின் ஸ்தானத்தில் ஸவர்ணம், வெள்ளி, காந்தம், உருக்கு இவை ரஸத்திற்கு கால் பங்கு சுத்திசெய்து சேர்த்து ஊர்த்வ - திரியக்பாதனங்கள் செய்விக்க அதனதன் சேர்க்கைக்குகந்தவாறு விசேஷகுணங்களுடன் சுத்தி ஏற்படும் இயற்கையாகவோ செயற்கையாகவோ ரஸத்துடன் சேர்ந்திருக்கும் நாகமும் வங்கமும், தாம்ரம் போன்ற லோஹத்துடன் சேர்ந்து ரஸத்திலிருந்து பிரிந்து விடுகின்றன. இவ்வித பாதனஸம்ஸ்காரத்தில் மேற்கூறிய பாதன யந்திரங்கள் கிடைக்காவிடத்து தீபிகாயந்திரத்திலும் பாதனம் செய்யலாம்.

6. நிரோதனம்

முன் கூறப்பட்டுள்ள ஸம்ஸ்காரங்களால் சக்தி இழந்து ஜடமாகவிருக்கும் ரஸத்திற்கு வீர்யமளிக்க இந்த ஸம்ஸ்காரம் செய்யப்படுகின்றது. ஒரு ஸ்தாலி (ஆப்யாயன யந்திரம்)யில் ரஸத்தை இட்டு அதன் மேல் உப்பைப்பொடி செய்து தூவி, கொஞ்சம் ஜலமும் விட்டு, ஸ்தாலியை சராவத்தால் மூடி மண் சீலையிட்டு பானை மேல் லகு (குக்குட) புடமிடவும். இவ்விதம் 7 தடவை நிரோதனம் செய்ய ரஸம் நல்ல வீர்யமுள்ளதாகும்.

7. நியாமனம்

புளியங்காய், பால்முதுக்கன், ஈச்வரமூலி, உப்பு, கருசலாங்கண்ணி, காட்டுப்பழுபாகலிலை, வேப்பிலை இவைகளைத் தான்யாம்லம் விட்டரைத்து தான்யாம்லத்திலேயே கரைத்து அதில் ரஸத்தை நியாமக யந்திரத்தில் 7 நாள் ஸ்வேதனம் செய்த ரஸத்தின் சபலத்தன்மை நீங்கிக் கட்டுப்படும்.

8. தீபனம்

நிலாவாரை, மிளகு, யவச்சாரம், ஸர்ஜக்ஷாரம், நவச்சாரம், ஜாதிப்பூ, மல்லி, செங்கழுநீர்ப்பூ, நிலக்கடம்பு, குஸூம்பப்பூ, படிக்காரம், ஐந்துஉப்புகள், கடுகு, முருங்கைவேர், அன்னபேதி, முன்னை, கற்றாழை, காட்டுப்பழுபாகல், வெள்ளைக்காகணம், பூனைக்காலி, தேன், சித்திரகமூலம், காக்கைச் சுண்டை, எல்லாவற்றையும் அம்லகணத்தினாலரைத்துக் கல்கம் செய்து அதன் நடுவே ரஸத்தை வைத்துடோலா யந்திரத்தில் ஒருநாள் எரித்து எடுக்கவும். இவ்விதம் 7 நாட்கள் செய்யவும். இந்த ரஸத்திற்கு நல்ல தீபனசக்தி உண்டாகி கிராஸம் ஏற்கத் தகுதியேற்படும்.

9. அநுவாஸனம்

இவ்விதம் தீபனம் செய்யப்பட்ட ரஸத்தை எலுமிச்சம்பழச்சாற்றில் கடும் வெய்யிலில் 7 பாவனைகள் செய்ய அநுவாஸனமாகும்.

இந்த ஒன்பது ஸம்ஸ்காரங்களால் கஞ்சுகம் ஔபாதிகம், யௌகியம் போன்ற எல்லா தோஷங்களும் நீங்கிப் பாதரஸம் எல்லாவித ஔஷதங்களிலும் உபயோகிக்கத் தகுதியுள்ளதாகின்றது.

10. சாரணம்.

ஸமுக சாரணம், நிர்முக சாரணம் என சாரணம் இருவகை. அப்ரகம் முதலியவைகளை ஏற்கத்தகுந்த முகம் (தீபன சக்தி) ஏற்படுத்துவது ஸமுக சாரணமெனவும், இவ்வித முகம் ஏற்படுத்தாலேயே அப்ரகம் முதலியவைகளை பக்குவப்படுத்தி ரஸத்தில் சாரணம் செய்வது நிர்முக சாரணமெனவும் கருதப்படுகின்றது.

ஸமுக சாரணம்.

(ரஸத்திற்கு முகமுண்டாக்குதல்)

1. முககரணம்

செங்கல்லின் நடுவில் ஆழமாகக் குழி செய்து அதில் அநுவாஸம் செய்யப்பட்ட ரஸத்தை இட்டு, அதன்மேல் சுத்தமான துணியால் மூடி, மேல் ரஸத்தின் பத்தில் ஒருபங்கு சுத்த கந்தகம் போட்டு, சராவத்தினால் மூடி அதன்மேல் ஒரு லகுபுடம் போடவும். ஆறின பிறகு எடுத்து நான்காக மடித்த துணியில் வடிகட்டி மறுபடியும் கந்தகத்தை இவ்விதம் 100 தடவை ஜாரணம் செய்து ஊர்த்வபாதனம் செய்து ரஸத்தை எடுக்கவும். அந்த ரஸத்தை மூங்கிற் குழாயிலிட்டு வாயை மூடி சந்திக்கு மண் சீலை செய்து கோமூத்ரம் நிரம்பிய பாத்திரத்தில் டோலாயந்திரத்தில் 21 நாள் எரிக்கவும். பிறகு அந்த ரஸத்தை தப்தகல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாறு, துறிஞ்சிநார்த்தைச்சாறு, புளிவஞ்சிச்சாறு, படிக்காரம் இவைகளால் மூன்று தினங்களும், சிகப்பு மண்ணுண்ணிப் பூச்சிக்களால் மூன்று தினங்களும், அரைத்துக்கொள்ளவும். ஒருகல்லின் நடுவில் அகலமாயும் ஆழமாயும் உள்ள குழி செய்து கந்தகத்தையும் தான்யாப்ரகத்தையும் 10 நிஷ்கஅளவு எடுத்து எலுமிச்சம்பழச்சாற்றால் ஒரு யாமமரைத்து குழியுனுட்புறத்தில் தடவி அதில் முன்கூறிய ரஸத்தை 20 நிஷ்க அளவு போட்டு, மேல் கல்லிட்டு உப்பு மண்ணால் சீலைசெய்து தீபாக்னியில் 7 நாள் எரிக்கவும். தானாக ஆறியவுடன் எடுத்து வடிகட்டி மறுபடியும் முன்போலவே மூன்று தடவை பாகம் செய்யவும். இதனால் தேவமுகம் என்று ரஸத்திற்கு சிறந்த முகம் ஏற்படுகின்றது.

2. முககரணம்

முன்கூறிய ஸம்ஸ்காரங்கள் செய்யப்பட்ட ரஸத்தை அதற்கு சமம் உயிருடனுள்ள சிவப்பு மண்ணுண்ணிப் பூச்சி சேர்த்து 3 நாளரைத்து மண்ணுண்ணிப்பூச்சி அரைத்துப் பூசிய மூஷையிலிட்டு மேலும் மண்ணுண்ணிப்பூச்சிக் கல்கமிட்டு மூடிக்காயவைத்து, மேல் ஈரமான சாணத்தால்

பூசிக்குழியிலிட்டு, உமிசேர்ந்த வராட்டி நெருப்பில் புடம் போடவும். மாலையிலெடுத்தரைத்து முன்போல் 30 தடவை புடம் போட, குஹ்யஸூதமெனவும் பெயர் பெற்று அக்னியைப் போன்று பசி அதிகமாகி எல்லாவற்றையும் ஜீர்ணம் செய்கின்றது.

3. முககரணம்

ரஸத்தை மூங்கிற்குழாயிலிட்டு மண்சீலை செய்து கோமூத்ரம் நிரம்பிய பாத்திரத்தில் தோலாயந்திரத்தில் 21 நாள் எரிக்க, சாரணைக்குகந்த முகம் உண்டாகின்றது.

4. முககரணம்

இரண்டு செங்கல்களில் நடுவில் 4 கன அங்குல அளவு குழியிட்டு, அவைகளில் சுத்த கந்தகத்தையும் தான்யாப்ரகத்தையும் வகைக்கு 10 நிஷ்க அளவில் எடுத்து எலுமிச்சம் பழச்சாற்றினால் அரைத்துப் பூசி அதில் அனுவாஸனம் செய்யப்பட்ட ரஸம் 20 நிஷ்க அளவு போட்டு, இருகல்களையும் பொருத்தி செம்மையாக மண்சீலை செய்து காயவைத்து அதன் கீழ் தீபாக்னியை 7 நாள் இடைவிடாமல் எரித்து ஆறினவுடன் எடுத்துத் துணியில் வடிகட்டவும். இவ்விதம் 3 தடவை செய்ய முகம் ஏற்படுகின்றது.

இவ்விதம் ரஸத்திற்கு முகத்தை ஏற்படுத்திய பின் அதில் அப்ரக பஸ்மம், அப்ரகஸத்வம் போன்றவைகளை கிராஸம் கொடுக்க ஸமுக சாரணமாகும்.

நிர்முகசாரணம்.

அனுவாஸனம் வரையிலுள்ள ஸம்ஸ்காரங்கள் செய்யப்பட்ட ரஸம் 64 நிஷ்கம், வைக்ராந்த பஸ்மம் 4 நிஷ்கம், வஜ்ரபஸ்மம் 1 நிஷ்கம் இவைகளைப் பின் கூறப்படும் திவ்யௌஷதிகளால் ஒரு வாரம் அரைக்க முகமில்லாமலேயே ரஸத்திற்கு அப்ரகம் முதலியவைகளின் சாரணத்தில் சக்தி ஏற்படுகின்றது

வாஸனாமுகசாரணம்.

முன் கூறியபடி இஷ்டிகா - துலாயந்திரங்களில் ரஸத்தில் 16 மடங்கு கந்தகத்தை ஜாரணம் செய்வது வாஸனாமுகஜாரணமாகும்.

சாரணத்திற்காக அப்பரகஸம்ஸ்காரம்.

கீழ்க்குறிப்பிடப்படும் முறைகளினால் அப்ரகத்தை ஸம்ஸ்காரம் செய்வதில் ரஸம் முகமுள்ளதாகவோ முகமில்லாததாகவோ இருந்தாற்கூட அப்ரகம் ரஸத்தில் காரணமாகின்றது.

1. அப்ரக பஸ்மத்தை, ஆட்டுரக்தம், யவக்ஷாரம் ஸர்ஜக்ஷாரம் டங்கணக்ஷாரம் முதலிய க்ஷாரங்கள், நீர்திப்பிலி, பசு வெள்ளாடு செம்மறியாடு மனிதன் ஸ்திரீ இவர்களின் ரத்தம், சுக்ரம், சோணிதம் (ஸ்திரீகளின் ரஜஸ்) கொத்தமல்லி, அம்லவர்க்கம் இவைகளினால் 7 நாட்கள் அரைத்து ரஸத்தில் சாரணம் செய்யலாம்.

2. அப்ரகபஸ்மத்தை வாழைக்கிழங்கு, முள்ளங்கி, தண்ணீர்விட்டான், மூக்கரட்டை, அரைக்கீரை, புளியங்காய், முருங்கைவேர், கருணைக்கிழங்கு இவைகளின் ரஸத்தால் 7 நாள் பாவனை செய்தரைத்து ரஸத்தில் சாரணை செய்யவும்.

3. தாம்பிரபாத்திரத்தில், உப்பு, ஸர்ஜக்ஷரம், வெங்காரம், படிக்காரம், அன்னபேதி இவைகளை காடியில் கரைத்து வைத்து 3 நாள் கழித்து அத்திரவத்தில் ஸவர்ணவேதம் செய்ய வேண்டுமானால் காரீயத்தையும் ரஜத வேதம் செய் வேண்டுமானால் ஈயத்தையும் 100 தடவை உருக்கிச் சுருக்கு கொடுத்து வடிகட்டி அந்த திரவத்தால் அப்ரகபஸ்மத்தை 7 நாள் அரைக்க சாரணம் செய்ய உபயோகமாகும்.

4. தான்யாப்பரகத்தை எருக்கம்பாலால் ஒருநாள் அரைத்து வில்லை தட்டி சராவத்திலிட்டு கபோதபுடம் போடவும், இம்மாதிரி எருக்கம்பாலிலரைத்து 4 கபோதபுடம்

இட்டபின் வாழைக்கிழங்கின் சாற்றில் 3 தடவையும், முள்ளங்கிச்சாற்றில் 3 தடவையும், மணத்தக்காளிகீரை, சிறுகீரை, பொன்னாங்கண்ணி, மூக்கரட்டை நாயுருவி, கொடிவேலி, பால்முதுக்கன் கிழங்கு, கருசலாங்கண்ணி, அகத்திஇலை, வகைக்கு 4 தடவையும் பாவனை செய்து, அரைத்து, ஒவ்வொரு பாவனை முடிவிலும், வில்லைத்தட்டி, கபோதபுடம் போடவும். இவ்விதம் பஸ்மமான அப்ரகத்தை, நிலப்பனைக் கிழங்கு, புளியங்காய், அரைக்கீரை, வாழைக்கிழங்கு, முருங்கைஇலை, சதாவரீ, எருக்கு, மூக்கரட்டை இவைகளின் திரவத்தால் ஒவ்வொரு நாளரைத்து ரஸத்திற்கு சாரணம் செய்யவும்.

5. தான்யாப்ரகத்தை, எருக்கம்பாலில் ஒவ்வொரு யாமமரைத்து 14 கபோதபுடம் போடவும். பிறகு வாழைக்கிழங்கு, எருக்கு, பீலு, வெற்றிலை, நிலப்பனை, கழற்சிஇலை, முருங்கையிலை, பேய்ச்சுரை, கொத்தமல்லி, அழிஞ்சில், சிற்றாமுட்டி, நாயுருவி இவைகளின் சாற்றுடன் திரிகடு, காடி சேர்த்து பானையிலிட்டு தோலாயந்திரத்தில் அப்ரகத்தை வேகவைத்தெடுத்து காயவைத்து ஒருநாள் தப்தகல்வத்திலிட்டு வெங்காரம், படிக்காரம், இந்துப்பு, அன்னபேதி இவை ஸமனெடை அப்ரகத்தின் 10இல் ஒருபங்கு சேர்த்து அரைத்து ரஸத்திற்கு சாரணம் செய்யவும்.

6. கொட்டைக்கரந்தைச் சாற்றில் உருக்கின காரீயத்தை 100 தடவை கபோதபுடம் போடவும். பிறகு இஞ்சிச் சாற்றினாலும் கொடிவேலிச் சாற்றினாலும் வகைக்கு 7 தடவை பாவனை செய்தரைத்து கபோதபுடம் போட்டபின், அப்ரகத்திற்கு ஸமம் கந்தகம் சேர்த்தரைத்து முன்கூறியபடி காரீயம் சுருக்குகொடுத்த கொட்டைக்கரந்தைச் சாற்றினாலும், மாதுளைச்சாற்றினாலும், முலைப்பாலாலும் வகைக்கு ஒரு நாள் பாவனை செய்து சாரணை கொடுக்கவும். (இவ்விதமே சாரணை செய்யக்கூடிய அப்ரகஸத்வம், ஸ்வர்ணம் முதலிய லோகங்கள், மற்றபலவித ஸத்வங்கள், துவந்த்வங்கள், ரத்னங்கள் முதலியவைகளை அரைத்து ரஸத்தில் சாரணை செய்யவும்.)

7. தான்யாப்ரகத்தை திலபர்ணீ ரஸத்தினால் 3 தடவை பாவனை செய்தரைத்து 3 கபோதபுடமிட்டு மறுபடியும் 7 பாவனை செய்தரைத்து ரஸத்துடன் சேர்த்தரைக்க பிஷ்டியாகி சாரணமாகும்.

8. நவச்சாரம், யவக்ஷாரம், ஸர்ஜக்ஷாரம், ஐந்து உப்புகள், படிக்காரம், அன்னபேதி, வெங்காரம், பூநாகம், ஸ்வர்ணமாக்ஷிகம், பூநீர், வத்ஸநாபி, உவர்மண், புளிவஞ்சி, இவைவகைக்கு ஸமனெடை எடுத்து அதற்கு சமம் தான்யாப்பரகம் சேர்த்து ஒரு நாளரைக்கவும், எருக்கம்பால், கருசாலாங்கண்ணி, அரைக்கீரை, மூக்கரட்டை, முள்ளங்கி, கொடிவேலி, வாழைக்கிழங்கு, மணத்தக்காளிக் கீரை, சதாவரி, நாயுருவி, நிலப்பனை, பால்முதுக்கன், அம்மான் பச்சரிசிக்கீரை, அகத்திக்கீரை, பொன்னாங்கண்ணி, முருங்கைக்கீரை, கண்டங்கத்திரி, கற்றாழை, புளியங்காய், சிற்றாமுட்டி, பேய்ச்சுரை, கழற்சியிலை, திரிகடு, மல்லி, பீலு, அழிஞ்சில், வெற்றிலை இவைகள் ஸமனெடை சேர்த்து அரைத்துக் கலக்கி நான்கு பங்க தான்யாம்லத்தில் கரைத்து அதில் உருகிய காரீயத்தை நூறு தடவை சுருக்குக் கொடுத்து அந்த கல்வத்திரவத்தால் முன் தயாரித்துள்ள அப்ரகத்தை ஒவ்வொருயாமம் நன்கரைத்து கபோதபுடம் 20 தடவை போடவும். பிறகு அதற்கு சமம் கந்தகம் சேர்த்து முன் சொன்ன ஔஷதகல்கதிரவத்தாலும், ஸ்தன்யத்தாலும், மாதுளம் பழச்சாற்றாலும் மும்மூன்று நாட்களரைத்து ரஸத்திற்கு சாரணை செய்யவும்.

இம்முறையையே மற்ற ஸத்தவலோஹ சாரணத்திலும் உபயோகிக்கலாம்.

9. தாம்ரபாத்திரத்தில் அன்னபேதி, படிகாரம், ஸ்வர்ணமாக்ஷிகம், கந்தகம், ஸர்ஜக்ஷாரம், யவக்ஷாரம், வெங்காரம் ஐந்து உப்புகள் இவைகளை அம்லவர்க்கத்தில் கரைத்து அத்திரவத்தில் ஸ்வர்ணவேதத்தில் காரீயத்தையும், ரஜதவேதத்தில் வெள்ளீயத்தையும் நூறு தடவை உருக்கிச்

சாய்த்துப் பிறகு சாரணைக்குகந்த அப்ரகத்தை இதனால் பாவனை செய்யவும், பிறகு சதாவரீ மூக்கரட்டை வாழைக்கிழங்கு, பேய்த்தும்மட்டி, புளியங்காய், முருங்கையிலை அரைக்கீரை இவைகளின் சாற்றால் 7 நாள் பாவனை செய்து கொண்டு, வெற்றிலை, கழற்சிஇலை, முருங்கைக்கீரை, நாணல், அழிஞ்சில் சிற்றாமுட்டி, வாழைக்கிழங்கு, நன்னாரி, பீலு, சக்கரவர்த்திக்கீரை, (புளிச்சக்கீரை) நிலப்பனை, கொத்தமல்லி, நாயுருவி, பேய்ச்சுரை இவைகளின் சாற்றில் திரிகடுகு, கடுகு இவைகளை அரைத்துக் கலக்கி அக்கல்கத்திரவத்தில் அப்பரகத்தை தோலாயந்திரத்தில் ஸ்வேதனம் 3 நாட்கள் செய்து அதில் மறுபடியும் வெங்காரம் இந்துப்பு அன்னபேதி படிக்காரம் இவைகளைச் சேர்த்து முன் கூறப்பட்டுள்ள காரீயச் சுருக்கு கொடுத்த திரவத்தால் அரைத்து அப்பரகத்திற்கு சாரணம் கொடுக்கவும்.

10. தான்யாம்லம், அம்லவர்க்கம் இவைகளால் அப்ரகத்தை ஒருநாள் ஸ்வேதனம் செய்து அலம்பி கள்ளிப்பாலில் ஒருநாளரைத்து கபோதபுடம் போடவும். பிறகு இம்மாதிரியே அகத்திக்கீரை, அரைக்கீரை, வாழைக்கிழங்கு, முள்ளங்கி, பொன்னாங்கண்ணி, இஞ்சி, மணத்தக்காளி, மூக்கரட்டை, நாயுருவி, ஆமணக்கிலை இவைகளின் சாற்றால் வகைக்கு ஒருநாள் பாவனை செய்து ஒவ்வொரு புடம் போட்டு அவ்வப்பரகத்தை கள்ளிப்பாலில் ஒருநாள் தோலாயந்திரத்தில் எரித்து, நிழலில் காயவைத்தபின் அதில் நவச்சாரம், வேப்பங்கொட்டை, வசம்பு, அன்னபேதி, கடலைப்புளிப்பு இவைகளை வகைக்கு அப்ரகத்தின் வீசம் பங்கு சேர்த்து தாம்ரபாத்திரத்திலிட்டு அரைத்து இரும்பு பாத்திரத்தில் தடவி அதில் ரஸத்தை அரைக்கச் சாரணமாகும்.

11. தான்யாப்ரகத்தை ஸோமவல்லிச்சாற்றால் ஒவ்வொரு நாள் அரைத்து 7 கபோதபுடம் போட்டபின் ஸோமவல்லிச்சாற்றில் 7 பாவனை செய்யவும். சாரணைக் கேற்றதாகும்.

12. காடியில் நூறு தடவை காரீயத்தை உருக்கிவிட்டு அத்திரவத்தால் அப்ரகத்தை நூறு பாவனை செய்து தாம்ரபாத்திரத்திலிட்டு அரைக்க சாரணமாகும்.

சாரணத்திற்குகந்த கந்தகம்.

1. படிகாரம், அசமதம், ஸர்ஜக்ஷாரம், அன்னபேதி இவைகளை முருங்கையிலைச் சாற்றிலரைத்துக் கலக்கி அத்திரவத்தால் கந்தகத்தை ஒருவாரம் அரைத்து ரஸத்திற்குச் சாரணம் கொடுக்கவும்.

2. புரசம்பூ, தேக்கிலை, விஷ்ணுக்கிராந்தி இவைகளின் சாற்றால் வகைக்கு ஏழுதடவை கந்தகத்திற்கு பாவனை செய்து ரஸத்தில் சாரணம் செய்யவும்.

இவ்விதம் தயாரித்த கந்தகம் ரஸத்திற்குச் சிகப்பு நிறமளித்து ரஸத்தின் சஞ்சலத்தன்மையையகற்றி பீஜங்களின் பாகத்திலும் ஜாரணத்திலும் சிறந்து விளங்குகின்றது.

அப்ரக சாரணத்திற் சிறந்த திவ்யமூலிகைகள்

வஜ்ரீ(?) வாழை, சிறுபுள்ளடி, புளியங்காய், வியாக்ரபாதீ(?) பிரமிப்பூண்டு, கண்டங்கத்திரி, நாயுருவி, கற்றாழை கலப்பைக்கிழங்கு, ஈச்வரமூலி, முன்னை, சங்கங்குப்பி, பேய்த்தும்மட்டி, ஷண்டஜாரி(?) காட்டுப்பழுபாகல் முதலியவை.

சாரணமுறை

உருகிய கந்தகத்தில் தான்யாப்பிரகம் ஸமனெடை சேர்த்தரைத்து வைத்துக் கொள்ளவும். ஸமுகமாகவோ நிர்முகமாகவோ செய்யப்பட்டுள்ள ரஸம் 10 நிஷ்கம் எடுத்து கந்தகாப்பிரகயோகம் 2 நிஷ்கம் சேர்த்து நன்கு அரைத்து அதை

ஸ்வர்ணம் செய்வதானால் காரிய பிஷ்டியினாலும், வெள்ளி செய்வதானால் ஈயப்பிஷ்டியாலும் தேகஸித்திக்காகத் தாம்ர பிஷ்டியினாலும் ஸமனெடை உள்ளதால் கவசம் செய்து உருகின கந்தகத்திலிட்டு மூன்று தினங்கள் எரித்தெடுத்துப் பிறகு அதை தீபிகா யந்திரத்திலிட்டு ரஸத்தைப் பிரித்தெடுக்க வேண்டும். இது கர்ப்பசாரணம். மறுபடியும் அந்த ரஸத்தை கந்தகாப்ரகயோகம் சேர்த்தரைத்து (ஈயம் - காரீயம் முதலியவைகளின் பிஷ்டியால் கவசம் செய்யாமலே) உருகின கந்தகத்திலிட்டு மூன்றுநாள் எரித்தெடுத்துப் பின் தீபிகாயந்திரத்திலிட்டு ரஸத்தைப் பிரிக்கவும். இது பிஷ்டி சாரணம். அந்த ரஸத்தை தப்தகல்வத்திலிட்டு முன் ஸம்ஸ்காரம் செய்து வைத்திருக்கும் அப்ரகத்தை ரஸத்தின் 64இல் ஒரு பங்கு சேர்த்து திவ்யமூலிகைகளின் சாற்றால் ஒரு நாளரைத்து எலுமிச்சம்பழச்சாறு நிரப்பிய சாரண யந்திரத்திலிட்டு கடும் வெயிலில் ஒருநாள் வைக்க அப்ரகத்தை ரஸம் சாரணம் செய்கின்றது. இது கிராஸ சாரணம். இந்த கர்ப்பபிஷ்டிக்கிராஸசாரண முறையில் அப்ரக ஸத்வ சாரணமும் பத்திராப்பிரக சாரணமும் செய்யலாம்.

முன்கூறியவாறு ரஸத்தில் அப்ரகம் கால்வீசம் பங்கு சாரணம் செய்த பின் அப்ரகத்தை ரஸத்தின் 32இல் ஒரு பங்கு சாரணம் செய்யவும். இக் கிரமத்தில் வீசம் அரைக்கால், கால், அரைப் பங்கு சாரணம் செய்து ஸமனெடை சாரணம் செய்யவும். இவ்விதம் ஒன்று, இரண்டு, நான்கு, எட்டு, பதினாறு, முப்பத்திரண்டு, அறுபத்துநான்கு பங்கு வரை சாரணம் செய்யவும்.

இவ்விதம் அப்ரகம் சாரணம் செய்வதால், ரஸத்தின் இறக்கை (சஞ்சலகதி) சிதைவதுடன், தோஷம் நீங்கி, லகுத்தன்மை, கிராஸமேற்குத்தகுதி, நெருப்பிற்கு ஓடாதிருத்தல், சரீரத்தில் நன்கு பரவுதல் போன்ற குணங்கள் ஏற்படுகின்றன.

11. ஜாரணம் - பாலஜாரணம்.

ஜாரணம்-பாலஜாரணம் விருத்தஜாரணம் என இருவகைப் படுகின்றது. பாலஜாரண முறை முதலில் விவரிக்கப்படுகின்றது.

ரஸத்தில் அப்ரகஸத்வம், மற்ற ரஸோபரஸஸத்வங்கள் துவந்துவங்கள், லோஹங்கள், பக்வபீஜங்கள், பத்மராகம் முதலிய ரத்னங்கள் இவைகள் கிரம்மாக ஜாரணம் செய்யத் தகுந்தவை.

(அப்பரகஸத்வம்)

1. வஜ்ஜிராப்ரகத்தை விதிப்படி பஜ்மம் செய்து சாரணத்தில் கூறியபடி ஸம்ஸ்காரங்கள் செய்து, அதில் பத்தில் ஒரு பங்கு ஸ்வர்ணமாக்ஷிகம் சேர்த்து பஞ்சமாஹிஷம், பஞ்சகவ்யம் இவைகளால் அரைத்துக் கால்தோலா அளவுள்ள உருண்டைகளாகச் செய்து காயவைத்து மூஷையிலிட்டு கோஷ்டீயந்திரத்தில் நன்கு ஊத ஸத்வம் விழும். அந்த ஸத்வத்தை கால் பங்கு ஸ்வர்ணமாக்ஷிகம் சேர்த்து மூஷையிலிட்டு ஸத்வபாதனம் செய்யவும். மேலும் இம்மாதிரியே ஸ்வர்ணமாக்ஷிகம் சேர்த்து நான்கு தடவை ஸத்வபாதனம் செய்யவும்.

2. அப்ரகம் பஸ்மத்துடன் அதன் கால் பங்கு காரீயத்தையும் வீசம் பங்கு ஸ்வர்ணமாக்ஷிகத்தையும் சேர்த்து பஞ்சகவ்யம், பஞ்சமாஹிஷம் இவைகளால் அரைத்து கோஷ்டீயந்திரத்தில் எரித்து ஸத்வம் எடுத்து ஸ்வர்ணமாக்ஷிகமும் மனோசிலையும் வகைக்கு ¼ பங்கு சேர்த்து மூஷையிலிட்டு ஊத தங்கநிறமுள்ள ஸத்வமுண்டாகும். அத்துடன் இம்மாதிரி நான்கு தடவை மாக்ஷிகமும் மனோசிலையும் சேர்த்து ஸத்வம் எடுக்கவும்.

3. அப்பிரக பஸ்மம் 16 பங்கு, ஈயம் 4 பங்கு, தாளம் 4 பங்கு சேர்த்து பஞ்சமாஹிஷத்தாலும் பஞ்சகவியத்தாலும்

அரைத்து கோஷ்டீயந்திரத்தில் ஸத்வம் எடுத்து அத்துடன் ¼ பங்கு தாளகம் சேர்த்து மறுபடியும் ஸத்வம் எடுக்கவும். இவ்விதம் நான்கு தடவை தாளம் சேர்த்து ஸத்வம் எடுக்கவும்.

அப்ரகஸத்வத்தை மிருதுவாக்குதல் : அப்ரக ஸத்வத்தை வஜ்ஜிர மூஷையிலிட்டு அதற்குச் சமம் படிக்காரத்தையும் வெங்காரத்தையும் சேர்த்து மூடி கடுந்தீயில் ஊதி தணல் போலானவுடன், புளியிலையையும் கள்ளியிலையையும் அரைத்துக் கலக்கிய அம்லவர்க்கத்தின் திரவத்தில் சுருக்கும் கொடுக்கவும். இம்மாதிரியே 7 தடவை சுருக்குக் கொடுக்க ஸத்வம் மிருதுவாகின்றது.

4. ரஸம் வெங்காரம் ஸ்வர்ணமாக்ஷிகம் வகைக்கு ஒரு பங்கு, சுத்த காரீயம் 3 பங்கு, அப்ரக பஸ்மம் 10 பங்கு, யவச்சாரம் கருகிய ஆட்டுரோமம் ஸர்ஜக்ஷாரம் குக்கில் இவை வகைக்கு ஒரு பங்கு சேர்த்து ஆட்டின் மூத்திரம் விஷ்டை, பால் தயிர் நெய்யும் அம்லவர்க்கமும் மூத்திர வர்க்கமும் கூட்டி அரைத்து முன் போல் ஸத்வம் எடுக்கவும்.

(துவந்துவங்கள்)

துவந்துவம் தயாரிக்குமுன் அதற்குகந்த மூஷையைப் பொறுக்கி அதனுள் கீழ்க்கண்ட பூச்சுகளைப் பூசுவதால் அம்மூஷைகளில் உருக்கப்படும் துவந்துவங்கள் சேருகின்றன.

மூஷைப் பூச்சுகள் :

1. ஆட்டின் குளம்பு கொம்பு, குந்துமணி, வெங்காரம், வத்ஸநாபி இவைகளை பெருந்தவளையின் வஸையினால் அரைத்து மூஷையினுள்புறம் தடவவும்.

2. குக்கில், காட்டகத்திப்பூ, வெல்லம், யவக்ஷாரம், ஸர்ஜக்ஷாரம், வெங்காரம் இவை ஸமனெடை எடுத்து ஸ்தன்யத்தில் அரைத்து மூஷையினுள் தடவவும்.

3. கல்லூர் வஞ்சி, கலப்பைக்கிழங்கு, மண்ணுண்ணிப் பாம்பு, மிளகு, இலவங்கொட்டை, இந்திரகோபப்பூச்சி இவைகளை ஸ்தன்யத்தால் அரைத்து மூஷையினுள் தடவவும்.

4. சுண்டெலியின் மாம்ஸமும், வெங்காரமும், வந்ஸநாபியும் ஸமனெடை சேர்த்தரைத்து மூஷையினுள் தடவவும்.

5. நாயுருவிச்சாம்பலைப் பிரியங்கு (கவுளா) எண்ணெய்யிலரைத்து மூஷையினுள் பூசவும்.

6. கலப்பைக்கிழங்கு, சமரிமான் வால்மயிர், இலவங்கொட்டை, கொள்ளு, மண்ணுண்ணிப்பாம்பு, கல்லூர்வஞ்சி, இந்திரகோபம் இவைகளை ஸ்தன்யம் விட்டரைத்து மூலையில் பூசவும்.

இவ்விதம் மூஷையினுள் பூச்சு பூசிய பின் அதில் வைத்து உருக்கிய துவந்துவங்கள் ஒன்று சேருகின்றன.

துவந்துவங்களைச் சேர்த்தல்

ஹேமாப்பிரகம்: சிகப்பு சாரணை, வாழைக்கிழங்கு மணத்தக்காளி, வெள்ளைச்சாரணை, மனிதன் தலைஓடு, குந்துமணி, வெங்காரம் இவைகளுடன் தங்கத்தையும் அப்பிரகத்தையும் சேர்த்து முன் தயாரித்துள்ள மூஷையிலிட்டு கோஷ்டி யந்த்ரத்தில் நெருப்பில் ஊத அவ்விரண்டும் சேரும்.

வங்காப்பிரகம்: 1. அப்பிரகத்தைச் சூர்ணம் செய்து மணத்தக்காளிச் சாற்றாலரைத்துப் பின் ரஸமும் வெங்காரமும் சேர்த்து விளாம்பழ ரஸத்திலரைத்து ஈயத் தகட்டினுள் வைத்து மூடி, மூஷையிலிட்டு உருக்க, ஈயமும் அப்பிரகமும் சேரும்.

2. வாழைக்கிழங்கின் சாற்றில் வெங்காரத்தை அரைத்து மூஷையில் தடவி, அதில் வெள்ளை அப்பிரகத்தையும் வங்கத்தையும் போட்டு ஊத அவ்விரண்டும் சேரும்.

3. காட்டு முருங்கை, வெங்காரம், குந்துமணி, மனிதன் தலை ஓடு, இவைகளை ஸ்தன்யத்திலரைத்து மூஷையில் பூசி, அதில் வங்கத்தையும் வெள்ளை அப்பிரகஸத்வத்தையும் போட்டு ஊத அவ்விரண்டும் ஒன்று சேரும்.

4. வெள்ளை அப்பிரகஸத்வம் 1 பங்கு, ரஸம் ¼ பங்கு சேர்த்து மணத்தக்காளிச் சாற்றாலரைத்து உருட்டி வெள்ளை அப்பிரகஸத்வத்திற்கு ஸமனெடையுள்ள ஈயத்தகட்டால் சுற்றி மூஷையிலிட்டு ஊத சேரும்.

வங்காப்பிரகம் வெள்ளி செய்யச் சிறந்தது.

ஸௌஹ்ராப்பிரகம்: வஜ்ஹிராப்பிரகஸத்வம், இரும்புத் தூள் இரண்டையும் சேர்த்து இரண்டிற்கும் சம எடை அரிவர்க்கம் சேர்த்து ஊத ஒன்று சேரும்.

காரீயமும் ஸ்வர்ணமாக்ஷிகமும் சேர்த்து மூஷையிலிட்டு ஊத ஸ்வர்ணமும் அப்பிரகமும் சேரும். இவ்விதமே தாளத்துடன் சேர்க்க வெள்ளியும் அப்பிரகமும் கந்தகத்துடன் சேர்க்கத் தாம்ரமும் அப்பிரகமும், இந்துப்பும் லிங்கமும் சேர்க்க உருக்கும் அப்பிரகமும், தாளகத்துடன் சேர்க்க ஈயமும் அப்பிரகமும், மனோசிலையுடன் சேர்க்க காரீயமும் அப்பிரகமும் ஒன்று சேருகின்றன.

தங்கவைரத் துவந்துவம்: இதற்குத் தனியாக மூஷைப் பூச்சு விதிகள் கூறப்பட்டுள்ளன. அவையாவன:-

1. குந்துமணியும் முகமுள்ள காந்தமும் வகைக்கு ஒருபங்கும், கந்தகம் 4 பங்கும் சேர்த்து ஸ்தன்யத்தாலரைத்து மூஷையினுள்புறம் தடவவும்.

2. மனோசிலை, காந்தம், முயலின்பல், கந்தகம், புளிவஞ்சி இவைகளை அரைத்துப் பூசவும்.

3. நண்டெலும்பு, மனோசிலை, எருமையின் காது கண்களின் மலம், வெங்காரம், ஆட்டுரோமத்தின் கரி, இவைகளை ஸ்தன்யத்தால் அரைத்துத் தடவவும்.

4. காந்தம், வெங்காரம், பசும் கன்றின் மலம், வண்டெலும்பு, மனிதன் தலை ஓடு இவைகளை ஸதன்யத்திலரைத்துத் தடவவும்.

5. ஸ்வர்ணமாக்ஷிகம், வெங்காரம், மண்ணுண்ணிப் பாம்பு, காந்தம், படிக்காரம், தேன், நண்டெலும்பு, கள்ளிப்பால், எருக்கம்பால், ஸ்தன்யம் இவைகளை அரைத்து மூஷையினுள் தடவி விடவும்.

6. மற்றும் வைரம் பஸ்மமாகும் சரக்குகளை யரைத்துப் பூசவும்.

இவ்விதம் தடவி மூஷையிலிட்டு தங்கத்தையும் வைரத்தையும் பின்வரும் முறைகளில் ஊத அவ்விரண்டும் ஒன்று சேருகின்றன.

1. தங்கம் 12 பங்கு, சுத்தரஸம் 6 பங்கு, காரீயபஸ்மம் 3 பங்கு, வைரபஸ்மம் 1நூ பங்கு இந்த நான்கையும் அம்லவர்க்கத்தால் தப்தகல்வத்திலிட்டரைத்து முன் தயாரித்த மூஷையிலிட்டு கடுமையாக ஊத தங்கமும் வைரமும் சேருகின்றன.

2. ஒரு பங்க வைரபஸ்மத்தை நன்னாரிச் சாற்றில் ஒருநாள் பாவனை செய்து மாத்திரை உருட்டி காயவைத்து அதற்குமேல் ரஸம் 3 பங்கு, தங்கம் 4 பங்கு அம்லவர்க்கத்தால் அரைத்து வைர உருண்டைக்குமேல் பூச்சு பூசி, பூர்ஜ இலையால் மூடி பதினைந்து நாட்கள் வரை நெற்களஞ்சியத்திலிட்டுப் பாதுகாக்க ஒன்று சேரும்.

3. வைரபஸ்மத்தை அதற்கு 16 பங்கு தங்கத் தகட்டால் சுற்றி மூஷையிலிட்டு, படிக்காரம், சுண்ணாம்பு, மனிதன் தலை ஓடு இவைகளில் ஊதவும். இவ்விதம் 7 தடவை செய்யச் சேரும். மறுபடியும் தங்கத்தில் 1/16 பங்கு வைரம் சேர்த்து முன்போல் படிக்காரம் முதலியவை சேர்த்து 7 தடவை ஊதவும். இவ்விதம் நான்கு தடவை வைரம் சேர்த்து ஊத உத்தமமான தங்கவைரத்துவந்துவம் தயாராகின்றது.

துவந்துவம் செய்தவைகளுக்கு அபிஷேகம் என்ற ஸம்ஸ்காரம் செய்யவேண்டும். அன்னபேதி, ஐந்து உப்புகள், ஸ்வர்ணமாக்ஷிகம், கந்தகம், படிக்காரம், மூன்றுக்ஷாரங்கள்

இவைகளைக் காடியினால் அரைத்துக் கலக்கித் தாம்ர பாத்திரத்திலிட்டு 3 நாட்கள் கழித்து அதில் 100 தடவை காரீயம் உருக்கிச் சாய்க்கவும். அந்த காடிகொண்டு துவந்துவம் செய்யப்பட்டவைகளை பாவனை செய்யவும். இது போன்ற ஜாரணம் செய்யவேண்டியவைகளையும் இத்திரவத்தால் பாவனை செய்யயும். ஸ்வர்ணக்கிரியையில் காரீயமும், வெள்ளிக்கிரியையில் ஈயமும் உருக்கி விடவேண்டும் என்பது இதில் குறிப்பிடத்தக்கது.

1. காரீயத்தையும் அப்பிரகத்தையும் முன்கூறியபடி துவந்த்வம் செய்து கொள்ளவும். தங்கத்தை உருக்கி அதில் 12 மடங்கு நாகாப்பிரகத்தை சிறிது சிறிதாகக் கொடுத்து துருத்தியால் ஊதிக் கொண்டே இருக்கவும். தங்கம் மட்டும் மீதமானவுடன் எடுத்து ரஸத்தில் ஜாரணம் செய்யவும்.

2. பீதாப்பிரகத்தின் ஸத்வம், ஸ்வர்ணம் இவை யிரண்டையும் துவந்த்வம் செய்து கொண்டு, தங்கத்தை உருக்கி அதில் அந்தத் துவந்துவம் 12 மடங்கு சேர்த்து ஊதி, தங்கம் மாத்திரம் மிகுதியானவுடன் மறுபடியும் 10 மடங்கு துவந்த்வம் கொடுத்து ஊதி தங்கம் மீதமானதும் எடுத்து உபயோகிக்கவும்.

3. காருயம் 4 பங்கு, தாம்ரம் 3 பங்கு, அப்பிரகம் 2 பங்கு, ரஸகம் (பால்துத்தம்) 1 பங்கு சேர்த்து தூள் செய்து அந்த மூஷையிலிட்டு கடுந்தீயில் ஊதி எரித்து கட்டியானதும் அத்துடன் ஸ்வர்ணமாக்ஷிகமும் சேர்த்து அம்லவர்க்கத்தால் அரைத்துப் புடமிடவும். மறுபடியும் சமஎடை ஸ்வர்ணமாக்ஷிகம் சேர்த்து அம்லவர்கத்தால் அரைத்துப் புடமிடவும். இவ்விதம் ஐந்து தடவை புடமிட்ட பின் உருகிய தங்கத்தில் அதை பத்து மடங்கு சேர்த்து தங்கம் மீதமாகும் வரை ஊத பக்வபீஜமாகின்றது.

---

*பழுக்கக்காய்ச்சிய இரும்புத்துண்டுகளைச் சம்மட்டிகளால் அடிக்கும் பொழுது உதிரும் அப்பளம் போன்ற இரும்புதுண்டுகளுக்கு லோஹபர்படீ எனப் பெயர்.

பீஜங்கள்

ஸ்வர்ணபீஜம், வெள்ளிபீஜம், காரீயபீஜம், ஈயபீஜம் என நான்குவகை, ஸ்வர்ணபீஜமும் காரீயபீஜமும் தங்கம் செய்யுமிடத்தும், மற்ற இரண்டும் வெள்ளி செய்யுமிடத்தும் உபயோகப்படுகின்றன. ஸ்வர்ணபீஜமும் வெள்ளிபீஜமும் மட்டும் ரஸாயனக்கிரியையில் உபயோகப்படுகின்றன; மற்ற இரண்டும் உபயோகப்படுவதில்லை. ஆனால் இந்த நான்கும் வியாதியின் சிகித்ஸையில் உபயோகப்படுகின்றன.

ஸ்வர்ணபீஜம்: 1. கந்தகம், துருசு, ஸ்வர்ணமாக்ஷிகம், தாளகம், மனோசிலை, நிமிளை, வைக்கிராந்தம், அஞ்சனக்கல், பால் துத்தம், காந்தம் இவைகளில் ஏதாவதொன்றைப் பொடி செய்து, தங்கத்திற்கு சமனெடை உருக்கிய தங்கத்தில் போட்டு தங்கம் மீதமாகம் வரை ஊதவும். இவ்விதம் 100 தடவை செய்ய நல்ல ஸ்வர்ண பீஜமாகின்றது.

2. ஸைஸம், லிங்கம், கங்குட்டம், லோக்ஷ பர்படீ*, அப்பிரகம், தாம்ரபஸ்பம் ஸ்வர்ணமாக்ஷிகம் மனோசிலை, நிமிளை இவைகளை ஸமனெடை எடுத்து சுத்தமான காரீயத்தகட்டின் 16இல் ஒருபங்கு எடுத்து கள்ளி எருக்கு இவைகளின் பாலாலரைத்து காரீயத்தகட்டின் மேல் தடவி 32 புடம் போட நாகம் பஸ்மமாகும். அந்த பஸ்மத்தை ஸமனெடை உருகிய தங்கத்தில் சேர்த்து தங்கம் மீதமாகும் வரை ஊதி எடுக்கவும். இவ்விதம் 100 தடவை செய்யச் சிறந்த ஸ்வர்ண பீஜமாகும்.

3. தாளகம், சங்கு, அப்பிரகம், ரஸம், புளியம்பட்டை க்ஷாரம் இவைகளை எல்லாவற்றையும் ஈயத்திற்கு ஸமனெடை சேர்த்து எருக்கம் பாலாலும் கள்ளிப் பாலாலுமரைத்து ஈயத்தகட்டின் மேல் தடவி 16 புடமிட பஸ்மமாகும். அதை 100 தடவை உருகிய தங்கத்தில் முன் போல் சேர்த்து ஊத பீஜமாகும்.

---

* பழுகக்காய்ச்சிய இரும்புத்துண்டுகளைச் சம்மட்டிகளால் அடிக்கும் பொழுது உதிரும் அப்பளம் போன்ற இரும்புத்துண்டுகளுக்கு லோஹபர்பட எனப் பெயர்.

4. தாம்ரத்தகட்டின் மேலும் கீழும் ஸமனெடை கந்தகத்தைப் போட்டு 8 புடமிடப் பஸ்மமாகும் தாம்ரத்தை 100 தடவை தங்கத்தில் சேர்த்து ஊதவும்.

5. உருக்கையும் அதற்கு ஸமம் லிங்கத்தையும் சேர்த்து முலைப்பாலிலரைத்துப் புடமிட்ட பின்னர் அதில் வீசம் பங்கு லிங்கம் சேர்த்து மறுபடியும் புடமிடவும். இவ்விதம் 16 புடங்களில் பஸ்மமான உருக்கை 100 தடவை உருகிய தங்கத்தில் செலுத்த நல்ல பீஜமாகும்.

6. ஸ்வர்ணத்தை உருக்கி அதில் இரு மடங்கு ஸ்வர்ணமாக்ஷிகத்தைப் பொடி செய்து செலுத்தி நன்கு துருத்தியால் ஊதிய பின்னர் ஆறவைத்துப் பொடி செய்து 5 புடங்கள் போட ப்ஸ்மமாகும். அதை உருகியு தங்கத்தில் 10 மடங்கு செலுத்தி ஊத பீஜம்ாகும்.

7. துத்தஸத்வம், அப்பரகஸத்வம், வைக்ராந்தஸத்வம், தங்கம், காரீயம், தாம்ரம், உருக்கு இவ்வைகளைப் பொடி செய்து உள்பூசப்பட்ட மூஷையிலிட்டு மூடி ஊதி, பிறகு மூஷையைத்திறந்து வைத்து ஊதி உருகியவுடன் கொஞ்சம் கொஞ்சமாக ஸ்வர்ணமாக்ஷிகத்தைப் போட்டு ஊதி வர தங்கம் மாத்திரம் மீதமானவுடன் எடுத்து அதில் வரிசையாக தங்கம் காரீயம் தாம்ரம் உருக்கு இவைகளை் முன்போல கொடுத்து ஸ்வர்ணமாக்ஷிகம் சேர்த்து ஊதித் தங்கம் மீதமானவுடன் எடுத்துக் கொள்ளவும்.

8. அப்பிரகஸத்வம், தாம்ரம், இரும்பு இவைவகைக்கு 1 பங்கு, ஸ்வர்ணமாக்ஷிகம் 2 பங்கு இவைகளை துவந்த்வலேபம் செய்த மூஷையிலிட்டு ஊதிக் கட்டியானவுடன் தூள் செய்து திவ்ய மூலிகைகளின் சாற்றால் அரைத்து ஸம்புடத்திலிட்டு மூடி கஜபுடமிடவும். இம்மாதிரி 5 புடமிட்டு அதை உருகிய தங்கத்தில் பத்து மடங்கு செலுத்தி ஸ்வர்ணமாக்ஷிகமும் சிறிதளவில் சேர்த்து தங்கம் மீதமாகும் வரை ஊத ஸ்வர்ணபீஜமாகும்.

10. வெள்ளி, தாம்ரம், உருக்கு, அயஸ் இவைகளின் பஸ்மத்தை ஸமனெடை சேர்த்துத் துவந்துவலேபம் செய்த மூஷையிலிட்டு ஊதிக் கட்டினவுடன் அதைப் பொடித்து உருகிய தங்கத்தில் 10 மடங்கு வரைச் சிறிது சிறிதாக செலுத்தி ஸ்வர்ணமாக்ஷிகப் பொடியும் சேர்த்து ஊதித் தங்கம் மீதமானவுடன் எடுத்துக் கொள்ளவும்.

11. காரீயம் 1 பங்கு, தாம்ரம் 4 பங்கு, ரஸகளத்வம் 4 பங்கு எல்லாவற்றையும் துவந்த்வலேபம் செய்த மூஷையிலிட்டு, ஊதிக்கட்டியவுடன் பொடிசெய்து உருகிய தங்கத்தில் 6 மடங்கு செலுத்தித் தங்கம் மீதமாகும்வரை ஊதி எடுத்துக் கொள்ளவும்.

12. ஸவர்ணமாக்ஷிகத்தால் தாம்ரத்தைப் பஸ்மம் செய்து அதை உருகிய காரீயத்தில் 100 மடங்கு சிறுகச் சிறுகச் செலுத்தி ஸ்வர்ணமக்ஷிகமும் சேர்த்து ஊதி அதைத் தங்கத்தில் 32 மடங்கு செலுத்தித் தங்கம் மீதமாகும் வரை ஊதி எடுக்கவும்.

13. கர்பரஸத்வம் 1 பங்கு. அப்பிரகஸத்வம் 2 பங்கு தாம்ரப்பொடி 3 பங்கு, இவைகளை துவந்த்வஸேபம் செய்த மூஷையிலிட்டு ஊதிக் கட்டியானவுடன் தூள் செய்து ஸமனெடை ஸ்வர்ணமாக்ஷிகம் சேர்த்து அம்லவர்க்கத் தாலரைத்து ஸம்புடத்திலிட்டு மூடிபுடமிடவும். இவ்விதம் 5 புடம் போட்டு அப்பொடியை உருகிய தங்கத்தில் ஆயிரம் மடங்கு செலுத்தி ஸவர்ணமாக்ஷிகமும் சேர்த்து முன்போலப் பீஜம் தயாரிக்கவும்.

14. அப்பிரகஸத்வம் 1 பங்கு சுத்த தாம்ரம் 2 பங்கு இவைகளை உள்பூசப்பட்ட மூஷையிலிட்டு ஊதிக்கட்டி யானவுடன் இடித்து, ஸமனெடை ஸவர்ணமாக்ஷிகம் சேர்த்து அம்லவர்க்கத்தினாலரைத்து ஸம்புடத்திலிட்டு மூடி சீலை செய்து லகுபுடமிடவும். இவ்விதம் ஸவர்ணமாக்ஷிகம் சேர்த்து 5 புடமிடவும். அதைத் தங்கத்தில் 100 மடங்கு செலுத்தி பீஜம் தயாரிக்கவும்.

பிறகு லோஹபர்ட, ஸ்வர்ணமாக்ஷிகம், கங்குஷ்டிம், நிமிளை, அப்பிரகம், தாம்ரபஸ்பம், மனோசிலை, ரஸம், லிங்கம் இவைகளுடன் காரீயத்தை கள்ளிப்பால் எருக்கம்பால் விட்டு அரைத்துப் பல புடங்கள் போட பஸ்மமாகும். ஈயத்தை ரஸம் தாளம் அப்பிரகம் புளியும் பட்டை க்ஷாரம் இவைகளுடன் அரைத்துப் புடம் போட பஸ்மமாகின்றது. இவ்விதம் பஸ்மமான காரீயத்தையோ, ஈயத்தையோ, தாம்ரத்தையோ, உருக்கையோ முன் தயாரித்த ஸ்வர்ணத்தில் உருகியவுடன் சேர்த்து தங்கம் மீதமாகும் வரை தணலில் ஊதி எடுக்கவும்.

நாகபஸ்மம் ஜீர்ணமான தங்கம் கோரோசனை போன்றும், தாம்ர பஸ்மம் செலுத்தப்பட்டது பச்சையாகவும், உருக்கு பஸ்மம் ஜீர்ணமடைந்தது ஸூர்யனைப் போலவும், வங்க பஸ்மம் ஜீர்ணமானது செம்பரத்தம் பூ போன்றும் நிறத்துடன் விளங்கும்.

ரஸத பீஜம்

1. வெள்ளை அப்பிரகஸத்வம், உருக்கு, ஸ்வர்ணமாக்ஷிகம், நிமிளை, கர்பரம் இவை வகைக்கு ஒரு பங்கும், ஈயம் 4 பங்கும் சேர்த்து மூசையிலிட்டு ஊதி கெட்டியானவுடன் இடித்து சூர்ணம் செய்து 5 புடங்களால் பஸ்மமாக்கி உருகிய வெள்ளியில் 100 டங்கு ஜாரணம் செய்யவும். வெள்ளி மீதமாகும் வரை ஊதி எடுக்கவும்.

2. ஈயத்தையும், தாளத்தையும் தனித்தனியே ஸ்வர்மாக்ஷகத்தால் பஸ்மம் செய்து இரண்டும் ஸமனெடையாக உருகிய வெள்ளியில் 30 மடங்கு வரை செலுத்தி ஊதி வெள்ளி மீதமானவுடன் எடுத்துக்கொள்ளவும்.

3. உருக்கு, ஈயம், நிமிளை இவைகளை ஸமனெடை சூர்ணம் செய்து துவந்த்வலேபம் செய்த மூஷையிலிட்டு உருக்கிக் கட்டியானவுடன் இடித்து அம்லவர்க்கத்தினால்

அரைத்து 5 புடங்கள் போட பஸ்மமாகும். அந்த பஸ்மத்தை உருகிய வெள்ளியில் 10 மடங்கு வரை செலுத்தி துருத்தியால் ஊத ஊத வெள்ளி மட்டும் மிகுதியாகும்.

4. வெள்ளை அப்பிரக ஸத்வம் ஈயம் வெள்ளி மாக்ஷகஸத்வம் இவை மூன்றும் ஸமனெடை பொடித்து துவந்த்வலேபம் செய்யப்பட்ட மூஷையிலிட்டு துருத்தியால் ஊதி உருகிக் கட்டியானவுடன் பொடி செய்து ஸமனெடை வெள்ளியுடன் சேர்த்து வெள்ளிமாக்ஷிகம் போட்டு ஊதி ஜீரணமானவுடன் மறுபடியும் இவ்வாறு அப்பிரகஸத்வம் முதலியவை 10 மடங்கு ஜீர்ணமாகும் வரை எரிக்கவும். வெள்ளி மிதமானவுடன் எடுத்துக் கொள்ளவும்.

5. உருக்கு 3 பங்கு, தாளகம் 2 பங்கு, நிமிளை 1 பங்கு இவைகளைச் சூர்ணம் செய்து துவந்த்வலேபம் செய்த மூஷையிலிட்டு கடுந்தீயிலிட்டு துருத்தியால் ஊதக் கட்டியாகும். அதை அம்லவர்கத்தால் அரைத்து 7 புடம்போட பஸ்மமாகும். அதை உருகிய வெள்ளியில் 10 மடங்கு வரை செலுத்தித் தாளகசூர்ணமும் போட்டு துருத்தியால் ஊத வெள்ளி மட்டும் மீதமாகி பீஜமாகும்.

6. கர்பரம், தாளகம், வெள்ளை அப்பிரகஸத்வம், வெள்ளிமாக்ஷிகம் எல்லாம் ஸமனெடையும் எல்லாவற்றிற்கும் ஸமம் ஈயமும் சேர்த்து மூஷையிலிட்டு உருக்கிக் கட்டியானவுடன் இடித்துப் பொடித்து அம்லவர்கத்தாலரைத்து 7 புடம் போட்டு உருகிய வெள்ளியில் 10 மடங்கு ஜாரணம் செய்யவும்.

7. வெள்ளை அப்பிரகஸத்வம் ஈயம் இவை வகைக்கு இரண்டு பங்கு, உருக்கு, வெள்ளி நிமிளை வகைக்கு 1 பங்கு இவைகளைச் சூரணம் செய்து அம்லவர்க்கத்தாலரைத்து 5 புடம் போட பஸ்மமாகும். ஒரு பங்கு உருகிய வெள்ளியில் அதை 100 மடங்கு வரை தாளகம் சேர்த்துச் செலுத்த பீஜமாகும்.

தாம்ர பீஜம்.

ஸ்வர்ணம், தாம்ரம், வகைக்கு 1 பங்கு, ஸ்வர்ணமாக்ஷிகம் 2 பங்கு, துலந்துவலேபம் செய்யப்பட்ட மூஷையிலிட்டுத் தணலில் ஊதி உருகியவுடன் அதில் 10 மடங்கு வரை ஸ்வர்ணமாக்ஷிகம் சிறிது சிறிதாகச் செலுத்தி ஊதி எடுக்க தாம்ரபீஜமாகும்.

நாகபீஜம்

1. அப்பரகம், பால் துத்தம் இவை வகைக்கு ஒரு பங்கு, காரீய பஸ்பம் 4 பங்கு இவைகளை மூஷையிலிட்டு தணலில் ஊதி ஸவர்ணமாக்ஷிகம் சேர்த்து பஸ்மமாக்கவும். அதில் மனோசிலை ஸமனெடை சேர்த்து உருகிய தங்கத்தில் சிறிது சிறிதாக 100 மடங்கு வரை செலுத்தி எடுக்கவும்.

2. காரீயம் 4 பங்கு, தாம்ரம் 3 பங்கு, அப்பிரகம் 2 பங்கு, பால்துத்தம் 1 பங்கு இவைகளைச் சேர்த்து உருக்கி ஒன்றாக்கி ஸர்வர்ணமாக்ஷிகம் சேர்த்து பஸ்மமாக்கி அதை உருகிய தங்கத்தில் சிறிது சிறிதாக 32பங்குவரை செலுத்தி எடுக்கவும்.

வங்க பீஜம்

1. ஈயம், தாளகம், ஸ்வர்ணமாக்ஷிகம் இவைகளை ஸமனெடை சேர்த்து மூஷையிலிட்டு உருக்கி அதற்கு ஸமம் ஸ்வர்ணமாக்ஷிகமும் தாளகமும் சேர்த்து அம்லவர்க்கத்தால் அரைத்துப் பதினாறு புடம் போடவும். அப்பஸ்மத்தை உருகிய தங்கத்தில் சிறிது சிறிதாக 100 பங்குவரை செலுத்தி தாளகமும் 32 பங்கு வரை செலுத்தி ஊதி பீஜம் தாயாரிக்கவும்.

பீடங்கள்

இவை ஆகாரத்தை ஜீர்ணம் செய்யவும் ருசி உண்டாக்கவும் சேர்க்கப்படும் மஸாலாப் பொருள்கள் போன்று ரஸத்தில் சேரக்கப்படும் அப்பிரகம் முதலியவை ஜீர்ணமாவதற்கு உதவுகின்றன. இவைகளைப் பின் வருமாறு தயாரிக்கவும்.

வடவானலம்: ஸௌவீரம்(?) கந்தகம், படிகாரம், அன்னபேதி, திரிகடு, இந்துப்பு, ஸௌவர்சலை உப்பு, ஸர்ஜக்ஷாரம், வெங்காரம் இவைகளை 7 நாள் முருங்கைவேர் சாற்றால் பாவனை செய்து காயவைத்துக் கொள்ளவும்.

வைச்வானரம்: சுட்டசங்கை எருக்கம் பாலால் ஒவ்வொருதடவையுமரைத்து 100 தடவை புடம் போடவும்.

ஜ்வாலாமுகம்: கந்தகம், சங்கு, இந்துப்பு, வத்ஸாநாபி இவைகளை 100 தடவை கோமூத்திரத்திலும், முருங்கைவேர் சாற்றிலும் பாவனை செய்து காயவைத்துக் கொள்ளவும்.

அக்னிஜிஹ்வகம்: வெங்காரத்தைப் புரசம் பட்டைச் சாற்றால் 100 தடவை பாவனை செய்யவும். லோஹஜாரணத்தில் சிறந்தது.

படவாமுகம்: காந்தம், கந்தகம், நவச்சாரம், இந்துப்பு, தாளகம், துவர்மண், அன்னபேதி, வெங்காரம், இவைகளை க்ஷாரகணத்துடனும், மூத்திரகணத்துடனும் சேரத்தரைத்துக் காய்ச்சித் தயார் செய்யவும்.

மஹாவைச்வானரம்: தேவதாளிப் பீர்க்கு, காட்டுப்பருத்தி, கடம்பு, மூக்கரட்டை, புரசு, ஊமத்தை, ஆடாதொடை, சிற்றாமணக்கு, சக்கரவர்த்திக்கீரை, எள்ளு, வாழை - இவைகளின் எல்லா பாகங்களையும் சேர்த்து துண்டித்துச் சிறிது காயவைத்து 8 பங்கு மூத்ரவர்க்கத்தில் போட்டு வைக்கவும். முள்ளங்கியையும் எள்ளுத்தட்டையையும் ஸமூலம் காயவைத்து எரித்து க்ஷாரமெடுத்து முன் சொன்ன மூத்திரவர்க்கத்திரவத்தில் கரைத்து மூன்று தினங்கள் கடும் வெய்யிலில் காயவைத்துத் துணியில் வடிகட்டி இரும்புப் பாத்திரத்திலிட்டு எரிக்கவும். அதிகமாகக் கொதிக்கும் பொழுது அதில் ஸர்ஜக்ஷாரம், யவக்ஷாரம், வெங்காரம், திரிகடு, கந்தகம், அன்னபேதி, ஐந்து உப்புகள், படிகாரம், பெருங்காயம், நவச்சாரம் இவைகளை

ஸமனெடைச் சூர்ணம் செய்து சேர்த்து இரும்புத் துடுப்பால் கிளறிக்கொண்டே வெல்லப்பாகு போன்றாகும் வரை எரிக்கவும். பிறகு எடுத்து இரும்பு ஸம்புடத்திலிட்டு 7 நாட்கள் பூமியில் மூடிவைத்துப் பிறகு 7 நாட்கள் வெயிலில் காயவைத்து எடுத்துக் கொள்ளவும்.

வஹ்நி பீடம்: கந்தகத்தை எலுமிச்சம் பழச்சாற்றாலும் காட்டு முருங்கைச் சாற்றாலும் 100 தடவை பாவனை செய்ய பிடமாகும். இவ்விதமே நவச்சாரத்தையும் செய்யலாம்.

சித்ரபானு: கந்தகம், கடம்பின்க்ஷாரம், குந்துமணி விதை, வெங்காரம், தேவதாளிபீர்க்கு வேரும் விதையும் இவை ஸமனெடை எடுத்து கசப்புப் பீர்க்கின் சாற்றிலும் அம்லகணத்திலும் வகைக்கு 7 தடவை பாவனை செய்து கொள்ளவும். ஸவர்ணஜாரணத்தில் சிறந்தது.

மஹாபிடம்: முள்ளங்கி, இஞ்சி, சித்திரமூலம் இவைகளை எரித்து கோமூத்திரத்தில் கலக்கி துணியில் வடிகட்டி அதனால் கந்தகத்தை 100 தடவை பாவனை செய்யவும்.

தாளகம், மனோசிலை, வெங்காரம், சங்கு, உப்பு, முத்துச்சிப்பி இவைகளை மூத்திரகணத்தாலும், அம்ல வர்கத்தாலும் பாவனை செய்து இளந்தீயில் எரித்தெடுக்கவும்.

வஜ்ரானலம்: சுட்ட சங்கை எருக்கம் பாலில் 100 பாவனை செய்து அம்லவர்க்கத்தாலரைத்து சராவத்திலிட்டு மண்சீலை செய்து ஐந்து புடம் போடவும். அந்த பஸ்மத்திற்குச் சமம் வெங்காரம் சேர்த்து அம்லவர்க்கத்தால் பாவனை செய்து அதற்குச் சமம், மனோசிலை, கந்தகம், லிங்கம், பவழம் ராஜாவர்த்தக்கல் இவைகளின் சூர்ணம் சேர்த்து அம்லவர்க்கத்தால் மூன்று தினமரைக்கப் பிடமாகின்றது.

சுட்ட சங்குத்தூளை எருக்கம் பாலில் 100 தடவை பாவனை செய்து அனேக புடங்களிட பிடமாகின்றது.

படவாமுகம்: நூறு தடவை கோமூத்திரத்தால் பாவனை செய்த கந்தகமும், முருங்கை வேர் சாற்றால் நூறு தடவை பாவனை செய்த சங்க பஸ்மமும் வத்ஸாநாபியும் இந்துப்பும் சேர்த்து அரைத்துத் தயார் செய்யவும்.

ஸர்வஜாரகம்: கற்றாழை, ஊமத்தை, அரளி இவைகளின் சாற்றால் 100 தடவை கந்தகத்தை பாவனை செய்து வெயிலில் உலர்த்தவும்.

கந்தகத்தையும் இந்துப்பையும் வெற்றிலைச் சாற்றில் 7 நாள் பாவனை செய்து உபயோகப்படுத்தவும்.

ஸித்தபீடம்: இந்துப்பு, மனோசிலை, கந்தகம் இவை வகைக்கு 1 பலம், மண்ணுண்ணிப்பாம்பு 3 பலம் எல்லாவற்றையும் நன்கு அரைத்துக் காயவைத்து எரித்து எடுக்கவும். இம்மாதிரி 8 தடவை செய்யவும்.

அப்பிரக ஜாரணம்.

சாரணம் செய்யப்பட்ட ரஸம் 64 நிஷ்கம், பாவனை செய்யப்பட்ட அப்பிரகம் 1 நிஷ்கம், வெங்காரம், ஸர்ஜக்ஷாரம், யவக்ஷாரம், ஐந்துப்பு, துவர்மண், அன்னபேதி, புளிவஞ்சி இவை எல்லாம் சேர்த்து 4 நிஷ்கம் இவைகளைத் தப்பதகல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச் சாற்றால் ஒருயாமமரைத்து பிடத்துடன் கூடிய கச்சபயந்திரத்தில் ஒருநாள் முழுவதும் எரித்தெடுக்க கிராஸமாகக் கொடுக்கப்பட்ட அப்பிரகம் ஜீர்ணமாகின்றது. பிறகு ரஸத்திற்கு மறுபடியும் கிராஸமேற்கத்தகுதி ஏற்பட கீழ்கண்ட ஸம்ஸ்காரம் செய்ய வேண்டும். ரஸத்தைத் தப்தகல்வத்திலிட்டு, கடுகு, வெல்லம், ஆட்டின் மயிர்ச்சாம்பல், செங்கல், ஓட்டடை, இந்துப்பு இவை ரஸத்தின் பதினாறில் ஒரு பங்க சேர்த்து அம்லவர்க்கத்தால் ஒரு தினமரைத்து கடும் வெயிலிலிட்டு கெட்டியானவுடன் அதைப் பொட்டணம் கட்டி அம்லதிரவம் நிரம்பிய தோலாயந்திரத்தில் ஒரு நாள் முழுவதும் எரித்து எடுக்க

அஜீர்ணமான கிராஸம் ஜீர்ணமாகி மறுபடியும் கிராஸம் ஏற்கத்தகுதி ஏற்படுகின்றது. இவ்விதம் ரஸத்தில் 32-16-8-4-2 இல் ஒருபங்கு அப்பிரகம் கிராஸம் கொடுத்துப் பிறகு சமம் - 2-4-8-16-32-64 பங்கு வரை கிராஸம் கொடுக்கலாம்.

ரஸத்தில் அப்பிரகம் 64இல் ஒரு பங்கு ஜீர்ணமானால் துணியின் துவாரங்களிலிருந்து நழுவாமலும், 32இல் ஒரு பங்கு ஜீர்ணமானால் அட்டைப்பூச்சி போன்றும், 15இல் ஒரு பங்கு ஜீர்ணமானால் காக்கையின் மலம் போன்றும், 8இல் ஒரு பங்கு ஜீர்ணமாக தயிர்க் கட்டி போன்றும், ¼ பங்கு ஜீர்ணமாக வெண்ணைப் போன்றும், ½ பங்கு ஜீர்ணமாக உருண்டை யாகவும் ஆகின்றது.

அப்பிரகத்தை ரஸத்தில் சம அளவு, 2, 4, 8, 16, 32, 64 பங்கு ஜாரணம் செய்ய - முறையே நூறு, ஆயிரம், பதினாயிரம், லக்ஷம், கோடி, பத்து கோடி, நூறு கோடி பங்கு வேதம் செய்யும் சக்தி உண்டாகின்றது.

ஸமஅளவு அப்பிரகம் ஜீர்ணமானால், ரஸத்தின் தோஷம் நீங்கி, எல்லா லோஹங்களையும் ஜீர்ணம் செய்து யந்திரத்தினின்றும் நழுவாமலும் நெருப்பிற்கு ஓடாமலும் வெடிக்காமலும் கபிலவர்ணத்துடன் நெருப்பில் அசையாமல் நிற்கும்.

ஸமஅளவு அப்பிரகம் ஜீர்ணமானது பாலரஸம். நான்கு பங்கு ஜீர்ணமானது யுவரஸம். ஆறு பங்கு ஜீர்ணமானது விருத்த ரஸம். லோஹவேதத்தில், பாலரஸம் கல்கமாகச் சேர்ப்பதிலும், யுவரஸம் தகட்டில் தடவப்படுவதிலும், விருத்தரஸம் ஜாரணம் செய்யப்படுவதிலும் உபயோகப்படுகின்றன. பால ரஸம் வியாதியைப் போக்குவதிலும், யுவரஸம் ரஸாயனத்திலும், விருத்தரஸம் தேகவேதம், லோஹவேதம் இவ்விரண்டிலும் உபயோகப்படுகின்றன.

அப்பிரகஸத்வம் கிடைக்காவிடத்து ஜாரணத்தில் காந்தஸத்வம் உபயோகப்படுத்தப்படுகின்றது. அதுவும் கிடைக்காவிடத்து எஃகும் உபயோகமாகின்றது. இம்மூன்றில் ஒன்றை ஜாரணம் செய்யும் பொழுது துவந்துவங்களையும் ஜாரணம் செய்யவும். துவந்த்வங்களில்லாமல் அப்ரகத்தை ரஸமேற்காது. அதனால் ஹேமாப்பிரகம், நாகாப்பிரகம் போன்ற துவந்துவங்களை ஜாரணம் செய்த பின்னர், பக்வபீஜங்களை ஜாரணம் செய்யவும்.

12. கர்ப்பத்ருதி.

இந்த ஸம்ஸ்காரத்திற்கு உபயோகப்படும் பீஜங்கள் கீழ்க்கண்ட முறைகளில் தயார் செய்யப்படவேண்டும்.

1. காரீயபஸ்மம்: ஸ்வர்ணமக்ஷிகம், கந்தகம் இவை ஸமனெடை சேர்த்துப் பொடி செய்து உருகிய தங்கத்தில் மூன்று பங்கு சேர்த்துத் தங்கம் மீதமாகும் வரை ஊதி எடுக்கவும்.

2. உருகிய தங்கத்தில் ஸமனெடை காரீயத்தை உருக்கிச் சாய்த்து மனோசிலைத் தூள் தூவித்தூவி ஊதிக்கொண்டே வர, காரீயம் மறைந்தவுடன் மறுபடியும் உருகிய காரீயம் சேர்த்து மனோசிலை தூவி ஊதவும். இவ்விதம் மூன்று தடவை செய்ய பீஜமாகும்.

3. தங்கம், ஸவர்ணமாக்ஷிகஸத்வம் சமனெடை சேர்த்து மூஷையிலிட்டு ஊதி உருகியவுடன் ஸவர்ணமாக்ஷிகத்தைச் சமனெடை பொடி செய்து தூவிக் கொண்டே வர தங்கம் மாத்திரம் மீதமாகும். இவ்விதம் ஸ்வர்ணமாக்ஷிகஸத்வம் தங்கத்திற்கு 3 பங்கு கிராஸம் கொடுத்த பின்னர் எடுத்துக் கொள்ளவும்.

4. தங்கத்திற்கு ஸமம் ஸ்வர்ணமாக்ஷிகஸத்வத்தைச் சேர்த்து உருக்கி மெல்லிய தகடுகளாக அடித்துத் தகட்டின் மேல் அம்லவர்கத்தாலரைத்த கந்தகத்தைத் தடவிப் புடம் போடவும். தங்கம் மட்டும் மீதமாகும்.

5. ஸவர்ணமாக்ஷிகமும் இந்துப்பும் ஸமனெடை அம்லவர்க்கத்தாலரைத்து 12 தடவை புடம் போடவும். அப்பஸ்மத்திற்குச் சமம் காரீயபஸ்மம் சேர்த்து அம்லவரக்கத்தால் அரைத்துத் தங்கத்தகட்டில் பூசி மூஷையிலிட்டு ஊதி எடுக்கவும். இவ்விதம் மாக்ஷிகம் இந்துப்பு இவைகளைப் பூசி 7 தடவை மூஷையிலிட்டு ஊதப் பீஜமாகின்றது.

6. அன்னபேதி, வெங்காரம், கந்தகம், ஸவர்ண மாக்ஷிகம், ஸுவர்ச்சலை உப்பு, மனோசிலை இவைகளை ஸமனெடை எடுத்து, கடலைப்புளிப்பால் ஒரு நாள் அரைத்து எடுத்துக்கொள்ளவும்.

7. தங்கம், தாம்ரபஸ்பம், எஃகுரஞ்சனம் செய்யப் பட்ட பக்வபீஜம், கர்பத்துருதி பீஜம் இவைகளை ஒன்றாக உருக்கி அதில் ஸ்வர்ணமாக்ஷிகத்தைப் பொடி செய்து தூவிக் கொண்டே ஊதி வர, தாம்ரமும் எஃகும் நசித்த பின் மீதியுள்ள தங்கத்தை ரஸத்தின் மத்தியிலிட்டரைக்க திரவமாகின்றது.

8. தங்கம், கந்தகத்தால் பக்வபீஜமாக பஸ்மம் செய்யப்பட்ட காரீயம், இவைகளை விசேஷ உள் பூச்சு பூசப்பட்ட மூஷையிலிட்டு மூடிக் கடுந்தீயிலிட்டு ஊதி எடுத்த தூள் பாவனை செய்யப்பட ரஸத்தின் மத்தியில் திரவமாகின்றது.

9. உருகிய தங்கத்தில் தாம்ரபஸ்மம், எஃகுபஸ்மம், இவைகளை ஆறு பங்கு வரை செலுத்தி ஊதித் தங்கம் மீதமானவுடன் ரஸத்துடன் சேரத்தரைக்க திரவமாகின்றது.

10. உருகிய தங்கத்தில் மஹாரஸங்களையும் உப ரஸங்களையும், மற்ற லோஹங்களின் பஸ்மங்களையும் சேர்த்துச் செலுத்தி ஸம அளவு கந்தகம் ஸ்வர்ணமாக்ஷிகம் சேர்த்துத் தங்கம் மீதமாகும் வரை ஊதி எடுத்து ரஸத்தில் ஸமனெடைச் சேர்த்தரைக்கத் திரவமாகி ரஸத்துடன் கலக்கின்றது.

கர்ப்பத் துருதி முறை: இவ்விதம் தயாரிக்கப்பட்ட பீஜத்தை ஜாரணம் செய்யப்பட்ட ரஸத்தில் 64இல் ஒரு பங்கு சேர்த்து தப்பதகல்வத்திலிட்டு அரைக்கவும். அத்துடன் மனோசிலை, ஸௌவர்சலை உப்பு, கந்தகம், அன்னபேதி, வெங்காரம் இவைகளைக் கடலைப் புளிப்பாலரைத்து அதை ரஸத்தின் வீசம் பங்கு சேர்த்து அம்மூன்றையும் அரைக்கப் பீஜம் திரவமாகி ரஸத்துடன் கலக்கின்றது.

நாயுருவி, புரசம்பட்டை இவைகளின் க்ஷாரம், வெங்காரம், யவக்ஷாரம், அன்னபேதி, ஸௌவர்சலை உப்பு, இந்துப்பு, சோற்றுப்பு, கடுகு, ஸ்வர்ணமாக்ஷிகம், நவச்சாரம், கூடம், தேன் இவைகளை கள்ளிப்பாலாலும் எருக்கம் பாலாலுமரைத்து பிடம் சேர்த்து மூஷையினுள் ஒரு அங்குலகனம் பூசி அதில் ஜாரணம் செய்த ரஸத்தைப் போட்டு மூடி ஸ்வேதனம் செய்யவும். இவ்விதம் ஸ்வேதனம் செய்த ரஸம் திரவமாகி பீஜத்தை ஏற்கின்றது. ஒவ்வொரு தடவை கர்பத்துருதியானதும் ஸ்வேதனம் செய்யவும். ரஸத்தில் 6 பங்கு வரை பீஜத்தை கர்பத்துருதி ஸம்ஸ்காரத்தால் சேர்க்கவும்.

13. பாஸ்ய துருதி.

இதில் அப்பிரகம் முதலியவை தனியாகவே திரவமாகச் செய்த பின்னர் ரஸத்துடன் சேர்க்கப்படுகின்றன. அப்பிரகம் முதலியவைகளைத் திரவமாகச் செய்யும்முறை பின்வருமாறு:

அப்பரகத்துருதீ: அப்பிரகஸத்வத்தை கஞ்சுகீகிழங்கு (?) கபிதிந்து (?) இவைகளின் பொடி சேர்த்து நெருப்பில் மூஷையிலிட்டு ஊதி உருகியவுடன் கேசதைல (மயிர் எண்ணை) த்தில் மூன்று தடவை சுருக்குக் கொடுக்க ஸத்வம் திரவமாகும்.

ஸ்வர்ணதுருதீ: தேவதாளிப்பீர்க்கின் சூர்ணம், இந்திரகோபப்பூச்சி, குதிரையின்லாலை, (வாயில்வழியும் உமிழ் நீர்) வெங்காரம் இவைகளை தேவதாளிப்பீர்க்கின்

ரஸத்தில் அனேக தடவை பாவனை செய்து, தங்கத்தை அத்திரவத்தில் உருக்கிச் சாய்க்க ரஸம் போன்று தங்கம் எப்பொழுதும் திரவமாகவே நிற்கின்றது.

ரத்னங்களின் துருதி: மூன்று க்ஷாரங்கள், கடலைப்புளிப்பு, பெருங்காயம், புளிவஞ்சி, ஜ்வாலாமுகி(?)யின் க்ஷாரம் இவைகளை பூபாடலி (?) யின் சாற்றினாலும் எருக்கம் பாலாலும் கள்ளிப்பாலாலுமரைத்து அந்தக்கல்கத்தின் நடுவில் வைரத்தை வைத்து எலுமிச்சம் பழச்சாற்றில் தோலாயந்திரத்தில் 3 நாட்கள் எரிக்க வைரம் திரவமாகின்றது. பத்மராகம் போன்ற ரத்தினங்களுக்கும் இம்மாதிரியே துருதி செய்விக்கவும்.

துருதிகளைச் சேர்த்தல்: காரகில், கஸ்தூரி, புரசம்விதை ஸ்வர்ணமாக்ஷிகம், ஸ்திரீயின் ரஜஸ், வத்ஸநாபி, பெருங்காயம், உள்ளிப்பூண்டு, வெங்காரம், மஞ்சள் இவை களைச் சமனெடை சூர்ணம் செய்து, அச்சூர்ணத்திற்குச் சமம் துருதியான லோஹத்தையும் ரஸத்தையும் சேர்த்து தப்தகல்வத்திலிட்டு அரைக்கவும் வட்டத்திருப்பி, காட்டுப்பழுபாகல், பூபாடலீ, அவுரி, மூன்று விதக்கொடிவேலி, தாமரைக் கிழங்கு, பால் முதுக்கன், சிற்றாமுட்டி குந்துமணி, சீந்திற்கொடி, இஞ்சி இவைகளின் சாறு, குதிரையின் உமிழ் நீர், வேப்பிலைச்சாறு, ஸ்திரீயின் ஸ்தன்யம் இவைகளைச் சமனெடை சேர்த்தரைக்கவும். எல்லா துருதிகளை ஜாரணம் செய்ய மேற் சொன்ன திரவ்யங்களையும் பீடத்தையும் அரைத்து கச்சபயந்திரத்தினுள்பூசி, 6 பங்கு துருதிவரை சேர்த்து ஜாரணம் செய்யவும். இது பாஹ்ய துருதி மேலனமாகம். அதாவது அப்பிரகம் முதலியவைகளை வெளியிலேயே திரவமாக்கி ரஸத்தில் ஜாரணம் செய்யப்படுகின்றது.

14. ரஞ்சனம்.

துருதி ஜீர்ணமான பின்னர் ரஸத்தில் வர்ணமேற்றும் ஸம்ஸ்காரமிது. அதற்கு ரக்த (சிகப்பு) ரஞ்சனதைலமெனவும், ச்வேத (வெள்ளை) ரஞ்சனதைலமெனவும் இரண்டு தைலங்கள் தயார் செய்யப்படவேண்டும்.

ரக்த ரஞ்சன தைலம் : புரசம்பூ, மஞ்சிட்டி, செவ்வரளி, கருங்காலி, செஞ்சந்தனம், காரிலவு, மஞ்சள், மரமஞ்சள், ஸரளதேவதாரு, தேவதாரு, செம்பருத்திப்பூ, மற்றும் சிகப்பு நிறமுள்ள புஷ்பங்கள் எல்லாவற்றையும், கொம்பரக்கு ஜலத்தாலரைக்கவும். இக்கல்கத்திற்கு நான்கு பங்கு நல்லெண்ணையும் அதற்கு நான்கு பங்கு சிகப்புப் புஷ்பங்களின் சாறும் நான்கு பங்கு ஜலமும் சேர்த்துத் தைலம் காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவும். அத்தைலத்தில் பீஜத்தைச் சுருக்குக் கொடுக்க ரஞ்சனம் ஏற்படுகின்றது.

ரக்த ரஞ்சன முறைகள்

1. நாக பீஜ ரஞ்சனம்: காரீயத்தை சராவத்திலிட்டு கடுந்தீயில் உருக்கி அதில் புரசம் பூவையும் விதையையும் போட்டுப் புரசம் குச்சியால் கிளறிவர நான்கு யாமங்களில் பஸ்மமாகின்றது. அந்த பஸ்மத்தையும் அதற்குச் சமம் கந்தகத்தையும் அம்லவர்க்கத்தால் ஒரு யாமமரைத்து கஜபுடமிடவும். பிறகு ¼ பங்கு கந்தகம் சேர்த்து அரைத்து இவ்விதம் 14 புடம் போடச் சிகப்பு நிறமுள்ள பஸ்மமாகின்றது. ஆடாதொடையின் இலை, பூ, காய், வேர், பட்டை, மருதம் பட்டை, முருங்கை புரசு மருதாணி இவைகளின் பூ, வெற்றிலை, அரளி, கற்றாழை, நாககன்யா (சீந்திற் கொடி?) இவைகளின் பொடி ஒருபங்கு, மனோசிலை 2 பங்கு இவைகளைப் பானையிலிட்டு, கோமூத்திரம் நான்கு பங்கு கலந்து இளந்தீயில் எரித்து ¼ பங்காகச் சுண்டவைத்து அத்திரவத்தில் முன் தயாரித்துள்ள காரீய பஸ்மத்தைப் போட்டு புரசங்குச்சியால் கிளறிக்கொண்டு 7 நாள் எரிக்கவும். இந்தக் காரீயத்தை திரவமான பக்வபீஜத்தில் சேர்த்து ரஸத்தில் ஜாரணம் செய்ய ரஞ்சனமாகும்.

2. ஸ்வர்ணமாக்ஷிகஸத்வம், கிருஷ்ணாப்பிரகஸத்வம் இரண்டையும் சமனெடை தூள் செய்து உருக்கி அதில் ஸ்வர்ணமாக்ஷிகத்தையும் தாம்ரபஸ்மத்தையும் சேர்த்து அதை பீஜத்தில் மூன்று பங்கு செலுத்த ரஞ்சனமாகும்.

3. மனோசிலை, ஸ்வர்ணமாக்ஷிகம், கந்தகம், லிங்கம் இவைகளை சமனெடை சேர்த்துக் கொள்ளவும். ரக்தவர்கத்தை கோமூத்திரத்தில் சேர்த்துக் கொள்ளவும். ரக்தவர்கத்தை கோமூத்திரத்தில் அரைத்துக் கலக்கிப் பிழிந்து திரவத்தில் மனோசிலை முதலியவைகளை ஏழு நாளரைத்துக் காயவைத்துக் கொள்ளவும். தாம்ரத்தையும் எஃகையும் உருக்கித் துவந்துவம் செய்து கொண்டு அதில் முன் கூறிய தூளைச் சமனெடை சேர்த்து மூஷையிலிட்டு ஊதி ரக்தவர்க்கம் அரைத்துக் கலக்கிய ஜ்யோதிஷ்மதீ தைலத்தில் சுக்குக் கொடுக்கவும். பிறகு முன்போல மனோசிலை முதலிய வைகளைச் சேர்த்து ஊதி 7 தடவை சுருக்குக் கொடுக்க பீஜ ரஞ்சனமாகும்.

4. வெள்ளி, நிமிளைஸத்வம் இரண்டையும் சமனெடை சேர்த்துருக்கி அத்துடன் ரக்தவர்க்கம் அரைத்துக் கலக்கி கோமூத்திரத்தில் 3 தடவை பாவனை செய்யப்பட்ட லிங்கமும் சமனெடை சேர்த்து ஊதி எடுக்கவும். இம்மாதிரி 7 தடவை சேர்த்து எடுத்தப் பின்னர் அப்பீஜம் ரஸத்தை ரஞ்சனம் செய்கின்றது.

5. அப்பிரக ஸத்வம், காரீயம், தங்கம் இவைகளைச் சமனெடை துவந்துவம் செய்து அதில் ரக்தவர்க்கம், ஸவர்ணமாக்ஷிகம், பூங்காவி, மனோசிலை இவைகளைச் சமனெடை சேர்த்து ஊதி, ரக்தவர்க்கம் முதலியவை நசித்தவுடன் மறுபடியும் அவைகளைச் சேர்த்து இவ்வாறு 10 தடவை செய்ய பீஜம் ரஸத்தை சிகப்பாக்குகின்றது.

6. மனோசிலை புளியங்காய்ச் சாற்றில் இருபது தடவை பாவனை செய்தரைத்துக் காரீயத்தகட்டின் மேல் தடவிப் புடமிடவும். சூர்ணமாகும் வரை புடமிட்ட பின்னர் அத்துடன் பால் துத்தம் 3 பங்கு, லிங்கம் மனோசிலை கந்தகம் வத்ஸநாபி

இவை வகைக்கு ஒரு பங்கு, இவைகளை புளிப்பு மாதுளம்பழச்சாற்றிலரைத்துக் காரீயத்தின் மேற் பூசி மூஷையிலிட்டு ஊதி உருகியவுடன் தகடடித்து மேற்பூச்சு பூசி ஊதவும். இவ்விதம் ஏழு தடவை செய்க் காரீயம் தங்கம் போன்றாகும். சிகப்பு (வெள்ளி?) அப்பிரகஸத்வமும் முன் கூறப்பட்ட நாகமும் சேர்த்து உருக்கித் துவந்துவம் செய்து அதை உருக்கிய பக்வபீஜத்தில் செலுத்த அந்த பீஜத்தில் வர்ணமேறுகின்றது.

ச்வேத ரஞ்சன தைலம்: பலவித வெள்ளைப் புஷ்பங்களின் ரஸத்தில் கால் பங்கு பிரியங்கு (கவுளா) தைலத்தைச் சேர்த்துக் காய்ச்சி வடிகட்டி வைத்துக்கொள்ளவும்.

ச்வேத ரஞ்சன முறை: அத்தைலத்தில் வெள்ளி பீஜத்தை உருக்கி 21 தடவை சுருக்குக் கொடுத்து அதை ரஸத்தில் ஜாரணம் செய்ய ரஞ்சனமேற்படுகின்றது. இவ்விதமே வங்க பீஜத்தையும் ரஞ்சனம் செய்யலாம்.

ரஞ்சனம் செய்யும் முறை:

ரஞ்சனம் செய்யப்பட்ட பீஜத்தை ரஸத்தின் 64இல் ஒரு பங்கு ரஸத்துடன் சேர்த்து தப்பதகல்வத்திலிட்டு ஒரு நாளரைத்துக் கச்சபயந்திரத்தில் ஜாரணம் செய்யவும். இவ்விதம் 6 பங்கு வரை ஜாரணம் செய்யவும்.

15-17. ஸாரணம். அனுஸாரணம். பிரதிஸாரணம்.

வஜ்ர பீஜம்:

1. தங்கம் 12 பங்கு, சுத்தி செய்த ரஸம் 6 பங்கு, காரீய பஸ்மம் 3 பங்கு, வைரபஸ்மம் 4 பங்கு, இந்த நான்கையும் அம்லவர்க்கத்தினால் தப்தகல்வத்திலரைத்து துவந்துவம் சேர்க்கும் மூஷையிலிட்டுக் கடுந்தீயில் ஊத ஒன்று சேர்ந்து பீஜமாகும்.

2. வைரபஸ்மத்தை நன்னாரிச்சாற்றில் ஒரு தினம் பாவனை செய்து அரைத்து உருண்டையாகச் செய்து காயவைத்துக் கொள்ளவும். அதற்கு மூன்று பங்கு ரஸத்தையும், நான்கு பங்கு தங்கத்தையும் தனியாக அரைத்துப் பிஷ்டி செய்து, அதனால் வைரபஸ்ம உருண்டையைச் சுற்றிக் கவசம் செய்து பூர்ஜபத்திரத்தினால் மூடி நெற்களஞ்சியத்திலிட்டு பதினைந்து நாட்கள் வைத்து எடுத்து மூஷையிலிட்டுக் கடுந்தீயில் ஊத பீஜமாகும்.

3. வைரம் ஒரு பங்கு, தங்கம் 16 பங்கு தங்கத்தகட்டால் வைரத்தைச் சுற்றி உள்பூச்சு பூசப்பட்ட மூஷையிலிட்டு வெள்ளைக் காசலவணம், சுண்ணாம்பு, மனிதன் தலை ஓடு இவைகளில் ஒன்றைப் பதினாறு பங்கு போட்டு மூடித் துருத்தியால் ஊதி எடுக்கவும். இவ்விதம் 7 தடவை ஊத வஜ்ர பீஜமாகும்.

ஸாரணா தைலம்: வாலுளுவை, புங்கு, தான்றி, பேய்ச்சுரை இவைகளின் விதையிலிருந்து எடுத்த எண்ணெய் ஒரு பங்கு, ஆமை, பன்றி, ஆடு, மீன் முதலியவைகளின் கொழுப்பு ஒரு பங்கு, ரக்தவர்கத்தையும் பீதவர்க்கத்தையும் போட்டு நான்கு பங்கு பாலில் தயாரித்த கஷாயம் 4 பங்கு, மஞ்சள் சிகப்பு நிறமுள்ள புஷ்பங்களின் ரஸம் 2 பங்கு, பூபாடலீ, காக்கைச் சுண்டை, பேரரத்தை இவைகளின் ஸ்வரஸம் 2 பங்கு இவைகளைத் தாம்ரபாத்திரத்திலிட்டு இளந்தீயில் எரிக்கும் பொழுது தைலத்தின் வீசம் பங்கு மண்ணுண்ணிப் பாம்பின் மலத்தையும் ஸ்வர்ணமாக்ஷிகத்தையும் கல்கமாக்கிக் கலந்து தைலம் காய்ச்சவும். இது ஸாரணா தைலம்.

ஸாரணா முதலியவைகள் செய்முறை: ரஞ்சனம் செய்யப்பட்ட ரஸத்தை ஸாரணாதைலத்துடன் ஸாரணாயந்திரத்தில் வைக்கவும். ரஸத்தின் 64இல் ஒரு பங்கு பீஜத்தை நாளமூஷையில் உருக்கி ரஸத்தில் சாய்க்கவும். பிறகு பீஜத்தையும் ரஸத்தையும் எடுத்து தப்தகல்வத்திலிட்டு உப்பும்

அம்லவர்கமும் சேர்த்து ஒரு நாள் அரைத்துப் பிடத்துடன் கூடிய கச்சபயந்திரத்திலிட்டு ஜாரணம் செய்யவும். இவ்விதம் 6 மடங்கு பீஜம் வரை ஜாரணம் செய்யவும். இவ்விதம் 6 மடங்கு பீஜம் வரை ஜாரணம் செய்ய ஸாரணமெனவும் மறுபடியும் 6 மடங்கு பீஜம் வரை ஜாரணம் செய்வதற்கு, அநுஸாரணம் எனவும், மூன்றாவதாக 6 மடங்கு வரை ஜாரணம் செய்வதற்குப் பிரதி ஸாரணம் எனவும் பெயர்.

18. வேதம்

ஸாரணம் செய்யப்பட்ட ரஸத்திற்குச் சமம் தாளகம் சேர்த்து ஊமத்தை விதை எண்ணெய்யாலும் திவ்யௌஷதிகளின் சாற்றாலும் ஒரு நாள் அரைத்து வஜ்ரமூஷையிலிட்டு மூடி ஒரு நாள் வரட்டி நெருப்பில் எரிக்கவும். மறுபடியும் முன் கூறிய எண்ணெய்யாலும் சாற்றாலும் முன் போலவே இரண்டு தடவை அரைத்து மூஷையிலிட்டு எரிக்கவும். இதனால் ரஸத்தின் முகம் கட்டுப்படுகின்றது. அவ்விதம் முகபந்தம் செய்யப்பட்ட ரஸம் ஒரு பங்கு வெள்ளி, தாம்ரம், எஃகு இவைகளின் சூர்ணம் ஒரு பங்கு எடுத்துத் தேவதாளிப் பீர்க்கின் சாற்றாலும் தேனாலும் நெய்யாலும் வகைக்கு ஒரு நாளரைத்து உருண்டை செய்யவும். அதை வஜ்ர மூஷையிலிட்டு மூடிக்கடுந்தீயில் ஊதக் கட்டும். அக்கட்டைக் காசலவணமும் வெங்காரமும் சேர்த்துத் தணல் நிறம் போல் சிவக்கும் வரை ஊதி எடுத்துத் தேஹவேதத்திலும் லோஹவேதத்திலும் சிகித்ஸையிலும் உபயோகிக்கவும்.

தேஹவேதம்: தேஹத்தின் ஒவ்வொரு அணுவிலும் ரஸம் பரவி அதன் உருவை மாற்றுவது - அதற்கு நீண்ட ஆயுளை அளித்து வியாதியினால் தகர்க்கமுடியாத அழியா உருவத்தை அளிப்பதுதான் தேஹவேதம். இந்த ஸம்ஸ்காரம் செய்து கொள்ளுமுன் பின் அத்தியாயத்தில் குறிப்பிடப்படும் பஞ்சகர்மங்களால் - பாசனம், ஸ்னேஹனம், ஸ்வேதம், வமனம், விரேசனம் என்ற ஐந்து முறைகளால் சரீரசுத்தி செய்து

கொண்டும், சரீரத்திலுள்ள உப்பு, புளிப்பு, காரம் இவைகளின் தோஷத்தை அகற்றிக் கொண்டும் முதலில் ஆரோட ரஸத்தை ஸேவை செய்யவேண்டும். இதனால் தேஹம் வேதம் செய்யும் ரஸத்தை ஏற்கத்தகுதியுள்ளதாக ஆகின்றது. அத்தகுதி ஏற்பட்ட பின்னரே சதவேதி, (நூறு மடங்கு வேதம் செய்யும் ரஸம்) ஸஹஸ்ரவேதி, (ஆயிரம் மடங்கு வேதம் செய்யக்கூடியது) தச ஸஹஸ்ரவேதி, (பத்தாயிரம்.பங்கு வேதம் செய்யக்கூடியது) லக்ஷவேதி, (லக்ஷம் மடங்கு வேதம் செய்யக்கூடியது) தசலக்ஷவேதி, (பத்து லக்ஷம் மடங்கு வேதம் செய்யக்கூடியது) கோடிவேதி, (கோடி மடங்கு வேதம் செய்யக்கூடியது) போன்ற ரஸங்களை ஒன்றின் பின் ஒன்றாக முறையே ஸேவிக்க வேண்டும்.

ரஸத்தை கந்தகத்துடனாவது ரஸாயனத்தில் சிறந்த திவ்ய மூலிகைகளுடனாவது சேர்த்து உபயோகிக்க ரஸம் சரீரம் முழுவதும் பரவி, ஆரோக்கியமளித்து தேவர்கள் போல் அழகிய சிறந்த குமாரர்களை யளித்தும் ஆகாசமார்க்கமாக ஸஞ்சரிப்பதினால் உலகெங்கும் சுற்றும் திறமையையும் அளிக்கின்றது.

லோஹவேதம்: தேஹவேதத்தைப் போலவே லோஹவேதத்திலும் ரஸம் லோஹத்தின் ஒவ்வொரு அணுவிலும் பரவி அதன் உருவத்தை மாற்றி மட்டமான தாம்ரம், ஈயம் முதலியவைகளை உயர்ந்த தங்கம் வெள்ளி போன்ற உலோகமாக உருவத்திலும் குணத்திலும் மற்றும் எல்லா அம்சங்களிலும் மாற்றி அமைக்கின்றது. இதற்கு க்ராமணம் என்ற ஒரு ஸம்ஸ்காரம் செய்யவேண்டும். இது தான் ரஸத்தை லோஹத்தின் ஒவ்வொரு அருவிலும் பரவச் செய்கின்றது.

தாரக்ருஷ்டி (வேதத்திற்குகந்ததாகச் செய்யப்பட்ட வெள்ளி) 98 பங்கும், தங்கம் ஒரு பங்கும் க்ராமணம் சேர்க்கப்பட்ட ரஸம் ஒரு பங்கும் சேர்க்க வெள்ளி தங்கமாகின்றது. இது சதவேதம். இம்மாதிரியே கோடி பங்கு

வரை வேதம் செய்யும் சக்தி ஜாரணை மிகுதியால் ஏற்படுகின்றது. இவ்வேதம் க்ஷேபவேதம், லேபவேதம், குந்தவேதம், சப்தவேதம், தூமவேதம் எனப் பல விதமாகக் கிரந்தங்களில் கூறப்பட்டுள்ளது.

க்ராமண முறைகள்: லிங்கம், ஸ்வர்ணமாக்ஷிகம், காந்தம், மனோசிலை, கந்தகம், வத்ஸாநாபி, அப்பிரகம், பால்துத்தம், மண்ணுண்ணிப்பாம்பு, பெருங்காயம், வெங்காரம், கந்தகத்தால் பஸ்மம் செய்யப்பட்ட தாம்ரம், லிங்கத்தால் பஸ்மம் செய்யப்பட்ட எஃகு, மனோகிலையால் பஸ்மம் செய்யப்பட்ட காரீயம், எருமையின் காது மலம், காக்கை விஷ்டை, ஸ்திரீயின் முதல் மாதவிடாயில் ஏற்படும் ரஜஸ் இவைகளை எல்லாமரைத்து ரஸத்தின் மேல் தடவி லோஹத்தில் வேதம் செய்யவும்.

ஸ்வர்ணமாக்ஷிகம், மண்ணுண்ணிப்பாம்பு, ரஸம், மனோசிலை, வெங்காரம், ஸ்திரீயின் ஸ்தன்யமும் ரத்தமும் இவைகளை அரைத்துப் பூசவும்.

லிங்கம், பால்துத்தம், காந்தம், இந்திரகோபப்பூச்சி, வத்ஸநாபி இவைகளை ஜ்யோதிஷ்மதீ தைலம் போன்ற தைலங்களாலும் மனிதனின் ரத்தத்தாலும் அரைத்து ரஸத்தில் சேர்க்கவும்.

மண்ணுண்ணிப்பாம்பு, வத்ஸநாபி, தவளைவாய்மலம், எருமையின் கண் மலம் இவைகளை மனிதனின் ரத்தத்தால் அரைத்து உபயோகிக்கவும்.

கோரோசனை, குக்கில், இந்திரகோபப்பூச்சி, வத்ஸநாபி இவைகளை ஸ்தன்யத்திலரைத்து உபயோகிக்கவும்.

விஷ்ணுக்கிராந்தி, தேன்மெழுகு, எருமை காதுமலம், மண்ணுண்ணிப்பாம்பு, காக்கையின் விஷ்டை, கலப்பைக் கிழங்கு, த்விபதீ, ஸ்திரீயின் ரஜஸ், மனிதனின் ரத்தம், பிரும்மஸோமா, துளஸி, சிலாஜது, சிருங்கிவிஷம், நருந்தாளி,

கிருத்ரகர்ணீ இவைகளும் சிறந்த க்ராமண திரவியங்கள்.

வெள்ளைக் குங்கிலியம், வேப்பம் பிசின், ஸ்தன்யம், வத்ஸநாபி, வெங்காரம் இவைகளை நெய்யில் அரைத்து உபயோகிக்கவும்.

ஈயமும் கஸ்தூரியும் சிறந்த க்ராமண திரவ்யங்கள் அதுபோன்ற ஆந்தை மாம்ஸம், நண்டின் மாம்ஸம் சங்கின் உள்மலம், விலாம்பிசின் இவைகளையும் உபயோகிக்கலாம்.

ஐந்தாவது உல்லாஸம்

விசேஷ ஜாரணை முறைகள்

பூசரீ ஜாரணை: தாம்ரத்தையும் எஃகையும் உருக்கிச் சேர்த்து அதில் கருப்பு, மஞ்கள், சிகப்பு நிறமுள்ள அப்பிரகங்களை 22 பங்கு வரை செலுத்தி ஊதி. அவைகளுடன் கந்தகத்தால் பஸ்மம் செய்யப்பட்ட காரீயம் பாதி அளவு கிரமமாகச் சேர்த்துக் கொள்ளவும். ரஸத்திற்கு 16 மடங்கு அளவுள்ள தங்கத்தில் தாம்ரம் முதலியவைகளை கிராஸம் கொடுத்து ஜீர்ணமானவுடன் அதை ரஸத்தில் ஜாரணம் செய்ய ரஸம் பந்தமடைகின்றது. ஜாரணம் செய்த ரஸத்தை லோஹ பஸ்மத்தால் ரஞ்சனம் செய்து கொள்ளவும். தாம்ர பஸமம், ஸ்வர்ணமாக்ஷிகம், லிங்கம், இரும்பு இவைகளை ஒருபுடத்தால் பஸ்மம் செய்துகொண்டு அதில் சுத்தி செய்த ஸ்வர்ணம் 6 பங்கு சேர்த்து பீஜமாக்கவும். ரஸத்தில் நான்கு மடங்கு அளவுள்ள பீஜத்தை ஜாரணம் செய்ய ரஸத்தில் தங்கநிறம் நிலைக்கின்றது. பிறகு ரஸத்தை ஸாரணாயந்திரத்திலிட்டு மூன்று பங்கு பீஜம்வரை ஸாரணம் செய்து மறுபடியும் ஜாரணம் செய்யவும். இவ்விதம் 7 தடவை ஸாரணமும் ஜாரணமும் திருப்பித்திருப்பிச் செய்ய ரஸம் கோடி வேதியாகும். இது பூசரீ ஜாரணை.

கேசரீஜாரணை: வர்ணக்குறைவுள்ள ரத்னங்களுடன்(?) பாதி அளவு பேய்ச்சுரை விதை சேர்த்து மஹாஜாரணம்

(பிடம்?) சேர்த்துக் கல்கமாக்கி வஜ்ரமூஷையில் வைத்து அதன் நடுவில் ரஸத்தை வைக்கவும். தேத்தாங்கொட்டை தேய்த்தலம்பிய தங்கத் தகட்டின்மேல் பத்மராகத்தை அரைத்துப் பூசி அதை மூஷையிலிருக்கும் ரஸத்தில் ஜாரணம் செய்யவும்.

இதை தேவர்களையும் குருவையும் பூஜித்துச் சாப்பிட, மயக்கம் எரிச்சல் உடனே உண்டாகி திவ்யமான தேகத்துடன் ஆகாசத்தில் எழுப்பி ஸஞ்சரிப்பான்.

மற்ற ஜாரணைகள் : சுத்த ரஸத்தையும் சாக(?) இலைச்சாற்றாலும் விஷ்ணுக்கிராந்தியின் சாற்றாலும், புரசம்பூவின் சாற்றாலும் பாவனை செய்யப்பட்ட கந்தகத்தையும் கஜ்ஜிலி செய்து அதற்குச் சமம் கிருஷ்ணாபிரகஸத்வமும், பால் துத்தம், எஃகு, தாம்ரம், காரீயம் இவை 8 பங்கும் சேர்த்தரைத்து கச்சபயந்திரத்தில் ஜாரணை செய்து, பிறகு தங்கத்தையும் பிடம் சேர்த்து ஜாரணை செய்து ஸித்தமான ரஸத்தை எடுத்துக் கொள்ளவும். தங்கம் ஒரு பங்கு, தாம்ரம் 2 பங்கு, காரீயம் 5 பங்கு சேர்த்து பீஜம் தயாரித்து அதைத் தைலவர்க்கத்தில் ஒன்றாலரைத்து ரஸத்தின் 16இல் ஒரு பங்கு கிராஸம் கொடுத்து விரல்களினால் பிசைந்து கொண்டே இருக்கவும். இந்த உருண்டையின் மேல் இஞ்சி (1/16பங்கு) அரைத்துத் தடவி பூர்ஜ இலையில் வைத்து தோலாயந்திரத்திலிட்டு ஒரு நாள் முழுவதும் எரிக்க ரஸத்தில் கிராஸம் ஜீர்ணமாகின்றது. இவ்விதம் 16 தடவைகளில் ஒரு ஸமனெடை வரை பீஜம் ஜாரணம் செய்து மறுபடியும் 12இல் ஒரு பங்கு கிராஸம் கொடுத்து ஜாரணம் செய்யவும். இவ்விதம் 12 தடவைகளில் ஸமனெடை வரை ஜாரணமான பிறகு 1/8 பங்கு வீதம் 8 தடவைகளில் ஸமனெடை ஜாரணம் செய்தபின் ரஸத்தை கருணைக்கிழங்கின் நடுவில் வைத்து, கிழங்கு கருகாமல் புடம் போட்டெடுத்து மூஷையிலிட்டு கால்பங்காக நான்கு தடவைகளில் கிராஸம் கொடுத்து கர்பத்துருதியும் ஜாரணமும் செய்யவும். ஆக ரஸத்தில் நான்கு பங்கு பீஜ ஜாரணமாகின்றது.

பிறகு ரத்னங்களை கீழ்க்கண்ட முறையில் ஜாரணம் செய்யவும். அப்பிரகம், பிராமக காந்தம், சங்கு, ரஸங்கள், உபரஸங்கள், மஹாஜாரபிடம், வஜ்ர கந்தம், வஜ்ரலதா, பிராம்மீ, ஆடுதீண்டாப்பாளை, சீந்திற்கொடி, அயஸ், பேய்ச்சுரை விதை லோஹங்களின் பஸ்மங்கள் இவைகளை சமனெடைச் சேர்த்து மயிலின் பித்தத்தாலரைத்து மூஷை செய்யவும். அதில் ரஸத்தைப் போட்டு கீழ்துருத்தியால் ஊதி அதில் மருந்து பூசிய வைரத்தைப் போட ஜீர்ணமாகின்றது. வைரம் 11 பங்கு ஜீர்ணமானவுடன், துறிஞ்சிச் சாற்றிலரைத்து சுட்ட சங்கம், நல்ல முத்தும் 11 பங்கு வரை ஜாரணம் செய்யவும். அவுரி ரஸத்தில் மயில் பித்தத்தைக் கரைத்து அதை நீலமணிகளின் மேல் தடவி ரஸத்திற்கு கிராஸம் கொடுக்க நல்ல வர்ணமுள்ள மணிகளை ரஸம் ஏற்கின்றது. ரத்தம் மயில் பித்தம், மஹாஜாரணம் இவைகளை அரைத்து ரத்தினத்தின் மேல் தடவி ரஸத்தில் செலுத்த ஜாரணமாகும். மஞ்சளையும் கங்குஷ்டத்தையும் புரசம் பூ ரஸத்தில் அரைத்துப் பூசப்பட்ட புஷ்பராகத்தையும் ஜாரணம் செய்யவும். அப்பொழுது அழகிய பலவர்ணங்களுடன் ரஸம் நன்கு விளங்கும். இந்த ரஸத்தை 100இல் ஒருபங்கு அளவு தங்கத் தகட்டில் தடவி புடம் போட சிவந்த பஸ்மமாகும். அத்தங்கம் மேல் பட்டாலே வேதமாகும். சுத்த ரஸத்தில் இந்த தங்கத்தை 3 பங்க ஜாரணம் செய்ய மலை, புல், பயிர் எல்லாவற்றையும் வேதம் செய்யும். இந்த ரஸம் ஸேவிப்பதால் தளராத நடையுடன் நூறு யோஜனை தூரம் நடக்க சக்தி உண்டாகின்றது. நல்ல காந்தி, அழகான சரீரம், குன்றாத கண் பார்வை, ஆரோக்கியம் இவைகளுடன் வெகு நாட்கள் வாழலாம். அவனது மூத்திரமும் மலமும் லோஹ வேதம் செய்யும்.

தங்கத்திற்குச் சமம் வைரம் ஜாரணம் செய்து மூஷையிலிட்ட ரஸத்தில் ஜாரணம் செய்யவும். பிறகு எல்லா லோஹங்களையும் ஜாரணம் செய்யவும். பிறகு எல்லா லோஹங்களையும் ஜாரணம் செய்ய ரஸமும் கட்டுப்படும். பிறகு ஸாரணம் செய்து அப் பீஜத்தால் மறுபடியும் ஜாரணம்

செய்யவும். இவ்விதம் ஆயிரம் தடவை ஸாரண ஜாரணங்கள் செய்ய லக்ஷவேதம் செய்யும். இவ்விதம் கோடி வேதியாகவும் செய்யலாம்.

ரஸத்தில் சமனெடை வைரத்தை ஜாரணம் செய்ய ரஸம் அசையாமல் கட்டப்பட்டு நிற்கும். நெருப்பிலிட்டு இரும்பு சலாகையால் குத்த சலாகையைத் தொடும். கடுந்தீயிலிட்டு ஊத எல்லாவற்றையும் ஜாரணம் செய்யும். அவ்விதம் எல்லா ரத்னங்களையும் ஜாரணம் செய்ய ஆகாயகமன சக்தி ஏற்படுகின்றது.

எட்டு லோஹங்களையும் ரஸத்தில் எட்டு பங்கு வரை ஜாரணம் செய்யக் கட்டும். மற்ற லோஹங்கள் மூன்று பங்கும், தங்கம் 3 பங்கும் ஜாரணம் செய்யவும். இதன் புகை பட்டாலே வேதம் ஏற்படும்.

ரஸத்தில் 8 பங்கு அப்பிரகம் ஸத்வமும் ஸமனெடை தங்கமும் பத்தில் ஒரு பங்கு வைரம் முதலிய ரத்தனங்களையும் ஸாரணம் செய்து கடைசியில் சமனெடை வைரத்தையும் ஜாரணம் செய்ய கோடி வேதியான ரஸம் ஏற்படுகின்றது.

ரஸத்தில் காரீயத்தை சமனெடை 2, 3, 4 பங்குகள் ஜாரணம் செய்ய முறையே பத்து, நூறு, ஆயிரம், லக்ஷம் பங்கு வேதம் செய்யும் சக்தி ஏற்படுகின்றது.

கந்தகம் முதலிய உபரஸங்கள் 6 பங்கு ஜாரணம் செய்யப்பட்டால் ரோகங்களில் உபயோகிக்கச் சிறந்தது. 100 பங்கு வரை ஜாரணம் செய்ய கிழத்தனத்தைப் போக்கி நீண்ட ஆயுளை அளிக்கின்றது.

ரஸத்தில் அப்பிரகத்தை 6 பங்கு ஜாரணம் செய்ய ரஸத்திலுள்ள எல்லா தோஷங்களும் நீங்கி லோஹங்களை கிராஸமாக ஏற்றுக்கொள்ளத் தகுதி ஏற்படும். தூமம், சிடிசிடி, மாண்டூகப்பலுதி, ஸகம்பம், விகம்பம் என்ற ஐந்து கதி விசேஷங்களும் அகலுகின்றன.

ஜாரணத்தில் வரிசைக்கிரமம்: கந்தகம், ஸத்வங்கள், லோஹங்கள், துவந்துவங்கள், பக்வபீஜங்கள், ரத்தனங்கள், துருதிகள் இவைகளை இவ்வரிசைப் படியே ஒன்றன் பின் ஒன்றாக ஜாரணம் செய்யவேண்டும்.

18 ஸம்ஸ்காரங்களால் ஏற்படும் விசேஷகுணங்கள்.

ரஸத்திற்கு முன் கூறப்பட்டுள்ள 18 ஸம்ஸ்காரங்களால் சிற்சில விசேக்ஷ குணங்கள் ஏற்படுகின்றன. ஸ்வேதனத்தால் தீவிரமும், மர்த்தனத்தால் அழுக்கு நீங்குவதும், மூர்ச்சனத்தால் தோஷம் விலகுவதும், உத்தாபனத்தால் நாற்ற மகலுவதும், பாதனத்தால் சேர்க்கையற்ற தனிப்பொருளாவதும், நிரோதனத்தால் களைப்பு நீங்குவதும், நியமனத்தால் சஞ்சலமகலுவதும், தீபனத்தால் பசி ஏற்படுவதும், அனுவாஸனத்தால் யோகங்களில் சேர்க்கத் தகுதியும், சாரணத்தால் பல மேற்படுவதும், ஜாரணத்தால் கட்டுப்படுவதும், கர்பத்துருதியினாலும் பாஹ்யத்துருதி யினாலும் சேர்க்கப்பட்ட பொருள் ஒன்றாகக் கலப்பதும் ரஞ்சனத்தால் நிறமடைவதும், ஸாரணைகளினால் ஸூக்ஷ்மமாகப் பரவும் குணமேற்படுவதும், கிராமணத்தால் சரீரத்தில் பரவுவதும், வேதத்தால் தேகவேதமும் லோஹவேதமும் செய்வதும் விசேஷ குணங்கள்.

ஆறாவது உல்லாஸம்

தேஹவேதமும் அதற்கு தேஹத்தைத் தகுதியாக்குதலும்

பஞ்சகர்மங்கள்: உப்பு, புளிப்பு அதிகமாயுள்ள ஆகாரங்களால் நிலைபெயர்ந்து சீர் கெட்டிருக்கும் வாதபித்த கபதோஷங்களைச் சுத்தி செய்து கொள்ளவேண்டும். பகலில் மாத்திரம் இலகுவான ஆகாரமருந்த வேண்டும். முள்ளுக்கத்திரி, கொத்தமல்லி, சுக்கு இம்மூன்றையும் ஒருபலமளவு எடுத்து ஜலத்தில் போட்டு 8இல் ஒரு

பங்காகக்காய்ச்சி வடிகட்டி, இக்கஷாயத்தை மூன்று நாட்கள் இரவில் சாப்பிடவும். இம்மாதிரியே மற்றொரு மூன்று நாட்கள் இரவில் திரிபலாகஷாயம் சாப்பிடவும். இதனால் அஜீர்ணமான ஆகாரமிகுதி ஜீர்ணமாகின்றது.

ஸ்னேஹனம்: நெய்கலந்த சாதம், ஆட்டுமாம்ஸரஸம் அல்லது பயற்றங்கஞ்சியை மிதமாகப் பகலில் சாப்பிட்டு இரவில் பசும் நெய்யை நாலு நிஷ்க அளவு, இந்துப்பு ஒரு நிஷ்கம் சேர்த்து சாப்பிடவும். பிருங்காமலகதைலத்தால் எல்லா அங்கங்களையும் தேய்த்து ஸ்னானம் செய்யவும். இவ்விதம் ஏழு நாள் செய்யவும்.

வமனம் : மீன் மாம்ஸம், உளுந்து, எள்ளு, யவக்ஷாரம், நெல்லி முள்ளி, கோதுமை ஸத்துமா இவைவகைக்கு 64 தோலா, எருக்கு, அகில், சிற்றாமுட்டி, முள்ளுக்கத்திரி, கொட்டைக் கரந்தை இலை, குக்கில் அதிவிடயம், மஞ்சள் இவை வகைக்கு 8 தோலா, மோர், பால், காடி, ஜலம் இவை வகைக்கு 1½ படி இவைகளை மட்பாத்திரத்திலிட்டு கஷாயமிட்டு அதன் ஆவி உடலில் படும்படி படுத்துக் கொள்ளவும். இவ்விதம் ஒருவாரம் வரை தினமும் ஆவி உடலில் படும்படி செய்து கொள்ளவும்.

வமனம்: மலங்காரைக்காய், வட்டத்திருப்பி இவை வகைக்கு ஒருதோலா எடுத்து 16 பங்கு ஜலத்தில் கால் பங்கு மீதமாக கஷாயம் செய்து துணியில் வடிகட்டி அதில் திப்பிலி, கசப்பு வெட்பாலையரிசி, அதிமதுரம், இந்துப்பு இவைகளை தோலா அளவு அரைத்துக் கரைத்துச் சாப்பிட வாந்தியாகும்.

விரேசனம்: ரஸம், கந்தகம், வெங்காரம், திரிகடு, திரிபலை இவை சமனெடை சேர்த்து எல்லாவற்றிற்கும் சமம் சுத்த நேர்வாளம் சேர்த்து அரைத்து மாத்திரை உருட்டி வெல்லத்துடன் சாப்பிட பேதியாகும்.

இவ்வைந்தும் பஞ்சகர்மங்கள்.

மற்ற தோஷ சுத்தி முறைகள்: தாழைவிழுதுச் சாறு, எலுமிச்சம்பழச் சாறு இவ்விரண்டையும் 16 தோலா அளவு ஒருவாரம் வரை தினமும் சாப்பிட உப்பு அதிகம் சாப்பிடுவதால் ஏற்படும் தோஷம் நீங்கும்.

திரிபலை ஒரு பலமெடுத்து, 16 மடங்கு ஜலத்தில் கால்பங்கு மீதமாகக் கஷாயமிட்டுத் தினமும் காலையில் மூன்று தினங்கள் சாப்பிட புளிப்பினால் ஏற்படும் தோஷங்கள் நீங்குகின்றன. அல்லது புளியம்பட்டை க்ஷாரத்தின் வகைக்கு ¼ தோலா சேர்த்துச்சாப்பிடலாம்.

வாய்விடங்கம், வசம்பு, கோஷ்டம், தாழைவிழுது இவைகளைக் கஷாயமிட்டுத் தினமும் காலையில் மூன்று தினங்கள் சாப்பிட புளிப்பினால் ஏற்படும் தோஷங்கள் நீங்குகின்றன. அல்லது புளியம்பட்டை க்ஷாரத்தின் ஜலம் ஒருபல அளவு யவச்சாரமும் சர்க்கரையும் வகைக்கு ¼ தோலா சேர்த்துச் சாப்பிடலாம்.

வசம்பு, வாய்விளங்கம், புரசம்விதை, பெருங்காயம் இவைகளின் சூர்ணம் கால் தோலா, வெல்லம் கால்தோலா சேர்த்து மூன்று தினங்கள் சாப்பிட்டு, மேல் வென்னீர் அநுபானமாகச் சாப்பிட வயிற்றுக்கிருமிகள் நசிக்கின்றன.

கருஞ்சிவிதை, சித்திரமூலப்பட்டை, வாய்விளங்கம், ஆடாதொடை, திரிகடு, திரிபலை, இந்துப்பு, தேவதாரு இவைகளை ஸமனெடை சூர்ணம் செய்து கால் தோலா அளவு தினமும் காலையில் நெய்யில் கலந்து ஒருவாரம் சாப்பிட சரீரத்திலுள்ள எல்லா தோஷங்களும் நீங்குகின்றன. இவ்விதம் சரீரசுத்தி செய்து கொண்டபின்னரே ரஸாயன மருந்துகள் சாப்பிடவேண்டும்.

ரஸாயனதைலம்: தேவதாரு எண்ணெய், பசும்பால், நெய், நெல்லிக்காய்ச்சாறு, தேன் இவைகளை சமனெடை சேர்த்துக் கலக்கித் தினமும் காலையில் 2 பல அளவு ஒரு மாதம் சாப்பிட காந்தியும் மேதையும் வளரும். இரண்டாவது மாதம்

4 பல அளவு தினம் காலையில் சாப்பிட கண்ணில் ஏற்படும் எல்லா தோஷங்களும் நீங்கும். மூன்றாவது மாதத்தில் 6 பல அளவு தினம் சாப்பிட சரீரம் அழிவற்று தேஜஸ்ஸுடன் விளங்கும். இதற்குப்பிறகு ஆரோடரஸம் ஸேவிக்க வேண்டும்.

ஆரோடரஸ உபயோக முறை: ஸ்வேதனம் முதலிய ஏழுவித ஸம்ஸ்காரங்கள் செய்யப்பட்டு கந்தகத்தையும் அப்பிரகத்தையும் ஜாரணம் செய்து மூர்ச்சனை செய்யப்பட்ட (கூபீபக்வ) ரஸத்திற்கு ஆரோடரஸம் எனப்பெயர். அல்லது அயஸ், அப்பிரகம், தாம்ரம் இவைகளுடன் சேர்த்து பாதனம் செய்தபின் பஸ்மமாக்கிய ரஸமும் ஆரோடரஸ மெனக் கருதப் படுகின்றது. இது ரஸாயனத்திற்கு முன் க்ஷேத்ரீகரணம் (சரீரத்தை ரஸாயன ஸேவைக்குத் தகுதியாக்குதல்) என்ற ஸம்ஸ்காரம் செய்வதற்காக உபயோகப்படுத்தப்படுகின்றது.

காந்த பஸ்மம், அப்பிரக ஸத்வ பஸ்மம், ஆரோடரஸம் இவைகளை ஸமஎடை சேர்த்து இரண்டு குந்து மணியளவு தேன், நெய், திரிபலை சூர்ணம் இவைகளுடன் ஒரு மாதம் ஸேவிக்கவும். பிறகு மாஸத்திற்கு ஒரு குந்துமணி எடை வீதம் அதிகமாக்கி 16 மாதம் வரை ஸேவிக்கவும்.

காந்தஸத்வம், அப்பிரகஸத்வம், ஸவர்ணஜாரணம் செய்த ரஸம் இவை சமஎடை சேர்த்து முன்போல உபயோகிக்கவும். இதனால் க்ஷேத்ரீகரணம் ஏற்படுகின்றது. இம்மாதிரி சரீரத்தைத் தகுதியாக்கிக் கொள்ளாமல் வேதி ரஸத்தை உபயோகித்தால் விழலில் விதை விதைத்தாற் போல் பிரயோஜனமில்லாமல் போகும்.

வேதி ரஸ உபயோக முறை

வேதம் செய்யும் ரஸத்திற்கு காந்தம், அப்பிரகம், தங்கம், வைரம் இவை க்ராமணமாகும். சரீரத்தில் ரஸத்தைப் பரவச் செய்ய க்ராமணம் அவசியமாகின்றது. க்ராமண மில்லாத ரஸவேதம் ஏற்படாது.

வேதி ரஸத்தைக் குந்துமணி அளவு தேனுடன் க்ராமணவர்கத்துடனும் பத்திய முறையுடன் 16 மாதங்கள் வரை சாப்பிட நூறு வயது வரை ஆரோக்கியத்துடன் வாழலாம். ஒரு பல அளவு ரஸத்தை ஸேவிக்க வியாதி பீடை ஏற்படாது. இரண்டு பலம் வரை சாப்பிட சுக்லம் பெருகும். மூன்று பலம் வரை உபயோகிக்க நல்ல பலம் ஏற்படும். நான்கு பலத்தினால் நரை நீங்கியும், ஐந்து பலத்தில் திரையகன்றும் ஆறு பலத்தில் நல்ல ஞாபகசக்தியும் பேச்சுத்திறனும் ஏற்பட்டும், ஏழுபலத்தில் கண் ரோகங்கள் அகன்றும், எட்டுபலைத்தில் கருடன் போன்ற பார்வையும் பிரமனின் ஆயுஸும் அடைந்தும், ஒன்பது பலத்தில் எல்லாவித ஸித்திகள் பெற்றும், பத்து பலன் உபயோகிக்க மற்றொரு சிவனாகவே ஆகிறான். ஆயிரம் வயது அளிக்கக்கூடிய ரஸத்தை உளுந்தளவும், பதினாயிரம் வயது அளிப்பதை யவை அளவும், லக்ஷமாயுள் அளிப்பதை நெல்லெடையும், கோடி ஆயுளளிப்பதை பயறு எடையும் சாப்பிட வேண்டும். சரீரவேதம் பெற்றவன் கைபட்ட இடம் பொன்னாகும். அவனது வியர்வை, மூத்ரம், மலம் எல்லா லோஹங்களையும் வேதம் செய்யும் சக்தி பெற்றவை.

தங்கம் ஜீர்ணமான ரஸத்தைக் குந்துமணி எடையும், வெள்ளி ஜீர்ணமானதை இரண்டு குந்துமணி எடையும், தாம்ரம் ஜீர்ணமானதை மூன்று குந்துமணி எடையும் சாப்பிடவேண்டும். கிராமணமாக உபயோகிக்கப்படும் எஃகு, அப்பிரகம், காந்தம் இவைகளை ஒரு உளுந்தளவு சேர்த்துக் கொள்ளவும்.

காரீயம், ஈயம், கொழுப்பு, புழுக்கள், விஷம், உபவிஷம் இவைகளுடன் கூடியதும் மூத்ரம் சேர்த்ததும் வழியல்லா வழியால் ஹடத்தால் கட்டப்பட்டதுமான ரஸத்தை உபயோகிக்கக் கூடாது. தங்கம் வெள்ளி சேர்க்கப்பட்டு நெருப்பிற்கு ஓடாமல் தாங்கி நிற்கும் சக்தி உள்ள ரஸத்தை தேஹஸித்தியிலும், வைரம், அயம், காந்தம், மாக்ஷிகம், வைக்ராந்தம், அப்பிரகம், தங்கம் இவைகளில் ஒன்று ஜீர்ணமானதை ரஸாயனத்திலும் உபயோகிக்கலாம்.

எஃகு ஜீர்ணமான ரஸபஸ்மத்தை 1 பலம் வரை சாப்பிட நீண்ட ஆயுளும் வைரம் போன்ற தேகமும் ஸித்திக்கும். தங்கம் ஜீர்ணமான ரஸபஸ்மத்தை 12 பலம்வரை சாப்பிட காமப்பெருக்கினால் பல ஸ்திரிகளை ஒரே சமயத்தில் ரமிக்கும் சக்தி ஏற்படுகின்றது. ஸ்திரீகளின் சேர்க்கையே அவனுக்கு நல்ல கிராமணமாகின்றது. ஆனால் முதல் மூன்று வாரங்களுக்குள் சுக்லம் நழுவாதபடி ஸ்திரீகளுடன் ஸல்லாபம் விளையாட்டு இவைகளுடன் நிறுத்திக் கொள்ள வேண்டும். தங்கத்தையும் சுக்கையும் போட்டுக் காய்ச்சிய பால் அருந்துவதும், தங்கம் முதலிய ஆறு லோஹங்களால் செய்யப்பட்ட அஞ்சனமும் உயர்ந்து கிராமணமாகும்.

ரஸ ஸேவையில் பத்தியமும் அபத்தியமும்.

பத்தியம்: சிகப்பு சிறுமணி அரிசி, கோதுமை இவைகளின் சாதம், பசும் பால், தயிர், ஜாங்கலமாம்ஸம், பயறு, சர்க்கரை, தேன், இந்துப்பு, மழை ஜலம் அல்லது வாலையிலிறக்கிய சுத்த ஜலம், சக்கரவர்த்திக் கீரை, புளியாரை, மூக்கரட்டைக் கீரை, புடல், சுரை, வாழை, மல்லி, கரும்பு, மாதுளை, இளநீர், சுக்கு, தாம்பூலம், பச்சைக்கற்பூரம் குங்குமப்பூ சந்தனம் கஸ்தூரி சேர்ந்த மேல் பூச்சு, நல்ல புஷ்பங்கள், அழகும் பிரியமுள்ள ஸ்திரீகள், சிவனையும் ஆத்மஞானத்தையும் பற்றிய ஸம்பாஷணை, நல்ல துணிகள், மிருத்யுஞ்ஜயஜபம், ஸந்தோஷம், கேளிக்கைகள், நர்த்தனம், பாட்டு, சிவபூஜை, தேவ-அக்னி-குரு-பிராம்மணபூஜை-ஸமாதியிலிருத்தல், உண்மை பேசுதல் மற்றும் வாக்கு, சரீரம், மனஸ் இவைகளுக்கு துக்கம் நேராமல் செய்யக்கூடிய ஆஹாரவிஹாரங்கள் இவை பத்தியமாகவும், சிறந்த கிராமணமாகவும் இருக்கும்.

அபத்தியம்: அளவுக்கு மீறியும் அகாலத்திலும் சாப்பிடுதல், அதிகமாக நீர் அருந்துதல், அதிகத் தூக்கம் அல்லது தூங்காமலிருத்தல், ஸ்திரீகளுடன் அளவுக்கு மீறிய சேர்க்கை அல்லது ஸ்திரீஸங்கமமே இல்லாதிருத்தல், மதம், கோபம் ஸந்தோஷம், பேராசை இவ்வகளை

ஸமயத்திற்கேற்றபடி யில்லாமல் அனுபவித்தல், அதிகப் பேச்சு, ஜலக்ரீடை, அதிகமான கவலை, பாகற்காய், பூசணி, கக்கரி, கொள்ளு, குசும்பா, நல்லெண்ணெய், ஆளி எண்ணெய், புறா மாம்ஸம், துவரை, மோர் சாதம், காடி, சுசப்பு உரைப்பும் புளிப்பும் உப்பும் பிசிப்பும் கார்ப்புமதிகமுள்ள ஆகாரங்கள், பித்தத்தை அதிகரிக்கக்கூடியவை, ஈச்சை, எருமையின் பால் தயிர் முதலியவை, கோழி முதலியவைகளின் மாம்ஸம், ஒட்டுமா, நார்த்தை, பில்வம், எலுமிச்சை முதலிய பழங்கள். முருங்கை இவைகளாலான ஆகாரங்களும்; காலினால் நெருப்பைத் தீண்டுவதும், பசுவையும், பிராமணர்களையும் காலினால் உதைப்பதும். கன்னிகை குழந்தை பசு குதிரை இவைகளை அடித்தலும் பாபம், பிராணி ஹிம்ஸை, மரம் வெட்டுதல், சூதாட்டம் போன்றவை, அரசமரம், விளாமரம் இவைகளின் நிழலில் தங்குதல், நாற்கந்தி, ஏகாந்த ஸ்தலம் இவைகளில் மல மூத்ரம் விடுதல், சிவன், பிராமணன், குரு, ஸ்திரீ, வீரர்கள், ஆத்மஞானம் பெற்றவர்கள், நதிகள், வேதம் இவர்களை நிந்தித்தல், வெங்காயம், உள்ளி, பெருங்காயம், கடுகு, கத்தரிக்காய், அவரை இவைகளைச் சாப்பிடுதல், மத்யம் ஆஸவங்கள் ஆனூபமாம்ஸம் மற்றும் தீக்ஷ்ணம், உஷ்ணம், குரு, விஷ்டம்பி, ரூக்ஷம் போன்ற குணங்களையுடைய காய்ந்த மாம்ஸங்கள், வாழையிலையிலும், வெண்கலப் பாத்திரத்திலும் சாப்பிடுதல், அதிகவெயிலில் அலைந்து திரிவது இவை அபத்தியமே.

ரஸாஜீர்ணம்: இவ்வித அபத்தியங்களை ஒருவன் ஸேவிக்க நேரிட்டால், அவனுக்கு, சோஷம், மூர்ச்சை, தலைசுற்றல், ஜ்வரம், வாட்டம், நடுக்கம், மலமூத்திரம் கட்டுதல், குத்துவலி, தூக்கமின்மை, சோர்வு, சோம்பல், விக்கல், காஸம், சுவாஸம், கொட்டாவி, அருசி, அதிஸாரம், ஆண்குறி விம்மியே இருத்தல், கண் வயிறு மார்பு காது கால் குறி தலை ஸந்தி இவைகளில் எரிச்சலும் வலியும் இன்னமும் இவை போன்ற பல வியாதிகளும் ஏற்படும். இவை ரஸாஜீர்ணத்தில் ஏற்படுபவை.

ரஸாஜீர்ண சிகித்ஸை: இந்த ரஸாஜீர்ணம் போவதற்குள்ள கஷாயம்:- பேய்ப்பீர்க்கு, சரபுங்கா, ஆகாசக்கருடன் கிழங்கு, காரவல்லீ, காட்டுப்பபழுபாகல், மணத்தக்காளி, தேவதாளிப்பீர்க்கு, வெள்ளைப்பூவுள்ள விஷ்ணுக்கிராந்தி இவை வகைக்கு ஒரு பலமெடுத்து நான்கு பலம் கோமூத்திரத்தில் கால் பங்கு மீதமாகும் படிகஷாயம் செய்து வடிகட்டி இந்துப்பு ¼ தோலா போட்டு சாப்பிட, ரஸாஜீர்ணம் நிவர்த்தியாகும். மூன்று நாட்களுக்குள் தேகசுகம் மீண்டு, ரஸம் கிராமணமாகும்.

ரஸம் பரவாமல் தங்கி அதனால் வலி ஏற்படும் பொழுது அவ்வங்கத்தை நன்கு கைகளால் அமுக்கிப் பிடித்து விடவேண்டும். அல்லது ஸ்திரீகளின் உடல் ஸ்பர்சமும் ரஸத்தைப் பரவச் செய்யும்.

ரஸம், ரக்தம், மாம்ஸம், மேதஸ், அஸ்தி, மஜ்ஜை, சுக்லம் என்ற இவ்வேழு தாதுக்களில் கிரமமாக வேதம் ஏற்படுகின்றது. பிறகு கிரமமாக நாடி கண் இவைகளில் வேதம் ஏற்பட்டதும் எல்லா அங்கங்களிலும் ஏற்படுகின்றது. ரஸதாதுவில் வேதம் ஏற்பட்டால் காரீயம் தங்கமாகும். ரக்தவேதத்தால், ஈயம் தங்கமாகும். மாம்ஸ வேதத்தால் இரும்பு தங்கமாகும். மேதஸ் வேதத்தால் தாமிரமும், அஸ்தி வேதத்தால் வெள்ளியும் மஜ்ஜை வேதத்தால் இரும்பு, சுக்லவேதத்தால் மண்பாத்திரமும் தங்கமாகின்றன. வைரம் ஜாரணம் செய்தால் சுக்லத்தையும் அப்பிரக ஜாரணத்தால் மஜ்ஜையையும் தங்கஜாரணத்தால் எலும்பையும் வெள்ளி ஜாரணத்தால் ரஸதாதுவையும் ஸ்வர்ணமாக்ஷிக ஜாரணத்தால் மேதஸ்ஸையும் தாம்ரஜாரணத்தால் மாம்ஸத்தையும் காந்தஜாரணத்தால் ரக்தத்தையும் வேதம் செய்யும் சக்தி பெறுகின்றது. எஃகினால் நீலநிறமும், தாம்ரத்தால் சிவப்பும், வெள்ளியினால் சந்திரநிறமும், தங்கத்தால் தங்கநிறமும் ஏற்படுகின்றது.

தூமவேதம் செய்யப்பட்டதை ஒருமாதம் வாயில் வைத்துக் கொள்ள ஆகாயகமனமும் ஸ்பர்சவேதியை வாயிலடக்கிக்கொள்ள இரண்டுமாதங்களில் எல்லா ஸித்திகளும், நூறு கோடி வேதம் செய்வதை மூன்று மாதங்களும் பத்துகோடி வேதம் ஐந்து மாதங்களும் தசஸஹஸ்ர வேதியை எட்டுமாதங்களும் ஸஹஸ்ரவேதியை ஒன்பது மாதங்களும் சதவேதியை பத்து மாதங்களும் வாயிலடக்கிக் கொள்ள ஸர்வஸித்திகளும் ஏற்படுகின்றன.

ஏழாவது உல்லாஸம்

பத்மராகம் முதலிய ரத்னங்கள்

ரஸத்தின் உற்பத்தி சரிதத்தில் கூறியது போல் சிவனுடைய தேஜஸ்ஸின் பிரவாஹம் மலைகளில் வரும் பொழுது சிற்சில கற்களில் வேதம் ஏற்பட்டு லோஹங்களாகவும் ரத்னங்களாகவும் மாறின.

வைரத்தின் லக்ஷணம்: பிராமண, க்ஷத்திரிய, வைச்ய, சூத்திரஜாதியைச் சேர்ந்த நான்கு வித வைரங்கள் முறையே வெளுப்பு, சிவப்பு, மஞ்கள், கருப்பு, நிறக்கலப்புடன் காணப்படுகின்றன. புருஷ-ஸ்திரீ-நபும்ஸகஜாதியைச் சேர்ந்தவைகளென மூன்று விதமாகவும் பிரிக்கப்படுகின்றன. வெளுத்தும் பெரிதாயும்-பலகை போன்ற உருவம் அதிகமாகவும், பிரகாசமாகவும், ரேகை புள்ளியற்றும் காணப்படுபவை புருஷ ஜாதி வைரங்கள். அவை ஸத்வம் நிரம்பியும் பலம் பொருந்தியும் ஸோஹக்ரமணம் செய்து ரஸத்தை பந்தம் செய்கின்றன. எல்லா ஸித்திகளையும் அளித்து ரஸாயனத்தில் சிறந்தவைகளாக விளங்குகின்றன. ஆறு கோணங்களுடனும் புள்ளி, ரேகை இவைகளுடன் பிரகாசிப்பவை ஸ்திரீ ரத்னங்கள். இவை சரீரத்திற்கு காந்தி அளித்து போக ஸுகமளிப்பவையாகும். நீண்டும் முக்கோணத்துடனும், மெல்லியதாகவுமுள்ளவை நபும்ஸக வைரங்கள். இவை ஸத்வம் வீர்யம் குறைந்து காணப்படும்.

வைர சுத்தி : அருகம்புல், வன்னி, பசளைக்கீரை, சிறுகீரை, ஊமத்தை, கேழ்வரகு, ஆடு தீண்டாப்பாளை, எலியால், கொள்ளு, புளிவஞ்சி, மலங்காலை, அகத்தி, நொச்சி இவைகளின் சாறு நிரம்பிய தோலாயந்திரத்தில் முள்ளுக்கத்திரிக்காயின் நடுவில் வைக்கப்பட்டுள்ள வைரத்தை ஒரு நாள் வேகவைக்கவும். பிறகு எடுத்து எருமைச்சாணத்தால் பூசி, வராட்டி நெருப்பில் ஓரிரவு (4 யாமங்கள்) எரித்து இரவின் முடி வில் அதை குதிரை மூத்திரம், கள்ளிப்பால், கொள்ளுகஷாயம் இவைகளில் வகைக்கு 7 தடவை சுருக்குக் கொடுக்க சுத்தியாகின்றது.

வைர பஸ்மம் : வைக்ராந்தம், ஸவர்ணமாக்ஷிகம், கந்தகம், மனோசிலை, வெள்ளிமாக்ஷிகம் தாளகம், காந்தம், வெங்காரம், நண்டெலும்பு இவைகளை ஸ்தன்யத்தாலரைத்து உருண்டைகளாக்கி அதனுள் வைரத்தை வைத்து மூடி மூஷையிலிட்டு நன்கு ஊதி எடுத்து கஜபுடம் போடவும். பிறகு அந்த வைரத்தை எடுத்து வீசம் பங்கு பக்வபீஜம் ஜாரணம் செய்த ரஸத்தைச் சேர்த்து ஸ்தன்யத்தாலரைத்து கஜபுடம் போடவும். இவ்விதம் 16 தடவை முன் கூறியபடி ரஸம் சேர்த்துப் புடம் போட ரஸாயனத்திற்குகந்த வைரபஸ்மம் தயாராகின்றது.

வைர ரஸாயன முறை: ரஸாயனாதிகாரத்தில் கூறியபடி தேஹ சுத்தி முதலியவைகளைச் செய்து கொண்டு, நன்னாளில் தேவர்கள் முதலானோரைப் பூஜித்து ரஸாயனம் ஸேவிக்கவும். வைரபஸ்மம் ஒரு யவம், காந்தம் அப்பிரகஸத்வ பஸ்மம் தங்கபஸ்மம் இவை ஒரு குந்துமணி (2 யவம்) இவைகளை திரிபலா சூர்ணம் தேன் நெய் இவைகளுடன் காலையில் சாப்பிடவும். இவ்விதம் 16 மாதங்களில் வைர பஸ்மத்தை மாதத்திற்கு ஒரு யவமும் மற்ற பஸ்மங்களை ஒரு குந்துமணியும் அதிகமாக்கிக்கொண்டே வரவும். திரிபலை சூர்ணம் ஒரு நிஷ்கமும் தேனும் நெய்யும் தேவையானதும் சேர்த்துக்கொள்ளவும். பத்தியாபத்தியங்கள் ரஸத்திற்குக் கூறப்பட்டவையே.

ஒரு பலம் வரை வைரபஸ்மம் ஸேவிக்க நரைதிரை பிணியகற்றி நூறு வயது வரை அளிக்கின்றது. இரண்டு பலத்தில் ஆயிரம் வயதும், மூன்று பலத்தில் பத்தாயிரம் வயதும், நான்கு பலத்தில் லக்ஷவயதும், இவ்விதமதிகமாகச் சாப்பிட பல கோடி வயதுமளிக்க வல்லது.

வஜ்ரோதனம் : வைரத்தை ரஸாயனத்திற்குகந்ததாக மிருதுவாக்குவதே இந்த ஸம்ஸ்காரத்தின் பலன். வெளவாலின் நடுவில் வைத்து மேல் தித்திரிமாம்ஸத்தைச் சுற்றி அதற்கு மேல் எஃகு காந்தம் ரஸம் இவைகளை அரைத்துப் பூசி, கொள்ளு திரிபலை கேழ்வரகு இவைகளின் தனித்தனி கஷாயத்தில் வகைக்கு மூன்று நாட்கள் வேகவைத்து வைரத்தை எடுத்து மூன்று வருஷங்கள் நிரம்பிய வெற்றிலையினாலும், இலவு இலையாலும் சுற்றி முழங்காலின் பள்ளத்தில் வைத்துக் கால்களை மடக்கி இரண்டு யாமம் வைத்துக்கொள்ள வைரம் மிருதுவாகின்றது.

வைரத்துருதி: வைரம் முதலிய ரத்னங்களின் துருதி பாஹ்யத்துருதி அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.

குணம்: வைரபஸ்மம் மூப்பு, தரித்திரம், மரணம் இவைகளைப் போக்கவல்லது. வைத்துருதியும்மிருதுவாகச் செய்யப்பட்ட வைரமும் ரஸாயனத்திலும் உபயோகப்படுகின்றன. புருஷ ஸ்திரீ ஜாதி வைரங்கள் ரஸாயனத்திலும், நபும்ஸகஜாதி க்ராமணத்திலும் உபயோகப்படுகின்றன. ஆறு சுவைகளுடன் சீதவீர்ய ஸநிக்தலேகன குணங்களுடன் கூடியது.

வைக்கிராந்தத்திற்கு வைரத்திற்குப் போலவே சுத்தி முதலியவை செய்ய வேண்டும்.

தங்கம்.

ரஸவேதத்தினால் செய்யப்படுவதும், தாதுப்பொருள் களிலிருந்து கிடைப்பதும், லோஹங்களின் சேர்க்கையால்

ஏற்படுவதும் ஆக மூன்று விதமாக தங்கம் கிடைக்கின்றது. ரஸவேதத்தினால் செய்யப்படுவது உயர்ந்தது; உரைத்தாலும் வெட்டினாலும் உருக்கினாலும் மஞ்சள் நிறத்துடன் காணும். தாதுப்பொருள்களிலிருந்து கிடைப்பது மத்யமம்; சிகப்பு நிறத்துடன் காணும். லோஹச் சேர்க்கையில் ஏற்படுவது மட்டம்; சிகப்பு கலந்த மஞ்சள் நிறத்துடன் காணும்.

தங்கத்தின் சுத்தி: கலப்பைக்கிழங்கு, கஞ்சுகிக்கிழங்கு, கள்ளி, எருக்கு, சித்ரகம், புங்கு, ஊமத்தை, குந்துமணி, இங்குதீ, பனை, அமுக்கராக்கிழங்கு பேய்த்தும்மட்டி இவைகளின் வேரை மோரில் அரைத்துக் கலக்கி தகடாக்கிய தங்கத்தின் மேல் தடவி நெருப்பில் காய்ச்சி, பசுவின் மூத்திரம், மோர், நல்லெண்ணெய், கொள்ளுக்கஷாயம், காடி எலுமிச்சம்பழச்சாறு, எருக்கம் பால் இவைகளில் வகைக்கு ஏழு தடவை சுருக்குக் கொடுக்கவும். அத்தகட்டின் மேல் புற்றுமண், ஓட்டடை, செங்கல், உப்பு, காவி, இவைகளை எலுமிச்சம் பழச்சாற்றில் அரைத்துத் தடவி புடம் போட்டு எடுக்கவும். நான்குவித அப்பிரகம் ஸ்வர்ணமாஷிகம் லிங்கம், தாளகம், மனோசிலை, காந்தம், கங்குஷ்டம், பால்துத்தம், நிமிளை ரஸம், மண்ணுண்ணிப் பாம்பு, இவைகளை அம்லவர்கத்தாலரைத்து சிறிய மாத்திரைகளாகச் செய்து கொள்ளவும். புடம் போட்ட தங்கத்தையும் தாம்ரத்தையும் ஸமனெடை சேர்த்து உருக்கி அதில் முன் சொன்ன மாத்திரைகளை ஒவ்வொன்றாகப் போட்டு தங்கத்திற்குப் பத்து மடங்கு வரை சேர்த்து ஊதி எடுத்துத் தங்கம் மீதமானவுடன் எடுத்துக்கொள்ளவும். இது தான் உயர்ந்த சுத்தி.

தங்க பஸ்மம்: புளியிலைப் போன்று மெல்லிய தகடுகளாக அடிக்கப்பட்ட தங்க்த்தையும் சுத்த ரஸத்தையும் ஸமனெடை சேர்த்து அம்லவர்க்த்தாலரைத்து அந்த பிஷ்டிக்கு மேல் கந்தகத்தையும் ஸ்வர்ணமாக்ஷிகத்தையும் அரைத்து கவசம் செய்து மூஷையிலிட்டு ஊதி எடுத்துப் பொடி செய்து அதில் வீசம் பங்கு ரஸபஸ்மம் சேர்த்து அம்லவர்க்கத்தாலரைத்து பூதரபுடத்தில் 16 புடம் போடவும்.

ஒவ்வொரு புடத்திலும் ரஸபஸ்மம் சேர்க்கவும். இது நல்ல தங்கபஸ்மமாகின்றது.

ஸவர்ண ரஸாயன முறை: பஞ்சகர்மங்களினால் சரீர சுத்தி செய்த பின் தேவபூஜை செய்து தங்கபஸ்மம் ஒரு மாஷம், காந்தபஸ்மம் அப்பிரகஸத்வபஸ்மம் இவை இரண்டு குந்துமணியெடை சேர்த்து திரிபலா சூர்ணம் நெய், தேன் சேர்த்து வைரரஸாயனம் சாப்பிட்டது போல் 16 மாதம் வரை சாப்பிடவும். பலனும் முன் போலவே.

ஸ்வர்ணத்துருதி: துருதிமுறை முன் கூறப்பட்டுள்ளதே. அத்துருதியை தங்கத்தைப் பஸ்மம் செய்தது போல் பஸ்மம் செய்யலாம்.

குணம் : தித்திப்பு கசப்பு துவர்ப்பு ரஸமுள்ளதாகவும், ஸமசீதோஷ்ண வீர்யமுள்ளதாகவும், குரு லேகனம் ஸ்நிக்தம் போன்ற குணமுள்ளதாகவும் இருக்கின்றது. ஹிருதயம் கண் இவைகளுக்கு நல்லது. காந்தி, தைரியம், ஞாபகசக்தி, ஆயுள், ஆரோக்கியம், வாக்குத்திறமை, பசி, அக்னிதீப்தி, வீர்யம், பலம் அளிக்க வல்லது. க்ஷய உன்மாதரோகங்களில் சிறந்தது.

காந்தம்.

கல்ப முடிவில் சிவன் பார்வதியுடன் ஸம்ஹார நடனம் புரியும் பொழுது ஏற்பட்ட வியர்வைத்துளிகள் கற்களை காந்தக்கற்களாக மாற்றின. பிராமகம் சும்பகம் கர்ஷகம் திராவகம் ரோமகம் என ஐந்து வகைப்பட்ட காந்தம் முறையே 1-2-3-4 முகங்களுடனும், எல்லா பாகங்களிலும் முகங்களுடனும் விளங்குகின்றது. மஞ்சள், கருப்பு, சிகப்பு கலப்புவர்ணம் ஆகிய இந்நிறங்களிலகப்படுகின்றது. பிரும்மா, விஷ்ணு, சிவன், பூதாத்மா, மாத்ருகா இவர்கள் முறையே அதிதேவதைகள். மஞ்சள் நிறமுள்ளது ஸ்பர்ச வேதத்திலும், கருப்பு நிறமுள்ளது ரஸாயனத்திலும், சிகப்பு நிறமுள்ளது ரஸக்கட்டிலும், கலப்பு நிறமுள்ளது

வியாதிகளிலும் சிறந்தது. ரோமகம் கிரஹபீதியை அகற்றுகின்றது. திராவகம் மிக உயர்ந்தது. கர்ஷகம் உத்தமமெனவும், சும்பகம் மத்யமம் எனவும், பிராமகம் அதமமெனவும் கருதப்படுகின்றது. இரும்பைச்சுழற்றுவதால் பிராமகம் எனவும், இரும்புடன் ஒட்டிக்கொள்வதால் சும்பகம் எனவும், தன்னிடமிழுப்பதால் கர்ஷகம் எனவும், உருக்குவதால் திராவகம் எனவும், ஒடித்தால் மயிர் போன்று தெரிவதால் ரோமகம் எனவும் பெயர் ஏற்பட்டிருக்கின்றது. அதிக முகமுள்ளது தான் உயர்ந்தது. பிராமகமும் சும்பகமும் ரோகங்களை அகற்றுவதிலும் கர்ஷகமும் திராவகமும் ரஸாயனத்திலும் உபயோகிக்கச் சிறந்தவை. ரஸத்தைக் கட்டுவதில் காந்தம் நிகரற்றது. மழை வெயில் காற்றுப்படும் இடங்களிலுள்ள காந்தம் உபயோகிக்கத்தகுந்ததல்ல. இரண்டு முழ அளவு பள்ளம் வெட்டி அதன் அடியிலுள்ள காந்தமே உபயோகிக்கத் தகுந்தது.

காந்த ஸத்வம் : துர்க்கை, கணேசன், பைரவர் இவர்களைப் பூஜை செய்து பின் காந்தத்தை கடுந்தீயில் போட்டுத் திரிபலை கஷாயத்தில் சுருக்குக் கொடுக்கவும். அக்காந்தத்தைப் பொடித்து அதற்குச் சமம் வெள்ளைக்காசம், உப்பு, வெங்காரம், கொம்பரக்கு, குக்கில், குந்துமணி, ஆடு முதலியவைகளின் சுட்ட ரோமங்கள், நெய், தேன், தேன்மெழுகு, முயலெலும்பு, சிறு மீன், சேங்கொட்டை, எள்ளு, ஸர்ஜக்ஷாரம், யவக்ஷாரம், வெள்ளைக்குங்குலியம், மான், எருமை, யானை இவைகளின் கொம்பு குளம்பு முதலியவைகளைத் தூள் செய்து சேர்த்து ஆட்டுப்பாலில் அரைத்து எருமையின் தயிர், நெய், பால், மூத்ரம், மலம் சேர்த்து அரைத்துச் சிறிய சிறிய உருண்டைகளாக்கிக் காயவைத்து கோஷ்டீயந்திரத்திலிட்டு கருங்காலிக்கட்டை நெருப்பில் வளைந்த குழாயால் ஊதிக்கொண்டே ஐந்து ஐந்து உருண்டைகளாகச் சேர்த்துக் கொண்டு குச்சியால் தேய்த்துக் கொண்டு வரவும். மூன்று யாமத்தில் ஸத்வம் விழும். அந்த ஸத்வத்திற்கு மறுபடியும் முன் கூறப்பட்ட திரவ்யங்கள்

சமனெனு சேர்த்து மூஷையிலிட்டு ஊத சுத்தமான காந்தஸத்வம் கிடைக்கும்.

காந்தலக்ஷணம் : காந்த பாத்திரத்திலுள்ள ஜலத்தில் விட்ட எண்ணெய்த்துளி பரவாது. பட்டாணிக் கடலை கறுத்துப் போகும். பெருங்காயத்தின் வாஸனை மறையும். பால் எவ்வளவு பொங்கினாலும் வழியாது. கடுக்காயின் கசப்பு நீங்கும். வென்னீர் சீக்ரமே ஆறி குளிர்ந்து விடும்.

மற்ற லோஹங்கள் - இரும்பும் எஃகும்.

லோஹங்களின் சுத்தி: சுத்திக்கு ஐந்து பலத்திற்குக் குறையாமலும், பதினைந்து பலத்திற்கு அதிகப்படாமலும் எடுத்துக்கொள்ள வேண்டும். திரிபலை 16 பலமெடுத்து நான்கு மடங்கு ஜலத்தில் கால் பங்கு மீதமாகக்காய்ச்சி வடிகட்டி அதில் லோஹத்தகடுகளைக் காய்ச்சி சுருக்குக் கொடுக்கவும். பிறகு முயல் ரத்தம் தடவிக் காயவைத்துக் காய்ச்சி மோர், நல்லெண்ணெய், காடி, நெய், தேன், எருக்கம் பால், எலுமிச்சம்பழச்சாறு, கொள்ளுக்கஷாயம் இவைகளின் வகைக்கு ஏழு தடவை சுருக்குக் கொடுக்கவும். பிறகு அமிருதோத் பவமந்திரத்தை ஜபம் செய்து அத்தகடுகளைப் பொடியாக்கிக் கொள்ளவும்.

லோஹங்களின் பஸ்மமுறை : காந்தபஸ்மம்: இரும்புப் பாத்திரத்தில் திரிபலை கஷாயமிட்டு காந்தப் பொடியைப் போட்டு இரும்புத்துடுப்பால் கிளறிக் கொண்டே லேஹ்ய பதத்திலிறக்கிக் கொள்ளவும். இது ஸ்தாலீபாகம். மண் சம்புடத்திலிட்டு மூடி 16 அங்குல ஆழமுள்ள குழியிலிட்டு காட்டெரு போட்டு ஒரு நாள் முழுவதும் காற்றில்லாவிடத்தில் எரித்து எடுக்கவும். இது புடபாகம். இவ்விதம் 7 தடவை இடைவிடாமல் மாற்றி மாற்றி ஸ்தாலீபாகமும் புடபாகமும் செய்யவும். கடைசியில் லோஹத்தில் வீசம் பங்கு லிங்கம் சேர்த்து ஸ்தான்யத்தாலரைத்து 16 தடவை ஸ்தாலீபாகமும் புடபாகமும் செய்யவும். உயர்ந்த பஸ்மமாகின்றது.

இதுவே மற்ற லோஹங்களையும் பஸ்மம் செய்யும் முறை.

அம்ருதீகரணம் : திரிபலையை நான்கு பங்க ஜலத்தில் 8இல் ஒரு பங்கு மீதமாகக் கஷாயமிட்டு அக் கஷாயத்திற்குச் சமம் பசு நெய்யும் சேர்த்து தாம்ரபாத்திரத்திலிட்டு அதில் நெய்க்குச் சமம் காந்தபஸ்மத்தைப் போட்டு இரும்புத் துடுப்பால் கிளறிக் கொண்டே எரித்து வர திரவம் சுண்டியவுடன் இறக்கி லோகக்ஷத்திற்குச் சமம் சர்க்கரை சேர்த்துக் கொள்ளவும். பஸ்மம் அம்ருதமாகின்றது.

லோஹபாகத்தில் பிரிவு : எலுமிச்சம்பழம் போன்று மிருதுவாக இருப்பது மிருதுபாகம் எனவும், கட்டியாகுவது மத்யமபாகமெனவும், மணல் போலாவது கர (முறுகிய) பாகம் எனவும் கருதப்படுகின்றது.

காந்த ரஸாயன முறை : சரீர சுத்தி செய்து கொண்ட பின் முதலில் ஒரு மாதம் வரை அப்பிரக பஸ்மம் ஸேவித்து உடலைத் தகுதியாக்கிக் கொண்ட பின் காந்த ரஸாயனம் உபயோகிக்க வேண்டும். காந்தபஸ்மம் ஒரு உளுந்தளவும் அப்பிரக பஸ்மம் குந்துமணி அளவும் திரிபலா சூர்ணம் 2 நிஷ்கமும், தேன், நெய் சேர்த்துக் காலையில் சாப்பிட்டு மேல் கறந்த சூட்டுடன் உள்ள பசும்பால் அல்லது ஸமஜலம் சேர்த்து ஜலம் சுண்டும் வரைக் காய்ச்சி எடுக்கப்பட்ட பசும்பால் 60 பங்கு சாப்பிட வேண்டும். பால் ஒத்துக்கொள்ளாவிடில் திரிபலை கஷாயமோ சீந்திற்கொடி கஷாயமோ சாப்பிடலாம். இவ்விதம் ஒரு மாதம் ஸேவித்தபின் 16 மாதம் வரை மருந்தின் அளவை மாதத்திற்கு ஒரு பங்கு அதிகமாக்கிக் கொண்டே வரவும். பத்தியமும் அபத்தியமும் ரஸ பஸ்மவிதியில் கூறப்பட்டது போல.

ஒரு வருஷம்வரை உபயோகிக்க க்ஷுத்ர வியாதிகளும், இரண்டு வருஷங்களில் பெருவியாதிகளும், மூன்று வருஷங்களில் நரையும், நான்கு வருஷங்க்ளில் திரையும், ஐந்து

வருஷங்களில் அபமிருத்யுவும் நீங்குகின்றன. ஆறுவருஷ உபயோகத்தில் நூறு வயது வாழ்கின்றான். ஏழுவருஷங்களில் ஸூர்யன் போன்ற ஒளியும், பத்து வருஷங்களில் ஸர்வஸித்திகளும், 11 வருஷங்களில் வித்யாதரப் பதவியும் 13 வருஷங்களில் தேவ பதவியுமடைகின்றான்.

காந்தத் துருதி: சங்கம் போன்று இதற்குத் துருதி செய்து கொள்ளவும்.

குணம் : அயக்கிட்டத்தை விட இரும்பும், இரும்பை விட எஃகும், எஃகை விட காந்தமும் உயர்ந்தவை. திரிதோஷ கோபத்தையும் தணித்து, காந்தி, ருசி, கண்பார்வை, ஆயுள், வலிவு, திடம் அளித்துச் சிறந்த ரஸாயனமாகின்றது.

அப்பிரகம்

பார்வதி தனது தோழிகளுடன் கடற்கரையில் கிரீடை செய்யும் பொழுது ஆனந்தத்தால் கண்ணீர் பெருகி பட்டாடையில் பட்டது. அவள் உடனே ரஜஸ்வலையாகி விட்டபடியால் ரஜஸ் தீண்டியது தனது பட்டாடையை கடலிலேயே எறிந்து விட்டாள். அவ்வஸ்திரம் பாற்கடலைக் கடையும் பொழுது வெள்ளை, கருப்பு, சிகப்பு, மஞ்சள் என்ற நான்கு நிறங்களுடன் அப்பிரகமாகக் கிடைத்தது.

வெள்ளை நிறமுள்ளது வெள்ளி செய்வதிலும் மற்ற மூன்றும் தங்கம் செய்வதிலும், எல்லா அப்பிரகமும் ரஸாயனத்திலும் சிறந்தவை. வெள்ளை, சிகப்பு, மஞ்கள், கருப்பு நிறமுள்ள அப்பிரகம் முறையே முன்னதைவிட பின்னது உயர்ந்தது. இது பிநாகம், தரத்துரம், நாகம், வஜ்ரம் என நான்கு விதமாகப் பிரிக்கப்பட்டுள்ளது. வஜ்ராப்பிரகம் தான் உபயோகிக்கத் தகுந்தது. விநாகாப்பிரகம் நெருப்பில் போட தளங்களாக பிரிந்து காணும்; அது மலத்தைக் கட்டி தேஹத்திற்குக் கெடுதல் விளைவிக்கும். தர்துரம் நெருப்பிலிட தவளை போன்ற சத்தத்துடன் காணும்; இதனால் அச்மரீ

உண்டாகின்றது. நாகப் பாம்பு போன்ற சத்தத்துடன் காணும்; மஹாகுஷ்டத்தையும் மண்டல குஷ்டத்தையும் உண்டாக்கும். வஜ்ராப்பிரகத்தை நெருப்பிலிட ஒருவித மாறுதலையும் அடையாது. நல்ல கனமுள்ளதும் பெருந்தகடுகளுள்ளதும், வழவழப்பானதும், சுலபமாகப் பிரிக்கத்தகுந்த தகடுகளுடன் கூடியதும் உபயோகிக்கத் தகுந்தது. அழுக்காகியோ, கண்ணாடி போன்றோ, கிட்டம் நிறைந்தோ காணப்படுவது நல்லதல்ல.

தான்யாப்பிரகம் : வஜ்ஜிராப்பிரகத்தைக் கடுந்தீயிலிட்டு ஊதி, எருக்கம் பால், காடி, பசுவின் மூத்திரம் திரிபலைக் கஷாயம் சிறுகீரைச் சாறு இவைகளில் வகைக்கு 3 தடவை சுருக்குக் கொடுக்கவும். பிறகு தகடுகளாகப் பிரித்தெடுத்து இடித்துச் சிறுகீரைச்சாறு, அம்லவர்க்கம் இவைகளால் பாவனை செய்து கடும் வெயிலிலிட்டு, அரைத்து நெல்லுடன் சேர்த்து துணியில் முடித்துக் கட்டி, காடியில் அம் முடிப்பை நனைத்துக் கொண்டே கையால் பிசைய ஸூக்ஷ்மமான அப்பிரகத்தூள் காடியிலிறங்கும். அதை எடுத்து வெயிலில் காயவைத்து எடுத்துக் கொள்ளவும்.

அப்பிரக ஸத்வமும் அதன் பஸ்மமுறையும்: காந்தம் போன்று இதற்கும் ஸத்வம் எடுத்துக் கொள்ளலாம். தங்கம், வெள்ளி, ஸவர்ணமாக்ஷிகம், வைக்ராந்தம், தேன், வெங்காரம், குந்துமணி, வெல்லம் நெய் இவை வகைக்கு 10 நிஷ்கம் எடுத்து எருக்கம் பாலால் அரைத்து ஒருதோலா அளவுள்ள மாத்திரைகளாக்கிக் காயவைத்துக் கொள்ளவும். 100 நிஷ்க அளவுள்ள அப்பிரகஸத்வத்தை உருக்கி அதில் இம் மாத்திரைகளை ஒவ்வொன்றாகப் போட்டு ஸத்வம் மீதமாகும் வரை ஊதி எடுத்துக் கொள்ளவும்.

பிறகு அப்பிரக ஸத்வத்தைப் பொடி செய்து, சிறுகீரை, மூக்கரட்டை, கரணியிலை, எருக்கிலை, கோரைக் கிழங்கு, எலுமிச்சம்பழம், பனைவிழுது, திரிபலை, பிரண்டை, புளியாலை, மிளகு, அம்ஸவர்க்கம், ஆலம்விழுது,

இலவஇலை, அகத்தி இலை, முருங்கை இலை, ஏகவீரா, முள்ளி, ஈசுவரமூலி, துளசி, வசம்பு, பேடாரீ, கார்போகரிசி, கற்றாழை இவைகளின் சாற்றில் தனித்தனியாக அரைத்து வெய்யிலில் உலர்த்தி ஸ்தாலீபாகமும் புடபாகமும் (காந்தத்திற்குச் செய்தாற் போல்) ஒவ்வொரு தடவை செய்யவும். பிறகு ஒவ்வொரு தடவையும் அப்பிரகஸத்வத்தில் வீசம் பங்கு லிங்கமும் ஸ்வர்ணமாக்ஷிகமும் சேர்த்து தண்ணீர் விட்டான் கிழங்குச் சாற்றாலரைத்து 16 புடங்கள் போட பஸ்மமாகும். இதன் அம்ருதீகரணம் முன் காந்தத்திற்குச் செய்தது போலவே.

அப்பிரகஸத்வரஸாயனமுறை : சரீரசுத்தி செய்து கொண்டு தேவதைகளைப் பூஜித்து தினம் காலையில் அப்பிரகஸத்வபஸ்மம் ஒரு குந்துமணி எடை, திரிபலாச் சூர்ணம் 2 நிஷ்கம் சேர்த்து தேன் நெய்யுடன் சாப்பிடவும். மாதத்திற்கு ஒரு குந்துமணி அதிகமாக்கிக் கொண்டு 16 மாதங்கள் வரை சாப்பிடவும். வருஷக்கணக்கில் உபயோகித்துவர, முதல் வருஷத்தில் தேஹசுத்தியும், இரண்டாவது வருஷத்தில் க்ஷுத்ரவியாதிகள் நீங்கியும், மூன்றாவது வருஷத்தில் பெருவியாதிகள் நீங்கியும், நான்காவது வருஷத்தில் காந்தி, பலம், வீர்யம் இவை அதிகமாகியும், ஐந்தாம் வருஷத்தில் தேகத்திடம் ஏற்பட்டும், எட்டாவது வருஷத்தில் விஷம் நசித்து, ஒன்பதாவது வருஷத்தில் ஸித்தி ஏற்படுகின்றது. பிறகு இவ்விதம் பல வருஷங்கள் சாப்பிட தேவனாகின்றான்.

அப்பிரகத் துருதி : முன் பாஹ்யத்துருதி அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது. ஸத்வபஸ்மமுறைப்படி இதையும் பஸ்மம் செய்து கொள்ளலாம்.

குணம் : அறு ரஸங்களுடன், லகு, சீதம், ஸ்நிக்தம், போன்ற வீர்யங்களுடன் கூடியது. வீர்யம், பலம், மேதை, காந்தி, தேகத்திடம், அக்னிதீப்தி, அளித்து நரை திரை அகற்றி ரஸாயனமாகின்றது. கிராஹிகுணமுள்ளது. ரஸத்தைக் கட்டுவதில் நிகரற்றது.

எட்டாவது உல்லாஸம்

ரஸாயனம் உபயோகித்தல்: ரஸம், வைரம், தங்கம், காந்தம், அப்பிரகம் இவ்வைந்தும் அமிருதம் போன்ற சிறந்த ரஸாயனம். ரஸத்தோடு சேர்ந்த மற்ற நான்கு நல்ல ஸித்தி அளிக்கின்றன. ஸ்திரீ, நபும்ஸகன், பதினைந்து வயதுக் குட்பட்ட சிறுவர்கள் இவர்கள் ரஸாயனம் உபயோகிக்கத் தகுந்தவர்களலல்ல. 15 வயது முதல் 30 வயதுக்குட் பட்டவருக்கு பின் குறிப்பிடப்படும் கால அளவிலேயே ஸித்தி ஏற்படும். 30 முதல் 50 வயதுக்குட்பட்டவருக்குக் குறிப்பிட்டகால அளவிற்கு இரண்டு பங்கு காலத்திலும் 50 வயதுக்கு மேற்பட்டவருக்கு 3 பங்கு காலஅளவிலும் ஸித்தி ஏற்படும். பின்வரும் அத்தியாயத்தில் குறிப்பிடப்படும் 31 ரஸாயனங்கள் மேற்சொன்ன ஐந்து உத்தமரஸாயனங்களால் ஆக்கப் பெற்றவை. ரஸத்திற்கு வைரம், தங்கம், காந்தம், அப்பிரகம் இந்த நான்கும், வைரத்திற்கு தங்கம், காந்தம், அப்பிரகம் இம்மூன்றும், தங்கத்திற்கு காந்தமும், காந்தத்திற்கு அப்பிரகமும், அப்பிரகஸத்வமும் கிராமணமாகும். இவைகளைத் தனித்தனியாக ரஸம் முதலியவைகளை உபயோகிக்கும் பொழுது க்ராமணமாக உபயோகப்படுத்தவும். திரிபலை, தேன், நெய் இவை பொதுவான க்ராமணங்களாகின்றன.

ஒன்பதாவது உல்லாஸம்

ரஸாயனத்திற்கேற்ப ரஸஸம்ஸ்காரம்

ரஸத்தின் சுத்தி:

1. ரஸத்தையும் தான்யாப்பிரகத்தையும் தப்த கல்வத்திலிட்டு மூக்கரட்டைச் சாற்றால் ஒரு தினமரைத்து வஜ்ரமூஷையிலிட்டு பூதரயந்த்ரத்திலிட்டு புடம் செய்து மறுபடியும் மூக்கரட்டைச் சாற்றால் அரைத்துப் புடமிடவும். இவ்விதம் 10 புடம் போட்டு பாதனயந்திரத்திலிட்டுப் பிரித்தெடுக்க ரஸம் சுத்தமாகும்.

2. ரஸத்தில் 10இல் ஒரு பங்கு கந்தகம் சேர்த்து தப்தகல்வத்திலிட்டு திரிபலை கஷாயத்தாலும், எலுமிச்சம் பழம், கற்றாழை, கொடிவேலி இவைகளின் ரஸத்தாலும் ஒவ்வொரு யாமம் அரைத்து பாதனயந்திரத்திலிட்டு பிரித்தெடுக்கவும். இவ்விதம் 7 தடவை கந்தகத்துடன் சேர்த்தரைத்து பாதனயந்திரத்திலிட்டெடுக்க சுத்தியாகும்.

3. நல்லெண்ணெய், எருமையின் மூத்திரம், அம்லவர்கம், கோமாம்ஸம் இவைகளால லிங்கத்தை அரைத்து இரும்புப் பாத்திரத்திலிட்டு கிரமாக்னியில எரித்து இருப்புத்துடுப்பால் கிளறி திரவம் சுண்டியவுடன் இறக்கி ஈரமான மயில் பித்தத்தாலரைத்து வெயிலில் காயவைத்து பாதனாயந்திரத்தில் கடுந்தீயிலிட்டு எரித்து எடுக்கவும். நான்கு யாமத்தில் சுத்தமான ரஸம் தனித்து நிற்கும்.

ரஸபஸ்மம்:

1. அப்பிரகஜாரணம் செய்யப்பட்ட ரஸத்தை பக்வமூஷையிலிட்டு, மேலும் கீழும் ரஸத்திற்கு ஸமம் கந்தகம் பொடி செய்து தூவி, அம்மூஷையில் ரஸத்திற்கு 8 பங்கு மணத்தக்காளிச்சாற்றை ஊற்றி மூஷையை மூடி, கிரமாக்னியில் கந்துகாயந்திரத்தில் நான்கு யாமம் எரிக்க ரஸம் பஸ்மமாகும்.

2. அப்பிரகஜாரணமான ரஸத்திற்கு ஸமம் கந்தகமும் சேர்த்து கள்ளிப்பாலில் ஒரு நாளரைத்து கர்ப்பயந்திரத்தில் புடம் போட பஸ்மமமாகும்.

3. அப்பிரகம் ஜீர்ணமான ரஸத்திற்கு ஸமம், கொம்பரக்கு, சுட்ட ஆட்டு ரோமம், தேன், வெங்காரம், குந்துமணி இவைகளைச் சேர்த்து கருசலாங்கண்ணிச்சாற்றில் ஒரு நாளரைத்து வஜ்ரமூஷையிலிட்டு மூடி ஊத பஸ்மமாகும்.

4. அப்பிரகம் ஜீர்ணமான ரஸத்தையும் அதற்கு ஸமம் கந்தகத்தையும் தப்பதகல்வத்திலிட்டு கருவேலம் சாற்றாலும், ஓமகஷாயத்தாலும், சிறுபுள்ளடியின் சாற்றாலும், வெள்ளை

அழிஞ்சில் சாற்றாலும் மூன்று நாளரைத்து மண்சராவத்திலிட்டு மூடி மண்சீலையிட்டு வரட்டி நெருப்பிலோ உமிநெருப்பிலோ மூன்று நாட்கள் இடைவிடாமல் எரிக்க பஸ்மமாகின்றது.

5. அப்பிரகஜீரண ரஸத்தில் ஸமனெடை வைரபஸ்மம் சேர்த்து மூன்று நாள் சிறுபுள்ளடியின் சாற்றால் அரைத்துக் கொள்ளவும். திவ்யௌஷதிகளின் விதையை அரைத்து வஜ்ரமூஷையினுள் பூசவும். அதில் முன் கூறப்பட்ட ரஸத்தைப் போட்டு மூன்று நாள் உமிக்காந்தலில் எரிக்கவும். இவ்விதம் மூன்று தடவை சிறுபுள்ளடிச் சாற்றாலரைத்துப் புடம் போட வெள்ளையான பஸ்மமாகின்றது.

ஜாரித ரஸபஸ்ம முறை: **1.** ஜாரணம் செய்த பிறகே ரஸத்தை பஸ்மம் செய்வது நல்லது. பூமியில் கோமயத்தை வைத்து அதன் மேல் பக்வ மூஷையை வைக்கவும். அதில் பேய்ச்சுரை விதை எண்ணெய் நிரப்பி மேல் ரஸத்தை விடவும். அதற்கு மேல் மணத்தக்காளிச் சாற்றை எண்ணெய்க்குச் சமம் சேர்த்து ஒரு அரிசி எடை கந்தகமும் சேர்த்து மூஷையை மூடவும். அதற்கு மேல் கருங்காலித்தணல் நிரப்பிய சராவத்தை வைக்கவும். தானாக ஆறியவுடன் மறுபடியும் முன் போல கந்தகமும் எண்ணெய்யும் சாறும் சேர்த்து மூஷையிலிட்டுக் கீழ் சாணமும் மேல் நெருப்புமிட்டு ஜாரணம் செய்யவும். ரஸம், மணத்தக்காளிச் சாறு, எண்ணெய் இவை மூன்றும் சமனெடை எடுத்துக்கொள்ளவும். ஆறுபங்கு கந்தகம் வரை ஜாரணம் செய்ய ரஸத்திற்கு முகம் ஏற்படுகின்றது. பின் எலுமிச்சம்பழச்சாற்றால் ரஸத்தை ஒருநாளரைக்கவும். மயில் பித்தம் அல்லது நவச்சாரம், கடுகு எண்ணெய், கந்தகம் இவைகளைச் சேர்த்து எலுமிச்சம் பழச்சாற்றால் அரைத்து ரஸத்தின் 64இல் ஒரு பங்கு எடையுள்ள சுருள் தங்கத்தின் மேல் பூசவும். அத்தங்கத்தை முன்போல் எலுமிச்சம்பழச்சாறு நிரம்பிய பக்வமூஷையிலிட்ட ரஸத்தில் சேர்த்து முன் போன்று

ஜாரணம் செய்யவும். இவ்விதம் அரை வீசம் பங்கு-வீசம் பங்கு தங்கத்தை முறையே ஜாரணம் செய்து ரஸத்தைப் பஸ்மம் செய்யவும்.

பூபாடலியை வேருடன் நன்கு அரைத்து கோமூத்திரத்தில் கலக்கி வடிக்கட்டிப் பிழிந்தசாற்றால் ரஸத்தை ஒருநாளரைத்து காந்த ஸம்புடத்திலிட்டு மேலும் கீழும் [illegible]க்திரவியங்களைப் போட்டு அடுப்பிலேற்றி இளந்தீயில் ஒருநாள் எரிக்க பஸ்மமாகும். அளவிற்குறையாமல் மூப்புப் பிணியகற்றும்.

2. அனுவாஸனம் வரை செய்யப்பட்ட ரஸம் கால் பலம், தங்கம் 8 குந்துமணி, வைரபஸ்மம் 4 குந்துமணி இவைகளைத் தப்தகல்வத்திலிட்டு சிறுபுள்ளடிச் சாற்றால் 3 நாட்கள் அரைத்து வஜ்ர மூஷையிலிட்டு மூடி பூதரயந்திரத்தில் எரித்தெடுக்கவும். இவ்விதம் சிறு புள்ளடிச் சாற்றில் 3 நாட்கள் வீதம் அரைத்து பூதரயந்திரத்தில் 100 புடம் போட பஸ்மமாகும்.

ரஸாயனயோகங்கள்.

1. அப்பிரக ரஸாயனம்: அப்பிரக ஸத்வத்தைப் பஸ்மம் செய்து கருசலாங்கண்ணிச் சாற்றாலும் திரிபலை கஷாயத்தாலும் 21 தடவை பாவனை செய்து கொள்ளவும். இரண்டு குந்துமணி எடை சர்க்கரையுடன் காலையில் தேன், நெய், திரிபலைச் சூர்ணம் இவைகளுடன் சாப்பிடவும். இவ்விதம் 16 மாஸங்களில் கிரமமாக அளவை அதிகரித்து 32 குந்துமணி வரை சாப்பிட எல்லா ரோகங்களும் நீங்கும்.

2. காந்த ரஸாயனம்: காந்தபஸ்மத்தை திரிபலை, நொச்சி, கருசலாங்கண்ணி இவைகளின் சாற்றால் 21 தடவை பாவனை செய்தரைத்து இரண்டு குந்துமணி எடை தேன் நெய் சேர்த்துச் சாப்பிட்டு மேல் க்ராமணமாக நொச்சி திரிபலை கருசலாங்கண்ணி இவைகளின் சூர்ணம் கால் பலம் தேன் நெய்

சேர்த்துச் சாப்பிடவும். 32 குந்துமணி வரை 16 மாதங்களில் பஸ்ம அளவை கிரமமாக அபிவிருத்தி செய்து கொள்ளவும். இதனால் மூப்புப் பிணி அகலும்.

3. *காந்தாப்பிரகரஸாயணம் :* காந்தபஸ்மத்தையும் அப்பிரகபஸ்மத்தையும் நெல்லி, கருசலாங்கண்ணி, மூக்கரட்டை இவைகளின் சாற்றாலரைத்து இரண்டு குந்துமணியிடை சர்க்கரை, தேன், நெய்யுடன் சாப்பிடவும். கருசலாங்கண்ணியையும் மூக்கரட்டையையும் சூர்ணம் செய்த தேன் நெய் கலந்து கிராமணமாக உபயோகிக்கவும். 16 மாதங்களில் வேளைக்கு 32 குந்துமணி வரை கிரமமாக அதிகமாக்கி உபயோகிக்க நரைதிரையகலும்.

4. *ஸ்வர்ணரஸாயனம் :* ஸ்வர்ணபஸ்மத்தை தசமூல கஷாயத்தால் 21 தடவை பாவனை செய்தரைத்து பயறளவு தேன் நெய் கலந்து சாப்பிட்டு மேல் க்ராமணமாக சீந்திற்கொடி திரிபலைக் கஷாயம் ஒருபலம் சாப்பிடவும். இவ்விதம் கிரமமாக வேளைக்கு 16 பயறளவு வரை 16 மாதங்களில் அதிகப்படுத்தவும். தேஜஸ், பலம், புத்தி, கூரிய கண் பார்வை அளித்து நரைதிரையகற்றும்.

5. *ஸவர்ணாப்பிரகரஸாயனம் :* ஸ்வர்ணபஸ்மம் 1 பங்கு, அப்பிரகபஸ்மம் 2 பங்கு இவைகளை தசமூலம், திரிபலை, கரிசலாங்கண்ணி, இவைகளின் சாற்றால் 21 தடவை பாவனை செய்து மூன்று உளுந்தளவு, தேன், நெய்யுடன் சாப்பிட்டு மேல் சீந்திற்கொடி திரிபலைக் கஷாயத்தைச் சாப்பிடவும். 24 குந்து மணிவரை கிரமமாக அதிகமாக்கி 16 மாதங்கள் சாப்பிட பலம் தேஜஸ் பெருகும். (3 உளுந்து - 1 குந்து மணி எடை).

6. **ஸ்வர்ணகாந்தரஸாயனம் :** ஸ்வர்ணபஸ்மம் 1 பங்கு, காந்தபஸ்மம் 2 பங்கு எடுத்து நெல்லிக்காய்ச் சாற்றால் 14 தடவை பாவனை செய்து 3 உளுந்தளவு தினம் காலையில் சர்க்கரை கலந்து சாப்பிட்டு மேல் நெல்லிக்காய்ச்சாறு நெய்

தேன் இவை கால்பலம் சாப்பிடவும். 24 குந்து மணிவரை கிரமமாக அதிகமாக்கி 16 மாதங்கள் உபயோகிக்க நரை திரை அகலும்.

7. ஸ்வர்ணாப்பிரககாந்தரஸாயனம்: ஸ்வர்ண பஸ்மம், காந்தஸத்வபஸ்மம், அப்பிரகஸத்வ பஸ்மம் இம்மூன்றும் ஸமனெடை எடுத்துக் கொட்டக்கரந்தை, நொச்சி, கருசலாங்கண்ணி, திரிபலை இவைகளின் ரஸத்தால் 12 தடவை பாவனை செய்து மூன்று உளுந்தளவு தேன் நெய் கலந்து சாப்பிட்டு மேல் கொட்டக்கரந்தை சூர்ணம் கால்பலம் தேன் நெய் சேர்த்துச் சாப்பிட்டு அனுபானமாக பசும்பால் ஒரு பலம் சாப்பிடவும். 24 குந்துமணிவரை கிரமமாக அதிகமாக்கி 16 மாதங்கள் வரை சாப்பிடவும். திவ்ய சரீரம் ஏற்படுகின்றன.

8. வஜ்ரரஸாயனம் : வைரபஸ்மத்தை நெல்லிக்காய்ச் சாற்றால் 7 தடவை பாவனை செய்து நெல்எடை தேன் நெய் சேர்த்துச் சாப்பிட்டு மேல் நெல்லிக்காய்ச் சாறு ஒரு பலம் சாப்பிடவும். 3 குந்துமணிவரைக் கிரமமாக அளவை அதிகரித்து 16 மாதங்கள் சாப்பிடவும். தேஹம் வைரம் போல் திடமேறி கூரிய பார்வை பெற்று மிகுந்த பலமேற்படுகின்றது.

9. வஜ்ராப்பிரகரஸாயனம் : வைரபஸ்மம் 1 பங்கு, அப்பிரகபஸ்மம் 4 பங்கு சேர்த்து நெல்லிக்காய்ச் சாற்றாலும், தண்ணீர்விட்டான் கிழங்கின் சாற்றாலும் 21 தடவை பாவனை செய்து யவஅளவு தேன் நெய் சேர்த்து சாப்பிட்டு மேல் நெல்லிக்காய் தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு ஒருபல அளவு சாப்பிடவும். 4 குந்துமணி வரை கிரமமாக அளவை அதிகப்படுத்திக் கொண்டு 16 மாதங்கள் ஸேவிக்க, வாக்குத் திறமையும் கூரிய கண்பார்வையும் பெறலாம். (1 குந்துமணி - 4 யவங்கள்.)

10. காந்தவஜ்ரரஸாயனம் : வைரபஸ்மம் 1 பங்கு, காந்தபஸ்மம் 4 பங்கு சேர்த்து அமுக்கறாக்கிழங்கு திரிபலைக் கஷாயத்தால் 21 தடவை பாவனை செய்து ஒரு யவ அளவு தேன்

நெய் சேர்த்துக் காலையில் சாப்பிட்டு மேல் அமுக்கறாக்கிழங்கு திரிபலை சூர்ணம் கால்பல அளவு பசும்பாலுடன் சாப்பிடவும். 4 குந்துமணிவரை கிரமமாக அளவை அதிகரித்து 16 மாதங்கள் சாப்பிட காந்தி பலம் தேஜஸ் வாக்ஸித்தி பெருகி ஸித்தனாகிறான்.

11. வஜ்ரகாந்தாப்பிரகரஸாயனம்: வைரபஸ்மம் 1 பங்கு, காந்த பஸ்மம் 4 பங்கு, அப்பிரகபஸ்மம் 4 பங்கு சேர்த்து திரிபலை கரிசலாங்கண்ணி முள்ளிச்சாற்றில் 21 தடவை பாவனை செய்து யவஅளவு தேன் நெய் சேர்த்து சாப்பிட்டு மேல் திரிபலை முதலியவைகளின் சூர்ணம் கால் பலம் நெய் தேன் சேர்த்துப் பாலுடன் சாப்பிடவும். 4 குந்துமணி வரைக் கிரமமாக அதிகப்படுத்தி 16 மாதங்கள் சாப்பிட நல்ல ரஸாயனமாகும். ஸித்தனாகிஸித்தர்களுடன் கூடவே ஸஞ்சரிக்கலாம்.

12. ஸ்வர்ணவஜ்ரரஸாயனம்: வைரபஸ்மம் 1 பங்கு, தங்கபஸ்மம் 2 பங்கு, மூக்கரட்டைச் சாற்றில் 21 தடவை பாவனை செய்து 1½யவ அளவு தேன் நெய்யுடன் சாப்பிட்டு மூக்கரட்டைத்தூள் கால் பலமும் பாலும் சாப்பிடவும். இரண்டு குந்துமணி வரை அளவை அதிகரித்து 16 மாதங்கள் சாப்பிட நரை திரை நீங்கும்.

13. ஸ்வரணாப்பிரக வஜ்ர ரஸாயணம்: வைரபஸ்மம் 1 பங்கு, தங்கபஸ்மம் 2 பங்கு, அப்பிரகபஸ்மம் 4 பங்கு, நிலப்பனங்கிழங்குச் சாற்றால் 21 தடவை பாவனை செய்து யவஅளவு காலையில் தேன் நெய் சேர்த்து நிலப்பனைங் கிழங்கு சூர்ணமும் பாலும் சாப்பிடவும். 4 குந்துமணிவரை அளவை அதிகப்படுத்தி 16 மாதங்கள் சாப்பிட மூப்பகன்று சரீரம் திடம் பெறும்.

14. ஸ்வர்ணவஜ்ரகாந்தரஸாயனம்: வைரபஸ்மம் 1 பங்கு, தங்கபஸ்மம் 2 பங்கு, காந்த பஸ்மம் 4 பங்கு, நெல்லிக்காய் கருசலாங்கண்ணிச் சாற்றால் 21 தடவை பாவனைகள் செய்து யவஅளவு தேன் நெய்யுடன் சாப்பிடவும். மேற்சொன்ன திரவியங்களின் சூர்ணத்துடன்

பாலும் சேர்த்து அனுபானமாகக் கொடுக்கவும். வேளைக்கு 4 குந்துமணி எடை வரை அதிகப்படுத்தி 16 மாதங்கள் சாப்பிட நல்ல ரஸாயனமாகின்றது.

15. ஸ்வர்ணகாந்தவஜ்ராப்பிரகரஸாயனம் : ஸ்வர்ணம், காந்தம், வைரம், அப்பிரகம் இவைகளின் பஸ்மத்தை ஸமனெடை சேர்த்து ஜ்யோதிஷ்மதியின் சாற்றில் 21 தடவை பாவனை செய்து யவஅளவு தேன் நெய் சேர்த்துச் சாப்பிட்டு மேல் அமுக்கிறாக்கிழங்கின் சூர்ணத்தைப் பசும் பால் சேர்த்துச் சாப்பிடவும். 4 குந்துமணி எடை வரை அளவை அதிகப்படுத்தி 16 மாதங்கள் சாப்பிட உத்தமமான ரஸாயனமாகின்றது.

இந்தப் பதினைந்து ரஸாயனங்களை ஒன்றன் பின் ஒன்றாக ஸேவித்த் பிறகே மேலே கூறப்படும் 16 ஆரோடரஸங்களைக் கிரமாக ஸேவிக்கத் தகுதி ஏற்படுகின்றது.

ஆரோட ரஸங்கள்

1. ரஸபஸ்மம் : தான்யாப்பிரகத்தையும் ரஸத்தையும் தப்தகல்வத்திலிட்டு, திரிபலை சரக்கொன்றை மஞ்சள் கற்றாழை கரு ஊமத்தை மூக்கரட்டை சித்ரமூலம் எலுமிச்சம்பழம் இவைகளின் ரஸத்தால் 3 நாட்கள் அரைத்துப் பாதனம் செய்யவும். மறுபடியும் மர்த்தனமும் (அரைப்பும்) பாதனமும் மாற்றி மாற்றி 3 தடவை செய்ய ரஸம் சுத்தமாகின்றது. அதை நியாமகதிரவ்வயங்களாலரைத்து நியாமகயந்திரத்திலிட்டு, மூடி பூதரயந்திரத்தில் புடம் போடவும். இவ்விதம் மர்த்தனமும் புடமும் 7 தடவை மாற்றி மாற்றிச் செய்யவும். ரஸம் பஸ்மமாகி ரஸாயனத்திலும் மருந்திலும் உபயோகிக்கத் தகுந்ததாகின்றது.

அந்த ரஸபஸ்மத்தை உளுந்தளவு முதல் ஆரம்பித்து 8 குந்துமணி எடை வரைக் கிரமமாக அதிகப்படுத்தி 16 மாதங்கள் காலையில் நெய் தேன் திரிபலைச் சூர்ணத்துடன் சாப்பிட்டு மேல் பசும்பால் சாப்பிடவும்.

2. அப்பிரக ஜீர்ண ரஸபஸ்மம் : முகம் உண்டாக்கிய ரஸம் 64 நிஷ்கம் எடுத்து அப்பிரகஸத்வம் 1 நிஷ்கம் சேர்த்து தப்தகல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச் சாற்றால் ஒருநாள் அரைத்துக் கச்சபயந்திரத்தில் பிடம் சேர்த்துப் பாகம் செய்ய ஜாரணமாகின்றது. மறுபடியும் அதில் அப்பிரகஸத்வம் 2 நிஷ்கம் சேர்த்து முன் போலவே அரைத்து ஜாரணம் செய்யவும். இவ்விதம் மூன்றாவது ஜாரணத்தில் 4 நிஷ்கமும், நான்காவது ஜாரணத்தில் 8 நிஷ்கமும், ஐந்தாவது ஜாரணத்தில் 16 நிஷ்கமும், ஆறாவதில் 32 நிஷ்கமும், ஏழாவதில் ஸமஎடையும் ஜாரணம் செய்து முன்கூறிய முறைப்படி பஸ்மம் செய்யவும். அந்த ரஸபஸ்மம் 1 பலம், அப்பிரகஸத்வ பஸ்மம் 4 பலம், கருசலாங்கண்ணிச்சாற்றில் அரைத்து மூஷையிலிட்டு மூடி குக்குடபுடம் போட்டெடுத்து திரிபலைக் கஷாயத்தாலும் கருசலாங்கண்ணிச் சாற்றாலும் 21 தடவை பாவனை செய்யவும்.

வேளைக்கு ஒன்று முதல் 16 குந்துமணி வரைக் கிரமமாக அளவை அதிகப்படுத்தி 16 மாதங்கள் காலையில் தேன் நெய் சேர்த்து திரிபலைக் கஷாயம் அநுபானத்துடன் சாப்பிடவும்

3. காந்தஜீர்ண ரஸபஸ்மம்: முன்கூறிய அப்பிரகஜாரண முறைப்படி ரஸத்தில் காந்தத்தையும் ஜாரணம் செய்து ரஸத்தை பஸ்மம் செய்யவும். அந்த ரஸபஸ்மம் ஒரு பங்கு காந்தஸத்வபஸ்மம் 4 பங்கு திரிபலைகஷாயத்தாலரைத்து மூஷையிலிட்டுக் குக்குடபுடம் போட்டெடுத்து திரிபலைக் கஷாயத்தில் 21 தடவை பாவனை செய்யவும்.

வேளைக்கு 1-16 குந்துமணி அளவு கிரமமாக அளவை அதிகப்படுத்தி 16 மாதங்கள் காலையில் தேன் நெய் சேர்த்துப் பசும்பால் அநுபானத்துடன் சாப்பிடவும்.

4. காந்தாப்பிரகஜீர்ண ரஸபஸ்மம்: காந்தஸத்வத்தை அப்பிரகஸத்வத்தையும் ஜாரணம் செய்த பிறகு பஸ்மமாக்கிய ரஸபஸ்மம் 1 பங்கு, அப்பிரகஸத்வபஸ்மம் 2 பங்கு,

காந்தஸத்வபஸ்மம் 2 பங்கு சேர்த்து கருசலாங்கண்ணி நெல்லிக்காய்ச் சாற்றில் அரைத்து லகுபுடமிட்டு மறுபடியும் மேற் சொன்ன சாற்றிலேயே அரைத்துக் காயவைத்துக் கொள்ளவும்.

முன்போல வேளைக்கு 1-16 குந்துமணியளவு திரிபலைச் சூர்ணம் நெய் தேன் சேர்த்துச் சாப்பிட்டு மேல் பசும்பால் சாப்பிடவும்.

5. ஸ்வர்ணஜீர்ண ரஸபஸ்மம்: ஸவர்ண ஜாரணம் செய்யப்பட்டு பஸ்மம் செய்த ரஸபஸ்மம் 1 பலம், தங்கபஸ்மம் 2 பலம், கருசலாங்கண்ணி நெல்லிக்காய்ச் சாற்றால் 3 பாவனைகள் செய்து குக்குடபுடம் போட்டெடுத்து மேற்கூறிய சாற்றால் 21 பாவனைகள் செய்யவும்.

முன்போல 1-16 உளுந்து வரை தேன் நெய் கலந்து பசும்பால் அனுபானத்துடன் சாப்பிட 16 மாதங்களில் ஸித்தி பெறலாம்.

6. ஸ்வர்ணாப்பிரகஜீர்ண ரஸபஸ்மம்: ரஸத்தில் அப்பிரகஸத்வம், ஸவர்ணபஸ்மம் இவைகளை முறையே முன்கூறிய முறைப்படி ஜாரணம் செய்து பஸ்மமாக்கியபின் அந்த பஸ்மம் ஒருபலம், ஸ்வர்ணபஸ்மம் 2 பலம், அப்பிரகஸத்வபஸ்மம் 4 பலம் சேர்த்து அவுரி இலைச் சாற்றாலும் திரிபலை கஷாயத்தாலுமரைத்து சராவத்திலிட்டு லகுபுடம் போடவும். பிறகு மேற்சொன்ன திரவங்களில் 21 தடவை பாவனை செய்யவும்.

7. ஸ்வர்ணகாந்தஜீர்ண ரஸபஸ்மம்: ஸ்வர்ணம் காந்தம் இரண்டும் ஜாரணம் செய்யப்பட்ட பின்னர் பஸ்மமாக்கிய ரஸபஸ்மம் 1 பங்கு, தங்க பஸ்மம் 2 பங்கு, காந்தஸத்வபஸ்மம் 4 பங்கு சேர்த்து தண்ணீர் விட்டான் கிழங்கு சாற்றாலும் திரிபலாகஷாயத்தாலும் அரைத்து ஸம்புடத்திலிட்டு குக்குடபுடம் போடவும். அப்பஸ்மத்தை மேற் சொன்ன திரவத்தில் 21 தடவை பாவனை செய்யவும்.

முன்போல் 1-16 குந்துமணியளவு தேன் நெய் கலந்து தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு அனுபானத்துடன் 16 மாதங்கள் சாப்பிடவும்.

8. ஸ்வர்ணகாந்தாப்பிரகஜீர்ண ரஸபஸ்மம்: ரஸத்தில் அப்பிரகம், காந்தம், தங்கம் இவைகளை கிரமாக ஜாரணம் செய்து பஸ்மமாக்கி அந்த ரஸத்திற்கு தங்கபஸ்மம், அப்பிரகபஸ்மம், காந்தபஸ்மம் இவைகளை வகைக்கு 2 பங்கு சேர்த்து திரிபலைகஷாயத்திலும், கொட்டக்கரந்தை ஸம்புடத்திலிட்டு குக்குடபுடமிட்டு முன் சொன்ன திரவங்களால் 21 தடவை பாவனை செய்து நிழலில் உலர்த்திக் கொள்ளவும்.

1-16 குந்துமணி எடை 16 மாதங்கள் வரை சர்க்கரை நெய் சேர்த்து சாப்பிட்டு மேல் பசும்பால் சாப்பிடவும்.

9. வஜ்ரஜீர்ண ரஸபஸ்மம் : ரஸத்தில் முன் போல் வைரத்தை ஜாரணம் செய்து பஸ்மமாக்கி அத்துடன் இரண்டு பங்கு வைரபஸ்மம் சேர்த்து, கற்றாழைச்சாறு கருசலாங்கண்ணிச்சாறு திரிபலைக் கஷாயம் இவைகளால் ஒருநாளரைத்து ஸம்புடத்திலிட்டு குக்குடபுடமிடவும். பின் முன் கூறிய திரவங்களால் 21 தடவை பாவனை செய்து எடுக்கவும்.

10. வஜ்ராப்பிரகஜீர்ண ரஸபஸ்மம் : அப்பிரகம், வைரம் இவைகளை ஜாரணம் செய்த ரஸத்தை பஸ்மமாக்கி அதில் அப்பிரகபஸ்மம் 4 பங்கும், வைரபஸ்மம் 2 பங்கும் சேர்த்துத் திரிபலைக் கஷாயத்திலும் கருசாலங்கண்ணிச் சாற்றிலும் ஒருநாளரைத்து குக்குட புடமிடவும். பின் அத்திரவங்களாலேயே 21 தடவை பாவனை செய்து கொள்ளவும். ½ - 8 குந்துமணி அளவு 16 மாதங்கள் வரை நெய் தேனுடன் கலந்து சாப்பிட்டு மேல் பசும்பால் சாப்பிட ஸித்தியாகும்.

11. காந்தவஜ்ரஜீர்ண ரஸபஸமம்: காந்தம் வைரம் இவைகளை ஜாரணம் செய்து ரஸத்தை பஸ்மமாக்கி, அதில் வைரபஸ்மம் 2 பங்கும், காந்தபஸ்மம் 4 பங்கும் சேர்த்து புரசம்பூவின் சாற்றால் ஒருநாளரைத்து குக்குடபுடமிட்டு மறுபடியும் புரசம்பூவின் சாற்றால் 21 தடவை பாவனை செய்து கொள்ளவும்.

12. காந்தவஜ்ராப்பிரகஜீர்ண ரஸபஸ்மம் : ரஸத்தில் அப்பிரகம், காந்தம், வைரம் இவைகளைக் கிரமமாக ஜாரணம் செய்து பஸ்மம் செய்தபின் அத்துடன் வைரபஸ்மம் 1 பங்கும், காந்தபஸ்மமும், அப்பிரகபஸ்மமும் வகைக்கு 4 பங்கும் சேர்த்து கருசலாங்கண்ணிச்சாற்றாலும் திரிபலைக் கஷாயத்தாலும் ஒரு நாள் அரைத்து குக்குட புடமிடவும் அதை மறுபடியும் முன் கூறப்பட்டுள்ள திரவத்தாலேயே 21 தடவை பாவனை செய்துகொள்ளவும். ½-8 குந்துமணியளவு தேன் நெய் சேர்த்துப் பாலுடன் சாப்பிட 16 மாதங்களில் ஸித்தி ஏற்படும்.

13. ஸ்வர்ணவஜ்ரஜீர்ண ரஸபஸ்மம் : ரஸத்தில் தங்கமும் வைரமும் ஸமனெடை ஜாரணம் செய்து பஸ்மமாக்கிய பின், ஸமனெடை வைரபஸ்மமும் தங்கபஸ்மமும் சேர்த்துத் திரிபலைக் கஷாயத்தாரைத்து பூதரபுடம் போட்டு திரிபலைக் கஷாயத்தில் 21 பாவனை செய்து கொள்ளவும்.

½-8 குந்துமணி அளவு எள்ளுப்பொடி, நெய், தேன் சேர்த்துப் பாலுடன் 16 மாதங்கள் வரை சாப்பிட ஸித்தியாகும்.

14. ஸ்வர்ணவஜ்ராப்பிரகஜீர்ண ரஸபஸ்மம் : ரஸத்தில் தங்கம், வைரம், அப்பிரகம் இவைகளை ஜாரணம் செய்து பஸ்மம் செய்த பின்னர் அத்துடன் வைரபஸ்மம் 1 பங்கு, தங்கபஸ்மம் 2 பங்கு, அப்பிரக பஸ்மம் 4 பங்கு சேர்த்து

புரசம் விதை எண்ணெய்யால் 3 நாள் அரைத்து, பூதரபுடம் போட்டு, எடுத்த பின்னர் புரசுகஷாயத்தால் 21 நாள் பாவனை செய்யவும்.

½-8 குந்துமணி, புரசம் விதை எண்ணெய் கால்பல அளவு அனுபானத்துடன் 16 மாதங்கள் சாப்பிட ஸித்தியாகும்.

15. ஸவர்ணகாந்தவஜ்ரஜீர்ண ரஸபஸ்மம் : வைரம், காந்தம், தங்கம் இவைகளை ரஸத்தில் ஜாரணம் செய்து பஸ்மமாக்கி அதில் வைரபஸ்மம் 1 பங்கு, தங்கபஸ்மம் 2 பங்கு, காந்தபஸ்மம் 4 பங்கு சேர்த்துத் திரிபலா கஷாயாத்தாலும் கருசலாங்கண்ணி சாற்றாலுமரைத்து பூதரபுடமிட்ட பின்னர் மேற்கூறிய திரவங்களால் 21 தடவை பாவனை செய்யவும்.

½-8 குந்துமணி அளவு, திரிபலைச் சூர்ணம் தேன் சேர்த்து பசும்பாலுடன் 16 மாதங்கள் சாப்பிட ஸித்தியாகும்.

16. ஸ்வர்ணகாந்தவஜ்ராப்பிரகஜீர்ண ரஸபஸ்மம்: ரஸத்தில் அப்பிரகம், காந்தம், தங்கம், வைரம் இவைகளை ஜாரணம் செய்து பஸ்மமாக்கி அதில் ரஸத்திற்கு ஸமனெடை வைரபஸ்மமும், தங்கபஸ்மமும் 2 பங்கும், அப்பிரகபஸ்மமும், காந்தபஸ்மமும் வகைக்கு 4 பங்கும் சேர்த்து தேவதாரு எண்ணெய்யாலரைத்து பூதரபுடமிட்டு எடுக்கவும்.

1-16 குந்துமணி தேவதாருதைலம் கால்பல அளவு சேர்த்து 16 மாதங்கள் சாப்பிட ஸித்தியாகும்.

ஆக அப்பிரகம், காந்தம், தங்கம், வைரம், ரஸம் இவ்வைந்து திவ்ய ரஸாயனப் பொருள்களின் சேர்க்கையால் ஏற்படும். இதுகாறும் கூறப்பட்டுள்ள 31 யோகங்களை ஒன்றன் பின் ஒன்றாக ஸேவிக்க உயர்ந்த ரஸாயன ஸித்தி ஏற்படுகின்றது.

பத்தாவது உல்லாஸம்

குடிகைகள் - (கட்டுமணிகள்)

ரஸத்தில் அப்பிரகம், காந்தம், வைரம், தங்கம் முதலியவைகளை ஜாரணம் செய்து விசேஷ முறைகளால் கட்டி மணியாக்கி தங்கக்கம்பிகளால் சுற்றி வாயிலடக்கிக் கொள் அல்லது கழுத்து, கை, தலை, காது இவைகளில் தரித்துக்கொள்ளச் சிறந்த ரஸாயனமாகின்றது. 15 மணிகளின் செய்முறைகளும் உபயோகமும் இவ்வுல்லாஸத்தில் கூறப்படுகின்றது.

ஸித்தசூர்ணம் : ஜாரணம் செய்யும் பொழுது பிடமாக உபயோகப்படுத்த இது உபயோகமாகின்றது. கந்தகம், தாளகம், மனோசிலை, துத்தம், பால்துத்தம், லிங்கம், நிமிளை, மண்ணுண்ணிப்பாம்பு, ஸவர்ணமாக்ஷிகம், அன்னபேதி, ராஜாவர்தம், அப்பிரகம், பூங்காவி இவைகளை இடித்துத் தயார் செய்ய வேண்டும். இந்த ஸித்தசூர்ணத்தை துவந்துவமேலனத்திலும் ஜாரணத்திலும் உபயோகப்படுத்த வேண்டும்.

1. மிருதஸஞ்சீவனீ குடிகை : துவந்துவமேலனப்பூச்சு பூசப்பட்ட மூஷையில் கிருஷ்ணாப்பிரக ஸத்வத்தை அதற்கு ஸமனெடை சேர்த்து தப்த கல்வத்திலிட்டு அம்லவர்க்கத்தால் ஒருநாள் அரைத்து அந்த ரஸபிஷ்டியை எலுமிச்சம்பழத்தினுள் செலுத்தி அம்லவர்கத்தில் தோலாயந்திரத்தில் 7 நாள் எரிக்கவும். அந்த ரஸத்துடன் கந்தகம் சேர்த்து ஸித்தசூர்ணம் மேற்பூசி பூதரயந்திரத்தில் லகுபுடம் போடவும். தோலாஸ்வேதம், ஸித்தசூர்ணம்பூச்சு, பூதரபுடம் இவைகளை ரஸம் கெட்டியாகி மணியாக மாறும் வரை செய்து கொண்டே யிருக்கவும்.

இதை வாயிலடக்கிக்கொள்ள அல்லது கழுத்து முதலிய இடங்களில் ஆபரணமாக தரித்துக்கொள்ள எல்லா விஷங்களும் முறிந்து நரைதிரையகலும். எல்லா ரோகங்களுமகன்று நூறுவயது வரை வாழலாம். சுத்த கந்தகம் கால்பலம் பசும்பால் (ஒருபலம்) அனுபானத்துடன் இந்த குடிகைக்கு கிராமணமாக உபயோகிக்கவும்.

2. திவ்யகுடிகை : காந்தம், தாம்ரம், வெள்ளி இவை ஸமனெடை துவந்துவலேபம் செய்த மூஷையிலிட்டு உருக்கி ஸித்தசூர்ணம் காந்தத்திற்கு 10 மடங்கு சேர்த்து காந்தம் மீதமாகும்வரை ஊதி எடுக்கவும். அந்த காந்தபீஜத்தை ரஸத்தில் மிருதஸஞ்சீவினியில் அப்பிரகபீஜம் போல் கிரமமாக ஜாரணம் செய்து கொள்ளவும். அந்த ரஸத்திற்கு ஸமனெடை காந்தபூஜம் சேர்த்து மிருதஸஞ்சீவனியைப் போல் மணியாக்கிக் கொள்ளவும். கீராமணமும் உபயோகமும் முன்போலவே, தாதுக்களை திடப்படுத்தி ஆயிரம் வயது அளிக்கக் கூடியது.

3. காமேசுவரீ குடிகை: ரஸத்தில் அப்பிரக பீஜத்தையும் காந்தபீஜத்தையும் முன்போல ஜாரணம் செய்து அந்த ரஸத்துடன் அவ்விரண்டு பீஜமும் ஸமனெடை சேர்த்து முன் கூறிய முறைப்படி மணியாக்கிக் கொள்ளவும்.

இம்மணியை 12 வருஷங்கள் தரிக்க மூப்பு பிணி அகன்று பெரும் பலம் பொருந்தியவனாக நீண்ட ஆயுள் வரைவாழலாம்.

4. ஹேமஸுந்தரீ குடிகை: தங்கம், வெள்ளி, தாம்ரம், காந்தஸத்வம், அப்பிரகஸத்வம் இவைகளை மூஷையிலிட்டு உருக்கி தங்கத்திற்கு 10 மடங்கு ஸித்தசூர்ணம் சேர்த்து தங்கம் மீதமாகம் வரை ஊதி எடுத்து அந்த ஸவர்ணபீஜத்தை முன்போல் ஸமனெடைக் கிரமமாக ரஸத்தில் ஜாரணம் செய்து

அந்த ரஸத்தடன் ஸமனெடை ஸவர்ண பீஜம் சேர்த்துத் தப்பதகல்வத்திலிட்டு அம்லவர்கத்தாலரைக்க மூன்று நாட்களில் பிஷ்டியாகும். அதை முன்போல மணியாக்கிக் கொள்ளவும். மூப்பு, பிணி,விஷம் முதலிய பீடைகளகலும். யானையின் பலமும் நீண்ட ஆயுளும் ஏற்படும்.

5. மதனஸுந்தரீ குடிகை: ரஸத்தில் ஸ்வர்ண பீஜத்தையும் அப்பிரகபீஜத்தையும் ஜாரணம் செய்து அந்தரஸத்துடன் அவ்விரு பீஜங்களையும் சேர்த்து மணியாக்கவும். எல்லா ஸித்திகளையுமளித்து மிருகங்கள், ஸ்திரீகள், அரசர்கள் இவைகளை வசியம் செய்யும்.

6. கேசரீகுடிகை : ஸ்வர்ண பீஜத்தையும் காந்த பீஜத்தையும் முன்போல ஜாரணம் செய்து ரஸத்தில் அப்பீஜங்களைச் சேர்த்து மணி செய்யவும். இம்மணியினால் பிலங்கள் புதையல்கள் கண்ணுக்குப் புலப்படும். சிறந்த ஸித்திகளும் ஏற்படும்.

7. வஜ்ரேசுவரீ குடிகை: ஸவர்ண - காந்த - அப்பிரக பீஜங்களை ஜாரணம் செய்து ரஸத்தில் அப்பீஜங்களைச் சேர்த்து மணி செய்யவும். ஆகாசக்தியும் நீண்ட ஆயுளு மளிக்கவல்லது.

8. மஹாவஜ்ரேசுவரீ குடிகை : சுத்தத் தங்கம், வைரபஸ்மம், அயத்தூள், அப்பிரக ஸத்வம் வகைக்கு சமனெடை சேர்த்து எல்லாவற்றுக்கும் சமம் காரீயம் சேர்த்து மூஷையிலிட்டு மூடி எல்லாம் ஒன்றாகும் வரை ஊதித்திறந்து வெள்ளி மாக்ஷிகத்தைச் சிறிது சிறிதாகச் சேர்த்து ஊத, தங்கமும் வைரமும் மட்டும் மீதமாகும். அதில் மறுபடியும் அப்பிரகஸத்வம், அயத்தூள், காரீயம் இவைகளை முன்போல சேர்த்து வெள்ளிமாக்ஷிகம் போட்டு ஊதி எடுக்கவும். இவ்விதம் 6 தடவை செய்து எடுக்கச் சிறந்த வஜ்ர

பீஜமாகின்றது. இதை ரஸத்தில் முன்போல கிரமமாக ஜாரணம் செய்து மறுபடியும் வஜ்ரபீஜம் சேர்த்து முன் முறைப்படி மணியாக்கவும். எல்லா உலகங்களிலும் ஸஞ்சரிக்கும் சக்தியும், இளமையும் ஏற்படும்.

9. வஜ்ரகேசரீ குடிகை: வைரபீஜத்தையும் அப்பிரக பீஜத்தையும் ஜாரணம் செய்து ரஸத்தில் அவ்விரு பீஜங்களையும் மறுபடி சேர்த்து மணியாக்கிக் கொள்ளவும்.

10. காலவித்வம்ஸினீ குடிகை: வைர - காந்த பீஜங்களை ஜாரணம் செய்து மறுபடியும் அவ்விரு பீஜங்களைச் சேர்த்து மணி தயாரிக்கப்பட வேண்டும்.

11. சுகனேசுவரீ குடிகை: வைர-காந்த- அப்பிரக பீஜங்களால் முன்கூறிய முறைப்படி இம்மணியைத் தயாரிக்க வேண்டும்.

12. வஜ்ரகண்டேரிசுவரீ குடிகை : வைர-ஸ்வர்ண பீஜங்களால் இம்மணி முன்முறைப்படி தயாரிக்கப் பெறுகின்றது.

13. வஜ்ரபைரவீகுடிகை : வைர-ஸ்வர்ண அப்பிரக பீஜங்களால் இம்மணி தயாரிக்கப் படுகின்றது.

14. திரிபுரபைரவி குடிகை: வைர-ஸ்வர்ண-காந்த பீஜங்களால் இது தயாரிக்கப்படுகின்றது.

15. மஹாபைரவி குடிகை: காந்த-வைர-அப்பிரக ஸ்வர்ணபீஜங்களால் தயாரிக்கப்படுகிறது.

க்ராமணங்கள் :- இக்குடிகைகளுக்கு மிருதஸஞ்சீவனீ குடிகையில் கூறப்படும் க்ராமணம் செய்யப்படவேண்டும். மற்றம் திரிபலை, நிலப்பனைக்கிழங்கு, கொட்டக் கரந்தை,

கருசலாங்கண்ணி, கார்போகரிசி, அவுரி, கற்றாழை, மணத் தக்காளி, அமுக்கறாக்கிழங்கு, தண்ணீர்விட்டான் கிழங்கு, வேலிப்பருத்தி, தேவதாளிப்பீர்க்கு, ஆமணக்கு, மூக்கரட்டை, நொச்சி, நெய்சட்டிப்பூண்டு, அழு குண்ணிப்பாலை, மெருகன்கிழங்கு, பேய்மருட்டி, சேங்கொட்டை, காக்கைத் துண்டி, சீந்தில், புரசு, காரிலவு, நெல்லிக்காய், பசும்பால், புரசுவிதை எண்ணெய், நெய், தேன், சுத்தஜலம், பில்வப் பிஷின் எண்ணெய், ஜ்யோதிஷ்மதிஎண்ணெய், இவைகளும் கிராமணத்திற்கு கந்தவை.

குடிகைகள் கிரமமாக பலம் அதிகமுள்ளவை. 12 வருஷங்கள் வாயிலடக்கிக் கொள்ள பல ஸித்திகள் ஏற்படுகின்றன. தேவத்தன்மை அடைந்து கடவுளை அடைய சிறந்த ஸாதனங்களாகும்.

பதினோராவது உல்லாஸம்

பூதகாலாந்தகரஸம்.

பஞ்சபூதங்களைக் கொண்டும், ஜீவனைக்கொண்டும் ஐந்து குடிகைகள் தயார் செய்யப்பட வேண்டும். ருதுகாலத்தில் ஸம்போகம் செய்த ஸ்திரீயின் யோனியிலுள்ள சோணிதம் ஆகாசம் ஸத்வமென்றும், அவளுக்குப் பிறந்த சிசுவின் மலம் வாயுஸத்வமென்றும், அவளது மாதவிடாய் காலத்திலுள்ள ரஜஸ் தேஜஸ் தத்வமென்றும், அவளது பிள்ளையின் ரத்தம் ஜலதத்வமென்றும், சரீரம் ப்ருத்விதத்வமென்றும் ரஸஸேவை செய்பவனின் சுக்லம் ஜீவதத்வமென்றும் கருதப்படுகின்றது. இந்த தத்வங்கள் ஒவ்வொன்றையும் தனித்தனியே கோடிவேதியான ரஸத்துடன் சேர்த்தரைத்து உருண்டையாகச் செய்யவும்.

ஒரு மனிதனின் உயரமுள்ளதும் அகலமானதுமான தாம்ரக்கடாயில் கீழ் நல்ல அடுப்பைப் பொருத்தி கடாயில் பசுநெய்யையும் மஹாதைலத்தையும் ஸமனெடை சேர்த்து நிரப்பி எரித்து நுரை எழும்பி புகையடங்கியவுடன் தேவதைகளுக்குப் பூஜை செய்து பலியிட்டு அக்கடாயில் தனது சரீரத்தைப் போட்டு உருகியவுடன் கிரமமாக பிருதிவீ-ஜல-தேஜஸ்-வாயு-ஆகாச-ஜீவதத்வங்கள் சேர்ந்த உருண்டைகளைப் போட மனிதன் தேவஉருவுடன் வெளிவருகிறான். அவன் கந்தர்வவித்யாதர ஸ்திரீகளுடன் விமானமேறி இந்திரலோகம் முதலிய லோகங்களை யெல்லாம் சுற்றி எல்லா ஸித்திகளையும் பெற்று எல்லாவித போகங்களையும் பெற்று கல்பமுடிவில் பூதங்களுடன் சேர்ந்து லயமடைகின்றான்.

பன்னிரண்டாவது உல்லாஸம்.

ஸ்ரீசைலத்தில் ஸித்தி அடைதல்

கைலாஸம், மந்தரம், மேரு, விந்தியம், ஹிமாலயம், மஹேந்திரம் போன்ற சிறந்த மலைகளை விட ஸ்ரீசைலத்தில் ஸித்தி எளிதில் பெற முடியும். அங்குள்ள தீர்த்தங்கள், கல், புல், பூண்டு, பொய்கை, நதி, லிங்கம், செடி, கொடி, மரம், இலை, காய், புஷ்பம், வேர், கிழங்கு, மண், ஜலம் இவை ஒவ்வொன்றும் மாபெரும் ஸித்தி அளிக்கவல்லவையே. சிவனின் உருவமாகவே அப்பர்வதம் கருதப்படுகின்றது.

அங்கு மல்லிகார்ஜுனலிங்கத்தின் பக்கலில் கண்டாஸித்தேச்வரர் என்ற தெய்வமிருக்கின்றது. அக்கோவில் வாயிலில் ஒரு மணியும் தீர்த்த குண்டமுமுள்ளன. மிகவும் கவனமுள்ளவர்களும் சோம்பலில்லாதவர்களுமான மூவர் சேர்ந்து பட்டினியிருந்து அவ்விடத்தில் கண்டாஸித் தேசுவரரை இரவின் நான்காவது யாமம் வரை பூஜிக்க, அவர்

திருப்தி அடைந்து ஆகாயகமனத்தை அருள்வார். அந்த ஸ்தவத்தின் வடது பக்கத்தில் ஒரு முழம் ஆழம் தோண்ட கோரோசனை போன்ற மண் கிடைக்கும். அதைப் பாலுடன் சாப்பிட சாவு அணுகாது.

ஸ்ரீசைலேசனின் எதிரிலுள்ள யானை உருவமுள்ள சிலையிலிருந்து பெருகும் குக்குலுவை எடுத்துச் சுரைக்குடுக்கையில் வைத்து கந்தகத்துடன் கால் பல அளவு ஒருமாதம் சாப்பிட யௌவனம் அடைந்து அமரனாகலாம். உருகிய தாம்ரத்தில் அக்குக்குலுவைப் போட தங்கமாகும். வைகாசி பூர்ணிமையன்று சந்திரவாபியின் சதையிலமர்ந்து ஆடைகளைக் களைந்து மிருத்யுஞ்ஜயமந்திரத்தை ஜபித்துக் கொண்டே சந்திரன் அவ்வோடையில் பிரதிபலிக்கும் பொழுது அவ்விடமிருந்து அந்த ஜலத்தை பருக ஸித்தி ஏற்படும்.

ஸ்ரீசைலத்தின் கிழக்கு வாசலில் திரிபுராந்தக தேவரின் சமீபத்திலுள்ள புளியமரத்தின் அடியில் பைரவர் வீற்றிருக்கிறார். அங்கு ஒரு ஆள் ஆழம் பள்ளம் தோண்ட, நீலநிறமுள்ள ஜலகுண்டமிருக்கின்றது. அதில் அப்புளிய இலையைப் போட மீனாகும். அவைகளை புளியவிறகினால் சமைத்து தலை வால் முட்களை அகற்றி சாப்பிட உடன் மயக்கம் வரும். மயக்கம் தெளிந்தவுடன் பூமியிலுள்ள புதையல்களும் பிலங்களும் கண்ணில் புலப்படும். அங்குள்ள மணிபல்லி கிராமத்திலுள்ள சிவந்த மாங்கனி போன்ற கற்களை துணியில் சுற்ற துணி சிவக்கும். துணியுடன் அக்கற்களைப் பாலில் போட்டுக் காய்ச்சி சாப்பிட ஸித்தியாகும்.

அங்குள்ள கோகிலாபிலத்தில் நுழைந்து குயில் போன்ற கற்களை எடுக்கவும். அவைகளின் மேல் எள்ளைப் போட வெடிக்கும். அவைகளை உரைத்துப் பாலில் போட பால்

கறுப்பாகும். அதை ஒரு மாதம் சாப்பிட நீண்ட ஆயுளும் ஆரோக்கியமும் ஸித்தியாகும். திரிபுராந்தகதேவரின் ஆலயமிருந்து கிழக்கே காதவழி சென்றால் ஸ்வர்க்கபுரி தேவரின் ஆலயமிருக்கின்றது. அங்கு ஒரு முழம் பள்ளம் தோண்ட பாம்புப்படம் போன்ற ஸபர்சக்கல்கள் கிடைக்கும். மேற்கே ஒன்றரை காததூரம் செல்ல திவ்ய பிலமொன்றைக் காணலாம். அதற்குள்ளிருக்கும் பேரீச்சை பழத்தைச் சாப்பிட ஸித்தி ஏற்படும்.

ஸ்ரீசைலத்தின் தெற்குவாசலிலுள்ள வஜ்ரேசுவரர் ஸ~ரேசுவரர், ராமேசுவரர் இவர்களின் பக்கத்தில் பூமியைத் தோண்ட ருத்ராக்ஷம்போன்றும், வில்வப் பழம்போன்றும் ஸபர்சக் கற்கள் கிடைக்கும். ஜ்யோதிஸ்ஸித்தமென்ற ஆலமரத்தின் பக்கத்தில் ஆவர்த்தகமென்ற குன்று காணப்படுகின்றது. அங்கு பூமியைத் தோண்ட பனங்காய்கள் போன்ற கற்கள் கிடைக்கும். அவைகளைக் காய்ச்சத் தங்கமாகும். அதுபோலவே குண்டலேசுவரரின் ஸந்நிதியில் கிடைக்கும் கற்களும் ஸபர்சவேதிகள். புருஷேசுவரரின் சமீபத்திலுள்ள குந்துமணி, புங்கை மரங்களும், ஹஸ்திசிலையும், நூறு முழு அகலமுள்ள கற்குடையும் ஸித்தி அளிக்க வல்லவை. காந்தம், அப்பிரகஸத்வம், தங்கம், ரஸம் இவைகளை முறையே 1-2-3-4-5 பங்கு சேர்த்து அம்லவர்க்கத்திலரைத்து வில்லை தட்டி காளிமந்திரத்தை ஜபித்து அக்கடையின் கீழ் மூங்கிற்குழாயில் வைக்கவும். அதை வாயிலடக்கிக் கொள்ள ஆகாயகமனம் சித்திக்கும். மூங்கில் நுனியில் மனோசிலையையும் தாளகத்தையும் துணியால் சுற்றிக் கட்டி குடையின் கீழ் தங்கி கண்ணிற்கு மை போட்டுக் கொள்ள பூமியிலுள்ள புதையல் தென்படும். மூங்கில் நுனியில் கத்தியைக் கட்டி குடையின் அடியில் வைத்து காளிமந்திரத்தை ஜபித்து அக்கத்தியைத் தரிக்க தைர்யத்துடன் உலகை ஆளலாம். அவ்விதம் அக்குடையின் கீழ் நின்று கோரோசனை அஞ்சனமும், பாதுகைகளை

தரிப்பதும், சிகப்பு துணியால் போர்த்துக் கொள்வதும், ஸாதகனை பிறர் கண்ணினின்றும் மறைத்து நினைத்தபடி ஸஞ்சரிக்க சக்தியளிக்கின்றன.

ஸ்ரீசைலத்தில் மேற்கு வாயிலில் உள்ள பிரம்மேசுவரர், துர்க்கை, பிரம்மேசுவர ஆலய வாசலிலுள்ள ஒன்பதாவது படி, துங்கபத்திரையின் ஒன்பதாவது படி இந்த நான்கும் ஸபர்சவேதிகள். இதன் கிழக்கிலுள்ள புளியங்காட்டில் சண்டிகை ஆலயத்திலிருக்கும் புளியமரத்திலிருந்து இலையை ஒற்றைக்காலில் நின்று கொண்டு பறித்துத் துணியில் சுற்றிக் கொண்டு ஸ்னானம் செய்து பின் அந்தப்புளிய இலையைப் பார்க்க மீனாகும். அதை பக்வம் செய்து உபயோகிக்க ஸித்தியாகும்.

பீமபாதுக கிராமத்தின் பூமியைத் தோண்ட கிடைக்கும் கற்கள் ஸ்பர்சவேதிகள். அலம்புர தேவதையான யோகீசுவரியின் எதிரேயுள்ள குகையில் தவளை போன்ற கற்கள் கிடைக்கும். அவைகளை பூனையின் மலத்துடன் கலந்து உருக்க வெள்ளியாகும். அக்கற்களை தேன் நெய்யுடன் சாப்பிட ஸித்தியாகும்.

ஸ்ரீசைலத்தின் வடக்கு வாயிலில் உள்ள மாம்பழங்களிலிருந்து வண்டுகளை அகற்றி பாலில் சமைத்து முடிந்தவரை 21 நாள் உண்ண வைரம் போன்ற தேஹமமையும். அப்பழத்துடன் ஆயிரம் பலம் ஈயத்தை உருக்க வெள்ளியாகும். வண்டு துளைத்த துளையில் வண்டை நீக்கிய பின் கால்பலம் கிருஷ்ணாப்பிரக ஸத்வத்தையும் ரஸத்தையும் போட்டு மண்சீலை செய்து காயவைத்து ஒரு யாமம் மாவிறகால் எரித்து அந்த ரஸத்தை வாயிலடக்கிக்கொள்ள ஆகாசக்தியும் திடசரீரமும் ஏற்படும். அங்குள்ள வெள்ளைமலையிலிருந்து மந்திரத்தை ஜபித்துக் கொண்டே வடக்கே பார்க்க திவ்யவிமானம் புலப்படும். அப்பொழுது

மஹாநதியைத் தாண்டி மேற்கே செல்ல வாழைத்தோட்டத்தை அடையலாம். அங்குள்ள ஓடையில் ஸ்னானம் செய்து பத்ரபீடத்திலமர்ந்து வித்யாவாகதீசுவர மந்திரம் ஜபம் செய்து சிவனை தோத்தரிக்க சிவன் இஷ்டத்தை வரமாக அளிப்பார். அங்குள்ள மோஹலீ என்ற யக்ஷிணீ, தனக்கு இஷ்டமானதை அளித்தவருக்கு ஸித்தி அளிப்பாள். வடக்கே மேலும் செல்ல புஷ்பத்தோட்டம் தனது மணத்தாலேயே பசியையும் தாகத்தையும் மறக்கச் செய்கின்றது. அங்குள்ள மாதுளம் பழங்களையும் கீழ்பாகத்திலுள்ள நெல்லிக்கனிகளையும் மேற்கிலுள்ள வில்வப்பழங்களையும் சாப்பிட நீண்ட ஆயுளை அடையலாம். அங்குள்ள நீலநிற லிங்கத்தின் துவாரத்தினிடையே ஏழு தலையுள்ள நாகம் வஸிக்கின்றது. அதன் உத்தரவுடன் மேற்கு துவாரத்திலுள்ள திவ்ய கன்னிகையிடம் செல்ல அவள் ஸரஸ்வதீ ப்ரஸாதமான மாலை அளிப்பாள். அங்குள்ள க்ஷேத்ரபாலரை வணங்க அவர் ஆகாசகதியை அளிக்கின்றார்.

வமனம் முதலியவைகளால் சரீரசுத்தி செய்து கொண்டபின் பத்மாவதீ பிலத்தில் நுழைந்து பத்மாவதியின் அனுக்கிரஹத்தால் ஸித்தி பெறலாம். அங்கு கடம்பமரத்தின் இலைகளை கடுகெண்ணை தடவி வாட்டி தாம்ர பாத்திரத்திலிட மீனாகும். அதை நெய் தேன் சேர்த்துச்சாப்பிட ஸித்தியாகும். வடக்கிலுள்ள புஷ்பகிரியின் மேலுள்ள கபோதேசரை மூன்று தடவை வலம் வந்து மேல் செல்ல ஆகாயகதி ஏற்படும். சேதிகீ துவாரத்திலுள்ள எலி போன்ற கற்களை மோரில் அரைத்துக் கலக்கி சாப்பிட ஸித்தியாகும். அவை ஸபர்சவேதியாகும். கபோதேசரின் தெற்கிலுள்ள இரு தேவதைகளின் நடுவில் ஆழமாகத் தோண்ட கிடைக்கும் கோரோசனை போன்ற கற்களும் வாயுதிசையில் கிடைக்கும் புறாபோன்ற கற்களும் ஸ்பர்சவேதிகளே.

ஸ்ரீசைலத்தில் வடகிழக்கிலுள்ள மலைச்சரிவிலுள்ள திவ்ய குண்டத்திலுள்ள மண் பஞ்சகவ்யத்துடன் எரிக்கப்பட உருகி இரும்பாகும். அதை வாயிலடக்கிக் கொள்ள ஸித்தி ஏற்படும். அச்சதைலகிரியிலுள்ள பிலத்தில் ஒரு குண்டத்தில் கிடைக்கும் அரக்கு போன்ற ரஸம் கோடி வேதியாகும். அப்பிலத்தில் நடுவிலுள்ள கட்டடத்தின் முன் பயறு போன்ற ஸ்பர்சவேதிக் கற்களும், திரிகோண வடிவமுள்ள லக்ஷவேதி குளிகைகளும் கிடைக்கின்றன. தேவஹ்ரதத்திலுள்ள பயறு போன்ற கற்களும், ஆமை போன்ற லிங்கமும் ஸ்பர்சவேதிகளே. அங்குள்ள நீலக் காட்டில் ஓடையிலுள்ள ஜலமும் நீலமாகக்காணும். அங்குள்ள கற்கள் ஸ்பர்ச வேதிகளே. குண்டப்ரபை என்ற இடத்திலிருந்து எடுக்கப்படும் மண் தங்கமாகின்றது. மஹாநந்தை என்ற இடத்திலுள்ள காலகண்டேசரின் எதிரில் குண்டத்தில் கிடைக்கும் தம்பலப்பூச்சி போன்ற ரஸம் எல்லா லோஹங் களையும் தங்கமாக்குகின்றது.

உமாபர்வதத்திலுள்ள திரிசூலம் போன்ற தர்ப்பைகளின் அடியிலுள்ள மண்ணை தான்றிக்கட்டைகளால் எரித்துச் சாப்பிட ஸித்தி ஏற்படுகின்றது. அசலேசுவரருக்குத் தெற்கே உள்ள ஸவர்ண சிலையின் மேல் நரமாம்ஸத்தையோ பசுமாம்ஸத்தையோ வைத்து இலந்தைக் கட்டையால் எரிக்க மறுநாள் காலையில் தங்கமாகும். படாஹகர்யேசுவரரின் முன் உள்ள சிலையை உடைத்து மடக்கு போன்ற கற்களை எடுத்துக் காய்ச்சி பூசணிச் சாற்றில் சுருக்குக் கொடுத்து உபயோகிக்க ஸித்தியாகும். கிழக்கேயுள்ள கிணற்றிலுள்ள தவளை போன்ற கற்களும் ஸ்பர்சவேதிகளே. வடக்கே உள்ள நதியின் மேற்குக் கரையில் உள்ள லிங்கமும் அங்குள்ள குண்டமும் உடனே வேதம் செய்பவை. சண்டிகைக் கோவிலின் வாயு திக்கிலுள்ள பாழுங்கிணற்றில் கற்கள் ஸ்பர்ச வேதிகளாகக் கிடைக் கின்றன.

முன் கூறிய எல்லா ஸ்பர்சவேதிக்கற்களையும் பெரிதாயிருந்தால் தூள் செய்தும் சிறியதாயிருந்தால் அவ்வித மாகவும் லோஹங்களுடன் சேர்த்து உருக்க லோஹங்கள் தங்கமாகின்றன.

மல்லிநாதரின் வாயுதிக்கிலுள்ள ஸர்வேசுவர தீர்த்தத்தின் தென் கரையிலுள்ள பாதையில் கருநெல்லிக் காய்கள் கிடைக்கின்றன. அதை ஏழு தினங்கள் சாப்பிட நீண்ட ஆயுள் பெறலாம். அங்குள்ள வாழைத்தோட்டத்தில் உள்ள ரஸகுண்டத்திலிருந்து எடுக்கப்படும் ரஸம் கோடிவேதி யாகும். அங்குள்ள கல்லாலான மயிலின் முன் பக்கத்தில் உள்ள குண்டத்தில் போடப்பட்ட பழைய வஸ்து புதிதாகும். அதில் ஒரு படி ரஸத்தைப் போட்டு அவ்வளவு ஜலத்தை எடுத்துச் சாப்பிட தேன் போல் இனிக்கும். திவ்யஸித்திகள் அளிக்க வல்லது. அக்னி திசையில் உள்ள கடிகாஸித்தகேசரரின் ஆலயத்தின் முன் ஐந்து முழம் தோண்ட இலந்தை போன்ற ஸ்பர்சவேதிகள் கிடைக்கின்றன.

இவ்விதஸித்தி முறைகள் பயன்பட சிற்சில மந்திரவிதிகள் கூறப்பட்டுள்ளன.

பதிமூன்றாவது உல்லாஸம்.

கந்தகம்.

அப்பிரகத்தைப் போன்று கந்தகமும் பார்வதியின் ரஜ்ஸ்ஸிலிருந்துமுண்டானதாகக் கருதப்படுகின்றது. செம்பரத்தம்பூ நிறமுள்ளது மிகவுமுயர்ந்தது; மஞ்சள் நிறமுள்ள நடுத்தரம்; வெள்ளை நிறமுள்ளது கீழ்த்தரம்; கருநிறமுள்ளது மிகவும் கீழ்ப்பட்டது. லோஹவேதத்தில் சிவந்ததையும், ரஸாயனத்தில் மஞ்சள் நிறமுடையதையும்,

மருந்துக்காக வெண்ணிற முள்ளதையும், குஷ்டத்தைப் போன்ற வியாதிகளில் மேற்பூச்சுக்காக கருநிறமுடையதையும் உபயோகிக்கலாம்.

கந்தகத்தின் சுத்தி : திலபர்ணீ, ஓமம், பிராம்மீ, கருசலாங்கண்ணி, ஊமத்தை இவைகளின் ரஸத்தால் கந்தகத்தை ஒரு தினமரைத்து காந்தபாத்திரத்திலிட்டு ஸமனெடை நெய் சேர்த்து இளந்தீயில் உருக்கி ஆட்டுப் பாலில் சாய்க்கவும். ஒரு குடுவையில் பசும் பாலையும் நெய்யையும் முகவிளிம்பிற்கு சற்றுக் குறைவாகவே நிரப்பி, சுத்தமான துணியை முகத்தில் நன்கு கட்டி அதன் மேல் தூள்செய்த கந்தகத்தைப் போட்டு மேல் சராவத்தால் மூடி சீலைமண் செய்து குழியிலிட்டு மூடி மேல் சராவத்தின் மேல் வராட்டிகளினால் மிருது புடமிடவும். பாலில் இறங்கிய கந்தகத்தை எடுத்து திலபர்ணீ முதலியவைகளின் ரஸத்தில் அரைக்கவும். இவ்விதம் புடமும் பாவனையும் மூன்று தடவை செய்த பின் காயவைத்து மீன் பித்தத்தால் 7 தடவை பாவனை செய்து பேய்ப்பீர்க்கின் தூள் சேர்த்து அரைத்து கருசலாங்கண்ணிச் சாற்றில் 7 தடவை கடும் வெய்யிலில் பாவனை செய்யவும். பிறகு ஜலம் விட்டலம்பி, காந்த பாத்திரத்திலிட்டு நெய் சேர்த்து இளந்தீயிலுருக்கி கருசலாங்கண்ணிச் சாற்றில் சாய்க்கவும். இவ்விதம் சுத்தியான கந்தகம் ரஸமருந்துகள் சேர்க்கையில் உபயோகிக்கத்தகுந்தது.

கந்தகரஸாயன முறை: வமன விரேசன முறைகளால் சரீர சுத்தி செய்து கொண்டு தைவபூஜை செய்த பின், திரிபலை சூர்ணம் 1 நிஷ்கம், குக்குலு 1 நிஷ்கம், கந்தகம் 1 குந்துமணி இவைகளை சிற்றாமணக்கெண்ணையில் குழைத்துச் சாப்பிடவும். தினம் ஒரு குந்துமணியாக 16 தினங்களில் 16 குந்துமணி அளவு வரை கந்தகத்தின் அளவைக் கிரமமாக அதிகப்படுத்தி அதற்குப் பிறகு 16 குந்துமணி அளவாக தினம்

ஒரு மாதம் வரை சாப்பிட 18 வித குஷ்டங்கள், பிரமேஹம், குன்மம், காஸம், சுவாஸம், க்ஷயம், ஜ்வரம், விரணம், பகந்தரம், வாதவியாதிகள் நீங்கும். இரண்டு மாத உபயோகத்தில் தேகத்தில் தேஜஸ் பெருகும். ஆறு மாதத்தில் இளமை திரும்பும். ஒரு வருஷ உபயோகத்தில் ஸித்தி பெறலாம். அப்பொழுது அவனது மலமூத்ரங்களின் ஸபர்சத்தால் தாம்ரம் தங்கமாகும்.

பதினான்காவது உல்லாஸம்.

விஷம்

அமிருதத்திற்காகப் பாற்கடலைக் கடைந்த பொழுது மந்தரமலையைச்சுழற்றும் கயிறாக உபயோகப்படுத்தப்பட்ட பாம்பரசனின் முகத்தினின்றும் உண்டான விஷக் காற்று பாற்கடல் முழுவதும் பரவியது கண்ட தேவர்களால் பிரார்த்திக்கப்பட்டு சிவன் அக்கொடிய விஷத்தை அருந்த, கீழ் சிதறிய விஷம், வேர், பட்டை, இலை, ஜலம் இவ்விதம் பல உருவங்களில் பூமியில் தோன்றிற்று. அவைகளில் 18 விதமான கிழங்கு விஷங்கள் உயர்ந்தவை. அவைகளிலும் காலகூடம், தர்துரம், ஹாலாஹலம், மேஷசிருங்கம், மோஹதம், கிரந்தி, கர்கடம், ரக்தசிருங்கி, ஹரித்ரம், கேஸரம் என்ற இப்பத்து விஷங்கள் மிகக் கொடியவை. மருந்துகளில் சேர்க்கத் தகுதியற்றவை. ச்வேதசிருங்கி, வத்ஸநாபம், ஸர்ஷபம், சிருங்கி, வாலுகம், முஸ்தகம், ஸக்துகம், கர்தமம் என்ற எட்டுவிஷங்கள் உபயோகிக்கத் தகுந்தவை. இவ்விஷக் கிழங்குகளை ஒடிக்க வெள்ளைப் புள்ளிகள் தென்பட்டால் அவைகளை ரஸாயனத்திலும், சிகப்புப் புள்ளி உள்ளவை களை மாரணத்திலும் உபயோகிக்கவும். யுக்தியுடன் உபயோகிக்க ரஸம் தங்கம், அப்பிரகம் இவைகளின் ரஸாயனம் போல் சிறந்த ரஸாயனமாகும். யோஷனை யில்லாமல் கொடுக்க விஷம் கொல்லும்.

விஷசுத்தி: செங்கடுகெண்ணெய் தடவி துணியில் விஷத்தை முடித்து மூன்று நாட்கள் கழித்தெடுத்து வெங்காரம் ஸமனெடை சேர்த்தரைக்க சுத்தியாகும்.

விஷரஸாயனமுறை: கடுகளவிலிருந்து ஆரம்பித்துக் கிரமாக குந்துமணி வரை அளவை அதிகப்படுத்தி சர்க்கரை கலந்து உபயோகிக்கவும். காரம், புளி, உப்பு, தேகப்பயிற்சி, வெய்யில், சூடு, எண்ணெய், கடுகு இவைகளைத் தள்ளி, பசுவின் பால் தயிர் நெய் மோர் சர்க்கரை இவைகளைச் சேர்த்து உபயோகிக்கவும். இல்லாவிட்டால் கெடுதி ஏற்படும்.

விஷத்தால் ஏற்படும் கெடுதியும் அதற்கு முறிவும்: அதிக அளவிலோ, தவறுதலால் ஸேவிக்கக் கூடாதவர்கள் உபயோகித்தாலோ, விஷம் கெடுதியை உண்டாக்குகின்றது. இக்கெடுதி 8 நிலைகளில் ஏற்படுகின்றது. முதல் நிலையில் அறியாவிதமான சிரமமும், இரண்டாம் நிலையில் நடுக்கமும், மூன்றாம் நிலையில் நாவரட்சியும் எரிச்சலும், நான்காம் நிலையில் நடைதவறுவதும், ஐந்தாவதில் வாயிலிருந்து நுரை வருதலும், ஆறாவதில் கழுத்துத்தரிக்காதிருத்தலும், ஏழாவதில் எழுந்துகொள்ள சக்தி இல்லாமையும், எட்டாவதில் மரணமும் குறிகளாகும். அதில் சீக்கிரமாக சிகித்ஸை செய்தாலன்றி கெடுதி விளையும். சிறிதளவு விஷத்தின் அளவு அதிகமானாலும் வாந்தி, பேதி, தலைச்சுற்றல், மறதி, வலி, தொண்டைக்கம்மல், ஊறுதல், எரிச்சல், பார்வை மாறுதல், காதுவலி, மூச்சுத்திணறல், காஸம் இன்னமும் இவைபோன்ற வாதவியாதிகள் பல ஏற்படும். இக்குறிகள் கண்டவுடனேயே 4 நிஷ்கம் நெய்யும், ஒரு நிஷ்கம் வெங்காரமும் சேர்த்துச் சாப்பிடவும். சிறுகீரையை ஜலத்தில் அரைத்துக் கரைத்தோ, புத்திரஜீவப் பழமஜ்ஜையை ஜலத்துடன் கலந்தோ, துத்தம், மஞ்சள், வசம்பு, தேவதாளிப் பீர்க்கு, ஈசுவரமூலி, ஸார்புணி, பேய்ப்புடல், மலையகத்தி இவைகளில் ஒன்றை பசுமூத்திரத்துடன் கலந்து சாப்பிட

விஷமிறங்கும். கருடமந்திரத்தினால் மந்திரித்த ஜலத்தினால் ஸ்நானம் செய்வதும், மற்ற விஷஹரப்பிரயோகங்களும் சிறந்தவையே.

சரீரத்தில் விஷம் ஜீர்ணமாகியிருந்தால் பித்தம் வெளியாகும் வரை வமனமும். ஆமம் வெளியாகும்வரை பேதியும் செய்து கொள்ளவேண்டும். சிறுகீரை வேரை ஆகாரமாக்கிக் கொண்டு ஒருமாதம் வரை மாம்ஸத்தை நெய் சேர்த்துச்சாப்பிடலாம்.

ஹேமந்தம், சிசிரம், வஸந்தம் இந்த ருதுக்களில் விஷரஸாயனம் உபயோகிக்கலாம்; மற்ற ருதுக்களில் உபயோகிக்கக்கூடாது. வாதவியாதி உள்ளவர்கள், கிழவர்கள், கர்ப்பிணி, பசி, தாஹம் வெயில் வழி நடத்தல் இவைகளால் கஷ்டப்பட்டவர்கள், நபும்ஸகன், வியாதியால் இளைத்தவன், பித்தமதிகமுள்ளவன், அதிககோபிஷ்டன், யக்ஷ்ம வியாதி யுள்ளவன் இவர்கள் விஷரஸாயனம் ஸேவிக்கத் தகுதி யற்றவர்கள்.

பதினைந்தாவது உல்லாஸம்

திவ்யமூலிகை கல்பங்கள்

1. *புரசு* (சிவப்பு புஷ்ப முள்ளது)

எண்ணெய் கல்பம் : விதையின் மேல் தோல் நீக்கி கடும் வெய்யிலில் காயவைத்து தூள் செய்து பசும் பாலிலாவது நெல்லிக்காய் சாற்றிலாவது 7 நாள் பாவனை செய்து செக்கிலிட்டாட்டி, எண்ணெய் எடுத்து உபயோகிக்கவும். இந்த எண்ணெயையும் நெய்யையும் சமனெடை சேர்த்து நல்ல மட்பானையிலிட்டு நெல் குதிரில் நடுவில் வைத்து 45 நாட்கள் கழித்து அவ்வெண்ணெய்யை எடுத்து உபயோகிக்க வேண்டும்.

ரஸாயனமுறைப்படி தேகசுத்தி செய்த பின் ஒரு நிஷ்கம் எண்ணெய்யை பசும்பால் இரண்டு பலம் சேர்த்துக் காலையில் சாப்பிடவும். இவ்விதம் ஒருநாள் விட்டொருநாள் ஒவ்வொரு தடவையும் எண்ணெய்யை ஒவ்வொரு நிஷ்கம் அதிகப்படுத்திக் கொண்டே 16-வது நாளில் 16 நிஷ்கம் சாப்பிடவும். எண்ணெய் சாப்பிட்டவுடன் மயக்கம் ஏற்படும். முகத்தில் ஜலம் தெளிக்க மயக்கம் நீங்கும். மயக்கம் தெளிந்தவுடன் சர்க்கரை நெய் சேர்த்த பாலன்னமருந்த வேண்டும். இவ்விதம் ஒரு மாதம் வரை தினம் காலையில் அந்த எண்ணெய்யை சாப்பிட ஞானியாகி நல்ல ஞாபக சக்தியுடன் விளங்குவான். இரண்டு மாதங்கள் சாப்பிட யானையைப் போன்ற பலம் பெறுவான். இவ்விதம் பல மாதங்கள் ஸேவிக்க திவ்ய ஸித்தி பெறுவான். தைலம் உபயோகிக்கும் வரை பாலன்னம் தான் அருந்தவேண்டும்.

காலையில் முன்கூறிய எண்ணெய் 2 பலம், பசும்பால் 2 பலம் இரண்டையும் கலந்து சாப்பிட 7 நாள் வரை மயக்கத்துடன் கை காலசைக்காமல் கட்டுப்பட்டவன் போலிருப்பான். தைலம் ஜீர்ணமானவுடன் விழித்தெழுவான். பிறகு பத்து நாள் வரை அவனுக்குப் பசும்பால் மட்டும் ஆகாரம் கொடுக்க மேல் தோலுரியும். 21 தினங்களுக்குப் பின் நல்ல ஞாபக சக்தியுடன் பேச்சு வன்மையும் கூரிய பார்வையும் ஏற்படும்.

புரசஇலை கல்பம் : பூச்சு புழுக்களால் தீண்டப்படாத இளம் புரசம் துளிர்களை கடும் வெயிலில் உலர்த்திப் பொடி செய்து கொள்ளவும். புளி காரமகற்றி, பசும்பால் அன்னம் மட்டுமருந்துகிறவனாக முதல் ஒருமாதம் வரை காலையில் கால்பல அளவு சூர்ணத்தை பசுவின் மோரில் கலக்கிச் சாப்பிடவும். இரண்டாவது மாதத்தில் அரைப் பல அளவு சாப்பிடவும். இம்மாதிரி மாதத்திற்குக் கால் பல அளவு வீதம் அளவை அதிகரித்து 16 மாதம் வரை சாப்பிடவும். தாகத்திற்கு

வென்னீரை சாப்பிட்டுக் கொண்டு காற்றில்லாவிடத்தில் படுத்துக் கொள்ளவும். யானை போன்ற பலமும் அழகும் பெறுவான்.

புரசம் பூகல்பம் : புரசம் பூவை நிழலிலுலர்த்திக் காயவைத்துச் சூர்ணம் செய்து அச்சூர்ணம் 20 பலம், எடுத்து பசுவின் நெய் 24 பலம் கலந்து நெற்குவியலில் வைத்து ஒருமாதம் கழிந்தபின் எடுத்து, பதினான்கில் ஒரு பங்கு தினம் காலையில் சாப்பிடவும். இவ்விதம் 3 மாதங்கள் ஸேவிக்கவும் தாம்ரபாத்திரத்தில் உப்பு புளி நீக்கி பாயஸான்னத்தைச் சாப்பிடவும். மூன்று மாத உபயோகத்தில் வைரம் போன்று சரீரம் திடம் பெறும். ஒரு வருஷ உபயோகத்தில் அவனது மூத்திரமும் மலமும் லோஹவேதம் செய்யும் சக்தி பெறும்.

புரசவிதை கல்பம்: விதையைப் பொடி செய்து தேன் நெய் சர்க்கரை சேர்த்து நெற்குவியலில் ஒருமாதம் வைத்து மூடி எடுத்து கால்பலம் முதல் ஒருபலம் வரை அளவைக் கிரமமாக அதிகப்படுத்திச் சாப்பிட்டு மேல் அனுபானமாகப் பால் சாப்பிடவும். ஒரு வருஷத்தில் ஸித்தி ஏற்படும்.

புரசம் பட்டைக் கல்பம் : பட்டையின் சூர்ணத்தை பசும் பாலில் ஊறவைத்து ஒரு பல அளவு காலையில் ஒரு வருஷம் வரை சாப்பிட ஸித்தியாகும்.

புரசம் பிசின் கல்பம் : பிராம்மீ, அதிமதுரம், புரசம் பிசின், நெய் இவைகளை ஸமனெடை சேர்த்து ஒருபல அளவு பால் அனுபானத்துடன் ஒருவருஷம் வரை சாப்பிட ஸித்தியாகும்.

புரசம் பஞ்சாங்க கல்பம்: வேர், பட்டை, விதை, இலை, பிசின் இவைகளின் சூர்ணத்தை கால்பல அளவு நெய் தேன் சேர்த்து காலையில் ஒருவருஷம் வரை சாப்பிட நரை திரையகலும்.

புரசின் விசேஷ கல்பம்: பெரிய புரசுமரத்தை வெட்டி அதன் வேரருகில் மூன்று முழம் பள்ளம் தோண்டி, அதில் முற்றிய நெல்லிக்கனிகளை நிரப்பி, புரசம் குச்சிகளால் அக்குழியை நிரப்பி மேல் தர்ப்பம் பரப்பி மேல் மண்ணாலும் சாணத்தாலும் மெழுகி துணி சுற்றி மேல் மண்சீலை செய்யவும். நன்கு காய்ந்தபின் மேல் வராட்டி அடுக்கித் தீயிட்டு ஆறியபின் உள்ளிருக்கும் நெல்லிக்கனிகளை எடுத்து தேன் நெய் நிரப்பிய பானையிலிடவும். பூமியினடியில் சுரங்கம் போன்று கட்டப்பட்டுள்ள கிருஹத்தில் காற்றுப்படாவிடத்தில் வஸித்துக்கொண்டு இஷ்டம்போல் அந்த நெல்லிக்கனிகளைச் சாப்பிட்டு மேல் பாலை ஆகாரமாக சாப்பிடவும். பாம்பு போல் மேல் தோல் உரிந்து புதிய பலம் பெற்று திவ்ய திருஷ்டி பெறுவான்.

2. வெண் புரசு கல்பம்

வெண்புரசு பஞ்சாங்க கல்பம்: வெண்புரசின் வேர், பட்டை, விதை, இலை, பிசின் இவைகளைத்தூள் செய்து தேனுடன் கால் பல அளவு 3 மாதங்கள் வரை சாப்பிடவும். ஸித்தி ஏற்படும்.

வெண்புரசு விதை கல்பம்: தினம் ஒரு விதையாக ஆட்டு நெய்யுடன் கலந்து சாப்பிட ஒரு வருஷத்தில் ஸித்தி ஏற்படும்.

இவ்விதமே விதை, எண்ணெய், பட்டை, இலை முதலியவைகளிலும் கல்பம் தயார் செய்து முன் புரசு கல்பத்தில் கூறியது போல் சாப்பிட ஸித்தி ஏற்படும். இவ்விரு புரசு கல்பங்களின் ஸித்தி ஏற்பட அமிருதமாலினீ மந்திர ஸித்தி பெறுவது அவசியம்.

3. முண்டீ கல்பம்

கரந்தை வெள்ளை, சிகப்பு, மஞ்சள், நீலம் ஆகிய நான்கு நிறமுள்ள புஷ்பங்களுடன் நான்கு விதமாக

அகப்படுகின்றது. இக்கரந்தையை அமிருதோத்பவ மந்திரஸித்தி பெற்று ஸமூலம் எடுத்து அலம்பி நிழலில் காயவைத்துத் தூள் செய்து கொள்ளவும். கால்பல அளவு பசும் பால் அனுபானத்துடன் சாப்பிட்டு அது ஜீர்ணமானதை அறிந்து முதலில் பசுவின் நெய் சாப்பிட்டு மேல் உப்பு புளி நீக்கிய நெய்யில் பக்வமான இனிப்புள்ள அறுபதாங்குறுவை அன்னத்தை பசும்பாலுடன் சாப்பிடவும். 6 மாதங்களில் தோலுரிந்து புதுபலம் பெற்று ஸித்தி ஏற்படும்.

4. தேதாளி கல்பம்

வெளுப்பு, கருப்பு, மஞ்சள் நிறங்களுடன் மூன்று விதமாக தேவதாளி அகப்படுகின்றது. வெள்ளை நிறமுள்ளது ரோகநிவிருத்திக்கும், கருப்பும் மஞ்சளும் ரஸாயனத்திலும் லோஹறவேதத்திலும் சிறப்புற்றவை. அமுருதகணமந்திர ஜபம் செய்து ருத்திரனுக்கு பலி அளித்து தேவதாளியை ஸமூலம் எடுத்து நிழலிலுலர்த்தி தூள் செய்து பசும்பாலில் இரும்புப் பாத்திரத்தில் வேகவைத்துக் கால்பல அளவு தேன் நெய் சேர்த்து ஒருமாதம் சாப்பிட ரோகங்களகலும். இரண்டு மாதங்கள் சாப்பிட திவ்யஸித்தி பெறலாம்.

தேவதாளி ரஸம், நெய், நெல்லிக்கனிச்சாறு, தேன் இவைகளை வகைக்குக் கால்பல அளவு 21 நாள் சாப்பிட மேதை ஞாபக சக்தி அதிகமாகும். தேவதாளியின் சூர்ணத்தை கடுக்காய் கஷாயத்துடனாவது பாலுடனாவது கோமூத்திரத்துடனாவது சாப்பிட குஷ்டமகலும், காமாலை ப்லீகை, வாயு, குன்மம், பகந்தரம் போன்ற கொடிய நோய்கள் நீங்கும். கந்தகத்துடன் அதன் சாறு சேர்த்து உருக்கப்பட்ட லோஹறங்கள் ஸுலபமாக உருகும். ரஸத்தைக் கட்டுவதிலும் மூர்ச்சையிலும் நிகரற்றது. ஆமணக்கு, தொட்டாச்சுருங்கி, காஞ்சூரி, தேவதாளி இவைகளின் சாறு மேஷதைலத்துடன் சேர்த்துத்தடவ அக்னிஸதம்பனம் ஏற்படும். தேவதாளியின்

விதையை வெல்லம் சேர்த்து வர்த்தி செய்து அர்சஸ்முனையில் வைக்க அர்சஸ் குறையும். தேவதாளியின் ரஸத்தால் மை செய்து கண்ணிலிட திவ்ய திருஷ்டி ஏற்படும். நெல்லிக்காய் சாறு, தேவதாளியின் சாறு, தேன், நெய், நருந்தாளியின் சாறு இவைகளை ஒன்றாகச் சேர்த்து ருதுகாலத்தில் மூன்று நாட்கள் ஸ்திரீகள் சாப்பிட கர்ப்பம் ஏற்படும். தேவதாளிச்சாறு, பால், தேன் நெய் இவைகளைச் சேர்த்து சாப்பிட புருஷர்களின் வளர்ச்சி பெறாத பீஜகோசம் வளர்ந்து பிள்ளைப்பேறு அளிக்கும். கருசலாங்கண்ணி, கார்போகரிசி, சித்ரமூலம், ஈசுவரமூலி, தேவதாளி இவைகளை கால்பல எடை கடுக்காய் கஷாயத்துடன் தினமும் சாப்பிட ஒரு வருஷத்தில் பூமியின் உட்புறம் புலப்படும். மூக்கரட்டை, தேவதாளி இவைகளை ஒருபல அளவு பசும்பாலுடனும், தேவதாளி ஈசுவரமூலி இவைகளைக் கடுக்காய் கஷாயத்துடனும் சாப்பிட ஸித்தியாகும். இந்த ஸித்தி பெற அமிருதேசுவரமந்திரம் ஜபிக்க வேண்டும்.

5. வெள்ளெருக்குக் கல்பம்

வெள்ளெருக்கின் வேரை, புஷ்யநக்ஷத்திரம் கூடிய ஞாயிற்றுக்கிழமையில் எடுத்து உள் கட்டை நீக்கி சுத்தமான தோலை நிழலில் உலர்த்தித் தூள் செய்து கால்பலம் முதல் 2 பலம் வரை பாலுடன் 6 மாதகாலம் வரை சாப்பிட எல்லா வியாதிகளும் நிவிருத்தியாகும். ஒரு வருஷத்தில் ஸித்தி ஏற்படும்.

6. மெருகன் கிழங்கு கல்பம்

மெருகன் இலையை திங்கட்கிழமை சேர்ந்த திரயோதசியில் எடுத்துக் காயவைத்துத் தூள் செய்து ஒரு பல அளவு பசம்பாலுடன் ஒரு வருஷம் சாப்பிட நரை திரையகலும்.

ஸமூலமெடுத்துக் காயவைத்துச் சூர்ணம் செய்து ஒருமாதம் ஜலத்துடன் கால் பல அளவு சாப்பிடவும். பிறகு காடி, தயிர், பால், நெய், மோர், தேன் இவை ஒவ்வொன்றின் அனுபானத்துடன் ஒவ்வொரு மாதம் சாப்பிட ஒரு வருஷத்தில் ஸித்தி ஏற்படுகின்றது. அமிருதோத்பவமந்திரமும் அமிருத மந்திரமும் ஸித்தி அளிக்கின்றன.

7. அழுகுண்ணிப்பாலை கல்பம்

கடலை இலை போன்ற இலையும், புஷ்பமும் உள்ளதும் இலையின் கீழ் ஜலம் வர்ஷிப்பதும் ஆனது. மஞ்சள், சிகப்பு, கருப்பு, வெளுப்பு நிறமுள்ள புஷ்பங்களுடன் நான்கு விதமாகக் காணப்படுகின்றது. சுக்லபக்ஷத்தில் ஸமூலமாக அதை எடுத்து வந்து நிழலில் காயவைத்துத் தூள் செய்து கால் பல அளவு தேன் நெய் சேர்த்து தினமும் சாப்பிடவும். பால் நெய் சேர்த்து நல்ல ஆகாரமருந்தவும். ஒரு வருஷத்தில் ஸித்தி அடையலாம்.

பாதாளயந்திரமூலமாவது, கர்ப்பயந்திரமூலமாவது, தேத்தான் வேரிலிருந்து எண்ணெய் இறக்கி, அந்த எண்ணெய்யை ஜலத்தாலாவது இளநீராலாவது 50 தடவை அலம்பி வைத்துக் கொள்ளவும். அழுகுண்ணியை ஸமூலமிடித்துச் சூர்ணம் 4 பங்கு, நிலப்பனைக்கிழங்கு 2 பங்கு திரிபலை 1 பங்கு இவைகளை சேர்த்துக் கால் பல அளவு தேத்தான் எண்ணெய்யுடன் தினமும் சாப்பிடவும். சூர்ணத்தை பல அளவு வரை தினமும் கிரமமாக அதிகரிக்கவும். ஒரு வருஷத்தில் சரீரம் நல்ல திடம் பெறும். நீண்ட ஆயுளையுமடையலாம்.

8. நொச்சிக் கல்பம்

நொச்சிவேர் கல்பம்: புஷ்யரவியன்று காலை நொச்சியின் வேரை எடுத்து அதன் தோலை நிழலிலுர்த்தித்

தூள் செய்து கால் பல அளவு கோமூத்திரத்துடன் 6 மாதங்கள் வரைச் சாப்பிட யானை போன்ற பலமுண்டாகும். அதன் வேர் தோல் சூர்ணத்தை தேன் நெய் பால் விட்டுப் பிசறி நெய் தடவிய பாண்டத்திலிட்டு நெற்குவியலில் ஒரு மாதம் வைத்து எடுத்து ஒரு வருஷம் இரண்டு பல அளவு சாப்பிட நீண்ட ஆயுளைப் பெறலாம். அல்லது சூர்ணம் 1½ பல அளவு நெய் சேர்த்து சாப்பிட நரை திரை அகலும். வசம்பு, கரந்தை, வேம்பு, திரிபலை, சீந்தில், கருசலாங்கண்ணி இவைகளை மையொடை சேர்த்து அகற்றும் சமம் நொச்சிவேர் சூர்ணம் சேர்த்துப் பல அளவு தேன் நெய் சேர்த்துத் தினமும் சாப்பிட நீண்ட ஆயுளும் நரை திரையற்ற திடமான ஆரோக்கியமும் பெறலாம். நொச்சிவேர்த் தூளுடன் வாய் விளங்கம், கடுகுரோகிணி சேர்த்து ஆட்டுப்பாலுடன் ஒருபல அளவு தினமும் சாப்பிட நரை திரை அகலும். மூன்று மாதங்களில் எவ்விதமான நோயும் தீரும்.

நொச்சி இலை கல்பம் : நொச்சி இலையின் சாறைப் பிழிந்து பானையிலிட்டு இளந்தீயில் எரித்து லேஹ்யம் மாதிரி ஆனவுடன் ஒரு நிஷ்க அளவு சாப்பிடவும். தினத்திற்கு ஒரு நிஷ்கம் வீதம் அளவை அதிகரித்து இரண்டு பல அளவு வரை சாப்பிட வாந்தியும் விரேசனமுமாகி உடலிலுள்ள எவ்விதமான கிருமியும் ஏழு நாட்களில் வெளிவரும். க்ஷயம், குஷ்டம் முதலிய ரோகங்களும் நசிக்கும். மூன்று மாதங்களில் நரை திரை அகலும்.

ஸமூல நொச்சி கல்பம் : நொச்சியை ஸமூல மிடித்துத் தூள் செய்து நல்லெண்ணெய்யுடன் நிஷ்கம் முதல் ஒரு பலம் வரை சாப்பிட மூன்று மாதங்களில் மூப்பு அகலும். அதன் இலையைச் சுவைத்து வர 80 வாதரோகங்கள், குஷ்டம், கழுத்து ரோகங்கள், முகரோகங்கள், தந்தரோகங்கள் அகலும். ஸமூல சூர்ணத்தை தேன் நெய் சேர்த்து ஒரு பல அளவு காலை சாப்பிட்டு காற்றில்லாவிடத்தில் வஸிக்கவும். ஒரு வருஷத்தில்

ஸித்தி ஏற்படும். நொச்சியின் ஸமூல சூர்ணத்தை தேன், நெய், பால், திரிபலை சூர்ணம் சேர்த்து நெய் தடவிய பானையிலிட்டு மூன்று மாதம் வைத்து எடுத்து நிஷ்கம் முதல் ஒரு பலம் வரை அளவை கிரமமாக அதிகப்படுத்திச் சாப்பிட எல்லா வியாதிகளும் மூப்பும் மரணமுமகலும்.

9. முள்ளிலவு கல்பம்

கிருஷ்ண பக்ஷத்து அஷ்டமியில் ஸ்னானம் செய்து இரவில் முள்ளிலவு மரத்தை கருப்பு நூலால் சுற்றி அகோரமந்திரத்தை ஆயிரம் தடவை ஜபித்து அதன் வேரை எடுத்து நிழலிலுலர்த்தித் தோலைமட்டும் பொடித்து தேன் நெய்யுடன் ஒரு பல அளவு சாப்பிட திரை-மூப்பு அகன்று நீண்ட ஆயுள் பெறலாம்.

அதன் 18 புஷ்பங்களை 18 பலம் பாலில் காய்ச்சி புஷ்பத்தைக் களைந்து பாலை ஒரு மாதம் வ்ரை சாப்பிட திவ்யஸித்தி ஏற்படும்.

அதன் காயை காந்தபாத்திரத்தில் பசும் பாலில் காய்ச்சி காயை நீக்கி பாலைச் சாப்பிட்டு அது ஜீர்ணமானதும் பாலன்னம் சாப்பிட ஆறுமாதங்களில் திவ்விய தேஹமும், பலமும் பெறலாம். அவனது மல மூத்திரத்தினால் செம்பு பொன்னாகும்.

10. கடுக்காய் கல்பம்

விந்தியம், கான்யகுப்ஜம், ஸௌராஷ்டிரம், ஹிமயமலை, கங்கைக்கரை, காச்மீரம், அங்கதேசம் (பகல்பூர்) இவைகளில் முறையே விஜயா, ரோஹிணீ, பூதா, திருவிருதா, அமிருதா, ஜீவந்தீ, அபயா என்ற 7 விதக் கடுக்காய்கள் கிடைக்கின்றன. முன்னதைக் காட்டிலும் பின்னது முறையே

தாழ்ந்தது. கடுக்காயில் உப்பைத் தவிர மற்ற ஐந்து சுவைகளுமிருக்கின்றன. கொட்டையினுள் பருப்பில் தித்திப்பும், நாறில் புளிப்பும், காம்பில் கசப்பும், தோலில் உரைப்பும் மற்ற பாகங்களில் துவர்ப்பும் இருக்கின்றன. (1) சுரைக்காய் போன்ற உருவமும், (2) உருண்டையான உருவமும், (3) நான்கு கோணங்களுள்ளதும், தோல் மெல்லியதாக உள்ளதும், (4) ஐந்து கோணங்களுள்ளதும், (5) அதிகச்சதைப்பிடிப்புள்ளதும், (6) தங்கம் போன்ற நிறமுள்ளதும், (7) கருநிறமுள்ளதும் என்று முறையே இவைகளின் அடையாளங்களாகக் கருதப்படுகின்றன. ஜலத்தில் அமிழ்ந்தும் நல்ல கனமுள்ளதும், மழுமழுப்பானதும் அரைப்பல எடைக்குக் குறையாததும் உயர்ந்தது. கால் பல அளவுள்ளது நடுத்தரம். அரைக்கால் பல அளவுள்ளது தாழ்ந்தது. பூச்சி அடித்ததும், நெருப்பில் பொசுங்கியதும், ஜலத்தாலும் சேராலும் அழுகியதும், வெடித்ததும், உவர்மண்ணிலுள்ளதுமான கடுக்காய்கள் உபயோக்கிக்கத் தகுந்தவையல்ல.

சந்திரஸூர்யர்களின் கிரகணத்தன்று காயத்ரீஜபம் செய்து கடுக்காயைப் பறிக்கவும். சுக்கு, வெல்லம், இந்துப்பு இவைகளில் ஒன்றுடன் தினம் இரண்டு கடுக்காய்கள் வீதம் 12 வருஷங்கள் சாப்பிட நூறு வயதுவரை ஜீவிக்கலாம். கடுக்காய் சூர்ணம் 2 நிஷ்கம், அயப்பொடி 1 நிஷ்கம் இரண்டையும் பசுநெய்யில் குழைத்து காந்தபாத்திரத்தில் தடவி ஒரு நாள் முழுவதும் கவிழ்த்து வைத்து காலையில் சாப்பிட மூப்பு மரணமகலும். காரிலவு மரத்தின் நடுவில் ஒரு துவாரம் செய்து அதில் கடுக்காயை வைத்து ஆறுமாதம் வரை மூடி பிறகு தினம் ஒவ்வொன்றாகச் சாப்பிட அவனுக்குக் கிழத்தனமே அணுகாது.

11. நெல்லிக்காய் கல்பம்

சித்திரைமாத ஆரம்பத்தில் நன்கு பழுத்த நெல்லிக்கனிகளை எடுத்து நிழலில் உலர்த்தி கால் பல அளவு ஜலத்துடனோ, தேனுடனோ, நெய்யுடனோ இரவில் சாப்பிட நல்ல பசியும் சுறுசுறுப்பும் அளிக்கும். நெல்லிக்கனியின் சூர்ணத்தையும் அயப்பொடியையும் தேன் நெய் சேர்த்துச் சாப்பிட நரை திரை அகலும். நெல்லிக்கனியை பாலில் வேகவைத்துச் சாப்பிடலாம். நெல்லி முள்ளிச் சூர்ணத்துடன் கருசலாங்கண்ணித்தூள் அல்லது வேப்பம்பட்டைத்தூள் கலந்து நெய், தேன் சேர்த்தும் சாப்பிடலாம்.

12. திரிபலை கல்பம்

கடுக்காய் 1 பங்கு, தான்றிக்காய் 2 பங்கு, நெல்லிமுள்ளி 4 பங்குஇவைகளைப் பொடி செய்து திப்பிலி, மூங்கிலுப்பு, இந்துப்பு, அதிமதுரம், தேன், நெய், வசம்பு, கற்கண்டு, தங்கம், வெள்ளி, அயம், தாம்ரம், ஈயம், காரீயம் இவைகளின் பஸ்மம், இவைகளில் ஏதாவதொன்றுடன் சேர்த்துச் சாப்பிட மூப்பு பிணி அகலும். திரிபலை சூர்ணத்திற்கு ஸமம் திப்பிலி முதலியவைகள் (பஸ்மங்கள் நீங்கலாக) சேர்க்க வேண்டும். திரிபலை ஒரு பலத்தில் தங்கபஸ்மம் ஒரு பணவெடையும், வெள்ளி பஸ்மம், காரீயபஸ்மம், ஈயபஸ்மம் இவை இரண்டு பணவெடையும், தாம்ரபஸ்மம் அரைப்பணவெடையும், அயஸ் பஸ்மம் ஐந்து பணவெடையும் சேர்த்துச் சாப்பிட வேண்டும். காலையில் ஒரு கடுக்காயும், பகல் போஜனத்திற்கு முன் இரண்டு தான்றிக்காய்களும், இரவில் நான்கு நெல்லிக்காய்களும் ஒரு வருஷம் வரை சாப்பிடுவதும் ரஸாயனமே. இவைகளை நெய்யில் வறுத்து உபயோகிக்கவேண்டும். திரிபலையை சாதத்தீர்த்தத்தால் அரைத்துக் காந்தபாத்ரத்தில் இரவில் தடவி காலையில் தேன் சேர்த்து சாப்பிடலாம். திரிபலையை கருங்காலி,

வேங்கைவேர் கஷாயத்தால் 21 தடவை பாவனை செய்து காயவைத்துத் தேன் நெய் சேர்த்துச் சாப்பிடலாம். திரிபலையை வாய் விடங்கம், கருசலாங்கண்ணி, கருங்காலி, புரசு இவைகளின் தனித்தனி கஷாயத்தால் வகைக்கு 7 தடவை பாவனை செய்து வெல்லமும் நெய்யும் சேர்த்துச் சாப்பிடலாம். திரிபலையை கருசலாங்கண்ணிச்சாற்றால் 21 தடவை பாவனை செய்து தேன் நெய் சேர்த்து அரைப்பல அளவு காலையில் சாப்பிட்டு அது ஜீர்ணமானவுடன் தயிரன்னம் சாப்பிட ஒரு வருஷத்தில் பார்வை தெளிந்து, கேசங்கள் கருத்து, ஞாபகசக்தி, மேதை, வீர்யபுஷ்டி ஏற்பட்டு நீண்ட ஆயுளடையலாம்.

13. சுக்குக் கல்பம்

சுக்கை நன்கு தூள் செய்து ஸமனெடை வெல்லம் சேர்த்து நெய் தேன் விட்டுப் பிசைந்து பழகிய பானையிலிட்டு நெய்குவியலில் 80 நாள் மூடி, எடுத்து கால்பல அளவு ஒரு வாரம் சாப்பிட வியாதிகள் விலகும். ஆறு மாதங்கள் உபயோகிக்க நீண்ட ஆயுளும் புத்தி சக்தியும் பெறலாம்.

14. பிப்பலீ கல்பம்

புரசம்பட்டை க்ஷாரஜலத்தால் திப்பிலியை முதலில் 7 தடவை அலம்பி, காயவைத்து நெய்யில் வறுத்துக் கொள்ளவும். 3-5-7-8-10 திப்பிலிகள் வீதம் தேன் நெய் சேர்த்துத் தினம் காலையில் ஒரு வருஷம் வரை சாப்பிட அவனைப் பிணிகள் அணுகா. தினம் ஒரு திப்பிலியில் ஆரம்பித்து 10 திப்பிலிகள் வரை 10 தினங்களில் கிரமமாக அளவை அதிகரித்தும், மறுபடியும் குறைத்தும் ஆயிரம் அல்லது இரண்டாயிரம் திப்பிலிகள் வரை பசுவின் பாலுடன் அல்லது ஆட்டுப்பாலுடன் சாப்பிட, காஸம் சுவாஸம் க்ஷயம் பாண்டு பிலீகை ரக்தவியாதி வாதுவியாதி மேஹம் அர்சஸ் கிரஹணீ

சோகை விக்கல் வாந்தி தொண்டை அடைப்பு விஷமஜ்வரம் போன்ற வியாதிகள் முற்றிலும் விலகி, நரை திரை நீங்கி நீண்ட ஆயுள் பெறுவான்.

15. சித்ர கல்பம்

கருங்கொடிவேலி ரஸாயனத்திலும், சிகப்புக்கொடி வேலி லோஹவேதத்திலும், வெளுப்பு நிறமுள்ளது ரோகத்திலும் உபயோகிக்கச் சிறந்தவை. கருஞ்சித்ரகத்தை வஸந்த கிருஷ்ணபக்ஷ பஞ்சமியில் கருநிற ஆடை அணிந்தவனாக கருப்பு சந்தனம் அக்ஷதம், புஷ்பம் இவைகளால் பூஜை செய்து கரு நூலால் சுற்றி கருப்பன்னத்தை பலிகொடுத்து காலைவேளையில் மௌனத்துடன் வேருடன் பறித்து கால் படாதவிடத்தில் சுத்தமாக வைக்கவும். அதைப்பாலில் போட பால் கறுத்துவிடும். இவ்விதம் செந்நிறமுள்ள புஷ்பம் அக்ஷதம் முதலியவைகளால் செந்நிறச் சித்ரகத்தை எடுக்கவேண்டும். இதைப் பாலில்போடச் சிவக்கும். இவ்வித செந்நிற முள்ளதையோ கறுநிறமுள்ளதையோ ஸமூலம் பறித்து நெல்லிக்கனி கஷாயத்தில் 7 தடவை பாவனை செய்து காயவைத்து இடித்து அதற்குச்சமம் ஸ்வர்ணமாக்ஷிகம், தாளகம், லவங்கப் பட்டை, திரிபலை இவைகள் ஒவ்வொன்றும் சேர்த்துப் புதுப்பானையிலிட்டு வைக்கவும். நன்னாளில் ஒரு நிஷ்க அளவு நெய்யில் பிசறி ஒரு மாதம் வரை சாப்பிட, விரணம் குஷ்டம் இவை தீரும். பற்கள் கேசம் நகங்கள் இவை உதிர்ந்து புதிதாக உற்பத்தியாகும்.

16. சேங்கோட்டை கல்பம்

பழுத்த புதிய காரமுள்ள ஒரு சேங்கொட்டையை ஊசியால் துளைத்து பசுவின் பாலிலிட்டுக் காய்ச்சி கொட்டையை எரித்து பாலை தேன் நெய் சர்க்கரை சேர்த்துச் சாப்பிடவும். இவ்விதம் 21 தினங்களில் ஒரு கொட்டை முதல்

ஆரம்பித்து 21 கொட்டை வரைக் கிரமமாகச் சாப்பிட ஆறு மாதங்களில் தேகம் கல்பஸித்தி பெறும்.

17. நிலக்கடம்பு கல்பம்

இது வெள்ளை, சிகப்பு, கறுப்பு நிறங்களில் மூன்று விதமாகக் கிடைக்கின்றது. சுக்ல பக்ஷத்தில் புஷ்ய ரவியில் ஸமூலம் எடுத்து நிழலில் காயவைத்து அதன் சூர்ணம் கால்பல எடை நெய்யுடன் சாப்பிட்டுப் பாலன்னமருந்தி வர, ஆறுமாதங்களில் நரை திரை மூப்பகலும்.

18. மூக்கரட்டை கல்பம்

வெள்ளை நிறமுள்ளது ரஸரஸாயனங்களிலும், சிகப்பு நிறமுள்ளது ரோகத்திலும் சிறந்தது. புஷ்ய ரவியில் வெண்ணிறமுள்ள மூக்கரட்டையை ஸமூலம் எடுத்து நிழலிலுலர்த்தி சூர்ணம் செய்து அதை பசும்பாலுடன் அரைப்பலம் முதல் ஒருபலம் வரை காலையில் ஒருவருஷம் வரை சாப்பிட இளமை தங்கும். அதன்வேரை பசுவின் பாலில் வேகவைத்துத் தூள் செய்து வெல்லப்பாகில் ஸமனெடை பசுவின் நெய்யும் சேர்த்துக் கிளறி தினம் ஒருபல அளவு சாப்பிட, ஒரு வருஷத்தில் நரைதிரை அகலும். பலவித விஷயங்கள், தோல் நோய்கள், பாண்டு, உதரம், குல்மம், அர்சஸ், வாந்தி, விக்கல், கண், காதுநோய்கள் முதலியவை அகலும். பூத்துக்காய்த்த மூக்கரட்டையைத் துண்டாக்கி சுக்குக் கஷாயத்தில் வேகவைத்துப் பாலிலரைத்துக் கலக்கி பகலில் சாப்பிட்டு இரவு நெய் பாலன்னமருந்திவர ஆறு மாதங்களில் தாதுபுஷ்டி ஏற்படும்.

19. கருசலாங்கண்ணி கல்பம்

ஸமூலம் கருசலாங்கண்ணியை புஷ்யரவியில் எடுத்து நிழலிலுலர்த்தித்தூள் செய்து கால் பல அளவு

காடியிலரைத்துக் கலக்கி காலையில் சாப்பிட நெய் பாலன்ன மருந்திவர ஒருமாதத்தில் நோய்களகன்றும் ஆறு மாதங்களில் நரைதிரை அகன்றும் ஸித்தி ஏற்படுகின்றது. அதன் இலையைப் பாதி அளவு கரு எள்ளு சேர்த்து ஆறுமாதம்வரை சாப்பிட நரைதிரை அகலும்.

சித்திரமூலம், சுக்கு, திப்பிலி, வில்வப்பிஞ்சு, கடுக்காய், நெல்லிமுள்ளி, வாய்விளங்கம், மிளகு, வாய்விடங்கம், தகரவிதை, லோத்திப்பட்டை, கடுகு, செங்கடுகு இவைகளை ஸமனெடை சேர்த்துத் தூள் செய்து அதற்கு சமம். கருசலாங்கண்ணியின் காய், பூ, இலை, வேர் இவைகளை நிழலிலுலர்த்திச் சூர்ணம் செய்து சேர்த்து கருசலாங்கண்ணிச் சாற்றால் 7 தடவை பாவனை செய்து உலர்த்தித் தூள் செய்து கால்பல அளவு பசுவின் பாலுடன் ஆறுமாதங்கள் வரை சாப்பிட நரைதிரை அகலும்.

இம்முறையையே பொற்றலைக்கையாந்தரைக்கும் அனுஷ்டிக்கவேண்டும்.

20. கற்றாழைக் கல்பம்

நன்னாளில் உபவாஸமிருந்து கற்றாழையை எடுத்து தினமும் காலையில் நான்கு அங்குல நீளமுள்ளதை ஓரங்களையும் தோலையும்சீவி எரிந்து சாப்பிட வேண்டும். ஸிநிக்தமான மாம்ஸரஸம், பால் போன்ற ஆகாரங்கள் சாப்பிட்டுவர வேண்டும். ஒரு வருஷம் வரை ஸேவிக்க ராஜயக்ஷ்மா போன்ற கொடும் நோய்கள் அகலுகின்றன. கானசக்தியும் கழுகு போன்ற பார்வையும் பெற்று நல்ல பலமுள்ள யௌவனம் பெறுகின்றான் பன்னிரண்டு வருஷங்கள் ஸேவிக்க தைவபலம் பெறுகின்றான்.

ஹஸ்த நக்ஷத்ரம் கூடிய ஸாதகநாளில் ஜாடராக்நி பலத்தை அனுஸரித்து காலையில் கற்றாழையின் சோற்றை

தேன் நெய் திரிகடு சூர்ணம்சேர்த்துச் சாப்பிட்டுவர, எவ்வித ரோகங்களும் ஒரேமாதத்தில் நீங்குகின்றன. அல்லது அதன் ரஸத்தைப் பிழிந்தெடுத்து தேன் நெய் திரிகடு சூர்ணம் சேர்த்து வேக வைத்துச் சாப்பிட்டுப் பாலன்னமருந்திவர ஒரு மாஸத்தில் வியாதிகள் நீங்குகின்றன.

21. நீலீ கல்பம்

புஷ்யரவியில் வேர், பூ, காய்களுடன் அவுரியைப் பறித்து நிழலிலுலர்த்தித்தூள் செய்து அரைப் பங்கு அப்பிரகபஸ்மம் சேர்த்துத் தேனில் குழைத்துப் பானையிலிட்டு ஒருமாதம் தான்யக்குவியலில் வைத்துக் காலையில் அரைக்கால் பல அளவு சாப்பிட, ஆறுமாதங்களில் கல்ப ஸித்தி ஏற்படும். அவுரி, கிருஷிணாப்பிரகம், நிலைப்பனைக் கிழங்கு, சீந்திற்கொடி இவைகளை ஸமனெடை தூள் செய்து கால்பல அளவு சாப்பிட்டுவர, ஒரு வருஷத்தில் கிழத்தனம் நீங்கும்.

22. நிலப்பனைக்கிழங்குக் கல்பம்

இது தங்கநிறமுள்ள புஷ்பமும், பேரீச்சை போன்ற இலையும், வெளுத்தும் அம்புபோன்ற வேரும் உள்ளது. அதன் வேரை நிழலிலுலர்த்தித் தூள் செய்து தேன் நெய் சேர்த்துச் சாப்பிடவும். பாலன்னமருந்தி வரண்ட ஆகாரங் களை விலக்கிவிடவும். மூப்பு விலகும்.

23. இந்திரவல்லீ கல்பம்

வேருடன் பேய்க் கும்மட்டியைப் பிடுங்கிக் காயவைத்துத் தூள் செய்து அதனுடன் வசம்பும் விரணக்கினியும் வகைக்கு ஸமனெடையும் திரிகடு சூர்ணம் அரைப்பங்கும் சேர்த்து கால்பல அளவு தேன் சேர்த்துக் காலையில் சாப்பிட் ஆறு மாதங்களில் ஸித்தி ஏற்படும்.

24. ஜ்யோதி கல்பம்

ஜ்யோதிமரத்தின் வேர் காய் பட்டை பூ இலை இவைகளைக் காயவைத்து 21 நாட்கள் தேன் சேர்த்து நெற்குவியலில் வைத்தெடுத்து உபயோகிக்க, முன்போல ஸித்தி ஏற்படும்.

25. அமுக்கராக்கிழங்கு கல்பம்

அமுக்கராக்கிழங்கு, செம்முள்ளி, சோம்பு இம்மூன்றையும் தூள் செய்து தேன் நெய் சேர்த்து கால்பல அளவு காலையில் சாப்பிட்டு ஒரு வருஷம் ரஸாயன முறைப்படி ஸேவிக்க ஸித்தி ஏற்படும்.

26. வாலுளுவை கல்பம்

கல்ப முறைப்படி வாலுளுவையின் விதைகளை சேகரித்து வெயிலில் உலர்த்தி மேல் தோல் நீக்கி இடித்து அதிலிருந்து எண்ணெய் எடுக்கவும். அவ்வெண்ணெய்க்கு சமம் பாலும் கால் பங்கு தேனும் சேர்த்து இளந்தீயில் காய்ச்சி தைலம் தயாரித்து அதில் கர்பூரம், தக்கோலம், லவங்கப்பட்டை, ஜாதிக்காய் இவை ஸமனெடை சேர்த்து 16 பலம் தைலத்தில் ஒருபலம் சேர்த்து கலக்கி தைலபாண்டத்திலிட்டு 21 நாள் முதல் 90 நாள் வரை நெற்குவியலில் வைத்து எடுத்துப் பின் தைலத்தைக் காலையில் ஒரு சொட்டிலிருந்து ஒரு பலம் வரைக் கிரமமாக அளவை அதிகரித்துச் சாப்பிட்டு வரவேண்டும். தைலம் சாப்பிட்டதும் முதலில் பிரக்ஞை இழப்பான். பிறகு மயக்கம் தெளிந்ததும் அழுவதும் சிரிப்பதுமாக இருப்பான். மயக்கம் தெளியும் பொழுது பசுவின் பாலில் தேன் கலந்து கொடுக்க கிரமமாக மயக்கம் நன்கு தெளியும். பிறகு அறுபதாங்குறுவை அன்னமும் பசுவின் பாலும் ஆகாரமாகக் கொடுக்க வேண்டும்.

இவ்விதம் ஒருமாதம் செய்ய ஸூர்யனுக்கொப்பாக காந்தியும் பலமும் மேதையும் பெற்று அத்யயனம் செய்யப் பெறாத வேதங்களையும் அறிந்தவனாகின்றான். கருடனுக் கொப்பான கண்பார்வை பெற்று நடுப்பகலில் ஸூர்யனைப் பார்க்கும் திருஷ்டி பலமும் பெறுவான். இவ்விதம் ஒரு வருடம்வரை ஸேவிக்க, அபூர்வமான திவ்ய ஸித்தி பெறுவான்.

27. குக்குல கல்பம்

இது மஹிஷாக்ஷி, தங்க நிறமுள்ளது, குமுதம், பத்மகம் என நான்கு விதம். தங்கநிறமுள்ளது ரஸாயனத்தில் சிறந்தது. குக்குலுவை சிறுதுண்டுகளாக்கி பசு நெய் தடவி பசுவின் நெய்யில் தோலாயந்திரத்திலிட்டுக் காய்ச்சி வறுபட்டவுடன், திரிபலையும் கந்தகமும் ஸமனெடை சேர்த்து எல்லா வற்றிற்கும் சமம் குக்குலுவும் சேர்த்து ஒரு நிஷ்க அளவு சாப்பிட சீதவாதம், விரணம், பிடகை கண்டமாலை, முதலியன நீங்கும். 21 வருஷங்கள் சாப்பிட வைரம் போன்ற தேகம் பெறுவான்.

28. கஞ்சா கல்பம்

கஞ்சா 1 3 5 7 10 11 13 இலைகளுடன் காணப்படும். காய்களுடன் கூடிய கொடி ஸ்திரீஜாதி எனவும், மரமாயிருப்பது புருஷஜாதி எனவும் கருதப்படுகின்றது. சிவமூலி, விஜயா, பங்கா, கஞ்சா, ஸித்த மூலிகை, ஸித்தி, மனோன்மணி என்ற பல காரணப்பெயர்கள் இதற்கு உண்டு.

கஞ்சா பயிரிடும் முறை : மணல் கூழாங்கல், கற்களை அகற்றிப் பூமியைப் பதனிட்டு கறுப்புப் புழுதி மண்ணுடன் மிருதுவாயுள்ள பூமியில் பாம்பின் மாம்ஸமம் சாணமும் எருவாகச் சேர்த்து அதில் தோலுடன் கூடிய பெரிய கஞ்சாவிதைகளைப் புஷ்யரவியிலோ சுக்லபக்ஷத்திலுள்ள

சிரவண நக்ஷத்திரத்திலோ பாம்பின் வாய் மாம்ஸத்தினுள் வைத்துப் பூமியில் இடவேண்டும். ஸ்னானம் செய்து பூஜை முதலியவைகளை முடித்து வடக்கு அல்லது கிழக்கு முகமாக நின்று அழிஞ்சில் எண்ணெய்யுடனும் பசும்பாலுடனும் ஜலத்தைக் கலந்து அதை வார்க்கவேண்டும். இலைகளை பூச்சி அரித்தால் உப்பு கலந்த நீரைத் தெளிக்கவேண்டும். இலை விரிந்தவுடன் மேல் கொத்தைக் கிள்ளி செடியிலுள்ள தூவாரத்தில் ஒரு நிஷ்க அளவுள்ள ரஸத்தைச் செலுத்தி மேல் குக்குலுவினால் வாயை மூடிப் பூத்துக் காய்க்கும் வரை மத்யம், மாம்ஸம் கலந்து ஜலம் வார்க்க வேண்டும். ஜடாமாம்ஸியை செடியில் கட்டி தேனை ஜலம் கலந்து வார்க்கலாம். அல்லது தனிமத்யத்தை ஜலம் கலந்து வார்த்து வளர்ப்பதுமுண்டு.

கஞ்சா கல்பம் தயாரித்தல் : பங்குனி மாதத்திய கிருஷ்ணபக்ஷசதுர்தசியில் பைரவர் நந்தீசர் இவர்களைப் பூஜித்து மத்யமாம்ஸ நிவேதனங்களுடன் சிகப்பு, மஞ்சள், வெள்ளை, கருப்புநிறமுள்ள நூலால் செடியைச் சுற்றி ரக்ஷாபந்தனம் செய்து அமிருதேசுவரியை தியானம் செய்து அம்மந்திரத்துடன் விதையுடன் நன்கு துளிர்த்த இலைக்கொத்தை எடுத்து இளம் வெயிலில் நன்கு சுத்தமான பூமியில் உலர்த்தவும்.

பிறகு அதைத் தூள் செய்யவும். இரண்டு புதிய பானைகளை நெருப்பில் காய்ச்சி அதில் இத்தூளைப் போட்டு பிரட்டிப் பாகமடையச் செய்த குந்துமணி இலைச் சாற்றாலும், ஊமத்தை இலைச் சாற்றாலும் வகைக்கு 7 தடவை பாவனை செய்து அலம்பி எடுத்துக் கொள்ளவும்.

கரந்தை, பிராம்மீ, கற்றாழை, சதாவரீ, நெல்லிமுள்ளி, சுக்கு, மிளகு, ஏலரிசி இவை வகைக்கு ஒரு பலம் தூள் செய்து சேர்த்து, அதற்கு சமம் கஞ்சாவும் சேர்க்கவும். எல்லாவற்றிற்கும் சமம் பூராசர்க்கரையை பசுவின் பால்

விட்டுப் பாகு செய்து நூல் பதத்தில் கரந்தை முதல் கஞ்சாவரை சேர்த்துக் கிளறி ஆறியவுடன் தேனும் நெய்யும் வகைக்கு சர்க்கரையின் அரைப்பங்கு சேர்த்துக் கொள்ளவும். ஒருமாதம் தான்ய புடமிட்டு பின் மஹாவடுக மந்திரஜபம் செய்து நெல்லிக்கனியளவு தினம் இரண்டு அல்லது மூன்று தடவை சாப்பிட்டு பாலன்னம் அருந்தி வரவேண்டும். மூன்று வருஷங்களில் நரை திரை அகன்று பூசரஸித்தி பெறுவான். இது அக்னி பாக ரஸாயனம்.

நிலப்பனைக் கிழங்கு, திரிபலை, கொடிவேலி, அமுக்கராக்கிழங்கு இவைகளை முறையே 1-2-3-4 பங்குகள் சேர்த்து ஸர்வஸ்மம் கஞ்சாவும் சேர்த்துத் தேனில் கிளறி வெயிலில் ஒரு பக்ஷம் வைத்து நெல்லிக்கனி அளவு 8 மாதங்கள் வரை சாப்பிட நல்ல சாந்தி பெறுவான். இது ஸௌர்ணபாக ரஸாயனம்.

கஞ்சா 3 பலம், அதிமதுரம் 2 பலம், ஏலரிசி 1 பலம், சித்திரமூலம் அரைப்பலம், சந்தனம் 1 பலம், சர்க்கரை 7 நூ பலம் தங்கத்தகட்டுத்தூள் அல்லது பஸ்மம் நூ நிஷ்கம், குங்குமப்பூ நூ நிஷ்கம் இவைகளை நெய்யில் அரைத்துக் கிளறி, நிலாவில் சுக்லபக்ஷபஞ்சமியிலிருந்து பூர்ணிமை வரை வைத்து சாப்பிடவும். இது சந்திரபாகரஸாயனம்.

ஆடி முதல் நான்கு மாதங்களில் அக்னி பாகத்தையும், பங்குனி முதல் நான்கு மாதங்களில் ஸௌர்ணபாகத்தையும் கார்த்திகை முதல் நான்கு மாதங்களில் சந்திரபாகத்தையும் செய்யவும்.

கஞ்சாவின் உபயோகங்கள்: கரந்தை, கொடிவேலி, நொச்சி இவைகளுடன் குஷ்டத்திலும்; பிராம்மி, கற்றாழை இவைகளுடன் அபஸ்மாரத்திலும்; திரிபலை, திரிகடுகளுடன் க்ஷயத்திலும்; பருத்திவிதை, பொன்னாங்கண்ணிகளுடன்

பித்தவியாதிகளிலும்; எருக்கு, கள்ளி இவைகளின் இலைச்சாற்றுடன் குல்மசூலத்திலும்; வசம்பு,அருகம்புல் சூர்ணத்துடன் ஞான விருத்திக்காகவும்; அதிமதுரம், கந்தகம் இவைகளுடன் குஷ்டத்திலும்; இலவம்பிசின் சர்க்கரையுடன் வீர்யவிருத்திக்காகவும்; வட்டத்திருப்பி; கடுகுரோகிணி, திரிகடு இவைகளுடன் கபவியாதியிலும்; வெண்குந்து மணியுடன் விஷமுறிவிற்கும்; வாய் விளங்கத்துடன் குஷ்டத்திலும்; காட்டு மிளகு, சிற்றாமணக்குவேர் இவைகளுடன் வாதவியாதிகளிலும் - ஆக இப்பன்னிரண்டு அனுபானங்களுடன் 12 மாதங்கள் சாப்பிட ரஸாயன ஸித்தி ஏற்படுகின்றது.

ரஸம், கந்தகம், அப்பிரகபஸ்மம், ருருத்ராக்ஷம், ஸவர்ணபஸ்மம் இவைகளை கஞ்சா ரஸத்தால் ஒரு பக்ஷம் பாவனை செய்து பூதரயந்திரத்தில் புடம் போட்டுத்தூள் செய்து அதற்கு நான்கு பங்கு கஞ்சாத்தூள் சேர்த்து நெய் சர்க்கரை சேர்த்து நிஷ்க அளவில் சாப்பிட ஆறு மாதங்களில் ஸித்தி ஏற்படுகின்றது.

ஆலம் விழுதின் சூர்ணத்துடன் சர்க்கரை நெய் தேன் சேர்த்தும், அல்லது நாயுருவி சூர்ணத்துடன் நெய் சேர்த்தும் சாப்பிடலாம். திரிபலை, சர்க்கரை, சித்ரகம், சிவதை, திரிகடு, ஆடாதொடை, அருகம்புல், கருசலாங்கண்ணி, மிளகு, அதிமதுரம், ஓமம், இந்துப்பு, கர்பூரம், கச்சோரம் இவைகளுக்கு சமம் கஞ்சா சேர்த்து சூர்ணம் செய்து நெய் தேன் சர்க்கரை சேர்த்து சாப்பிடலாம்.

கஞ்சா 8 பங்கு, கரந்தை 4 பங்கு, பிராம்மீ 2 பங்கு, அமுக்கறாக்கிழங்கு ஒரு பங்கு, திரிகடு 2 பங்கு, திரிபலை 2 பங்கு, மனோசிலை, கந்தகம் ரஸம் இவை வகைக்கு ஒரு பங்கு, ஸவர்ணபஸ்மம், முத்து பவழம் வகைக்கு அரைப்பங்கு தேன் நெய் சேர்த்து அரைத்துப் பானையிலிட்டு

7 நாள் தான்யபுடமிட்டு நிஷ்க அளவில் மாத்திரை செய்து ஸேவிக்கலாம். ஏலரிசி திரிபலை திரிகடு திரிஜாதகம் இம்மூன்றுக்கும் ஸமனெடை கஞ்சா சேர்த்துத் தேன் நெய்யுடன் காஸச்வாஸரோகிகள் சாப்பிடலாம்.

மஞ்சளுடன் மேஹத்திலும், பிரமிவழுக்கை வசம்புடன் புத்தி-வாக்குவன்மை பெறுவதற்கும், ஸர்வஸ்வாதுவுடன் பித்தரோகங்களிலும் கொடுக்கலாம். திராக்ஷை, சர்க்கரை, பனம்பழம், பேரீச்சம்பழம், பால் திரட்டு, வாழைப்பழரஸம், இளநீர் இவைகளை கர்ப்பூரம் சேர்த்து இனிய பக்ஷணமாகச் செய்வதற்கு ஸர்வஸ்வாது எனப்பெயர். இந்த ஸர்வஸ்வாதுவிற்கு நான்கு பங்கு பால் சேர்த்து தேன் பதத்தில் காய்ச்சி எடுத்து துணியால் வடிக்கட்டி ஏலரிசி சர்க்கரை நெய் தேன் சேர்த்து கஞ்சாவை கலந்து சாப்பிட நல்ல விருஷ்யமாகின்றது.

பசும் பாலில் ஸமஅளவு ஜலம் சேர்த்து அதில் கஞ்சாவை துணியில் முடித்துப் போட்டு கால் பங்காகக் காய்ச்சி எடுத்து அப்பாலைத் தயிராக்கி வெண்ணெய் கடைந்து எடுத்து அத்துடன் பச்சைக்கர்ப்பூரம், ஏலரிசி, சர்க்கரை தேன் சேர்த்து சாப்பிட புஷ்டி தரும். அதன் நெய்யை 100 தடவை ஸ்தன்யத்தில் கடைந்து எடுக்க சததௌத கிருதமாகும். சிறுநாகப்பூ, கச்சோரம், லவங்கம், ஏலரிசி, அகில், பச்சைக்கர்ப்பூரம், சந்தனம், கஸ்தூரி, தக்கோலம், குங்குமப்பூ, இவைகளுக்கு சமம் கஞ்சாவிதை சேர்த்துப் பசும் பாலிலரைத்து நிஷ்க அளவில் மாத்திரை உருட்டித் தாம்பூலத்துடன் ஸேவித்து வர மனதிற்கு ஆனந்தமளிக்கவல்லது. பசும் பாலில் பாதி ஜலம் கலந்து அதில் காட்டகத்திப்பூ, ஜாதிக்காய், சுக்கு இவைகளுக்குச் சமனெடை கஞ்சாவையும் சேர்த்துப் பால் மீதமாகும் வரைக் காய்ச்சி அப்பாலைச் சர்க்கரை நெய் தேன் சேர்த்துச் சாப்பிடலாம். ஸித்தயோகம் என இதைக் கூறுவர்.

ஓமம் அல்லது மஞ்சள் தூள் சேர்த்து சொரி, படர் தாமரை போன்ற நோய்களிலும், தாளகத்துடன் பிரதரம் வீக்கம் முதலிய நோய்களிலும், மனோசிலையுடன் அரிப்பு, நோயிலும் கொடுக்கலாம். குடுவையில் கஞ்சாவை நல்லெண்ணெய்யால் வதக்கி, பிறகு பாகு சேர்த்து நெய்யுடன் கிளறி சாப்பிட நல்ல வீர்ய விருத்தி ஏற்படும். கடுக்காய், சேங்கொட்டை, எள்ளு, வெல்லம் இவைகளை ஸமனெடை சேர்த்து கஞ்சாவை உட்கொள்ள அர்சஸ் நோய் விலகும். ஓமம், ஜீரகம் கருஞ்சீரகம், சோம்பு, இவைகளுடன் நெய் சேர்த்து உபயோகிக்க கீல் வாயு, மயக்கம், வாந்தி, உந்மாதம், தலைவலி, இவைகள் நீங்கும். சர்க்கரை நெய் சுக்கு திப்பிலி இவைகளுக்குச் சமம் கஞ்சா சேர்த்து நெய்விட்டரைத்துச் செய்த பஞ்சாகதம் என்ற மாத்திரை ஹிருதயவியாதி, பீலிகை, உதரம், பகந்தரம் போன்ற வியாதிகளை அகற்றுகின்றது. சித்ரகத்துடன் அக்னி தீப்தி அளித்தும், திரிபலையுடன் சூல நோயை அகற்றியும், திரிகடுவும் வாயுவைக் கண்டித்தும், சர்க்கரையுடன் பித்நோய்களைப் போக்கியும் உதவுகின்றது. வெள்ளைக்காகணத்தி விதையையும் கஞ்சாவையும் கழுதைமூத்திரத்தாலரைத்து நஸ்யமிட அபஸ்மாரம் பூதப் பிரேதபீடைகள் விலகும். கஞ்சாத்தூளை நெய் தேன் சேர்த்து நெல்லிக்கனி அளவு சாப்பிட வாக்சுத்தியும் வீர்யவிருத்தியும் ஏற்படும். இரவில் தேன் நெய் நெல்லிக்காய்ச் சாறு அல்லது கோரைக்கிழங்குச்சாறு சேர்த்து உபயோகிக்க கண்ணுக்கு தெளிவும் யௌவனமும் உண்டாகும். வெல்லம் கடுக்காய் சேர்த்து உபயோகிக்க கண்ணுக்கு தெளிவும் யௌவனமும் உண்டாகும். வெல்லம் கடுக்காய் சேர்த்து உபயோகிக்க அர்சஸ் விலகும். கஞ்சாகுச்சியில் பல் துலக்க பல் திடப்படும். நல்லெண்ணெய்யில் தோய்த்த குச்சியால் நாக்கை வழிக்க நாக்கு சுத்தமாகும். இளநீரில் வேகவைத்து நெய் தேன் பால் சேர்த்து சாப்பிட விருஷ்யமாகும். கடுக்காய், நெல்லிக்காய்,

வகைக்கு ஒரு பங்கும் கஞ்சா 2 பங்கும், சர்க்கரை 4 பங்கும் சேர்த்துத் திரைலோக்ய மோஹனமென்ற மருந்தாகின்றது.

திரிகடு அதிமதுரம் சவ்வியம் சாதுர்ஜாதம் திரிபலை திராக்ஷை கண்டத்திப்பிலி இவை வகைக்கு ஒருபங்கு சாரப்பருப்பு 7 பங்கு கஞ்சா 14 பங்கு இவைகளுக்கு 3 பங்கு வெல்லத்தைப் பாகுவைத்து அதில் முன் கூறிய சூர்ணத்தை போட்டுக் கிளறி மாத்திரை செய்து சாப்பிட நல்ல வாஜீகரணமாகும்.

திரிகடு திரிஜாதம் வகைக்கு ஒருபங்கு, கஞ்சா 6 பங்கு, கோதுமைமாவு 12 பங்கு, வெல்லம் 24 பங்கு சேர்த்து மாத்திரை செய்து உபயோகிக்கலாம். நல்ல ஆரோக்கியமளிக்கக்கூடியது. இவ்விதமே கடலை பயறு உளுந்து துவரை எள்ளு அவரை விதை முதலிய ஏதாவது ஒரு தான்யத்துடன் சேர்த்து மோதகங்கள் செய்து காலை மாலை சாப்பிடலாம்.

திரிகடு திரிஜாதகம் ஜீரகம் இவைகளுடன் ஸமனெடை சேர்த்தும் மோதகம் செய்யலாம்.

தக்கோலம், சந்தனம், விளாமுச்சம்வேர் பச்சைக்கர்பூரம், சிறுநாகப்பூ ஓலரிசி, கிராம்பு, அதிமதுரம், திப்பிலி, மிளகு இவைகள் ஸமனெடை சேர்த்து கஞ்சா 10 பங்கும், சர்க்கரை 20 பங்கும் சேர்த்து செய்த பஞ்சபாணம் என்ற சூர்ணம் எல்லாவித வியாதிகளிலும் சிறந்தது. திரிபலை திரிஜாதகம், பச்சைக்கர்பூரம், கார்போகரிசி, திரிகடு இவைகளை ஸமனெடை சேர்த்து அதற்கு சமம் கஞ்சாவையும் எல்லாவற்றிற்கும் சமம் சர்க்கரையும் சேர்த்து சூர்ணித்து சாப்பிட தேகஸித்தி ஏற்படும். தண்ணீர்விட்டான் கிழங்கு, திரிபலை, திரிகடு, நிலப்பனைக் கிழங்கு இவைகளுக்குச் சமம் கஞ்சாவும் எல்லாவற்றிற்கும் சமம் சர்க்கரையும் சேர்த்து செய்த சூர்ணம் நல்ல விருஷ்யமாகின்றது.

காலையில் சுக்கும் சர்க்கரையும் நெய்யும் சேர்த்து சாப்பிட ஆயுளையும், பாலில் தயாரித்தது விருஷ்ய சக்தியையும், ஆகாரத்திற்கு முன் அமுக்கறாக்கிழங்கு சூர்ணத்துடன் தேனில் சாப்பிட பலத்தையும் புஷ்டியையும், பூனைக்காலிவிதை, உளுந்து இவைகளுடன் எருமைப் பாலில் தயாரிக்கப்பட்டது அதிகவீர்ய விருத்தியையும் செய்யும். காரிலவம் பிசின் தண்ணீர்விட்டான் கிழங்கு, கருசலாங் கண்ணி சீந்திற்கொடி இவைகளின் ரஸத்தால் காந்த பாத்திரத்திலிட்ட கஞ்சாவை தனித்தனியாக 7-7 தடவை பாவனை செய்து சூர்ணம் செய்து தேனுடன் சாப்பிட மூப்பு மரணமகலும். காரிலவின் பஞ்சாங்கத்துடன் ஸமனெடை கஞ்சாகூட்டி தேன் நெய்யுடன் சாப்பிட நரை திரை அகலும்.

புஷ்ய ரவியில் மெருகன் கிழங்கை ஸமூலம் எடுத்து நிழலில் உலர்த்தி ஸமனெடை கஞ்சா சேர்த்து இடித்து தேன்சேர்த்துப் பானையிலிட்டு 21 நாள் தான்யபுடம் போட்டு தினம் ஒரு பலஅளவு இரண்டு மண்டலம் வரை சாப்பிடவும். காரம் புளிதள்ளி மிருதுவான கஞ்சி போன்ற ஆகாரம் சாப்பிடவும். இளம் சூரியனைப்போன்ற காந்தியும் நூறு காதம் நடந்தாலும் களைப்பின்மையும் நல்ல புத்தி பலமும் அடைவான். கொட்டைக்கரந்தை கஞ்சா இவைகளை ஸமனெடை கஞ்சா சூர்ணமும் சேர்த்துத் தேன் நெய்யுடன் சாப்பிட யௌவனம் திரும்பும். எள்ளையும் கஞ்சாவையும் சேர்த்து பசு நெய்யுடன் உருண்டைகள் செய்து சாப்பிடலாம். சமைக்கத்தகுந்த வியஞ்சனங்களுடன் கஞ்சா இலையையும் சேர்த்து நெய்யில் வதக்கி வெல்லம் ஏலரிசி மிளகு ஜீரகம் இவைகளைச் சேர்த்துச் சாப்பிடலாம்.

அரிசி கஞ்சாவிதை தோல் நீக்கிய பயறு இவைகளை தேங்காய்க்குள் துவாரம் வழியாகச் செலுத்தி மூடி மேல் சாணியும் மண்ணும் சேர்த்துப் பூசி இளந்தீயில் பாகம் செய்யவும். பிறகு உள்ளிருக்கும் தேங்காயுடன் அரிசி

முதலியவைகளை எடுத்து தேன் நெய் சர்க்கரை சேர்த்துச் சாப்பிட நல்ல விருஷ்யயோகமாகின்றது. பசும் பாலில் கஞ்சாவிதையை துணியில் கட்டி பால் பாதி மீதமாகும் வரை காய்ச்சி விசிறி ஆறவைத்து நிலப்பனைக்கிழங்கு பூனைக் காலிவிதை, பச்சைக்கற்பூரம், ஏலரிசி, கிராம்பு, நெய் தேன் சர்க்கரை சேர்த்து இரவில் சாப்பிட மஹாவிருஷ்ய யோகமாகின்றது. பாலில் வேகவைத்து கஞ்சா விதையை கற்றாழைச் சாற்றால் அரைத்து வெண்கலப்பாத்திரத்தில் தடவி வெய்யிலில் வைத்து அதில் வடியும் எண்ணெய்யை நஸ்யமிட மூக்கிலும் தலையிலும் ஏற்படும் எண்ணற்ற வியாதிகளையும் காஸம் சுவாஸம் போன்றவைகளையும் கண்டிக்கின்றது. இவ்விதம் பற்பல நோய்களில் தகுந்த அனுபானத்துடன் இதைக் கொடுக்கலாம்.

கஞ்சாவின் குணங்கள்: நாவரட்சியின்மை, மனத்திற்கு சுகம், திருப்தி, தனது நோக்கம் நடைபெறுவது, வாக்குவன்மை, தெளிந்தமுககாந்தி, பயிற்சிக்கு உகந்த தேகம், ஸ்னானம் தியானம் தேவதார்சனை போன்றவைகளில் ஈடுபாடு, ஸங்கீதம், கவிதை, உபன்யாஸம் போன்றவைகளில் தேர்ச்சி, தத்வஞானம், எல்லா பிராணிகளிடமும் தயைவாதங்களிலும் யுத்தத்திலும் போட்டியிலும் ஜயம் இம்மாதிரி பல நல்ல குணங்கள் கஞ்சாவை ரஸாயன முறைப்படி சாப்பிடுவதால் ஏற்படுகின்றன.

கஞ்சாவினால் ஏற்படும் கெடுதல்களும் பரிகாரமும்: இம்மூலிகையின் தவறான அதிக உபயோகத்தால் ஏற்படும் கெடுதல்களை ஒன்பது நிலைமைகளாகப் பிரிக்கலாம். முதல் நிலைமையில் கண் சிவந்து மூக்கு நாக்கு தொண்டை உதடுகளில் வரட்சி, உஷ்ணமான ச்வாஸம், பக்கங்கள் சூடாகுதல் இவை குறிகளாகும். இரண்டாவதில் கண்ணிமை மூடிக் கொள்ளுதலும் சரீரச்சோர்வும் குறிகள், மூன்றாவதில் கண் கால் கைகளில் எரிச்சலும் தழதழத்தகுரலும்,

நான்காவதில் பசிதாகமதிகரிப்பதும் தூக்கத்தினால் கண்சுழலுதலும் ஐந்தாவதில் நாகுழறி தான் சொல்வதையே மறந்து பேசுவதும், ஆறாவதில் தன்னையே மறப்பதும் அபஸ்மாரமும், ஏழாவதில் கை ஓய்ச்சலும் சரீரம் முழுவதும்அலைபாய்வது போன்ற உணர்ச்சி எட்டாவதில் திக்பிரமமும் புருவம் நெரித்தலும் அழுகையும், ஒன்பதாவதில் காதில் இரைச்சல் மூர்ச்சை வாந்தி பூமியில் உருளுதல் அதிக வியர்வை தேய்ந்த குரல் இம்மாதிரி மரணபரயந்தமான அனேகவித துக்கங்களும் குறியாகும்.

இக்கெடுதல்களுக்குப் பரிகாரமாக விரேசனம், புளிப்புச்சாறு, குளிர்ந்த ஜலத்தில் ஸ்னானம், சந்தனம் விளாமிச்சம் வேர் பச்சைக்கர்பூரம் இவைகளை பனிநீரில் அரைத்துப்பூசுதல், மல்லி ஜாதி சம்பகம் போன்ற புஷ்பங்களைத் தரித்தல், தாமரைத்தண்டு இலை, வாழை இலை இவைகளில் படுத்தல், தாம்பூலத்துடன் ஏலம் கர்பூரம், கிராம்பு, கந்தக்காம்பு தக்கோலம் இவைகள் ஸேவித்தல் நிலாவில் படுத்தல் சர்க்கரை பால் மாமிஸரஸம் இவை, அதிகமான ஆகாரத்தைச் சாப்பிடுதல், இம்மாதிரியான மற்றும் பலகரமான சீதளமான ஆகார விஹாரங்களை ஸேவிக்கவேண்டும்.

29. கஞ்சுகீ கல்பம்

கஞ்சுகீ என்பது ஏழு எட்டு இலைகளுடன் முள்ளங்கி போன்ற கிழங்குடன் பால் உள்ளதும் மஞ்சள் சிகப்புநிறமுள்ள தண்டுகளுடன் வெளுத்த செடி ஆடி கார்த்திகை மாதங்களில் சைத்ய பிரதேசத்தில் முளைக்கக்கூடியது. ஆட கத்தினால் இதற்கு இலை உண்டாகும். குடீபிரவேசரஸாயனமுறைப்படி இரண்டு கட்டைவிரல் அளவுள்ளதை 8 பலமுள்ள பாலில் அரைத்துக் கலக்கிச் சாப்பிட்டு அது ஜீர்ணமானவுடன் பாலும், நெய் போன்ற ஸ்னேஹம் சேராத கஞ்சியை சிறிது புளிப்பு

உப்பு சேர்த்தும் சாப்பிடவும். குளிர்ந்த ஜலத்தைத் தொடக்கூடாது. 7 நாள் ஸேவிக்க எல்லா வியாதிகளும் நீங்கும். மூன்றாவது வார உபயோகத்தில் பாம்பு தன் சட்டையை உரிப்பது போல் தோலும் பல்லும் மயிர்களும் உதிர்ந்து புதிய சரீரத்துடன் ஐந்நூறு வருடங்கள் ஜீவிப்பான்.

கஞ்சுகிக் கிழங்கைத் தூள் செய்து பாலில் கால்பல அளவு கலக்கிக் கல்கண்டு ஒரு பலம் சேர்த்து சாப்பிட, நகம் கேசம் எலும்பு பற்கள் இவைகளிலுள்ள ரோகங்கள் நீங்கும். ஒரு பலம் கஞ்சுகீ சூர்ணத்தை பசும்பால் ஒரு பிரஸ்தத்தில் போட்டு சூர்ணம் மீதமாகும் வரைக் காய்ச்சிப் பசும் நெய்யில் வறுத்துச் சர்க்கரை தேன் சேர்த்து ஒருமண்டலம் வரை பால் அன்னம் ஆகாரத்துடன் சாப்பிட யானை போன்ற பலம் பெற்ற எப்பொழுதும் 16 வயதுள்ள இளைஞனாகவே இருப்பான்.

30. குக்குடீ கல்பம்

மரகதமணி போன்ற பச்சை நிறமுள்ளதும் பேரீச்சையின் இலையைப் போன்றதுமான இலையுடனும், கோழி மூக்கைப் போன்ற கிழங்குடனும் சிறிது உரைப்பும் பிசிபிசிப்புமுள்ளது குக்குடி எனற் ஓஷதி. வாது ரோகங்களையும் அர்சஸ்முளை, விஷங்கள் இவைகளைப் போக்குவதில் நிகரற்றது. கிழங்கை நெய்யில் வறுத்து குந்துமணி அளவு குடீப்பிரவேசமுறையில் சாப்பிட்டு இளஞ்சூடான பால்சாப்பிட வேண்டும். அது ஜீர்ணமானவுடன் பாலன்னமும் ஜலான்னமும் சாப்பிடலாம். ஒரு மண்டலம் சாப்பிட க்ஷயம் குஷ்டம் போன்ற கொடும் வியாதிகள் அகலுகின்றன.

31. ஸோமலதா கல்பம்

இது ஹிமயம் போன்ற பனிமலைகளிலும் ஸஹ்யம் தேவகிரி ஸ்ரீசைலம் மலயம் மஹேந்திர முதலிய

மலைகளிலும் 24 வகைகளாகக் கிடைக்கின்றது. சுக்ல பக்ஷப் பிரதமையிலிருந்து தினம் இலை முளைத்து பௌர்ணமியின் 15 இலைகள் முறைத்தும் பிறகு முறையே ஒவ்வொரு இலையாக உதிர்த்து அமாவாஸையில் ஒரு இலை மட்டும் மீதமாகும் செடிகள் பாலுடன் காணப்படுபவை எல்லாம் ஸோமலதை வகுப்பைச் சேர்ந்தனவையே. இவை பாபிகளின் கண்ணில் புலப்படா.

குடீபிரவேச முறைப்படி நன்னாளில் குரு-தேவதை-கன்னிகைகளைப் பூஜைசெய்து மறுநாள் காலையில் ஸோமக்கிழங்கை தங்க ஊசியால் குத்தி அதினின்றும் வரும் ரஸத்தை 4 பல அளவு எடுத்து ஒரே தடவையாகச் சாப்பிட்டு மிகுதியை ஜலத்தில் கொட்டி விடவும். பகலில் நண்பர்களுடன் வாயடக்கி சாந்தமாக இருந்தும் மாலையில் உபவாஸத்துடன் பூஜை முதலியவைகள் செய்து இரவில் தர்பப்படுக்கையில் இருக்க வேண்டும். தாகமிருந்தால் குளிந்த ஜலத்தை மிதமாகச் சாப்பிடவேண்டும். மறுநாள் காலையில் ஸோமபானம் செய்யாமல் உட்கார ரத்தத்துடனும் கிருமிகளுடன் பித்த வாந்தி ஏற்படும். அன்று மாலைக் காய்ச்சி ஆறிய பசும்பால் சாப்பிட வேண்டும். மூன்றாவது நாள் நன்கு பேதியாகி முன் சர்ப்பிட்ட துஷ்ட ஆகாரங்கள் சரீரத்திலிருந்து விலகும். மாலையில் ஸ்னானம் செய்து காய்ச்சி ஆறிய பாலைச் சாப்பிடவும். நான்காவது நாள் உடல் வீங்கி அங்கங்களிலிருந்து ஸூக்ஷ்மமான கிருமிகள் வெளிவரும். அன்று சாம்பலின் மேல் படுத்துக் கொள்ளவேண்டும். தாகமிருந்தால் மிதமாக குளிர்ந்த ஜலமும், மாலையில் பசுவின் பாலும் சாப்பிடவும். 5-6 வது நாட்களில் காலை மாலை இருவேளையும் பாலருந்தவும். 7ஆவது நாள் சரீரத்தில் எலும்பும் தோலும் மீதமாகி உயிர் மாத்திரம் தங்கி நிற்கும். அன்று அவன் உடலை இளஞ்சூடான பசும்பாலால் குளிப்பாட்டி எள்ளு சந்தனம் அதிமதுரம் இவைகளை

அரைத்துப்பூசி பட்டுவிரித்த படுக்கையில் இளைப்பாறி பசும்பாலருந்த வேண்டும். 8ஆவது நாள் பற்கள் கேசரோமங்கள் நகங்கள் இவைகள் உதிர்ந்து விடும். ஒன்பதாவது நாள் அணு தைலம் தடவி ஸோமலதா கஷாயத்தால் ஸ்னானம் செய்விக்க அவனது தோல் கெட்டிப்படும். பிறகு 16ஆவது நாள் வரை தைலம் தேய்க்காமல் ஸோமலதாகஷாயத்தால் ஸ்னானம் செய்விக்க தோல் கெட்டிப்படும். 24ஆவது நாளுக்குள் பற்கள் அழகாக வரிசையாக கெட்டியாக உண்டாகும். 25ஆவது நாள் அறுபதாங்குருவை அரிசி சாதத்தை பாலுடன் சாப்பிடச் செய்யவும். ஒரு மாதத்திற்குள் அழகான நகங்களும் தேககாந்தியும் ஏற்படும். ஒரு மாதத்திற்குப் பின் எள்ளு, விளாமுச்சம் வேர், சந்தனம் இவைகளை அரைத்துப் பூசி பாலில் ஸ்னானம் செய்விக்க கேசரோமங்கள் வளரும். 37 நாட்களுக்குப் பின் குடிசையின் இரண்டாவது ஆவரணத் திலும், மூன்றாவது ஆவரணத்திலும் ஒவ்வொரு முகூர்த்த மிருந்து விட்டு மறுபடியும் உள்செல்லவேண்டும். பலா தைலத்தையும் நெய்யையும் தடவி ஸனானம் செய்யவும். 40 நாட்களுக்குப்பின் குடிசையின் இரண்டாவது ஆவரணத்திலும் ஒவ்வொரு முகூர்த்தமிருந்து விட்டு மறுபடியும் உள்செல்ல வேண்டும். பலாதைலத்தையும் நெய்யையும் தடவி ஸ்னானம் செய்யவும். 40 நாட்களுக்குப் பின் அஜசிருங்கி (கர்கடசிங்கியின் பேதம்) தோலை அரைத்துப் பூசி வென்னீரில் ஸனானம் செய்யவும். சந்தனம், விளாமுச்சம் வேர்கற்பூரம் இவைகளை அரைத்து உடலில் பூசிக்கொண்டும் பால் தேன் நெய் சர்க்கரை சேர்த்து அறுபதாங்குருவையரிசி கஞ்சி சாப்பிட்டும், இரண்டாவது ஆவரணத்தில் வஸிக்கவும். பிறகு ஐந்து நாள் சிறிது நேரம் குடிசையின் வெளியில் வந்து வெயிலிலும் காற்றிலும் உட்காரலாம். வெயிலையும் காற்றையும் ஸகிக்கும் திறமை பெற்றபின் மூன்றாவது ஆவரணத்திலேயே வஸிக்கலாம். பின் 22ஆவது நாள்

தேகஸித்தியடைந்து வெளி வந்து தேவ-குரு-ஸித்தர்களைப் பூஜை செய்து வாழலாம். அவன் பூவுலகில் வாழும் தேவனாவான் என்பதில் ஐயமில்லை.

சிறிய ஸோமவல்லியின் 21 தண்டுகளை தங்கம் அல்லது வெள்ளிப் பாத்திரத்திலிட்டு இரண்டு பலம் பசும் பால் சேர்த்து சாப்பிடவும். குடீப்பிரவேச முறையும் மற்ற முறைகளும் முன்போலவே அனுஷ்டிக்கப்பட வேண்டும். அணிமா முதலிய எட்டு ஸித்திகளும் பெறலாம்.

32. சீந்திற்கொடி கல்பம்

சீந்திற்கொடி 100 பலமும் நெய் தேன் சர்க்கரை வகைக்கு ஒரு பிரஸ்தமும் சேர்த்துக் கால் பலஅளவு ஒரு வருஷம் வரை சாப்பிடபற்பல வியாதிகள் தீரும். சீந்திற்கொடி 25 பலம், சர்க்கரை 50 பலம், மூங்கிலுப்பு, பூனைக்காலிவிதை, அமுக்கறாக்கிழங்கு, மூக்கரட்டைவேர் நெய் இவை வகைக்கு 10 பலம், திராக்ஷை 8 பலம் இவைகளை ஒன்றாகக் கலந்து பானையிலிட்டு ஒரு பக்ஷம் தான்யபுடம் வைத்து தினம் ஒரு பல அளவு சாப்பிட ஸித்தி ஏற்படும். அவ்விதமே சீந்திற்கொடி 100 பலம், தேன் 60 பலம், நெய் 40 பலம் இவைகளை 2 மாதம் வரை தான்ய புடம் வைத்துப் பிறகு பல அளவு சாப்பிடலாம்.

33. நீரடிமுத்து கல்பம்

மேற்கு சமுத்திரக்கரையில் கிடைக்கும் நீரடிமுத்துக் காய்களை, மழை காலத்தில் பழுத்தவைகளாக சேகரித்து காயவைத்துப் பொடி செய்து எள்ளைப்போலவோ, சிற்றாமணக்கைப்போலவோ எண்ணெய் எடுக்கவும். அதிலுள்ள நீர்வற்றும் வரை அதை இளந்தீயில் காய்ச்சி எடுத்துக் கொண்டு பதினைந்து நாட்கள் கழித்து அதிலிருந்து கால்பல அளவு சாப்பிடவும். நான்காவது வேளை சாப்பாட்டை நீக்கி அச்யுதனை ஸமரணம் செய்து ஐந்து

நாட்கள் வரை ஸேவிக்கவும். பிறகு ஒரு மாதம் ரை பயறன்னமாக சாப்பிட்டு வர குஷ்டங்கள் விலகும். பிறகு தேனும் நெய்யும் சேர்த்து 6 மாதம் வரை சாப்பிட ஸித்தியாகும்.

34. ஸோமராஜீ கல்பம்

கார்போகரிசிசை புஷ்யரவியில் சேகரித்து வெயிலில் காயவைத்துத் தூள் செய்து கால்பல அளவு வெந்நீருடன் கோஷ்டசுத்திக்காக மூன்று நாளும், பிறகு தேனுடன் ஆறுமாதம் வரையும் சாப்பிட ஸித்தி ஏற்படும்.

35. ஸமுத்திராப் பச்சை கல்பம்

இது பாலுள்ளதும் ஸூக்ஷ்மமான ரோமமுள்ளதுமான வெற்றிலை போன்ற இலைகளுடன் சிவந்த புஷ்ப முள்ளதுமான கொடி. இதன் வேர் நூறு பல எடையும் கடுகு ஆயிரம் எண்ணிக்கையுள்ளதும் சேர்த்து இடித்து ஒரு பக்ஷம் தான்யபுடம் வைத்து கால்பல அளவு பசும்பால் அனுபானத்துடன் சாப்பிடவும். பாலன்னமருந்தி ஒரு வருஷம் வரை ஸேவிக்க யௌவனம் திரும்பும். பன்னிரண்டு வருஷங்களில் ஸித்தி பெறலாம். இதன் வேர் 100 பலமும், அமுக்கறாக்கிழங்கு 300 பலமும் இடித்து நெய்விட்டுக் கிளறி கால்பல அளவு சாப்பிட்டுவர யானை போன்ற பலம் உண்டாகும். தண்ணீர்விட்டான் கிழங்கு அமுக்கறாக்கிழங்கு, நெரிஞ்சில், ஸமுத்திராப்பச்சைவேர் இவைகளின் சூர்ணத்தை நெய்யில் கிளறி கால்பல அளவு ஒரு வருஷம் வரை சாப்பிட ஸித்தியாகும். இவ்விதம் பற்பல முறைகளில் இதன் வேர் சிறந்த ரஸாயனமாகின்றது.

36. வஜ்ரவல்லீ கல்பம்:

வஜ்ரவல்லீ (பிரண்டை) யின் ஸமூலத்தின் சூர்ணம், திரிபலை அகத்தி வேர் இவை வகைக்கு 12 பலம் சேர்த்து 6 மாதங்கள் உபயோகிக்க ஸித்தி ஏற்படும்.

37. திலக்ஷீரியிகா கல்பம்:

திலக்ஷீரிணிகாவின் வேரை மௌனமாக பிடுங்கி வென்னீர் விட்டரைத்து குழப்பி கிழக்கு முகமாகவோ வடக்கு முகமாகவோ சாப்பிட்டு பால் நெய் சேர்த்து அன்னமருந்தவும். கிரமமாக அரை முதல் மூன்று நிஷ்க அளவு வரை சாப்பிட ஒரு வருஷத்தில் ஸித்தி ஏற்படும்.

38. பிராம்மீ கல்பம்

பிராம்மியை ஸமூலமெடுத்து அலம்பி உரலில் இடித்துச் சாற பிழிந்து சாரதாமந்திரத்துடன் அந்தச் சாற்றை அக்னியில் ஆயிரம் தடவை ஹோமம் செய்த பின் குரு முதலியவர்களைப் பூஜித்து அந்தச் சாற்றை ஒரு பல அளவு சாப்பிட்டு ஜீர்ணமானபின் பாலன்னமருந்தி வர வேண்டும். இவ்விதம் ஏழு நாட்கள் செய்து பிரும்மசர்யத்துடனிருக்க மேதை, காந்தி, தெளிந்த நாவன்மை அடையலாம். இவ்விதம் மற்றொரு வாரம் சாப்பிட கவி பாடும் சக்தியும் சொன்னதை மறவாமல் உடன் கிரகிக்கும் சக்தியும் ஏற்படும். மூன்று வாரங்கள் ஸேவிக்க திவ்யமான வாக் ஸித்தி ஏற்படும்.

பதினாறாவது உல்லாஸம்

1. அழிஞ்சில் கல்பம்

நான்கு தீரர்களான ஸாதகர்கள் சேர்த்து அழிஞ்சில் மரத்தினடியில் புல் பூண்டுகளைக் களைந்து சுத்தமாக்கி அங்க லிங்கத்தையும் குடத்தையும் வைத்து மரத்துடன் சேர்த்து ஒரே நூலால் பிணைத்து சந்தனம் புஷ்பம் இவைகளால் பூஜித்து வரவேண்டும். ஒவ்வொரு மாதமும் இரவும் பகலும் விழித்திருந்து மரம் புஷ்பித்துக் காய்க்கும் வரை காத்திருந்து பழுத்த பழங்களை சேகரித்துப் பானையிலிடவேண்டும். பிறகு யோகினீ பைரவீ இவர்களுக்கு பூஜை செய்து அப்பானையைக் கொணர்ந்து பழங்களை வெயிலில்

காயவைத்து விதைகளின் மேல் தவிடு நீக்கி முளையையும் தேய்த்து அகற்றவேண்டும். வாயகன்ற பானையினுள் மண்ணையும் சுண்ணாம்பையும் பூசி ஒவ்வொரு விதையையும் முளையிருந்த பக்கம் மேலிருக்கும்படி ஒட்டவைத்து அதன் மேல்வெங்காரத்தை அரைத்துப் பூசவேண்டும். அப்பானையை தலைகீழாக ஒரு வெங்கலப் பாத்திரத்தில் பொருத்தி கடும் வெயிலிலிட வேண்டும். தினம் சேமிக்கப்படும் எண்ணெய்யை குப்பியிலிட்டு வைக்கவும். இவ்வெண்ணெய்யுடன் நல்லெண்ணெய் நான்கு பங்கு சேர்த்து இரு மூக்குத் துவாரங்களிலும் நஸ்யமிட நரை திரை அகலும். கடும்பிணி, நீரில் முழுகுதல், தூக்கிலிடுதல், மயக்கம், விஷம் இவைகளால் மரணமடைந்தவருக்கு உடனே மனித சுக்கிலத்துடன் ரஸபஸ்மமும் இவ்வெண்ணெய்யும் சேர்த்து நஸ்யம் கொடுக்க உடன் பிழைப்பு உண்டாகும். இது மிருத ஸஞ்சீவனீ கல்பமாகும்.

2. மற்ற ரஸாயன கல்பங்கள்

ஏலம், கடுக்காய், வசம்பு, காக்கைதுண்டி, சேங்கொட்டை, நெய்சட்டிப் பூண்டு, வேப்பிலை, கலப்பைக் கிழங்கு இவைகளை ஸமனெடை காயவைத்து எடுத்து பாதாளயந்திரத்திலிட்டெண்ணெய் எடுத்து வாரம் ஒருமுறை அவ்வெண்ணெய்யால் நஸ்யம் ஒரு வருஷம் வரை செய்ய நீண்ட ஆயுள் அடைவான். இவ்விதம் அரைப்பலம் வரை சிறிதளவில் அத்தலைம் சாப்பிட உயர்ந்த கல்பமாகின்றன.

கருசலாங்கண்ணிச்சாறு, கருஞ்சீரகம் இவை வகைக்கு ஒரு பிரஸ்தமும், நீலோத்பலக்கிழங்கு, அதிமதுரம் இவைவகைக்கு அரை பிரஸ்தமும், நல்லெண்ணெய் ஐந்து பல அளவும், சேர்த்து தைலபாக முறைப்டி தைலம் வடித்து அரைத்து முதல் ஒன்றரை நிஷ்கம் வரை கிரமமாகச் சாப்பிட கல்பஸித்தி ஏற்படுகின்றது.

மணத்தக்காளிக்காயை அரைத்து ஜலத்தில் கரைத்து ஒரு வருஷம் வரை சாப்பிட நரை திரை யகலும்.

ஈசுவரமூலி, மணத்தக்காளி, நெய்சட்டிப் பூண்டு, கருசலாங்கண்ணி, காக்கைத்துண்டி பழம், வேப்பிலை கார்போகரிசி, வேதாளி ஸமூலம், பிராம்மிவேர், திரிபலை, அமுக்கறாக்கிழங்கு, நீலநிறமுள்ளி இலை இவைகளைக் கற்றாழைச் சாற்றில் ஏழு நாள் ஊறவைத்து நிழலில் காயவைத்துத் தூள் செய்து அரைப்பல அளவு நெய்தேன் சர்க்கரை சேர்த்து ஒரு வருஷம் வரை சாப்பிட மூப்பகன்று மிகுந்த பலத்துடன் பல வருஷங்கள் வாழ்வான்.

மஹாகாமேசுவர கல்பம் : சாதுர்ஜாதம், கச்சோரம், சந்தனம், வெட்டிவேர், திராக்ஷை, மூங்கிலுப்பு, அரேணுகம், கஸ்தூரி, அஸாரூன், கர்பூரம், குங்குமப்பூ, ஜடாமாம்ஸி, கோஷ்டம், அமுக்கறா, கோரைக்கிழங்கு, தக்கோலம், தேவதாரு, சித்ரகம், அதிவிடயம், ஜீரகம், கருஞ்சீரகம், இந்துப்பு, சிறுதேக்கு, நெரிஞ்சில், கிராம்பு, நிலப்பனைக்கிழங்கு, அதிமதுரம், சிற்றாமுட்டிவேர், அபின், வாழைக்கிழங்கு, திரிபலை, திரிகடு, ஜாதிக்காய், ஆடாதொடை, தாளீஸபத்திரி, கடுக்காய்ப்பூ, யானைத்திப்பிலி, உளுந்து, குடுசீஸத்வம், இலவம் பிசின், கையாந்தகரை, நிலக்குமிழ், மதனகாமேசுவரம்பூ, பூனைக்காலி விதை, காரிலவவேர், மூக்கரட்டை, அகில், தண்ணீர்விட்டான், ஓமம், இவை வகைக்கு ½ பங்கு, அப்பிரக பஸ்மம் கால்பங்கு இவைகளுக்குச் சமம் கஞ்சா, எல்லாவற்றிற்கும் சமம் சர்க்கரை எல்லாவற்றையும் இடித்து ஒன்று சேர்த்து தேன் நெய் விட்டுக் கிளறி அரைக்கால் பல அளவு இரவில் சாப்பிட சிறந்த ரஸாயனமும் விருஷ்யமுமாகின்றது. உடலுக்கு வலிவு, பலம், புஷ்டி காந்தி அளிக்கின்றது.

குறிப்பு: முன் கூறப்பட்டுள்ள மூலிகை யோகங்களில் எல்லாவற்றிலும் சுத்த ரஸம் குந்துமணி யளவு அப்ரக பஸ்மம் அல்லது காந்த பஸ்மம் ஒரு பணவெடை இதில் ஏதாவதொன்று சேர்த்து சாப்பிட்டால் தான் ஸித்தி பெறமுடியும்.

அப்பியங்கரஸாயனம்

மஹாநீலி தைலம் : அவுரிச்சாறு ஒரு படி, கருசலாங் கண்ணிச்சாறு ஒரு படி, நெல்லிக்காய்ச்சாறு ஒருபடி, காக்கைத்துண்டிபழச்சாறு ஒரு படி, துவர்ப்பு எள்ளு எண்ணெய் ஒரு படி, பசும் பால் இரண்டு படி இவைகளை ஒன்றாகக்கூட்டி, அதில் காக்கைத் துண்டிப் பழம், கையாந்தகரை, அவுரி இலை இவை வகைக்கு 1 பலம் நெல்லிக்காய் 3 பலம் எல்லாவற்றையும் சேர்த்து அரைத்துக் கலக்கி இளந்தீயில் எரித்து தைலமாக வடிகட்டி தைலாப்யங்கத்திற்கு உபயோ கிக்கவும். கேசம் காது கண்களுக்கு மிகவும் பலமளிக்கக் கூடியது.

சந்தனாதி தைலம் : சந்தனம் அகில் விளாமுச்சவேர் வெட்டைவேர் வால்மிளகு ஜாதிக்காய் கிராம்பு தாரைத் தண்டு ஜடாமாம்ஸீ ஒட்டுப்புல் குந்துருக்கம் குக்கில் அரேணுகம் அஸாருன் கொம்பரக்கு நாகனம் தூணியாங்கம் வாசனைப்புல் நெல்லிமுள்ளி கோஷ்டம் கச்சோரம் கசப்பு வெள்வரிவிதை ஆகாசத் தாமரைக்கிழங்கு பேரீச்சை பதிமுகம் ஜாதிபத்திரி கல்பாசி காட்டகத்திப்பூ ஸரளதேவதாரு ஏலவாலுகம் பாக்கு ஏழிலம்பாலை கீழ்காய்நெல்லி வகைக்கு கால்பலம் அரைத்துக் கல்கமாக ஒரு பிரஸ்தம் நல்லெண்ணெய்யில் இட்டு தைலத்திற்கு இருமடங்கு பசுவின் பாலும் சேர்த்து காய்ச்சி தைலமுறைப்படி வடித்து எடுத்து அதில் புனுகு கஸ்தூரி குங்குமப்பூ கற்பூரம் இவைகள் வகைக்கு கால்பலம் பாத்திரபாகமாகச் சேர்த்து சில நாள் வைத்திருந்து எடுத்து

உபயோகிக்க நல்ல தேக பலம் புஷ்டி காந்தி சுக்கிரவிருத்தி இவைகளை அளித்து ரஸாயனமாகின்றது.

உத்வர்தன ரஸாயனம்

சுத்த ரஸத்தை கந்தகத்தையும் ஸமனெடை சேர்த்து கஜ்ஜலி செய்து முலைப்பால், கரந்தை, சிறுகீரை விஷ்ணுக்ராந்தி, அகத்தி இலை, ஸர்பாக்ஷீ இவைகளின் சாற்றால் ஒவ்வொரு தினம் அரைத்து இதற்கு பத்துபங்கு எள்ளுக்ஷாரமும் யவக்ஷாரமும் சேர்த்து தேன் நெய் சேர்த்துக் குழப்பி உடலில் தேய்த்து ஸ்னானம் செய்ய நரை திரை அகன்று உடல் வலிவு பெறும்.

தண்டுடன் கூடிய அல்லிக்கிழங்கையும் ரஸத்தையும் 7 நாள் அரைத்து தனது சிவஜலத்தால் குழப்பி உடலில் ஒரு வருஷம் வரை தினமும் தேய்த்து வர நல்ல வலிவு ஏற்படுகின்றது. அல்லிக்கிழங்கிற்குப் பதிலாக பிரும்ம தண்டியின் வேரையும் உபயோகப்படுத்தலாம்.

கடுகெண்ணெய்யினால் கந்தகத்திற்கு 7 பாவனை செய்து அரைத்து தினம் அரைப்பல அளவு சாப்பிட ஒரு வருஷத்தில் வைரம் போன்ற தேக வலிவு ஏற்படும். இவ்விதம் வாஸனை கோஷ்டத்தை தேன் நெய் சேர்த்துக் கால் பல அளவு சாப்பிட உடல் புஷ்பங்களின் வாஸனை பெறும்.

நரை நீக்கும் முறைகள் : காக்கைக் கொல்லி விதை காந்த லோகத்தின் தூள், மாவிதை இவைகளை அரைத்து நல்லெண்ணெய்யில் குழப்பி ஒரு மாதம் தான்யபுடமிட்டு அந்த எண்ணெய் தலையில் தடவிக் கொள்வதாலும் நஸ்யமிடுவதாலும் நரை நீங்கும்.

கடுக்காய் ஒரு நிஷ்கம், காந்தத்தூள் 2 பலம், காரீய சூர்ணம் ஒரு பலம் இவைகளைப் புளித்த தயிரில் கலக்கி

தலையில் தடவிக் கொண்டு அரை நாழிகை ஊற வைத்துத் தேய்த்து ஆமணக்கிலையில் மூடி துணியால் கட்டி சிறிது நேரம் வைத்திருந்து ஸ்னானம் செய்யவும். இவ்விதம் 3 நாள் செய்ய கேசம் கருத்து விடும். இவ்விதம் வேருடன் கூடிய அவுரியும் கருசலாங்கண்ணியும், இரும்புத்தூள் திரிபலை இவைகளை ஸமனெடை சேர்த்து ஆட்டு மூத்திரத்தில் ஒரு தினம் பாவனை செய்து தலையில் தடவிக்கொண்டு ஸ்னானம் செய்யலாம்.

தோல் நீக்கிய குந்துமணி, ஏலரிசி, தேவதாரு, கோஷ்டம் ஸமனெடை தூள் செய்து கையாந்தகரைசாற்றில் ஒரு நாள் பாவனை செய்து நான்கு பங்கு நல்லெண்ணெய் சேர்த்துக் காய்ச்சி வடிகட்டி அத்தைலத்தில் ஸ்னானம் செய்ய நரைத்த மயிர் கறுத்து விடும்.

யானை தந்தத்தின் கரியையும் அஞ்சனக்கல்லையும் சமனெடை சேர்த்தரைத்து ஆட்டுப் பாலிலரைத்துக் கேசத்தில் தடவி வரலாம். களிமண் திரிபலை கருசலாங்கண்ணி இரும்புத்தூள் இவைகளை ஸமனெடை சேர்த்துக் குழப்பி ஒரு மாதம் தான்ய புடமிட்டுப் பின் அதை தலைக்கு தேய்த்துக் கொள்ளலாம். நெல்லிக்காய், செம்பரத்தைப் பூ அயக்கிட்டம் இம் மூன்றையும் அரைத்துத் தலைக்கு தேய்த்துக் கொள்ளலாம். சுண்ணாம்பு, ஈயச்செந்தூரம் சாம்பிராணி இவைகளை ஜலம் விட்டரைத்துக் குழப்பித் தலைக்கு தேய்த்துக்கொள்ளலாம். கோரோசனம் எள்ளு சதகுப்பை இவைகளை இருப்புப் பாத்திரத்திலிட்டு கடுக்காய் கஷாயத்தில் ஒரு நாள் அரைத்துக் கேசங்களில் தடவிக் கொள்ளலாம். இவைகள் கேசத்தைக் கருக்கச் செய்யும் சிறந்த ஒளஷதங்கள்.

சுண்ணாம்பு கடுகு ஸர்ஜக்ஷாரம் யவக்ஷாரம் இவைகளைக் காடியிலும் சிறுநாகப்பூ சாற்றிலும் அரைத்துத் தடவுவதும் வாழைக் கிழங்குத்தூள் சிந்தூரம் கரி இவைகளை

இரும்பு பல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச் சாற்றாலரைத்துத் தடவுவதும் அன்னபேதி அவுரிஇலை ஸமனெடை அரைத்துத் தடவுவதும், மருதோன்றி இலையை காரீயக்குச்சியால் அரைத்துத் தடவுவதும், திரிபலை கையாந்தகரை, மாவிதை, தாமரைத்தண்டு, ஞாழல்பூ, அவுரி இலை மஞ்சள் இரும்புத்தூள் காரீயத்தூள் இவைகளை ஸமனெடை எடுத்து காந்த பாத்திரத்திலிட்டு வேப்பெண்ணெய்யில் ஒரு மாதம் அரைத்துத் தடவுவதும் எள்ளையும் மணத்தக்காளி விதையையும் சேர்த்து செக்கிலாட்டி எண்ணெய் எடுத்துத் தடவுவதும், செம்பரத்தைப் பூவின் சாற்றையும் தேனையும் நஸ்ய மிடுவதும் சிறந்த கேசரஞ்சன யோகங்கள்.

திரிபலையையும் இரும்புத்தூளையும் கையாந்த கரையின் சாற்றாலரைத்து கையாந்தகரைச்சாறும் நல்லெண்ணெய்யும் கலந்து காய்ச்சி வடித்து ஒரு மாதம் பூமிபுடம் போடவும். அத்தைலத்தைத் தலையில் தடவி மேல் பாசலிலையைச்சுற்றி துணியால் கட்டி காற்றில்லா விடத்தில் ஒரு வாரம் வஸிக்கவும். தினமும் பாலன்னம் அருந்தவும். திரிபலை கஷாயத்தில் தினமும் தலையை அலம்பவும். உயிருள்ளவரை கேசங்கள் கறுப்பாகவே இருக்கும்.

சிரியாளி விதையையும் காக்கைக் கொல்லி விதையையும் நொச்சியிலைச்சாற்றிலும் செம்பரத்தை புஷ்பச் சாற்றிலும் தனித்தனியே நான்கு நாட்கள் பாவனை செய்து குழித்தைலமாக வடித்து அதை கேசத்தில் தடவி சிற்றாமணக்கிலையைச் சுற்றிக் கட்டவும். காற்றில்லாவிடத்தில் வஸித்து பாலன்னமருந்தவும். தலையைக் காடியினால் அலம்பவும். இவ்விதம் 7 நாடகள் செய்ய தலைமயிர் கருக்கும். நீர்ப்பாசி மணத்தக்காளி கையாந்தரை இவைகளின் சாறு சேர்த்து தைலம் வடித்து அதில் அரைத்து துவரம் பருப்பை வேகவைத்து எடுத்து விட்டு அத்தைலத்தை தலையில் தடவிவரவும் மற்ற நியமங்கள்

முன்யோகத்திற்குப் போல திரிபலையை கையாந்தகரைச் சாற்றாலரைத்துக் காந்தபாத்திரத்தில் தடவி கவிழ்த்து வைக்கவும். காலையில் அதை மறுபடியும் கையாந்தகரைச் சாற்றிலரைத்துத் தலையில் தடவவும். திரிபலை கஷாயத்தால் தலையை அலம்பவும். இவ்விதம் 21 நாள் முன் கூறிய முறைப்படி செய்யவும். பாம்பு விஷம், கிருஷ்ணஜீரகம், இரண்டையுமரைத்துப் பானையிலிட்டு மூடிச் சேறுகள் பூமியில் புதைத்து ஆறு மாதம் சென்றபின் எடுக்கக் கருத்துத் திரவமாக இருக்கும். உச்சந்தலையில் கால் பலஅளவு தடவி முன்போல மற்ற முறைகளை அனுஷ்டிக்கவும்.

கையாந்தகரை அவுரி திரிபலை இரும்புத்தூள் மலங்கரைவித்து மருதோன்றிப்பூ மருதம்பட்டைத்தூள் தாமரைக்கிழங்கு நாவற்பழம் எல்லாவற்றையும் ஸமனெடை சேர்த்து இரும்புப் பாத்திரத்தில் பதினைந்து நாட்கள் வரை பூமியினுள் வைக்கவும். பிறகு எடுத்து அக்கல்கத்திற்கு நான்கு பங்கு நல்லெண்ணெய்யும் பதினாறு பங்கு கையாந்த கரைச்சாறும் 64 பங்கு திரிபலை கஷாயமும் சேர்த்து இருப்புப் பாத்திரத்தில் இளந்தீயில் எரித்துத் தைலம் வடிக்கவும். அத்தைலத்தில் வெளுத்த இறகை நனைக்க கறுத்தால் அம்மருந்து பயன்தரும். இது ஒரு சிறந்த கேசரஞ்சன தைலம்.

மட்பாத்திரத்தில் காரீயத்தை உருக்கி அதில் புளி அரசு ஆடாதொடை இவைகளின் இலைச்சாற்றை ஊற்றிக்கிளறிக் கொண்டேவர பஸ்மமாகும். அந்த பஸ்மம் ஒரு பலம் இரும்புத்தூள் இரண்டு பலம் திரிபலை மூன்று பலம் மாதுளந்தோல் ஒரு பலம் இவைகளை காடிவிட்டு இரும்பு பாத்திரத்தில் அரைத்துச் சிறிது இளந்தீயில் காய்ச்சி எடுத்து 21 நாள் வரை கையாந்தகரைச் சாற்றாலும் மருதாணியிலைச் சாற்றாலும் அரைத்து பாவனை செய்து வெயிலில் வைத்து எடுக்கவும். இதைத் தலையில் தடவிக்கொள்ள கேசங்கள் கறுத்து விடும்.

இந்த கேசரஞ்சன யோகங்களில் விசேஷங்கள் கூறாவிடத்து இரவில் மருந்தைத் தலையில் தடவி சிற்றாமணக் கிலையைச் சுற்றி மேல் துணி சுற்றிக் கொள்ள வேண்டும். காலையில் கஷாயங்களால் தலையை அலம்ப வேண்டும்.

ஸித்த மூலிகைகளைச் சேகரித்தல் :

ரஸாயன முறைகளில் கூறப்படும் ஔஷதிகளைக் கொணர்வதிலும் சேகரித்து வைப்பதிலும் உபயோகிப்பதிலும் மிகவும் கவனமும் செலுத்தவேண்டும். மலைநதிக்கரை ஸித்த க்ஷேத்திரங்கள் காடுகள் மற்றும் சுத்தமான இடங்களில் உண்டான ஔஷதியை பூஜை செய்து ரஸாயன காரியத்தில் அது நல்ல பலனளிக்கவேண்டுமென்ற பிரார்த்தனையுடன் வேர் அறுபடாமல் பிடுங்கி எடுத்து வந்து பைரவரை ஆராதித்த பின்னர் உபயோகிக்க வேண்டும்.

பதினேழாவது உல்லாஸம்

ஜலபான ரஸாயனம்.

ஸமுத்திரமத்தியிலுள்ள படபாக்னியும் மேகத்திலுள்ள மின்னலும் வயிற்றிலுள்ள ஜடராக்கினியும் ஜலத்தையே விறகாகப் பெற்றுள்ளன. அதனால் ஜட ராக்னியின் பலத்தைப் பெறுவதன் மூலம் சிறந்த தேகபலமளிக்கும் வகையில் ஜலத்தை நாம் பருக வேண்டும். வாயகன்ற பாத்திரத்தில் சுத்தமான ஜலத்தை நிரப்பி மேல்மாடியில் சுத்தமான இடத்தில் பகலில் ஸூர்ய கிரணங்களும் இரவின் சந்திரனின் கிரணங்களும் படுமாறு வைக்கவும். ஏலரிசி விளாமுச்சம்வேர் க்ர்பூரம் சந்தனம் பாதிரிப்பூ தாழம்பூ மல்லிப்பூ அல்லிப்பூ இவைகளைச் சேர்த்து நல்ல மணமுள்ளதாக்கி விளாமுச்சம்வேரால் தயார் செய்த விசிறியை நனைத்து விசிறிக் குளிர்ந்த ஜலத்தை ரஸாயன முறையில் உபயோகிக்க வேண்டும்.

அனுஷ நக்ஷத்திரம் உதயமாகுமுன் விடியற்காலையில் எழுந்து உடனேயே ஜலத்தைப் பருகிப் பின்னர் மலமூத்திர விஸர்ஜனம் செய்யவேண்டும். மலமூத்திர விஸர்ஜனம் செய்த பின்னர் ஜலம் பருகினால் விஷமாகும். ஒரு வயது குழந்தைக்கு ஒரு பலஅளவும், இவ்விதம் வயதிற்கு ஒரு பலமாக அளவை அதிகரித்து 16 வயதுள்ளவன் 16 பல அளவும் ஜலம் பருக வேண்டும். அதற்கு மேற்பட்ட வயதுள்ளவன் 32 பல அளவுள்ள ஜலம் பருகவேண்டும். முதலில் 2 பல அளவில் ஆரம்பித்து கிரமமாக 3-5 தினங்களுக்கு ஒரு தடவை அளவை இரண்டிரண்டு பலமாக 32 பலம் வரை அதிகரித்து ஆறுமாதமோ ஒரு வருஷமோ அல்லது ஜீவிக்கும் வரை சாப்பிடலாம். குறைக்கும் பொழுது இவ்விதமே கிரமமாகக் குறைக்கவேண்டும்.

பகலில் உபவாஸமிருந்து இரவில் பத்யமான அகாரத்தைச் சாப்பிடவேண்டும். வேறு ஏதாவது கெடுதல் நேர்ந்தாலும் தேகப்பயிற்சி செய்தபின்னரும் நடுவில் ஓரிரண்டு பல அளவு ஜலம் தேன் நெய் பால் எண்ணெய் இவைகளில் ஏதாவதொன்றுடன் கலந்து சாப்பிடலாம். ரஸாயனமாக காலையில் சாப்பிட்ட ஜலம் ஜீர்ணமான பின்னரே மறுபடியும் ஜலம் பருகலாம். இரவும் உபவாஸமிருக்க நேர்ந்தால் பால் சாப்பிடலாம். இரவில் நேரம் தெரியாது நடுநசியிலேயே ஜலம் பருகிவிட்டாலும் விடியற்காலையில் மறுபடி ஜலம் பருகவேண்டும்.

பத்தியம் : கோதுமை அறுபதாங்குருவை சம்பா அரிசி யவை, ஜாங்கலமாம்ஸம், பசுவின் நெய் தயிர் பால் மோர் வெண்ணெய் தேன் கரும்பு மாதுளை திராக்ஷை வாழைப்பழம் பேரீச்சை சர்க்கரை ஒட்டுமாம்பழம் நெல்லிமுள்ளி இளநீர் பூஷணி சுரை கக்கரி முருங்கையின் இலையும் காயும் பூவும் அம்மான் பச்சரிசி கீரைப்பாலை பசளைக்கீரை சிறு கீரை பொன்னாங்கண்ணி நிலக்குமிழ் பீர்க்கு கத்திரிக்காய் பாகற்காய்

புடல் வாழைப்பூ-தண்டு-காய்கள் இஞ்சி இந்துப்பு புளிப்பு மாதுளை கொத்துமல்லி புளியாரை பிரமிவழுக்கை கருவேப்பிலை ஜீரகம் இவை ஆகார வகைகளில் உபயோகிக்கத் தகுந்தவை. எண்ணெய் தேய்த்து ஸ்நானமும், வெளுத்த வஸ்திரம் தரித்தலும், தித்திப்பு அதிகமான ஆகாரமும், கஸ்தூரி குங்குமப்பூ கர்பூரம் சேர்ந்த சந்தனம் பூசிக் கொள்ளுதலும், தாம்பூலம் தரித்தலும் மிகவும் உபகாரமளிப்பவை. மாலையில் இளநீரும் இரவு சர்க்கரையுடன் பாலும் சாப்பிட்டு பஞ்சணையில் அமைதியாகத் தூங்கவேண்டும்.

அபத்தியம்: *அதிகமல்லது குறைந்த அளவில் மலத்தைக் கட்டக் கூடியதும் புளிப்படையக் கூடியதும் உஷ்ணமாயும் வரட்சியாயும் உள்ள ஆகாரம் அகாலத்தில் சாப்பிடுவதும், கொள்ளுமொச்சை முளைவந்த தானியங்கள் உள்ளிப்பூண்டு வெங்காயம் கிழங்குவகை கடுகு மீன் முன்கூறிய கறிகாய்களைத் தவிர மற்ற காய்கறி வகைகள் இவை தள்ளத்தகுந்தவை. அதிகப்பேச்சு வெய்யிலில் நடத்தல் கவலை வழிநடத்தல் கோபம் சோகம் வாஹனம் பயம் சோம்பல் அதிகப்புணர்ச்சி, தலையில் பாரம் வஹித்தல் நீச்சல் இரவில் கண் விழித்திருத்தல், எதிர்காற்று பனி அதிகக்காற்று புகை அடைந்த வீடு உஷ்ண மளிக்கும் துணியை தரித்தல் உப்புநீர் சாப்பிடுதல் அதிகப் புளிப்பு-கசப்பு- துவர்ப்புள்ள ஆகாரம் பெருங்காயம் கள்ளு வஸை மஜ்ஜை கெட்டநீர் வென்னீரில் ஸ்னானம் இவை போன்றவைகளைத் தவிர்க்கவும்.*

எந்த அளவு ஜலம் பருகப்பட்டதோ அவ்வளவு மூத்திரமாக வெளிப்பட்டு நல்ல பசி எடுத்தால் ஜலம் ஜீர்ணமாகிவிட்டதென அறிந்துகொள்ளலாம். அதன் பிறகு எண்ணெய் தேய்த்து ஸ்னானம் செய்து பத்ய முறைப்படி அனுஷ்டிக்கவும். ஜலம் அஜீர்ணமானால் அசதி, சிரமம்,

வாந்தி, தலைவலி, தலைசுற்றல், வயிற்றில் ஜலம் ஸ்தம்பித்து நிற்பது போன்ற உணர்ச்சி, குல்மம், மல மூத்திர பந்தம், அக்னி மந்தம், உடல்வலி, பஸ்தி, நீர்தாரை, மார், கண் இவைகளில் வலி, முழங்கால் குடைச்சல், அன்னத்வேஷம், அருசி, அச்மரீ பீனஸம், காஸம், அதிஸாரம் போன்ற வியாதிகள் உண்டாகும். பருகிய ஜலம் வெளிவராமல் சரீரத்தில் சேர்ந்தால் கெடுதி விளைவிக்கின்றது. தேகப்பயிற்சி முதலியவைகளால் வெளிவரும் ஜலஅளவு குறைந்தால் தோஷமில்லை.

அடிக்கடி ஜலம் வயிற்றில் ஸ்தம்பித்துப் போனால் அடிவயிற்றை பூசணி இலையால் மூடியும், சிறு நீரை வெளிக்கொணரும் லேபங்களையும் போடவேண்டும். நெய்யைத்தடவிக் கொண்டு நெல்லிக்காய் அரைத்துப் பூசி ஸ்னானம் செய்வதும், வெல்லம் சேர்த்தபாலையும் சர்க்கரை சேர்த்து மோரையும் சர்க்கரை கக்கரி அல்லது வெள்ளரி விதை சேர்த்து இளநீரையும் பருகவேண்டும். ஆகாரம் செய்யும் முன் நெய்யை அதிக அளவில் சாப்பிட வேண்டும்.

கீழ்க்கண்ட யோகங்கள் மூத்ர விரேசனத்தில் நல்ல பலன் தரக்கூடியவை. குளிர்ந்த ஜலத்தில் அமிழ்ந்து ஸ்னானம் செய்வது; இனிப்பாயும் குளிர்ந்த ஜலத்தில் அமிழ்ந்து ஸ்னானம் செய்வது; இனிப்பாயும் குளிர்ந்துமுள்ள திரவியங்களால் விரேசனம்; திப்பிலி இந்துப்பு மலங்காரைக்காய் இவைகளால் வமனம்; இளநீருடன் கடுக்காய்த்தூள் திரிஜாதனம் திரிகடு வாய்விடங்கம் நெல்லி முள்ளி கோரைக்கிழங்கு இவை வகைக்குச் சமனெடையும் அதற்குச்சமம் செவதை வேரும் எல்லாவற்றிற்கும் ஸமம் சர்க்கரையும் சேர்த்து தேன் விட்டரைத்து மாத்திரையாகச் செய்த திருவிருதாதி குளிகை; இரவில் திரிபலை சூர்ணம்; அடிவயிற்றில் துணியை நனைத்துப் போடுவது; திரிபலை திராக்ஷை ரஸத்துடன் ஆடாதொடையும் குங்குமப்பூவும்; அரிசி கழுவிய ஜலத்துடன் அதிமதுரமும் சர்க்கரையும்

அல்லது திராக்ஷை, வெல்லம், மரமஞ்சள் இவைகளும்; நெல்லிக்காய் சாற்றுடன் திராக்ஷையும் சர்க்கரையும் அல்லது திராக்ஷை, வெல்லம், மரமஞ்சள் இவைகளும்; நெல்லிக்காய் சாற்றுடன் திராக்ஷையும் சர்க்கரையும்; தயிர் தெளிவுடன் சர்க்கரை, திராக்ஷை, திரிபலை இவைகளும்; ஜலத்திலோ இளநீரிலோ கரைத்த வெல்லம்; தேன் சேர்த்த பேயன் வாழைப்பழம்; இளநீர் மோர் தயிர் தெளிவு வாழைக்கிழங்குச்சாறு பால் நெல்லிக்காய்ச்சாறு சீந்தில்சாறு சீந்தில்சாறு பூசணிக்காய்ச்சாறு மாதுளைச்சாறு தண்ணீர்விட்டான்கிழங்குச்சாறு சுரைக்காய்ச்சாறு இவைகளில் ஒன்றுடன் சர்க்கரையும் எலரிசியும் சர்க்கரை தேன் சேர்த்து வாழைக்கிழங்கு அதிமதுரம் நெரிஞ்சில்முள் கற்பாசி திருணபஞ்சகம் தண்ணீர்விட்டான்கிழங்கு இவைகளின் கஷாயம்.

முன் கூறப்பட்ட ரஸாயன முறையில் ஜலம் பருகப் பட்டால் ரக்தவாதம் வாதரோகங்கள் ஹிருதயரோகம் சுவாஸம் காஸம் ரக்தபித்தம் பித்தரோகங்கள் கிரஹணீ வாந்தி அருசி கஷாயம் மூர்ச்சை குஷ்டம் மேகம் கண்ட மாலை குல்மம் பிலீஹைஅச்மரீ சூலம் வயிற்றுப் பொருமல் அஜீர்ணம் விஷூசிகை கிருமி பாண்டு காமாலை ஹலீமகம் அக்கிவிரணம் வீக்கம் வெண்குஷ்டம் விஷரோகங்கள் கண்காது மூக்கு தொண்டை நோய்கள் குஹ்யநோய்கள் அப்ஸ்மாரம் ரக்தக் கொதிப்பு ஜ்வரம் நீர்ச் சுருக்கு நீரடைப்பு அர்சஸ் இவைகள் நீங்கும். நல்ல பலமும் அழகும் உள்ள தேகத்துடன் நரை திரை அகன்று நோயற்று நீண்ட காலம் வாழ்வான்.

காலை வேளையில் மூக்கினால் ஜலத்தை உறிஞ்சி பத்யமுடன் இருப்பவனுக்கு இந்திரியங்களின் சக்தி அதிகரிக்கும்.

பதினெட்டாவது உல்லாஸம்

தினசர்யை

ஆரோக்கியத்தையும் முப் புருஷார்த்தங்களையும் அடைவதற்கு உகந்தவாறு காலை எழுந்திருப்பதிலிருந்து இரவு படுக்கும் வரையுள்ள தனது நித்யக்கடன்களை ஒழுங்காக விவேகத்துடன் செய்து வருவானாயின் அவ்வாசாரமே ஒரு சிறந்த ரஸாயனமாகின்றது.

அருணோதயத்திற்கு முன் கண் விழித்து எழுந்து படுக்கையிலிருந்தவாறே தனது இஷ்ட தேவதையையும் கருவையும் தியானித்து சரம் பார்த்துப்பின் தனது வலது உள்ளங்கை தீபம் கண்ணாடி கன்றுடன் கூடிய பசுமாடு ரத்னங்கள் இன்னும் இவை போன்ற மங்களகரமான வஸ்துக்களைப் பார்த்து விட்டெழுந்து மலமூத்ரவிஸர்ஜனம் செய்ய வேண்டும். சௌசம் செய்து கொண்டபின் கால்களையும் கைகளையும் களிமண்ணால் தேய்த்து அலம்புவது கால்களில் ஏற்படும் ரோகங்களையும் சிரமத்தையும் அகற்றி கண்ணுக்கு ஹிதமாயும் உத்ஸாஹ மளிப்பதாயும் ஆகின்றது.

பிறகு கிழக்கு முகமாகவோ வடக்கு முகமாகவோ உட்கார்ந்து ஆசமனம் செய்து விட்டுப் பல் துலக்க வேண்டும். பல் துலக்க உபயோகிக்கும் குச்சியை தனக்கு ஆரோக்கியமளிக்க பிரார்த்தனை செய்து விட்டு ஒடிக்கவேண்டும். எருக்கு நாயுருவி கருங்காலி புங்கு இத்தி சம்பகம் ஆல் மருது மல்லி நரிமா நாவல் மா அசோகம் அத்தி புரசு வேம்பு குங்கலியமரம் மாதுளை அடப்பை அரளி கருவேல் ஸரளதேவதாரு வாகை அழிஞ்சில் வேங்கை இலுப்பை மூவிலை இலந்தை ஆடாதொடை இவைகளில் கிடைத்ததை சிறுவிரல் பருமனுள்ளதும் 10-12 அங்குல

நீளமுள்ளதும் ஈரமானதும் கணு இல்லாததுமாக எடுத்து நுனியை நசுக்கி மெதுவாக்கி உபயோகிக்க வேண்டும். திரிபலை திரிகடு திரிஜாதம் இவைகளை தேன் விட்டரைத்து வைத்துக் கொண்டு அதில் பற்குச்சிகளைத் தோய்த்து முதலில் இடது பக்கத்திலுள்ள அடிவரிசையும் பிறகு மேல் வரிசையையும் பிறகு மற்ற இடத்தையும் வரிசையாக ஈருக்கு கேடு விளைவிக்காமல் தேய்க்கவேண்டும்.

எருக்கு பல்வலி அகற்றுவதிலும், நாயுருவி பற்களை வளரச்செய்வதிலும், கருங்காலி பல் வியாதிகளை அகற்றுவதிலும், புங்கும் சம்பகமும் வாய்நாற்றம் அகற்றுவதிலும், ஆலக்குச்சி வாய்ப் புண்களை அகற்றிப் பற்களை கெட்டிப் படுத்துவதிலும், மருது பற்களை சுத்தி செய்வதிலும், புரசு வாயை சுத்தி செய்வதிலும், வேம்பு ருசியளிப்பதிலும், அரசு பல் கூச்சலை அகற்றுவதிலும், கருவேல் பற்களின் காந்தியை அளிப்பதிலும், ஸரளதேவதாரு பற்களைக் கெட்டிப் படுத்துவதிலும் சிறந்தவையாதலால் தேவைக்குகந்தவாறு உபயோகிப்பது நலம்.

ஜ்வரம் வாந்தி சுவாஸம் காஸம் அஜீர்ணம் முகபக்ஷவாதம் மதம் பிரமம் மூர்ச்சை ஹிருதயம் கண் காது தலை இவைகளில் நோய் அதிஸாரம் இவைகளுள்ளவர்களும் துர்பலர்களும் பற்குச்சிகளைக் கொண்டு பல் துலக்கக் கூடாது. அச்சமயத்தில் விரல்களாலேயே வாலுளுவை திரிகடு திரிபலை இந்துப்பு இவைகளை தேன் நல்லெண்ணெய் விட்டரைத்து குழப்பி கைவிரல்களால் எடுத்துப் பல் துலக்கலாம். அதன் பிறகு இளஞ்சூடான வென்னீரால் பன்னிரண்டு தடவை வாயைக் கொப்பளித்தலம்பி தங்கம் அல்லது வெள்ளியிலான சலாகை அல்லது வேப்பங்குச்சியால் பற்கள் நடுவே பதிந்திருக்கும் காரை ஆகாராம்சம் முதலியவைகளை சுரண்டி எடுக்கவும்.

பிறகு பத்து அங்குல நீளமும் ஆள் காட்டிவிரல் அகலமுமுள்ள தங்கம் அல்லது வெள்ளியினாலான நாக்கு வழிக்கும் குச்சியாலோ அல்லது சிறிய மரக்கிளையைப் பிளந்து அதன் நுனியாலோ அல்லது பனையோலையாலோ நாக்கை நன்கு வழிக்கவும். உந்மாதம் மூர்ச்சை விக்கல் வாந்தி சோஷம் க்ஷயம் ச்வாஸம் காஸம் அஜீர்ணம் போன்ற வியாதியுள்ளவர்களும் பட்டினி இருந்தவர்களும் நாக்கை வழிக்கக்கூடாது.

பிறகு நல்ல ஸௌவீராஞ்சனத்தால் முதலில் இடது கண்ணையும் பிறகு வலது கண்ணையும் அஞ்சனம் செய்விக்க கண்ணிற்கு இயற்கையாகக் கபத்தால் ஏற்படும் பயம் நீங்கி இமை மயிர்கள் அடர்ந்து வளர்ந்தும் பார்வை பலமதிகரித்தும் கண்கள் காந்தியுடன் விளங்கும். வாரம் ஒரு முறை இரவிலும் அஞ்சனம் செய்தல் வேண்டும்.

இவ்விதம் அஞ்சனத்தால் கிளப்பப்பட்ட கபம் வெளியில் வர நஸ்யம் செய்து கொள் வேண்டும். எக் காலத்திலும் அணு தைலம் நஸ்ய மிடச் சிறந்தது. அணு தைலம் கிடைக்காவிடத்து ஹேமந்தசிசிரருதுக்களில் சுக்கு திப்பிலி வெல்லம் இவைகளை இளம் வென்னீரிலரைத்து நஸ்ய மிடலாம். வஸந்தத்தில் சுக்கையும் வெல்லத்தையும் ஸ்தன்யத்தி லரைத்தும், கிரீஷ்மருதுவில் சுக்கை ஸ்தன்யத் திலரைத்தும் வர்ஷருதுவில் நல்லெண்ணெய்யையும் சரத்ருதுவில் சுக்கையும் கர்ப்பூரத்தையும் ஸ்தன்யத்தில் அரைத்தும் நஸ்யமிடலாம். பிடரியின் பிடிப்பு, தலைவலி, தலையாட்டம், கந்தமறியாமை, மூக்குவரட்சி, தொண்டைக்கம்மல், பீனஸம், தலைமயிர் உதிருதல் இவை நஸ்யத்தால் நீங்கும்.

அணுதைலம்: கீரைப்பாலை கோரைக்கிழங்கு வெட்டி வேர் விளாமுச்சைவேர் லவங்கப்பட்டை தேவதாரு மரமஞ்சள்

நன்னாரிவேர்பட்டை சந்தனம் தமனம் அகில் தண்ணீர்விட்டான் நாமக்கரும்பு அல்லக்கிழங்கு வில்வவேர் யானைவணங்கி ஓரிலைவேர் மூவிலைவேர் கண்டங்கத்திரிவேர் முள்ளுக்கத்திரி வேர் அரேணுகம் ஏலரிசி லவங்கப்பத்திரி சிற்றாமுட்டி தாமரைகிஞ்சல்கம் வாய் விடங்கம் இவை 26 ஐயும் வகைக்கு நான்கு பலம் எடுத்து இடித்து பதினாயிரம் பலம் ஜலத்தில் பத்தில் ஒரு பங்கு மீதமாகும்படி காய்ச்சி அதில் பத்தில் ஒரு பங்க எடுத்து அதற்குச்சமம் நல்லெண்ணெய்யும் சேர்த்துக் காய்ச்சி தைலம் வடிகட்டவும். இவ்விதம் வஷாயம் சேரத்து ஒன்பது தடவை தைலம் காய்ச்சி பத்தாவது தடவை தைலத்திற்குச்சமம் ஆட்டுப்பால் சேர்த்துக் காய்ச்சி தைலமாக வடிகட்டி உபயோகப்படுத்தவும்.

பிறகு மாதுளையின் துளிர் ஒரு பலம் திரிகடு இந்துப்பு தேன் சர்க்கரை இவை வகைக்குக் கால் பலம் இவைகளை அரைத்துக் கால் பல அளவு, வாயிலடக்கிக் கொண்டு வாய் முழுவதும் கபம் சுரந்து சேர்ந்தபின் துப்பவேண்டும். இவ்விதம் ஆறு தடவை செய்ய காஸச்வாஸ ரோகங்கள் நீக்கி அக்னி தீப்தியும் ருசியும் ஏற்படும். இவ்விதமே சூடான கஞ்சி முதலியது சாப்பிட்டதாலோ வேறுயாதோரு காரணத்தாலோ வாயில் புண்ணும் எரிச்சலும் ஏற்பட்டிருந்தால் ஒரு பலம் பசுவின் நெய்யை வாயில் கபம் நிரம்பும் வரை வைத்திருந்து துப்பவும். 5வயதுக்கு மேற்பட்ட பின்னரே இந்த கண்டுஷவிதி உபயோகிக்கத்தகுந்தது.

பிறகு மஞ்சள் கற்பூரம் சுக்கு இவைகளைக் கொண்டு புகை பிடித்தல் வாய் நாற்றம் காஸம் சுவாஸம் இவைகளை அக்றுவதில் உபயோகமுள்ளது. முதலில் வாயைத்திறந்து கொண்டு இடது மூக்குத் துவாரத்தாலும் பிறகு வலது மூக்குத் துவாரத்தாலும் பிறகு வாயாலும் புகையைப் பிடிக்கவேண்டும். மூக்காலும் வாயாலும் இழுத்து புகையை

வாய்வழியாகவே விடவேண்டும். மூக்கினால் புகையை விட்டால் தொண்டை கண் வியாதிகள் பீடிக்கும். முறைப்படி உபயோகித்த தூமபானம் கழுத்துக்கு மேற்பட்ட இடங்களில் உண்டாகும் நோய்களை அகற்றுகின்றது. ரோஹிணி ஆத்மானம் பாண்டு தலைவலி மதாத்யயம் இவ்வியாதி உள்ளவர்கள் மத்யம் மாம்ஸம் பால் தேன் தயிர் விஷம் இவைகளைச் சாப்பிட்டவர்கள் நாவரட்சி உள்ளவர்கள் விரேசனம் அல்லது பஸ்தி செய்யப்பெற்றவர் இவர்கள் தூமபானம் செய்ய உகந்தவர்களல்ல.

பிறகு தாம்பூலதாரணம் செய்து கொண்டு வாயைக் கொப்பளித்து வாய்நிறைய ஜலத்தை நிரப்பிக் கொண்டு கண்களை நன்கு அலம்பவேண்டும். பிறகு தனது ஜாதி சக்தியை அனுஸரித்து தேகப்பயிற்சிகள் செய்து தேகத்தை நன்கு தேய்த்து விடவேண்டும். வியர்வை அடக்கியவுடன் எண்ணெய் தேய்த்து ஸ்னானம் செய்யவேண்டும். பலா தைலம் ஸ்னானம் செய்வதற்குச் சிறந்தது.

பலாதைலம் : சிற்றாமுட்டி வேர் 24 பலம் எடுத்து இடித்து 16 மடங்கு ஜலத்தில் கால் பங்கு மீதமாகக் கஷாயமிட்டு வடிகட்டி அதற்குச் சமம் பசுவின் பாலும் சேர்க்கவும். தசமூலம், இலந்தைக்கொட்டை, கொள்ளு, யவை இவை வகைக்கு நான்கு நிஷ்கம் எடுத்து 64 பல ஜலத்தில் கால் பங்கு மீதமாகக் கஷாயமிட்டு எடுத்துக் கொள்ளவும். நல்லெண்ணெய் 16 பலம் முன் கூறிய கஷாயங்கள் பால் இவைகளை ஒன்றாக்கி.மேதை மஹாமேதை காகோலி க்ஷீரகாகோலி காட்டுளுந்து வேர் காட்டுப்பயறு வேர் ஜீவகம் ருஷபகம் தேவதாரு மஞ்சிட்டி சந்தனம் அகில் இந்துப்பு கல்பாசி நன்னாரி கோஷ்டம் தகரம் அல்லிக்கிழங்கு நன்னாரி வசம்பு மூக்கரட்டை கச்சோரம், திரிபலை ஏலம் லவங்கப்பட்டை லவங்கப்பத்திரி தண்ணீர்விட்டான் கிழங்கு நிலக்குமிழ் அமுக்கறாக்கிழங்கு அதிமதுரம் சதகுப்பை இவை

வகைக்கு அரைக்கால் பல அளவு எடுத்து கல்கமாக்கிக் கலந்து இளந்தீயில் காய்ச்சி இறக்கவும். இது பல நீடித்த தோயுள்ளவர்களுக்கும் நோயற்றவர்களுக்கும் சிறந்த ஸ்னானதைலம். நஸ்யம் தாரை கண்டூஷம் பஸ்தி போன்ற ஸ்னேஹ சிகித்ஸைகளிலும் சிறந்தது.

தலைக்கு குளிர்ந்த ஜலமும் உடலுக்கு வென்னீரும் ஸ்னானம் செய்ய உபயோகிக்கத்தகுந்தவை. கண்வலி, அர்திதம் வாய் காது நோயுள்ளவர்கள், அஜீர்ணம் அதிஸாரம் வயிறு பொறுமல் பீனஸம் கபநோய் உள்ளவர்களும் சாப்பிட்ட வர்களும் சோதன சிகித்ஸை செய்து கொண்டவர்களும் காலையில் ஸ்னானம் செய்யக்கூடாது.

ஸ்னானம் முடிந்தவுடன் ஜபம் பூஜை முதலியவைகளை முடித்துக்கொண்டு சந்தனம் அகில் ஸர்ஜரஸம் குக்கில் அரக்கு சர்க்கரை இவைகளை நெய் தேன் சேர்த்துப் பிசைந்து தணலில் போட்டு உடலுக்கும் தலைக்கும் புகைகாட்டவேண்டும். பிறகு சந்தனம் புஷ்பம் ரத்னங்கள் இவைகளை தரித்துக் கொள்வது சரீரத்தை அலங்கரிப்பதுடன் நல்ல ஆரோக்கியமும் அளிக்கவல்லவையே.

ஆகாரம் ஜீர்ணமானதை அறிந்து பசி ஏற்பட்டவுடன் உசிதமான காலத்தில் சாப்பிடவேண்டும். கிழக்கு நோக்கி உட்கார நீண்ட ஆயுளும், தெற்கில் நோக்கி உட்கார கீர்த்தியும், மேற்க நோக்கினால் தனமும் கிடைக்கும். வடக்கு முகமாக ஒருக்காலும் உட்காரக்கூடாது. தங்கப் பாத்திரத்தில் சாப்பிட புஷ்டியும் விருஷ்யமும் உண்டாகும். இடுவிஷம் ஆகார விஷம் போன்ற விஷதோஷங்களும் வாத பித்த தோஷங்களம் நீங்கும். வெள்ளிப் பாத்திரத்தில் சாப்பிட, வாத தோஷங்கள் நீங்கி குளிர்ச்சி தரும். கைப்பு ஏற்படாத வெங்கல பாத்திரத்தில் சாப்பிட கபதோஷங்கள் நீங்கி உடலுக்குக் காந்தி அளிக்கும். கண்ணிற்கு ஹிதம், ரத்த பித்தம் நீங்கும். இருப்புப்

பாத்திரத்தில் சாப்பிட ஹிருதயத்திற்கு பலமுண்டாகும். பாண்டு காமாலை அருசி கபதோஷம் இவை நீங்கும்.

குருவான ஆகாரத்தை அரைப்பங்கும் லகுவான ஆகாரத்தை முக்கால் பங்கும் சாப்பிட ஜீரணம் எளிதில் ஆகும். அதிக அளவில் சாப்பிட வாதாதி தோஷங்கள் அதிகமாகும். குறைந்த அளவில் சாப்பிட பலமும் ஓஜஸ்ஸும் குன்றும். முதலில் இனிப்பும் நடுவில் புளிப்பும் உப்பும் கடைசியில் மற்ற சுவைகளும் உள்ள பதார்த்தங்களை சாப்பிடலாம். நடுவில் குளிர்ந்த ஜலத்தை மூன்று நான்கு தடவை சிறிதளவில் சாப்பிடலாம். சாப்பாட்டிற்கு முன்ஜலம் பருகினால் உடல் இளைக்கும். கடைசியில் சாப்பிட உடல் பெருக்கும். நடுவில் சாப்பிட உடல் வளர்ச்சி சமமாக இருக்கும். ஜலம் அதிகம் பருகினாலும் குறைத்துப் பருகினாலும் சாப்பிட்ட ஆகாரம் ஜீர்ணமாகாது. நல்லபசி இருக்கும் பொழுது சாப்பிடாத வனுக்கு அக்னி பலம் குறையும். வயிற்றில் அரைபாகத்தை ஆகாரத்தாலும் கால்பாகத்தை ஜலத்தாலும் நிரப்பி மீதியுள்ள பாகத்தை வாதஸஞ்சாரத்திற்காக விட்டு விடவேண்டும்.

தினமும் இரண்டு தடவை ஆகாரமருந்தலாம். மூன்று தடவை சாப்பிடுவது ஆரோக்கியமளிக்காது. ஸ்திரீ பாலர்கள் கிழவர்கள் அசக்தர்கள் விஷயத்தில் தேவைக்குகந்தாற்போல் ஆகாரம் சாப்பிடுவது உசிதமே. கோபம் சோகம் அதிகப் பசி எரிச்சல் உள்ள சமயத்திலும் பத்யமானதையும் அபத்ய மானதையும் கலந்தும் சாப்பிடுவது ஸமசனமெனவும், அகாலத்தில் அளவில் குறைவாகவோ அதிகமாகவோ சாப்பிடுவது விஷமாசனமெனவும், சாப்பிட்டவுடன் மறுபடியும் சாப்பிடுவது அதிகாசனம் எனவும் கருதப்படுகின்றன. இவை மூன்றும் கொடுமையான வியாதியையோ மரண பர்யந்தமான ஆபத்தையோ விளைவிக்கக்கூடியவை.

தோஷத்துடன் கூடியதும் அதிக அளவானதும் குருவாயுமுள்ள ஆகாரத்தினால் ஏற்படும் தோஷத்தை அனுபானத்தால் மாற்றி ஆகாரத்தை ஜீர்ணமாகச் செய்யலாம். சாப்பிட்ட ஆகாரத்தை ஜீர்ணமடையச் செய்வதிலும் ஜீர்ணமானதை சரீரத்தின் எல்லா அங்கங்களிலும் பரவச் செய்வதிலும் திருப்தி ஏற்படுத்துவதிலும் அனுபானம் மிகவும் உதவுகின்றது. மத்யம், ஜலம் கலந்த தேன், வென்னீர், சூடான மாம்ஸரஸம், காய்ச்சிய பசுவின் பால் முதலியவை சிறந்த அனுபானங்கள், ஸ்னானம் செய்த பிறகும் சாப்பிட்ட பின்னும் வாஹனம் ஏறுதல், நெருப்பு, வெய்யில் இவைகளின் தாபம், தேகப்பயிற்சி, களைப்பேற்படுத்திக் கொள்ளுதல், தாண்டுதல், நீந்துவது போன்ற காரியங்களை செய்யக்கூடாது.

ஆகாரத்தில் விஷம் சேர்ந்திருக்கிறதா என்பதை கவனிப்பதும் அவசியம். விஷம் சேர்ந்த பொருள்களின் அறிகுறி பின்வருமாறு: அரிசி சீக்ரம் வேகாது; வெந்தசாதம் கருத்தும் சீக்கிரம் பழையது போல் ஆகும். சாதத்தின் ஆவி மயில் கழுத்து போலும் வாஸனை நிறம் குன்றியும் மூர்ச்சை வாயில் ஜலம் ஊருதல் போன்ற கெடுதிவிளைவிப்பதாயும் இருக்கும். மாம்ஸரஸத்திலும் தயிரிலும் கறுப்புக்கோடும் பாலில் சிகப்புக்கோடும் மோரில் மஞ்சள் கோடும் பருப்பில் புறா கழுத்துப் போலும் எண்ணெய்யில் கோடு சிவந்தும் காணப்படும். ஈரமுள்ள வஸ்துக்கள் வாடியும், காய்ந்தது நிறம் குன்றியும், மெதுவானது கடினமாயும், கடினமானது மெதுவாயும் காணப்படும். இது போன்ற பற்பல குறிகளால் சாப்பாட்டில் விஷம் கலந்திருப்பதை அறியலாம்.

இம்மாதிரியே ஒன்றுக்கொன்று விரோதமுள்ள அகாரங்களைச் சேர்த்துச் சாப்பிடுவது இடுவிஷம் போன்று கெடுதல் விளைவிக்கின்றது.

மனதை வேறு விஷயங்களில் செலுத்தியும் சீக்ரமாகவும் அல்லது மிக தாமதமாகவும் சாப்பிடக்கூடாது. நல்ல பசி உள்ளவன் ஜலம் பருகுவதால் குல்மமும், நல்ல தாகமுள்ளவன் சாப்பிடுவதால் பகந்தரமும் ஏற்படுகின்றது. சாப்பிட்டபின் வாய்கொப்பளித்துப் பல் துவக்க வேண்டும். பிறகு பற்களின் இடுக்குகளில் சேர்ந்திருக்கும் ஆகாரபாகத்தை வெளிப்படுத்தவேண்டும். சாப்பிட்டபின் ஏற்படும் கபத்தை தூமபானத்தால் போக்கலாம். அல்லது கசப்பு உரைப்புள்ள பதார்த்தத்தால் சாப்பிடுவதாலும் தாம்பூலம் போட்டுக் கொள்ளுவதாலும் அகற்றலாம். சாப்பிட்டபின் நூறு அடி நடந்து சிறிது படுத்து ஓய்வு எடுத்துக் கொள்ளவேண்டும். இடது பக்கமாக 16 நிமிஷங்களும் வலது பக்கமாக 12 நிமிஷங்களும் மல்லாந்து 6 நிமிடங்களும் படுத்தபின் அன்றைய காரியங்களைப் பார்க்க வேண்டும். சாப்பிட்டவுடன் உட்கார்ந்திருப்பவன் உடல் பருத்தும், நின்று கொண்டிருப்பவன் பலமுள்ளவனாகவும், நடப்பவன் ஆரோக்கிய முள்ளவனாகவும், தூங்குபவனும் ஓடுபவனும் கடும் வியாதியுள்ளவனாகவும் காணப்படுவான்.

மற்றும் நீதிநெறிமுறை வழுவாது பிறருக்கு உபத்திரவம் ஏற்படாவண்ணம் தனது மனதிற்கும் ஆத்மாவிற்கும் திருப்தி ஏற்படும் விதமாக தனது நடத்தைகளை ஆரோக்கியத்திற்கு உகந்தவாறு அமைந்துக் கொள்பவன் என்றும் கஷ்டப்படமாட்டான்.

மாலை நேரத்தை கடவுள் தியானத்தில் கடத்தி இரவு 6 நாழிகைகள் கழிந்தபின்னர் பகலில் சாப்பிட்ட ஆகாரம் ஜீர்ணமானதை அறிந்து இரவு ஆகாரத்தைச்சாப்பிட வேண்டும். பகலில் சாப்பிட்ட ஆகாரம் ஜீர்ணமாகாமல் பித்தமதிகமிருந்தால் இரவில் பால் அல்லது பால் கலந்த அன்னத்தை சாப்பிடலாம். ஜீர்ணமாகியிருந்தால் பட்டினியாக இருக்கக்கூடாது. பகலில் 12 நாழிகைகளுக்குப் பின்னரும்

16-வது நாழிகைக்கு முன்னும் இரவில் 6 நாழிகைக்கு மேல் 10 நாழிகைக்குள்ளும் சாப்பிடவேண்டும். பிறகு தாம்பூலம் தரித்து வாஸனையுள்ள சந்தனம் பூசிக்கொண்டு ஒரு மணி கழித்த பின்னர் ஸ்திரீயுடன் சேரலாம். போகத்திற்குப் பிறகு ஸ்னானம் பால் குளிர்ந்த ஜலம், மத்யம், மாம்ஸரஸம், கரும்பு, சர்க்கரை சேர்ந்த பக்ஷணங்கள் இவை ஸேவிக்கத்தகுந்தவை.

பிறகு தனது இஷ்ட தேவதையைத் தியானித்து கிழக்கிலோ தெற்கிலோ தலை வைத்துப் படுத்துத் தூங்க வேண்டும். யாத்திரையில் மட்டும் மேற்கில் தலைவைத்துப் படுக்கலாம். களைப்பினால் இந்திரியங்கள் ஓய்ந்தும் எல்லா தூவாரங்களும் கபத்தினால் நிரம்பியும் மனது இந்திரியங்களிலிருந்தும் விடுபட்டும் ஆகும் பொழுது தூக்கம் வருகின்றன. பலம் புஷ்டி ஸுகம் ஆரோக்யம் வீர்யபுஷ்டி ஞானம் இவை தூக்கத்தை ஆச்சர்யித்திருக்கின்றன.

வாஹனம் கீதம் படிப்பு வழிநடத்தல் மத்யம் பாரம் தூக்குதல் அதிக தேகப்பயிற்சி இவைகளினால் களைத்தவர்களும் ஸ்திரீ பாலவிருத்தர்களும் இளைத்தவர்களும் உபவாஸமிருந்தவர்களும் கபம் குறைந்தவர்களும் பகலில் தூங்கும் பழக்கமுடையவர்களும் பகலில் தூங்கலாம். மற்றும் கிரீஷ்மருதுவில் இரவு குறைகின்றபடியால் அப்பொழுது பகல் தூக்கம் உகந்ததே. கபம் மேதஸ் அதிகரித்தவர்களும் விஷமருந்தியவர்களும் பகலில் தூங்கினால் உடம்புவலி தலைவலி உடல் கனத்துப் போகுதல் ஹலீமகம் அக்னி மந்தம் பீனஸம் வீக்கம் காதுவலி அருசி போன்ற பலரோகங்கள் உண்டாகின்றன. அம்மாதிரியே இரவில் கண் விழித்தாலும் பற்பல ரோகங்கள் உண்டாகின்றன. அதனால் அவனவனது தேகக்கூற்றிற்கும் காலத்திற்கும் தகுந்தவாறு பகலிலும் இரவிலும் தூங்குபவனுக்கு ஆரோக்கியம் கெடாமலிருக்கும்.

பத்தொன்பதாவது உல்லாஸம்

ருதுசர்யா

சித்திரை முதலிய பன்னிரண்டு மாதங்களும் வஸந்தம், கிரிஷ்மம், வருஷா, சரத், ஹேமந்தம் சிசிரம் என ஆறு ருதுக்களாக வகுக்கப்பட்டிருக்கின்றன. வஸந்தமும் கிரீஷ்மமும் கோடை காலம் எனவும், வருஷருதுவும் சரத்தும் மழை காலமெனவும், ஹேமந்தமும் சிசிரமும் வஸந்தம் கிரீஷ்மம் என்ற இம்மூன்று ருதுக்களும் உத்தராயணம் எனவும் ஆதானகாலமெனவும் மற்ற மூன்று ருதுக்களும் தக்ஷிணாயனம் எனவும் விஸர்ககாலமெனவும் கூறப்படுகின்றன. ஆதான காலத்தில் ஸூரியனும் காற்றும் பூமியிலிருக்கும் ஸௌம்ய ரஸத்தை எடுத்துக் கொண்டு பிராணிகளின் பலத்தை எடுத்துக்கொள்வதால் ஆதான மெனவும் விஸர்க காலத்தில் வாயு-சந்திரன் மேகம் இவை பலமுள்ளதாக இருப்பதால் ஸூரியனின் பலம் குன்றி நாளொருவண்ணமாக பிராணிகளின் பலமதிகமாவதால் விஸர்ககால மெனக் கருதுகிறார்கள்.

ஹேமந்தருதுவில் ஆசாரம்: இந்த ருதுவின் வெளியில் குளிர் அதிகமாக இருப்பதால் உள் அடைபட்டிருக்கும் ஜடராக்னி மிகவும் பலமடைகிறது. அக்கால் ஆகாரம் அளவில் குறைந்தால் அக்னி ரஸாதி தாதுக்களையே எரித்து விடுமாதலால் இனிப்பு புளிப்பு உப்பு சுவை அதிகமுள்ள ஆகாரத்தை ஸேவிக்க வேண்டும். இரவு அதிகமாக இருப்பதால் காலையில் அதிகப்பசி இருக்கும். ஆதலால் அவசியமான காலைக்கடன்களை முடித்து வாதஹர தைலங்களால் உடலைப் பிடித்துவிட்டு ஸ்னானம் செய்தபின் உஷ்ணமான மெல்லிய பட்டாடைகளை தரித்து புஷ்பசந்தனங்களைத் தரித்துப் பின்னர் ஆஸவம் மத்யத்தெளிவு மாம்ஸம் சூடான மாம்ஸரஸம் உளுந்து

கோதுமைமாவினாலான ஆகாரம், கரும்புப்பாகு பால் பக்ஷணங்கள் எள்ளன்னம் போன்ற ஆகாரங்களை ஸேவித்து மான் தோல் கம்பளி போன்றவைகளால் மூடப்பட்ட சயனத்திருந்து இளம் வெயிலை முதுகு புறமாக ஸேவிக்கவேண்டும். ஸ்வேதம் ஸ்திரீயின் ஆலிங்கனம் இவைகளால் குளிரை அகற்றிக் கொள்ளலாம். கஸ்தூரி குங்குமப்பூ, பச்சைக்கற்பூரம், கிராம்பு, ஜாதிக்காய் இவை வகைக்கு ஒரு நிஷ்கமும் கத்தக்காம்பு 16 நிஷ்கமும் சேர்த்து பனி நீரால் அரைத்து மிளகளவு மாத்திரை உருட்டி வாயிலடக்கிக் கொள்ள வாத கப உபத்திரவங்கள் விலகும். இம்மாத்திரை சேர்ந்த தாம்பூலம் ஸேவிப்பதும் சிறந்தது.

சிசிரருதுவின் ஆசாரம் : இக்காலத்தில் ஆதான காலத்தின் ஆரம்பமானதால் வரட்சியும் குளிருமதிகமானதால் கபமதிகமாகும். ஆதலால் ஹேமந்தருதுவின் ஆசாரமே அனுஷ்டிக்கத் தகுந்தது.

வஸந்தருதுவில் ஆசாரம்: சிசிரருதுவில் சேர்ந்த கபம் இக்காலத்தில் சூரியனின் தாபத்தால் உருகி அக்னி பலத்தை குறைத்து நோய்களை உண்டாக்கும். அதனால் தீக்ஷ்ணமான நஸ்யம் அஞ்சனம் வமனம் உத்வர்தனம் தேகப்பயிற்சி இவைகளால் கபத்தைக் குறைக்க வேண்டும். வென்னீரில் ஸ்னானம் செய்து புஷ்ப சந்தன தாரணம் செய்து மத்யம் ஆஸுவம் மாவம் அரிஷ்டம் சீது என்ற ஐந்து வித மத்யங்களை ஸேவிக்கவேண்டும். கபஹரமான காய்கறிகள் பானகம், சுக்கு கோரைக்கிழங்கு அல்லது தேன் கலந்த ஜலம் இவைகளைப் பருகி ஸ்திரீகளுடன் பகல் நேரத்தைக் கழிக்கவேண்டும். பகல் தூக்கம், கருவான ஆகாரம், புளிப்பு தித்திப்பு அதிகமான ஆகாரங்கள் இவைகளை விலக்கவேண்டும்.

கிரீஷ்மருது ஆசாரம்: இந்த ருதுவில் ஸூரியனின் வெப்பம் அதிகமாகி கபமும் ஸ்நிக்தமான குணங்களும்

குறைந்து வாயு அதிகமாகும். அதனால் மார்பளவு ஜலமுள்ள குளிர்ந்த ஸுகந்தமான ஓடையிலோ நதியிலோ வெகு நேரம் ஸ்னானம் செய்து உடல் துவட்டி மெல்லிய ஆடை ஆபரணங்கள் அணிந்து சந்தனம் புஷ்பங்கள் தரிக்கவேண்டும். இக்காலத்தில் மத்யம் சாப்பிடக்கூடாது. சாப்பிட அவசியமிருந்தால் சிறிதளவில் ஜலம் மிகுதியாய் கலந்து சாப்பிடுதல் நலம். இனிப்பாயும் சீத-ஸ்நிக்த குணமுள்ளதும் திரவமானதும் எளிதில் ஜீர்ணமாக்க கூடியதுமான ஆகாரம், சர்க்கரை மிளகு சேர்ந்த தயிர், வாழைப்பழம் பலாப்பழம் மாம்பழம் இம்மூன்றால் சர்க்கரை சேர்த்து தயாரிக்கப்பட்ட பானகம், திராக்ஷை பேரீச்சை இலுப்பைப் பூ குமிழ்பழம் சிற்றீச்சை இவைகளை சர்க்கரையும் ஜலமும் சேர்த்துப் பிசைந்து ஒருநாள் வைத்தெடுத்துத் துணியில் வடிகட்டிய பஞ்சஸாரம், தேன் சர்க்கரை சேர்த்துத் தெளிந்த பழரஸம், தேன் சர்க்கரை சேர்த்துக் கெட்டியான பழ லேகியம் இவைகள் புஷ்பங்களால் மணமுள்ள தாக்கப்பட்டு உபயோகப்படுத்த மனதிற்கு உத்ஸாஹமளிக்கின்றன. நல்ல குளிர்ந்த தோட்டத்தில் மெல்லிய துல்லியமான படுக்கையில் படுத்து நண்பர்களுடன் பகலை கழிக்கவேண்டும். இரவில் நிலாவிலோ செயற்கையாலோ இயற்கையாலோ ஜலம் தாரையாகப் பெருகும் கிருஹத்திலோ தங்கலாம்.

வருஷருது ஆசாரம் : ஆதான காலத்தில் தளர்ந்த மனிதனுக்கு மழை காலத்தில் அக்னி பலமும் குறைகின்றது. இயற்கையாகவே தோஷங்களும் கோபமடைவதாலும் ஒன்றுக்கொன்று தோஷங்கள் கெடுதி விளைவிப்பதாலும் அக்காலத்தில் திரிதோஷசமனமாகவும் அக்னி தீபனமாயுமுள்ள எல்லாவற்றையும் செய்ய வேண்டும். வமன விரேசனம் செய்து ஆஸ்தாபன பஸ்பதியும் செய்து பழைய தான்யங்களாலான ஆகாரம் நெய் சுக்கு போன்றவைகளால் ஸம்ஸ்காரம் செய்யப்பட்ட மாம்ஸரஸம், பழைய மத்யம், வென்னீர் இவைகளை அருந்தலாம். அடர்ந்த

மழை பெய்யும்போது புளிப்பு உப்பு நெய் அல்லது எண்ணெய் அதிகமாகச் சேர்த்துச் சாப்பிடவேண்டும். அவ்விதமே காய்ந்து வரண்ட ஆகாரங்களை தேன் சேர்த்துச் சாப்பிடவேண்டும். தினம் ஸ்னானம் செய்தும் பாதரக்ஷையுடன் நடந்து கொண்டும், குளிரில்லாவிடத்தில் வஸித்தும் காலத்தைக் கடத்த வேண்டும். ஆற்றுத்தண்ணீர் ஜலத்தில் கரைத்த ஸத்துமா, பகல் தூக்கம், தேகப்பயிற்சி, வெய்யிலில் செல்லுதல் இவைகளை நீக்கவேண்டும்.

சரத்ருது ஆசாரம் : வருஷருதுவின் மழைக்கும் குளிருக்கும் பழக்கமடைந்த தேகம் திடீரென்று வெயிலின் உக்ரத்தைத் தாங்காமல் பித்தமதிகரித்து கோபமடைகின்றது. அதனால் பித்தஹர தைலம் தேய்த்துக்கொள்வதும், உடலை லேசாகப் பிடித்துவிடுவதும், இளஞ்சூடுள்ள வென்னீரில் ஸ்னானம் செய்வதும் சந்தனம் பூசிக்கொள்வதும், பித்தஹரமான விரேசனமும், ரக்த மோக்ஷமும், மஹாதிக்தம் போன்ற கிருதங்களை ஸேவிப்பதும் மிகுந்த உபகாரமளிக்கும். அரிசி கோதுமை பயறுபோன்ற தானியங்களும் ஜாங்கலமாம்ஸமும் தேனும் சர்க்கரையும் தித்திப்பு கசப்பு துவர்ப்பு சுவையுள்ள ஆகாரமும் மிகவும் ஹிதம். பசி ஏற்பட்டதும் லகுவான ஆகாரம் நெய் பால் பானகம் இளநீர் இவைகளுடன் சாப்பிடுவது நல்லது. விடியற்காலையில் அகஸ்தியநக்ஷத்திரத்தின் கிரணங்கள் பட்டும் ஸூரிய சந்திரகிரணங்கள் பட்டும் சுத்தமான ஹம்ஸோதகத்தைச் சாப்பிடலாம். மாலையில் சந்தனம் பூசிக்கொண்டு பூ மாலைகளைத் தரித்து நல்ல காற்றுள்ள மாடிகளில் தங்கலாம். பித்தஸரமான மத்யமும் கரும்புச்சாறும் சாப்பிட்டுக்கொண்டு இரவு நேரத்தைப் போக்கலாம். க்ஷாரங்கள், வயிறு நிறைய சாப்பிடுதல், நல்லெண்ணெய், வெயில், பகல் தூக்கம், தேகப்பயிற்சி, வெய்யிலில் செல்லுதல் இவைகளை நீக்கவேண்டும்.

எல்லா ருதுக்களின் பொதுவான ஆசாரம்: ஹேமந்தத்திலும் சிசிரத்திலும் வருஷருதுவின் ஆரம்பத்திலும் தித்திப்பு புளிப்பு உப்பு சுவை உள்ளதும், வஸந்தத்தில் கசப்பு துவர்ப்பு உள்ளதும், கிரீஷ்மத்திலும் தித்திப்பு உள்ளதும், சரத்ருதுவில் தித்திப்பு கசப்பு துவர்ப்புள்ளதுமான ஆகாரம் உபயோகிக்கத்தகுந்தது. வஸந்தத்தில் ரூக்ஷ உஷ்ணமானதும், கிரீஷ்மத்தில் ஸ்நிக்தசீதமும், வர்ஷசிசிரஹேமந்தருதுக்களில் ஸ்நிக்தோஷ்ணமும் சரத்ருதுவில் ரூக்ஷசீதமும் உபயோகிக்கத்தகுந்தது.

ஒரு ருதுவின் கடைசிவாரமும் அடுத்த ருதுவின் முதல் வாரமும் ருது ஸந்தி எனக் கருதப்படுகின்றது. இக்காலத்தில் முதல் ருதுவின் ஆசாரத்தைக் கிரமமாகக் குறைத்து அடுத்த ருதுவின் ஆசாரத்தைக் கிரமமாக அதிகப்படுத்த வேண்டும்.

ஆகாரம் ஜீர்ணமாகும் முறை

சாப்பிடப்பட்ட ஆகாரம் பிராணவாயுவினால் ஆமாசயத்திற்குக் கொண்டுவரப்பட்டு அங்குள்ள திரவங்களினால் பிரிக்கப்பட்டு சேர்க்கை மெதுவானவுடன் ஸமான வாயுவினால் உந்தப்படும் கோஷ்டாக்னியினால் பாகம் அடைந்து அறுசுவையுடன் கூடிய ஆகாரம் தித்திப்பு சுவை உள்ளதாக மாற்றப்படுகின்றது. அங்கு தித்திப்பான நுரைபோன்ற கபதத்துவமுண்டாகின்றது. பிறகு அவ்வாகாரம் விதாஹத்தால் புளிப்படைந்து ஆமாசயத்திலிருந்தும் நெகிழ்ந்து பித்தமாக மாறி பக்வாசயத்தை அடைகின்றது. அங்குள்ள அக்னியால் ஆகாரத்தின் திரவாம்சம் சுண்டியவுடன் கடு (உரைப்பு) விபாகமடைகின்றது. ஐந்து விதமாக பிருதிவி ஜலம் தேஜஸ் வாயு ஆகாசம் என்ற பூதாக்னிகளால் பாகமடைந்த ஆகாரத்தினின்றும் ஐந்து வித பூதாம்சங்களின் ஸத்வங்கள் ஏற்பட்டு அதன் அதன் அம்சத்தை வளரச் செய்கின்றன.

பாகமான ஆகாரம் ஸாரம் கிட்டம் என இரு வகையாகப் பிரிகின்றது. கிட்டம் மலம் மூத்திரமென இருவகையாகப் பிரிந்து வெளிவருகின்றது. ஸாரத்தை மறுபடியும் ரஸம் ரக்தம் மாம்ஸம் மேதஸ் மஜ்ஜை அஸ்திசுக்ரம் என்ற ஏழு தாதுக்களின் தனித்தனி அக்னிகள் பாகம் செய்து அதன் அதன் ஸத்வத்தைப் பிரித்து அந்த அந்த தாதுக்களுடன் சேர்க்கின்றன. தாதுக்களாக மாறிய பாகம் போக மீதியுள்ள அம்சம் ஸ்தன்யம் ஸிரை கண்டரை தோல் வஸை ஸ்நாயு போன்ற உபதாதுக்களாக மாறுகின்றன. உபதாதுக்களாக மாறும் அம்சத்தைத் தவிர மிகுதியான அழுக்கு கபம், பித்தம், ஒன்பது துவாரங்களிலும் ஏற்படும் மலம், வியர்வை, ரோமகோசங்கள், கண்பீளை, ஓஜஸ் என்று மலங்களாக வெளிப்படுகின்றன. இவை ஒன்றை ஒன்று ஆசிரயித்தும் தாங்கியும் போற்றியும் போஷித்தும் வளர்கின்றன. இன்று சாப்பிட்ட அன்னம் ஏழாவது நாள் சுக்ரமாக மாறி ஒரு மாதத்தில் கர்ப்ப உத்பத்திக்கேற்றதாக ஆகின்றது. விருஷ்யமான மருந்துகளின் உபயோகத்தால் ஆகாரத்தை உடனேயே சுக்ரமாக மாற்றிக்கொள்ளலாம்.

முன் கூறிய பூதாக்னிகள் ஐந்து தாதுக்களின் அக்னிகள் ஏழு, ஜடராக்னி என்ற பதிமூன்று விதமான அக்னிகளில் ஜடராக்னியே பிரதானமும் மற்றவைகளுக்கு மூல காரணமுமாகும். அதனால் நமது ஆரோக்கியம் அதன் நன்மையைப் பொறுத்தே இருக்கின்றது. அந்த ஜடாராக்னியை தீக்ஷ்ணம் ஸமம் விஷமம் மந்தமென நான்கு விதமாகப் பிரிக்கலாம்.

பித்தத்தினால் மூட்டப்பட்ட ஸமான வாயு ஜடராக்னியைத் தூண்டும் பொழுது தீக்ஷ்ணாக்னியாகி முறையற்று அதிகமாகச் சாப்பிட்டாலும் சீக்கிரம் ஜீர்ணம் செய்து பித்த ரோகங்களை உண்டாக்குகின்றது. அக்னியைத் தூண்டும் ஸமானவாயு கபத்தினால் பீடிக்கப்பட்டால் அக்னி மந்தமாகி மிதமான ஆகாரத்தையும் தாமதத்துடன் ஜீர்ணம்

செய்யும். வாய் உலர்ந்து போகுதல், பொறுமல், வயிறு கனத்திருத்தல், இரைச்சல் முதலியவைகளையும் கபநோய்களையும் உண்டாக்கும். ஸமானவாயு தனது நிலையிலிருந்தால் ஸமாக்னியாகி ஆரோக்கியத்தை அளிக்கின்றது. தனது நிலையை விட்டு அகன்று மிதமான ஆகாரம் தாமதித்தும் அதிக ஆகாரம் சீக்கிரமாகவும் ஜீர்ணமாகி நிலை தப்பி ஜீர்ண சக்தியைக் கெடுத்து நோய்களை விளைவிக்கின்றது. இது விஷமாக்னி.

தீக்ஷ்ணாக்னி இரண்டு யாமங்களிலும், மந்தாக்னி கஷ்டத்துடன் ஆறு யாமங்களிலும், ஸமாக்னி ஸுகமாக நான்கு யாமங்களிலும், விஷமாக்னி சிலநேரம் சீக்கிரமாகவும் சிலநேரம் தாமதித்தும் ஜீர்ணம் செய்கின்றது.

ஜடராக்னி எல்லோருக்கும் நாபி ஸ்தானத்திலிருக்கின்றது. யானை ஒட்டகை குதிரை போன்றவைகளுக்கு கட்டை விரல் அளவும், மனித சிறியமிருகங்கள் பசு முதலியவைகளுக்கு யவை அளவும், கழுகு கோட்டான் கொக்கு முதலியவைகளுக்கு எள்ளளவும், மற்ற புழு முதலியவைகளுக்கு மயிரிழை அளவும் இருக்கின்றது. இந்த ஜடராக்னி ஆகாரம் கிடைக்காவிடில் தாதுக்களையே பாகம் செய்து விடுமாதலால் காலமறிந்து ஆகாரம் செய்தல் நலம்.

இருபதாவது உல்லாஸம்

ஜீவன்முக்தி அடைவதற்குகந்த யோக ஸித்தி

ஜீவன்முக்தனின் லக்ஷணம் : காமம், குரோதம் போன்ற ஆறு வித அரிவர்கத்தையும் மானம் வெட்கம் குலப்பெருமை இகழ்ச்சி அகம்பாவம் வஞ்சனை அவித்யை ஜடத்தன்மை கர்வம் குளிர்ச்சி வெப்பம் காற்று ஸுகம் துக்கம் பாபம் புண்யம் ஸுகம் துக்கம் பிள்ளை மனைவி என்பது போன்ற உலக விஷயங்களில் தாமரையிலையிலுள்ள தண்ணீர் போல்

பற்றற்று தத்வத்தை சிந்திப்பதில் கருத்துள்ளவனும் மூப்பு மரணம் என்ற அவஸ்தைகளற்றவனும் சிவனுடன் தனது அபோதத்தை அறிந்தவனும் இறக்காமலே சிவத்தன்மை அடைந்தவனுமே ஜீவன்முக்தனாகிறான். தேக முடிவில் ஏற்படும் மோக்ஷம் பயனற்றதாகையால் ஜீவன் முக்தியே-உயிருடனிருந்து கொண்டே மோக்ஷத்தைப் பெறுவது தான் உயர்ந்தது. ஜீவன்முக்தி பெறுவதற்கு முக்கிய ஸாதனம் தேகத்தை யோகவழியால் திடப்படுத்துவதே.

யோகஸித்தி: உலகில் ரஸமும் வாயுவும் எல்லா ஸித்தியும் அளிக்கவல்லவை. மூர்ச்சனமடைந்தாலும் கட்டுப் பாட்டாலும் இவ்விரண்டும் வியாதிகளை நீக்கி மரணத்தைத் தடுத்து ஆகாசகதியை அளிக்கவல்லவை. ரஸத்தைப் பற்றி முன்னமேயே கூறப்பட்டுள்ளது. வாயுவை அடக்குவதால் ஞானமும் ஞானத்தால் முக்தியும் பெறுவதே ஜீவன் முக்தி.

பரப்பிரும்மத்திடமிருந்து ஆகாரமும், அதிலிருந்தும் வாயுவும், வாயுவிட மிருந்து அக்னியும் அக்னியிலிருந்து ஜலமும், ஜலமிருந்து பூமியும் இவ்விதம் ஐந்து பூதங்கள் உற்பத்தியடைந்தன. ஆகாசம் சப்த உருவுடனும், வாயு சப்தஸ்பர்ச உருவுடனும், அக்னி சப்தஸ்பர்ச ரூப உருவுடனும் ஜலம் சப்த ஸ்பர்சரூபரஸ உருவுடனும், பூமி சப்த ஸ்பர்சரூபரஸ கந்த உருவுடனும் வெளியாகின. இவ்வைந்து பூதங்களுக்கும் பிரும்மா விஷ்ணு ருத்திரன் மஹேச்வரன் ஸதாசிவன் என்று ஐந்து அதிஷ்டான தேவதைகள் இருக்கின்றனர். உத்பத்தியைப் போல் நாசமடையும் பொழுதும் பூமி பிரளய ஜலத்தில் மூழ்கியும் ஜலம் பிரளயாக்னியால் சுண்டியும் அவ்வக்னி பிரளய வாயுவினால் அணைக்கப்பட்டும் வாயு ஆகாசத்தில் மறைந்தும் உருமறைந்து போகின்றன. இவ்வைந்து பூததத்வங்களையும் யோகநிலையிலமர்ந்து தியானம் செய் அவ்வைந்து பூத ஸ்வரூபனாகி அமரனாகிறான்.

யோகஸித்தியின் அங்கங்கள்

ஆஸனம் பிராணாயாமம் பிரத்யாஹாரம் தாரணை தியானம் ஸமாதி என யோகாங்கங்கள் அறுவகைப் படுகின்றன.

1. ஆஸனம்:

ஆஸன முறைகள் 84 லக்ஷம் வரை கணக்கிடப்படுகின்றன. அதில் ஸித்தாஸனமும் யோகம் பயிலுவதற்கு மிக உபகாரமளிக்கின்றன.

ஸித்தாஸனம் : தனது குதத்திற்கும் பீஜத்திற்கும் நடுவில் ஒரு குதிகாலையும், லிங்கத்தின் மேல் பக்கம் மற்றொரு குதிகாலையும் வைத்து அங்கம் கோணாமல் நிமிர்ந்து ஆடாமல் உட்கார்ந்து கண்களைப் புருவநடுவிற் செலுத்தி மனதைக் கட்டுப்படுத்துவது ஸித்தாஸனமாகும்.

பத்மாஸனம் : இடது துடையின் மேல் வலது பாதத்தையும் வலது துடையின் மேல் இடது பாதத்தையும் வைத்து உட்கார்ந்து கைகளிரண்டையும் முதுகில் குறுக்கே கொணர்ந்து வலது கால்கட்டை விரலை இடது கையாலும் பிடித்து நிமிர்ந்து உட்கார்ந்து தனது முகவாய்க் கட்டையை மார்பில் இடிக்கும் படி வைத்து மூக்கின் நுனியைப் பார்த்து உட்காருவது பத்மாஸனமாகும்.

2. பிராணாயாமம்

அஜபாமுத்திரை : மூலாதாரம், ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம், அனாஸதம், விசுத்தி, ஆக்ஞா என ஆறு சக்கிரங்கள் முறையே குதம் லிங்கமூலம் தொப்புள் ஹிருதயம் கழுத்து புருவமத்தி இடங்களில் அமைந்துள்ளன. தொப்புளுக்குக் கீழும் லிங்கத்திற்கு மேலும் பக்ஷியின் முட்டை போன்ற கந்தத்திலிருந்து 2070 நாடிகள்

கிளம்புகின்றன. அவைகளில் இடை, பிங்கலை, ஸுஷும்னை, காந்தாரீ, ஹஸ்திஜிஹ்வா, பூஷா, தரங்கிணீ, அலம்புஷா, குஹூ, சங்கினீ என்ற பத்து நாடிகள் முக்கியமாக வாத ஸஞ்சாரமுள்ளவை. பிராணன் அபானன் வியானன் உதானன் ஸமானன் நாகன் கூர்மம் கிருகலன் தேவதத்தன் தனஞ்சயன் என்ற பத்து வாயுக்கள் மேற்கூறிய நாடீசக்கிரங்களில் ஸஞ்சரிக்கின்றன. இவைகளில் பிராணன் அபானன் என்ற இருவாயுகள் மேலும் கீழும் இழுப்பதால் ஜீவன் ஸ்திரனாக இருப்பதில்லை. ஒரு நாளில் 21600 தடவை பிராணன் ''ஹம்'' என்று வெளிவந்து 'ஸ' என்று உட்செல்கின்றது. இதுவே ஹம்ஸ காயத்திரீ. ஜபமில்லாமல் மந்திரம் உருவாகிற படியால் அஜபா காயத்ரீ என்றும் கூறப்படுகின்றன.

முன் கூறிய பக்ஷியின் முட்டை உருக்கொண்ட கந்தத்தின் மேல் குண்டலினீ தூங்கும் பாம்பு போல் இருக்கின்றது. அதை வஹ்நியோகத்தால் எழுப்பினால் அது பிரும்மத்துவாரத்தைத் திறந்து கொடுத்து ஸித்தி அளிக்கும்.

ஜாலந்தரம் மூலபந்தம் ஒட்டியாணம் கேசரீ மஹாமுத்திரை என ஐந்து முத்திரைகள் பிராணாயாமத்திற்கு உபயோகப்படுகின்றன.

ஜாலந்தர முத்திரை : கழுத்திலுள்ள குழாய்களைக் கட்டுப்படுத்துவது தான் இம் முத்திரை. தலையை முன் பக்கம் வளைத்துக் கொண்டு இம் முத்திரையைச் செய்ய ஆகாச சக்கிரத்தினின்றும் விழும் அமிருதம் கீழ் அக்னியில் விழாது. இம்முத்திரை காது ரோகங்களையும் அகற்றுகின்றது.

மூல பந்தம் : குதத்தைச் சுருக்கிக் குதிகாலால் யோனியையும் அழுத்தி அபானத்தை மேலிழுக்க மூலபந்தம் ஏற்பட்டு மலமூத்திரங்கள் குறைந்து பிராணவாயுவும் அபான வாயுவும் ஒன்று சேரும். மூப்பு விலகி யௌவனம் திரும்பும்.

ஒட்டியாண பந்தம்: வயிற்றை இறுக்கி தொப்புளை முதுகெலும்புடன் ஒன்று சேர்க்க வாயு கட்டுப்பட்டு ஓய்ந்து விடும். மூப்பு மரணம் விலகும்.

மஹாமுத்திரை : இடது குதிகாலால் யோனி ஸ்தானத்தை அழுத்தி வலது பாதத்தை கைகளால் மேல் தாங்கி முக்வாய்க் கட்டையை மார்பில் வைத்து பிராண வாயுவை நன்கு உள்ளிழுத்து வெளிவிடவும். இவ்விதமே கால்களை மாற்றி மாற்றிச் செய்யவேண்டும். இது நாக்கை வற்றச் செய்வதால் அறுசுவைகளின் ருசியை அறிய முடியாது. விஷம் அருந்தினாலும் அது தனது சக்தியை இழந்து அமிருதமாகும். குல்மம் குஷ்டம் போன்ற வியாதிகள் நீங்கும்.

3. பிரத்யாஹாரம்

பிராணாயாமம் செய்துகொண்டே வர பிராண வாயு ஜயம் ஏற்படுவதால் மனதையும் இந்திரியங்களையும் வெளி விஷயங்களிலிருந்தும் திருப்பி உட்நோக்கம் செய்ய முடியும். இதுவே பிரத்யாஹாரமாகம். பிராண ஜயம் ஏற்படாவிடில் பிரத்யாஹாரம் ஸாத்யமாகாது.

பிராணாயாமத்தை முறை தவறிச் செய்தால் சுவாஸம் காஸம் தலை-காது நோய்கள் விக்கல் முதலியவை ஏற்படுவதால் குருவின் உபதேசப்படி ஒழுங்கான முறையில் இவைகளை அப்பியஸிக்கவேண்டும்.

விபரீதகரணீ முத்திரை: நாபிஸ்தானத்தில் நெருப்பைப் போன்று தகிக்கும் ஸூர்யன் உள் நாக்கிலிருந்து சந்திரன் வர்ஷிக்கும் அமிருதத்தை விழுங்கி விடுவதால் அமிருதம் வீணாகின்றது. இதைத் தடுக்க காக்கை மூக்கு போல் உதடுகளை முன் நீட்டி ஸீத்காரத்துடன் வாயால் காற்றை உருஞ்சி மூக்கால் விட சீதளீகரணம் என்ற இந்த யோகமுறை பிராண வாயுவைக் குளிரச் செய்து ஜ்வரத்தையும் பித்த

வியாதிகளையும் போக்குகின்றது. அமிருதத்தைப் பருகுவதால் ஆயுள் நீடிக்கின்றது. இம் மாதிரியே முன் கூறிய கேசரீ முத்திரை மிகப்பயன் படுகின்றது.

4. தாரணை

முன் கூறிய இரு முறைகளையும் அனுஷ்டித்து இந்திரியங்களை வெளி விஷணங்களிலிருந்து திருப்பியதும் மனதின் சஞ்சலத்தைப் போக்கும் அப்பியாஸம் இது ஐந்து பூததத்வங்களிலும் அதனதன் ஆதாரஸ்தானத்தில் பிராணனை மனதால் தாரணை செய்யவேண்டும். இவ்விதம் செய்ய ஓரிடத்தில் மனது நிலைக்கின்றது.

5. தியானம்:

சஞ்சலமகன்ற மனதை, பரம் பொருளை ஸகுணமாகவோ நிர்குணமாகவோ தியானித்து அவ்விடத்தில் தாரைபோன்று இடைவிடாது பதியவைப்பதே தியான யோகமாகும். மூலாதாரம் முதலிய ஆறு சக்கிரங்களிலும் ஆத்மாவை தியானம் செய்து பரமானந்தத்தை அடையலாம்.

6. ஸமாதி

தியான நிலையிலிருந்து தியானம் செய்பவன், தியானம் செய்யப்படுவது, தியானம் என்ற மூன்று வித நிலையகன்ற எல்லா ஒன்றரக் கலப்பதே ஸமாதி நிலையாகும். ஆத்மாவில் மனது ஒன்றரக் கலக்கின்றது. இந்நிலையில் ஸுகம் துக்கம் மானம் அவமானம் பிரியம் அப்பிரியம் என்ற பாகுபாடற்றும் ஆயுதம் மந்திரம் யந்திரம் தந்திரம் நெருப்பு ஜலம் இவைகளின் பயமகன்றும் பிரும்மானந்தத்தை அனுபவித்துக் கொண்டு ஜீவன் முக்த நிலையை அடைகின்றான். அவனிருக்குமிடம் மிகப் புனிதமானது. அவனது பார்வையால் பாபிகளும் புனிதமாகிறார்கள்.

இருபத்தோராவது உல்லாஸம்

குடீபிரவேச ரஸாயன முறை

முன் சிற் சில ஔஷதிகளின் ரஸாயன ஸித்தி பெற குடீப்பிராவேசிகம் என்ற ரஸாய்ன முறையைத் தழுவ உபதேசிக்கப் பட்டுள்ளது. அவ்வித ரஸாயன முறையை அனுஷ்டிக்க, கீழ்க்குறிப்பிடப்படும் சாதனங்களைத் தயார் செய்யவேண்டும்.

குடீ-குடிசை: பூமியைச் சமப்படுத்தி ஆறு ஸ்தம்பங்கள் வீதம் ஆறு வரிசைகள் நட்டு மேல் லாகடம் செய்து சுண்ணாம்பால் பூசி உள் நாலுப்பக்கமும் சுவர் எடுத்து அவ்வறையின் மேற்கு திக்கில் 24 அங்குல அகலமுடைய வாசல் வைக்கவும். அவ்வறையைச்சுற்றி நான்கு புறமும் சுவர் வைத்து அதன் தென்திசையில் முன் கூறியவாறே வாசல் வைக்கவும். இவ்விதம் இரண்டாவது அறையைச் சுற்றி மூன்றாவது அறை நிர்மாணித்து அதற்குக் கிழக்கு திசையில் வாசல் வைக்கவும். ஒவ்வொரு வாசலுக்கும் கதவுகள் பொருத்தியும் சுவர்களுக்கு சுண்ணாம்பு பூசியும் வைக்க வேண்டும். உள்ளறையில் மூன்றரை அடி அகலமும் பத்தடி நீளமும் எட்டங்குல உயரமுமுள்ள இருவேதிகள் செய்து அதில் துணியில் வடிகட்டிய சாம்பலை நிரப்பவும். உள் சுவர்களில் பைரவர், மிருத்யுஞ்ஜயர், வடுகபைரவர் இவர்களுடைய உருவத்தையும் சிந்தாமணி சாரதா அகோரர் மஹாகணபதி இவர்களின் யந்திரங்களையும் மந்திரங்களுடன் எழுதி பூஜிக்கவேண்டும். முதல் அறையின் வெளிச்சுவற்றில் பைரவர்களையும் இரண்டாவது அறைச்சுவரின் உள் பாகத்தில் ருத்திரர்கள், ஒன்பதுநாதர்கள், ஒன்பது ஸித்தர்கள் இவர்களையும் மூன்றாவது அறையின் உட் சுவற்றில் பிராம்மீ முதலிய மாத்ருதேவதைகளையும், 64 யோகினிகளையும் வெளியல் இந்திரன் முதலிய எட்டு திக் பாலர்களையும்

சந்திரன் ஸூர்யன் முதலிய கிரகங்களையும் நக்ஷத்ரங்களையும் மேஷாதி ராசிகளையும் முதல் அறையின் வாசலில் பக்கத்தில் கணேசனையும் பைரவனையும் இரண்டாவது வாசலில் சங்கபத்மகர்களையும் மூன்றாவது அறை வாசலில் கருடனையும் ஹனுமானையும் எழுதி பூஜை செய்யவேண்டும்.

இவ்விதம் குடிசை தயார் செய்து அதில் ரஸாயன முறைகளை அனுஷ்டிக்க நிச்சயமாக பூர்ணமாகக் குறிப்பிட்ட பலன்கள் கிட்டும்.

அமரீகல்பம்

ஸித்தனின் சிறு நீருக்கு அமரீ எனப்பெயர். வமனம் விரேசனம் போன்ற தேக சுத்தி செய்து கொண்டு குடீப்பிரவேச முறைப்படி அமரியைப் பருகவேண்டும். தேத்தான் கட்டையினால் ஒரு பாத்திரம் செய்து அதன் உள் கால் பல அளவு திரிபலையை அமரியினால் அரைத்துப் பூசிக் கவிழ்த்து வைத்து மறு நாட்காலை முதல் தாரையையும் கடைசி தாரையையும் விட்டு நடுவில் வரும் அமரியை மட்டும் பாத்திரத்தில் ஏந்தி திரிபலை சேர்த்துக் கலக்கிக் கிழக்கு முகமாக அமர்ந்து சாப்பிடவேண்டும். ஒரு மண்டலம் வரை சாப்பிட உள் வெளி சுத்தி ஏற்படுகின்றது. இரண்டாவது மண்டலத்தில் குஷ்டங்களும் மூன்றாவது மண்டலத்தில் விஷங்களும் விலகுகின்றன. நான்காவது மண்டலத்தில் மலத்தின் நாற்றமும், ஆறாவது மண்டலத்தில் சரீரநாற்றமும் அகலும். ஏழாவது மண்டலத்தில் இந்திரியங்களின் பலமதிகமாகம். எட்டாவது மண்டலம் முதல் பதினான்கு மண்டலம் வரை மஞ்சள் தூள் கால் பலம் சேர்த்துச் சாப்பிட வேண்டும். பதினைந்து முதல் 21 மண்டலம் வரை மான் கொம்பும் கந்தகமும் சேர்த்துச் சாப்பிட தேகவேதம் லோஹவேதம் இரண்டும் பெறலாம். அடுத்த ஏழு

மண்டலங்கள் (22-28) அப்பிரகம் பஸ்மமும் திரிபலை சூர்ணமும் சேர்த்தும் பிறகு ஏழுமண்டலங்கள் (29-35) காந்தபஸ்மம் சேர்த்தும் பிறகு ஏழுமண்டலங்கள் (36-42) தங்கபஸ்மமும் நெல்லிக்காய்த் தூளும் சேர்த்தும் பிறகு ஏழுமண்டலங்கள் (43-49) ரஸபஸ்மமும் திரிபலை சேர்த்தும் சாப்பிட அணிமாதி ஸித்திகள் பெற்று ஆகாசத்தில் ஸஞ்சரிக்க சக்தி பெற்று ஸித்தர்களுடன் கூடி எல்லா உலகங்களிலும் ஸஞ்சரிப்பான்.

முதல் மண்டலமிருந்தே மற்ற நேரங்களில் வெளிப்படும் அமரியாலும் ஊமத்தைச் சாற்றினாலும் விபூதியைக் குழப்பி உடல் முழுவதும் பூசிக் கொள்ளவேண்டும். மற்றும் வெளிவரும் அமரியைத் தலை, கை, கால், காது, கண்களில் தடவிக் கொள்ளவேண்டும். ஒரு பொழுதும் அமரியைப் பூமியில் விடக்கூடாது. அவனது அமரீபட்ட இடமெல்லாம் தங்கமாகும்.

இருபத்திரண்டாவது உல்லாஸம்

புல்லுருவி கல்பம்

புல்லுருவி ஆண் பெண் என இருவகைப்படுகின்றது. பேரீச்சையின் இலையைப் போல் இலையுள்ளது ஆண் புல்லுருவி எனவும், வட்ட உருவமுள்ள இலையுடன் படரும் குணமுள்ளது பெண் புல்லுருவி எனவும் ஆண் புல்லுருவியே எல்லா ஸித்திகளையும் அளிக்கவல்லது எனவும் கருதப்படுகின்றது. இது கசப்பும் துவர்ப்பும் உள்ளதும் கபநோய் பித்தநோய் களைப்பு விஷம் இவைகளை அகற்றுவதும் வசியம் முதலிய ஸித்திகளை அளிப்பதும் ரஸாயனமும் வாஜீகரணமுமாகும்.

ஒருநாள் உபவாஸமிருந்து ஸ்னானம் செய்து சிவந்த சந்தனத்தையும் புஷ்பத்தையும் தரித்துக் கொண்டு கேசத்தையும் வஸ்திரத்தையும் அவிழ்த்து விட்டு இரவில் புல்லுருவியுள்ள மரத்தைப் பிரதக்ஷினம் செய்து பூஜை செய்து தயிரன்னத்தை பலியாக அளித்து சிந்தாமணி மந்திரத்தையும் ந்ருஸிம்ஹ மந்திரத்தையும் 108 தடவை ஜபித்து கத்தியால் வெட்டி எடுக்கவேண்டும்.

அச்வினீ நக்ஷத்திரத்தில் அரசின் புல்லுருவியை எடுத்து பாலில் அரைத்துக் கலக்கிச் சாப்பிட குதிரையின் பலம் கிட்டும். அதையே ஸூர்ய சந்திரகிரகண நேரத்தில் எடுத்து ஜலத்தில் அரைத்து கோரோசனை சேர்த்துத் திலகமிட வசியமாகும். அசுவினீ நக்ஷத்ரத்தில் ஆலின் புல்லுருவியை எடுத்து நூலால் கையில் கட்டிக்கொள்ள பிறர் கண்ணுக்குப் புலப்படாமலிருப்பான். பாலில் கரைத்து சாப்பிட வசியமாகும். அதே நக்ஷத்ரத்தில் வாகையின் புல்லுருவியை கையில் கட்டிக்கொள்ள வீர்யஸ்தம்பம் ஏற்படும். அந் நக்ஷத்திரத்திலேயே புரசின் புல்லுருவியைக் கையில் கட்டிக்கொள்ள ஸ்திரீவசியமும், அழிஞ்சில் புல்லுருவியைக் கட்டிக்கொள்ள உலகவசியமும் ஏற்படும்.

பரணியில் : தர்ப்பைப் புல்லுருவியை வலது கையில் கட்டிக் கொள்ள பிறர் கண்களுக்குப் புலப்படாமையும், அத்திப்புல்லுருவியை தான்யக் குவியலில் வைக்க தான்ய விருத்தியும், இலந்தைப் புல்லுருவியை வலது கையில் கட்டிக்கொள்ள நினைத்தது கிட்டுவதும் பலனாம்.

கிருத்திகையில் : தேற்றான் புல்லுருவியை ஒரு வத்தியின் நடுவில் வைத்து எரித்து மை எடுத்து ஸ்திரீகள் தங்கள் கண்ணிலிட கணவன் வசியமாவதும், நாவல் புல்லுருவியை பாலில் அரைத்துச் சாப்பிட ரோகங்களிலிருந்து விடுபடுவதும் ஏற்படும்.

ரோகிணியில் : புளியம் புல்லுருவியைக் கையில் கட்டிக்கொள்ள வசியமும் தேனிலரைத்துக் கண்ணில் மையிட திமிரம் முதலிய வியாதிகள் நீங்குவதும், அத்தியின் புல்லுருவியை வளையமாகச் செய்து அதன் மேல் வைத்த பானையிலுள்ள சாதம் குறைவற்றிருப்பதும், கையில் கட்டிக்கொள்ள சாதுர்த்திக் (நாலாம் முறை) விஷமஜ்வரம் நீங்குவதும், அரசம் புல்லுருவியை வீட்டில் வைத்துக்கொள்ள நித்தியைசுவரியமும், தேற்றான் புல்லுருவியை அஞ்சனமாகக் கண்ணிலிட புதையல்கள் புலப்படுவதும், கையில் கட்டிக்கொள்ள வசியமும், மாதுளையின் புல்லுருவியை வலது காதில் தரிக்க வசியமும், வில்வத்தின் புல்லுருவியைக் கையில் கட்டிக்கொள்ள வசியமும் ஏற்படும்.

மிருகசீரிஷத்தில்: வாகைப் புல்லுருவியைக் கையில் கட்டிக்கொண்டு ஸ்திரீயையோ புருஷனையோ தொட அவர்கள் வசியமாவதும், புளியம் புல்லுருவியைப் பாலிலரைத்துக் கலக்கிச் சாப்பிட பிறர் கண்களுக்குப் புலப்படாமையும், தயிரில் சாப்பிட எல்லா வியாதிகளும் நீங்குவதும், மோரில் அரைத்து உடலில் பூசிக்கொள்ள நெருப்பு பயமகலுவதும், வீட்டில் வைக்க திருட்டுப்பயம் அகலுவதும் கையில் கட்டிக்கொள்ள சொக்கட்டான் போன்ற பந்தயங்களில் ஜயமும், அத்தியின் புல்லுருவியை கையில் கட்டிக்கொண்டு ஸ்திரீயைத் தொட அவள் வசியமாவதும், அன்னத்தின் நடுவில் வைக்க அன்னவிருத்தியும், ஆலின் புல்லுருவியை வலது கையில் கட்டிக்கொள்ள ஜனவசியமும், ஆடா தொடையின் புல்லுருவியை கையில் கட்டிக்கொள்ள சொக்கட்டான் போன்ற பந்தயங்களில் ஜயமும், தூம்பூணியின் புல்லுருவியைப் பாலில் சாப்பிட லோஹங்களை ஒடிப்பதும் ஏற்படும்.

திருவாதிரையிலும் புஷ்ய ரவியிலும் : தூம்பூணியின் புல்லுருவியைக் கையில் கட்டிக்கொள்ள பாணஸ்தம்பம் ஏற்படும்.

புனர்வஸுவில் : மூங்கில் புல்லுருவியை ஸ்திரீ புருஷர்கள் சாப்பிட புத்திரப் பேறுண்டாம். புங்கின் புல்லுருவியைப் பாலில் சாப்பிட எல்லா வியாதிகளும் விலகும். ராக்ஷஸ கிரகபீடைகளும் விலகும்.

பூசத்தில் : உச்சித்திலகம் (பந்தூகப்) புல்லுருவியைச் சத்துருவின் வயல்களில் வைக்கப் பயிர் நாசமாகும்.

ஆயில்யத்தில் : கொக்கு மந்தாரையின் புல்லுருவியைக் கையில் தரிக்க வசியமும், இலுப்பைப் புல்லுருவியைத் தரிக்கப் புலி முதலிய கொடிய விலங் கினங்களிடமிருந்து பயமின்மையும் ஏற்படும்.

மகத்தில் : முசுகுந்த (கடாரை)ப் புல்லுருவியையும் தேக்குப் புல்லுருவியையும் தான்யக் குவியலில் வைக்க தான்யவிருத்தியும், மஞ்சைப் புல்லுருவியை தலையில் தரிக்கத் தனவிருத்தியும் ஏற்படும். மணிப்புங்கின் புல்லுருவியைத் தரிக்க பிசாசு முதலியவைகளையும் பார்க்கலாம். அதிமதுரப் புல்லுருவியை வயலில் புதைத்து வைக்க பக்ஷி முதலியவைகளின் வாய் திறக்க முடியாமற் போகும்.

பூரத்திலும் உத்திரத்திலும் : தான்றிப் புல்லுருவியைத் தானியக்குவியலில் வைக்க தான்யவிருத்தி ஏற்படும்.

ஹஸ்தத்தில் : புரசம் புல்லுருவியைக் கையிலும் தலையிலும் தரிக்க புலி முதலிய விலங்கு பயமகலும். லிங்கத்தில் பூசிக் கொள்ள வீர்யஸ்தம்பம் ஏற்படும்.

சித்திரையில் : பனச்சியன் புல்லுருவியை கையில் கட்டிக்கொள்ள சத்ருநாசமும், வெட்பாலைப் புல்லுருவியைக் கையில் தரிக்க கிடைக்காதது கிட்டுவதும் ஏற்படும்.

ஸ்வாதியில் : எலுமிச்சைப் புல்லுருவியை ஒரு பொருளிடம் வைக்க அப்பொருள் குறைவில்லாமல் வளரும். வெள்வேலம் புல்லுருவியை கையில்கட்டி அதனால் தொட ஸ்திரீ வசமாவாள்.

விசாகத்தில் : நெல்லிப் புல்லுருவியை சத்துருவான காடி செய்பவன் வீட்டில் வைத்தால் அவன் செய்யும் காடி. மக்யம் முதலியவை ருசிகெட்டுப் போகும். கொன்னைப் புல்லுருவி வீட்டில் நெருப்பு பயம் ஏற்படாதவாறு தடுக்கும்.

அனுஷத்தில் : இலந்தைப் புல்லுருவியினால் ஸ்திரீ வசியமும், தும்மட்டிப் புல்லுருவியினால் தானியவிருத்தியும் ஏற்படும்.

கேட்டையில் : மாவின் புல்லுருவியை வேசியின் வீட்டில் வைக்க அவளுக்கு கேடு விளைவிக்கும். எடுத்து விட்டால் கேடு நீங்கும்.

மூலத்தில் : கருங்காலிப் புல்லுருவியைக் கையில் கட்டிக்கொள்ள அழகில்லாதவனும் அழகு பெறுவான். பாலில் கரைத்துச் சாப்பிடக் குஷ்டம் விலகும்.

பூராடத்தில் : அரளியின் புல்லுருவியைத் தலையில் வைத்துக்கொள்ள யுத்தத்தில் ஜயமும், இலந்தைப் புல்லுருவியை பாலில் கரைத்து மலட்டு ஸ்திரீ சாப்பிட புத்திரப் பேறும், மருதோன்றியின் புல்லுருவியை வலது கையில் கட்டிக்கொள்ள பிறர் கண்ணிற்குப் புலப்படாமையும் உண்டாகும்.

உத்திராடத்தில் : மந்தாரைப் புல்லுருவியையோ புரசம் புல்லுருவியையோ கையில் கட்டிக்கொள்ள வசியம் ஏற்படும்.

திருவோணத்தில் : சித்திரகப் புல்லுருவியை எடுத்து வாலுளுவைத் தைலத்தில் அரைத்து தாம்ரபாத்திரத்தில் தடவி புடம் போட தங்கமாகும். சிற்றாமணக்கின் புல்லுருவியை வலது கையில் தரிக்க சூதாட்டங்களில் ஜயமாகும்.

அவிட்டத்தில் : இலந்தைப் புல்லுருவியைக் கையில் தரித்து யாரைத் தொடுகிறானோ அவன் தாஸனாவான்.

சதயத்தில் : புன்னையில் புல்லுருவியை பாலில் கரைத்துச் சாப்பிட யானை பலம் பெறலாம்.

பூரட்டாதியில் : கடுக்காய்ப் புல்லுருவியை எடுத்துப் பாலில் அரைத்துச் சாப்பிட புத்தி ஞாயக சக்தி அதிகமாகும்.

உத்திரட்டாதியில் : எருக்குப் புல்லுருவியை எடுத்துத் தடவ விஷய நீங்கும்.

ரேவதியில் : அரசின் - புல்லுருவியால் அலங்காரம் செய்து கொள்ள மலடியும் பிள்ளைப்பேறு அடைவாள். ஆலம் புல்லுருவியை புற்றுத் தேன் விட்டரைத்து கண் ரோகங்களுக்குப் போடலாம். கையில் கட்டிக்கொள்ள யானை பலம் ஏற்படும். நாவல் புல்லுருவி சூதாட்டங்களில் ஜயத்தையும், மருதாணிப் புல்லுருவி பாணஸ்தம்பத்தையும், இலுப்பைப் புல்லுருவி தான்யவிருத்தியையும், புரசம் புல்லுருவி பாலுடன் சாப்பிட வாக்கு வன்மையையும், வேம்பின் புல்லுருவி வீட்டில் வைக்க வேசிகளின் வசியத்தையும் கொடுக்கும்.

இருபத்துமூன்றாவது உல்லாஸம்

1. ரஸஸம்ஸ்காரங்கள்

ரஸசுத்தி முறைகள் : முன் கூறிய ஸ்வேதனம் முதலிய ஒன்பது ரஸஸம்ஸ்காரங்கள் செய்யமுடியாவிடத்தில் ரஸத்தை ஔஷதங்களில் சேர்க்கத்தகுதி யுள்ளதாகச் செய்ய கீழ்கண்ட ஏழுவிதமான சுத்தி முறை கூறப்பட்டுள்ளன. இவைகளில் ஏதாவது ஒன்றிரண்டு முறைகளை மட்டும் செய்தால் ரஸத்திற்கு யோகங்களில் சேர்க்கப்படத் தகுதி ஏற்படுகின்றது.

1. ரஸத்தில் வீசம் பங்கு சுண்ணாம்பு செங்கல் மஞ்சள்தூள் இவைகளைச் சேர்த்து தப்பதகல்வத்திலிட்டு எலுமிச்சம்பழ ரஸம் விட்டு ஒரு தினம் அரைத்து சூடான காடியினால் அலம்ப நாக (காரீயம் சேர்ந்த) தோஷம் விலகுகின்றது. இம்மாதிரி அழிஞ்சிலும் பேய்த்தும்மட்டியும் சேர்த்து அரைக்க வங்க (ஈயம் சேர்ந்த) தோஷம் விலகுகின்றது. சரக்கொன்னையால் மலங்களும், சித்ரகத்தால் நாகதோஷமும் கருஊமத்தையால் சஞ்சலத்தன்மையும் திரிபலையினால் விஷமும், திரிகடுவினால் திரிதோஷமும், நெரிஞ்சிலினால் அஸஹ்யாக்னி எனும் தோஷமும் விலகும். அந்த அந்த தோஷங்கள் விலகக் கூறப்பட்டுள்ள மூலிகைகளை வீசம் பங்கு சேர்த்துக் கற்றாழைச்சாறு விட்டு ஒருதினம் அரைத்து சூடான காடியினால் அலம்ப தோஷங்கள் விலகுகின்றன.

2. தேவாதாரு சந்தனம் முன்னை காக்கைத்துண்டி கற்றாழை, நிலப்பனை, காட்டுப் பழுபாகல் இவைகளின் சாற்றால் ரஸத்தை அரைத்து பாதனயந்திரத்திலிட்டு ரஸமெடுக்க ரஸம் தோஷங்களிலிருந்து விடுபடுகின்றது.

3. கற்சுண்ணாம்புடனும் மஞ்சளுடனும் ரஸத்தைக் குமரிச்சாற்றால் ஒரு நாள் அரைத்து பாதனயந்திரத்திலிட்டு எடுக்க தோஷங்கள் நீங்குகின்றன.

4. லிங்கத்தை மலைவேம்பின் சாற்றால் அல்லது எலுமிச்சம்பழச் சாற்றால் அரைத்து பாதனயந்திரத்திலிட்டு ரஸம் எடுக்க தோஷங்கள் நீங்கிய ரஸம் கிடைக்கும்.

5. தான்யாப்பிரகத்தையும் ரஸத்தையும் ஸமனெடை சேர்த்து மூக்கரட்டைச் சாற்றால் தப்த கல்வத்திலரைத்து வஜ்ர மூஷையிலிட்டு பூதரயந்திரத்தில் புடம் போடவும். இவ்விதம் மூக்கரட்டைச் சாற்றாலரைத்துப் பத்து புடமிட ரஸம் மிகச் சிறப்படைகின்றது.

6. ரஸத்திற்குப் பத்தில் ஒரு பங்கு கந்தகம் சேர்த்து தப்பதகல்வத்திலிட்டு திரிபலை எலுமிச்சம்பழம் கற்றாழை சித்திரகம் இவைகளின் திரவத்தால் ஒரு யாமம் அரைத்து பாதனயந்திரத்திலிட்டு எடுக்கவும். இவ்விதம் கந்தகம் சேர்த்து 7 தடவை பாதனம் செய்ய ரஸம் சுத்தி அடைகின்றது.

7. இரும்பு பாத்திரத்தில் லிங்கத்தை வைத்து அதில் நல்லெண்ணெய், எருமை மூத்திரம், மத்யம், அம்லவர்க்கம் பசுமாம்ஸம் இவைகளை கிரமமாக விட்டு 7 நாள்வரை இளந்தீயில் எரித்து இரும்புத்துடுப்பால் கிளறி வரவும். பிறகு எடுத்து மயில் பித்தத்தால் ஒருநாள் அரைத்து வெயிலில் பாவனை செய்து பாதனயந்திரத்தில் எரித்து ரஸம் எடுக்க சுத்தமான ரஸம் கிடைக்கும்.

ஜாரணம் செய்யும் வடவானலபிடம் : சுட்ட சங்கை எருக்கம் பாலிலும், நவச்சாரத்தை எலுமிச்சம் பழச் சாற்றிலும் ஒரு நாள் பாவனை செய்து தனித்தனியே வைக்கவும். பதினாறு பங்கு ஆட்டு மூத்திரத்தில் ஸுவர்சல உப்பை நான்கு யாமம்

எரித்துக் குழம்பானவுடன் எடுத்துக் கொள்ளவும். பதினாறு பங்கு நரமூத்திரத்தில் வேருடன் கூடிய கண்டங்கத்திரியைக் காய்ச்சி கெட்டியானவுடன் எடுத்துக் கொள்ளவும். புளியம் பட்டைக்ஷாரம் அன்னபேதி ஸர்ஜக்ஷாரம் சிலாஜது (சிலாசத்து) இந்நான்கையும் எலுமிச்சம்பழச் சாற்றிலும், தேரல் நீக்கிய நேர்வாளம், முள்ளங்கி க்ஷாரம், இந்துப்பு, குந்துமணி இவைகளை முருங்கைப் பட்டைச் சாற்றிலும் தனித்தனியே பாவனை செய்யவும். இப் பதிமூன்றையும் வகைக்கு ஸமனெடை சேர்த்து எலுமிச்சம்பழச் சாற்றில் அரைத்து வைத்துக்கொள்ள எல்லா லோஹங்களின் ஜாரணங்களிலும் சிறப்பாக உதவும்.

2. ரஸபஸ்ம முறைகள்:

1. சுத்த ரஸத்தையும் கந்தகத்தையும் ஸமனெடை சேர்த்துப் பசுநெய்யால் அரைத்து உருண்டையாக்கி கற்றாழை மடலுள் வைத்து நூல் சுற்றிக் கட்டி அயஸ்காந்த ஸம்புடத்திற்குள் வைத்து மூன்று லகுபுடம் போட்டு எடுத்து திடமான மூஷையில் வைத்து ஊத பஸ்மமாகும். யோகங்களில் சேர்க்கவும். ரஸாயனமாக உபயோகிக்கவும் சிறந்தது.

2. நிழலில் காய்ந்த பழுத்த தேக்கின் பழங்களை எருக்கம் பாலாலரைத்து மூஷையினுள் அடவி முதலீற்றுப் பசுவின் பனிக்குடத்திலுள்ள ரஷஸ்ஸை வைத்து மேல் ரஸகந்தகங்களை வைத்து மேல் மறுபடியும் ரஜஸ்ஸை வைத்து மூடி ஊத பஸ்மமாகும்.

3. காட்டுப்பழுபாகல், காக்கைத்துண்டி, பேய்ச்சுரை, கஞ்சுகீ, பவழக்கொடி, மணத்தக்காளி, காலமஞ்சரீ, காகஜங்கை என்ற இவ்வெட்டு மூலிகைகளின் சாற்றால் ரஸதிதைஅரைத்து மேற்கூறிய மூலிகைச்சாறு பூசிய

மூஷையிலிட்டு பூதரயந்திரத்தில் எட்டு புடம் போட்டெடுக்க பஸ்மமாகும்.

4. நியாமகவர்க்கத்திலுள்ள மூலிகைகளால் ரஸத்தை நன்கு அரைத்து இரண்டு பங்கு கந்தகமும் அழிஞ்சில் முதலியவைகளின் குழித் தைலமும் சேர்த்து இளந்தீயில் எரித்து கட்டியானவுடன் இரும்பு ஸம்புடத்திலிட்டு மூடி கடுக்காய் ஜலத்தில் இரும்புத்தூளை அரைத்து ஸம்புடத்தின் முகத்தைப் பூசி அச் சம்புடத்தின் மேல் சராவம் ஒன்றில் காரீயத்தை வைத்து அக்காரீயம் உருகும் வரை ஸம்புடத்தைத் தணலிலிட்டு ஊதவும். காரீயம் உருகியதும் துருத்தி ஊதுவதை நிறுத்தி அது கெட்டியானவுடன் மறுபடியும் ஊதவும். இவ்விதம் மூன்று யாமம் வரை ஊத பஸ்மமாகும். மருந்துகளில் சேர்ப்பதற்குச் சிறந்தது.

5. சுத்த ரஸத்துடன் இரண்டு பங்கு கந்தகமும் தைலமும் சேர்த்து ஈசுவரமூலி கருசலாங்கண்ணி விஷ்ணுக்கிராந்தி இவைகளின் சாற்றில் வகைக்கு ஒரு நாள் அரைத்து திரிஸங்கட்ட யந்திரத்தில் 8 தடவை எரிக்கப் பஸ்மமாகும்.

6. வெண்ணிற அழிஞ்சில் மரத்தின் வேரின் சாற்றால் ரஸத்தை மூன்று நாள் அரைத்து மூஷையிலிட்டு பூதரயந்திரத்தில் புடம் போட பஸ்மமாகும்.

7. விஷ்ணுக்கிராந்தியையும் பேய்ப்பீர்க்கையும் காடி சேர்த்து அரைத்து ஏழு தடவை மூர்ச்சனையும் உத்தாபனமும் செய்து கராவத்தில் அந்த ரஸத்தை விட்டு மேற்கூறிய சாறுகளை விட்டு தீபாக்கினியில் ஒரு நாள் எரிக்க உப்பைப் போன்று பஸ்மமாகும்.

8. பெருங்காயத்தை பேயத்தியின் பாலில் ஊரவைத்துக் காயவைக்கவும். இவ்விதம் ஏழு பாவனைகள் செய்தவுடன் பேயத்தின் வேர் காய் இலை பட்டைகளை கஷாயம் செய்து

அதில் அப்பெருங்காயத்தை அரைத்து உருண்டை செய்து அதன் நடுவில் ரஸத்தை வைத்து மூஷையிலிட்டு மூடி 8 தடவை பூதரபுடம் போடவும். ஒவ்வொரு தடவை புடமிடும் பொழுதும் பெருங்காயம் சேர்க்கவும். இதனால் ரஸம் பஸ்மமாகிறது.

9. சிற்றாமணக்கு விதைகளையும் நாயுருவி விதைகளையும் தூள் செய்து மூஷையிலிட்டு அதில் ரஸத்தை வைத்து மேல் அத்தூளை மறுபடியும் போட்டு மூடி நான்கு லகுபுடமிட பஸ்மமாகும்.

10. நெய்ப் பாகலின் நடுவில் ஸ்தன்யம் சேர்த்து ரஸத்தை வைத்து மூடி விராட்டி நெருப்பிலிட்டு வேகவைக்கவும். இவ்விதம் ஏழு தடவை செய்ய பஸ்மமாகும்.

11. ரஸத்தையும் கந்தகத்தையும் அழிஞ்சில் வேர் சாற்றால் ஒரு நாள் அரைத்து மூஷையிலிட்டு மூடி பூதரயந்திரத்தில் புடம் போட பஸ்மமாகும்.

12. ரஸத்தையும் தான்யாப்பிரகத்தையும் ஸமனெடை எடுத்து மாரணம் செய்யும் மூலிகைகளின் சாற்றால் ஒருநாள் அரைத்து அம்மூலிகைகளை அரைத்துத் துணியில் தடவி அதில் ரஸகந்தகங்களை வைத்து வர்த்தி செய்து விளக்கில் கொளுத்தி வரும் மையை வர்த்தி செய்து விளக்கில் கொளுத்தி வரும் மையை மறுபடியும் மாரண ஒஷதிகளின் சாற்றிலரைத்துப் பாதனாயந்திரத்தில் எரிக்க பஸ்மமாகும்.

13. கரு ஊமத்தைச் சாற்றினால் ரஸத்தை அரைத்து நியாமனத்தில் உபயோகப்படும் ஒஷதிகளால் ஒரு நாள் அரைத்து கச்சயந்திரத்தில் புடம்போட பஸ்மமாகும்.

14. ரஸத்துடன் அதில் அரைப்பங்கு கந்தகம் சேர்த்து மாரண ஒஷதிகளால் ஒரு நாள் அரைத்து மூஷையிலிட்டு பூதரயந்திரத்திலிட்டுப் புடம்போட பஸ்மமாகும்.

15. ரஸத்தையும் அப்பிரகத்தையும் ஆலம் பாலினால் மூன்று யாமமரைத்து மூஷையிலிட்டு மூடி வராட்டி நெருப்பில் ஒரு நாள் எரிக்க பஸ்மமாகும்.

16. முகம் உண்டாகி அனுவாஸனம் செய்யப்பட்ட ரஸத்தில் ஸமனெடை தங்கம் சேர்த்து ஜாரண முறைப்படி ஜாரணம் செய்யவும். அந்த ரஸத்தில் ஸமனெடை கந்தகம் சேர்த்து திவ்யௌஷதிகளின் சாற்றாலரைத்து மூஷையிலிட்டு ஒரு நாள் முழுவதும் உமி நெருப்பில் எரித்து எடுத்து மறுபடியும் திவ்யௌஷதிகளின் சாற்றில் ஸ்வேதனம் செய்யவும். பிறகு ஸமனெடை பீஜம் சேர்த்து நான்கு யாமம் வஜ்ர மூஷையிலிட்டு ஊத ரஸம் பஸ்மமாகின்றது.

17. ரஸத்தில் அப்பிரகத்தை ஜாரணம் செய்து ஸமனெடை தங்கம் சேர்த்து அம்லவர்க்கத்தாலரைத்துப் பிஷ்டியானவுடன் காடியினால் அலம்பி அப்பிஷ்டியில் பாதி எடையுள்ள கந்தகமும் கால் பங்கு வெங்காரமும் எல்லாவற்றிற்கும் ஸமனெடை மஞ்சள் தூளும் சேர்த்து ஸ்திரீயின் ரஜஸ் ரக்தத்தால் ஒரு நாள் அரைத்து உருண்டையாக்கி கட்டுகயந்திரத்தில் ஒரு நாள் இளந்தீயில் எரிக்கவும். அதை எடுத்து ஸமனெடை கந்தகம் சேர்த்து கர்ப்பயந்திரத்தில் மூன்று நாள் உமி நெருப்பில் எரிக்க பஸ்மமாகும். சிறந்த ரஸாயனமாகும்.

18. சுத்த ரஸம் மூன்று பங்கும் தாம்ரசூர்ணம் ஒரு பங்கும் சேர்த்துக் கல்வத்திலிட்டு அம்லவர்க்க ரஸத்தில் ஒரு நாள் நன்கு அரைக்கப் பிஷ்டியாகும். அதை ஜலம் விட்டலம்பி, அதற்குச் சமம் ஸ்வர்ணமாக்ஷிகஸத்வம் சேர்த்துக் கிரந்தித்தகர இலைச் சாற்றால் மூன்று நாள் அரைத்துக் கர்ப்பயந்திரத்திலிட்டு உமிநெருப்பில் அல்லது வராட்டி நெருப்பில் மூன்று நாள் எரித்தெடுக்கப் பஸ்மமாகும்.

19. ரஸம் தங்கம் அப்பிரகஸத்வம் பிடம் இவைகளை வாழைத் தண்டுச் சாற்றாலரைத்து கல்வத்திலிட்டு ஒரு தினம் அரைத்து திவ்யௌஷதிகளின் விதை சேர்த்து இரண்டு நாள் வாழைக்கிழங்குச் சாற்றாலரைத்து கர்பயந்திரத்தில் இரண்டுநாள் எரிக்க ரஸம் பஸ்மமாகின்றது.

20. ரஸத்திற்குச் சமம் நிமிளைஸத்வம் சேர்த்து மூன்று நாள் நொச்சியிலைச் சாற்றால் அரைத்துப் பிஷ்டியாக்கி ஏழு மண் சீலை செய்யப்பட்ட காசகுப்பியிலியிட்டு வாலுகாயந்திரத்தில் ஒரு நாள் இளந்தீயில் எரிக்க ரஸம் பஸ்மமாகும்.

21. ரஸம் இரண்டு தோலா, கந்தகம் ஒரு தோலா, ஸ்வர்ணமாக்ஷிகஸத்வம் ஒரு தோலா சேர்த்து நொச்சியிலை சாற்றாலரைத்து மூகைக்ஷயிலிட்டு மூடி கட்டுக யந்திரத்தில் இளந்தீயில் ஒரு நாள் எரிக்க சிவந்த பஸ்மமாகும்.

22. பக்வமூஷையில் கந்தகத்திற்கு நடுவே ரஸத்தை வைத்து நான்கு பங்கு மணத்தக்காளிச் சாறு விட்டு நிரப்பி மூடி, கட்டுகயந்திரத்திலிட்டு மிருது மத்யம் தீக்ஷண அக்னிகளில் நான்கு நான்கு யாமம் எரித்து எடுக்க பஸ்மமாகும்.

23. ரஸத்தைக் கள்ளிச்சாற்றாலாவது அம்லவல்லியின் சாற்றாலாவது ஒரு நாள் அரைத்து ஸமனெடை கந்தகம் சேர்த்து கர்பயந்திரத்திலிட்டு எரிக்க ரஸம் பஸ்மமாகும்.

24. ரஸத்திற்குச் சமம் குந்துமணி தேன் வெங்காரம் இவை சேர்த்துக் கருசலாங்கண்ணிச் சாற்றில் ஒரு தினம் அரைத்து வஜ்ரமூகைக்ஷயிலிட்டு மூடி இளந்தீயில் எரிக்கப் பஸ்மமாகும்.

25. கந்தகத்தையும் ரஸத்தையும் அரளி, ஓமவல்லி, ஆடுதீண்டாப்பாளை, வெள்ளை அழிஞ்சில் இவைகளின் சாற்றில் மூன்று நாள் அரைத்து மண் சம்புடத்திலிட்டு உமி அல்லது வராட்டி நெருப்பில் மூன்று நாள் எரிக்க பஸ்மமாகும்.

அல்லது வராட்டி நெருப்பில் மூன்று நாள் எரிக்க பஸ்மமாகும்.

26. தாம்ரத்தையும் அப்பிரகத்தையும் சேர்த்து பாதனயந்திரத்தில் எரித்து சுத்தம் செய்த ரஸத்தையும் வைரபஸ்மத்தையும் ஸமனெடை சேர்த்துச் சிறுபுள்ளடிச் சாற்றில் அரைக்கவும். திவ்யௌஷதிகளின் விதைகளை அரைத்து வஜ்ரமூஷையினுள் தடவி அதில் ரஸபிஷ்டியை வைத்து மூடி மூன்று தினங்கள் உமி நெருப்பில் எரித்து எடுத்து மறுபடியும் சிறுபுள்ளடிச் சாற்றில் அரைத்து மூன்று நாள் முன் போல் எரிக்கப் பஸ்மமாகும்.

27. அனுவாஸம் செய்த ரஸம் ஒரு தோலா, தங்கம் எட்டு குந்துமணி, வைரபஸ்மம் நான்கு குந்துமணி, இவைகளை தப்தகல்வத்திலிட்டுச் சிறுபுள்ளடிச் சாற்றில் அரைத்து வஜ்ரமூஷையில் வைத்து மூடி பூதயந்திரத்தில் புடமிட்டு மறுபடியும் இவ்வாறே செய்யவும். இவ்விதம் நூறு தடவை செய்த சிவந்த பஸ்மமாகும்.

28. சுத்த ரஸம் நான்கு பங்கு தாம்ரபஸ்மம் ஒரு பங்கு அம்லவர்க்கத்தினால் ஒரு நாள் அரைத்துப் பிஷ்டி செய்து பிஷ்டிக்கு ஸமம் ஸ்வர்ணமாக்ஷிகஸத்வம் சேர்த்து கிரந்தித்தகர இலைச் சாற்றில் மூன்று நாள் அரைத்து அவ்வுருண்டையை கர்ப்பயந்திரத்தில் மூன்று நாள் உமிக்காந்தலில் அல்லது வராட்டி நெருப்பில் எரிக்க பஸ்மமாகும்.

29. முக்கரணம் செய்த ரஸம், அப்பிரகஸத்வம் தங்கம் இவை ஸமனெடை சேர்த்து வாழைக்கிழங்குச் சாற்றில் அரைத்து எல்லாவற்றிற்கும் சமம் பிடம் சேர்த்து திவ்யௌஷதி விதைகளால் அரைத்து மூன்று நாள் கர்ப்பயந்திரத்தில் எரிக்க பஸ்மமாகும்.

30. அப்பிரகஜாரணம் செய்த ரஸத்திற்குச் சமம் நிமிளை சேர்த்து நொச்சியிலைச் சாற்றில் மூன்று நாள் அரைத்துக்

காசகுப்பியிலிட்டு வாலுகாயந்திரத்தில் நான்கு யாமம் எரிக்கப் பஸ்மமாகும்.

31. ஸ்வர்ணமாக்ஷிகஸத்வம் கந்தகம், ஜாரணம் செய்த ரஸம் இவைகளை நொச்சியிலைச்சாற்றில் அரைத்து உருண்டை செய்து வஜ்ரமூஷையிலிட்டுத் துருத்தியால் ஊத அல்லது கட்டுகயந்திரத்திலிட்டெரிக்கப் பஸ்மமாகும்.

நன்கமைந்த ரஸபஸ்மத்தின் லக்ஷணம் : எடை குறையாமலும், நெருப்பிற்கு ஓடாமல் கட்டுப்பட்டும், லோஹங்களில் ஒட்டாமலும், நன்கு பஸ்மமாகியும், அத்துடன் சேர்க்கப்பட்ட லோஹங்கள் பஸ்மமாகியு மிருந்தால் ரஸ பஸ்மம் நன்கமைந்ததாகக் கூறலாம்.

கந்தபிஷ்டீ முறைகள்

1. சுத்த கந்தகத்தை ஊமத்தையிலைச்சாற்றால் அரைத்து ஏழு பாவனை செய்து ஸ்திரீயின் ரஜஸ்ஸினாலும் மனிதனின் பித்தத்தாலும் அரைத்துக் கலக்கவும். ஒரு பலம் ரஸத்தை மண்மடக்கிலிட்டு அதன் மேல் அக்கந்தகத்தைப் போட்டு கைவிரல்களால் தேய்த்து வெயிலில் வைக்கப் பிஷ்டியாகும்.

2. சுத்த கந்தகத்தை திலபர்ணிச் சாற்றால் அரைத்து நிழலில் ஏழு பாவனை செய்யவும். மூஷையில் ஒரு பலம் ரஸத்தையும் ஒரு நிஷ்கம் தங்கத்தையும் போட்டு மேல் ஸ்திரீயின் ரஜஸ்ஸையும் மூத்திரத்தையும் மலத்தையும் போட்டு வாலுகாயந்திரத்தில் இளந்தீயில் எரித்துக் கொண்டே சிறிது சிறிதளவில் அக் கந்தகத்தையும் போட்டுக் கொண்டேவர வேண்டும். ஒரு தோலா அளவு கந்தகம் ஜீர்ணமானதும் எடுத்துக் கொள்ள ஸ்வர்ண பிஷ்டியாகும்.

3. சுத்த கந்தகத்தை நூறு தடவை பூனைக்காலிச் சாற்றால் நிழலில் பாவனை செய்யவும். சுத்த ரஸத்தை மண் சராவத்திலிட்டு வெயிலில் வைத்துச் சிறிதளவில்

கந்தகத்தையும் பூனைக்காலிச் சாறையும் விட்டுவரவும். ரஸத்தில் கால் பங்கு கந்தகம் ஜீர்ணமானால் உயர்ந்த பிஷ்டியாகும்.

4. சுத்த கந்தகத்தை மூன்று தடவை காடியிலும், மூன்று தடவை எலுமிச்சம்பழச் சாற்றிலும், ஏழு தடவை சிறுபுள்ளடிச் சாற்றிலும் பாவனை செய்யவும். கற்பூரத்தை வெள்ளைப்பூவுள்ள விஷ்ணுக்கிராந்திச் சாற்றில் மூன்று பாவனை செய்து கொள்ளவும். இரண்டு குந்துமணி எடை கர்பூரத்தை யந்திரத்தினுள் தடவி அதன் மேல் ஒன்றரை நிஷ்க அளவு பாவனை செய்த கந்தகத்தையும் அதன் மேல் ஒரு பலம் ரஸத்தையும் வைத்து மேலும் முன்னளவில் கற்பூரத்தையும் கந்தகத்தையும் போட்டு கோமூத்திரத்தில் அரைத்து வெள்ளை விஷ்ணுக்கிராந்திவேர் கல்கம் தடவி சராவத்தால் மூடி ஜாலிகாயந்திரத்தில் எரித்து எடுக்கவும். இவ்விதம் மூன்று தடவை செய்யப் பிஷ்டியாகும்.

5. நெய் தடவிய கல்வத்தில் ஒரு பலம் ரஸத்தையும் கால் பலம் கந்தகத்தையும் தேவதாளிப் பீர்க்குச் சாற்றில் கைவிரலால் அரைத்து வெயிலிலிட பிஷ்டியாகும்.

6. தப்த தாம்ர கல்வத்தில் முன் யோக அளவில் ரஸ கந்தகங்களைச் சேர்த்து கைவிரலால் பிசையப் பிஷடியாகும்.

பிஷ்டிஸ்தம்பனம் : கசப்புப் பீர்க்கு விதையையும் சாண்டாளிக்கிழங்கையும் முலைப்பாலில் அரைத்துப் பிஷ்டி மேல் ஒரு அங்குலகனம் தடவி காட்டுப்பழுபாகல் கிழங்கிலாவது பால்முதுக்கன் கிழங்கிலாவது நெய் பாகல் கிழங்கிலாவது வைத்து அக்கிழங்குகளை அரைத்துப் பூசி மேல்மண் பூசி பூதரயந்திரத்தில் ஒருநாள் எரித்து மேல் கீழ் புரட்டி கிழங்கு எரிந்து விடாதவாறு வேகவைத்து எடுக்க பிஷ்டி ஸ்தம்பனமடையும்.

பிஷ்டிஜாரணம் : இருப்புஸ்தனயந்திரத்தில் கந்தக பிஷ்டியின் மேலும் கீழும் கந்தகத்தூளை ஸமனெடை பரப்பி பூதரயந்திரத்தில் நூறு பங்கு கந்தகம் ஜாரணமாகும்வரை புடம் போட்டு எடுக்க கந்தகஜாரணமாகின்றது.

பிஷ்டிபஸ்மம் : தப்த கல்வத்தில் பிஷ்டியை திவ்யௌஷதிகளின் சாற்றாலரைத்து உருண்டை செய்யவும். திவ்யௌஷதி விதை கல்கத்தை மூஷையினுள் பூசி அவ்வுருண்டையை வைத்து மூடி பூதரயந்தித்தில் மேலும் கீழுமாக உருண்டையை மாற்றிக் கொண்டே ஒரு நாள் பாகம் செய்யவும். இவ்வாறு பத்து தடவை செய்ய கந்தக பிஷ்டி பஸ்மமாகும். இந்த ரஸபஸ்மம் முக்கியமாக ரஸவாதத்தில் சிறந்தது.

ரஸக்கட்டு முறைகள்

1. வைக்ராந்தக்கட்டு : சுத்த ரஸத்தை கல்வத்திலிட்டு பத்தில் ஒரு பங்கு கந்தகத்தை சிறிதளவில் சேர்த்து அரைத்து அப் பிஷ்டியை பால் முதுக்கன் கிழங்கிலோ, காட்டுப்பழுபாகல் அல்லது நெய் பாகல் கிழங்கிலோ வைத்து மேலும் கீழும் வைக்கிராந்தி பஸ்மத்தைப் பரப்பி மேல் அக் கிழங்கு கல்கத்தால் மூடி மண்பூசிக் காயவைத்து பூதரயந்திரத்தில் குக்குடபுடமாக கிழங்கு எரிபடாமல் மேலும் கீழும் புரட்டிக் கொண்டே எட்டு புடம் போடவும். பழுத்த மாதுளை போல் சிவந்து கட்டும்.

2. கந்தகக்கட்டுகள் : கந்தகபிஷ்டியை துணியில் கட்டி இருப்புச்சம்புடத்திலிட்டு மேலும் கீழும் கந்தகத் தூள் பரப்பி ஸம்புடத்தை மூடி பூதரயந்திரத்தில் ஆறு பங்கு கந்தகம் ஜீர்ணமாகும் வரை புடம் போட ரஸம் கட்டுகின்றது.

3. பதினாறு அங்குல நீளமும் எலுமிச்சம்பழ அகலமுள்ள பக்வமூஷையை வாலுகாயந்திரத்தில் வைத்து

முக்கால் பாகம்வரை மணலால் மூடி அதில் ரஸகந்தக பிஷ்டியைவைத்து மூடி இளந்தீயில் புகை அடங்கும் வரை எரிந்த பின் மணத்தக்காளிச் சாறும் வெற்றிலைச் சாறும் முறையே விட்டு நிரப்பி அவை ஜீர்ணமானவுடன் ரஸம் கட்டுகின்றது.

4. ரஸம் ஏழரை நிஷ்கமும் தங்கம் ஒன்றரை நிஷ்கமும் சேர்த்து அம்லவர்கத்திலரைத்துப் பிஷ்டி செய்து அதனால் ஸமனெடை கந்தக பிஷ்டிக்குக் கவசம் செய்து இருப்பு ஸ்தனயந்திரத்தில் துணியில் சுற்றி வைத்து மேலும் கீழும் எல்லாவற்றிற்கும் சமம் கந்தகத் தூள் பரப்பி ஸந்தி பந்தம் செய்து பூதரயந்திரத்திலிட்டு ஜாரணம் செய்யவும். பிறகு ஆறு பங்கு கந்தகம் ஜாரணமானவுடன் கடைசியில் கந்தகம் சிறிதளவு மீதியிருக்கும் பொழுதே ஸம அளவு வீதமாக நூறு பங்கு வரை கந்தகத்தை ஜாரணம் செய்யவேண்டும். பிறகு அக் கந்தக பிஷ்டியை சமனெடையுள்ள தங்கசம்புடத்திலிட்டு படிக்காரத்தை கற்றாழைச் சாற்றிலரைத்து ஸந்திபந்தம் செய்து மேல் வெங்காரத்தையும் உப்பையும் தனித்தனியாக ஒரு அங்குல கனம் பூசி காயவைத்து கோஷ்டீயந்திரத்திலிட்டு ஒரு யாமம் கடுந்தீயில் ஊதக் கட்டும்.

5. கந்தக பிஷ்டியை இருப்புச்சம்புடத்திலிட்டு மேலும் கீழும் கந்தகம் பரப்பி பூதரயந்திரத்தில் எரித்தெடுக்கவும். ஆறு பங்கு கந்தகம் ஜீர்ணமானவுடன் ரஸம் கட்டும்.

6. **மூலிகை கட்டுகள்:** பழுபாகல் வேர் சாற்றால் ரஸத்தை ஒரு நாள் அரைத்து பூனைக்கால் வேர் கல்கத்தால் கவசம் செய்து வஜ்ர மூஷையில் வைத்து மூடி கடுந்தீயில் எரிக்கக் கட்டும்.

7. எருக்கம் பாலில் அரைத்த எருக்கம் வேர் கல்கத்தை மூஷையினுள் பூசி அதில் ரஞ்சனம் செய்யப்பட்ட ரஸத்தை வைத்து மூடி மண் சம்புடத்தினுள் வைத்து அதை இருப்புச் சம்புடத்தில் வைத்துக் கஜபுடம் போடக் கட்டும்.

8. நீர்க் குமிழஞ்சாற்றால் ரஸத்தை மூன்று நாள் அரைத்து நீர்க் குமிழ இலையால் மூஷை செய்து அதனுள் வைத்து, அம் மூஷையை வஜ்ர மூஷையினுள் வைத்து முப்பது தடவை ஒவ்வொரு வராட்டியாக முப்பது வராட்டிவரை அளவை அதிகரித்து புடங்கள் போட்டுப் பிறகு கடைசியில் கஜபுடம் போடக் கட்டும்.

9. ஏகவீர இலைச்சாற்றால் ரஸத்தை அரைத்து ஏக வீரக்கிழங்கு கல்கத்தால் கவசம் செய்து வஜ்ர மூஷையில் வைத்து ஏகவீரச்சாறு விட்டு கடுந்தீயில் துருத்தியால் ஊதக் கட்டும்.

10. சிவந்த முதுக்கன் கிழங்கின் சாற்றாலும் ஸ்தன் யத்தாலும் வஜ்ரகந்தி திரவத்தாலும் தனித்தனியே ரஸத்தை மூன்று நாள் அரைத்து முதுக்கன் கிழங்கு அரைத்துப் பூசிய வஜ்ர மூஷையில் இட்டு முன் கூறிய சாறுகள் விட்டுக் கொண்டே துருத்தியால் ஊதக் கட்டிவிடும்.

11. எருக்கம் வேரையும் பழத்தையும் அரைத்து மூஷையினுள் பூசி அதில் நாயுருவி வேரை அரைத்துச் செய்த மூஷையை வைத்து அதன் நடுவில் ரஸத்தை வைத்து அதில் நாயுருவிச் சாற்றை விட்டு மூஷையை மூடி மண்சீலை செய்து ஸம்புடத்தினுள் வைத்து உப்பாலும் மண்ணாலும் ஸந்திபந்தம் செய்து புடம் போடக் கட்டும்.

12. விளாவேர் சாற்றால் ரஸத்தை ஒரு யாமம் அரைத்து மூஷையிலிட்டு அதை மற்றொரு மூஷையினுள் வைத்து மூடி அடுப்பிலிட்டு ஊதக் கட்டும்.

இந்தக் கட்டுகள் எல்லாவித யோகங்களிலும் சேர்க்கத்தக்கவை.

ரஸ மூர்ச்சனை முறைகள்

1. சிறுகீரை வசம்பு பெருங்காயம் உள்ளிப்பூண்டு இவைகளால் ரஸத்தை அரைத்து பெருங்காயத்தை கவசம் செய்து லவணயந்திரத்தில் ஒருநாள் கடுந்தீயில் எரித்து மேல் பதங்கித்திருக்கும் ரஸத்தை எடுத்து துணியால் சுத்தி மேலும் கீழும் ஸமனெடை கந்தகத்தைப் பரப்பி ஸோமாநலயந்திரத்தில் எரித்து கந்தகம் ஜீர்ணமானவுடன் ஆறு பங்கு வரை ஸமனெடையாக கந்தகம் சேர்த்து ஜாரணம் செய்ய மூர்ச்சனையாகும்.

2. கந்தகம் நவச்சாரம் சுத்தரஸம் இவைகளை ஸமனெடை கல்வத்தில் அரைத்து காசகுப்பியிலிட்டு வாலுகாயந்திரத்தில் பன்னிரண்டு யாமங்கள் எரித்து மேலுள்ள கந்தகத்தை அகற்றி அடியில் தங்கியிருக்கும் ரஸத்தை எடுத்துக்கொள்ளவும்.

3. ரஸமும் கந்தகமும் ஸமனெடை ரஸத்தில் அரைப்பங்கு இந்துப்பும் சேர்த்து முன்னையின் சாற்றில் மூன்று நாள் அரைத்து மூஷையிலிட்டுச் சீலை செய்து காய்ந்ததும் அடுப்பில் வைத்து ஊதவும். நன்கு சூடேறியவுடன் அதை ஜலத்தில் போட்டு எடுத்து முக்கந்தங்களின் சாற்றாலரைத்து பூதரயந்திரத்தில் வைத்துப் புடம் போடவும்.

4. ரஸத்தில் பாதி கந்தகம் சேர்த்து நெய்யால் அரைத்து உருண்டையாக்கித் துணியில் சுற்றி தோலா யந்திரத்தில் கோமூத்திரத்தில் ஒரு யாமம் நரமூத்திரத்தில் மூன்று தினமும் வேகவைத்துக் காய வைத்துத் துணி சுற்றி மேல் மண் பூசிக் காய்ந்ததுமு மூஷையிலிட்டு உமிக்காந்தலில் கீழ் மேலாக உருண்டையைப் புரட்டிக் கொண்டே வேகவைக்கவும். அந்த ரஸத்தை எடுத்து, உடன் பிறந்த சிசுவின் மலம், புரசம் விதை சாண்டாள ஸ்திரீயின் ரத்தம் (ரஜஸ்) இவைகளை

ஞுமனெடையும் கால் பங்கு வெங்காரமும் சேர்த்து முன்னையிலைச் சாற்றில் அரைத்து உருண்டையாக்கி நெய்ச்சட்டிப் பூண்டை அரைத்துக் கவசம் செய்து தாம்ரஸம்புடத்திலிட்டு வாலுகாயந்திரத்தில் இரண்டு யாமம் வேகவைக்கவும். அவ்வுருண்டையின் மேல் கந்தகத்தை சித்ரகத்தாலும் நெய்ச் சட்டிப்பூண்டாலும் அரைத்துப் பூசி ஸம்புடத்திலிட்டு மூடி மேல் துணி சுற்றி மண்பூசி மற்றொரு மூஷையில் வைத்து நெருப்பிலிட்டு ஊத மூர்ச்சையடையும்.

5. கந்தகத்தையும் ரஸத்தையும் ஊமத்தைச் சாற்றினால் அரைத்து அந்தமூஷையிலிட்டு பூதரயந்திரத்தில் வேகவைக்க மூர்ச்சையடையும்.

6. ஆறு அங்குல நீளமுள்ள மூஷையில் கடலை இலையை அரைத்துப் பூசி அதில் ரஸத்தை வைத்து மேல் கடலை இலைச் சாற்றால் நிரப்பி மூஷையை மூடிக் கவசமிட்டு வாலுகாயந்திரத்தில் தீபாக்கினியில் ஏழு நாட்கள் எரித்தெடுக்க ரஸம் மூர்ச்சனையடையும்.

7. மஞ்சள் பூவுள்ள குறிஞ்சியின் சாற்றால் ரஸத்தை அரைத்து வெய்யிலிலிட்டு கழக்கோடி இலைச் சாறு விட்டு கால் கட்டைவிரல்களால் ஒரு நாள் பிசைய மூர்ச்சையடையும்.

8. அன்னபேதி இந்துப்பு ரஸம் இம்மூன்றும் வகைக்கு நூறு நிஷ்கம் கல்வத்திலிட்டு அரைக்கவும். அன்னபேதிக்குப் பதில் பொரித்த படிக்காரமும் சேர்க்கலாம். ஸ்தாலீஸம்புடயந்திரத்திலிட்டு ஒரு நாள் கடுந்தீயில் எரித்து மேல் ஸ்தாலியில் ஒட்டியிருக்கும் மூர்ச்சை அடைந்த ரஸத்தை எடுத்துக் கொள்ளவும்.

9. ரஸத்திற்கு ஸமம் ஸ்வர்ண பஸ்மமும், இரண்டு பங்கு கந்தகமும் சேர்த்து எருக்கம் பால் விட்டரைத்து மூஷையிலிட்டு பூதரயந்திரத்தில் புடம் போட ஒரு நாளில் மூர்ச்சை அடையும்.

மூர்ச்சை அடைந்ததின் லக்ஷணம் : வெளுத்தோ, சிவந்தோ, கருத்தோ நல்ல கனத்துடன் தனது சுயநிலையிலிருந்தும் மாறுபட்டும் மறுபடியும் ரஸமாக மீளும் சக்தி பெற்றுமிருப்பதுதான் மூர்ச்சனை.

குலௌஷதிகளால் ரஸபந்த முறைகள்: திவ்ய ஔஷதிகளில் குலௌஷதிகள் என மிகவும் ரகஸ்யமாகவும் துர்லபமாயும் உள்ள சில மூலிகைகளால் ரஸத்தைக் கட்டுவது ரஸவாதத்தில் முக்கியமாக லோஹ வேதத்தில் மிகவும் அத்புதமான பலன் அளிக்கவல்லது எனக் கூறப்பட்டுள்ளது.

அக்குலலௌஷதிகளில் நிசாசரலதா, அங்கநாயிகா, நரஸாரம், கங்காலகேசரீ, மந்திரஸிம்ஹானி, இரிந்திரீ, க்ஷ்மாபாலம், ஜாகரீ (கஜாரி) வஜ்ரவல்லீ, வர்துலபத்தரா, ஏகவீரா, ரக்தகஞ்சுகீ, விருச்சிகாலீ, ஹம்ஸமாதி, சுகதுண்டி, திருணஜ்யோதி, உச்சடா, ரக்தஸ்னுஹீ, குமுதினீ, சித்ரகம், ஜ்யோதிஷ்மதீ, தக்தரோஹா, கடுதும்பீ, க்ஷீரகந்தம், சாகநிர்யாஸம், தேவதாளி, வெள்ளைக் குந்துமணி இவைகள் சிறந்தவை. இவைகளில் சில ரஸத்தை பஸ்மம் செய்கின்றன. இதனால் செய்யப்படும் பஸ்மம் கோடம் முதலியவை நெருப்பிற்கு ஓடாமலும் எடை குறையாமலும் இருக்கும். வேதம் செய்யப்பட்ட தங்கமும் வெள்ளியும் உரைத்தாலும், வெட்டினாலும் உருக்கினாலும் தகடடித்தாலும் தன்னொளி குன்றாமலிருக்கும். ரஸத்திற்கு நூறுபங்குக்கு மேல் கோடி பங்கு வரை வேதம் செய்யும் சக்தி இவை கொடுக்கின்றன.

நிசாசரலதை (கொடி)யினால் பந்தம் : கங்கைக்கும்

யமுனைக்கும் நடுவில் கிடைக்கும் இக்கொடியின் சாற்றால் ஆரோட ரஸத்தை மூன்று தினமரைத்துக் கட்டியவுடன் அப்பிரக ஜாரணம் செய்யவும். கந்தகத்தையும் இக்கொடி ரஸத்தால் பாவனை செய்து சேர்த்து ஜாரணம் செய்யவும். இவ்விதம் கிரமமாக ஸமனௌடை வரை அப்பிரகம் ஜாரணம் செய்ய நூறு பங்கு வேதம் செய்யும் சக்தி பெறும்.

நிசாசர ரஸத்தால் தாளகத்தை ஏழு தடவை பாவனை செய்து அதனால் வங்கத்தை பஸ்மமாக்கி அதை வெள்ளி யிலும் அவ் வெள்ளியை ரஸத்திலும் நிர்வஹணம் செய்ய ரஸம் கட்டும். அதன் கால் வீசம் பங்கு வேதத்தால் தாம்ரம் வெள்ளியாகும்.

இதன் பூவைத் தூள் செய்து நெல்லிக்காய் சாற்றில் பாவனை செய்து தேன் நெய் சேர்த்துப் புதுப்பானையிலிட்டு 3 வாரம் தான்ய புடம் போட்டு எடுக்கவும். அதை சாப்பிட நரை திரை அகலும்.

அதன் விதையிலிருந்து குழித் தைலம் இறக்கி அதனால் ரஸத்திற்கு ஸங்கோசபந்தம் செய்து வளையல் மோதிரம் ரஸலிங்கம் முதலியவைகள் செய்ய முடியும்.

அங்கநாயிகா மூலிகையால் பந்தம் : இதன் சாறு சேர்த்து ஒரு வாரம் அரைத்த ரஸம் நூறு பங்கு வேதம் செய்யும். அதிக நாள் அரைக்க கேசரீ (அகாசகமன) ஸித்தி அளிக்க வல்லது. இதன் சாற்றால் பஸ்மம் செய்யப்பட்ட ரஸம் இறந்தவனை பிழைபிக்க வல்லது.

நரஸார மூலிகையால் பந்தம் : இம்மூலிகை சேர்த்தரைத்தவுடன் ரஸம் கட்டுப்படுகின்றது; மனோசிலை தனது நாற்றத்தை இழக்கின்றது. அம்மனோசிலை சேர்த்து காரீயத்தை பஸ்மம் செய்து அக் காரீயத்தை வெள்ளியிலோ தாம்ரத்திலோ ஜாரணம் செய்து ரஸத்தில் ஜாரணம் செய்ய வேதமாகின்றது. இம்மூலிகை ரஸத்தாலரைத்த அப்பிரகமும்

ரஸத்தில் எளிதில் ஜீர்ணமாகின்றது. மற்றும் மட்ட உலோகங்களைத் தங்கமாக்குவதில் பல முறைகளில் உபயோகப்படுகின்றது.

கங்காலகேசரி மூலிகையால் ரஸபந்தம் : இதன் விதை எண்ணெய்யை நிசாசரலதை சேர்த்து தாம்ரபாத்திரத்தி லிட்டொருநாள் வைக்க வைரத்தை பஸ்மம் செய்யும். இதைச் சேர்த்து ரஸத்தை தணலிலிட்டு ஊதக் கட்டும்.

மந்திரஸிம்ஹாஸ்னியினால் பந்தம் : இதன் குழித் தைலத்தை தாம்ரபாத்திரத்தில் வைத்து அதன் நடுவில் ரஸத்தை வைத்து மேதினீயந்திரத்தில் இட்டு கந்தகத்தைக் கிராஸம் கொடுக்க உருண்டையாகும். அதைத் துணியில் பொட்டணமாகக் கட்டி ஸமனெடை வரை கந்தகத்தை ஜாரணம் செய்யக் கட்டும்.

இரிந்திரியினால் பந்தம் : கந்தகம் தாளகம் ஸ்வர்ணம் அப்பிரகம் மற்ற லோஹங்கள் இவைகளை ஜாரணம் செய்வதிலும் ரஸத்தைக் கட்டுவதிலும், வைரத்தையும் எல்லாவித ஸத்வங்களையும் பஸ்மம் செய்வதிலும் சிறந்தது. பசுவின் கொம்பில் இதன் சாற்றுடன் ரஸத்தை தான்யபுடத்தில் வைக்க ரஸம் நீத்து விடும். இதில் ஸம அளவு முதல் ஒன்பது பங்குவரை தங்கத்தை ஜாரணம் செய்ய அத்புதமான வேதஸித்தி ஏற்படும்.

க்ஷமாபாலத்தால் பந்தம் : இதனால் வைரத்தையும் தங்கத்தையும் பஸ்மமாக்கி அவைகளால் ரஸத்தைக் கட்டவும்.

ஜாகரியால் பந்தம் : இம் மூலிகையின் சாற்றைச் சாப்பிட்ட தேகம் வேதசக்தி பெறும்.

மற்ற மூலிகைகளால் பந்தமுறைகள் : வர்துல பத்திரியின் கிழங்கை அரைத்து அந்த மூஷையில் தடவி ரஸத்தை விட்டு தணலிலிட்டு வாயால் ஊத ரஸம் கட்டும். இம்மாதிரியே ரக்தகஞ்சுகியின் கிழங்கு விருச்சிகபத்திரியின்

கிழங்கும் ரஸத்தைக் கட்டும். வஜ்ர கந்தத்தின் நடுவில் ரஸத்தை வைத்து ஏழு கஜபுடமிடக் கட்டும். கலப்பைக் கிழங்கின் நடுவிலும் காட்டுப் பழுபாகல் கிழங்கிலும் ரஸத்தை வைத்து ஏழு தடவை வேகவைத்தெடுக்க ரஸம் பஸ்மமாகும். இதை சுகசஞ்சுவின் நடுவில் வைத்து புடம் போட்டும் துருத்தியினால் ஊதியும் ரஸத்திற்கு வேதசக்தி ஏற்படுத்தலாம். சுககந்தத்தின் நடுவில் ரஸத்தையும் சிறுபுள்ளடிச் சாற்றையும் விட்டு கஜபுடம் போடப் பஸ்மமாகி வேதம் செய்யும்.

திருணஜ்யோதி என்று இரவில் மின்னும் மூலிகையின் வேர் ரஸம் கந்தகம் அப்பிரகம் இவைகளை புளிமாதுளையின் சாற்றில் அரைத்துத் தாம்பிரத் தகட்டில் தடவி மூன்று புடமிடத் தகடு தங்கமாகும். அதன் வேர் சேர்த்தரைத்த ரஸம் அப்பிரகத்தை சாரணம் செய்யும். உச்சடையின் ரஸத்தால் தாளகம் துத்தம் ரஸம் இவைகளை அரைத்து வெயிலிலிடப் பஸ்மமாகி வேதம் செய்யும். ரஸம் மனோசிலை கந்தகம் அப்பிரகம் லிங்கம் இவைகளை செங்கள்ளியிலைச் சாற்றாலரைத்து ஆயிரம் பங்கு வரை வேதம் செய்யலாம்.

ஸ்தல பத்மினி என்ற மூலிகையை வலது காலால் மிதித்து ஆகாசத்தைப் பார்க்க வெகுதூரத்திலுள்ள நக்ஷத்ரமண்டலமும் தெரியும். செடியை ஒடிக்க சிகப்பு நிறப்பால் வடியும். ரஸம் அப்பிரகம் இம் மூலிகையின் பஞ்சாங்கம் மனோசிலை தாளம் ஸ்வர்ணமாக்ஷிகம் இவைகளை ஏழு நாள் அரைத்துத் தாம்பிரத்தை வேதம் செய்யத் தங்கமாகும். இதன் சாற்றுடன் ரஸத்தை ஜாரணம் செய்து அந்த மூஷையிலிட்டு ஊத பஸ்மமாகி ஸங்கோச பந்தமடைந்து எல்லா லோஹங்களையும் வேதம் செய்கின்றது.

கொடிவேலி கல்பத்தில் கூறியபடி கருங்கொடி வேலியின் ஐந்து பாகங்களையும் சேர்த்து ரஸத்துடன் அரைத்து அந்த மூஷையிலிட்டு ஊத ரஸம் கட்டும். அம்மாதிரியே

செங்கொடி வேலியையும் கல்பமுறைப்படி எடுத்துத் தாள் செய்து தாம்ரத்துடனும் ரஸத்துடனும் வாலுளுவை குழித்தைலத்தில் 21 தடவை சுருக்குக் கொடுக்க தாம்ரம் சுத்தியடைகின்றது. அத்தாம்ரத் தகடுகளை செங்கொடி வேலிச் சாற்றாலும் சேங்கொட்டைத் தைலத்தாலும் புடம் போடத் தங்கமாகும்.

வாலுளுவையின் விதைகளிலிருந்து ஆடி மாதத்திய சுக்ல பக்ஷத்தில் எண்ணெய் எடுத்து தாம்ரக் குடத்திலிட்டு பூமியினடியில் புதைத்து மேல் உமிபோட்டெரிக்கவும். ஆறுமாதம் கழித்து அக்குடம் தங்கமயமாகின்றது.

தக்தருஹை என்ற மூலிகை பொசுக்கினாலும் மறுபடியும் துளிர்விடும் ஸ்வபாவமுள்ளது. அதன் கிழங்கின் சாற்றைக் கடுகு சேர்த்து வெற்றிலைச் சாற்றால் அரைத்து உருண்டை செய்து உருகிய லோகத்தில் போட தங்கமாகும்.

கடுதும்பி என்ற மூலிகையின் விதைகளை 21 தடவை நெல்லிகாய்ச் சாற்றால் பாவனை செய்து பாலும் சுக்கும் சேர்த்து செக்கில் ஆட்டி எண்ணெய் எடுத்து அதனால் ரஸத்திற்கு மூர்ச்சனை செய்யவும். மயில் பித்தம், பசுவின் பித்தம், படிகாரம், அன்னபேதி இவைகளை வெள்ளிக்குச் சமம் சேர்த்து அதற்கு சமம் மூர்ச்சித ரஸம் சேர்த்து ஒரு மாதம் வைக்க வேதசக்தி ஏற்படுகின்றது.

க்ஷீரகந்தம் என்ற மூலிகைக்கு இடியொலியினால் கள்ளியைப் போன்று இலைகள் உண்டாகின்றது. அதன் கிழக்கிலிருந்து வரும் சிகப்பான சாற்றை எடுத்து வெள்ளிக்கு நிர்வஹணம் செய்து துருத்தியால் ஊதத் தங்கமாகும்.

புளிய இலையின் சாற்றால் தாம்ரத்தூளுடன் கூடிய ரஸத்தை அரைக்க ரஸம் கட்டும். அதை ஜலத்தின் நடுவில் விட அதன் கட்டு கெட்டிப்படும். சாக (தேக்கு?) மரத்தின் இலைச்சாறால் செஞ்சந்தனத்துடன் கூடிய ரஸத்தை அரைக்க

எல்ல லோஹங்களையும் ஜாரணம் செய்யும் சக்தி ரஸத்திற்கு ஏற்படுகின்றது. கந்தகம், ரஸகம், ஸ்வர்ணமாக்ஷிகம், ரஸம், செஞ்சந்தனம் இவைகளை அழுகுண்ணிப்பாலையின் சாற்றால் அரைக்க வெள்ளி தங்கமாகின்றது. சாகமரத்தின் பிசினையும், முருங்கை வேரையும், முருங்கை வேரின் சாற்றால் அரைத்துத் தாம்ரத் தகட்டில் தடவி புடம் போட உருகியவுடன் தங்கமாகின்றது. பழுத்த சாகப்பழத்தின் சாற்றால் ஏழு நாள் ரஸத்தை மஞ்சிஷ்டை சேர்த்துப் பாவனை செய்து வெள்ளித் தகட்டில் தடவி ஊதத் தங்கமாகும்.

தேவதாளியைக் கல்பமுறைப்படி எடுத்து விஷ்ணுக் கிராந்தியுடன் ரஸத்தை அரைக்க மூர்ச்சனையுடன் கட்டும். அதைத் தடவ தாம்ரம் தங்கமாகும். தேவதாளியின் பழமும் ஈசுவர மூலியின் சாறும் சேர்த்து வங்கத்தில் பூச வங்கம் உருகாது. வெண் குந்துமணிச் செடியை விதிப்படி வளர்த்து மூஷை யிலிட்டு அக்குந்துமணி கால்பலமும் சுத்த தாம்ரம் பதினைந்து பலமும் சேர்த்து ஊத வெள்ளியாகும். தாம்ரத்தையும் பித்தளையையும் குந்துமணியையும் சேர்த்து ஊதத் தங்கமாகும்.

கர்தரீ : அஸுரர்களை வெல்ல விஷ்ணுசக்கிரத்தை ஏவும் பொழுது விழுந்த வியர்வைத் துளிகள் கர்தரீ ரஸம் என்ற பெயருடன் விளங்கின. திவ்யஸித்தி அளிக்கும் அதைக் காப்பாற்ற விஷ்ணுசக்ரமே சுழலுகின்றது. அதனருகே நெருங்குவது அபாயகரமாகும். திருஷ்டி கர்தரீ (பார்த்தவுடன் துண்டிக்கக் கூடியது) சப்த கர்தரீ, ஸ்பர்ச கர்தரீ, சாயா (நிழல்) கர்தரீ, தூமகர்தரீ, ஜ்வாலா கர்தரீ எனப் பலவகை உண்டு. அகோரகவசத்தை ஜபித்துக் கொண்டு சிற்சில விசேஷ நியமங்களுடன் அதன் ஸித்தி பெறவேண்டும்.

சந்திரோதகம் : பூர்ணிமை இரவில் சந்திர கிரணங்களைக் கண்டதும் கல் உருகி ஜலமாகி வருவது சந்திரோதகம் எனப்

பெயர். அதை விதியுடன் எடுத்து வந்து தேன் நெய்யுடன் சாப்பிட மயக்கம் வரும். சந்திரன் உதயமான வுடன் மயக்கம் தெளியும் உடன் பால் சாப்பிடவும். ஏழு நாள் இவ்விதம் செய்ய சந்திரன் போல் மாசற்று இருப்பான். அந்த ஜலத்தால் அப்பிரகம் ரஸா தங்கம் இவைகளை அரைத்து மூஷையிலிட்டு ஊதக் குடிகையாகும். இது ஸ்பர்ச வேதியாகும்.

விஷோதகம் : விஷ நீரில் கேசத்தைப் போட வெடிக்கும்; தன் நிழல் தெரியாது; எண்ணெய் பரவாமல் உருண்டையாகத் தங்கும்; நெய் பரவும்; கந்தகத்தின் வாஸனை தெரியாது; மாம்ஸம் உப்புக்கரிக்கும். இவ்விதக்குறிகளுடன் கூடிய நச்சு நீரை புரச இலையினால் எடுத்துக் கசப்புச் சுரைக்குடுவையில் வைக்கவும். நச்சுநீரால் கந்தகத்தையும் ரஸத்தையும் அரைத்து ஆட்டுப்பால் விட்டு தாம்ரபாத்திரத்தில் தடவிப் புடம் போட தாம்ரம் தங்கமாகும். இதனால் காரீயத்தைப் புடம் போட்டு பஸ்மமாக்கி வெள்ளியில் நிர்வஹணம் செய்யத் தங்கமாகும்.

கலப்பைக் கிழங்கு ஒட்டடை ஈய்ச்செந்தூரம் மஞ்சள் மரமஞ்சள் மேஷசிருங்கீ கர்கடசிருங்கீ கருஊமத்தை அரளி பீஜத்துடன் கூடிய ரஸம் இவைகளை நச்சுநீரால் ஏழு நாள் அரைத்து அதில் காரீயத்தைப் பிரதீவாபம் செய்து மூஷையிலிட்டு வேஸயந்திரத்தில் அதன் புகை தேகத்தில் படாமல் எரிக்க நாகஸிந்தூரமாகும். அச்செந்தூரம் வேதசக்தி பெற்றது. நச்சு நீரில் உருக்கி வார்த்த ஈயத்தை வெள்ளியில் சேர்த்து ஊதத் தங்கமாகும். மனோசிலை கந்தகம் வத்ஸநாபி, வெங்காரம் கலப்பைக்கிழங்கு ரஸம் இவைகளை நச்சு நீரால் அரைத்து வெள்ளித் தகட்டில் தடவி அந்தமூஷையிலிட்டு ஊதத் தங்கமாகும்.

ஸஞ்ஜீவனீஜலம் : கோதாவரீநதியின் பக்கலிலுள்ள கிருஷ்ணகிரியில் ஸ்ப்பிரஸத்தாம்பிகா என்ற கிராமத்திலுள்ள ஓடைகளில் ஸஞ்சீவனீஜலம் இருக்கின்றது. காய்ந்த மூங்கிலை அதில் போட மூங்கில் ஒரு நாளில்

பசுமையுடன் இலைத் தளிர்களுடன் தோன்றும். அதைப் பூஜை செய்து கசப்புச் சுரைக் குடுவையில் எடுத்து வந்து அந்நீரால் தங்கத்தையும் ரஸத்தையும் அரைத்து 21 நாள் சாப்பிட்டு பாலன்னமருந்தி வர நல்ல பலமும் அழகும் பெறுவான். தங்கம் ரஸம் அப்பிரகம் இம்மூன்றையும் ஸமனெடை ஸஞ்ஜீவனீ ஜலத்தால் அரைத்து ஸ்வேதனம் செய்ய வேதசக்தி ஏற்படும்.

உஸ்ணோதகம் : *(வெந்நீர் ஊற்றுகள்)* தோதாவரி நதியின் பக்கலிலுள்ள ஸஹ்யாத்தரியில் மாதாபுரம் என்ற கோவிலுக்கு பக்கத்தில் கம்பா என்ற பட்டணம் உண்டு. கொதிக்கும் தண்ணீருள்ள ஊற்றுகள் அங்கே உள்ளன. அந்த ஜலத்தை அருந்தி கடலை ஆகாரமாகக் கொள்ள நீண்ட ஆயுள் பெறலாம். அன்னபேதி கந்தகம் ரஸகம் உஜ்ணோதகம் இவை நான்கு பங்கும் தாம்ரம் பத்து பங்கும் சேர்த்து அரைத்துத் தாம்ரத்தகட்டில் தடவத் தங்கமாகும். ரஸம் கந்தகம் ரஸகம் துத்தம் லிங்கம் மாக்ஷிகம் இவைகளைத் தகட்டில் தடவி ஊதத் தங்கமாகும். அவ்வூற்று நீரில் கொள்ளை வேக வைத்துச் சாப்பிடுவதும் ஸ்னானம் செய்யவதும் நீண்ட ஆயுளை அளிக்கவல்லவை.

சைலோதகம்: ஜலத்தில் மரக்கட்டைகளைப் போடக் கல்லாக மாறினால் அது சைலோதகம், லிங்கம் தாளகம் மனோசிலை இவைகளின் துர்நாற்றத்தை இது போக்குகின்றது. ஸ்ரீசைலம், பகவதீ நதீ, கோகர்ணம், பிரும்மகிரி, மால்யவான்மலை போன்ற இடங்களில் பலவிதமான வேத சக்திகளுடன் இது கிடைக்கின்றது. அகோரமந்திர ஜபத்துடன் சரத் கிரிஷ்ம வஸந்த ஹேமந்தருதுக்களில் இரும்பு- காந்தம் அல்லது தாம்ரபாத்திரத்தில் அந்த ஜலத்தை எடுத்து அரைக்கால் பங்கு பால் சேர்த்துப் பால் மீதமாகும்படி காய்ச்சி சாப்பிட நீண்ட ஆயுள் பெறுவான். இதனால் கொள்ளைக் கஷாயமிட்டு நான்கு பங்கு கஷாயத்தில் நெய்யைக் காய்ச்சி வடித்துத் தேன் நெய் சேர்த்துச் சாப்பிட 21 நாட்களில்

யுவனாவான். அதனால் தைலம் வடித்து ஸ்னானமும் செய்ய சொரி சிரங்கு குஷ்டம் முதலிய தோல் வியாதிகள் நீங்கும். அதனால் ரஸத்தை ஒரு மாதம் அரைக்க நல்ல ரஸாயனமாகின்றது. அந்த ரஸத்துடன் தங்கம் சேர்த்து ஊத 'அமரஸுந்தரீ' என்ற குடிகையாகின்றது. அதைத் தரிக்க ஆயுதபயம் ஏற்படாது. அந்த ஜலத்தில் 360 கடுக்காய்களை வேகவைத்துத் தேன் சேர்த்து பூமிபுடம் ஒரு மாதம் வைத்து எடுத்து தினம் ஒரு கடுக்காய் வீதம் சாப்பிட நீண்ட ஆயுள் பெறலாம். பூசணிக்காய் போன்ற காய்களை ஜலத்தில் போட்டு கல் போன்றானவுடன் அதைச் சாப்பிடுவதும் தேகதிடமளிக்க வல்லது. கால் பல ரஸத்தை அந்த ஜலத்தால் அரைத்து இங்குதிக்காய் நடுவில் வைத்துக் கட்டி அந்த ஜலத்திலேயே போட்டு வைக்கக் கட்டியாகும். அதை ஆறு மாதம் வாயில் வைத்துக்கொள்ள சரீரம் வைரம் போலாகும். திரிபலையை சைலஜலத்தில் போட கல்லானவுடன் ஒரு வருஷம் சாப்பிட நல்ல யௌவனத்துடன் விளங்குவான்.

ரஸம் தாளம் மனோசிலை ஸவர்ணமாக்ஷிகம் லிங்கம் வத்ஸநாபி இவைகளைக் கல்வத்திலிட்டு புளிப்பு மாதுளைச் சாற்றால் அரைத்து உருண்டை செய்து சைல ஜலத்தில் போடக் கல்லாகும். அதனால் தாம்ரமும் வெள்ளியும் தங்கமாகும். இது நல்ல ரஸாயன மாகின்றது. கல்லாய்ப் போன மஞ்சளால் காரீயத்திற்கு நிர்வஹணம் செய்யத் தங்கமாகும்.

குடிகைகள் : நொச்சி மருது புரசு அதிமதுரம் இங்குதீ இவைகளின் காய்களிலாவது மஞ்சள் அல்லது இஞ்சியிலாவது குழி துளைத்து ரஸத்தையும் கால் பங்கு தங்கத்தையும் வைத்து மூடி மேல் திரிபலை கல்கத்தால் பூசி சைல்ஜலத்தில் போட்டு வைக்க அவை கட்டியாகும். அதற்கு ஸாரணம் செய்து முகத்தில் தரிக்க ஸர்வஸித்திகளும் அளிக்கும். வேதமும் செய்யும். 'கேசரீ குடிகை' என இதற்குப் பெயர்.

ரஸத்தைக் கட்டி அதில் மூன்று பங்கு கந்தகத்தையும் தங்கத்தையும் ஜாரணம் செய்து பஸ்மம் செய்து அதனால் தங்கத்தைப் பஸ்மம் செய்யவும். அதை ஸமனெடை ரஸத்தில் ஜாரணம் செய்து அதனால் வைரத்தை பஸ்மம் செய்யவும். அதை மூன்று பங்கு ரஸத்தில் ஜாரணம் செய்து தங்கத்தையும் ஜாரணம் செய்யவும். குடிகை யாக்கி வாயிலடக்கிக் கொள்ள பிறர் கண்களுக்குப் புலப்படமாட்டான். இதுவும் ஸர்வ ஸித்தி அளிக்கவல்லது.

அப்பிரகம், மாக்ஷிகஸத்வம், வெள்ளி, தாம்ரம், வைரம், அயம், ரஸம் இவைகளைக் குடிகையாக்கித் தரிக்க ஸித்தி தரும்.

ரஸம் அப்பிரகம் ரத்னங்கள் வெள்ளை கோநலை தங்கம் வெள்ளி தாம்ரம் இவைகளை ஸமனெடை சேர்த்து ஸ்திரீ ரஜஸ்ஸினால் அரைத்து வியாக்ரீகந்தத்தின் நடுவில் வைத்து தாமரை நூலால் கட்டி மூன்று லோஹங்களால் சுற்றி குஹ்ய ஸ்தானத்தில் வைத்துக்கொள்ள எல்லா காரியங்களிலும் ஜயம் ஏற்படும்.

வைக்ராந்தம் அப்பிரகம் காந்தலோஹம் துத்தம் வைரம் இவைகளை தான்றிக்காய் முதலியவை சேர்த்துத் தயார் செய்த காடியிலிட்டு ஸமாவர்தனம் செய்து ரஸத்தில் கால் பங்கு சேர்த்து கற்றாழைச் சாற்றில் கட்டி குடிகை செய்யவும்.

வெள்ளி ஐந்து பங்கு ரஸம் இரண்டு பங்கு அப்பிரகம் மூன்று பங்கு தங்கமும் காந்தமும் வகைக்கு ஒரு பங்கு தாம்ரம் அரைப்பங்கு இவைகளைக் குடிகையாக்க ஸர்வஸித்திகளும் தரும். இதற்கு அமரஸுந்தரீ" எனப் பெயர்.

ரஸபஸ்மம், காந்தபஸ்மம், மாக்ஷிகம், சிலாஜது, வாய்விள்ங்கம், கடுக்காய் இவைகளை ஸமனெடை சேர்த்து தேன் நெய் விட்டரைத்து 360 குடிகைகளாக்கி தினம் ஒன்று வீதம் வாயில் அடக்கிக் கொள்ள நூறு வயது வாழலாம்.

சில ரஸாயனயோகங்கள்

திரிபலை காந்தம் ரஸபஸ்மம் மனோசிலை கார்போகரிசி இவைகளை ஸமனெடை சேர்த்து அம்மான் பச்சரிச் சாற்றாலும் சிறுகீரைச் சாற்றாலுமரைத்து அந்த மூஷையிலிட்டு வேகவைத்தெடுத்து ஒரு உளுந்தளவிலிருந்து கால் நிஷ்கம் வரை அளவைக் கிரமமாக அதிகரித்து மூன்று வருஷம் வரையிலும், பிறகு எட்டாவது வருஷம் வரை ஒரு நிஷ்கம் வரையிலும் சாப்பிட்டு உத்தமமான ஆகார வகைகளைச் சாப்பிட்டு வர நரை திரை யகன்ற நல்ல பலம் புஷ்டி பெறுவான். தங்கபஸ்மம் சேர்த்தும் இதைச் சாப்பிடுவதுண்டு.

திரிபலை வகைக்கு 100 பலம் எடுத்து 8 பங்கு ஜலத்தில் அரைக்கால் பங்கு மீதமாகக் கஷாயமாக்கி அதில் தேன் நெய் சர்க்கரை சேர்க்கவும். திரிகடு சித்ரகம் ரஸபஸ்மம் லோஹபஸ்மம் சிலாஜது அப்பிரகபஸ்மம் காந்தபஸ்மம் வாய்விளங்கம் இவைகள் வகைக்கு 10 பலம் சேர்த்து சிறுகீரைச் சாற்றாலும் வில்வப்பழ ரஸத்தாலும் அரைத்து திரிபலைக் கஷாயத்தில் கலக்கி இருப்புப் பாத்திரத்திலிட்டு ஒரு மாதம் வைத்தெடுத்து படுக்கும் பொழுது இந்த லேகியத்தைச் சாப்பிட நல்ல பலமும் பிருஷ்ய சக்தியும் பெற்ற வாதாதி தோஷங்களின் கெடுதிகள் அகற்றப்பெற்று சுகமாக வாழ்வான்.

காந்தம், தங்கம், தாமிரம், வெள்ளி, அப்பிரகம் இவைகளை அரைத்து இங்குதிக்காய்க்குள் வைத்து சைலோதகத்தில் தோலாயந்திரத்தில் எரிக்கக் குடிகையாகும்.

காந்தம், தங்கம், தாமிரம், வெள்ளி ,அப்பிரகம், வைரம், ரஸம் இவைகளை நெல்லிக்கட்டையினுள் வைத்து சைலோதகத்தில் வைத்தெடுக்கக் கட்டும்.

வெள்ளி, தங்கம், தாம்ரம், ரஸம் இவைகளை அரைத்து மாவிலங்கைக் கட்டையினுள் வைத்து சைலோதகத்தில் கட்டி எடுக்கக் 'கேசரீ' குடிகையாகின்றது.

சைலோதகத்தினுள் வைத்துக் கல்லான் புரசம் விதையை தேன், நெய்யுடன் மூன்று வாரங்கள் சாப்பிட நீண்ட நாள் ஆரோக்கியமாக வாழலாம்.

ரஸம், அப்பிரகம், வைரம், எஃகு, தங்கம் இவைகளால் செய்த கேசரீகுடிகை மிகவும் உயர்ந்த ரஸாயனமாகின்றது. இவ்விதம் ரஸத்தை புங்கங்காய், பனச்சிக்காய், எலுமிச்சம்பழம், நார்த்தை, கசப்புமாதுளை, வாழைப்பழம், பலாப்பழம், தான்றிக்காய், தேங்காய், கடுக்காய், நெல்லிக்கனி இவைகளில் ஒன்றின் நடுவில் வைத்து சைலோதகத்தில் முறைப்படி கட்டி உபயோகிக்கச் சிறந்த ரஸாயனமாகும்.

பத்த ஜாரணம் : முன் ஜாரணமுறையில் கூறப்பட்டுள்ள முறை பால ஜாரணம் எனப்படும். அதைவிட பத்த ஜாரணமுறை மிக உயர்ந்தது. ரஸத்திற்குப் பந்தம் செய்யாமல் ஜாரணம் செய்வதால் எடை குறைவதைத் தடுக்க முடியாது. பத்த ஜாரணமுறையில் கிராஸம் ஜீர்ணமாவதுடன் முகம் ஏற்படுத்திக் கட்டுவது ஸாமான்யஜாரணம் எனவும், கிராஸம் கொடுக்காமலே கட்டுவது உத்தம ஜாரணம் எனவும் கருதப்படுகின்றது.

திவ்யௌஷதிகளால் கட்டுவது உத்தமம் எனவும், ஸாரங் (துருதி)களால் கட்டுவது மத்யம் மெனவும், பாகத்தால் மாத்திரம் கட்டுவது அதமமெனவும் கருதப்படுகின்றது.

ரஸம் அப்பிரகம் (துருதி) இவை ஸமனெடையும் தங்கம் வீசம் பங்கும் சேர்த்தும் பிரகாசம் மூஷையிலிட்டு காசலவணமும் வெங்காரமும் சேர்த்து ஊதி ரஸத்துடன்

பீஜங்கள் கலந்து மூஷையில் ஒட்டாமல் பிரிந்ததும் எடுத்து தேகலோஹ வேகத்தில் உபயோகப் படுத்தலாம்.

அப்பிரகத் துருதியை ரஸத்துடன் சேர்ப்பதற்கு வஜ்ரகந்தம் சீந்திற்கொடி உச்சடா போன்ற ஔஷதிகளும் காரகில், சங்கநாபிவிஷம், உள்ளிப்பூண்டு, பெருங்காயம், ஸ்திரீயின் ரஜஸ், புரசவிதை எண்ணெய் இவைகளும் சிறந்தவை. இருபத்தோரு நாட்கள் கந்தகத்தை முறைப்படி சாப்பிட்ட ஸ்திரீயின் ரஜஸ் ரஸத்தைக் கட்டுவதிலும் ஜாரணத்திலும் நிகரற்றது.

வஜ்ரபந்த முறைகள்

1. வைரபஸ்மம் ஒரு பங்கு, சுத்த ரஸம் மூன்று பங்கு, சிறு புள்ளடித் தூள் சேர்த்து அரைத்துக் கால் பங்கு தங்கத் தகட்டிற்கு மேற்பூசி, அதற்கு அரைக்கால் பங்கு ஸோமவல்லியின் சாறு காந்தம் வெங்காரம் தாளகம் இவைகளைச் சூர்ணம் செய்து சேர்த்து அரைத்துக் காயவைத்து அந்தமூஷையிலிட்டுக் கிராமணத் திரவ்யங்கள் சேர்த்து ஊதக் கட்டும். அதில் ஸௌவீரபாஷணம் வெங்காரம் காசலவணம் இவைகளைச் சேர்த்து ஊதச் சுத்தியாகும். தங்கம் எடை குன்றாமல் சேர்ந்துவிடும். பிறகு தச ஸங்கலிகா முறையில் கிராமணம் செய்யப் படவேண்டும்.

தசஸங்கலிகா முறை : ஒரு பங்கு ரஸத்தில் கிராமணம் செய்வது முதல் ஸங்கலிகை எனவும், இவ்விதம் ***3-6-10-15-21-28-45-55*** பங்கு வரை முறையே கிரமமாக ரஸத்தின் அளவை அதிகரிக்க இரண்டாவதிலிருந்து பத்தாவது ஸங்கலிகை வரை கிராமணமாகின்றது. ஸங்கலிகை அதிகமாக ஆக வேதசக்தியும் அதிகமாகின்றது.

2. ரஸமும் தங்கமும் ஸமனெடையும் வைரபஸ்மம் வீசம் பங்கும் சேர்த்து சிறு புள்ளடிச் சாற்றில் அரைத்து

முன்போல கிராமணம் முதலியவை செய்ய வஜ்ர பந்தமாகின்றது.

3. வைரபஸ்மத்தையும் ரஸத்தையும் ஸமனெடை சேர்த்துப் புடமிட்டுப் பஸ்மமாக்கி மறுபடியும் ஸமனெடை ரஸம் சேர்த்து துருத்தியில் ஊதிக் கட்டியவுடன் காசலவணத்தாலும் வெங்காரத்தாலும் சுத்தி செய்ய வஜ்ர பந்தமாகின்றது.

4. வைரம், அப்பிரக ஸத்வம், ரஸம், தங்கம் இவைகளைச் சேர்த்துக் கட்டி அதை ரஸத்தில் ஜாரணம் செய்து உபயோகிக்கச் சிறந்த வேதியாகின்றது.

5. வைரத்துடன் தங்கம், காந்தம், தாம்ரம் இவைகளை துவந்துவம் செய்து ரஞ்சம் செய்து ஸ்திரீயின் ரஜஸ்ஸால் பாவனை செய்து பூர்ஜ இலையில் வைத்து ரஸமும் சேர்த்து துணியில் பொட்டணம் கட்டி ஸ்வேதம் செய்ய உருண்டையாகும். அவ்வுருண்டையைக் கலப்பைப் கிழங்கு ஜீவனீ காந்தாரீ உத்தரவாருணீ என்ற திவ்ய மூலிகைகளின் கல்கத்தின் நடுவில் வைத்து மூஷையிலிட்டு மூடி மூஷையைப் பூமியினுள் மூடி மேல் புடமிடக் கட்டும். இக்குடிகையை ஒரு வருஷம் வாயில் வைத்துக்கொள்ள திவ்யபலமும், பன்னிரண்டு வருஷங்களில் ரஸபுருஷனாகி அவனது மல மூத்திரங்களாலேயே வேதம் செய்யும் சக்தி பெறுகின்றான்.

6. வைரபஸ்மம், ரஸம், தங்கம் இவைகளை முறைப்படி பந்தம் செய்தும் உபயோகிக்கலாம்.

7. கிருஷ்ணாப்பிரக ஸத்வம், வெள்ளி, தாம்ரம், தங்கம், ஸ்வர்ணமாக்ஷிகம், காந்தம், ஃகு இவைகளைச் சமனெடை அந்த மூஷையிலிட்டு மூடி ஊதிக் கட்டியவுடன் தூள் செய்து ரஸதுடன் சேர்த்தரைத்து உருண்டையாக்கி அந்த உருண்டையில் கால் பங்கு வைரபஸ்மம் சேர்த்துத்

தப்பதகல்வத்திலிட்டரைத்து ஏழு ஸங்கலிகை முறைகளில் பஸ்மமாக்கிக் குந்துமணியளவு உபயோகிக்கலாம். அப்பஸ்மம் ஒரு பலமும் கந்தகம் ஒரு பலமும் சேர்த்து அந்த மூஷையிலிட்டு ஊதிக் கட்டிய பின்னர் வேத சக்தி பெறுகின்றது. அக்கட்டை வங்காப்பிரக கபாலியினால் ஏழு தடவை ரஞ்சனம் செய்து குங்கும வர்ணமடைந்தபின் தங்கத்துடன் ஸமாவர்த்தனம் செய்து மூன்று ஸாரணைகளும் செய்ய நூறு பங்கு வேதம் செய்யும்.

வேதத்திற்கேற்ற மற்ற முறைகள்:

ரஸக்கட்டு, காரீயம், தங்கம், அப்பிரகம், காந்தம் இவைகளை ஒன்று சேர்த்து ஊதி ரஸத்தில் ஜாரணம் செய்து அதனால் தாம்ரத்தை வேதம் செய்யவும்.

ரஸக்கட்டும் ஈயமும் ஸமனெடை சேர்த்து அந்த மூஷையிலிட்டு ஊதிக் கோட.மானவுடன் அதற்குச் சமம் கந்தகம் சேர்த்து அந்த மூஷையிலிட்டு ஈயம் மீதமாகும் வரை ஊதி மறுபடியும் இவ்விதம் ஆறு பங்கு ஈயம் வரை நிர்வஹணம் செய்து கொள்ளவும். இவ்விதமே காரீயத்தையும் செய்யலாம். பிறகு அதை ரஞ்சன்ம் செய்து தங்கம் சேர்த்து மூன்று ஸாரணைகள் செய்ய தாம்ரத்தை வேதம் செய்யும்.

பக்வபீஜமு(தங்கம்)ம் த்ருதரஸமும் ஸமனெடை சேர்த்து அம்லவர்கத்தினால் அரைத்து அவ்விரண்டிற்கும் கால்பங்கு வைரபஸ்மம் சேர்த்துத் தப்தகல்வத்தில் அரைத்துப் பூதரயந்திரத்தில் ஏழு ஸங்கலிகை முறைப்படி பஸ்மமாக்கி மறுபடியும் அம்லவர்கத்தால் அரைத்து 360 புடமிட உயர்ந்த பஸ்மமாகும். அதனால் வெள்ளியை வேதம் செய்யலாம்.

வைரபஸ்மம் ஒரு பங்கு ரஸம் பதினாறு பங்கும் சேர்த்து தேவதாளி சங்கங்குப்பிச் சாற்றால் முறையே அரைத்து பூதரயந்திரத்தில் புடமிட பஸ்மமாகும். தேஹலோஹ

வேதத்தில் சிறந்தது. அப்பஸ்மத்திற்குச் சமம் கந்தகம் சேர்த்து அந்த மூஷையிலிட்டு ஊத உடன் கோடமாகும். அதை ரஞ்சனம் செய்து ஸாரணைகள் செய்து தாம்ரத்தை வேதம் செய்யவும்.

ரஸபஸ்மம் ஒரு பலமும் காரீயம் ஒரு பலமும் சேர்த்து காந்தபாத்திரத்தில் இருப்புக் குழவியால் அரைத்து இளந்தீயில் எரிக்க இரண்டும் ஒன்றாகும். அதைப் புடம்போட்டு பஸ்மமானவுடன் பசுவின் பித்தத்தால் அரைத்துப் பதினான்கு புடமிடவும். அப்பஸ்மத்திற்குச் சமம் தங்கம் சேர்த்துக் கிராமணம் செய்து அதனால் வெள்ளியையும் தாம்ரத்தையும் வேதம் செய்யலாம்.

வெள்ளை அப்பிரக ஸத்வம், படிக்காரம், காந்தம், இரும்பு, ஈயம், வெள்ளி, வெள்ளை வைக்கிராந்தம் இவைகளை அந்த மூஷையிலிட்டு ஊதி கோடமானவுடன் தூள் செய்து துருத ரஸத்துடன் சேர்த்து அரைத்து உருண்டையாக்கிக் கால் பங்கு வைரபஸ்மம் சேர்த்துத் தப்த கல்வத்திலிட்டு அரைக்கப் பஸ்மமாகும். அதை பூதரயந்திரத்தில் ஏழு ஸங்கலிகை முறையில் பஸ்மமாக்கி ஸமனெடை கந்தகம் சேர்த்து ஊதி கோடமாக்கி வெள்ளி சேர்த்து மூன்று ஸாரணைகள் செய்து தாம்ரத்தை வேதம் செய்யவும்.

எஃகுத் தூளும் துருதரஸமும் வகைக்கு எட்டு பலம் சேர்த்துத் தப்தகல்வத்தில் 'குஷ்டச்சல்லி' சாற்றில் அரைத்து உருண்டையானவுடன் கால் பங்கு வைரபஸ்மம் சேர்த்துத் தப்தகல்வத்திலிட்டரைக்கப் பஸ்மமாகும். மறுபடியும் ஏழு ஸங்கலிகை முறையில் புடம் போட்டுப் பஸ்மமாக்கி பதினாறு பங்கு ஈயத்தை வேதம் செய்யவும். அப் பஸ்மத்துடன் கந்தகத்தைச் சேர்த்து கோடமாக்கிச் சமனெடை எஃகுதுதூளும் துருத ரஸம் இரண்டு பங்கும் சேர்த்துத் தப்தகல்வத்திலிட்டரைத்து உருண்டையாக்கி ஏழு ஸங்கலிகை

முறையில் புடம் போட்டு எடுத்து அதை மறுபடியும் எஃகுடன் துவந்துவம் செய்து ஸாரணைகள் செய்யவும். மிகவும் உயர்ந்த வேதி ரஸமாகின்றது.

ரஸபஸ்மமும் சுத்தமான ஈயமும் சேர்த்து இருப்புப் பாத்திரத்திலிட்டரைக்கப் பஸ்மமாகும். அப்பஸ்மம் ஒரு பலம், வெள்ளித் தூள் இரண்டு பலம், கந்தகம் இரண்டு பலம், வெங்காரம் ஒரு பலம் இவைகளை அந்த மூஷையிலிட்டுக் கோடமாக்கி அதற்குச் சமம் துருத ரஸம் சேர்த்து புளிப்புமாதுளைச் சாற்றால் அரைத்து உருண்டை செய்யவும். அதனால் பதினாறு பங்கு வெள்ளியை வேதம் செய்யலாம்.

வங்கபஸ்மம் ரஸம் அப்பிரகஸத்வம் இம்மூன்றையும் புளிப்புமாதுளம்பழச்சாற்றால் அரைத்து உருண்டையாக்கி வைரபஸ்மம் கால் பங்கு சேர்த்து திவ்யௌஷதித் திரவத்தால் அரைத்துப் பூதரயந்திரத்தில் ஏழு புடம் போடப் பஸ்மமாகும். அதில் மூன்று பலம் உப்பு சேர்த்து கள்ளிச் சாற்றில் மூன்று நாள் அரைத்து ஒட்டிலிட்டு பூதரயந்திரத்தில் புடம் போடவும். இது ஈயத்தை வேதம் செய்யும்.

ஈயம் வெள்ளி ஸத்வம்(?) இவைகளை தனித்தனியாக ரஸத்துடன் சேர்த்து உருண்டையாக்கிப் புடம் போட்டு பஸ்மமாக்கி அந்த ரஸபஸ்மம் ஒரு பலம், ஈய பஸ்மம் இரண்டு பலம், வெள்ளி பஸ்மம் இரண்டு பலம், ஸத்தவபஸ்மம் இரண்டு பலம், சங்கு பஸ்மம் ஐந்து பலம், உப்பு எட்டு பலம், வெங்காரம் எட்டு பலம் இவைகளை ஒன்றாக்கி கள்ளிப்பாலால் அரைத்துப் பதினான்கு புடம் போட்டெடுக்கப் பஸ்மமாகும். ஈயத்தை மட்பானையிலிட்டு உருக்கி அதில் பஸ்மத்தைப் போடக் கடினமாகும். அந்த மூஷையிலிட்டு ஊத வெள்ளியாகும்.

கிருஷ்ணாப்பிரகமும் கந்தகமும் வகைக்கு ஒரு பலமும் ரஸம் இரண்டு பலமும் சேர்த்தரைத்து உருண்டையாக்கி

வைரபஸ்மம் கால் பங்கு கலந்து அரைக்கப் பஸ்மமாகும். பூதரயந்திரத்தில் ஏழு ஸங்கலிகை முறையில் புடம் போடக் காரீயத்தை வேதம் செய்யும். அக்கோடத்தை ரஞ்சனம் செய்து ஸாரணம் செய்ய தாம்ரத்தைத் தங்கமாக்கும்.

வைரபஸ்மத்தைக் கள்ளிச்சாற்றில் அரைத்துப் பத்து புடம் போட்டு ஸமனெடை ரஸம் சேர்த்து தேவதாளிச் சாற்றால் அரைத்துப் புடமிடவும். அப்பஸ்மத்திற்குச் சமம் எஃகும் சேர்த்துத் திரிபலை கஷாயத்தினால் அரைத்துப் புடமிடவும். அதற்குச் சமம் காரீயம் சேர்த்து வெள்ளை நிறமுள்ள கருங்காலிச்சாற்றாலும் ஆடாதொடையிலைச் சாற்றாலும் அரைத்துப் புடமிட்டு இருபதில் ஒரு பங்கு சேர்க்க வெள்ளியை ரஞ்சனம் செய்யும். காரீயத் தகடுகளில் எட்டில் ஒரு பங்கு அப்பஸ்மத்தைத் தடவி புடமிட காரீயம் பஸ்மமாகும். பிறகு அப்பஸ்மத்திற்குச் சமம் தங்கத்தைச் சேர்த்து மந்தாரைச் சாற்றிலரைத்து புடமிடவும். பிறகு அதற்குச் சமம் தாம்ரத்தைச் சேர்த்து கற்றாழைச் சாற்றில் அரைத்துப் புடமிடவும். பிறகு அம்லவர்க்கத்தினால் அரைத்துப் புடமிடச் செந்தூரமாகும். வெள்ளியையும் தாமிரத்தையும் ரஞ்சனம் செய்யும்.

பீஜம் சேர்த்தோ சேர்க்காமலோ ரஸத்தை வைரத்துடன் சேர்த்துப் பஸ்மமாக்கி மந்தாரைச்சாற்றில் அரைத்து தாம்ரத்தை வேதம் செய்யவும். அதைச் சேர்த்துத் தாம்ரத்தை வெள்ளியுடனும், ஈயத்தைத் தங்கத்துடனும் தங்கத்தை ரஸத்துடனும் துவந்துவம் செய்து உபயோகிக்க அழிவற்ற தேகம் பெறலாம்.

வைரமும் தங்கமும் துவந்துவமாகுதல்: வைரபஸ்மம் ஒரு பங்கும், தங்கமும் வெள்ளைக் காசலவணமும் ரஸமும் வகைக்குப் பதினாறு பங்கும் சேர்த்து அந்த மூஷையிலிட்டு ஊதவும். இவ்விதம் ஏழு தடவை செய்ய வைரமும் தங்கமும் துவந்துவமாகும்.

மனிதன் தலையோட்டின் தூளும் வைரமும் சேர்த்து அந்த மூஷையிலிட்டு ஊத வைரமும் தங்கமும் ஒன்று சேரும்.

கையாந்தகரை, தலைமயிர், காந்தம், வெங்காரம் இளங்கன்றின் மலம் இவைகளை ஸ்திரீயின் ஸ்தன்யத்தால் அரைத்து அந்த மூஷையிலிட்டு வைரம் சேர்த்து ஊத வைரம் மற்றவைகளுடன் துவந்துவமாகும்.

ஊத்பலஸாரணியின் பாலால் வைரபஸ்மத்தை பாவனை செய்து தங்கபிஷ்டியின் நடுவில் வைத்து பூர்ஜ இலை சுற்றி மேல் துணி சுற்றி தான்யத்தின் நடுவில் ஒரு பக்ஷம் வைத்தெடுக்க வைரபந்தம் ஏற்படும்.

துருதீ பந்தம் : ரத்னங்களையும் உபரஸங்களையும் துருதியாக்கி ரஸத்துடன் சேர்த்துப் பந்தம் செய்வது துருதிபந்தம் எனப் பெயர்.

நிலப்பனை கொடிவேலி காட்டுப்பழுபாகல் குக்குட கிழங்கு ஸ்தலபத்மினீ கஞ்சுகீ அவுரி ஸிந்தூரி வட்டத் திருப்பி நாகபலை இவைகளின் சாற்றுடன் ரத்னங்களின் துருதிகள் சேர்த்து மேல் வெய்யிலும் கீழ் வராட்டி நெருப்பும் படும்படி வைத்து ஒஷதிகளின் சாறு சுண்டியவுடன் மறுபடியும் சாறு விட்டுக் கொண்டே வரவும். அப்பொழுது அத் துருதிகள் ரஸத்துடன் சேருகின்றன.

இந்துப்பு வேப்பிலை கார்போகரிசி இவைகளின் சாற்றால் அப்பிரகத் துருதி ரஸத்துடன் சேர்த்து பந்த மடைகின்றது.

இருபத்துநான்காவது உல்லாஸம்

மஹாரஸங்கள், உபரஸங்கள், லோஹங்கள் இவைகளால் ரஸபந்தம்.

வைக்ராந்தபந்த முறைகள் : வைக்ராந்தம் ஒரு பங்கு, ரஸம் எட்டு பங்கு, தங்கம் ஏழு பங்கு, த்விபதியின் சாறு, வெங்காரம் இவைகளைச் சேர்த்து நஷ்டபிஷ்டமாகும் வரை அரைத்துக் காய்ந்ததும் மூஷையிலிட்டு ஊதிக் கோடமானவுடன் ஸௌவீரம், காசலவணம், வெங்காரம் இவைகளைச் சேர்த்து ஊதிச் சுத்தி செய்து ஸமனெடை தங்கத்தில் ஸமாவர்த்தனம் செய்து மூகமூஷையிலிட்டு ஸமனெடை ரஸத்தில் ஜாரணம் செய்யவும். மறுபடியும் அந்த ரஸத்தில் தசஸங்கலிகா முறையில் வீசம் பங்கு வைக்கராந்தத்தைச் சேர்க்க ஒவ்வொரு முறைக்கும் வேத சக்தி பத்து மடங்கு அதிகமாகும்.

வைக்கராந்தஸத்வத்தை ரஸத்துடன் சேர்த்து ஸமனெடை தங்கம் ஜாரணம் செய்து கற்பனையிலிட்டு பூமியில் ஒரு மாதம் புதைத்து வைக்க ரஸம் கட்டும்.

வைக்ராந்தத்தை திரிபலை கீழ்க்காய் நெல்லி அகத்தி இலைச்சாற்றாலும் வகைக்கு ஏழு நாள் வேகவைத்தது அரைத்து அந்த மூஷையிலிட்டு ஊதக் கோடமாகும்.

வைக்கராந்தம், வெள்ளி, தங்கம், ரஸம் இவைகளை ஸமனெடை, தாம்ரம் மூன்றில் ஒரு பங்கும் சேர்த்து ஸ்ரோதோஞ்சனத்துடன் சேர்த்து ஊதக் கோடமாகி தேக லோஹ வேதங்களில் உபயோகிக்கப்படுகின்றது.

வெள்ளை வைக்ராந்தத்தூளை குதிரை மூத்திரத்தினால் அரைத்து வேகவைத்து நூறு பலம் வெள்ளியில் சேர்த்துப் புடமிட பஸ்மமாகும். அப்பஸ்மத்தை ஸமனெடை ரஸத்தில்

சேர்த்துக் குதிரை மூத்திரத்தில் அரைத்து அந்த மூஷையில் கிரமமாக இளந்தீயில் இரண்டு மூன்று நாள் எரித்து ரஸம் நெருப்பிற்கு ஓடாது நின்றதும் எடுக்கவும். இது வெள்ளி யாக்குவதில் உபயோகப்படுகின்றது.

சிவப்பு வைக்ராந்தத்தூளை கண்டங்கத்திரிக் கிழங்கின் சாற்றால் அரைத்து ஸமனெடை தங்கமும் சுத்த ரஸமும் சேர்த்துப் பஸ்மமாக்கவும். அதை நூறு பங்கு தங்கத்துடன் சேர்க்கத் தங்கமாகும். அதை ரஸத்தில் சேர்த்து அந்த மூஷையில் முன் முறைப்படி எரித்தெடுக்க ஸபர்ச வேதியாகும்.

சிகப்பு வைக்ராந்த ஸத்வத்தை ஸமனெடை தங்கத்துடன் சேர்த்து தங்கத்தின் ஜாரணம் செய்து ஸாரணம் செய்ய லோஹஸஹஸ்ரவேதியாகும்.

கருவை:க்ராந்தம் ஒரு பங்கு, ரஸம் நூறு பங்கு சேர்த்தரைக்கச் சூர்ணமாகும். அச் சூர்ணம் ஒரு பங்கு தங்கம் ஆயிரம் பங்கு சேர்த்தரைத்துப் பஸ்மமாக்கி அந்த மூஷையில் ஊதி கோடமானவுடன் ஸமனெடை ரஸத்தில் கிராஸம் கொடுத்து பிஷ்டியாக்க அது ஸ்பர்சவேதியாகும். அதன் சூர்ணம் அப்பிரகமும் ரஸத்துடன் சேர்த்து அரைக்கப்பட்டு ஸ்வேதனமும் ஜாரணமும் செய்யப்பட நெருப்பிற்கு ஓடாமல் கட்டும்.

இவ்விதமே மஞ்சள் நிறமுள்ள (பீத) வைக்ராந் தத்திற்கும் பந்தம் செய்யும் குணமும் உண்டு. பீதவைக்ராந்த சூர்ணத்துடன் தங்கமும் பீதாப்பிரகமும் சேர்த்து ரஸத்துடன் கலந்து வேக வைத்து அரைக்க ஒரு மாதத்தில் ரஸம் கட்டும்.

நீல வைக்கராந்தத்துடன் ரஸத்தையும் கிருஷ்ணாப் பிரகத்தையும் சேர்த்துப் பஸ்மமாக்கி தேன் நெய் சேர்த்து ஒரு

மண்டலம் சாப்பிட நீண்ட ஆயுள் பெறலாம். மற்ற ரஸங்களையும் இவ்விதமே சாப்பிட நல்ல ரஸாயன மாகின்றன.

காந்தபந்த முறைகள் : அரக்கு நீர் போன்று சிவந்த காந்தத்தை ரஸத்துடன் சேர்த்து ஆட்டு ரத்தத்தால் அரைத்துக் காய்ந்ததும் தணலிலிட்டு உதக் கோடமாகும். அது சதவேதியாகும். தங்கநிறமுள்ள காந்தத்தை இம்முறையில் கோடமாக்க ஸ்பர்சவேதியாகும்.

சபலபந்த முறைகள் : கலப்பைக்கிழங்கு, அரளி, கொடிவேலி, வெள்ளைப் பூவுள்ள விஷ்ணுக்கிராந்தி, ஸ்தன்யம், வெங்காரம், ஸௌவீரம் இவைகளை அரைத்து அந்த மூஷையினுள் தடவி அதில் சபலம் ஒரு பங்கும், ரஸம் இரண்டு பங்கும், தங்கம் நான்கு பங்கும் சேர்த்தரைத்த பிஷ்டியை வைத்து நெருப்பிலிட்டு ஊதக் கோடமாகும். அது நூறு பங்கு காரீயத்தை வேதம் செய்யும். காரீயத்தால் நூறு பங்கு தாமிரமும், அத்தாமிரத்தால் நூறு பங்கு வெள்ளியும், வெள்ளியால் தங்கமும் வேதமடையும்.

சபலம் ஆறு பங்கு, வெள்ளி ஏழு பங்கு, தங்கம் எட்டு பங்கு, ரஸம் ஒன்பது பங்கு இவைகளை கொடி வேலி, அரளி, கலப்பைக்கிழங்கு, கழுகின் மலம் இவைகளை புளிப்பு மாதுளைச்சாற்றால் அரைத்துப் பூசப்பட்ட மூஷையில் வைத்து நெருப்பிலிட்டு ஊத கோடமாகும். இவைகளால் கிரமமாக காரீயம் தாம்ரம் வெள்ளி தங்கம் இவைகளை முன் முறைப்படி வேதம் செய்யலாம்.

சபலம் ஒரு பங்கு, ரஸம் அரைப் பங்கு, தங்கம் கால் பங்கு இவைகளை மனோசிலை சேர்த்து அரைத்து, கொடி வேலி முதலியவை அரைத்துப் பூசிய மூஷையிலிட்டுத் தணலில் ஊதக் கோடமாகும். இது வேதம் செய்யும் சக்தி உள்ளது.

நன்கு காய்ச்சிய இருப்புப் பாத்திரத்தில் சபலத்தைப் போட்டு அதில் பீஜஜாரணம் செய்த ரஸத்தைப் போட அரக்கைப் போல் ரஸம் கட்டுகின்றது.

கந்தகபந்தம் முறைகள் : ரஸம் ஒரு பலம், கந்தகம் ஒரு பலம் இதை ஊமத்தைச்சாற்றால் அரைத்து சக்கிரயந்திரத்தில் புடம் போட பஸ்மமாகும். அதை அந்த மூஷையிலிட்டு ஊத கோடமாகும். வெள்ளி தங்கம் காரீயம் தாமிரம் இவைகளை வேதம் செய்ய வல்லது.

ரஸம் ஒரு பலம், கந்தகம் கால் பலம் இவைகளை தேவதாளிச் சாற்றால் அரைத்துப் பிஷ்டியானவுடன் எலுமிச்சம்பழச் சாற்றால் ஒரு நாள் அரைத்து பஞ்ச திராவகத்தால் அரைத்து மாத்திரைகளாகச் செய்து அதன் மேல் புரசு வேரை அரைத்துப் பூசவும். அம் மாத்திரைகளைத் தணலி லிட்டு காசலவணமும் செங்காரமும் சேர்த்து ஊதி சுத்தி செய்து கோடமாக்கவும். இதற்கு மூன்று பங்கு காரீயத்தை தாம்ரம் அப்பிரகம் வங்கம் இவைகளால் நூறு தடவை ரஞ்சனம் செய்து உபயோகிக்க வேதம் செய்யும்.

கந்தகத்தால் ரஸத்தை பஸ்மம் செய்து அதில் லோஹங்களை தங்கத்தையும் ஸமாவர்த்தனம் செய்து ஜாரணம் ஆனவுடன், தாம்ரம் வெள்ளி ஈயம் இவைகளால் ஸாரணம் செய்ய வெங்கலத்தை வேதம் செய்யும்.

ரஸமும் கந்தகமும் தங்கமும் ஸமனெடை சேர்த்து வெங்காரத்துடன் பிஷ்டி செய்து த்விபதீ (ஸ்திரீ?) ரஜஸ்ஸினால் அரைத்து கோடமாக்கி வெள்ளியையும் தாம்ரத்தையும் வேதம் செய்யலாம். ஸங்கலிகை முறைப்படி ஸம்ஸ்காரங்கள் செய்ய வேத சக்தி அதிகமாகும். அதை முறைப்படி பஸ்மம் செய்ய வியாதிகளைப் போக்குவதில் நிகரற்றதாகும்.

கந்தகத்தைத் தூள் செய்து பூனைக்காலிச்சாற்றில் நூறு தடவை ரஸத்துடன் சேர்த்துப் பாவனை செய்யப் பிஷ்டியாகும். பிறகு ரஸத்தைப் பாதனயந்திரத்திலிட்டுப் பிரித்துத் திலபர்ணிச் சாற்றால் ஏழு தடவை பாவனை செய்த கந்தகத்துடன் பிஷ்டி செய்து பிரித்தெடுக்கவும். இவ்விதம் கந்தகத்தை ஊமத்தை இலைச்சாறு, மனிதனின் பித்தம், கடலைப்புளிப்பு, ஸ்திரீயின் ரஜஸ் இவைகளால் தனித்தனியே ஏழு தடவை பாவனை செய்து ரஸத்துடன் சேர்த்துத் தனித்தனியே பிஷ்டி செய்து வாலுகாயந்திரத்திலிட்டு ஜாரணம் செய்யலாம். இந்த கந்தகபிஷ்டியை பேய்ச்சுரை விதையையும் சாண்டாளிக் கிழங்கையும் ஸ்தன்யத்தில் அரைத்து எடுத்து கல்கத்தால் பூசி பூதரயந்திரத்தில் புடமிட ஸ்தம்பனமடையும். அதை தங்கச்சம்புடத்தில் ஸமாவர்தனம் செய்து காரீயத்தையும் வெள்ளியையும் வேதம் செய்யலாம்.

கந்தகபிஷ்டி ஒரு பலமும், நாகபிஷ்டி எட்டு பலமும் சேர்த்தரைத்துக் காரீயத்தகட்டில் தடவி நிழலிலுலர்த்தி ஆடாதொடைக் கல்கத்தால் பூசி வராட்டியில் மூன்று புடமிட ஸிந்தூரமாகும். அத்துடன் எட்டு பங்கு தாம்ரம் சேர்த்து ஆடாதொடை இலைச்சாற்றால் ஒரு யாமம் அரைத்துப் பாதனாயந்திரத்திலிட்டுப் புடமிட தாம்ரம் பஸ்மமாகும். அதனால் வெள்ளியை வேதம் செய்யத் தங்கமாகும்.

கந்தகத்தையும் ரஸத்தையும் தேன் விட்டரைத்துப் பிஷ்டியாக்கிப் பூமியில் ஒரு மாதம் வைத்தெடுக்க வேத சக்தி ஏற்படும். அதை மேல் பூசிக்கொள்ள குஷ்டங்கள் விலகும்.

தாளகந்த முறைகள்

ரஸமும் தாளகமும் ஸமனெடை சேர்த்து ஊமத்தைச் சாற்றிலரைத்துச் சக்கிரயந்திரத்தில் புடமிட பஸ்மமாகும். அதை அந்த மூஷையில் கோடமாக்க ஈயம் தாமிரம் வெள்ளி இவைகளை முறையே வேதம் செய்யும்.

ரஸம் ஈயம் தாளகம் இவைகளை ஊமத்தைச் சாற்றில் அரைத்து பாதனாயந்திரத்தில் கோடமாக்கிக் கொள்ளலாம்.

வெள்ளை அப்பிரகஸத்வம், வெள்ளி, உருக்கு, ஸவர்ணமாக்ஷிகம் இவைகளை கோடமாக்கிச் சமனெடை ரஸமும் தாளகமும் சேர்த்து பாதனாயந்திரத்தில் கோடமாக்கலாம். இவை வேத சக்தி உள்ளவை.

லகுவான பந்த முறைகள்

ரஸமும் காரீயமும் வகைக்கு ஒரு பலமும், மனோசிலை இரண்டு பலமும் சேர்த்தரைத்து பாதனாயந்திரத்தில் கோடமாக்கிக் கொள்ளலாம்.

தங்கப்பிஷ்டியையும் கந்தகத்தையும் ஸமனெடை சேர்த்து ஊமத்தை இலைச்சாற்றால் அரைத்துத் கோடமாக்கிக் கொள்ளலாம்.

கிருஷ்ணாப்பிரகஸத்வம், காந்தம், உருக்கு, தங்கம், வெள்ளி, மாக்ஷிகம் இவை ஸமனெடை சேர்த்துக் கோடமாக்கி ஸமனெடை ரஸமும் இரண்டு பங்கு மனோசிலையும் சேர்த்துப் பாதனாயந்திரத்தில் கோடமாக்கிக் கொள்ளலாம்.

கிருஷ்ணாப்பிரகம், ரஸகம், ரஸம் இம்மூன்றையும் உமத்தையிலைச் சாற்றில் இரண்டு யாமம் அரைத்து வெங்காரம் சேர்த்து மாத்திரை உருட்டிக் கடுந்தீயில் இட்டு ஊததக் கோடமாகும். அதைக் காசலவணமும், வெங்காரமும் சேர்த்து சுத்தி செய்து தங்கத்துடன் ஸமாவர்த்தனம் செய்து மூன்று ஸாரணங்கள் செய்ய கோடி வேதியாகும்.

இரண்டு புரசம் விதைகளையும், ரசம் ஒரு பலத்தையும் எலுமிச்சம்பழச் சாற்றால் அரைத்து, நிழலில் உலர்த்தி பேய்ச்சுரை, சிறுகீரை முதலியவைகளை ஸ்தன்யத்தில் அரைத்து உள்பூசிய மூஷையிலிட்டுக் கருங்காலித் தணலில் எரிக்கக் கோடமாகும்.

ரஸத்தையும் தங்கத்தையம் அரைத்துப் பிஷ்டியாக்கி, புரசம்விதை, பருத்திக்கொட்டை, தான்றிக்காய், புளி, காட்டுப்பழுபாகல், கடுகு இவைகளை அரைத்துக் கவசமிட்டு ஏழு புடமிட பிஷ்டி ஸ்தம்பனம் ஏற்படும். பிறகு பெரிய புடமிட்டு மூஷையிலிட்டு ஊதி ஸமனெடை தங்கம் சேர்த்துக் கலக்கி எடுத்து உபயோகிக்க நூறு பங்கு வேதம் செய்யும். இம்மாதிரி மேன்மேலும் ஏழு தடவை தங்கம் சேர்த்து பிஷ்டி செய்து ஸ்தம்பனமானவுடன் ஸங்கலிகை முறையில் ஸாரணம் செய்ய கோடி வேதியாகும்.

சாண்டாலீ ராக்ஷஸீ இவ்வோஷதிகளின் புஷ்பச்சாற்றாலும் தேன் நெய் வெங்காரம் இவைகளாலும் மஹாரஸங்களில் ஒன்றுடன் ரஸத்தை அரைத்துச் சமனெடை ஈயமும் காரீயமுமோ, வெள்ளியும் தங்கமுமோ, அப்பிரகமும் அப்பிரகஸத்வமுமோ சேர்த்து இரண்டு யாமம் அரைத்து அந்த மூஷையில் லகுபுடமிடக் கோடமாகும்.

வாழைக்கிழங்கு, கோவை, கள்ளிப்பால், கஞ்சுகீ, புளி, தீனாரீ, பொன்னாங்கண்ணி, மணத்தக்காளி, விஷ்ணுக்கிராந்தி, வக்ராங்கா, சிற்றாமுட்டி, துளஸி, மஹாஸோமவல்லி, வெற்றிலை, ஸூர்யாவர்த்தம் இவைகள் ரஸத்தை கோடமாக்குவதில் சிறந்தவை.

ரஸத்தில் ஸமனெடை தங்கத்தை ஜாரணம் செய்து திவ்யௌஷதிகளின் சாற்றால் அரைத்துக் கோடமாக்கி ஏழு முறை ஸங்கலிகை செய்ய வேதசக்தி பெறும்.

ஸாரணம் செய்த ரஸத்துடன் பாதி அளவில் மஹாரஸங்களின் ஒன்றைச் சேர்த்து திவ்யௌஷதிகளின் சாற்றில் மூன்று யாமமரைத்த பின்னர் கோடமாகச் செய்தால் வேதம் செய்யும்.

ரஸத்தை ஸ்ரோதோஞ்சனத்துடன் சூலினி ஔஷதியின் சாற்றில் அரைத்து தங்கபிஷ்டியோ, வெள்ளிபிஷ்டியோ சேர்த்துக் கோடமாக்கலாம். இவ்விதம் தங்கம், வெள்ளி, தாம்ரம், உருக்கு இவைகளைத் தனித்தனியே ஸமனெடை அப்பிரகம் சேர்த்து ரஸத்துடன் அரைத்து பந்தனம் செய்த பின் மஹாரஸங்கள் சேர்த்து திவ்யௌஷதிகளின் சாற்றால் அரைத்துப் பிஷ்டி செய்து கோடமாக்கலாம். அல்லது தங்கம் வெள்ளி முதலிய லோஹங்களைத் தனியாகவோ, சேர்த்தோ ரஸத்துடன் பிஷ்டி செய்துக் கர்ப்பயந்திரத்தில் உமி நெருப்பில் புடமிட்டுப் பஸ்மமாக்கிப் பிறகு கோடமாக்கலாம். இவை ஸங்கலிகை முறையில் ஜாரணம் செய்ய வேதசக்தி பெறும்.

நிகலபந்த முறை:

புரசம் விதை குக்கில் இந்துப்பு இவைகளை எருக்கம் பாலாலும் கள்ளிப்பாலாலும் அரைத்து அதனால் வில்வப் பழ அளவு கெட்டியான மூஷை செய்து மேலும் கீழும் உப்பிட்டு நடுவில் ரஸத்தை வைத்து மேல் சுட்ட சங்கத் தூள் முதலியவைகளை வைத்து மூடி மேல் உப்பாலும் மண்ணாலும் சீலை செய்து நிழலிலுலர்த்த வேண்டும். இம்முறை நிகலபந்தம் எனக் கருதப்படும்.

இந்த பந்தமுறையில் உமிநெருப்பிலோ வராட்டி நெருப்பிலோ மூன்று நாள் மெதுவான ஸ்வேதம் செய்து பிறகு கருங்காலி நெருப்பில் ஊதக் கோடமாகும். ஸௌவீராஞ்சனம், வெங்காரம், காசலவணம் இவைகளால் கோடத்தைச் சுத்தி செய்து தங்கத்துடன் சேர்க்க அளவு குன்றாமல் இருக்கும். அதை ஸமனெடை ரஸத்தில் ஜாரணம் செய்து மறுபடியும் கோடமாக்கி ஸங்கிலிகை முறையை அனுஷ்டிக்கவும்.

அப்பிரகத்தூள் இந்துப்பு மண்டூரம் மாக்ஷிகம் மணல் மண் இவைகளைக் கள்ளிப்பாலாலும் எருக்கம்பாலும்

அரைத்து முன் முறையில் மூஷை செய்யலாம். இதில் ரஸம் நெருப்பிற்கு ஓடாமல் கட்டுப்பட்டு நிற்கும்.

தேத்தான்கொட்டை, கலப்பைக்கிழங்கு இவைகளை நல்லெண்ணெய்யாலும் எருக்கம்பாலாலும் அரைத்து மூஷை செய்வதும் நிகல பந்தத்திற்குகந்ததே. இம்மாதிரி காக்கைமலம், புரசம்விதை, கலப்பைக்கிழங்கு இவைகளைச் சேர்த்தோ, கார்போகரிசி புரசம்விதை நண்டு எலும்பு, உப்பு, சாம்பரஉப்பு இவைகளைச் சேர்த்தோ, எட்டுவித உப்புகள், புரசம் விதை, ஊமத்தை விதை இவைகளை எருக்கம்பாலிலும் கள்ளிப் பாலிலும் அரைத்தோ, காவுஜபான்வேர், ஸ்திரீயின் ரஜஸ், புரசம் விதை, கார்போகரிசி, இந்துப்பு, பீர்க்கு, காக்கைமலம் இவைகளை கள்ளிப் பாலில் அரைத்தோ, உப்பு, வெங்காரம், மனோசிலை, தாளகம், கந்தகம், புளிவஞ்சி, மாக்ஷிகம், லிங்கம் இவைகளை கள்ளிப்பாலாலும் எருக்கம்பாலாலும் அரைத்தோ மூஷை தயார் செய்யலாம். இம்முறைகள் நிகலபந்தத்திற்கேற்றவை.

இவ்வித நிகலபந்த முறைகளால் பிஷ்டியை மூடி லவணகர்பதயந்திரத்திலிட்டுக் கோடமாக்கலாம். அல்லது ஸ்திரீயின் ரஜஸ்ஸாலும் மூத்திரத்தாலும் இந்துப்பு அப்பிரகம் குக்கில் இவைகளை அரைத்து பிஷ்டியைக் கவசம் செய்து மேல் எட்டு தடவை மண்ணால் கவசம் செய்து பூமிக்குள் வைத்து உமிநெருப்பாலோ வராட்டி நொருப்பாலோ மெதுவாக ஸ்வேதம் மூன்று நாள் செய்யக்கோடமாகும். அல்லது கார்போகரிசி, புரசம் விதை, அப்பிரகம், நிமிளை, இந்துப்பு, ஸுவர்சலை உப்பு, வெங்காரம், குக்கில் இவைகளை ஸ்திரீயின் ரஜஸ்ஸினாலும் மூத்திரத்தாலும் அரைத்துப் பிஷ்டிக்குக் கவசம் செய்து கோடமாக்கலாம்.

பந்தமடைந்ததின் லக்ஷணம்: அளவு குன்றாமையும் சிறிது உருகுவதும் நல்ல பிரகாசமும், அழுக்கின்மையும் அதிககனமும், அடித்தால் வெடிக்கும் தன்மையும்

பந்தமடைந்ததற்கு அறிகுறியாகும்.

ஜலூகாபந்தம்

இப்பந்தமுறையில் சிறிது இளகிஅட்டை போன்று வளைந்து கொள்ளும் தன்மையில் பந்தம் ஏற்படுகின்றது.

மர்தன ஜலூகை: ரஸத்திற்கு அரைக்கால் பங்கு தங்கமோ காரீயமோ சேர்த்து பழுத்த நருவிளிப்பழமும், நீர்முள்ளி விதையும் எள்ளுப் புண்ணாக்கும் சேர்த்துத் தப்த கல்வத்திலிட்டு காரிலவலம் பஞ்சாங்கத்தின் சாற்றால் அட்டைபோல் ஆகும் வரை அரைத்து அதில் கூடம் கார்போகரிசி, இந்துப்பு, வெங்காரம், திப்பிலி, பூனைக்காலியின் ரோமம் இவைகளை ஜலத்தில் அரைத்து ஜலுகையின் (அட்டைபோலான மருந்தில்) சேர்த்து இருபத்தோரு நாள் அரைக்க மர்தன ஜலூகை என்ற பந்தம் தயாராகின்றது.

மன்மத ஜலூகை: ரஸத்தின் அரைக்கால் பங்கு தங்கமோ காரீயமோ சேர்த்து காரிலவிலை, மெருகின்கிழங்கு, அவுரிவேர், ஆத்திஇலை இவைகளின் சாற்றால் தப்த கல்வத்திலிட்டு அரைத்து நருவிளிப்பழமும் நீர்முள்ளி விதையும் வில்வப்பழச்சத்தும் சேர்த்து ஜலூகை ஆகும் வரை அரைத்து கற்பூரம் முதலியவை முன் யோகம் போல் சேர்க்கவும்.

கந்தர்பஜலூகை: ரஸம், காரீயம், தங்கம் இவைகளை முன் போலச் சேர்த்து சுக்கு, கையாந்தகரை, திரிபலை, தேன், ஆட்டுப்பால், நெய், பசுவின் மூத்திரம் இவைகளால் அரைத்து முன்போல் கற்பூரம் முதலியவைகளுடன் ஜலூகை தயார் செய்யவும்.

மதனஜலூகை: ரஸம் நான்கு நிஷ்கமும் மாம்பிசின்

மூன்று பலமும் சேர்த்து பெரிய வன்னி மரத்தின் பாலால் நன்கு அரைத்து ஜலூகை செய்யவும்.

இந்த ஜலூகாபந்தமுறைகள் ஸ்திரீகளின் யோனித் திராவணத்திற்கு ருது காலத்தில் தரித்துக்கொள்ள அவர்களுக்கு போக இச்சை அதிகமாக்குவதற்கும் புருஷர்களுக்கு வீரியஸ்தம்பத்திற்கும் உபயோகப்படுத்தக் கூடியது.

இருபத்தைந்தாவது உல்லாஸம்

பரிபாஷைச் சொற்களின் விரிவுரை

தன்வந்தரிபாகம் : ஸித்தமான ரஸத்தில் பாதியும், தங்க பஸ்மத்தில் மூன்றில் ஒரு பங்கும்,வெள்ளி பஸ்மத்தில் கால் பங்கும், தாம்ரபஸ்மத்தில் ஆறில் ஒரு பங்கும் காந்தமும் அப்பிரகமும் அரைக்கால் பங்கும், நவரத்னங்களின் பஸ்மம் வீசம் பங்கும், ரஸேசுவரனை நினைத்து வைத்தியனிடம் அளிக்கவேண்டியது.

கஜ்ஜலீ பங்க ரஸம் : ரஸத்தை கந்தகம் முதலிய தாதுப் பொருள்களுடன் திரவம் சேர்க்காமல் மென்மையாக மை போன்று அரைத்ததற்கு கஜ்ஜலி எனவும், திரவம் சேர்த்து அரைத்ததற்கு பங்கரஸம் (ரஸபங்கம்) எனவும் பெயர்.

பிஷ்டீ: ஒரு பலத்தின் பன்னிரண்டில் ஒரு பங்கு ரஸத்தில் அரைநிஷ்கம் கந்தகம் சேர்த்து கடும் வெய்யிலில் கல்வத்திலிட்டரைக்கப் பிஷ்டியாகின்றது. அதையே பாலுடன் சேர்த்தரைப்பதும் ஒரு வித பிஷ்டியாகும்.

பாதனபிஷ்டீ: ரஸத்தில் கால் பங்கு தங்கம் சேர்த்து அரைத்துப் பிஷ்டி செய்தல் பாதன பிஷ்டி எனப்படும்.

ஹேமகிருஷ்டீ, தாரகிருஷ்டீ : தங்கத்தையோ வெள்ளியையோ ரஸகந்தகங்களைச் சேர்த்துப் பல தடவை பஸ்மம் (மடிக்கச்) செய்து மறுபடியும் திரும்பவும் உத்தாபனம்

செய்து பஸ்மம் செய்யப்பட்டது ஹேமகிருஷ்டி தாரகிருஷ்டி எனக் கருதப்படும். ஹேமகிருஷ்டியை தங்கத்துடன் சேர்க்க தங்கத்தின் நிறம் குன்றாது. ஸவர்ண (ஹேமம) கிருஷ்டியால் செய்த பீஜம் ரஸத்திற்கு ரஞ்சனம் செய்கின்றது.

வரலோஹம் : தாம்ரத்தையும் உருக்கையும் உருக்கிக் கந்தகம் சேர்த்த எலுமிச்சம்பழம் சாற்றில் 21 தடவை சுருக்குக் கொடுக்க வரலோஹமாகின்றது.

ஹேமரக்தீ - தாரரக்தீ : வரலோஹத்தால் ரஞ்சனம் செய்யப்பட்ட தங்கம் ஹேமரக்தி எனவும் அவ்வாறு செய்த வெள்ளி தராரக்தி எனவும் கூறப்படுகின்றது. இந்த ரக்திகளை உருக்கிய வெள்ளியிலும் தங்கத்திலும் சேர்க்க அவைகளின் நிறத்தை (மாற்றை) அதிகப்படுத்துகின்றன. பீஜத்திற்கும் ரஞ்சனம் அளிக்கின்றன.

தலம் *(சந்திராநலதலம்)* : ரஸபஸ்மத்தாலோ, பந்தமடைந்த ரஸத்தாலோ செய்யப்பட்ட மற்ற லோஹங்களை தலம் எனக்கூறுவர். வெளுத்தது சந்திரதலம் எனவும் மஞ்சளாகியது அனலதனம் எனவும் கருதப்படுகின்றது.

அயோநாகம் : காந்தலோஹத்தை மாக்ஷிகத்தால் ஏழு தடவை பஸ்மமாக்கி உத்தாபனம் செய்து அப்பஸ்மம் இரண்டு பலமும் தாம்ரபஸ்மம் இரண்டு பலமும் சேர்த்து மூஷையிலிட்டு ஏழுநாள் ஊத தேஹலோஹ வேதஸித்தி அளிக்கும் அயநாகம் ஆகின்றது. அதை ரஸத்துடன் சேர்த்து ஸாரணாயந்திரத்தில் குளிகையாகச் செய்து வாயிலடக்கிக் கொள்ளப் பற்களுக்கும் பலமளிக்கவல்லது.

கல்பநாகம் : தாம்ரத்தை மாக்ஷிகத்தால் பத்து தடவை பஸ்மமும் உத்தாபனமும் செய்து அத்தாமிரமும் அதற்குச்சமம் காரீயமும் சேர்த்து நீலாஞ்சனம் சேர்த்து ஏழு தடவை புடமிட்டுப் பஸ்மமாக்கி உத்தாபனம் செய்து ஸித்தமானது

சுல்பநாகம் எனப்பெயர். இதனால் தயாரித்த ரஸம் மேஹரோகங்களை நிவர்த்தி செய்து நரைதிரையைப் போக்குகின்றது.

பிஞ்சரீ: வேறொரு லோஹத்துடன் சேர்த்த லோஹத்தை உருக்கி, உருக்கி வெளுத்த மஞ்சள் நிறமடையும் வரை திரவத்தில் காய்ச்ச பிஞ்சரி எனப்படும்.

சத்திரார்கம் : வெள்ளி பதினாறு பங்கும் தாம்ரம் பன்னிரண்டு பங்கும் சேர்த்து ஒன்றாக உருக்கியதற்கு சந்திரார்க்கம் எனப் பெயர்.

நிர்வாப(ஹ)ணம் : பீஜம் செய்த் தயாரித்து (ஸாத்ய) லோஹத்தில் வேற லோஹத்தை வங்க நால (நுனி வளைந்த ஊது குழாய்)த்தால் நெருப்பை அதிகப்படுத்திச் சேர்ப்பதற்கு நிர்வாபணம் - அல்லது நிர்வாஹணம் எனப் பெயர். பீஜலோஹத்தில் சேர்க்கப்படும் லோஹத்தின் அளவு குறிக்கப்படாமலிருந்தால் ஸமமாகச் சேர்க்கவும்.

லோஹபஸ்மத்தின் லக்ஷணம் : ஜலத்தில் மிதந்தும் கைரேகைகளில் பதிந்தும் உள் பஸ்மம் வாரிதரம் எனவும், ரேகாபூர்ணம் எனவும் கூறுப்படுகின்றது. வெல்லம், குந்துமணி, காஞ்சூரி, தேன், நெய் ஆகிய உத்தாபன திரவியங்களுடன் சேர்த்துத் தணலில் வைத்து ஊதப்பட்ட லோஹபஸ்மம் திரும்ப லோஹமாக மாறாமலிருப்பதற்கு அபுனர்பவம், நிருத்தம் எனப் பெயர். வெள்ளிபஸ்மத்துடன் தாம்ரத்தைச் சேர்த்து உருக்க பஸ்மஎடை குறையாமலும் தாம்ர எடை அதிகமாகாமலுமிருந்தால் அபுனர்பவம் எனக் கூறலாம்.

பீஜம்-உத்தரணம் : நிர்வாஹயம் செய்யும் பொழுது ஸாத்யலோஹத்தின் நிறத்தை மற்ற லோஹமடைந்தவுடன் பீஜம் எனக் கருதப்படுகின்றது. இரண்டு லோஹங்களில் ஒரு லோஹம் மறைவதற்கு உத்தரணம் எனப் பெயர்.

தாடனம்: வங்கநாலத்தால் ஓரிடத்தில் நெருப்பின் தாபத்தை அதிகமாக ஏற்படுத்துவதற்குத் தாடனம் எனப் பெயர்.

தான்யாப்பிரகம் : அப்பிரகத்தைத்தூள் செய்து நெல் சேர்த்து துணியில் முடிந்து காடியில் பிசையப் பாத்திரத்தின் கீழ் படியும் அப்பிரகத்தூள் தான்யாப்பிரகம் எனப்படும்.

ஸத்வம் : தாதுப் பொருள்களுடன் க்ஷாரம் புளிப்புகள், திராவகங்கள் சேர்த்துப் பெரிய அடுப்புகளில் துருத்திகளால் ஊதி எடுக்கப்படும் ஸாரப்பொருளை ஸத்வம் என்பர்.

ஏககோலீஸகம் : கோஷ்டிகளில் வைத்துள்ள மூஷையின் கழுத்து வரை கரியை நிரப்பித் துருத்தியால் ஊதுவது ஏககோலீஸகமாகும். திராவணத்திலும் ஸத்வபாதனத்திலும் இலுப்பைக்கரியும் கருங்காலிக் கரியும், ஸ்வேதனம் செய்ய இலந்தைக் கரியும் உயர்ந்தவை.

ஹிங்குலாகிருஷ்டரஸம்: வித்யாதரயந்திரத்தின் மூலம் இஞ்சிச் சாற்றில் அரைத்த லிங்கத்தினின்றும் எடுக்கப்பட்ட ரஸம் இப்பெயர் கொண்டது.

கோஷாகிருஷ்டம் : இப்பெயர் வெங்கலத்தில் சிறிதளவு தாளம் சேர்த்து வங்கநாலத்தால் ஊதுவதில் ஈயம் பிரிந்த பின்னர் மீதி உள்ள தாம்ரத்திற்கு ஏற்பட்டுள்ளது.

குஹ்யநாகம் : இருபது பலமுள்ள சுத்தி செய்த காரீயத்தின் மேல் எருக்கம்பாலால் அரைத்த மனோசிலையைப் பூசி வில்லைத் தட்டி சராவத்திலிட்டுக் குக்குடபுடமிட பஸ்மமாகும். பிறகு உத்தாபனவர்கத்துடன் மூஷையிலிட்டு உருக்கிக் காரீயமானவுடன் ஒருபலம் ரஸமும் மனோசிலையும் சேர்த்து எருக்கம் பாலில் அரைத்துக் கஜபுடமிடவும். இவ்விதம் 20 தடவை உத்தாபனமும் கஜபுடமுமிட கால் பல அளவு மீதமாகும். இது குஹ்யநாகமாகும்.

வரநாகம்: எஃகை நீலாஞ்சனம் சேர்த்து அனேக தடவை உருக்கப்பட்டதும் மெதுவானதுமாதற்கு வரநாகம் எனப் பெயர்.

உத்தாபனம்: பஸ்மமான (மடிக்கப்பட்ட) லோஹத்திற்கு மறுபடியும் லோஹ உருவை அளிப்பது இந்த முறையாகும்.

டாலனம் : உருக்கிய லோஹம் முதலியவைகளை திரவத்தில் சாய்ப்பது டாலனமாகும்.

சபலம்: முப்பது பலமுள்ள காரீயத்தை எருக்கம் பாலால் அரைத்துக் கால் பலஅளவு மீதமாகும் வரை புடமிட்டுக் கொண்டே சபலமாகும். இவ்விதம் ஈயத்தினின்றும் சபலம் தயாரிக்கலாம். இது தாதுவாதத்தில் ரஸக் கட்டில் மிகச் சிறந்தது.

பிராமக காந்தத்தின் தூளை பலத்தில் ஐந்தில் ஒரு பங்கு எடுத்து கற்றாழை வேர் ஜலத்தாலும் புளியாரைச் சாற்றாலும் வகைக்கு ஒரு நாள் அரைத்துக் கொள்ளவும். இவ்விதமே பூநாகதௌதத்தையும் செய்து கொள்ளவும். பிறகு அத்துடன் ஒரு பலம் காரீயமும் ஒருபலம் ஈயமும் எட்டு நிஷ்க அளவு ரஸமும் சேர்த்து நன்கு அரைக்கவும். அத்துடன் ரஸமும் ரஸகஸத்வமும் வீசம் பல அளவு சேர்த்தரைத்து முன் கல்கத்துடன் சேர்க்கவும். பிறகு சூடான காடியினால லம்பிவிடவும். துத்தம் அரைப்பல அளவும், ரஸம் 8 குந்துமணி எடையும் சேர்த்து வஜ்ர மூஷையிலிட்டு மூடி ஒன்பது வராட்டிகளில் துருத்தியினால் ஊதி மூஷையிலுள்ள ஸத்வத்தை எடுத்துத் திறந்த மூஷையில் வங்கநாலத்தால் சுத்தி செய்யவும். அப்பஸ்மம் 5/8பல அளவு எடுத்து அதன் மேல் சாம்பலையும் உப்பையும் காடியினால் அரைத்துப் பூசிப்புடமிட 3/8பங்கு பலமாகும் அப்பஸ்மத்தால் எண்பது மடங்கு காரீயத்தை நிர்வஹணம் செய்ய ரஸம் கட்டுப்படும். இதற்குச்சபலம் எனப்பெயர். பிறகு பாகல்வேர் சூர்ணத்துடன்

பத்துப் புடமிட காரீயம் பிரிந்து விடும். பிறகு எந்த கிராஸத்தையும் கிரகிக்கும் சக்தி பெறும்.

பூநாகதௌதம் : மண்ணுண்ணிப் பாம்பின் மலத்தை ஜலத்தினால் அலம்பி எடுத்த கருநிறமுள்ள ஸத்வத்திற்கு இப்பெயர் ஏற்பட்டது.

துவந்துவானம் : இரண்டு திரவ்யங்களை ஒன்று சேர்த்து ஊதி உருக்குவது துவந்துவானமாகும்.

பஞ்சனீ : மாற்றைக் குறைக்குமளவில் வேதசக்திக்கு மீறி லோஹங்களைச் சேர்த்தல் பஞ்சனியாகும்.

சுல்லிகா : பதங்கிச் சாயத்தினால் வெள்ளியிலோ லோஹத்திலோ ஏற்படும் கல்லிகா என்ற தங்கச்சாயம் வெகு நாட்கள் நிற்காது.

பதங்கீராகம் : லோஹ ரஞ்சனம் செய்த பின்னர் மிகுதியான சாயம் (ரஞ்சனம்) வெகு நாட்கள் லோஹத்துடன் சேர்த்து இருந்தால் அதற்கு பதங்கீராகம் எனப் பெயர்.

ஆவாபம் : உருகிய லோஹத்தில் மற்ற திரவ்யங்களைப் போடுவது ஆவாபமாகும். பிரதீவாபம் ஆச்சாதனம் என்று மாற்றுப் பெயர்களும் உண்டு.

அபிஷேகம் - நிர்வாபம் : நெருப்பிலுள்ள உருகிய லோஹத்தில் திரவத்தை ஊற்றுவது அபிஷேக மெனவும். உருகிய லோஹத்தை திரவத்தில் சாய்ப்பது நிர்வாபம் எனவும் கருதப்படுகின்றது.

பாககால லக்ஷணங்கள்: தாதுக்களிலிருந்து ஸத்வம் எடுக்கும் பொழுது நெருப்பு நன்கு சுடருடன் பிரகாசித்தும் வெண்மையான புகை வெளிவந்துமிருப்பது ஸத்வம் வெளிவருவதற்கு அறிகுறியாகும். இதற்குச் சகூத்தாவர்த்தம் எனப் பெயர். திரவ்யங்களை உருக்கும் பொழுது உருகும் திரவ்யத்தின் நிறத்துடன் ஜ்வாலை வந்தால் உருக ஆரம்பித்து

விட்டதற்கு அது அறிகுறியாகும். அதற்கு பீஜாவர்த்தம் எனப்பெயர்.

ஸ்வாங்கசீதம் - அக்னிசீதம் : அடுப்பை அணைக்காமலே தானாக ஆறியதற்கு ஸ்வாங்சீதம் எனப் பெயர். நெருப்பிலிருந்து விலக்கி எடுத்துக் குளிர்ந்ததற்கு அக்னி (பஹிச்) சீதம் எனப் பெயர்.

ஸ்வேதனம் : க்ஷாரங்களை அம்லவர்கத்தையும் ஓஷதிகளையும் சேர்த்து தோலாயந்திரத்திலிட்டு வேகவைத்து அழுக்குகளை நெகிழவைப்பதற்கு ஸ்வேதனம் எனப் பெயர்.

மர்தனம் : இது ஸ்வேதனத்திற்குள்ள மருந்துகளுடன் காடி சேர்த்தரைப்பது. வெளி அழுக்குகளைப் போக்க வல்லது.

மூர்ச்சனம் : இது இவ்வௌஷதங்களாலேயே அதன் ஸ்வரூபம் மறையும் வரை அரைத்துப் பிஷ்டி செய்வதாகும். இது நஷ்ட பிஷ்டி என்றும் கூறப்படுகிறது. ஜல-பூமி-கிரி-கஞ்சுக தோஷங்களைப் போக்கவல்லது.

உத்தாபனம் : இது நஷ்ட பிஷ்டமாகச் செய்ததை ஸ்வேதத்தாலும் தாபத்தாலும் மறுபடியும் அதனுருவத்திற்கு திருப்பிக் கொணருவதாகும்.

பாதனம் : முன்கூறிய ஓஷதிகளால் நன்கரைக்கப்பட்ட ரஸத்தையே பாதனயந்திரத்திலிட்டு மேலோ, கீழோ, குறக்கிலோ ரஸமாகப் பிரித்துக் கொணர்வது பாதனமாகும். இது லோஹச் சேர்க்கையைப் பிரிக்க வல்லது.

ரோதனம் : இது ஜலத்தில் ரஸத்தை உப்பு சேர்த்து மூன்று தினம் வைப்பதாகும். இது ரஸத்திற்கு பலமளிக்கும்.

நியமனம் : பலமடைந்த ரஸத்தின் சஞ்சலத் தன்மையை நீக்க பானையிலிட்டு வேகவைப்பது நியமனமாகும்.

தீபனம் : கிராஸம் கொடுப்பதை ஜீர்ணிக்கத் தீபன சக்தி ஏற்படுத்த மூன்று தினம் தாதுக்களுடனும் வேர்களுடனும் ஸ்வேதனம் செய்வது தீபனமாகும்.

சாரணம்-ஜாரணம்-கர்பத்துருதி-பாஹ்யத்துருதி : கிராஸத்தை சாரணம் செய்வதும் அது ரஸத்தில் துருதி அடைவதும் ஜீர்ணமாவதுமாக மூன்று நிலைகளும் ஜாரணமாகும். கிராஸம், பிண்டம், பரிணாமம் என்று இம்மூன்று நிலைகளுக்கு மாற்றுப் பெயரும் உண்டு. ஸமுகம் நிர்முகம் என ஜாரணம் இருவகைப் படும். சுத்தமான தங்கம் அல்லது வெள்ளியை பீஜமென்பர். ரஸத்தில் கால் வீசம் பங்கு பீஜத்தைக் கொடுப்பது ரஸத்திற்கு முகத்தை ஏற்படுத்தும். முகமடைந்து ரஸம் கடினமான லோஹங்களையும் ஜாரணம் செய்யும். இது ஸமுக ஜாரணம். திவ்யௌஷதிகளின் சேர்க்கையால் பீஜம் இல்லாமலே ஜாரணம் செய்வது நிர்முக ஜாரணமாகும்.

பிடம் : க்ஷாரங்கள், அம்லவர்கம், கந்தகம் முதலியதாதுப் பொருள்கள், மூத்திரவர்கம், உப்புகள் இவைகளால் ரஸத்திற்கு ஜீர்ணசக்தி அளிப்பதற்கு தயார் செய்யப்பட்டது பிடமாகும்.

ரஞ்சனம் : ரஸத்தில் ஸித்தமான பீஜம் தாதுக்கள் முதலியவைகளை ஜாரணம் செய்வதால் மஞ்சள் முதலிய நிறங்களை ஏற்படுத்துவது ரஞ்சனமாகும்.

ஸாரணம் : இது தைலயந்திரத்திலிட்ட ரஸத்தில் தங்கம் முதலியவைகள் சேர்த்து அதிக வேதம் செய்ய உபயோகமாகும் ஸம்ஸ்காரம் ஆகும்.

வேதம்: வெகு சீக்ரம் பரவக்கூடிய மருந்துகளால் செய்யப்பட்ட ரஸம் லோஹங்களின் எல்லா அணுக்களிலும் பரவி லோஹத் தன்மையை மாற்றும் தன்மை இந்த ஸம்ஸ்காரத்தால் ஏற்படுகின்றது. இது லேபவேதம் க்ஷேபவேதம், குந்தவேதம், சப்தவேதம், தூமவேதம் என

ஐவகைப்பட்டது. தங்கம் முதலியவைகளின் மேல் தடவி வராஹபுடம் போட லேபவேதமும், உருகிய லோஹத்தில் தூவுவதால் க்ஷேபவேதமும், கிடுக்கிகளில் ஏந்திய ரஸத்தால் உருகிய லோஹத்தை குத்தி எடுப்பது குந்தவேதம் என்வும், புகையும் நெருப்பிலிட்ட ரஸத்தின் புகையால் வேதம் செய்வது தூமவேதம் எனவும், வாயில் ரஸத்தை அடக்கிக்கொண்ட ஊதுகுழாயால் ஊதுவதால் ஏற்படும் வேதம் சப்தவேதம் எனவும் கருதப்படுகின்றது.

உத்கா(பா)டனம்: ஸித்த ரஸத்தின் அழுக்கை நீக்கி நிறத்தை அதிகப்படுத்துவது உத்காடனமாகும்.

ஸ்வேதனம்: க்ஷாரங்கள் அம்லங்கள் போன்றவைகளுடன் பானையிலிட்டு மூடி பூமியினுள் புதைத்து வைப்பது ஸ்வேதனமாகும்.

ஸந்யாஸம்: இது ரஸத்தை மற்ற ஔஷதங்களுடன் பானையிலிட்டு மூடி நெருப்புள்ள அடுப்பினுள் வைப்பதாகும்.

ஸ்வேதனமும் ஸந்யாஸமும் ரஸத்திற்கு குணத்தையும் பிரபாவத்தையும் அதிகப் படுத்தவும், சீக்ரமாக வோஹத்திலும் தேகத்திலும் பரவும் சக்தி அளிக்கவல்லவை.

இருபத்தாறாவது உல்லாஸம்

யந்திரங்கள்

கல்வம்: கருங்கல்லாலோ இரும்பாலோ தயாரிக்கப் பட்ட கல்வம் ரஸௌஷதங்கள் தயாரிப்பதில் உபயோகப் படுகின்றது. கல்வத்திற்குகந்த கல் கருநிறத்துடன் திடமாயும் பாரமாயும் இருக்கவேண்டும். பன்னிரண்டு அங்குல

உயரமும், ஏழு அங்குல அகலமும், பதினாறு அங்குல நீளமுமுள்ளதும், ஒன்பது அங்குல உயரமுள்ள குழவி யுடனுமுள்ள கல்வம் சிறந்தது. பன்னிரண்டு அங்குல அகலமுள்ளதும் வட்டவடிவமானதும், நான்கு அங்குல ஆழ முள்ளதும், அரைக்குமிடம் வழவழப்பாக உள்ளதும், அடிபாகம் தட்டையாக உள்ள குழவியுள்ளதுமான கல்வமும் அரைப்பதற்குகந்தது. இவ்விதமே இரும்பிலோ, காந்த லோஹத்திலோ தயாரிக்கலாம். இதில் ஐந்துபலம் ரஸத்தை அரைக்கலாம்.

தப்தகல்வம்: இக்கல்வத்தையே இருப்பில் தயார் செய்து கல்வ அளவில் அடியில் கரி அடுப்பு தயார் செய்து அடுப்பை துருத்தியால் ஊத வேண்டும். இது தப்தகல்வமாகும்.

வலபீயந்திரம்: பெரிய இரும்புப் பாத்திரத்தின் இரு பக்கங்களிலும் இருவளையங்கள் அமைத்து அதிலிருந்து கயிற்றால் கட்டப்பட்ட ஒரு சிறிய பாத்திரத்தை பெரிய பாத்திரத்ினுள் தொங்கவிடவும். பெரிய பாத்திரத்தில் காடியும் சிறிய பாத்திரத்தில் ரஸமும் வைத்து உத்தாபனத்திற்காக ஸ்வேதனம் செய்யவும்.

ஊர்த்வபாதனயந்திரம்: கீழும் மேலுமாக ஒரு பானையின் மேல் மற்றொரு பானையைக் கவிழ்த்து மூடவேண்டும். கீழ்ப்பானையின் வாயின் வெளிப்புறம் மேல் பானையின் வாய் விளிம்பு பொருந்தும்படி அமைக்க வேண்டும். கீழ்ப்பானையின் அடித்தளம் தட்டையாக இருக்கவேண்டும். கவிழ்த்து மூடும் மேல் பானையின் அடித்தளத்தில் வெளியில் திடமான வரம்பு கட்டி அதில் ஜலமும் கீழ் பானையினுள் அடியில் ரஸமும் வைத்து எரிக்க ரஸம் மேல் ஜலத்தால் குளிர்ந்த மேற்பானையின் உள் தளத்தில் பதங்கிக்கும்.

அதப்பாதனயந்திரம்: முன்போலவே மேலும் கீழுமாக பானையின் வாய்களைப் பொருத்தும் பொழுது மேல் வைக்கும் பானையின் வாய் கீழுள்ள பானையின் வாய்க்குள் அடங்கினதாக இருக்கும்படி அமைத்து சேறுள்ள பூமியில் கீழ்ப்பானையும் மேல் பானையின் பாதிபாகமும் மூடும்படி வைக்கவேண்டும். மேல் பானையின் மேல் உள்தளத்தில் ரஸத்தைப் பூசியும் கீழ்ப்பானையில் ஜலமும் வைத்து மேல் பானையின் வெளிதளத்தில் தணலிடவேண்டும். இது ரஸத்தைக் கீழ்க்கொணரும்.

திர்யக்பாதனயந்திரம்: இருபானைகளை பக்கத்திலேயே வைத்து இரு பானைகளுக்கும் ஒரு குழாய் பொருத்தி ரஸத்தை ஒரு பானையிலும், அதன் அடியில் நெருப்பும் மற்றொரு பானையில் ஜலமும் வைத்து பானைகளின் வாயை மூடி எரிக்க ஜலமுள்ள பானையில் ரஸம் வந்து தங்கும்.

கச்சபயந்திரம்: வாயகன்ற பானையில் கழுத்தளவு ஜலம் நிரப்பி அதன் மேல் சராவத்தை வைத்து அதில் பிடத்திற்கு நடுவில் ரஸத்தை வைத்து மேல் பிடத்தால் மூடி அதற்கு மேல் ஒரு சிறிய சராவத்தால் மூடி அவ்விரண்டு சராவதங்களுக்கும் சந்திக்கு மண் சீலை செய்து மேல் உசிதப்படி புடம் போடவும். இது கந்தக ஜாரணத்தில் சிறந்தது.

ஆந்தராலிகயந்திரம்: ஒன்பது அங்குல அளவுள்ள காந்த லோஹ மூஷையில் கழுத்திற்கு இரண்டு அங்குலத்தில் கீழ் மூடியைத் தாங்க ஒரு வளையம் அமைக்கவும். அதனுள் ரஸத்தையும் கந்தகத்தையும் வைத்து மேல்மூடி மண் சீலையிட்டுக் காய வைக்கவும். ஒரு பானையின் அடித்தளத்தில் துவாரம் செய்து பானையைக் கவிழ்த்து அத்துவாரத்தில் மூஷையைப் பொருத்தி கீழே புடமிடவும். கந்தகம் ஜாணரம் செய்ய உகந்ததாகும்.

தாபிகாயந்திரம் : பதினாறு அங்குல அளவுள்ள கெட்டியான மூஷை செய்து அதன் நடுவில் அதில் ஜாரணம் செய்ய வேண்டிய லோஹம் அப்பிரகம் இவைகளுடன் ரஸத்தை வைத்து மேல் துவாரமுள்ள கோப்பையால் மூடிச் சுற்றி மணல் நிரப்பி தீபாக்னியில் எரித்துக் கொண்டுபிடத்தைச் சேர்த்து வர ஜாரணமாகும்.

பாலிகாயந்திரம் : கந்தகத்தை ஜாரணம் செய்வதற்கும் உருக்குவதற்கும் நீளமான கைப்பிடியுள்ள இருப்புக் கிண்ணம் பாலிகாயந்திரம் எனப்படும்.

கடயந்திரம் : சுமார் ஒன்றரைப்படி ஜலம் நிரப்பக் கூடியதும், மூன்றங்குல அகலமுள்ள வாயுள்ளதுமான குடம் ஆப்யாயனம் (ரோதனம்) செய்ய உதவும்.

இஷ்டிகாயந்திரம் : வட்ட வடிவமுள்ள குழி தோண்டி அதன் நடுவில் ஒரு சராவத்தின் நடுவில் ஒரு சிறு செங்கல்லை வைத்து, அதில் ரஸத்தை வைத்து, மேல் துணியால் மூடி அதற்கு மேல் கந்தகத்தைத் தூள் செய்து போடவும். கீழ் சராவத்தை மேல் ஒரு சராவத்தால் மூடி சந்தி மண் சீலையிட்டு அதன் மேல் ஒரு கபோதபுடம் போட கந்தகம் ஜாரணமாகும்.

வித்யாதரயந்திரம் : ஒரு பானையில் லிங்கத்தை வைத்து மேல் ஜலத்துடன் ஒரு பானையை வைத்து இரண்டையும் பொருத்திச் சீலை செய்து கீழ் நெருப்பிட லிங்கத்திலிருந்து ரஸம் பிரிபட்டு மேல் பானையின் வெளி அடித் தளத்தில் சேரும்.

டமருகயந்திரம் : ஒரு சிறு பானையின் மேல் மற்றொரு பானையைக் கவிழ்த்து மூடி, வாயைப் பொருத்தி சீலை செய்வது டமருகயந்திரமாகும்.

நாபியந்திரம் : ஒரு மடக்கின் நடுவில் மூன்றங்குல உயரமும் அகலமுமுள்ள பள்ளமமைத்து அதில் ரஸத்தையும்

கந்தகத்தையும் வைத்து மேல் கோஸ்தன மூஷையில் மூடி ஜலமிருத்திகையாலும் வன்னி மிருத்திகையாலும் பூசி மூஷைக்கு வெளியில் ஜலம் நிரப்பி எரிப்பது கந்தகத்தின் புகை வெளிப்படா வண்ணம் ஜாரணம் செய்ய உதவும்.

ஜலமிருத்திகை : கருவேலம் பட்டை கஷாயத்தை லேஹ்யமாகும் வரை எரித்துக்கெட்டியாக்கி, அத்துடன் மிகப் பழைய மண்டூரம், வெல்லம் இவைகளைச் சேர்த்து இடித்து வைத்துக் கொள் ஜலத்தில் கரையாத மண் தயாராகின்றது.

வன்னிமிருத்திகை: நீத்த சுண்ணாம்பு (சாக்கட்டி) உப்பு, கிட்டம் இவைகளை எருமைப் பாலிலரைத்து வைக்க கடுந்தீயின் தாபத்தையும் ஸஹிக்கும் மண் தயாராகின்றது.

கிரஸ்தயந்திரம் : அடித்தளத்தில் தட்டையாகவும் வட்டமாகவுமுள்ள இரண்டு மூஷைகளை ஒன்றினுள் ஒன்றாகப் பொருத்தி வைப்பது கிரஸ்தயந்திரமாகும்.

துலாயந்திரம் : கத்திரிக்காய் போன்ற நீண்ட இரு மூஷைகளைத் தயார் செய்து இரண்டிற்கும் நடுவில் குழாய் பொருத்தி ஒன்றில் ரஸமும் மற்றொன்றில் கந்தகமும் வைத்து இரு மூஷைகளையும் சீலை செய்து வாலுகாயந்திரத்திலிட்டு எரிக்கவும். இது மனோசிலை தாளகம் கந்தகம் இவைகளை ஜாரணம் செய்யச் சிறந்தது.

ஸ்தாலீயந்திரம்: ஒரு சிறு வாய் குறுகிய பானையில் தாம்ரம் முதலியவைகளை வைத்து வாயைச் சராவத்தால் மூடி எரிப்பதாகும்.

கோஷ்டிகாயந்திரம் : பெரிய பானையினுள் ஒன்பது அங்குலம் வரை மணல் நிரப்பி அதன் மேல் ஆறங்குல விஸ்தாரமும் பன்னிரண்டு அங்குல உயரமும் உள் புறம் வழவழப்பாகவும் உள் மண் கோப்பையை வைக்கவும்.

அதனுள் கீழ் தூள் செய்த கந்தகத்தைப் பரப்பி அதன் மேல் இருப்பு முக்காலி மேல் சிறிய இருப்புக் கோப்பையில் ரஸத்தை வைத்து மண் கோப்பையை மூடி சுண்ணாம்பு வெல்லம் இவைகளால் மண்சீலை செய்து காய்ந்ததும் மேல் மணல் நிரப்பி பானையின் வாயையும் சீலை செய்து மூன்று யாமம் கீழ் நெருப்பிட கந்தகத்தில் ஏற்பட்ட புகை மேல் முக்காலியிலுள்ள ரஸபாத்திரத்தில் சேர்ந்து ஜாரணமாகி ரஸத்தை சிவப்பாக்கும்.

வாலுகாயந்திரம் : லவணயந்திரம்: பானையில் மணலையோ உப்பையோ நிரப்பி அதில் ரஸகோளத்தை வைத்து எரிப்பது இவ்விரண்டு யந்திரங்களாகும். கந்தக ஜாரணத்தில் இவை முக்கியமானவை.

தூபயந்திரம் : எட்டங்குல விரிவும் உயரமுமுள்ள இருப்புப் பாத்திரத்தில் மேலிருந்து இரண்டு அங்குலத்திற்குள் இரும்புக் கம்பிகளைக் குறுக்கே பதிய வைத்து ஜாரணைக்குகந்த தங்கம் வெள்ளி முதலியவைகளின் தகடுகளைப் பரப்பிக் கீழே புகை மூட்டி மேல் மூடினால் முடச்சுத்தி ஏற்படும்.

கந்துகயந்திரம் : பெரிய வாய் குறுகிய பானையின் வாயில் துணி கட்டி அதில் வேகவைக்க வேண்டியவைகளை வைப்பது கந்துக யந்திரமாகும்.

டேகீயந்திரம் : ஒரு பானையின் கழுத்தடியில் துவாரம் செய்து அதில் மூங்கிற்குழாயைச் செலுத்தி மற்றொரு இரும்புப் பாத்திரத்துடன் அக்குழாயைச் சேர்க்கவேண்டும். பானையில் திரவ்யத்தை வைத்து எரிக்கச் சூடானவுடன் திரவமாகி குழாய் வழியாக ஆவி சென்று குளிர்ந்து இரும்புப் பாத்திரத்தில் திரவமாகும்.

ஸோமாநலயந்திரம்: மேல் நெருப்பும் கீழ் ஜலமும் வைத்து நடுவில் ரஸத்தையும் அப்பிரகம் முதலியவை களையும் வைத்தெரிப்பதாகும்.

நாலிகாயந்திரம் : இரும்புக் குழாயினுள் ரஸத்தை வைத்து உப்பு நிரப்பிய பானையிலிட்டு எரிப்பது நாலிகாயந்திரமாகும்.

பாதாளயந்திரம் : பானையினடியில் துவாரமிட்டு அதில் லோஹ மூஷையைக் கவிழ்த்து ரஸம் முதலியகைளை எரிப்பது பாதாளயந்திரமாகும்.

தீபிகாயந்திரம் : கச்சயந்திரத்தின் நடுவில் மண்பீடத்தில் அமைக்கப் பெற்ற தீபத்தினின்று ரஸம் கீழே விழச் செய்வது தீபிகாயந்திரமாகும்.

கங்காஸாகரயந்திரம்: (வாலை யந்திரம்) தாம்ரம் அல்லது மண் பாத்திரத்தினின்றும் கழுத்திற்குக் கீழ் ஒரு குழாய் சொருகி அதை மற்றொரு பாத்திரத்தில் பொருத்தி முதல் பாத்திரத்தில் கீழ் திரவ்யமும் ஜலமும் வைத்து எரித்து ஆவியை பாத்திரத்தின் மேல் பாத்தி கட்டி ஜலம் விடுவதால் குளிர வைத்து அர்க்கம் போன்ற திரவம் எடுப்பது இந்த யந்திரத்தால் ஸாத்தியமாகும்.

டோலாயந்திரம்: இதில் பானையின் பாதிவரை ஜலம் நிரப்பி, பானையின் கழுத்தில் குறுக்கே ஒரு குச்சியைப் பொருத்தி அதில் துணியில் கட்டித் தொங்க விட்ட திரவ்யத்தை வேகவைக்கலாம்.

கோஷ்டீயந்திரம்: இது நான்கு பக்கமும் முகமுள்ள அடுப்பின் மேல் பானையின் திரவ்யத்தைப் போட்டு மூடி சீலை செய்து எரிப்பதற்கு உதவுகின்றது.

கர்ப்பயந்திரம்: மூன்றங்குல அகலமும் நான்கு அங்குல நீளமும் உள்ள மூஷை தயார் செய்து உப்பு இருபது பங்கும் குக்குலு ஒரு பங்கும் சேர்த்து நன்கு அரைத்து அடிக்கடி மூஷையில் தடவி அதில் ரஸத்தை வைத்து பூமியினுள் வைத்து

வராட்டி நெருப்பிலோ உமிநெருப்பிலோ ஒரு நாள் அல்லது மூன்று நாள் எரிக்க உதவுகின்றது.

ஹம்ஸபாகயந்திரம்: இதில் ஒரு மடக்கில் மணலை நிரப்பி அதன் மேல் மற்றொரு மடக்கை வைத்து இளந்தீயில் எரித்துக் கொண்டு க்ஷாரங்கள், மூத்திரங்கள், உப்புகள், பிடம் இவைகளை விட்டு எரிக்கலாம்.

மூஷாயந்திரம்: இரு இருப்பு மூஷைகள் தயார் செய்து இரண்டின் வாயிலும் ஒ குழாயை இணைத்து ஒன்றில் ரஸமும் மற்றொன்றில் கந்தகமும் வைத்து ரஸத்தின் அடியில் ஜலமும் கந்தகத்தினடியில் நெருப்பும் வைத்து எரிக்க கந்தகம் ஜாரணமாகின்றது.

நாகமாயீரயந்திரம்: காரீயத்தால் இரண்டு விருந்தாக மூஷைகள் செய்து ஒன்றில் ரஸமும் மற்றொன்றில் வத்ஸநாபியும் வைத்து பாம்பு போன்று வளைந்து குழாயை வத்ஸநாபி உள்ள மூஷையிலும் மயில் போன்ற குழாயை ரஸ மூஷையிலும் வைத்து மயிலின் வாயில் பாம்பு முகத்தைச் சேர்த்து வஜ்ரமிருத்திகையால் சீலை மண் செய்யவும். ரஸமூஷையின் அடியில் ஜலமும் வத்ஸநாபி மூஷையில் நெருப்பும் வைத்து எரிக்கவும். இது ரஸத்திற்கு விஷப்புகை கொடுக்க உதவும்.

சக்கிரயந்திரம்: ஒரு முழு அகலமும் உயரமுமுள்ள குழியின் நடுவில் பன்னிரண்டங்குல அகலமும் ஒரு முழ உயரமுமுள்ள தொட்டி வைத்து அதில் மணல் நிரப்பி அதன் நடுவில் ரஸத்தை வைத்து தொட்டியின் வெளியில் வராட்டிகளை அடுக்கி நெருப்பிலிட ரஸம் பஸ்மமாகும்.

கேரயந்திரம்: வாழைப்பூ போன்று மூஷை செய்து துனியில் துவாரமிட்டு மேல் ஒரு பானையைக் கவிழ்த்து மூடவும். கீழ் மூஷையில் விஷயங்களையும் மேல்

பானையில் ரஸத்தைப் பூசியும் வைத்து எரிக்க விஷப் புகை ரஸத்தில் சேரும்.

காபாலியந்திரம்: ஒருவாய் குறுகிய பானையில் ரஸத்தை வைத்து மேல் தங்கம் முதலியவைகளாலான கிண்ணத்தை கவிழ்த்து மூடி சீலை மண் இடவும். இது காபாலியந்திரம்.

வாலுகாயந்திரம் - லவணயந்திரம்: ஒரு காசகுப்பியில் ரஸத்தையும் கந்தகத்தையும் போட்டு வாய் மூடி ஏழு மண் சீலை செய்து காய வைத்து ஒன்பது அங்குல ஆழமும் உயரமுமுள்ள பானையில் வைத்து மணல் நிரப்பி பானையை மூடி எரிக்கவும். பானையின் மூடி மேல் புல்லைப் போட எரித்தால் பாகமடைந்ததென அறியலாம். இவ்விதமே மணலுக்குப் பதில் உப்பை நிரப்ப லவணயந்திரமாகின்றது.

நாலிகாயந்திரம்: இது இரும்புக் குழாயில் ரஸத்தை வைத்து உப்பு நிரப்பிய பானையிலிட்டு முன் போல் பாகம் செய்ய உபயோகமாகின்றது.

பூதரயந்திரம்: பூமியில் மூஷையை மணலால் மூடி அதன்மேல் வராட்டியால் புடமிடுவது பூதரயந்திரமாகும்.

நளிகாயந்திரம்: பானையின் பக்கத்தில் ஒரு துவாரமிட்டு அதில் இரும்புக் குழாய் அல்லது மூங்கிற் குழாயைச் சொருகி அக் குழாயின் மற்றொரு ஓரத்தில் ஒரு சிறுபானையை வைக்கவும். முதற்பானையில் வெள்ளைக் குங்கிலியம் போன்றவைகளைப் போட்டு திரவம் இறக்க உபயோகமாகின்றது.

புடயந்திரம்: தேவையான அளவில் சூடு ஏற்படும் வகையில் வராட்டிகளின் நடுவில் இருமடங்குகளில் ரஸம் முதலியவை வைத்து எரிப்பது புடமாகும்.

பாதாளயந்திரம்: வாயகன்ற பானையை ஜலமும் சாணமும் நிரம்பிய குழியில் வைத்து அதன் மேல் வாயில் மற்றொரு குடத்தைப் பொருத்தவும். மேலிருக்கும் குடத்தின் அடிப்பக்கத்தில் ஐந்தாறு துவாரமிடவும். தைலம் எடுக்கும் திரவியங்களை மேல் வைத்து மூடி எரிக்கத் துவாரங்கள் வழியாகத் தைலமிறங்கும்.

தூபயந்திரம்: ஒரு ஸ்தாலியில் கழுதை முதலிய வைகளின் மலத்தைப்போட்டு வாயை ஜலமுள்ள வெங்கல பாத்திரத்தால் மூடி எரிக்க மேலுள்ள பாத்திரத்தில் ஒட்டியுள்ள எண்ணெய் சிறந்த புண்ணாற்றும் தைலமாகின்றது.

அதப்பாதனயந்திரம் (தைலம் வடிக்க): சுரைபோன்று கழுத்து நீண்டதும் உடல் பெருத்தும் உள்ள குப்பியில் விதை முதலிய தைலம் வடிக்க வேண்டியவைகளை வைத்து வாயை கேசங்களால் அடைத்து அடியில் துவாரமிட்ட பானையில் கவிழ்த்து வைத்து அதன் வாய்க்கு நேரே சிறிய கிண்ணத்தில் வைக்கவும். பானையினுள் புடமிட தைலமிறங்கும்.

மூஷைகள் இரும்பாலும் மண்ணாலும் தேவைக்குகந்தபடி தயாரிக்கப்படுகின்றன. இதற்கு வெளுத்தும்சிவந்தும் உவராகவும் புற்றிலிருந்து எடுக்கப்பட்டதுமான மண் சிறந்தது. அம்மண்ணை உமிக்கரி சணல்கரி குதிரைலத்தி இவைகளுடன் சேர்த்து இரும்புப் பாறையால் இடித்து மூஷை செய்யவேண்டும்.

வஜ்ரமூஷை : மண்மூன்றுபாகமும் சணலும்லத்தியும் ஒவ்வொரு பாகமும், உமிக்கரியும் வெள்ளைக்கல்லும் ஒரு பங்கும், அயக்கிட்டம் அரைப்பங்கும் சேர்த்து ஸத்வ பாதனத்திற்குகந்த வஜ்ர மூஷை தயார் செய்யலாம்.

யோகமூஷை: கரி, உமிக்கரி, புற்றுமண், பீடங்கள் இவைகளுடன் யோகத்திற்குகந்தாற்போல் தயாரிக்கப்பெற்று உள் பீடங்கள் பூசப்பட யோகமூஷையாகின்றது.

வ்ஜரத்திராவணமூகைஷ: வைரம், துருதி அடைவதற்காக களிமண், பூனாகதௌதம், சணல், உமிக்கரி இவைகளை

எருமைப்பாலில் ஊரவைத்து இடித்து மூஷை தயார் செய்யப்படுகின்றது.

காரமூஷை: சுட்ட களிமண் ஆறுபங்கு, அயக்கிட்டம் வெள்ளைக்கல், சணல், கருப்புமண் இவைகள் வகைக்கு ஒரு பங்கு இவைகளுடன் தயார் செய்தது காரமூஷையாகும்.

வர(ஜ்ர)மூஷை : துணி கரி உமிக்கரி இவை ஸமனெடையும், களிமண்ணும் மண்ணும் வகைக்கு நான்கு பங்கும் சேர்த்துத் தயார் செய்த மூஷை ஒரு யாமம் வரை தீயைத் தாங்கும்.

ஸ்வர்ணமூஷை-வெள்ளிமூஷை : ரக்தவர்க்கத்தின் தூளுடன் ரக்தவர்ககஷாயத்தால் மண்ணில் தயார் செய்யப்பட்ட மூஷை ஸ்வர்ணமூஷை எனவும் ச்வேத (வெளுப்பு) வர்கத்தின் தூளுடன் ச்வேத வர்க்கஷாயத்தால் தயார் செய்தது வெள்ளிமூஷை எனவும் கூறப்படுகின்றது.

பிடமூஷை : அந்தந்த பிடங்களால் மண் தயார் செய்யப்பட்டு பிடத்தால் உள்பூசப்பட்ட மூஷை இது. நான்கு யாமம் வரை இது நெருப்பைத் தாங்கும்.

மூஷாப்யாயனம் : தாதுக்கள் உருகியவுடன் மூஷைக்கு சக்தி அளிப்பதற்காக நெருப்பிலிருந்து வெளியே எடுப்பது மூஷாப்யாயனமாகும்.

விருத்தாகமூஷை : கத்திரிக்காய் போன்ற நீண்ட மூஷையினுள் ஒன்பது அங்குல நீளமுள்ளதும் அடியில் துவாரமுள்ளதும் ஊமத்தம்பூ போன்று வாய் விரிந்ததுமான குழாயைப் பொருத்தி, அதனுள் கர்பரம் போன்ற தாதுப் பொருள்களை வைத்து ஸத்வம் எடுக்கலாம்.

கோஸ்தனீமூஷை : பசுவின் பால் காம்பு போன்று உருவமுள்ளதும் பிடியுள்ள மூடியுள்ளதுமான இம்மூஷை ஸத்வங்களை திராவணம் செய்ய உபயோகமாகின்றது.

மல்லமூஷை : மண் சராவம் போன்று ஸம்புடமாகச் செய்யக் கூடிய இரு பாகங்களை உடைய இம்மூஷைபர்படீ ரஸங்களை வேகவைக்க உதவுகின்றது.

பக்வமூஷை : பானை உருவத்தில் செய்து சுடப்பட்டு பொட்டலீ ரஸத்தை வேகவைக்க இது உபயோகப்படும்.

கோளமூஷை: உருண்டையாக நடுவில் திரவ்யத்துடன் துவாரமில்லாமல் செய்யப்படும் இம்மூஷை நெருப்பில் ஓடும் திரவ்யங்களைப் புடமிட உபயோகப் படுத்தப் படுகின்றது.

மஞ்சுமூஷை: அடியில் கூராகவும் மேலே விரிவாகவும் உள்ள இம்மூஷை அப்பிரகஸத்வம் முதலியவைகளைப் புடமிடவும் துருதியாக்கவும் உபயோகிக்கப்படுகின்றது.

மஞ்சுரூஷாமூஷை: பெட்டி போன்று சதுரமாயுள்ள இம் மூஷை பூமியினுள் வைத்து புடம்போட உதவுகின்றது.

முஸலமூஷை: உலக்கை போன்ற உருவத்துடன் அடியில் தட்டையாகவும் ஆறங்குல உயரமள்ளதுமான இது சக்ரிபத்த ரஸம் போன்றவை தயாரிக்கஉதவுகின்றன.

இம்மூஷைகள் பிரகாசமூஷை எனவும், அந்த மூஷை எனவும் இரு வகைப் படுகின்றன. சராவம் போன்று விரிந்த உருவத்துடனுள்ள பிரகாச மூஷை திரவ்யங்களை உருக்குவதிலும், கோதஸ்னீ மூஷை போன்று மூடியுடன் தயாரிக்கப்பட்டுள்ள் அந்த மூஷை பத்திரலேபம் துவந்துவ மேலனம் போன்றவைகளிலும் உபயோகப் படுகின்றது.

கோஷ்டிகள் (உலை)

ஸத்வங்களை எடுப்பதற்கும், சுத்தி செய்வதற்கும் பலவித அளவில் உலைகள் தயாரிக்கப்படவேண்டும்.

ஆகாரகோஷ்டீ : ஒரு சதுர முழ விஷ்தாரமும் நான்கு பக்கமும் மட்சுவருடனும், ஒரு சுவரில் அரைமுழம் குறுக்களவும் ஒன்றரைமுழ நீளமும் உள்ள துவாரத்தில் இரு துருத்திகள் பொருத்தப்பட்டதுமான உலையடுப்பு தயாரிக்கவேண்டும். அதில் கரியை நிரப்பி ஸத்வபாதனம் செய்ய வேண்டிய ஐந்து உருண்டைகளைப் போட்டுக் காய்ச்சவும்.

பாதாளபோஷ்டீ: கெட்டியான தரையில் ஒன்பது அங்குலம் குறுக்களவு உள்ள வட்டமான பள்ளம் தோண்டி அதன் நடுவில் நான்கு அங்குலக் குறுக்களவுள்ள மற்றொரு குழி தோண்டவும். நடுவில் ஐந்து துவாரமுள்ள மண் தட்டை வைத்து மேல் கரியிடவும். கீழ் குழியிலிருந்து தரைமட்டம் வரை ஒரு குழாயைச் சொருகி அதில் துருத்தியைப் பொருத்தி ஊதவும். மிருதுவான திரவ்யங்களின் ஸத்வபாதனத்தில் உதவும்.

காரகோஷ்டீ: பன்னிரண்டங்குலப் பள்ளமும் ஒட்டை அகலமும் உள்ள உலையில் நான்கு அங்குலத்திற்கு மேல் அனேக துவாரங்களுள்ள தட்டைப் பொருத்தி கரியிட்டு வங்கநாலத்தால் ஊதவும்.

மிருதுகோஷ்டி: பன்னிரண்டு அங்குல உயரமும் நான்கு அங்குல அகலமும் குறுக்கில் துருத்தியால் ஊத சௌகரியமும் உள்ள சிறிய உலை இது.

புடங்கள்

ரஸம் முதலியவைகளைப் பாகம் செய்வதில் இவை பல விதத்திலும் உபயோகப்படுகின்றன. லோஹங்கள் பஸ்மமாகி திரும்பி லோஹமாகாதிருப்பதற்கும், நிறம் லேசாக இருத்தல், சரீரத்தில் சீக்ரம் பரவுதல் போன்ற பல குணங்களை அதிகப்படுத்துவதற்கும் உதவுகின்றன.

இரண்டு சதுர முழ அகலமுள்ள குழியில் ஆயிரம் வராட்டிகளால் புடமிடுவது மஹாபுடமெனவும், ஒன்றரை சதுர முழ அகலமுள்ள குழியில் ஐநூறு வராட்டிகளை நிரப்பி புடமிடுவது கஜபுட்மெனபவும், இருபத்திரண்டு சதுர அங்குலமுள்ள குழியில் புடமிடுவது வராஹபுடமெனவும், பூமியில் மேல் பதினாறு சதுர அங்குல அளவிற்குப் புடமிடுவது குக்குடபுடமெனவும், பூமியின் மேல் எட்டு வராட்டிகளால் புடமிடுவது கபோத புடமெனவும் ஒரு பொருள் பானையில் உமியை நிரப்பி நடுவில் மூஷையை வைத்து எரிப்பது பாண்டபுடமெனவும், வராட்டிகளை நிரப்பிப் புடமிடுவது கோவரபுடமெனவும், மூஷையை மேலும் கீழும் மணலைப் போட்டு வராட்டியால் மூடிப் புடமிடுவது வாலுகாபுட மெனவும், பூமியின் கீழ் பள்ளம் தோண்டி மூஷையை வைத்து மேல் இரண்டு அங்குலம் மணல் பரப்பி அதன் மேல் புடமிடுவது பூதரபுடம் எனவும், பூமியின் மேல் பதினாறு தோலா எடையுள்ள வராட்டி அல்லது உமியால் புடமிடுவது லாவக புடமெனவும், புடங்கள் தேவைக்குந்தபடி பலவிதமாக அமைக்கப்பெற வேண்டும்.

அமிருதீகரணவிச்ராந்தி முற்றிற்று

ஆனந்தகந்தம்

கிரியாகரணவிச்ராந்தி

முதல் உல்லாஸம்

உபரஸங்கள்.

கந்தகம், தாளகம், மனோசிலை, மாக்ஷிகம், அப்பிரகம், லிங்கம், காவிக்கட்டி, சபலம், சிலாஜது, பூநாகம், ஹரித்ராச்மா, அக்னிஜாரம், கர்பரம், துத்தம், கங்குஷ்டம், கிரிஸிந்தூரம், வெங்காரம், கம்பில்லகம், வத்ஸநாபி, அன்னபேதி, கௌரீபாஷாணம், துவர்மண், மிருத்தாரசிங்கி, ஸிந்தூரம், படிக்காரம், ரஸாஞ்சனம், நீலாஞ்சனம், ஸௌவீராஞ்சனம், ஸ்ரோதோஞ்சனம், அபின், புஷ்பாஞ்சனம், சங்கு, மத்துச்சிப்பி, சோழி, ஸாம்பிராணி, நவச்சாரம், சீனக்காரம், எலிக்கொல்லிப் பாஷாணம், ஸர்ஜரஸம், குக்கில், அரக்கு, க்ஷாரங்கள், உப்புகள், கோரோசனம், அம்லவேதஸம், காசலவணம், சாணம், மணல் இவைகள் உபரஸங்கள் எனக் கூறப்படுகின்றன.

கந்தகம்

கந்தகத்தின் சுத்தி : ஒரு பானையில் நெய்யுடன் பாலைவைத்து வாயில் துணிகட்டி மேல் கந்தகத்தூளைக் பரப்பி சராவத்தால் மூடி பூமியினுள் புதைத்து சராவத்தின் மேல் லகுபுடம் போட துணியின் வழியாக உருகி இறங்கி கந்தகம் சுத்தமாகின்றது.

வாலுளுவை, கடுகு, ஆமணக்கு குசும்பை இவைகளில் ஒன்றின் எண்ணெய்யுடன் பசுவின் பால் அல்லது ஆட்டுப்பாலும் காடியும் சேர்த்துப் பானையிலிட்டு வாயில் துணிக்கட்டி அதில் கந்தகத்தைப் பரப்பி இருப்பு சராவத்தால் மூடி மேல் ஒரு சராவத்தில் தணலை வைத்து எரிக்க கந்தகம் கீழே இறங்கும். அதை ஊமத்தைச் சாற்றால் இரண்டு தடவை அரைத்துக் காயவைக்க கந்தகம் சுத்தமாகும்.

கண்டங்கத்திரி, நாய் வேளை, கையாந்தகரை, ஊமத்தை, திலபர்ணீ இவைகளின் சாற்றுடன் அரைத்து நெய் சேர்த்து உருக்கி ஆட்டுப்பாலில் ஏழு தடவை சாய்க்கச் சுத்தியாகும்.

புங்கெண்ணெய், ஆமணக்கெண்ணெய், ஆட்டுப் பால் இவைகளைப் பானையிலிட்டு மேல் துணி கட்டி ஊமத்தை இலைச்சாற்றில் பாவனை செய்த கந்தகத்தை வைத்து இருப்புச் சராவத்தால் மூடி முன்போல புடமிடச் சாற்றில் மூன்று தடவை வரை பாவனை செய்து உருக்கி மீன் பித்தத்துடன் ஏழு தடவை பாவனை செய்யவேண்டும். பிறகு பேய்பீர்க்கு விதைத்தூளுடன் சேர்த்து கையாந்தகரைச்சாற்றால் அரைத்து ஏழு நாள் வெயிலிலிட்டு ஜலத்தால் அலம்பி நெய் தடவிய இருப்புப் பாத்திரத்திலிட்டு உருக்கி கையாந்தகரைச் சாற்றில் சாய்க்கச் சுத்தியாகும்.

கந்தகத்தை வல்லாரை, நாய்வேளை, கையாந்தகரை, ஊமத்தை, திலபர்ணீ இவைகளின் சாற்றால் அரைத்துக் காய்வைத்து நெய்யுடன் இருப்புப் பாத்திரத்தில் உருக்கி ஆட்டுப்பாலில் சாய்க்கவும். இவ்விதம் ஏழு தடவை செய்ய சுத்தியாகும்.

கந்தகதைலம் : தேவதாளி, புளியாரை, நார்த்தை, மாதுளை, புளிப்பு மாதுளை இவைகளின் சாற்றில்

கந்தகத்தையும் அதற்குக் கால் பங்கு வெங்காரத்தையும் அரைத்து மூன்று நாள் வெயிலில் வைத்தெடுக்கவும். ஊமத்தை, கருந்துளசி, உள்ளிப்பூண்டு, தேவதாளி, முருங்கைவேர், மணத்தக்காளி, குடம், சங்கங்குப்பி, காரகில், கஸ்தூரி, காட்டுப்பழுபாகல் இவைகளைப் புளிப்பு மாதுளைச் சாற்றால் அரைத்து விளக்கெண்ணெய்யில் போட்டுக் காய்ச்சி அந்த எண்ணெய்யால் கந்தகத்தை மூன்று தடவை பாவனை செய்ய, கந்தகம் நாற்றமகன்று சுத்தியாகும். அந்த எண்ணெய்யுடனுள்ள கந்தகம் கந்தகதைலமாகும்.

கந்தகத்தை வெண்ணெய்யால் அரைத்து எருக்கம் பாலிலும் கள்ளிப்பாலிலும் ஏழு தடவை நனைத்துக் காயவைத்து துணியில் தடவி வர்த்தி ஆகச் செய்து எரியவிட்டு கீழ் விழும் சுடர் தைலத்தை எடுத்துக் கொள்ளவும்.

கந்தகஸத்வம் : கந்தகத்தை கழற்சிவிதை எண்ணெய் யால் வெகு நாட்கள் அரைத்து பிரகட மூஷையில் இட்டு கடுந்தீயில் ஊத ஸத்வம் வெளி வரும்.

சுத்தி செய்த கந்தகத்தை பானையிலிட்டு தாம்ரபாத்திரத்தினால் மூடி அதன் மேல் குளிர்ந்த ஜலத்தை விட்டு கீழ் இளந்தீயில் எரித்து ஜலம் விட்டு வரவும். அப்பொழுது கந்தகஸத்வம் தனியே வெளிவரும்.

கந்தகம் பார்வதியின் தேகஜஸ்ஸானதால் கந்தகத் தினின்றும் ஸத்வம் எடுப்பது தவறு எனச் சிலர் கருதுவார்கள்.

கந்தகத்துருதி: கந்தகத்தைத்தூள் செய்து கடுகெண் ணெய்யில் அரைத்து துணியில் தடவி வர்த்தி செய்து பசு நெய்யுடன் கலந்து எரியவைத்து விழும் சிவந்த கந்தக எண்ணெய்யை எடுத்துக் கொள்ளவும்.

கந்தகத்தின் குணம்: விபாகத்தில் உரைப்பாகவும், உஷ்ண வீர்யமும், ஸரகுணமுள்ளதும், விஸர்ப்பம், குஷ்டம், அரிப்பு, கிருமி, குல்மம், க்ஷயம், கண்ரோகங்கள், விஷம் இவைகளை நீக்குவதில் சிறப்பு முள்ளது.

தாளகம்: மடல் தாளகம் எனவும் பிண்டம் தாளகம் எனவும் தாளகம் இரு வகைப்படும். அதிகமான மடல்களுள்ள தாளகம் உயர்ந்ததெனவும் பிண்டதாளகம் குணத்தில் குறைந்த தெனவும் கூறுவர். சுத்தி செய்யாமல் உபயோகப்படுத்த வாத - கபநோய்கள் பிரமேஹம் தாபம் ஸ்போடம் அங்கக்குறைவு இவைகளை உண்டாக்குமாதலால் சுத்தமான தாளகத்தையே உபயோகிப்பது நல்லது.

தாளகசுத்தி: தாளகத்தைச் சிறிய தூளாகச் செய்து பத்திலொரு பாகம் வெங்காரம் சேர்த்து எலுமிச்சம்பழச்சாறில் காடியிலும் பாவனை செய்து அலம்பி நான்கு மடிப்புள்ள துணியில் தோலாயந்திரமாகக் கட்டி சுண்ணாம்புடனுள்ள காடியிலும் பூசணிச் சாற்றிலும் காரிலவம் கஷாயத்திலும் வேகவைத்துச் சுத்தி அடையும்.

தேன் போலக் கெட்டியான புரசம் வேர் கஷாயத்தில் மூன்று தடவை தாளத்தைப் பாவனை செய்து எருமை மூத்திரத்தில் பாவனை செய்து பத்து விராட்டிகளில் பன்னிரண்டு புடங்கள் போட சுத்தியாகும்.

தாளகத்தை துணியில் முடித்து சுண்ணாம்பு சேர்த்து காடியிலும், பூசணிச் சாற்றிலும், நல்லெண்ணெய்யிலும், திரிபலை கஷாயத்திலும் வகைக்கு ஒரு யாமம் தோலாயந்திரத்தில் எரித்தெடுக்க சுத்தியாகும்.

தாகஸத்துவம்: கொம்பரக்கு கடுகு வெல்லம் முருங்கைப்பட்டை உப்பு வெங்காரம் இவைகளுடன் தாளகத்தை அரைத்து மூஷையிலிட்டு பாதாளயந்திரத்தில் எரிக்க ஸத்வம் விழும்.

தாளகத்தை அரைக்கால் பங்கு ரஸமும் வெங்காரமும் சேர்த்துப் பூசணிச்சாற்றாலும் கள்ளிப்பாலாலும் மூன்று நாட்கள் அரைத்து மூஷையிலிட்டு எரித்து ஸத்வம் எடுக்கலாம்.

தாளகம் 16 பங்கு வத்ஸநாபி ரஸம் வெங்காரம் வெள்ளை அப்பிரகம் ஈயம் இவைகளின் சூர்ணம் வகைக்கு ஒரு பங்கு சேர்த்து கள்ளிப்பாலாலும் எருக்கன் பாலாலும் இரண்டு நாள் அரைத்து, காசிகுப்பியிலிட்டு வாலுகா யந்திரத்தில் பன்னிரண்டு யாமங்கள் எரிக்க மேல் வெள்ளையாக ஸத்வம் படிந்திருக்கும்.

தாளகம் சுத்தி அடைந்திருந்தால் குஷ்டம் நரை போன்றவைகளை அகற்றி ரஸாயனமாக விளங்குகின்றது.

மனோசிலை : கருஞ்சிவப்புடன் கனமாகவும் சுரசுரப்பும் உள்ள உருவத்துடன் விளங்குவது சியாமாங்கி எனவும் தாமிர நிறத்தில் கனமில்லாமல் பளபளப்புடனிருப்பது கணவீரகா எனவும் சிவந்து தூளாகக் கனமாக இருப்பது சண்டா எனவும் எல்லாவற்றிலும் சண்டா சிறந்தது எனவும் கூறப்படுகின்றது. இது சுத்தி இல்லாமல் உபயோகிக்க மூத்திர மல நோய்களையும் குஷ்டத்தையும் உண்டாக்கும்.

மனோசிலையின் சுத்தி : ஆட்டு மூத்திரத்தில் மூன்று தினம் தோலாயந்திரத்தில் எரித்து ஆட்டுப்பித்தத்துடன் ஏழு நாளரைக்கச் சுத்தியாகும். கீரைப்பாலை கையாந்தகரை சிகப்புப்பூவுள்ள அகத்தி இவைகளின் சாற்றுடன் மனோ சிலையை தோலாயந்திரத்தில் ஒரு யாமமும் ஆட்டு மூத்திரத்தில் ஒரு யாமமும் எரித்துக் காடியினால் அலம்ப சுத்தியாகும்.

மனோசிலை ஸத்வம் : பசுவின் மாம்ஸத்தாலும் புளித்த மாதுளம்பழச் சாற்றாலும் மஞ்சள் சிகப்பு நிறமுள்ள மற்ற

புஷ்பங்களின் சாற்றாலும் வகைக்கு ஒருயாமம் அரைத்து மித்ர பஞ்சகத்துடன் சேர்த்து மாத்திரைகளாக்கிக் காசகுப்பி யிலிட்டு வாலுகாயந்திரத்தில் பன்னிரண்டு யாமம் கடுந்தீயில் எரித்தெடுக்க சிவந்த ஸத்வம் கிடைக்கும்.

மனோசிலை உரைப்பும் கசப்பும் உஷ்ண வீர்யமும் உள்ளது. கபவாத நோய்கள் அரிப்பு க்ஷயம் காஸம் விஷம் அக்னி மந்தம் இவைகளைப் போக்கவல்லது.

மாக்ஷிகம்:

தங்க மாக்ஷிகம் எனவும் வெள்ளிமாக்ஷிகம் எனவும் இது இரு வகைப்படும். சுத்தி செய்யாமல் உபயோப்படுத்த அக்னிமந்தம் கண்நோய் போன்ற நோய்களை உண்டாக்கும்.

மாக்ஷிகசுத்தி : மனித மூத்திரத்துடனும், கொள்ளு கஷாயத்துடனும் புளிவஞ்சி போன்ற அம்லவர்கத் திரவத் துடனும் திரிகடு வெங்காரம் சேர்த்து தோலாயந்திரத்தில் கருணைக் கிழங்கின் நடுவில் வைத்த மாக்ஷிகத்தை வேகவைக்க சுத்தியாகும்.

ஒரு நாள் வாழைக்கிழங்கின் சாற்றில் ஆமணக் கெண்ணெய் நெய் சேர்த்து தோலாயந்திரத்தில் எரிக்கலாம்.

அவ்விதமே மூன்று பங்கு மனோசிலையும் ஒரு பங்கு வெங்காரமும் சேர்த்து இரும்புப் பாத்திரத்தில் புளிப்பு மாதுளைச்சாற்றிலும் எலுமிச்சம்பழச் சாற்றிலும் எரிக்க சுத்தியாகும், ஆத்திப்பூவின் சாற்றாலும் பாஷாண வேதியின் சாற்றாலும் முருங்கைவேரை அரைத்து மனோசிலை மேல் பூசி பத்து வராட்டிகளின் நடுவில் மூஷையிலிட்டு ஆறு புடம் போட சுத்தமாகும்.

தேன் பால் காடி வகைக்கு எட்டு பங்கு, பசுவின் மூத்திரம் நான்கு பங்கு, கொள்ளுக் கஷாயம் ஒரு பங்கு

எல்லாவற்றையும் பானையிலிட்டு ஒரு பங்கு மாக்ஷிகம் சேர்த்து தோலாயந்திரத்தில் எரிக்கவும். பிறகு புளி மாதுளைச்சாற்றால் அரைத்து பத்து வராட்டிகளில் பன்னிரண்டு நாள் புடம் போட சுத்தியாகும்.

மாக்ஷிகத்தைத் தூள் செய்து சுரைக்காய் சிறுகீரை இவைளின் கல்கத்தின் நடுவில் வைத்து, கொள்ளு கஷாயத்தில் தோலாயந்திரத்தில் எரிக்கச் சுத்தி அடையும்.

மாக்ஷீகஸத்வம் : பசுவின் பாலிலும் கள்ளிப்பாலிலும் ஆமணக்கெண்ணெய்யிலும் வகைக்கு ஒரு நாள் பாவனை செய்த மாக்ஷிகத்தை வடகமாகச் செய்து அப்பிரகத்தைப் போல் உலையில் வைத்து ஊதி ஸத்வம் எடுக்கவேண்டும்.

தோலாயந்திரத்தில் காடியில் மாக்ஷிகத்தை ஒருநாள் வேகவைத்துத் தூள் செய்து இருப்புப் பாத்திரத்தில் நெய் தேனுடன் சேர்த்து எரித்துக் கள்ளிப்பாலில் ஒருநாள் வெயிலில் பாவனை செய்து தேன் நெய் ஒட்டடை இவை சேர்த்து அரைத்து அந்த மூஷையிலிட்டுத் துருத்தியால் ஊத ஸத்வம் உண்டாகும்.

வாழைக்கிழங்கின் சாற்றில் மாக்ஷிகத்திற்கு நூறு பாவனைகள் செய்த பின் நெய்யும் ஆமணக்கெண்ணெய்யும் சேர்த்து எரித்து முன் போல் மூஷையிலிட்டு ஊத ஸத்வம் எடுக்கலாம். இவ்விதம் பல வகைகளில் மாக்ஷிகத்திருந்து தாம்ரம் போன்றும் காரீயம் போன்றும் ஸத்வம் எடுக்கலாம்.

மாக்ஷிகத்தின் குணம் : துவர்ப்பு கசப்பு இனிப்பு உரைப்பு ரஸமுள்ளதும் உஸ்ணவீர்யமுள்ளதும் குஷ்டம் வீக்கம் விக்கல் வாந்தி இவைகளைப் போக்கக்கூடியதும் நல்ல ரஸாயனமுமாகும். லோஹங்களை ஒன்றோடொன்று சேர்ப்பதிலும் ரஸத்திற்கு பிராணசக்தியை அளிப்பதிலும் மிகவும் சிறந்தது.

அப்பிரகம்

இதன் சுத்தி முறையும் தான்யாப்பிரக முறையும் ஸத்வபாதன முறையும் முன்னமே கூறப்பட்டுள்ளன.

அப்பிரகபஸ்மமுறை: தான்யாப்பிரகத்தைச் சிறுகீரை சாற்றில் நூறில் ஒரு பங்கு வெங்காரத்துடன் சேர்த்தரைத்துக் கஜபுடமிடவும். இவ்விதமே கோரைக்கிழங்கு கரணைக் கிழங்கு, மூக்கரட்டை இவைகளின் சாற்றில் வகைக்கு மூன்று கஜபுடமும், தூதுவளை திரிபலை கோமூத்திரம் இவைகளில் அரைத்து வகைக்கு ஐந்து புடமும், ஆலம் விழுதின் சாற்றில் பத்துபுடமும் எலுமிச்சம்பழம் சாற்றில் ஆறுபுடமும், பசும் பாலில் மூன்று புடமும் கொடுக்கவும். ஒவ்வொரு புடத்திலும் அரைப்பதும் வெயிலில் பாகமும் ஸ்தாலீ பாகமும் புடபாகமும், ஒவ்வொருபுடத்திலும் வெங்காரம் நூற்றில் ஒரு பங்கு சேர்ப்பதும் செய்யவேண்டும். இவ்விதம் செய்ய சந்திரிகை (பளபளப்பு) இல்லாமல் பஸ்மமாகும்.

இவ்விதம் ஸாமான்யமான பஸ்மமாக்கின பின்னர் அந்தந்த ரோகங்களுக்குகந்த மூலிகைகளின் சாற்றால் அரைத்து 21 புடம் போடவும். காலையில் சாறு விட்டு அரைப்பதும், பகலில் வெயிலில் வைப்பதும், மாலையில் ஸ்தாலிபாகமும், இரவில் புடமிடுவதும் செய்யவேண்டும்.

தான்யாப்பிரகம் ஸத்வம் ஸத்வத்தை நிர்மலமாக்குவது, பஸ்மம், அமிருதீகரணம் என அப்பிரகத்திற்கு ஐந்து வித ஸம்ஸ்காரங்கள் செய்யப் படுகின்றன. அப்பிரகத்தையும் அப்பிரகஸத்வத்தையும் பஸ்மமாக்குவதற்கு லிங்கமும் வெங்காரமும் மிகவும் பயன் தரக்கூடியவை.

தான்யாப்பிரகத்தைக் கோரைக்கிழங்குச் சாற்றிலும் கோமூத்திரத்திலும் திரிபலை கஷாயத்திலும் அரைத்து

வகைக்கு இருபத்தைந்து புடம் போட்டு பின் தூதுவளைச் சாற்றில் அரைத்து ஒரு புடமும், பசுவின் பாலில் மூன்று புடமுமிட அப்பிரகம் மிகச் சிறந்த பஸ்மமாகும். பிறகு வியாதிக்கேற்றவாறு விசேஷமான ஸம்ஸ்காரங்கள் செய்யலாம்.

தான்யாப்பிரகம் ஒரு பங்கும் வெங்காரம் இரண்டு பங்கும் சேர்த்து அந்த மூஷையிலிட்டுக் கடுந்தீயில் ஊதி எடுத்துத் தானாக ஆறியதும் எல்லா மருந்துகளிலும் சேர்க்கலாம். வியாதிக்கேற்ற விசேஷஸம்ஸ்காரங்களும் செய்யத் தகுந்தது.

தான்யாப்பிரகத்தை அம்லவர்கத்தில் அரைத்து வெய்யிலில் வைத்துப் புடமிடவும். இவ்விதம் இருபது தடவை செய்த பின்னர் பசுவின் பாலில் பாவனை செய்து அரைத்து வெய்யிலிலிட்டு இருபத்தோரு புடமிடவும். பிறகு சிறுகீரை கள்ளி பனவேர் இவைகளின் சாற்றிலும் பாலிலும் வகைக்கு மூன்று நாள் வீதம் அரைத்து வெய்யிலிலிட்டு ஒவ்வொரு பாவனைக்குப் பிறகும் புடமிட மை போன்ற பஸ்மம் தயாராகும்.

தான்யாப்பிரகத்தை பத்தில் ஒரு பங்கு மிளகு சேர்த்து அம்லவர்க்கத்தில் மூன்று நாள் பாவனை செய்து அரைத்துக் காய்ந்ததும் ஒரு ஸம்புடத்திலிட்டுக் கடுந்தீயில் ஊதி ஸம்புடத்தைத் திறந்து அம்லவர்கத்திரவத்தைச் சுருக்குக் கொடுக்கவும். இவ்விதம் ஆறு தடவை செய்ததும், அகத்தி, முருங்கைஅ மூக்கரட்டைகளின் வேர் இலைகளின் சாறு விட்டரைத்து முன்போல ஆறுதடவை ஸம்புடத்திலிட்டெரித்து அம்மூலிகைச்சாறுகளைச் சுருக்குக் கொடுக்கவும். பிறகு சர்க்கரை தேன் நெய் பசுவின்பால் சேர்த்து அரைத்து ஆறுபுடமும், பொன்னாங்கண்ணி, ஏகவீரா இவைகளின் சாற்றில் அரைத்து மும்மூன்று கஜபுடமும் போட பஸ்மமாகும்.

தான்யாப்பிரகத்தைப் பொன்னாங்கண்ணி, துளஸி, நீர்முள்ளி, கற்றாழை, வெள்ளருகு, கண்டங்கத்திரிவேர், மூக்கரட்டை இவைகளில் தனித்தனியே அரைத்து வகைக்கு ஏழு தடவை கஜபுடமிட்டு சீந்திற்கொடியில் ஐந்து புடமுமிட பஸ்மமாகும்.

தான்யாப்பிரகத்தை எருக்கம் பாலிலும் எருக்கம் வேர் சாற்றிலும் அரைத்து ஏழு புடமிட பஸ்மமாகும்.

தான்யாப்பிரகத்தைக் காடியிலும், பருத்திச் சாற்றிலும், பசுவின் பாலிலும் முறையே தனித்தனியே பாவனை செய்து வெய்யிலிலிட்டு அரைத்து அவ்வுருண்டைக்குக் கஜபுடமிடவும். இவ்விதம் இருபத்தொரு தடவை செய்ய பஸ்மமாகும்.

அப்பிரகத்தின் குணம் : திரிதோஷங்களின் கெடுதலைப் போக்கி பலம் புஷ்டி ஆரோக்யம் இவைகளை அளித்து விஷத்தை முறிக்கின்றது.

லிங்கம்

சர்மாரம், சுகதுண்டம், ஸம்ஸபாதம் என்று மூன்று விதமாக லிங்கம் அகப்படுகின்றது. இவைகளில் ஹம்ஸபாதம் என்பது சிறந்தது.

லிங்கத்தின் சுத்தி: ஆட்டுப்பாலிலும் அம்லவர்கத்திலும் ஏழு தடவை பாவனை செய்ய சுத்தி ஆகும். இதற்கு மலங்களும் தோஷங்களும் கிடையாது.

இதன் ஸத்வம் ரஸமே. பாதனாயந்திரத்தில் இதன் ஸத்வத்தைப் பிரித்தெடுக்கலாம். ரஸத்திற்குள்ள குணங்கள் இதற்குமுண்டு.

கைரியம்

பூங்காவி மண்காவி என இரண்டு விதமாக இது அகப்படுகின்றது. பூங்காவியே சிறந்தது. இனிப்பு ரஸமும் சீதவீர்யமும் உள்ளது. கண்ணிற்கு ஹிதமானது. ரக்தபித்தம், விஷம், விக்கல், வாந்தி, தாபஜ்வரம் இவைகளைப் போக்கவல்லது.

சபலம்

தங்கம் வெள்ளி தாம்ரம் காரீயம் ஈயம் எஃகு வெங்கலம் விஷம் இவைகளின் ஸத்வரூபமாகத் தனித்தனியாகச் சபலம் கிடைக்கும். விஷ சபலம் கிடைத்தால் அதைக் காட்டெருமைச் சாணத்தில் புடம் போடப் புகையுடன் இருக்கும் வரை விலகியிருக்க வேண்டும். புகைபட்டாலும் புகையைப் பார்த்தாலும் பெருங்கேடுகள் விளையும். புகையடங்கிய பின் சபலத்தை எடுத்துக் கொள்ளலாம். அதைத் தொட்டவுடன் வைரம் பஸ்மமாகும். எல்லாவிதச் சபலங்களும் வங்க ஸதம்பனத்திலும் நாகரஞ்சனத்திலும் கிராமணத்திலும் வேதத்திலும் மிகவும் பயன்படுகின்றன.

சிலாஜது

இது கர்ப்பூர சிலாஜது எனவும் கோமூத்ர சிலாஜது எனவும் இருவகைப்படும். கோமூத்திர சிலாஜதுவில் ஸத்வமுள்ளது எனவும் ஸத்வமில்லாதனவும் இருவகை உண்டு. ஸத்வமுள்ளதே ஔஷதங்களில் சிறந்தது. கடும் வெய்யில் நாட்களில் மலைகளில் தங்கம் வெள்ளி போன்ற தாதுப்பொருள்களுள்ள இடத்தினின்று உருகி அரக்குப் போல் வெளிவரும் சிலாஜது அந்தந்த தாதுப்பொருள்களின் ஸத்வத்தையும் பெற்றிருக்கும். தங்கமுள்ள இடமிருந்து வந்தது சிவந்து கனமாகவும், வெள்ளியுள்ள இடமிருந்து வந்தது வெளுத்தும், தாம்ரமுள்ள இடமிருந்து வந்தது நீலமாகவும் இருக்கும்.

இது கபவாத தோஷங்களை நீக்கி அக்னி தீப்தி அளிக்க வல்லது. நெருப்பிலிட லிங்கம் போன்று உருண்டையாகிப் புகையில்லாமலிருப்பதும் தண்ணீரில் கரையும் குணமுள்ளதும் சுத்தமான சிலாஜதுவின் லக்ஷணமாகும். கோமூத்திரம் போன்று மணத்துடன் ஸநிக்தகுணமுள்ளதும் சிறந்தது.

திரிதோஷம், கண்நோய்கள், க்ஷயம், சோபம், உதரம், அர்சஸ், மேகம், மூத்திரரோகங்கள், ஜ்வரம், பாண்டு, ராஜயக்ஷ்மா, குல்மம், ஈரல்குலைக்கட்டி, ஹிருதய நோய் இவைகளைப் போக்கி மேதஸ்ஸைக் குறைக்கவல்லது.

பூநாகம்

சிவந்த மண்ணுள்ள பூமியில் உண்டாக்கி வெட்டினால் ரத்தம் பெருகும் மண்ணுண்ணிப் பாம்புகளிலிருந்து ஸத்வம் எடுக்கவேண்டும். இந்த ஸத்வம் வேதம் வரையிலுள்ள பலவித ரஸஸம்ஸ்காரங்களில் பயன் படுகின்றது.

மண்ணுண்ணிப்பாம்பை மக்கவைத்து ஜலம் விட்டலம்பி மீதமாகும் ஸத்வத்தை மித்ரபஞ்சகம் சேர்த்து மூஷையிலிட்டு ஊத ஸத்வம் வெளியாகும். அதை மறுபடியும் மூன்று தடவை வரை மித்ரபஞ்சகம் சேர்த்து ஊதி சுத்தமான ஸத்வத்தை எடுக்கவேண்டும்.

மண்ணுண்ணிப் பாம்பையும் அது வளரும் மண்ணையும் ஆறு மாதம் வரை ஜலம் விட்டு நிரப்பிப் பிறகு அப்பிரகஸத்வம் போல் இதன் ஸத்வத்தையும் எடுக்கலாம்.

சரத்ருதுவில் மண்ணுண்ணிப்பாம்புகளை மயிலுக்கு ஆகாரமாகக் கொடுத்து அதன் மலத்தைச் சேகரித்து அலம்பி, கொம்பரக்கு, ஸத்ஜரஸம், ஸர்ஜக்ஷாரம், குக்கில்

மித்ரபஞ்சகம், ஆட்டுமயிர், க்ஷாரங்கள், உப்புகள், கரும்பாம்பு, இந்திரகோபப்பூச்சி, மீன், ஓணான், ஆமை ஓடு முயல் எலும்பு, மாக்ஷிகம், மயில் துத்தம் இவைகளுக்குச் சமம் மயில் மலம் சேர்த்து மூஷையிலிட்டுக் கடுந்தீயில் ஊதிக் கிட்டத்தைப் பிரித்து மறுபடியும் மூன்று தடவை ஊத ஸத்வம் மிகுதியாகும்.

ஹரித்ராச்மம்

மஞ்சள் நிறமுள்ள இக்கல்லிலிருந்து வெண்ணிற முள்ள பொன் கிடைக்கின்றது.

அக்னிஜாரம்

அம்பர் கடுரஸமும் உஷ்ண வீர்யமும் உள்ளது. வயிற்று நோய்களையும் மற்றும் கபவாத ஸந்நிபாதநோய்களையும் போக்குவதில் நிகரற்றது. தனுர்வாதம் போன்ற கொடிய வாத நோய்களைக் கட்டுப்படுத்தும் வல்லமையுள்ளது.

கர்பரம் (ரஸகம்)

இது தர்துரம் காரவேல்லகம் என இரண்டு விதமாக அகப்படுகின்றது. தர்துரத்தில் ஸத்வமான துத்தநாகம் ஸுலபமாகக் கிடைப்பதால் சிறந்தது. இது எல்லா தோஷங்களையும் போக்க வல்லது. முக்கியமாக கண்ரோகங்களில் சிறந்தது.

கர்பரஸத்வம் : முன்னை திரிபலை மஞ்சள் வெல்லம் வெங்காரம் இவைகளை ரஸகத்திற்கு கால் பங்கு சேர்த்து மூஷையிலிட்டு மூடி குழாயைச் சொருகிச் சீலை செய்து வெயிலில் காயவைத்து பாதாளயந்திரத்தில் எரிக்க ஸத்வம் விழும்.

ஸ்திரீயின் ரஜஸ்ஸாலும் மூத்திரத்தாலும் ரஸகத்தை மூன்று தினம் பாவனை செய்ய சுத்தியடையும்.

மயில் துத்தம்

இது மயில் கழுத்து போன்ற நிறத்துடன், உரைக்கப் பால் போன்று வெளுத்தும், ஜலத்தில் மிதந்தும் காணும். அல்லது கிளிவால் போல் பச்சை நிறத்துடன் உள் தங்கநிறமுள்ள புள்ளிகளுடனும், புளிப்புச்சாறு தடவிய இரும்புத் தகட்டில் உரைக்க இரும்பைத் தாம்ரநிறமாக்கும் குணமுடன் விளங்குவது நல்ல மயில் துத்தமாகும்.

துத்த சுத்தி : மயில் துத்தத்தைப் பத்தில் ஒரு பங்கு வெங்காரம் சேர்த்து பூனை மலத்தாலும், புறா மலத்தாலும் அரைத்து லகுபுடமிடவும். இவ்விதம் தயிராலும் தேனாலும் அரைத்துப் புடமிட சுத்தியாகும்.

துத்த ஸத்வம் : துத்தத்தையும் வெங்காரத்தையும் ஸமஎடை சேர்த்து மூஷையிலிட்டு மூடிக் கடுந்தீயில் எரிக்க தாம்ரஸத்வம் விழும்.

துத்தத்தின் குணம் : உரைப்பு துவர்ப்பு சுவை உள்ளதும், வெண்குஷ்டம், கண்நோய், விஷநோய் இவைகளில் நல்ல குணமளிக்கக்கூடியதுமாகும்.

கங்குஷ்டம்

இது தங்கம் வெள்ளி நிறமளிக்கக் கூடியதுடன் விரணம், பூச்சி, ஜ்வரம், சூலம், குல்மம் போன்ற நோய்களை அகற்றி மலத்தை வெளிப்படுத்தக் கூடியது.

கிரிஸிந்தூரம்

மலைகளில் கற்களின் நடுவில் வென்னீர் ஊற்றுகளிலிருந்து நழுவி வந்தரஸம் தாதுக்களுடன் சேர்ந்து

காய்ந்து சிவந்து ஸிந்தூரம் போன்று அகப்படும். அதுவே திரிஸிந்தூரமாகும்.

திரிதோஷங்களையும் சமனம் செய்வதும், ரஸக்கட்டிலும் தேஹவேதத்திலும் கண்நோய்களிலும் மிக உபகாரமளிப்பதும் இதன் குணங்களாகும்.

வெங்காரம்

லோஹங்களை உருக்குவதற்கும் ரஸத்தை வெட்டையாக்குவதற்கும் நிறமளிப்பதற்கும் இது பலவாறு உபயோகப்படுத்தப்படுகின்றது. இது நீரடைப்பு அதிஸாரம் ஸ்தாவர விஷம் இவைகளை நீக்கி ரஸஸித்தி அளிக்கவல்லது.

கம்பில்லகம்

ஸௌராஷ்டிரதேசத்தில் உண்டாகும் இத் தாதுப் பொருள் செங்கல் போன்ற சிவந்தும் பளபளப்பு அதிகமாயும் இருக்கும். நல்ல விரேசனமாகும். பித்தநோய்கள், விரணம், வயிற்றுவலி, பொருமல், கிரிமி, குல்மம், மூலநோய், அஜீர்ணம், ஜ்வரம், வீக்கம் இவைகளைப் போக்கவல்லது.

விஷம் - வத்ஸநாபி

இதன் உற்பத்தி முதலியவை முன்னரே கூறப்பட்டுள்ளன. இது எல்லாவித வியாதிகளையும் போக்கவல்லமிகச் சிறந்த ரஸாயனம்.

அன்னபேதி

இது வெள்ளை அன்னபேதி, புஷ்பகாஸீஸம், ஹீரகாஸீஸம் என மூன்று வகைப்படும். உஷ்ணவீர்யமும் க்ஷாரம் துவர்ப்பு புளிப்பு கசப்புச் சுவையும் உள்ளது. கண்நோய்களையும் வாதகபநோய்களையும் போக்குவதிலும் ரஞ்சனத்திலும் சிறந்தது.

கௌரீபாஷாணம்

மஞ்சள் நிறமுடன் தூளாக அகப்படும் தாதுப்பொருள். இது ரஸக்கட்டிலும் தோஷங்களை அகற்றுவதிலும் ரஸத்திற்கு வீர்யத்தை அளிப்பதிலும் சிறந்தது.

துவரிகா: படிகாரம்

துவர்ப்பாயும் மஞ்சிட்டியின் நிறத்தை துணியில் ஏற்ற உபயோகப்படுத்தப்படுவதுமான மண் இது. இதை துவரிகா என்பர். கண் ரோகங்களில் சிறந்தது. படிக்காரம் கலந்த மண்ணிற்கு துவரிகா எனவும். அம்மண்ணினின்றும் காய்ச்சி எடுக்கப்பட்ட படிக்காரத்திற்கு படகீ பால்பாஷாணம் என்றும் பெயர்.

முதாரசிங்கு

குர்ஜரதேசத்தில் அர்ஜுனமலைக்குப் பக்கத்தில் இது கிடைக்கின்றது. ஈயத்தின் உபதாதுவான இது வாதகப நோய்களைப் போக்கி கேசங்களின் நிறத்தைப் பாதுகாக்கின்றது. உத்தமமான ரஸபந்தன திரவ்யங்களில் ஒன்று.

ஸிந்தூரம்

காரீயச் சத்வமுள்ள உபதாதுவான இது திலகம் முதலியதற்கு அழகு பொருளாக உபயோகப்படுத்தக் கூடியது. விரணம் அரிப்பு விஷம் இவைகளைப் போக்க வல்லது. லிங்கத்திற்குள்ள குணங்களுமிதற்கு உண்டு.

ரஸாஞ்சனம்

ரஸத்துடன் அகப்படக்கூடியதும் ரஸத்துடன் கூடியதுமான உபதாது இது. பித்தளை உருக்கும் பொழுது ஏற்படும் கிட்டமும் ரஸாஞ்சனம் எனப் பெயருள்ளது. இது

இரண்டும் கிடைக்காவிடத்து மரமஞ்சள் சத்தும் உபயோகப் படுத்தலாம். துவர்ப்பு, உரைப்பு, கசப்பு சுவை உள்ளது. சிறிது உஷ்ணவீர்யமும் கபத்தை இளக்கி வெளிக்கொணரும் சக்தியும் உள்ளது. ரக்தபித்தம் கண்ரோகங்கள் இவைகளை அகற்றும்.

நீலாஞ்சனம்

புறா நிறத்துடன் ஜலமுள்ளப் பிரதேசத்தில் கிடைக்கும் அஞ்சனதாது இது. சீதவீர்யமுடன் கண்ணிற்கு ஹிதமானது. விஷம்-கபவாத நோய்களை அகற்றக் கூடியது.

ஸௌவீராஞ்சனம்

இது மழமழப்புடனும் கல்லில் உரைக்க கருநிறமுடனும் உள்ளது. இது ரக்தபித்தம் விஷம் விக்கல் கண்ரோகங்கள் விரணம் இவைகளில் சிறந்தது.

ஸ்ரோதோஞ்சனம்

நதிகளில் புற்றுப் போன்று காணப்படும் உபதாது இது. ஒடிக்க கருநெய்தல் நிறத்திலும் உரைக்கச் சிவந்தும் காணப்படும். துவர்ப்புடன் சீதவீர்யமுள்ள இத கிருமிகளைப் போக்கவல்லது. தாய்ப்பாலை அதிகரிக்கச் செய்யும். மற்ற அஞ்சன குணங்களும் இதற்கு உண்டு.

அபின்

போஸ்துச் செடிகளின் பிசின் இது. வெண்ணிறமுள்ள பிசினை ஜாரணம் எனவும் கருநிறமுள்ளதை மாரணம் எனவும், மஞ்சள் நிறமுள்ளதை தாரணம் எனவும், பல நிறமுள்ளதை ஸாரணம் எனவும் கருதுகின்றனர்.

ஸந்நிபாதம், கிரஹணி, அதிஸாரம், நபும்ஸகத் தன்மை இவைகளை அகற்றவல்லது. மயக்கம் தரும் பொருள்களில் ஒன்று.

புஷ்பாஞ்சனம்

பித்தளையின் உபதாதுவான அஞ்சனப் பொருள் இது. பித்தநோய்கள் விக்கல் எரிச்சல் விஷம் காஸம் நோய்கள் இவைகளைப் போக்கவல்லது.

சங்கு

ஸமுத்திரத்திலிருந்து கிடைக்கும் பெருஞ்சங்குகளும் சிறியசங்குகளும் உபயோகப்படுகின்றன. உரைப்புச் சுவையுடனும் சீதவீர்யத்துடனும் புஷ்டி வீர்யம் பலம் இவைகளை அளித்து குல்மம் சூலம் கபசுவாஸம் விஷம் இவைகளைப் போக்க வல்லது. சிறியசங்கு சூலத்தைப் போக்கி அக்னிதீப்தி அளிக்கவல்லது.

முத்துச்சிப்பியும் - கிளிஞ்சலும்

இவை உரைப்புடன் ஸ்நிக்தகுணமுள்ளவை. சுவாஸம் ஹிருதயரோகம் சூலம் இவைகளைப் போக்கி பசி தீபனம் அளிக்கவல்லவை.

சோழி

முதுகு பெருத்து மஞ்சள் நிறமுள்ளதும் முட்டை வடிவமுள்ளதும் உயர்ந்தது. ஒன்றரை நிஷ்க எடையுள்ளது உயர்ந்தது; ஒரு நிஷ்க எடை உள்ளது மத்யமம்; அரை நிஷ்க எடை உள்ளது மத்யமம் என்வும் கருதப்படுகின்றது. பரிணாமசூலம் கிரஹணீ க்ஷயம் வாதகபநோய்கள் காது-கண்நோய் இவைகளில் சிறந்தது. தீபனம் ருசி அளிக்க வல்லது.

சவர்க்காரம் (ஸாபுணி)

இது பிடம் போன்று க்ஷாரங்களை ஒன்று சேர்த்துத் தயார் செய்யப்படுவது. பஸ்தி-மலாசயங்களைச் சுத்தி செய்வதில்

கிருமிகளைப் போக்குவதிலும் துணியைச் சுத்தி செய்வதிலும் சிறந்தது.

நவச்சாரம் : கரீரம் பீலு என்ற க்ஷாரமரங்களை எரிப்பதினின்றும் கற்களில் ஒட்டிக்கொண்டிருக்கும் க்ஷாரமிது. ரஸஜாரணத்திலும் லோஹத்தை உருக்குவதிலும் ஜடராக்னி தீபனத்திலும் குல்மம் பிலீஹை வாய் உலருதல் இவைகளிலும் சாப்பிட்ட மாம்ஸத்தை ஜீர்ணம் செய்வதிலும் சிறந்தது.

ஸௌராஷ்டிரீ

இது ஸௌராஷ்டிர தேசத்தில் கிடைக்கும் உவர் மண்ணாகும். இதிலிருந்தும் உலையில் ஊதி எடுத்த ஸத்வம் உயர்ந்த கிராமணமாகும்.

எலிப்பாஷணம்

இது லோஹங்களை ஒன்று சேர்ப்பதில் உபயோகப் படுகின்றது. நெகிழ்ச்சி வரட்சி குணமுள்ள இது வாந்தி, ஜ்வரம், மேதஸ், துர்மாம்ஸம் முதலிய ரோகங்களில் உள் வெளி உபயோகத்திற்காகப் பயன்படுகின்றது. வெள்ளியாக்கும் வேதத்தில் உபயோகப்படுகின்றது.

ஸர்ஜரஸம்

இது ஸாலமரத்தின் பிசின், பூஜைக்குத் தூபம் போட மிகச் சிறந்த வாஸனை திரவ்யமாகும். சிகப்பு மஞ்சள் வெளுப்பு கருப்பு இந்த நான்கு நிறங்களிலும் பலநிறங்களிலும் கிடைக்கும். இவைகளில் கருப்பு நிறமுள்ளதே சிறந்தது. குளிர்ச்சி, மழமழப்பு குணமுடன் துவர்ப்பு கசப்புச் சுவை உள்ளது. வாதபித்த நோய்கள், கொப்புளம், அரிப்பு, விரணம் இவைகளில் உள் வெளி உபயோகத்திற் சிறந்தது.

குக்குலு

உவர்மண் பூமியில் உள்ள குக்கில் மரங்களிலிருந்தும் கடும் வெயிலில் உருகி குக்குலுப்பிசின் வெளி வருகின்றது மஹிஷாக்ஷம் நீலம் பத்மம் குமுதம் ஸுவர்ணம் என்ற நிறத்தை ஒட்டிய ஐந்துவிதப் பெயர்களுடன் ஐந்து விதமாகக் கிடைக்கின்றது. மகிஷாக்ஷமும் நீலமும் யானைகளுக்கும், குமுதமும் பத்மமும் குதிரைகளுக்கும், ஸவர்ணம் மனிதர்களுக்கும் ஏற்றது.

சிற்றாமணக்கெண்ணெய், நல்லெண்ணெய், நெய் இவைகளில் ஒன்றில் உருக்கி வடிகட்டியும், பஞ்சதிக்த கஷாயத்தில் டோலாயந்திரத்திலும் சுத்தி செய்யவேண்டும். சுத்தி செய்த குக்குலுவினால் பிடகை, கண்டமாலை, முதலிய வாதவியாதிகள் தீரும்.

யவக்ஷாரம்

யவத்தாள்களிலிருந்தும் எரித்து ஜலத்தில் வடிக்கட்டிக் காய்ச்சி எடுக்கப்பட்ட க்ஷாரம் இது. உரைப்பும் உஷ்ண வீர்யமுமள்ள இது கபவாதநோய்கள், உதரம், அஜீர்ணம், சூலம், அச்மரி, மூத்திரகிருச்சிரம் விஷம் இவை போன்ற நோய்களில் மிக உபகாரமளிக்கின்றது.

ஸர்ஜக்ஷாரம்

ஸர்ஜமரத்திலிருந்து எடுக்கப்படும் க்ஷாரம் இது. யவக்ஷாரம்போல் இது வயிற்று நோய்களில் மிகச் சிறந்தது.

லவணக்ஷாரம்

சிற்சில உப்புகளிலிருந்தும் பிரித்தெடுக்கப்படும் க்ஷாரமிது. மிகத்தீக்ஷ்ணகுணமுடன் பித்தத்தை அதிகரிக்கச் செய்து வாதகுல்மம் போன்ற நோய்களைப் போக்குகின்றன.

வஜ்ரக்ஷாரம்

சந்தனம் போன்ற ஸாரவிருக்ஷங்களை எரிக்கும் பொழுது புகையிலிருந்து எடுக்ககூடிய இந்த க்ஷாரம் மிகவும் உஷ்ணகுணமுள்ளது. குல்மம் உதரம் சூலம் போன்ற நோய்களில் சிறந்தது.

ஸமுத்ரம் - கடல் - உப்பு

கடல் நீரிலிருந்து பிரித்தெடுக்கப்படும் இந்த உப்பு ருசி தீபனம் அளித்து ரக்த பித்தம் கபவாத நோய்கள் இவைகளை அகற்றும். ஆனால் விதாஹம் ஏற்படுத்தும்.

இந்துப்பு

ஸிந்து நதியிலிருந்து எடுக்கப்படும் உப்பு ருசி தீபனம் பலம் கண்களுக்குப் பலம் இவைகளை யளிக்கின்றது. மூன்று தோஷங்களின் கெடுதல்களையும் அகற்றி விரணங்களையும் ஆற்றுகின்றது. சிகப்பு வெளுப்பு என இரு நிறங்களில் கிடைக்கும் இந்த உப்பில் வெளுப்பே சிறந்தது.

காசலவணம் (வெடியுப்பு)

பித்தத்தை அதிகரிக்கச் செய்து எரிச்சலை உண்டாக்கும். தீபனமளித்து கபவாதநோய்கள் குல்மம் சூலம் இவைகளைப் போக்கும்.

கந்தகவெடியுப்பு

இது செயற்கைப் பொருள். உஷ்ணமும் தீபனமும் ருசி அளிப்பதுமாகும். வாயு அஜீர்ணம் சூலம் குல்மம் மேஹம் இவைகளைப் போக்கவல்லது.

ஸெளவர்சலை உப்பு

உரைப்புடன் கூடிய இந்த உப்பு உஷ்ணமானது. மேல் நோக்கும் வாயு அஜீர்ணம் சூலம் அரோசகம் இவைகளைப் போக்கவல்லது.

அம்லவேதஸம் (புளிவஞ்சி?)

புளிப்புகளில் உயர்ந்தது, சங்கு மாம்ஸம் போன்றவைகளைக் கரைக்கவல்லது. அஜீர்ணம், வாயு, கபார்சஸ், குல்மம் அரோசகம் இவைகளைப் போக்கவல்லது.

உபதாதுக்களின் சுத்தி

அன்னபேதி, வெங்காரம், காவி, கங்குஷ்டம், சோழி, சங்கு, நீலாஞ்சனம் இவைகளை எலுமிச்சம்பழச்சாற்றில் ஒரு தினம் பாவனை செய்ய சுத்தியாகும். பசுவின் பால் திரிபலை கஷாயம் கையாந்தகரையின் சாறு இவைகளில் ஒரு நாள் பாவனையில் சிலாஜது சுத்தியாகும். ஆட்டுப் பாலிலும் அம்லவர்கத்திலும் பாவனையில் லிங்கம் சுத்தி ஆகும்.

ஸௌவீரம், காந்தம், பூநாகமண், மற்ற உபரஸங்கள் இவை ஸௌர்ணாவர்தம், வாழைக்கிழங்கு, தேவதாளி, முருங்கை, பேய்பீர்க்கு, காட்டுப் பழுபாகல், மணத்தக்காளி இவைகளின் ஒன்றின் சாற்றுடன் மூன்று விதக்ஷாரங்களும் உப்புகளும் சேர்த்துப் பாவனை செய்ய சுத்தி அடையும். மற்றும் மூக்கரட்டை, சிறுகீரை, எலுமிச்சம்பழம், பனச்சி, அகத்திப்பூ, புளி, அம்லவேதஸம், காட்டுக்கருணை, கீழ்க்காய்நெல்லி, அரளி, பாகல், வன்னி, கோரைக்கிழங்கு, மீன் கொழுப்பு, காடி, இவைகளில் ஏதாவதொன்றில் மூன்று நாள் தோலாயந்திரத்தில் எரிக்க உபரஸங்கள் சுத்தி அடையும்.

இரண்டாவது உல்லாஸம்

லோஹங்கள்

தங்கம், வெள்ளி, தாம்ரம், காந்தம், எஃகு, இரும்பு, காரீயம், ஈயம், பித்தளை, வெங்கலம், பஞ்சலோஹம், மண்டூரம் இவை லோஹங்கள் எனக் கருதப்படுகின்றன.

தங்கம்

காய்ச்சச் சிவந்தும் வெட்ட வெளுத்தும், உரைக்க குங்கும நிறமடைந்தும், பாரமுள்ளதும் மழமழப்பு, மெதுதன்மை காந்தி உள்ளதும் தளமாகப்பிரியாமலும் இருக்கும் தங்கம் சிறந்தது. வெளுத்து வரண்டு நிறம் குன்றி அழுக்குடன் அடித்தால் தகடாகப் பிரிந்து உரைத்தாலும் காய்ச்சினாலும் வெளுத்துமிருக்கும் தங்கம் வேதத்திற்கும் மருந்திற்கும் ஏற்றதல்ல.

தங்கத்தின் சுத்தி : புற்றுமண், ஒட்டடை, காவி, செங்கல்தூள், உப்பு என்ற இவ்வைந்து மண் வகைகளை எலுமிச்சம்பழச்சாற்றில் அரைத்து தங்கத் தகட்டின் மேல் தடவி சாம்பலினுள் வைத்துக் காய்ச்சி உருகியவுடன் சுத்தி அடைகின்றது. பிறகு நெருப்பில் காய்ச்சி நல்லெண்ணெய் மோர் காடி கொள்ளுகஷாயம் இவைகளில் வகைக்கு ஏழு தடவை சுருக்குக் கொடுக்கவேண்டும். பிறகு மந்தாரை இலைச் சாற்றில் அலம்பவும்.

தங்க பஸ்மம்: காரீயத்தூளை மனோசிலை சேர்த்து கள்ளிப்பாலில் அரைத்துப் புடமிட்டு அப்பஸ்மத்தைக் கள்ளிப்பாலில் அரைத்துத் தங்கத் தகட்டின் மேல் தடவி புடமிட்வும். இவ்வாறு தங்கத்தில் அரைக்கால் பங்கு காரீயபஸ்மம் பூசி எட்டு புடமிட பஸ்மமாகும்.

ரஸம் கந்தகம் ஸ்வர்ணமாக்ஷிகம் இம்மூன்றையும் அம்லவர்கத்தால் அரைத்து தங்கத் தகட்டில் தடவி எட்டு புடமிட பஸ்மமாகும்.

தங்கத்தையும் ரஸத்தையும் ஸமனெடை சேர்த்து அரைத்துச் சராவத்திலிட்டு மேலும் கீழும் அவ்விரண்டிற்கும் சமம் கந்தகத்தூளைப் பரப்பி மூடி 30 வராட்டிகளில் 14 புடமிட பஸ்மமாகும்.

ஒரு தோலா தங்கத்தை உருக்கி அதில் சுத்தமான காரீயம் ஒரு உளுந்தெடை சேர்த்துத் தூள் செய்து ஸமனெடை மாக்ஷிகமும் கந்தகமும் சேர்த்து அம்லவர்கத்தால் அரைத்து பத்து லகுபுடமிட பஸ்மமாகும்.

இவ்விதம் உப ரஸங்களையும் மஹா ரஸங்களையும் அம்லவர்கத்தால் அரைத்துத் தங்கத் தகட்டில் பூசிப் புடமிட பஸ்மமாகும்.

தங்கத்தை இரண்டு பங்கு ரஸம் சேர்த்து அரைத்து தங்கத்திற்குச் சமம் மாக்ஷிகத்தைத் தூள் செய்து மூஷையின் அடியில் பரப்பி மேல் தங்க ரஸங்களை வைத்து மேல் அவ்வளவிலேயே மாக்ஷிகத்தைப் போட்டு மேல் கந்தகத்தையும் தங்கத்திற்குச் சமம் தூள்செய்து போட்டு மூஷையை மூடி நன்கு கடுந்தீயில் ஊதி ஆறிய பிறகு எடுக்கப் பஸ்மமாகும். அப்பஸ்மத்தில் ஐந்தில் ஒரு பங்கு வெங்காரமும் வெடியுப்பும் சேர்த்து தேன் நெய் விட்டுப் பிசிறி உருண்டையாக்கி மேலும் கீழும் ஸமனெடை தான்யாப்பிரகத்தைப் போட்டு மூஷையிலிட்டு மூடி இரண்டு யாமம் ஊத உயர்ந்த பஸ்மமாகும்.

தங்கத் தகட்டில் கால் பங்கு ரஸபஸ்மத்தை அம்லவர்கத்தால் அரைத்துப் பூசி எட்டு புடமிட பஸ்மமாகும். இம்முறையை மற்ற லோஹங்களிலும் கையாளலாம்.

தங்கத்தின் குணம்: ரஸத்திலும் விபாகத்திலும் தித்திப்பாகவும், குளிர்ச்சி, மழமழப்பு, குரு, லேகனம், ஸ்ரம்ஸனம் போன்ற குணமுள்ளதாகவும் இருக்கும். விஷதோஷம் விரணம் க்ஷயம் உன்மாதம் இவைகளைப் போக்கி வாக்குவன்மை மேதை பலம் புஷ்டி ஞாபகசக்தி காந்தி ஆயுஸ் கண் பார்வை ருசி வீர்யம் இவைகளை அளிக்கவல்லது.

மூன்றாவது உல்லாஸம்

லோஹங்கள் - வெள்ளி

காய்ச்சினாலும் வெட்டினாலும் வெளுத்தும் மிருதுவாகவும் வெடிப்பில்லாமலும் சங்கு போன்று நிறத்துடன் மழமழப்பாகவும் கனமாகவும் இருக்கும் வெள்ளி உயர்ந்தது. காய்ச்சச் சிவந்தோ மஞ்சளாகவோ கருத்தோ இருப்பதும் வரண்டு வெடித்து கனமில்லாமலிருப்பதும் உதவாது. வெள்ளியிலுள்ள லோஹக் கலப்பை அகற்ற காரீயமும் வெங்காரமும் சேர்த்து உருக்கி அழுக்கைப் போக்க வேண்டும்.

வெள்ளியின் சுத்தி: வெள்ளித் தகட்டைக் காய்ச்சி வாலுளுவை எண்ணெய்யில் மூன்று தடவை சுருக்குக் கொடுக்க சுத்தியாகும். இவ்விதம் வெண் மருதுச்சாற்றில் ஏழு தடவை காய்ச்சிச் சாய்க்கச் சுத்தியாகும்.

வெள்ளி பஸ்மம்: தாளகத்தை மருதாணி அகத்தி இவைகளின் பூச்சாற்றில் அரைத்து வெள்ளித்தகட்டில் தடவிப் புடமிட்டாலும், ரஸபஸ்மத்தை அம்லவர்கத்தில் அரைத்து வெள்ளித் தகட்டில் தடவி புடமிட்டாலும் பஸ்மமாகும்.

ரஸம் ஈயம் தாளகம் இம்மூன்றையும் ஸமனெடை அம்லவர்கத்தில் அரைத்து வெள்ளித் தகட்டில் தடவிப்

புடமிடலாம். இவ்விதம் கந்தகம் முதலிய மற்ற உபதாதுக்களையும் சேர்த்துக் கஜபுடமிடலாம்.

கீழ்காய்நெல்லியையும் மாக்ஷிகத்தையும் ஸமனெடை சேர்த்து திப்பிலி இந்துப்பு அம்லவர்கம் இவைகளுடன் அரைத்து வெள்ளித் தகட்டில் தடவி ஏழு புடமிடப் பஸ்மமாகும்.

ரஸத்தையும் வெள்ளியையும் சேர்த்து எலுமிச்சம் பழச்சாற்றால் அரைத்துப் பிஷ்டி செய்து மேலும் கீழும் கந்தகத்தைப் பரப்பி மூஷையிலிட்டு வாலுகாயந்திரத்தில் ஒரு நாள் எரித்து எடுத்து ஆறியவுடன் தாளகம் சேர்த்து அம்லவர்கத்தால் அரைத்து பன்னிரண்டு புடமிட பஸ்மமாகும்.

மாக்ஷிகத்தையும் சுண்ணாம்பையும் புளிமாதுளம் சாற்றாலரைத்து வெள்ளியில் தடவி 30 புடமிட பஸ்மமாகும்.

ஒரு பங்கு தாளகத்தை எலுமிச்சம்பழச்சாற்றில் அரைத்து நான்கு பங்கு வெள்ளியில் தடவி சராவத்திலிட்டு சீலை செய்து முப்பது வராட்டிகளில் பதினான்கு புடமிட பஸ்மமாகும்.

ஒரு பங்கு வங்கபஸ்மத்தையோ கந்தகத்தையோ எலுமிச்சம்பழச்சாறு விட்டரைத்து வெள்ளித் தகட்டில் பூசி 25 வராட்டிகளில் 3 புடமிட பஸ்மமாகும்.

ரஸத்தையும் கந்தகத்தையும் காக்கைத் துண்டியின் வேரும் சேர்த்து எருமைப் பால் விட்டு அரைத்துப் பிஷ்டி செய்து ஜலம் விட்டு அலம்பி அதை மஞ்சள் விழுதின் நடுவிலும் குதிரைலத்தியிலும் வகைக்கு 21 நாள் புதைத்து வைத்தெடுத்து அதை எலுமிச்சம்பழச்சாற்றிலரைத்து வெள்ளித் தகட்டில் தடவி இருபது புடமிட பஸ்மமாகும்.

வெள்ளியின் குணம்: ருசியில் துவர்ப்பும் புளிப்பும் விபாகத்தில் தித்திப்புமானது. குளிர்ச்சி, லேகனம், ஸ்நிக்தம் இக் குணங்களுள்ளது. வீர்யம் பலம் தீபனம் ருசி அளித்து வாத பித்தநோய்களைப் போக்கவல்லது.

நான்காவது உல்லாஸம்

லோஹங்கள் - தாம்ரம்.

மிகவும் மழமழப்புள்ளதும் மெதுவானதும் சிவந்தும் கனத்த அடியையும் தாங்கக் கூடியதும், கனமாயுமிருப்பது நேபாளத்தில் உண்டாகும் தாம்ரமாகும். இது உயர்ந்தது. வெளுத்து அல்லது கருத்தும் அடித்தால் விரிந்தும், அலம்ப அலம்பக் கருத்தும் காணப்படுவது உதவாது. தாம்ரத்தை சுத்தி செய்யாது உபயோகிக்க வலி, வயிற்றுப் பிரட்டல், மயக்கம், தலை சுற்றல், எரிச்சல், பேதி, வாந்தி இவைபோன்ற பல கெடுதல்கள் உண்டாகின்றன.

தாம்ரசுத்தி: காவியை க்ஷாரஜலத்தாலும் அம்ல வர்கத்தாலும் அரைத்துத் தாம்ரத் தகட்டில் தடவிக் காய்ச்சி எருமையின் மோரிலும் சாணஜலத்திலும் ஏழு தடவை சுருக்குக் கொடுக்க தோஷங்கள் நீங்கும். அல்லது எலுமிச்சம்பழச் சாற்றையும் உப்பையும் தாம்ரத்தகட்டில் தடவிக் காய்ச்சி காடியில் சுருக்கக் கொடுக்கலாம். அல்லது கற்றாழைக்குள் தாம்ரத் தகட்டைச் சொருகிப் புடமிட வெளுத்துச்சுத்தமாகும்.

தாம்ரத்தை கந்தகத்தால் பஸ்மமாக்கி மறுபடியும் காய்ச்சி உருக்கித் தாம்ரமாக்கவும். இவ்விதம் ஏழு தடவை செய்யச் சுத்தமாகும். கள்ளிப்பால் எருக்கம் பால் உப்புகள் காடி இவைகளைத் தாம்ரத் தகட்டில் தடவிக் காய்ச்சி

நொச்சியிலைச் சாற்றில் பன்னிரண்டு தடவை சுருக்குக் கொடுக்கச் சுத்தமாகும். சுண்ணாம்புக் கட்டியையும் உப்பையும் மோரிலும் காடியிலும் அரைத்துத் தாம்ரத் தகட்டில் தடவிக் காய்ச்சி புளித்த மோரிலும் நொச்சியிலைச் சாற்றிலும் சுருக்குக் கொடுக்க சுத்தமாகும். தாம்ரத்தை கோமூத்திரத்திலிட்டு ஒரு யாமம் எரிக்க சுத்தியாகும்.

தாம்ர பஸ்மம்: தாம்ரத் தகட்டின் மேல் கந்தகத்தை ஸமனெடை எலுமிச்சம்பழச்சாற்றில் அரைத்துத் தடவி புடமிட்டு எடுத்து அரைத்துப் பிறகு கால் பங்கு கந்தகம் சேர்த்து எலுமிச்சம்பழச்சாறு காடி அருகம்புல் சாறு புளிப்புமாதுளம்பழச்சாறு இவைகளால் தனித்தனியாக அரைத்து நான்கு புடமிடவும். பிறகு வெண் சர்க்கரை சேர்த்து ஒரு புடமிட பஸ்மமாகும்.

தாம்ரத்துடன் மூன்று பங்கு ரஸத்தை சேர்த்து எலுமிச்சம்பழச் சாற்றால் அரைத்துக் கொள்ளவும். மூஷையினுள் ஊமத்தை இலைகளைப் பரப்பி மேல் தாம்ரத்திற்குச்சமம் தூள் செய்து கந்தகத்தையும் மேல் தாம்ரபிஷ்டியையும் அதற்கு மேல் கந்தகத்தையும் போட்டு ஊமத்தை இலைகளால் மூடி சீலை செய்து கஜபுடம் போட பஸ்மமாகும்.

தாம்ரத் தகட்டை கந்தகத்தாலும் அம்லவர்கத்தாலும் அலம்பி கால் பங்கு ரஸம் சேர்த்து அரைக்கவும். தாம்ரத்திற்கு இரண்டுபங்கு கந்தகத்தை புளியாரைச்சாற்றால் அரைத்துத் தாம்ர பிஷ்டியின் மேல் பூசி பானையிலிட்டு மூடி ஒரு யாமம் எரிக்கப் பஸ்மமாகும்.

ரஸம் ஒரு பங்கும் கந்தகம் இரண்டு பங்கும் சேர்த்து ஒரு யாமம் அரைத்து ஸமனெடை தாம்ரத் தகட்டில் பூசி ஸ்தாலியின் நடுவில் வைத்து மூடிப் புடமிட பஸ்மமாகும்.

மிகப் பழைய தாம்ரத்துடன் ஈயம் வெங்கலம் காரீயம் எஃகு வெள்ளி காந்தம் இவ்வாறு லோஹங்களையும் வகைக்கு ஸமனெடை சேர்த்து மூஷையிலிட்டு ஊதித் தாம்ரம் மட்டும் மீதியானவுடன் எடுத்து அதை நொச்சிச் சாற்றில் ஏழு தடவை சாய்க்கவும். நொச்சிவேர்த் தூளை உருகிய அத் தாம்ரத்தில் போடவும் அத்தாம்ரத்தால் சிறிய பானை செய்யவும். அதற்கு இரண்டு பங்கு கந்தகமும் கந்தகத்தின் மூன்றில் ஒரு பங்கு ரஸமும் சேர்த்து புளிப்புச் சாற்றால் அரைத்து ஒரு பானையினுள் போட்டு அதன் மேல் முன் செய்த தாம்ரப்பானையால் மூடி பானையின் வாயை மட்சராவத்தால் மூடி ஜலமிருத்திகையால் அதைப்பூசவும். பானையை அடுப்பின் மேல் வைத்து ஆறு நாள் கிரமாக்னியில் எரித்துத் தானாக ஆறியவுடன் எடுக்க தாம்ரம் பஸ்மமாகியிருக்கும்.

தாம்ரபஸ்ம சுத்தி: தாம்ரபஸ்மம் ஐந்து பங்கு, வெடியுப்பு ஒரு பங்கு, வெங்காரம் ஒரு பங்கு, இவைகளை மூஷையிலிட்டு மேல் ஒரு பங்கு அப்பிரக பத்திரத்தால் மூடிச் சீலை செய்து ஊதச் சுத்தமாகும்.

தாம்ரபஸ்மத்தை புளிப்புச் சாற்றால் அரைத்து அவ்வுருண்டையை கருணைக்கிழங்கின் நடுவில் வைத்துச் சீலை செய்து கஜபுடமிட சுத்தமாகும்.

சில விசேஷ முறைகள் : கந்தகத்தை எலுமிச்சம்பழச் சாற்றில் அரைத்து தாம்ரத் தகட்டில் மேல் பூசி ஸ்தாலியின் நடுவில் வைத்து ஒரு யாமம் எரித்தெடுத்து ஆறிய பின்னர் எடுத்துத் தூள் செய்யவும். அதன் பஸ்மத்தை இரண்டு குந்துமணியளவு வெற்றிலையில் வைத்துச் சாப்பிட, வயிற்றுவலி அஜீர்ணம் இவைகளுடன் ஜ்வரத்தை வாந்தியும் பேதியுமாகிக் குறைக்கும். இதனால் விஷமும் இடு விஷமும் வாந்தியாகி நீங்கும். பசுவின் மோரும் சாதமும் ஆகாரமாகக் கொடுக்கவும். அதிகமாக வாந்தியோ பேதியோ ஆனால்

அதற்குகந்த சீதசிகித்ஸை செய்யவும். கரும்புத் துண்டை நெருப்பில் வாட்டிக் கொடுக்க வாந்தியையும், சர்க்கரையுடன் கூடிய வில்வக்கஷாயமோ மோருடன் கருவேலம் பட்டைச்சாறோ பேதியையும் நிறுத்தும்.

ரஸம் கந்தகம் இவை வகைக்கு ஒரு பங்கும், மனோசிலையும் தாளகமும் வகைக்கு அரைப்பங்கும் சேர்த்து அரைத்து கர்ப்பயந்திரத்தில் தாம்ரத்தகட்டின் மேலும் கீழும் வைத்து ஒரு யாமம் எரிக்கவும். இரண்டு குந்துமணி அளவு தகுந்த அனுபானத்துடன் சாப்பிட பரிணாம சூலம் உதரம் பாண்டு ஜ்வரம் குல்மம் பிலீஹை யகிருத்ரோகம் க்ஷயம் அக்னிமந்தம் மேஹம் அர்சஸ் கிரஹணீ போன்ற நோய்களில் சிறந்த குணமளிக்கும்.

தாம்ரத்தின் குணம்: துவர்ப்பு கசப்பு ருசியும், தித்திப்பு விபாகமும், உஷ்ண வீர்யமுமுள்ளது. விஷத்தை மேலும் கீழும் சோதனம் செய்வதால் போக்கவல்லது. பருமன், பசியின்மை, அர்சஸ், க்ஷயம், உதரம், குஷ்டம், ஜ்வரம் இவைகளில் சிறந்த ஔஷதம்.

ஐந்தாவது உல்லாஸம்

லோஹங்கள்: காந்தம்-எஃகு-இரும்பு.

சுத்தி செய்யப்படாத காந்தம் ஹிருதயவலி, அக்னி மந்தம் மஹாரோகங்கள் போன்று மரணபர்யந்தமான கெடுதல்களை விளைவிக்குமாதலால் சுத்தி செய்வது அவசியம். இது ரஸமாகிற மதயானையை வெல்லச் சிறந்த அங்குசமாகும். ஆதலால் இடமறிந்து காந்தத்தை சேகரிக்க வேண்டும். காற்று வெயில் இவைகளால் வீர்யம் குன்றிய காந்தத்தை எடுக்கக்கூடாது. பூமியினுள் இருக்கும் வீரியமுள்ள காந்தத்தை எடுத்து ஆட்டுரத்தத்தில் பாவனை

செய்து ஆட்டுரத்தம் பூசிய தோலால் மூடி பூமியினுள் ஏழு மாதங்கள் வைத்திருந்து எடுத்து ஜலமுள்ள குடத்தில் போட்டு சிகப்பு புஷ்பம் சந்தனம் இவைகளால் பூஜை செய்ய வேண்டும். இவ்விதம் செய்ய காந்தத்திற்கு சக்தி அதிகமாகும். முகங்களும் உண்டாகும். பிராமகமென்ற காந்தத்தை திராவகம் என்ற உயர்ந்த வகைக் காந்தமாக மாற்ற இந்த ஸம்ஸ்காரம் பயன் படும்.

காந்தலோஹம் சேர்க்காவிடில் ரஸம் சரீரத்தில் கிராமணம் அடையாது. காந்தத்தைப் பற்றி சில விபரங்கள் முன்பே கொடுக்கப்பட்டுள்ளன.

காந்த சுத்தி: காந்த லோஹத்தின் மேல் முயல் ரத்தத்தைப் பூசி அடுப்பிலிட்டு ஊதவும். இவ்விதம் மூன்று தடவை செய்ய ஸ்வபாவதோஷங்கள் விலகும். காந்தத்தைச் காய்ச்சி திரிபலாகஷாயத்தில் ஏழு தடவை சாய்க்க லோஹ-மலை தோஷங்கள் விலகும். காந்தலோஹத்தூளை எட்டு பங்கு கோமூத்திரத்தில் காய்ச்சிக் காடியிலலம்பிக் காய வைக்கச் சுத்தியாகும். புங்கு, சிறுபுள்ளடி, காவுஜபான், திரிபலை, சீந்தில், நன்னாரி, மல்லி, தந்தீமூலம் இவைகளை கோமூத்திரத்தில் அரைத்துக் கலக்கி அதில் பதினான்கு தடவை காந்தத்தைக் காய்ச்சிக் காய்ச்சிச் சாய்க்க எல்லா தோஷங்களும் விலகும்.

காந்தம்-எ:கு-இரும்பு-பஸ்மம்: ஐந்து பலம் லிங்கத்தை ஸ்தன்யத்தால் அரைத்து ஐந்து பலம் காந்தத் தகட்டில் பூசிக் கஜபுடமிடவும். பிறகு இருபதில் ஒரு பங்கு லிங்கத்தைத் திரிபலைக் கஷாயத்தாலோ, எலுமிச்சம்பழச் சாற்றாலோ காடியினாலோ அரைத்துப் பூசி எட்டு புடமிடவும். இரவில் புடமும் பகலில் பாவனையும் செய்யவும். இதனால் காந்தம் பஸ்மமாகும். அயமும் எஃகும் இம்முறை யினாலேயே பஸ்மமாகும்.

காந்தம், எஃகு, தேன் இரும்பு என்ற இம்மூன்று இரும்புகளின் தகடுகளை மண்பாத்திரத்தில் போட்டு நாகதந்திச்சாற்றால் அப்பாத்திரத்தை நிரப்பிக் கடும் வெயிலில் வைக்கப் பஸ்மமான இரும்பு மேல் மிதக்கும். எல்லா பாகமும் மிதக்கும் வரை சாறு விட்டு வரவும். மூன்று இரும்புகளும் பஸ்மமாகும்.

மூன்று இரும்புகளில் ஒன்றைத் தூள் செய்து பொன்னாங்கண்ணி, கொடிவேலி, நெரிஞ்சில், நெய்சட்டிப் பூண்டு இவைகளின் தனிச்சாற்றிலும் கோமூத்திரத்திலும் தனித்தனியே மூன்று பாவனைகள் செய்து ஒவ்வொரு பாவனைக்கும் ஒரு கஜபுடம் போட பஸ்மமாகும்.

மட்பானையிலோ இரும்புப் பாத்திரத்திலோ, இரும்புத் துடுப்பால் கிளறிக் கொண்டே திரிபலைக் கஷாயம் விட்டுக் காயச்சி எடுத்துத் திரிபலாக் கஷாயத்தால் அரைத்து அவ்வுருண்டையை சராவதிலிட்டு பதினாறு சதுர அங்குலப் பள்ளத்தில் பூமியில் புடமிடவும். இவ்விதம் மூன்று தடவை செய்யவும். இவ்விதம் கரிசலாங்கண்ணி, இஞ்சி பனைவேர் மெருகன் கிழங்கு, தண்ணீர் விட்டான் கிழங்கு, நிலப்பூசனி, திரிபலைக் கஷாயம் இவைகளில் தனித்தனியே அரைத்து முன் போல் ஸ்தாலீபாகமும் புடபாகமும் மூன்று தடவை செய்ய வேண்டும். பிறகு மூக்கரட்டைவேர் தசமூலம், கண்டங்கத்திரிவேர், மாதுளை, புரசம் விதை, முருங்கை இவைகளின் திரவத்திலும் பசுவின் பாலிலும் தனித்தனியே ஒரு யாமம் அரைத்து ஒவ்வொரு புடம் போட அவை பஸ்மமாகும்.

ரஸம் ஒரு பங்கும், கந்தகம் இரண்டு பங்கும் சேர்த்து கஜ்ஜிலி செய்து அவைகளுக்குச் சமம் இரும்புத்தூள் சேர்த்துக் குமரிச்சாற்றால் இரண்டு யாமம் அரைத்துத் தாம்ர பாத்திரத்திலிட்டு சிற்றாமணக்கிலையால் மூடி வெயிலில்

வைத்துச் சூடானவுடன் நெற்குவியலில் மூன்று நாள் வைத்து எடுத்து அரைத்துத் துணியில் வடிக்கட்டிக் கொள்ளச் சிறந்த பஸ்மமாகும்.

மருதம் பட்டையைக் காடியில் அரைத்துக் கலக்கி வெங்கலப்பாத்திரத்திலிட்டு அதன் நடுவில் காந்தத்தைப் போட்டு வெயிலில் வைத்து எடுக்கவும். இம்மாதிரி அயம் முதலியவை பஸ்மமாகும் வரை செய்யவும். இவ்விதமே நாகதந்தி இலையின் சாற்றில் காந்தம் முதலியவைகளை வைத்து வெய்யிலில் இட பஸ்மமாகும்.

காட்டுப்பழுபாகல், கையாந்தகரை, மூக்கரட்டை இவைகளின் சாற்றிலும் பசுவின் மூத்திரத்திலும் திரிபலைக் கஷாயத்திலும் இருபத்தோரு நாட்கள் அரைத்து இருபத்தோரு கஜபுடமிட காந்தம் முதலியவை பஸ்மமாகும்.

பனச்சியின் பழச்சோற்றை ஒரு கத்தியின் மேல் தடவி வெயிலில் வைத்துப் பூச்சு காய்ந்ததும் மேல் பூசி வந்து மாலையில் அதைக் கல்வத்திலிட்டு திரிபலாக் கஷாயத்துடன் அரைக்கப் பஸ்மமாகும்.

பனச்சியின் பழச்சோற்றை ஒரு கத்தியின் மேல் தடவி வெயிலில் வைத்துப் பூச்சு காய்ந்ததும் மேல் பூசி வந்து மாலையில் அதை கல்வத்திலிட்டு திரிபலாகஷாயத்துடன் அரைக்கப் பஸ்மமாகும்

பஸ்மத்தின் அமிருதீகரணம்: திரிபலைக் கஷாயம், நெய், பஸ்மம் செய்த காந்தம் முதலியவை இவை ஸமனெடை சேர்த்து தாம்ரபாத்திரத்திலிட்டு இரும்புத் துடுப்பால் கிளறிக்கொண்டே எரிக்க திரவம் சுண்டியவுடன் லோஹத்திற்குச் சமம் சர்க்கரை சேர்த்துப் பக்குவமானவுடன் இறக்கி உபயோகிக்கவும். அல்லது பஸ்மத்திற்குச் சமம் நெய் சேர்த்து எரித்து பஸ்மம் மீதமானவுடனும் எடுத்துக் கொள்ளலாம்.

காந்தலோஹ லக்ஷணம் : காந்தபாத்திரத்திலிட்ட ஜலத்தின் மேல் எண்ணெய் பரவாது; பெருங்காயத்தின் மணம் குன்றும்; வேம்பு தன் கசப்பை விடும்; எவ்வளவு காய்ச்சியும் பால் பொங்கி வழியாது. இவை காந்த பாத்திரத்தின் லக்ஷணமாகும்.

லோஹபாகம் : களிமண் சேறு போன்றது மிருது எனவும், உருண்டையாக ஆகுவது மத்யமம் எனவும், மணல் போலாவது கரபாகம் எனவும் கருதப்படுகின்றது. இவ்விதம் பஸ்மமான லோகத்திற்கு மித்ரபஞ்சகம் என்ற உத்தாபன திரவ்யங்கள் சேர்த்து மூஷையிலிட்டு ஊத நிருத்தமாகும் பஸ்மமே சிறந்தது. தேன் நெய் வெள்ளி அயத்தின் பஸ்மம் இவைகளை அந்த மூஷையிலிட்டு ஊதி எடுத்த பின் வெள்ளியின் எடை குன்றாமலிருந்தால் நிருத்தமாகும். லோஹம் தன் உருவை அடைந்தால் கந்தகம் ஸமனெடை சேர்த்து கற்றாழைச் சாற்றுடன் புடம் போட சுத்தமாகும்.

காந்தத்தின் குணம் : ஆயுஸ், ஆரோக்யம், பலம், வீர்யம், திடம், இந்திரியங்களின் நேர்மை இவைகளை அளித்து ராஜயக்ஷ்மா பாண்டு, ரக்தபித்தம், ஜ்வரம், மற்ற மஹாரோகங்கள் இவைகளைப் போக்கவல்லது.

எஃகின் குணம் : ருசியில் துவர்ப்பு புளிப்பும் கசப்பும் உரைப்பும், வீர்யத்தில் லகுவும் சீதமும் ரூக்ஷமும் உள்ளது. கபம், ரக்தபித்தம், பாண்டு, பிரமேஹம் சூலம் இவைகளைப் போக்கவல்லது.

தேன் இரும்பின் குணம் : கிருமி, அர்சஸ், வீக்கம், உதரம், குஷ்டம், பாண்டு ரோகங்களில் சிறந்தது.

ஆறாவது உல்லாஸம்

லோஹங்கள்: ஈயம்

மெதுவாகவும் வழவழப்பாகவும் எளிதில் உருகக் கூடியதும் வெண்மை நிறமுடையதும் உருக்கும் பொழுது சத்தமில்லாமல் உருகும் தன்மை உடையதுமான ஈயம் சிறந்தது.

ஈயத்தின் சுத்தி : மஞ்சள் தூளுடன் ஈயத்தை உருக்கி நொச்சியிலைச் சாற்றில் மூன்று தடவை சாய்க்கச் சுத்தியாகும். புளி மோரில் மூக்கரட்டை ஆடாதொடை இந்துப்பு இம் மூன்றையும் அரைத்துக் கலக்கி அதனால் பேய்ச்சுரைக் குடுக்கையில் ஈயத்தை பாவனை செய்ய சுத்தியாகும்.

ஈயத்தின் பஸ்மம் : ஈயத்தகடுகளை எருக்கம் பாலால் அரைத்த தாளகத்தால் பூசி அரசம் பட்டையின் க்ஷாரத்திலும் புளியம் பட்டை க்ஷாரத்திலும் வைத்து லகுபுடம்கள் போட்டு அரைத்துக்கொள்ளப் பஸ்மமாகும். அல்லது அரசம்பட்டை க்ஷாரம், புரசம்பட்டை க்ஷாரம், தாளகம் இவை ஸமனெடை சேர்த்து ஈயத்துடன் சேர்த்துப் புரசம்பட்டைச்சாற்றில் கலக்கிப் புடம் போடவும். பஸ்மமானதை பத்தில் ஒரு பங்கு தாளகம் சேர்த்துப் புரசம் பட்டைச் சாற்றுடன் அரைத்துக் கஜபுடமிடவும். இவ்விதம் 21 புடமிட வங்கம் பஸ்மமாகும்.

வாகைத்தூள் மஞ்சள்தூள் கற்றாழை இவைகளை உருண்டையாக்கி அத்துடன் ரஸம் தடவிய ஈயத் தகடுகளைச் சேர்த்து அரைத்து இருபத்தோரு லகுபுடங்கள் போட பஸ்மமாகும்.

தான்றிக்காயையும் சேங்கொட்டையையும் ஜலத்தில் அரைத்து ஈயத்தகட்டில் தடவி எள்ளு க்ஷாரத்தின் நடுவில் வைத்து 40 கஜபுடங்கள் போடப் பஸ்மமாகும்.

வங்கத்தின் குணம் : ருசியில் உரைப்பும் துவர்ப்பும் உப்பும்; வீர்யத்தின் தீக்ஷ்ணமும் உஷ்ணமும் உள்ளது. வாதத்தைத் தூண்டக்கூடியது. மேதஸ், கபரோகம், கிரிமி, மேக்ஷம், பாண்டு இவைகளையும் போக்கவல்லது.

காரீயம்

ஈயத்தைக் காட்டிலும் அதிக கனம் உள்ளதும், வெட்டக் கருத்தும், துர்நாற்றமுள்ளதுமாக இருக்கும் காரீயம் உயர்ந்தது. இது குணங்களில் ஈயத்திற்கு ஒப்பானது. சுத்திசெய்யாத ஈயமும் காரீயமும் குஷ்டம் குல்மம் வாத நோய்கள் மேலும் பாண்டு போன்ற நோய்களைக் கொடுக்கின்றன.

காரீயத்தின் சுத்தி : நொச்சிவேர்த் தூளை எருக்கம் பாலில் அரைத்துக் காரீயத் தகட்டில் தடவி ஏழு தடவை உருக்கிச் சாயக்கச் சுத்தியாகும். மஞ்சள், மல்லி, நீர் முள்ளி, கொத்துமல்லி, புரசு, நாயுருவி இவைகளில் கிடைத்தவற்றின் க்ஷாரத்தைக் கள்ளிப்பாலில் அரைத்து அதன் உள் ஏழு தடவை உருக்கிய காரீயத்தைச் சாய்க்கச் சுத்தியாகும்.

காரீயபஸ்மம்: காரீயத்துடன் அதில் கால் பங்கு அரசம்பட்டை க்ஷாரத்தையும், புரசம்பட்டை க்ஷாரத்தையும் சேர்த்து அடுப்பில் ஏற்றிக் கிளறிக் கொண்டேவர, காரீயம் பஸ்மமாகும். அப்பஸ்மத்துடன் ஸமனெடை மனோசிலை சேர்த்து எலுமிச்சம்பழச்சாறு அல்லது காடியால் அரைத்துப் புடமிடவும். பிறகு இரு பதில் ஒரு பங்கு மனோசிலை சேர்த்து புளிப்புச் சாற்றால் அரைத்து 60 புடங்கள் போட பஸ்மமாகும்.

காரீயத்தகடுகளைச் சுண்ணாம்பு பூசிச் சராவத்திலிட்டு ஒரு யாமம் எரிக்க பஸ்மமாகும். அதை கொடிவேலிச் சாறு விட்டு இருப்புச் சராவத்தில் மருதங்குச்சியால் கிளறிக் கொண்டே பதினாறு யாமம் வரை எரிக்கவும். பிறகு கொடிவேலிச் சாறு விட்டரைத்து ஆறு லகுபுடம் போட பஸ்மமாகும்.

புளி தான்றி சேங்கொட்டை ஆடாதொடை கள்ளி நாயருவி அரசு மருது இவைகளின் சாம்பலுடன் ஈயத்தை இரும்பு வாணலில் வறுக்க ஏழு தினங்களில் பஸ்மமாகும்.

காரீயத்தின் குணம் : அதிக உஷ்ணமும் மழமழப்பும் கசப்பும் உள்ளது. வாதகபநோய்கள் பிரமேகங்கள், ஆமவாதம் இவைகளில் சிறந்தது.

ஏழாவது உல்லாஸம்

லோஹங்கள்: பித்தளை.

ரீதிகா காகதுண்டி என இருவிதம் பித்தளை அகப்படுகின்றது. காடியிலிட்ட பித்தளை தாம்ர நிறமடைந்தால் ரீதிகா எனவும், கருப்பானால் காகதுண்டி எனவும் பெயர். கனம் மெதுத் தன்மை அழுத்தம் அடிதாங்குதல் மழமழப்பு இவையுள்ள பித்தளை உயர்ந்தது. வெளுத்து வரண்டு சுரசுரப்புடன் அடிதாங்காமல் விரிந்து துர்கந்தத்துடன் கணமில்லாமலிருக்கும் பித்தளை சிறந்ததல்ல. பித்தளை கசப்புடன் உப்பும், கிரமி ரக்தபித்தங்களைப் போக்க சக்தியும் உஷ்ண வீரியமும் உள்ளது. பிலீஹம், வயிறு பொறுமல் இவைகளைப் போக்கவல்லது.

வெண்கலம்

எட்டு பாகம் தாம்ரமும், இரண்டு பாகம் ஈயமும் சேர்த்து உருக்கப்பட்டது. வெண்கலமாகும். எஃகின், நாதமும், சிறிது கருத்த வெளுப்பும் உள்ளது. காய்ச்ச அழுக்கில்லாமல் பளபளப்புடன் இருக்கும். மஞ்சள் நிறமுள்ளதும் காய்ச்ச தாம்ரநிறமும் அடி தாங்காமையும் மந்தமான நாதமும் மங்கின நிறமும் உள்ள மருந்தில் சேர்க்கக் கூடாததே. நெய்யைத் தவிர மற்ற ஆகார வஸ்துக்கள் இப்பாத்திரத்தில் வைக்கக் கூடியவைகளே.

வீர்யத்தில் லகுவும் உஷ்ணமும், ருசியில் கசப்புமுள்ளது. பார்வை தெளிவு அளித்து கிருமி வாதபித்த நோய்கள் இவைகளைப் போக்கவல்லது.

வாதலோஹம் - பஞ்சலோஹம்

இது வெண்கலம், தாம்ரம், பித்தளை, இரும்பு, காரீயம் இவைகளின் கலப்பு லோஹமாகும். புளிப்பு நீங்கலாக எல்லாவித ஆகாரங்களும் இதில் புஜிக்கத் தகுந்தவையே. குதிரையின் மூத்திரத்தில் காய்ச்சித் தோய்த்தால் இது சுத்தி அடைகின்றது. கந்தகத்தையும் தாளகத்தையும் சேர்த்துப் புடமிட பஸ்மமாகும்.

இது ருசியில் உரைப்பும் கசப்பும், வீர்யத்தில் குளிர்ச்சியும் உள்ளது. கபபித்தங்களை சமனம் செய்து தாஹம் மோஹம் கிரிமி மலபந்தம் இவைகளைப் போக்கவல்லது.

வெண்கலம், பித்தளை இவைகளின் தகட்டின் மேல் மூன்று க்ஷாரங்களையும் ஐந்து உப்புகளையும் அம்ல வர்கத்தால் அரைத்துப் பூசி கஜபுடமிட சுத்தியாகும். தாம்ரம் போன்று இவைகளைப் பஸ்மம் செய்யவேண்டும்.

காரீயத்தால் தங்கத்தையும் மாக்ஷிகத்தால் வெள்ளி யையும், கந்தகத்தால் தாம்ரத்தையும், மனோ சிலையால் காரீயத்தையும், தாளகத்தால் ஈயத்தையும், ஸதன்யத்தில் அரைத்த லிங்கத்தால் மூன்று வித அயஸ்களையும், கந்தகத்தால் அப்பிரக ஸத்வத்தையும், வைத்தால் ரஸத்தையும் பஸ்மம் .செய்யலாம்.

அப்பிரக ஸத்வம்

கடினம், மிருது, துருதி, பீஜம் என அப்பிரகஸத்வம் நான்கு விதம். பீஜம் எல்லாவற்றிலும் உயர்ந்தது.

ஸத்வம் எடுக்க அப்பிரகஸித்தி : தான்யாப்பிரகத்தை எருக்கம் பாலில் ஊறவைத்து ஒரு நாள் வெயிலிலிட்டு மறு நாள் நன்கு அரைத்து சராவத்திலிட்டு மூடிக் கஜபுடமிடவும். இவ்விதம் ஏழு புடமிட்ட பின் எலுமிச்சம் பழச்சாற்றிலும் நொச்சிச்சாற்றிலும் அரைத்து வகைக்கு ஏழு புடமிட ஸத்வபாதனத்திற்குகந்த அப்பிரகம் தயாராகின்றது. அல்லது அப்பிரகத்தை பஸ்மம் செய்யக்கூடிய திரவங்களால் தான்யாப்பிரகத்தை அரைத்துப் புடமிடலாம்.

கடின ஸத்வம் : கொம்பரக்கு, குக்குலு, சுட்டஆட்டு மயிர், ஸர்ஜக்ஷாரம், உப்பு, முயல் எலும்பு, சிறிய மீன்கள், மஞ்கள், மித்ரபஞ்சகம், எருமையின் மலம் மூத்ரம் தயிர் நெய் பால், சேரான்கொட்டை இவை ஸமனெடை சேர்த்து இடித்து இதற்குச்சமம் ஸித்தாப்பிரகத்தைச் சேர்த்து பளபளப்பு நீங்கும் வரை அரைத்துக் கால் பல அளவு உருண்டைகளாக்கி உலையில் இட்டுக் கருங்காலித் தணலில் மூன்று யாமம் ஊத கடினமான ஸத்வம் விழும். பிறகு வெடியுப்பு வெங்காரம் சேர்த்து அந்த ஸத்வத்தை இரண்டு தடவை ஊதி எடுக்க ஸத்வம் சுத்தமாகும்.

மிருது ஸத்வம் : குத்துலு, வெங்காரம், குந்துமணி, ஸர்ஜக்ஷாரம், ஸர்ஜரஸம், வெல்லம், சிறிய மீன்கள், யவக்ஷாரம், வெடியுப்பு, பிண்ணாக்கு, கருணைக்கிழங்கு, மண்ணுண்ணிப்பாம்பு, திரிபலை, சித்திரகம், பால் முதுக்கன், மூக்கரட்டை, ஊமத்தை, கலப்பைக்கிழங்கு, சிற்றாமுட்டி, கந்தகம், பசுவின் பால், ஐந்து உப்புகள் இவைகள் வகைக்கு ஒரு பங்கும், தேன் எல்லாவற்றிற்கும் இரண்டு பங்கும் சேர்க்கவும். சிறிய கிளிஞ்சில், முயல் எலும்பு, புறா மலம், திரிகடு, தம்பல்ப்பூச்சி, முருங்கைவேர், கோதுமை, கடுகு, ஸவர்ணமாக்ஷிகம் இவைகளையும் வகைக்கு ஒரு பங்கு முன் கூறியவைகளுடன் சேர்த்து அரைத்து இக்கல்கம் ஒரு பங்கும், ஸித்தாப்பிரகம் இரண்டு பங்கும் எருமையின் தயிர், பால்,

நெய், மலம் மூத்திரம் இவை ஒரு பங்கும் சேர்த்து கால் தோலா அளவில் மாத்திரைகளாக்கி நிழலிலுர்த்தி உலையில் கருங்காலித் தணலில் ஐந்து நாழிகைகள் எரிக்க மிருது ஸத்வம் கிட்டும்.

இம்முறையில் காந்தம், துத்தம், மாக்ஷிகம் போன்ற உபதாதுக்களிலிருந்து ஸத்வம் எடுக்கலாம்.

அப்பிரக ஸத்வத்துடன் ஸமனெடை வெடியுப்பும் வெங்காரமும் சேர்த்து மூன்று தடவை வஜ்ரமூஷையிலிட்டு ஊதிக் காய்ச்சி அம்லவர்கம், கள்ளிஇலை, கோவை விதை இவைகளின் கல்கத்தில் ஏழு தடவை சாய்க்க மிருது ஸத்வம் வெளுத்து விடும்.

ஸித்தாப்பிரகம் மூன்று பங்கும், வெங்காரம் மாக்ஷிகம் ரஸம் இவை ஒரு பங்கும் சுட்ட ஆட்டு ரோமம் ஸர்ஜக்ஷாரம், யவக்ஷாரம் இவை வகைக்கு ஒரு பங்கும் சேர்த்து மூத்திர - அம்லவர்க்கங்களால் ஒரு நாள் அரைத்து ஆட்டுத் தயிர், பால், நெய், மூத்திரம், மலம் இவைகளுடன் சேர்த்து முன் போல ஸத்வம் எடுக்கலாம்.

அப்பிரக பீஜம் : ஸித்தாப்பிரகம் நூறு பலம், தங்கம் வெள்ளி தாம்ரம் காந்தம் ரஸம் கந்தகம் மாக்ஷிகம் நிமிளை மண்ணுண்ணிப்பாம்பு ஸத்வம் சிலாஜது, நீலாஞ்சனம், கங்குஷ்டம், அன்னபேதி, லிங்கம் இவை வகைக்கு பத்து நிஷ்கம், காவி வெங்காரம் தம்லப்பூச்சி வெல்லம் குந்துமணி தேன் நெய் குக்குலு ஸர்ஜக்ஷாரம் யவக்ஷாரம் கொசு சிறியமீன் முயல் எலும்பு எருமைக் கொம்பு இவைவகைக்கு ஐந்து பலம் இவைகளை எருமையின் தயிர், பால், நெய், மலம், மூத்திரம் இவைகளுடன் சேர்த்து அரைத்து வடகங்களாகச் செய்து ஸத்வம் முன் போல எடுக்க வேண்டியது. இப் பீஜஸத்வம் மிகச் சிறந்தது.

இந்த ஸத்வங்களைத் தூள் செய்து மித்ர பஞ்சகம் சேர்த்துமூஷையிலிட்டு மேலும் கீழும் வெடியுப்பைப் போட்டு மூடி கடுந்தீயில் ஏழு தடவை ஊத சத்தமாகும்.

அப்பிரக ஸத்வ பஸ்ம ஸிந்தூர முறைகள்: அழுக்குப் போக்கப்பட்ட அப்பிரக ஸத்வத்தை இரும்புக் கல்வத்திலிட்டு திரிபலைக் கஷாயத்தில் ஒரு யாமம் அரைத்து வெயிலில் காயவைத்து 40 புடங்கள் போட்டுப் பிறகு கையாந்தகரை, பஞ்சாமிருதம், கரும்புச் சாறு இவைகளால் வகைக்கு மூன்று புடமிட அப்பிரக ஸத்வம் பஸ்மாகின்றது.

அப்பிரக ஸத்வம் நூறு நிஷ்கமும் கந்தகம் ஒரு நிஷ்கமும் சேர்த்து ஒரு நாள் கையாந்தகரைச் சாற்றில் அரைத்து கஜபுடமிடவும். இவ்விதம் கந்தகம் சேர்த்து நூறு கஜபுடமிடச் சிந்தூரமாகும்.

அப்பிரக ஸத்வம் நூறு நிஷ்கம் எடுத்து அதில் ஒரு தடவைக்கு மாக்ஷிகம் அரை நிஷ்கம் வீதம் சேர்த்து எருக்கம் பாலில் அரைத்து நூறு புடமிட ஸிந்தூரமாகும்.

அப்பிரகஸத்வத்தை இருப்பு கல்வத்திலிட்டுத் திரிபலைக் கஷாயத்தில் யாமம் அரைத்து கடும் வெயிலில் பாவனை செய்து இரவு கஜபுடமிடவும். இவ்விதம் ஏழு புடங்கள் செய்தபின் கையாந்தகரை குமரி கொடிவேலி வேர் அவுரிஇலை மூக்கரட்டை, சிறுகீரை ஆலம்விழுது இவைகளின் திரவத்தில் அரைத்தது வகைக்கு ஏழு ஸூர்ய புடமும் கஜபுடமுமிட்டுத் தூள் செய்து நூறில் ஒரு பங்கு கந்தகம் சேர்த்துக் காடியினால் அரைத்து வெயிலிலிடவும். இவ்விதம் பத்து தினங்கள் செய்தபின் ஸவர்னமாக்ஷிகம் நூறில் ஒரு பங்கு சேர்த்துக் காடியில் அரைத்து பத்து நாட்கள் வெயிலிலிடவும். இவ்விதம் பஞ்சாமிருத திரவத்தில் ஐந்து நாட்களும், கருப்பஞ்சாற்றில் ஐந்து நாட்களும் செய்து

ஸிந்தூரமான பின் அதில் சுத்த லிங்கம் இருபதில் ஒரு பங்கு சேர்த்து ஸ்தன்யத்தால் அரைத்து, பூதரயந்திரத்தில் இருபது லகுபுடமிடவும்.

அப்பிரக ஸத்வத்தைத் தூள் செய்து கல்வத்திலிட்டு கரந்தைச் சாற்றில் அரைத்துப் பத்து கஜபுடமிடவும். இவ்விதம் நொச்சி ஆலம் விழுது போடாரீ, மருது நாவல்பட்டை இவைகளின் திரவத்தில் வகைக்குப் பத்து புடம் போட்டுக் கடைசியில் இருபதில் ஒரு பங்கு லிங்கம் சேர்த்து ஸ்தன்யம் விட்டரைத்து ஸம்புடத்தில் மூடி பூதர புடம் போடவும். இவ்விதம் இருபது தடவை லிங்கம் சேர்த்துப் புடம் போட உத்தமமான ஸிந்தூரமாகும்.

கடின அப்பிரக ஸத்வபஸ்மம் நரை திரை அகற்றி இந்திரியங்களுக்கு வலுவையளிக்கும். மிருத ஸத்வத்தின் பஸ்மம் மிகச் சிறந்த ரஸாயனமாவதோடு, தீபனபாசன சக்தி பெற்றது. ஜ்வரம் கிரஹணீ அதிஸாரம் அச்மரீ மூத்திரகிருச்சரம் க்ஷயம் பாண்டு ஹலீமகம் அர்சஸ் குஷ்டம் போன்ற பெருநோய்களிலும் நிகரற்ற பலனளிக்க வல்லது.

துருதி முன்னமே கூறப்பட்டுள்ளது.

மண்டூரம்

தான்றிக் கரியில் இரும்புக் கிட்டத்தைக் காய்ச்சி கோமூத்திரத்தில் ஆறு தடவை துவைத்து எடுக்க சுத்தியாகும். மிகப்பழைய கிட்டம் மருந்துகளில் உயர்ந்தது எனக் கருதுவர். இது பாண்டு, சோகை, அர்சஸ், கிரஹணீ, காமாலை, சூலம், பிரமேஹம், ஹிருதயப்லீஹரோகங்கள் இவைகளைப் போக்கவல்லது. வீர்யத்தில் குளிர்ச்சியும் ரஸத்தில் துவர்ப்பும் புளிப்பும்முள்ளது.

எட்டாவது உல்லாஸம்

ரத்தினங்கள்

மாணிக்கம் : ஸிம்ஹலம், காலபுரம், ஆந்திரம், தும்புரு என்ற நான்கு இடங்களிலிருந்து முறையே சிகப்பு, மஞ்சள் கலந்த சிகப்பு, அசோகபுஷ்ப நிறம், நீலம் என்ற நான்கு நிறங்களில் மாணிக்கம் கிடைக்கின்றது.

இது ஸூர்யனின் ரத்னமாகும். ஸ்நிக்தமான தளதளப்புள்ள மேனியும் கனமும் அழுக்கின்மையும் மிகச்சிவந்திருப்பதும் மாணிக்கியத்தின் உயர்ந்த குணங்களாகும். தீபன-விருஷ்ண சக்தி அளித்து கபவாத நோய்கள் க்ஷயம் கர்மநோய்கள் பூதவேதாள பீடைகள் இவைகளை அகற்ற வல்லது. புண்ணியமும் பாக்கியமும் தரவல்லது.

முத்து : இது சந்திரனின் ரத்னமாகும். யானை, பாம்பு, மீன், பன்றி, மலைச்சிகரம், மூங்கில், சங்கு, சிப்பி இவைகளிலிருந்தும் முத்து கிடைக்குமெனக் கருதுகிறார்கள். சிப்பிதான் முத்து கிடைப்பதில் எளியது. நக்ஷத்ரம் போன்று தளதளப்புடனும் பெரிய உருவத்துடனும் அழுக்கு விரணம் இல்லாமல் கனமுடன் இருப்பதுமான முத்து உயர்ந்தது. வீர்யத்தில் குளிர்ச்சியும் ருசியில் தித்திப்பும் உள்ளது. கண்நோய்கள், விஷம், வாதநோய்கள், ரத்தபித்தம், எரிச்சல், தாகம், ஜ்வரம், மோஹம், சிரமம் இவைகளைப் போக்கி பாக்கியம் காந்தி நீண்ட ஆயுள் இவைகளை அளிக்கின்றது.

பவழம் : இது செவ்வாயின் ரத்னமாகும். ஸமுத்திர மத்தியில் உண்டான கொடி பாகத்தால் பாஷாண உருவம் அடைகின்றது. பவழத்தில் கோவைப் பழம் செம்பரத்தம்பூ கிளிமூக்கு இவைகளைப் போன்றது உயர்ந்தது.

ஸ்வச்சமாகவும் தளதளப்புள்ளதும் உருண்டு கனத்துடன் கெட்டியான பவழம் சிறந்தது. பிளந்தும் வளைந்தும் வரண்டும் பொந்துள்ளதும் துளைக்கப்பட்டதும் கருத்து லேசாக இருப்பதும் வெளுத்தும் ஜலமுள்ளதும் மருந்திற்கு உகந்ததல்ல. தனம் தான்யம் மேதை வீர்யம் காந்தி இவைகளை அளித்து கபபித்த நோய்களையும் விஷபயத்தையும் போக்கவல்லது. ருசியில் தித்திப்பும் புளிப்பும், வீர்யத்தில் சீதமும் உள்ளது.

மரகதம் : இது புதனின் ரத்னமாகும். துருஷ்க தேசத்திலுள்ள ஸமுத்திரத்திலும், ஸமீராரோஹண மலையிலும் பச்சை நிறமுள்ள மரகதமணிகளின் கனி இருக்கின்றது. வரட்சி, வெடிப்பு, காந்தி இன்மை, அழுக்கு, மணல்கோடு, பலநிறம் என்ற ஏழு வித தோஷங்களும் விலக்கற்பாலன. நிர்மலத்தன்மை, நீரோட்டம், மணலில்லாமலிருத்தல், சிறந்த நிறம், கனம் என்ற ஐந்து கணங்களுள்ளது சிறந்தது. எல்லா பாபங்களையும் போக்கி ருசி, புஷ்டி, காந்தி, ஸௌபாக்கியம், மேதை இவைகளை அளிக்கும். அம்ல பித்தம் விஷம் பூதகிரஹதோஷங்கள் இவைகளைப் போக்கும். தித்திப்புச் சுவையும் சீதவீர்யமும் உள்ளது.

புஷ்யராகம் : இது குருவின் ரத்னமாகும். சிறிது சிகப்பு கலந்த மஞ்சளுடன் வைரம் போன்ற பளபளப்புடனும் விளங்கும் மணி இது. தங்கம் போன்றும், எரியும் தணல் போன்றும் நிறத்துடன் மேல் பாகம் வட்டமாகவும் கனமாகவும் மழமழப்பாகவுள்ள புஷ்யராகம் சிறந்தது. ருசியில் புளிப்பும் சீதவீர்யமும் உள்ளது. அதைத் தரிக்க நீண்ட ஆயுள், ஸம்பத்து, மேதை இவை கிடைக்கும். க்ஷிருதய நோய் விஷம் திரிதோஷ கெடுதல்கள் இவைகளைப் போக்கவல்லது.

வைரம் : இது சுக்ரனின் ரத்னமாகும். ஸ்வச்சமாகவும் மின்னல் போன்ற ஒளியுடனும் மழமழப்பாகவும்

கனமில்லாமலும் ஆறு தீக்ஷ்ணமான தாரைகளுடனும் இருக்கும் வைரம் சிறந்தது. பௌண்டிரம் மதங்கள் ஹிமாசலம் ஸௌராஷ்டிரம் சூர்பாரம் கோஸலம் கலிங்கம் பெண்ணையாற்றங்கரை என்ற இத் தேசங்களில் வைரத்தின் சுரங்கங்கள் இருக்கின்றன. இத் தேசங்களில் உண்டாகும் வைரங்கள் முறையே கருப்பு, மஞ்சள் கலந்த சிகப்பு, தாமிர நிறம், கருப்பு, வாகைப்பூ நிறம், தங்க நிறம், சந்திரனின் நிறம் என்ற நிற பேதங்களுடன் கிடைக்கின்றன. கலிங்கமும் கோஸலமும் கிருதயுகத்திலும், மதங்கமலையும் ஹிமயமும் துவாபரத்திலும், சூர்பாரகமும் பெண்ணை நதியும் கலியுகத்திலும் வைரச் சுரங்கங்களாகக் கருதப்படுகின்றன. வைரத்தின் உத்பத்தி ஸ்தலம் சுரங்கம், சுனை, பிரகீர்ணகம் என்ற மூன்று விதமாகப் பிரிக்கப் படுகின்றது. வைரத்தில் பன்னிரண்டு கோடி (தாரை)களும் எட்டுகோடிகளும் ஆறு கோடிகளும் காணப்படுகின்றன. இதற்கு அழுக்கு பிந்து கோடு திராஸம் காக்கைக் கால் என ஐந்து தோஷங்கள் உண்டு. சுத்தி செய்யாத வைரம் குஷ்டம், எரிச்சல், உடல் கனத்தல், ஹிருதயம் பார்சுவம் இவைகளில் வலி, பாண்டு இவைகளை உண்டாக்கும்.

வைரத்தின் சுத்தி: நல்ல வைரத்தின் கண்டங்கத்திரி வேரின் நடுவில் வைத்து மேல் சாணத்தால் மெழுகி வராட்டி நெருப்பில் ஒரு நாள் எரித்துக் குதிரை மூத்திரத்தில் நனைக்கவும். இவ்விதம் ஏழு நாள் செய்ய சுத்தியாகும் சிறுகீரை வன்னி செவதை கர்கடசிருங்கீ மலங்காரை, கொள்ளு நொச்சி அகத்தி கருநொச்சி எலிச்செவிப்பூண்டு இவைகளைக் குதிரை மூத்திரத்தில் அரைத்துக் கலக்கி அதில் தோலாயந்திரத்தில் மூன்று தினம் எரிக்கச் சுத்தியாகும். கொள்ளு, வரகு இவைகளின் கஷாயத்தில் கண்டங்கத்திரி வேர் நடுவில் வைத்து வைரத்தை தோலா யந்திரத்தில் ஏழு நாள் எரிக்க சுத்தியாகும். முன்யோகத்தில் கூறிய திரவங்களுடன் குதிரை மூத்திரமும் கள்ளிப்பாலும் சேர்த்துக் கொள்ளலாம்.

வைரபஸ்ம முறை : அரசு இலந்தை நீர்முள்ளி மாக்ஷிகம் நண்டெலும்பு இவைகளைக் கள்ளிப்பாலால் அரைத்து மூஷையின் நடுவில் தடவி அதன் நடுவில் வைரத்தை வைத்து மேல் அத்திரவியங்களாலேயே மூடிக் கஜபுடமிட பிராமண வைரம் பஸ்மமாகும். அரளி நாய்வேளை லிங்கம் அத்தி இவைகளை எருக்கம் பாலில் அரைத்து அக்கல்கத்தின் நடுவில் வைரத்தை வைத்து முன் போலப் புடம் போட க்ஷத்ரிய ஜாதி வைரம் பஸ்மமாகும். சிற்றாமுட்டி அதிபலா கந்தகம் ஆமையோடு வேலிப்பருத்தி இவைகளின் கல்கத்தின் நடுவில் வைத்து முன் முறையில் வைசிய ஜாதி வைரத்தைப் பஸ்மமாக்கலாம். கருணைக்கிழங்கு வெங்காயம் சங்கு மனோசிலை இவைகளை ஆலம் பாலால் அரைத்து அக்கல்கத்தில் சூத்திரஜாதி வைரத்தை வைத்துப் புடமிடப் பஸ்மமாகும்.

சுத்தமான வைரத்தை மூட்டைப்பூச்சியின் ரத்தத்தால் பூசி மூஷையிலிட்டு ஊதிக் கழுதை மூத்திரத்தில்21 தடவை துவைக்கப் பஸ்மமாகும். தாளகத்தை மூட்டைப்பூச்சிகளைப் போட்டரைத்துக் கல்கமாக்கி அதன் நடுவில் வைரத்தை வைத்து மூஷையிலிட்டு ஊதிக் குதிரை மூத்திரத்தில் 7 தடவை துவைக்கப் பஸ்மமாகும்.

ஆட்டுக்கொம்பு பாம்பெலும்பு ஆமைஓடு சிலாஜது கந்தகம் காந்தம்அகத்திப்பூ தாகம் யவக்ஷாரம் ஸர்ஜக்ஷாரம் வெங்காரம் ஐந்து உப்புகள் கர்கடசிருங்கி தும்மட்டி பிரண்டை எலிச்செவி இலந்தைமொக்கு எலி மலம் ஸ்தன்யம் கள்ளிப்பால் எருக்கம்பால் மூட்டைப்பூச்சி கொள்ளுக்காய்வேளை கழுதை எலும்பு ஆட்டெலும்பு பேடாரியின் விதை ஸ்திரீயின் ரஜஸ் புறாமலம் மனோசிலை கார்போகரிசிப்பூ வாழை பசுவின் மூத்திரம் ஆட்டு மூத்திரம் சிறு புள்ளடி கள்ளிவேர் கண்டங்கத்திரிவேர் கருணைக்கிழங்கு காவுஜபான் நண்டுமாம்ஸம் இவைகளைக் கிடைத்த வரை

ஒன்றாகக் கலந்து கல்கமாக்கி அதன் நடுவில் வைரத்தை வைத்து அந்த மூஷையிலிட்டு எரித்து கொள்ளும் வரகும் அரைத்துக் கலக்கப்பட்ட குதிரை மூத்திரத்தில் துவைக்கவும். இவ்விதம் 21 தடவை செய்த பின் எடுத்து மூட்டைப் பூச்சியுடன் அரைக்கப்பட்ட தாளக கல்கத்தின் நடுவில் வைத்து மூஷையில் மூடிகடுந்தீயில் ஊதி ஏழு தடவை குதிரை மூத்திரத்தில் துவைக்கவும். வைரம் நன்கு பஸ்மமாகும்.

பிராமக காந்தம், ஸவர்ணமாக்ஷிகபஸ்மம், பேடாரீ விதை, வெங்காரம், வேலிப்பருத்திச்சாறு, கந்தகம், தாளகம், கர்பூரம், புளியம் விதை, கர்கடசிருங்கீ, ஸ்திரீயின் ரஜஸ், புளிவஞ்சி, கொள்ளுக்காய் வேளை, முயலின் பற்கள், சிலாஜது இவைகளைத் தூள் செய்து கள்ளிப்பாலாலும் எருக்கம் பாலாலும் ஸ்தன்யத்தாலும் அரைத்துக் கல்கமாக்கி அதன் நடுவில் வைரத்தை வைத்து ஊதி சீந்திக்கொடி, இந்துப்பு, பெருங்காயம், கோரைக்கிழங்கு, வேலிப்பருத்தி இவைகளை அரைத்துக் கலக்கிய கொள்ளுக் கஷாயத்தில் இருபத்தோரு தடவை துவைத்து மூட்டைப் பூச்சியால் அரைத்த தாளகக் கல்வத்தின் நடுவில் வைத்து ஏழுதடவை ஊதிக் குதிரை மூத்திரத்தில் துவைத்துப் பஸ்மமாகும்.

மூன்று வருஷமான பருத்தியின் வேரை மூன்று வருஷம் நிரம்பிய வெற்றிலைச் சாற்றால் அரைத்து அதன் நடுவில் வைரத்தை வைத்து ஏழு கஜபுடமிட பஸ்மமாகும்.

தாளகம் அன்னபேதி துவர்மண் நாயுருவிக்ஷாரம், இவைகளைக் கொள்ளுக் கஷாயத்தில் அரைத்துக் கலக்கி அதில் நன்கு காய்ச்சப் பட்ட வைரத்தை ஏழு தடவை துவைக்கப் பஸ்மமாகும்.

வைக்கராந்த பஸ்மத்தடன் புளிவஞ்சியை அரைத்துக் கல்கமாக்கி அதன் நடுவில் வைரத்தை வைத்து அந்த

மூஷையிலிட்டு ஊதி, குதிரை மூத்திரத்தில் துவைக்கவும். இம்முறையை 21 தடவை செய்ய வைரம் பஸ்மமாகும்.

இவ்விதம் முன்கூறிய முறைகளில் சிற்சில திரவியங்கள் கிடைக்காவிடிலும் கிடைத்த முக்கிய திரவ்யங்களைக் கொண்டு வைரத்தைப் பஸ்மமாக்கலாம். வைரத்தை மிருதுவாக்கும் முறை வைரத்துருதி வைரோதனம் இம்முறைகள் முன்னரே கூறப்பட்டிருக்கின்றன.

வைரம் அறுசுவைகளுடன் கூடியது. எல்லா வித வியாதிகளையும் பாபங்களையும் போக்கி தேகதிடம் ஸௌக்யம் காந்தி தனம் ஸௌபாக்யம் இவைகளை அளிக்க வல்லது.

நீலம் : இந்திர நீலம் என்றும், சனியின் ரத்னம் என்றும் இதற்குபெயர். இதன் மேல் வைத்த புல் ஒட்டிக் கொள்ளும். வெள்ளை நீரோட்டமுள்ளது பிராமண வகை எனவும். சிகப்பு நிரோட்டமுள்ளது க்ஷத்ரிய வகை எனவும், சிகப்பு கலந்த மஞ்கள் நிறமுள்ளது வைசிய வகை எனவும், கருநிறமுள்ளது சூத்திர வகை எனவும் கருதப்படுகின்றது. அவுரி, நீலசங்குப் புஷ்பம், நீல அல்லி, ஆளிப்பூ, சாஷபக்ஷியின் இறகு, மயில் கழுத்து, சிவனின் கழுத்து, விஷ்ணுவின் உடல் என்ற இவ் வஸ்துக்களின் நிறங்கள் நீல ரத்னத்திற்கு சோபை அளிக்கின்றன. கனம், நீரோட்டம் நல்ல நிறம், பக்கத்தில் தனது பிரகாசத்தைக் கொடுப்பது, புல்லொட்டுதல் இவை நீல ரத்னத்தின் குணங்கள். எல்லா பாபங்களையும் வியாதிகளையும் போக்கவல்லது. ருசியில் கசப்பும் வீர்யத்தில் உஷ்ணமும் வாத கபபித்த நோய்களைப் போக்கும் குணமும் பெற்றது.

கோமேதகம் : இது ராகுவின் ரத்னம். பிங்கள நிறமுள்ள ஸ்படிகம் என்ற பெயருண்டு. பசுவின் மூத்திர நிறத்தில்

மிருதுவாகவும் நல்ல நீரோட்டத்துடனும் தேன் சொட்டு போன்றும், உருக்கிய நெய் போன்றும் உள்ள ரத்னம் சிறந்தது. வெளுத்தோ கருத்தோ, திராஸம், கோடு, விரிதல், வரட்சி உள்ள ரத்னம் உத்தமமல்ல. புளிப்பு ருசியும் உஷ்ணவீர்யமுமுள்ளது. வாத வியாதிகளைப் போக்கவல்லது.

வைடூர்யம் : கேதுவின் ரத்னமிது. விடுபூமியில் மழை காலத்தில் இடி சப்தத்திலிருந்தும் உண்டாவது. வெண்மேகம், மூங்கிலிலை, பூனைக்கண், மயில் கழுத்து இவைகளின் நிறமுள்ளது. புளிப்பு ருசியும் உஷ்ண வீர்யமும் உள்ளது. வாத கப நோய்களையும் குல்மம் சூலம் முதலிய வியாதிகளையும் போக்கவல்லது.

மாணிக்யம், முத்து, வைரம், நீலம், பச்சை இவை ஐந்தும் பஞ்ச ரத்னங்கள் என்றும், கோமேதகம், புஷ்பராகம், வைடூர்யம், பவழம் இவைகளுடன் அவை நவரத்னங்கள் என்றும் பிரஸித்தி பெற்றுள்ளன.

உபரத்னங்கள்

ஸூர்யகாந்தம்-சந்திரகாந்தம்-ஸ்படிகம்:

ஹிமாலயம், ஸிம்ஹலம், விந்தியமலை, ரேவாநதிக்கரை முதலிய இடங்களில் சந்திரன் போன்றும் வெண்மேகம் போன்றும் பிரகாசத்துடன் விளங்கும் ஸ்படிகங்கள் கிடைக்கின்றன. மேலும் பத்மராகம் கிடைக்கு மிடத்திலும் பலவித ஸ்படிகங்கள் கிடைக்கின்றன. அவைகளில் ஸூர்ய கிரணங்கள் பட்டவுடன் நெருப்பைக் கக்கும் ஸ்படிகம் ஸூர்யகாந்தம் எனவும் கூறப்படுகின்றன.

ஸூர்யகாந்தம் உஷ்ணவீர்யமுள்ளது ரஸாயனம். வாதகப நோய்களைக் போக்கி மேதையை அளிக்க வல்லது. ஸூர்யனின் உபரத்னம் இது.

சந்திர காந்தம் வெளுத்தும் சுற்றி மஞ்சளாகவும் தோற்றமளிக்கும். சீதவீர்யமுள்ளது. மனதிற்கு சாந்தி யுண்டாகும். ரக்தபித்தம் எரிச்சல் போன்ற தோஷங்களைப் போக்கவல்லது.

ஸ்படிகம் நக்ஷத்திரமணி எனக் கருதப்படுகின்றது. சில சீதவீர்யமும் சில உஷ்ணவீர்யமும் பெற்றிருக்கின்றன. பித்த வாத நோய்களையும் வீக்கத்தையும் போக்கவல்லது.

வைக்ராந்தம்

மட்டவைரம் எனவும் இதற்குப் பெயருண்டு. மருந்துகளில் வைரத்திற்குப் பதில் இதை உபயோகிப் பதுண்டு. வெள்ளை, சிகப்பு, மஞ்சள், கலந்த சிகப்பு நீலம், புறாநிறம், வெண் கருப்பு, கருப்பு, பலநிறங்கள் ஆக எட்டு விதமான நிறபேதத்துடன் கிடைக்கின்றன. எட்டுக் கோடியும் எட்டுப்பட்டையும் ஆறு கோணமும் உள்ளது.

வைக்ராந்தி சுத்தி: கொள்ளுக்கஷாயத்தில் வேகவைக்க வைக்ராந்தம் சுத்தி அடைகின்றது. மூன்று க்ஷாரங்கள் ஐந்து உப்புகள், வஸை, மூத்ரவர்கம், அம்லவர்கம், மீன்மாம்ஸம், எண்ணெய்கள், நெய்கள், கொள்ளுக் கஷாயம் இவை ஸமனெடை சேர்த்துக் கலக்கி ஏழு நாள் தோலா யந்திரத்தில் எரிக்க சுத்தி அடையும்.

வைக்ராந்த பஸ்மம் : காய்ச்சிக் காய்ச்சி இருபத்தோரு தடவை குதிரை மூத்திரத்தில் துவைத்து உத்தரவாருணியின் கல்கத்தின் நடுவில் வைத்து மூஷையிலிட்டுப் புடமிடவும். இவ்விதம் ஏழு புடமிடப் பஸ்மமாகும்.

வைக்ராந்த ஸத்வம் : வைக்ராந்தம் ஒரு பலமும், வெங்காரம் ஒரு பலமும் சேர்த்து எருக்கம் பாலில் ஒரு நாளும் முருங்கைச் சாற்றில் ஒரு நாளும் அரைத்து குந்துமணி,

பிண்ணாக்கு, கொடிவேலி இவை வகைக்கு கால் பலம் சேர்த்து வடிகைகளாக்கி உலையிலிட்டு ஊத வெளுத்த ஸத்வம் விழும்.

வைக்கராந்தமும் கள்ளிக்கிழங்கும் சேர்த்து கள்ளிப் பாலால் அரைத்து எருமை வெண்ணெய்யும் தேனும் சேர்த்து முன் போல் ஊத சிவந்த ஸத்வம் விழும்.

வைக்ராந்தத் துருதி: வெள்ளை வைக்ராந்தத்தை புளி வஞ்சிச் சாற்றால் பாவனை செய்து ஏழு நாள் வெயிலில் பாவனை செய்ய திரவமாகும். தாழையின் சாறும் துத்தமும் இந்துப்பும் நிலாவாரையும் இந்திர கோபப்பூச்சியும் சேர்த்து வைக்ராந்தத்தைப் பானையிலிட்டு வேகவைக்கத் திரவமாகும்.

ஆயுஸ், விருஷ்யம், மேதை, தீபனம் இவைகளை அளித்து எல்ல நோய்களையும் போக்கவல்லது.

ராஜாவர்த்தம்

தேன் வண்டு போன்ற நிறத்துடன் தூளாகவோ கோலக (உருண்டைகள்) மாகவோ கிடைக்கும். அதில் தங்க நிறப் புள்ளிகளுள்ளது காரீயம் வெள்ளி இவைகளை ரஞ்சனம் செய்வதிலும், நிறத்தை அதிகப்படுத்துவதிலும் நிலையற்ற நிறத்தை ஸ்திரப் படுத்துவதிலும் சிறந்தது.

ராஜாவர்த்தசுத்தி--பஸ்மம்: எலுமிச்சம்பழச் சாறு, கோமூத்திரம், க்ஷாரங்கள் இவைகளுடன் வேகவைக்க சுத்தியாகின்றது. தூள் செய்த வைக்ராந்தத்துடன் கந்தகம் சேர்த்து எலுமிச்சம்பழச்சாற்றிலரைத்து ஏழு புடமிட பஸ்மமாகும்.

ராஜாவர்த்த ஸத்வம்: ராஜாவர்த்தத்தை எருமை நெய்யும் பாலும் சேர்த்து மித்ர பஞ்சகங்களுடன் இருப்புப்

பாத்திரத்தில் ஒரு நாள் எரித்து மஞ்சளுடன் சேர்த்து ஐந்து நாள் அரைத்து உருண்டையாக்கிக் கருங்காலித் தணலில் உலையிலிட்டு ஊத ஸத்வம் விழும். இது பிரமேஹம், க்ஷயம், அர்சஸ், பாண்டு, கபம், வாதம் போன்ற நோய்களில் சிறந்த ஔஷதம்.

ஸஸ்யகம் - கருடோத்காரம்: இது ஒரு மஹாரஸம். இது வெளுப்பு கருப்பு மஞ்கள் பச்சை சிகப்பு என்ற ஐந்து நிறங்களில் கிடைக்கும். வெள்ளையும் பச்சையும் வெள்ளி செய்வதிலும் மற்ற மூன்றும் தங்கம் செய்வதிலும் சிறந்தது. இது எல்லா தோஷங்களையும் போக்கி விஷத்தைப் போக்கவல்லது.

விமலம் (நிமிளை?)

தங்க நிமிளை, வெள்ளி நிமிளை, வெண்கல நிமிளை என மூன்று விதம். வட்டமாகவும் கோணமுள்ளதும் மழமழப்புள்ளதும் பலகைகளள்ளதுமானது. தங்க நிமிளை தங்கம் செய்வதிலும் வெள்ளி நிமிளை விருஷ்யத்திலும், வெண்கல நிமிளை மருந்துகளிலும் உபயோகிக்கத் தகுந்தது.

விமல சுத்தி: வாதபித்த நோய்களைப் போக்கிச் சிறந்த ரஸாயனமாகின்றது. ஆடாதொடைச் சாற்றில் வேக வைக்கச் சுத்தி அடைகின்றது. அல்லது முதலில் வாழைக்கிழங்குச் சாற்றிலும், புளிவஞ்சி, மற்ற அம்லவர்கம், ஆட்டு மூத்திரம் இவைகளிலும் வேகவைக்கலாம். பேயப்பீர்க்கு, கர்கடசிருங்கீ, எலுமிச்சம்பழம் இவைகளின் சாற்றிலும் வெயிலில் வைக்கச் சுத்தியாகும்.

விமல ஸத்வம்: முருங்கைச் சாற்றில் படிக்காரமண், அன்னபேதி வெங்காரம் வஜ்ரக்கிழங்கு இவைகளுடன் பாவனை செய்து மோக்ஷகக்ஷாரத்துடன் அந்த மூஷையிலிட்டு உலையில் ஊத ஸத்வம் விழும்.

பேரோஜம் - ஹரிதாச்மம்: பேரோஜ் என்ற பச்சைமணி ஸஸ்யகத்தைப் போன்றது.

ஒன்பதாவது உல்லாஸம்

திவ்யெளஷதிகள்

ரஸ ஸம்ஸ்காரங்களில் விசேஷ பலனை அளிக்கும் திவ்யெளஷதிகளையும் மஹெளஷதிகளையும் அறியாதவன் ரஸ ஸம்ஸ்காரங்கள் செய்யத் தகுதியற்றவனாகிறான். இவ்வெளஷதிகளின் ஸஹாயமின்றி வேதம் வரையிலுள்ள ஸம்ஸ்காரங்கள் செய்ய முடியாது.

திவ்யெளஷதிகளில் அறுபத்து நான்கு முக்கியமானவை. இவ்வெளஷதிகளினால் ரஸக்கட்டும் வேதமும் பஸ்மம் செய்வதும் எளிதாகின்றது. இவை மரம், கொடி, படரும் செடி, புதர், புல், புல்லுருவி என ஆறு வகைப்படுகின்றன. அவையாவன.

1. ஸோமவல்லி : இதன் ஸ்வரூபம் முன்பே கொடுக்கப்பட்டிருக்கின்றன. ருசியில் உரைப்பும் தித்திப்பும், வீர்யத்தில் சீதமும் உள்ளது. தாகம், எரிச்சல் இவைகளைத் தணித்து தீபனமளிக்கின்றது. பலவகையான ஸோமக் கொடிகளும் குணத்தில் ஒரு வகைப்பட்டதே.

2. ஸோமவிருக்ஷம்: இதன் குணமும் ஸோமவல்லி யைப் போன்றதே.

3. ஸ்தலபத்மினீ: தாமரை போன்ற இதன் ஸ்வரூபமும் முன்பே கொடுக்கப்பட்டுள்ளது.

4. கோனஸா: இதன் கொடி பசுவின் முகம் போல் முக்கோணமாகவும் பல நிறமுள்ள மண்டலங்களுள்ள இலைகளுடன் கூடியதாகவும் இருக்கும்.

5. உச்சடா: ஒரே தண்டைச் சுற்றி ரோமங்கள் நிறைந்திருப்பதும் தண்டின் நுனியில் கிளிமூக்குப் போன்ற சிவந்த பூவும், கிளியிறகைப் போன்ற பச்சையான இலைகளும் ஆமை போன்ற கிழங்கும் சிவந்த பாலும் உள்ள கொடி இது. இது லோஹவேதத்தில் நிகரற்றது.

6. ஈசுவரீ: ஈசுவரிச் செடியைப் போன்ற செடி இது. இதில் அதிகமாகப் பால் பெருகும். பீஜத்துடன் கூடிய ரஸத்தைக் கட்டும் ஔஷதியாகும்.

7. பூதகேசீ: வேப்பிலை போன்ற இலையுளதும் ரஸத்தைக் கட்டக்கூடியதுமான ஒஷதி இது.

8. கிருஷ்ணலதா: கரைத்த மை நிறத்தை உடையது. பீஜ மில்லாவிடிலும் ரஸத்தைக் கட்டக் கூடியது.

9. லசுனவல்லீ: பூண்டிலை போன்ற இலையுடன் பாலுள்ளதும் கிழங்குள்ளதுமான இக் கொடி ரஸத்தைக் கட்டக்கூடியது.

10. ருதந்தீ: இது கடலை இலை போன்ற இலையும் பூவும் உள்ளது. மரண-மூப்புகளால் பீடிக்கப்படும் ஜனங்களைக் கண்டு அழுவது போன்று இலையில் அடியிலிருந்து ஜலம் பெருகும். மஞ்சள் சிகப்பு வெளுப்பு கருப்பு என நான்கு நிறங்களில் கிடைக்கின்றது. அப்பிரக ஜாரணம் செய்த ரஸத்தைக் கட்டுகின்றது.

11. வாராஹீ: நிலப்பனைக்கிழங்கு போன்ற கிழங்குடன் அதன் இலை போன்ற இலையும் உள்ளதும் பாலுடன் ரோமங்கள் உள்ளதுமான இக் கிழங்கு ரஸத்தைக் கட்டுகின்றது.

12. ஸப்தபத்ரீ: ஏழிலைகளுடன் காணப்படும் இவ்வோஷதி நல்ல ரஸாயனமாகின்றது. ரஸத்தையும் கட்டுகின்றது.

13. நாகினீ: பாம்பின் உடல் போலுள்ள தண்டுடன் கூடிய இக் கொடி ஸர்பம் முதலியவைகளின் விஷத்தைப் போக்கி ரஸத்தைக் கட்டுகின்றது.

14. ஸர்பிணீ: ஸர்பம் போன்ற வளைந்த தண்டை யுடையதும் பாலுடையதும் மழமழப்புள்ள இலை களுள்ளதுமான இக் கொடி ரஸத்திற்கு பாலபந்தமளிக்க வல்லது.

15. சத்ரிணீ: குடை போன்ற தண்டும் மேல் விரிப்பு முள்ளதும்அதிக உயரமோ அதிகக் குட்டையாகவோ இல்லாததும் பாலுள்ளதுமான இக் கொடி ரஸத்தைக் கட்டுகின்றது.

16. கோசிருங்கி: மலைகளின் கல்லிடுக்கில் உண்டாகும் மாட்டுக் கொம்பு போன்ற கிழங்குடனுள்ள இக் கொடி வெட்டப் பால் பெருகும். ரஸத்தையும் கட்டும்.

17. ஜ்யோதிர்லதா: மலைகளில் மரம் கொடி கிழங்கு புல் என்ற நான்கு உருவங்களில் இருட்டில் பிரகாசிக்கும் இக் கொடி ரஸத்தைக் கட்டுகின்றது.

18. ரக்தவல்லி: சிவந்த பாலும் இலையும் உள்ளதும் அதிக நீளம் படராததுமான இக்கொடி ரஸத்தைக் கட்டுகின்றது.

19. பத்ர(ம)வல்லி: தாமரை போன்று இதழுடைய இக்கொடி ஜலத்தில் உண்டாகின்றது. இதன் கிழங்கில் பால் வடியும். ரஸத்தைக் கட்டும்.

20. காசினீ: பெருமுட்களுடன் உள்ள இக்கொடி ரஸத்தைக்கட்டி நரைதிரை மூப்புகளைப் போக்குகின்றது.

21. சாண்டாளீ: ஒன்று முதல் ஐந்து வரை இலைகளுடன் சிவந்த நிறத்துடன் பால் வடியும் கிழங்குள்ள இக் கொடி ரஸ பந்தத்தில் சிறந்தது.

22. தாம்ரவல்லி: தாமிரநிறமுள்ள இலையும் தண்டும் கிழங்கிலுள்ள பாலும் சாறுமுள்ள இக் கொடி ரஸம் லோஹம் முதலியவைகளின் ஸித்தியில் சிறந்த ஸாதனமாகின்றது.

23. பீதவல்லி: மஞ்சள் நிறமுள்ள இலை, தண்டு, கிழங்குப்பால், சாறு இவைகளுள்ள இக்கொடியும் ரஸ பந்தத்தில் சிறந்ததே.

24. விஜயா: பாலுடனும் துவரை இலை போன்ற இலையுமுள்ளதும் அதிகம் படராததுமான இக் கொடியும் ரஸபந்தத்தில் சிறந்தது.

25. மஹௌஷதி: முக்கோண வடிவமுள்ள கிழங்கும், கொடிவேலி இலை போன்ற இலையுமுள்ளது இது.

26. தேவதாளி: மயில் கழுத்து போன்ற நிற முள்ள இலையும் சந்தனத்தின் மணமும் உள்ள இக்கொடி நொடியில் ரஸத்தைக் கட்டுகின்றது.

27. நவனீதகத்தி: இக் கொடி பாலுள்ள கிழங்கும் சிவந்த புஷ்பமும் வெண்ணெய் போன்ற தீக்ஷ்ணமான மணமும் உள்ளது.

28. கருடவல்லி: இது பாலும் சிவந்த புஷ்பமும் இலந்தை இலை போன்ற இலையுமுள்ளது.

29. தும்பினீ: சுரையினது போன்ற இலையும் பூவும் காயும் உள்ளதும் கசப்பான சிவந்த பாலுள்ளதுமான இக்கொடியும் ரஸபந்தத்தில் சிறந்ததே.

30. பூமிதும்பினீ: சுரையிலை போன்ற இலையுள்ளதும் அதிகம் படராததும் எலுமிச்சம்பழம் போன்ற பழமுள்ளதுமான இக்கொடி ரஸபந்தத்திலும் வியாதிகளைப் போக்குவதிலும் நிகரற்றது.

31. கந்தர்வா: சிற்றாமணக்கிலை போன்ற இலையும் பாலுமுள்ள இக் கொடி அதிகம் படராது. ரஸத்தைக் கட்டுவதில் சிறந்தது.

32. வியாக்ரபாதீ: இது புலிக்கால் போன்ற இலையுடனும் சிவந்த பூவுடனும் பாலுடனும் கூடியது.

33. மஹௌஷதீ: ஏழிலம்பாலை போன்றிலை களுடன் மெல்லிய தண்டுடன் அதிகம் படராத இக் கொடி ரஸக் கட்டில் சிறந்தது.

34. கோமாரீ: மூங்கிலிலை போன்ற இலையுள்ள இக்கொடியின் வேரால் ரஸம் கட்டுப்படுகின்றது.

35. திரிசூலி: திரிசூலம் போன்ற இலையும் பாலுள்ள கிழங்குமுள்ள இக் கொடி ரஸபந்தத்தில் பிரஸித்தி பெற்றது.

36. ருதஸீ: ருதஸீ(?)யின் இலை போன்ற இலையும் பாலுள்ள கிழங்கும் உள்ள இக் கொடி மலையில் உற்பத்தியாகின்றன.

37. சித்ரதண்டீ: அழகான புஷ்பங்களும் புள்ளி களுள்ள தண்டும் சிறந்த மூன்று பழங்களுள்ள கொத்துகளுள்ளதுமான இக் கொடியும் ரஸபந்தத்தில் சிறந்தது.

38. பிருங்கவல்லி: இக்கொடி கையாந்தகரை போன்ற இலையும் பாலும் மஞ்சள் நிறமுள்ள பூவுமுள்ளது.

39. சமரிகா: சமரிமான் வால் போன்ற இலைகளும் பாலுமுள்ள இக் கொடி ரஸத்தைக் கட்டுகின்றது.

40. கரவீரலதா: அரளி போன்ற இலையும் பூவுமுள்ள இக் கொடி ரஸத்தைக் கட்டுகின்றது.

41. வஷ்ரவல்லி: மருதாணி போன்று இலை பூ உள்ளதும் பாலுள்ள கிழங்கும் கசப்பு ருசியுள்ள சாறும் வஷ்ராயுதம் போன்று அடையாளமுள்ளதுமான இக் கொடி ரஸத்தைக் கட்டும்.

42. ***வாரவல்லீ :*** சிகப்பு நிறமுள்ள பாலும் வில்வ இலை போன்ற இலையும் உள்ள இக்கொடி ரஸபந்தத்திலும், ரோகங்களைப் போக்குவதிலும் சிறந்தது.

43. ***ரோஹிணீ :*** சணல் போன்ற இலையும் பூவும் உள்ளது. இக் கொடியில் பத்து பூக்கள் கொண்ட கொத்துகள் நிறைய இருக்கும். பால் உள்ளது.

44. ***பில்வினீ:*** இது வாலுளுவை இலை போன்ற இலையும் பாலும் உள்ளது.

45. ***கோரோசனலதா:*** கோரோசனை போன்ற நிறமுள்ள இலையுடன் கூடிய இக்கொடி பூதபிசாச தோஷங்களையும் அகற்றவல்லது.

46. ***கரீரீ:*** ஸ்ரீ சைலத்தில் நிலாவாரை போன்று கிடைக்கும் இவ்வோஷதியை ஒடிக்க சிவந்த பால் வரும். சிறந்த ரஸ பந்தனி.

47. ***அக்ஷரா:*** மூன்று வருஷங்களுக்கொரு தடவை பழுக்கும். இக்கொடி சிறந்த ரஸபந்தனியாகும்.

48. ***அபத்ரீ:*** ஸோமலதையே இலையில்லாமலிருக்கும். மை போன்று கருத்தசாறுடன் கூடிய இக்கொடி விந்திய மலையில் கிடைக்கின்றது. நல்ல ரஸபந்தனியாகும். இதன் பழங்கள் முதல் வருஷத்தில் புளிப்பாகவும், இரண்டாவது வருஷத்தில் கசப்பாகவும், மூன்றாவது வருஷத்தில் தித்திப்பாகவும் இருக்கும். அப்பழங்கள் பித்தஜ்வரத்தைப் போக்கவல்லவை.

49. குடஜவல்லி: வெட்பாலை போன்று காயும் இலையும் உள்ளதும் தித்திப்பானதும், சிவந்த முடிப்புகளுள்ளதுமான இக் கொடி ரஸத்தைக் கட்டவல்லது.

50. மூலகந்தா: இக்கொடி ஒரே உருவாக உள்ள வேர் இலை, பழம் இவைகளுடன் பாலுள்ளதாகக் காணப்படுகின்றன.

51. பிராம்மணீ: பாரிஜாதப்பூ போன்ற நிறமுள்ளதும் நூற்றுக்கணக்கான புஷ்பங்களும் இலைகளும் கருத்த பாலுள்ள பழங்களும் உள் இக் கொடி ரஸத்தை நன்கு கட்டுகின்றது.

52. முனிவல்லி: அகத்தி இலை போன்ற இலையும் சிவந்தபூவும் நெய் மணமும் உள்ள இக் கொடி ரஸத்தை பஸ்மம் செய்கின்றது.

53. நிம்பலதா: வேம்பு போன்ற இலை பூ காய்களுடன் கூடிய இக் கொடியின் வேர் ரஸபந்தத்தில் சிறந்தது.

54. திலகந்தா: எள்ளைப் போன்ற வேர் காய் இலை உள்ளதும் பாலுள்ளதுமான இக் கொடியின் சாற்றில் அரைத்துக் கடும் வெயிலிலிட ரஸம் கட்டுப்படுகின்றது.

55. அதஸீவல்லிகா: ஆளியைப் போன்று பூ காய் இலை உள் இக் கொடி ரஸபந்தனத்தில் சிறந்தது.

56. போதிலதா: அரசு போன்று இலையுள்ளதும் பாலுள்ளதுமான இக் கொடி ரஸத்தைக் கட்டும்.

57. மத்யகந்தா: இலை காய் இல்லா இக்கொடி கள்ளின் மணம் பெற்றிருக்கும். ரஸத்தைக் கட்டுவதில் சிறந்தது.

58. கூர்மலதா: இது பாலுள்ள ஆமை போன்று கிழங்குடன் கூடிய கொடி.

59. மாதவீ: மல்லி போன்று இலையும் பூவும் வேரும் உள்ள இக் கொடியின் வேர் ரஸத்தைக் கட்டுகின்றது.

60. விசாலா: வெண்மையான இலை பூ காய் உள்ள இக்கொடி விசாலை எனக் கூறப்படுகின்றது.

61. மஹாநாகா: இக்கொடி பாம்பு வளையம் போன்ற சுருண்டு, பாம்பின் படம் போன்ற இலையுடன் உள்ளது.

62. மண்டூகலதா: தவளை போன்ற கிழங்கும் தவளை போன்ற இலையும் உள் இக்கொடியின் வேர் ரஸத்தைக் கட்ட உபயோகப்படுகின்றது.

63. உதும்பரலதா: அத்தி போன்று காயும் இலையும் உள்ள இக் கொடி சிறந்த ரஸபந்தனியாகும்.

64. சித்ரவல்லி: பாலுள்ள கிழங்கும் ஆலிலை போன்ற இலையும் பெரியகாயும் நீண்ட படர்ப்பும் உள்ள இக் கொடியின் கிழங்கின் நடுவில் வைத்த ரஸம் கட்டும்.

ஆக இவ்வறுபத்து நான்கு திவ்யௌஷதிகளும் ரஸபந்தனத்தில் சிறந்தவை.

பத்தாவது உல்லாஸம்.

மஹௌஷதிகள்

ரஸ ஸித்தியில் எண்பத்தெட்டு மஹௌஷதிகள் சிறந்த பலனளிக்கின்றன. அவையாவன.

1. ஹிமஜா: குடியோட்டிப் பூண்டு: மஞ்சள் பாலுடன் கைப்புமுள்ள இலையும் மலமிளக்கிகுணமும் உள்ளது. கிருமி, சோபம், உதரம், பித்த ஜ்வரம் இவைகளைப் போக்கவல்லது.

2. காரவல்லி: மெதுபாகல். இது கைப்புச் சுவையும் உஷ்ணவீர்யமுமுள்ளது. கப-காஸம் இவைகளைப் போக்க வல்லது. ரஸத்தை முறித்துக்கட்டக் கூடியது.

3. கடுதும்பீ: காட்டுச்சுரை: கைப்பும் உரைப்பும் உள்ள இச்சுரை வாந்தியையும் ரேசனத்தையும் உண்டாக்கி சுவாஸ காஸங்களைப் போக்கும். வீக்கம், விரணம், வலி, விஷம் இவைகளைப் போக்கவல்லது.

4. ஜ்யோதிஷ்மதீ: வாலுளவை: இக்கொடி கசப்பும் சிறிது உரைப்பு முள்ளது. தீபனமளித்து மேதையை வளர்க்கக் கூடியது.

5. லிங்கினீ: ஐவிரல்கோவை: பச்சை நிறமும் வெளுத்த புள்ளியும் சிவலிங்கம் போன்ற உருவமுமுள்ளது. கைப்பும் வரட்சியும் கெட்ட மணமும் உள்ளது. சிறந்த ஸித்திகளையும் வச்யத்தையும் ரஸநியமனத்தையும் அயஸ்ஸ் தம்பனத்தையும் செய்யும்.

6. பாதாளகருடீ: கருடன் கிழங்கு. இக்கொடி ஸமூலம் உபயோகிக்க ஸர்ப்பம் முதலியவைகளின் விஷங்களைப் போக்கவல்லது. வசியமும் அளிக்கும்.

7. கிரிகர்ணீ: மலையமுக்கி. இது வெள்ளை நீலம் என இரு நிறங்களுள்ள புஷ்பங்களுடன் கிடைக்கின்றது. சீத வீர்யமும் கைப்புமுள்ளது. வெண்ணிறப் பூ உள்ளது விஷங்களைப் போக்குவதிலும் திரிதோஷ சமனத்திலும் சிறந்தது. நீல நிறப் பூ உள்ளது ரக்தாதிஸாரம், ஜ்வரம், எரிச்சல், உந்மாதம், பிரமம், சுவாஸம், விஷம் இவைகளைப் போக்கவல்லது.

8. திரவந்தீ: பெரியநேர்வாளம். நேர்வாளம் போல் சிறந்த விரேசனமாகும். உரைப்பும் உஷ்ணவீர்யமும் உள்ளது. கபபித்தங்களைப் போக்கி வயிற்றுப் பொருமல் வயிற்றுவலி, ஜ்வரம், இவைகளைப் போக்கி ஆமத்தை பாசனம் செய்யும்

9. வாராஹீ: பன்றிமோந்தான் கிழங்கு. கைப்பும் துவர்ப்புமுள்ளதும் விஷம், குஷ்டம், கிருமி, இவைகளைப் போக்கி பலமளிப்பதுமான ரஸாயனமாகும்.

10. தேவதாளீ: **பேய்ப்பீர்க்கு** தீக்ஷ்ண உஷ்ணவீர்யம் உள்ளதும் கைப்பும் உரைப்பு முள்ளதும் வாந்தி செய்யக் கூடியதுமான ஓஷதி இது. அர்சஸ், சுவாஸம், காஸம், காமாலை, சிலந்தி விஷம் இவைகளைப் போக்க வல்லது.

11. ஐந்திரீ: தும்மட்டி: பேய்தும்மட்டி. கைப்பும் உரைப்பும் சீதவீர்யமும் மலமிளக்கும் குணமுமுள்ளது. குல்மம், பித்தம், உதரம், கபநோய், கிருமி, குஷ்டம், ஜ்வரம் இவைகளைப் போக்கவல்லது. தும்மட்டியை விட பேய்த்தும் மட்டிக்கு வீர்யமதிகம்.

12. கோஜிஹ்வா: **பிராய்.** காவுஜபான் என வட தேசத்தில் கூறுகின்றனர். துவர்ப்பும் கைப்பும் சீத வீர்யமும் உள்ளது. பித்தத்தை குறைத்து விரணங்களை ஆற்றி விஷங்களைப் போக்கவல்லது.

13. காகதுண்டீ: காகணத்தி(?) இது இனிப்பும் சீத வீர்யமும் உள்ளது. ரஸாயனமாக திடமளித்து நரையைப் போக்க வல்லது.

14. ரக்தபாதீ: **தொட்டாற்சிருங்கி:** கைப்பும் சீத வீர்யமுமுள்ளது. ரஸாயனமாக திடமளித்து நரையைப் போக்கவல்லது. இதில் சிறிய செடியும் பெரிய இலையுமுள்ள செடியினம் கபவியாதிகளைப் போக்கி ரஸநியமனம் செய்யவல்லது.

15. ரக்தபாதீ: தொட்டாற்சிருங்கி: கைப்பும் சீதவீர்யம் உள்ளது. பித்தாதீஸாரம், வீக்கம், எரிச்சல், ஜ்வரம், சுவாஸம், விரணம், குஷ்டம் இவைகளைப் போக்க வல்லது. இதில்

சிறிய செடியும் பெரிய இலையுமுள்ள செடியினம் கப வியாதிகளைப் போக்கி ரஸநியமனம் செய்ய வல்லது.

16. அத்யம்லபர்ணீ: (வெற்றிலைப்புளி) நல்ல புளிப்புள்ள ஒரு வகை வெற்றிலை போன்ற இலையும் புளிப்புமுள்ளது. ப்லீஹம் சூலம், வாதம் இவைகளைப் போக்கி தீபனமளிக்க வல்லது.

17. கர்கோடகீ: வந்தியா: பழுபாகலும் காட்டுப் பழுபாகலும். பழுபாகல் அதிகக் கசப்பில்லாமலும், காட்டுப் பழுபாகல் அதிகக் கசப்புடனுமிருக்கும். உஷ்ண வீர்யமும் கபம் ஸ்தாவர விஷம் முதலியவைகளைப் போக்கும் சக்தியும் உள்ளது.

18. சரபுங்கா: கண்டபுங்கா: கொள்ளுக்காய் வேளை: முட்காய்வேளை (முக்காவேளை) வெள்ளை சிகப்பு கருப்பு நிறமுள்ள பூக்களுடன் மூன்று விதமாகக் கொள்ளுக்காய் வேளையும் முட்களுடன் முக்காவேளையும் கிடைக்கின்றது. இதனால் அஜீர்ணம், விஷூசீ, இளைப்பு, கபவாதநோய்கள், கிருமி, கிரஹணீ இந்நோய்கள் தீருகின்றன.

19. பிருங்கராஜம்: கையாந்தகரை. இது நீலநிறமுள்ள புஷ்பத்துடனும் மஞ்சள் நிறமுள்ள புஷ்பத்துடனும் (பொற்றலைக் கையாந்தகரை) கிடைக்கின்றது. கசப்பும் உஷ்ணவீர்யமுமுள்ள இது கண் தலைமயிர் இவைகளுக்குப் பலமளிக்கின்றது. கபம், வீக்கம், விஷம் இவைகளைப் போக்கும்.

20. குடூசி: சீந்திற்கொடி. கிழங்குடனும் கிழங்கில்லாமலும் இருவகையாகக் கிடைக்கின்றது. கிழங்குடனிருப்பது சிறந்தது. வியாதிகளைப் போக்கிச் சிறந்த ரஸாயனமாகின்றது. ஜ்வரம், விஷம், நரை, திரை, எரிச்சல்,

தாகம், வாயு, பிரமேஹம் முதலிய எல்லா நோய்களையும் போக்கவல்லது. வீர்யத்தில் உஷ்ணமும் ருசியில் கசப்புமானது.

21. மூர்வா: மருள். கசப்பும் துவர்ப்பும் உஷ்ண வீர்யமுள்ள இது ஹிருதய ரோகம், கபவாத நோய்கள், வாந்தி, பிரமேஹம், குஷ்டம், விஷமஜ்வரம் இவைகளைப் போக்க வல்லது.

22. சங்கபுஷ்பீ: சங்கங்குப்பி(?) சங்காஹுலீ என வடதேசத்தில் பிரஸித்தி பெற்றது. விஷ்ஸக்ராந்தி எனவும் சிலர். சீத வீர்யமும் கசப்பு ருசியும் உள்ள இது மேதை ஸ்வரம் இவைகளின் சக்தியை அதிகப்படுத்தி பூதகிரஹ தோஷங்களையும் போக்கி வசியமளிக்கவல்லது.

23. காகஜங்கா: காகஜங்கா என மலையாளத்திலும், மஸீ என ஹிந்தியிலும் கேஉயாடேஙள என வங்கத்திலும் அகேடீ என குஜராத்திலும் பிரஸித்தமானது. கசப்பும் உஷ்ணவீர்யமுமுள்ள இது கிருமி விரணம் செவிடு அஜீர்ணம் விஷமஜ்வரம் இவைகளைப் போக்கவல்லது.

24. சதாவரீ: தண்ணீர் விட்டான் கிழங்கு. சீமைத் தண்ணீர் விட்டான் கிழங்கு: தித்திப்பும் சீதவீர்ணமுமுள்ளது. விருஜ்யமும் ரஸாயனமுமாகும். ரத்தபித்தம் போன்ற பித்த நோய்களைப் போக்கவல்லது.

25. கோக்ஷுரம்: நெரிஞ்சிலும் ஆனை நெரிஞ்சிலும் பலம் புஷ்டி அளித்து நீர்ச்சுருக்கு, பிரமேஹம், எரிச்சல் இவைகளைப் போக்கவல்லவை.

26. காகமாசீ: மணத்தக்காளி: சிறந்த ரஸாயன மாகும்.

27. ஸூர்யகாந்தி: சீதவீர்யமும் ருசியில் கசப்பும் உரைப்பும் உள்ளது. குஷ்டம், கிரஹபீடை, குளிர்ஜ்வரம் முதலியவைகளைப் போக்கும்.

28. நாகுலி: கிரிபுரண்டான்: நத்தைச்சூரி எனச் சிலர். ஈசுவரீ எனப் பெயருமுண்டு. விஷத்தைப் போக்கி எல்லா வியாதிகளையும் அகற்றி பிள்ளைப்பேறுண்டாக்கும் செடி இது.

29. க்ஷீரகந்தம்: மேகத்தின் இடியினால் ஏற்படும் சப்தத்தில் ஏழு இலைகளுடனும் பாலுள்ள கிழங்குடனும் உண்டாகும் இக் கிழங்கு தண்டுடனும் தண்டில்லாமலும் கிடைக்கும். சிகப்பு நிறமுள்ள பாலுள்ளது விஷம் எனக் கருதப்படுகின்றது. குல்மம், இளைப்பு, உதரம் இவைகளைப் போக்கும். விரேசனகுணம் உள்ளது. இதைப் பாலுள்ள நிலப் பூசனிக்கிழங்கு என சிலர் கூறுவர்.

30. ஸிந்துவாரம்: நொச்சி: வெண்ணிறமும் நீல்நிறமுள்ள இரு வகை நொச்சிகள் கிடைக்கின்றன. ருசியில் கசப்பும் உரைப்பும், வீர்யத்தில் உஷ்ணமுமானது. கபவாத நோய்கள், க்ஷயம், குஷ்டம், அரிப்பு இவைகளைப் போக்கி தேஹஸித்தி அளிக்கவல்லது.

31. அரண்யகார்பாஸீ: காட்டுப்பருத்தி: சீத வீர்யமும் தாகம், எரிச்சல், பிரமை, மூர்ச்சை இவைகளைப் போக்கும் சக்தியும் உள்ளது.

32. கோகிலாக்ஷம்: நீர்முள்ளி: இனிப்பும் சீத வீர்யமுமுள்ளது. பித்தாதிஸாரம், கபம் இவைகளைப் போக்கும். விருஷ்யமாயும் பலகரமாயும் இருக்கும்.

33. பிரஹதீ: முள்ளுக்கத்திரி (சிறுவழுதினை-பெருவழுதினை) ருசியில் கசப்பு உரைப்பும் உஷ்ய வீர்யமுமுள்ளது. அருசி, அஜீர்ணம், இருமல், சுவாஸம், ஹிருதயரோகம் இவைகளைப் போக்கவல்லது. பெருவழுதினை கண்ரோகங்களில் அஞ்சன மிடத் தகுந்தது.

34. கண்டகாரீ: கண்டங்கத்திரி: ருசியில் உரைப்பும் கசப்பும் வீர்யத்திலுஷ்ணமுமான இக்கத்திரி தீபனமளித்து சுவாஸ காஸங்களைப் போக்கவல்லது. கபவாத நோய்களை யகற்றி க்ண்ணிற்கு நன்மை அளிக்கும். பிள்ளைப் பேறளிக்கவல்லது.

35. குஞ்சா: குந்துமணி. வெளுப்பு சிகப்பு கருப்பு நிறங்களில் கிடைக்கின்றது. இம்மூன்றும் கசப்பும் உஷ்ண வீர்யமுமுள்ளவை. வாந்தி-பேதி இரண்டையும் செய்யும். இதன் இலை வலியைப்போக்கி விஷத்தை அகற்றும். அதன் எண்ணெய் குஷ்டங்களைப் போக்கும்.

36. விருத்ததாருகம்: ஸமுத்திரப்பச்சை: இது பிசி பிசிப்பு அதிகமுள்ளது. கபவாத நோய்கள் இருமல் அஜீர்ணம் இவைகளைப் போக்கும்.

37. பாகுசீ-கார்போகரிசி: ருசியில் உரைப்பும் கசப்பும் உஷ்ணவீர்யமும் உள்ளது. கிருமி, குஷ்டம், கபம், தோல் வியாதி, விஷம், சொரி இவைகளைப் போக்கும்.

38. அபாமார்கம்: நாயுருவி. உரைப்பும் கசப்பும் உஷ்ணவீர்யமும் உள்ளது. கபத்தைப் போக்கி அர்சஸ், அரிப்பு, உதரம் போன்ற வியாதிகளைப் போக்கும். சிகப்பு நிறமுள்ளது. விரணம், விஷம் இவைகளைப் போக்கும். வாந்தியை உண்டாக்கி மலத்தையும் இளக்கும்.

39. பிரபுன்னாடம்: தகரவிதை. உரைப்பும் தீக்ஷ்ண குணமும் உள்ளது. மேதஸ-கபவாத நோய்கள், விரணம், சொரி, குஷ்டம் போன்ற நோய்களைப் போக்கவல்லது.

40. விஷமுஷ்டி: (விஷமூங்கில்?) இது சிறிய செடி. மலையில் உண்டாகும் வேம்பு வகை எனச் சிலர். ருசியில் உரைப்பும் கசப்பும் உள்ளது. தீபனமுண்டாக்கி கபவாத நோய்களையும் ரக்தபித்தம் எரிச்சல் விரணம் இவைகளையும் போக்கும்.

41. **காண்டீரம்:** *பிரண்டை:* ருசியில் உரைப்பும் கசப்பும் உஷ்ணவீர்யமுமுள்ளது. துஷ்டவிரணங்கள், சிலந்தி விஷம், உதரம், ப்லீஹை, சூலம், அக்னிமந்தம் இவைகளைப் போக்கவல்லது.

42. **ஹஸ்திகந்தம்:** நரளை(?) உரைப்பும் உஷ்ண வீர்யமுமுள்ளது. கபவாத நோய்களையும் தோல் நோய்களையும் போக்க வல்லது.

43. **ஸமுத்ரசோஷீ:** மதனகாமப்பூ(?) இதன் விதை சிறந்த விருஷ்யமாயும் பலமளிப்பதாயுமிருக்கும்.

44. **கோரக்ஷதுக்தீ:** *சிறு அம்மான் பச்சரிசி.* தித்திப்பும் சீத வீர்யமும் விருஷ்யகுணமுள்ளதுமாகும். வசியமளிக்கும்.

45. **பூபாடிலி:** நிலப் பாதிரி என மலையாளத்தில் வழங்கப்படுகின்றது. ரஸ ஸித்தியில் சிறந்தது.

46-53. **மேதா:** *அஷ்டவர்கம்.* மேதா-மஹாமேதா-காகோலீ. க்ஷீரகாகோலீ- ருத்தி-விருத்தி- ஜீவகம்-ருஷபகம் இவ்வெட்டுதிரவியங்களும் அஷ்டவர்கம் எனக் கருதப் படுகின்றன. இவை மேல் ரோமமுடனும் சிறிது கெட்ட வாடையுடனுமுள்ள எட்டு விதக் கிழங்குகளாகின்றன. இவைகள் முறையே நகம் தோல் கண் காது கால் மூக்கு நாக்கு கைவிரல் இவைகளைப் போலிருக்கும் இவை சீதவீர்யமும் தித்திப்பும் உள்ளவை. பித்தநோய்களைப் போக்கி சிறந்த பலமளித்து விருஷ்யமாகவும் ஆகின்றன.

54. **ஆதித்யபுத்திரம்:** *சிறிய ஸூர்யகாந்தி.* உரைப்பும் உஷ்ணவீர்யமுமுள்ளது. கபவாத நோய்களைப் போக்கும். உதரகுல்ம நோய்களைத் தடுத்துத் தீபனமளிக்கும்.

55. **ஹஸ்திகர்ணீ:** *மெருகன் கிழங்கு.* ப்லீஹம் ஜ்வரம் குல்மம் அஜீர்ணம் சோஷம் இவைகளைப் போக்கவல்லது.

56. கபிகச்சூ: பூனைக்காலி: தித்திப்பும் விருஷ்ய குணமுமுள்ளது. வாதம் க்ஷயம் இவைகளைப் போக்க வல்லது.

57. கர்ணஸ்போடா. கானபோடி என மலையாளத்தில் வழங்கப்படுகின்றது. கிரஹபூத பீடைகளையும், விஷத்தையும் நிவர்த்தி செய்யும்.

58. ருத்திரஜடா : விபூதிப்பச்சிலை. (ஸப்ஜா) உரைப்பும், உஷ்ண வீர்யமும் உள்ளது. காஸம் ஹிருதயரோகம் பூதகிரகபீடை இவைகளைப் போக்கவல்லது.

59. நீலி: அவுரி: ருசியில் கசப்பும் துவர்ப்பும் உஷ்ணவீர்யமுமுள்ளது. கேசத்தை வளரச் செய்யும். காஸம் கபம் அஜீர்ணம் வாதவியாதிள் விஷம் உதரம் குல்மம் ஆகந்துஜ்வரம் இவைகளைப் போக்கவல்லது.

60. கோசாதகீ, தித்தகோசாதகீ, பீர்க்கு, பேய்பீர்க்கு: கசப்பும் சிறிது துவர்ப்பும் உள்ளது. வாத பித்த கபதோஷங்களைப் போக்கி அரசஸ் விஷம் பூதபீடை சுவாஸகாஸம் இவைகளைப் போக்கவல்லது.

61. ஜீவந்தீ ஸ்வர்ணஜீவந்தீ: கீரைப்பாலை. இனிப்பும், சீத வீர்யமுமுள்ளது. ரக்தபித்தம் வாதநோய்கள், க்ஷயம் எரிச்சல் ஜ்வரம் இவைகளைப் போக்கவல்லது. ஸ்வர்ணஜீவந்தீ மஞ்சள் பூவும் பாலுமுள்ள கீரைப்பாலை யாகும். ஜீவந்தீயைப் போலவே சற்று குணமதிகமுள்ளது.

62. ஜதுகா: இதிலிருந்து கருப்பாக ஒரு வித அரக்கு உண்டாகின்றது. பூனைக்காலிக் காயைப் போன்று காயும் மெல்லிய கொடியுமுள்ளது. சீத வீர்யமானதால் பித்தத்தைக் குறைத்து ரக்தபித்தம் க்ஷயம் எரிச்சல் முதலியவைகளைப் போக்கும்.

63-64. முண்டீ: மஹாமுண்டீ: விஷ்ணுக்ராந்தா. சிவ கரந்தை - கொட்டைக்கரந்தை - விஷ்ணுகரந்தை சிவகரந்தை - சிகப்பு வெளுப்பு மஞ்சள் கருப்பு என நான்கு வகை. துவர்ப்பும் உரைப்பும் உஷ்ணவீர்யமுமுள்ளது. அரசஸ், காஸம் இவைகளைப் போக்கவல்லது. கொட்டைக்கரந்தை கசப்பும் உஷ்ணவீர்யமு முள்ளது. வாயுவைக் கண்டிக்கும். ஸ்வரத்தைச் சுத்திசெய்து ரஸாயனமாகும். விஷ்ணுகரந்தை உரைப்பும் கசப்பும் உஷ்ண வீர்யமுமுள்ளது. கபவாதநோய்களைப் போக்கவல்லது.

65. குமாரீ: கற்றாழை: சீதவீர்யமும் கசப்பும் சுவையுமுள்ளது. பித்தம் காஸம் சுவாஸம் விஷம் குஷ்டம் இவைகளைப் போக்கி ரஸாயனமாகின்றது.

66. பூம்யாமலி: கீழ்காய்நெல்லி: துவர்ப்பும் புளிப்பும் சீதவீர்யமுமுள்ளது. மூத்திரநோய் பித்தநோய்கள் விஷம் முதலியவைகளைப் போக்கும்.

67. பர்ஹிசூடா: மயில் தோகைப்பூண்டு. மயிலோசிக என மலையாளத்தில் வழங்கப்படுகின்றது. நீர்ச் சுருக்கு பால கிரஹம், வீக்கம், வசியம் இவைகளில் உபயோகப் படுகின்றது.

68. பிராம்மீ: லகுபிராம்மீ: வல்லாரை: பிரமிவழுக்கை. வல்லாரை ருசியில் துவர்ப்பும் கசப்பும் உள்ளது. ரக்தபித்தத்தை குறைக்கும். புத்தி மேதை ஞாபகசக்தி இவைகளை அளிக்க வல்லது. நீர்பிரமி அல்லது பிரமி வழுக்கை கசப்பும் சிறிது உஷ்ணமுமானது. வாதம், வீக்கம் அஜீர்ணம் இவைகளைப் போக்கும்.

69. தண்டுலீயகம்: சிறுகீரை. சீதவீர்யமும் இனிப்புமுள்ளது. விஷம் பித்தளரிச்சல் பிரமை இவைகளைப் போக்கி தீபனமாயிருக்கும்.

70. பாஷாணபேதம்: சிறுபீளை. இனிப்பும் கசப்பும் சீத வீர்யமுமுள்ளது. எரிச்சல், நீர்ச் சுருக்கு, கல்லடைப்பு இவைகளைப் போக்கும்.

71. ஹஸ்திசுண்டீ: துவர்ப்பு ருசியுள்ளது. ஸந்நிபாத ஜ்வரத்தைப் போக்கவல்லது.

72. சாங்கேரி: புளியாரை. புளிப்பும் உஷ்ணவீர்யமும் தீபனகுணமுமுள்ளது. ருசி அளித்து கிரஹணீ அர்சஸ் முதலியவைகளைப் போக்கும்.

73. பிரும்மதண்டீ: இது உரைப்பும் உஷ்ண வீர்யமுமுள்ளது. கபம் வீக்கம் வாயு இவைகளைப் போக்கும்.

74. தாமலி: வெற்றிலை. துவர்ப்பு ருசியுள்ளது. கபத்தைப் போக்கி முகம் காது வாய் இவைகளிலுள்ள ரோகத்தைப் போக்கவல்லது.

75. ஆகாசவல்லி: ஆகாசக்கக்கரி(?) ருசியில் இனிப்பும் உரைப்புமானது விருஷ்யம் ரஸாயனம் பலகரம் என்ற சிறப்புடன் பித்தத்தைப் போக்குவதிலும் மஹிமை வாயந்தது.

76. ஸஹதேவீ: நெய்சட்டிபூண்டு. ஜ்வரத்தைப் போக்கி ரக்தத்தையும் பித்தத்தையும் தெளிவு படுத்தும்.

77. லக்ஷ்மணா: நருந்தாளி: சிறந்த போகசக்தி விளைக்கும் செடி இது.

78. பூக்தம்பம்: நிலக்கடம்பு (அஸாருன்?) சிறந்த மணத்துடன் இருக்கும். வாயுவைக் கண்டித்து வாய்துர்நாற்றம் முதலியவைகளைப் போக்கவல்லது.

79. திலகந்தம்: எள்ளைப் போன்ற புள்ளிகளுடன் கூடிய இக்கிழங்கு லோஹங்களை திரவமாக்குவதில் விஷத்தைப் போக்குவதிலும் சிறந்தது.

80. விஷ்ணுகந்தம்: இது பாம்பு விஷத்தைப் போக்குவதிலும் ரஸபந்தனத்திலும் சிறந்த நீரிலுண்டாகும் கிழங்கு.

81. திரிகர்ணிகா: சிறுபுள்ளடி: பூச்சிகளை அழிப்பதிலும் ரஸத்தை ரஞ்சனம் செய்வதிலும் இம் மூலிகை சிறந்தது.

82. நாகதந்தீ: பாம்பின் படம் போன்ற அடையாளமுள்ள இக் கொடி ருசியில் உரைப்பும் கசப்பும் ரூக்ஷகுணமும் உள்ளது. மேதையை அளித்து விஷத்தைப் போக்கும்.

83. துரோணபுஷ்பி, மஹாதுரோணி: தும்பை-பெருந்தும்பை. உரைப்பும் உஷ்ணவீர்யமுமுள்ளது. ருசி தரும். கபம் அக்னிமந்தம் வாதநோய் இவைகளைப் போக்கும். பெருந்தும்பை ரஸசுத்தியிலும் சிறந்தது.

84. அம்ருதஸ்ரவா: சிறிது கசப்பும் துவர்ப்பும் உள்ளது. விரணம் விஷம் குஷ்டம் காமாலை வீக்கம் முதலியவைகளைப் போக்கும்.

85. புத்திரதாத்ரீ: கபவாதங்களைப் போக்கும். வரட்சி அளிக்கும். மலட்டுத் தனத்தை நீக்கும்.

86. சால்மலிகந்தகம்: இதன் கிழங்கு மல பந்தத்தைப் போக்கும். சீதவீர்யமானதால் பித்தளரிச்சல் தாகம் தாபம் இவைகளைப் போக்கும்.

87. ஆவர்தகீ: பனச்சி: துவர்ப்பும் புளிப்பும் சீதவீர்யமுமுள்ளது. பித்தத்தைப் போக்கவல்லது.

88. அம்லபத்ரீ: இது சிறந்த புளிப்புக் கீரையாகும். பித்தாதிக்யத்தைக் குறைக்க வல்லது.

ஆக இவ்வெண்பத்தெட்டு மஹௌஷதிகளும் ரஸஸித்தியில் சிறந்தவைகளாகும்.

ஆனந்தகந்தம் முற்றிற்று.

எமது வெளியீடுகள்

ஜாதக அலங்காரம்	125-00
காலபிரகாசிகா	100-00
நக்ஷத்திர சிந்தாமணி (பாகம்-I)	200-00
நக்ஷத்திர சிந்தாமணி (பாகம்-II)	100-00
அமரகோசம் (பாகம்-I)	65-00
அமரகோசம் (பாகம்-II)	60-00
அமரகோசம் (பாகம்-III)	60-00
பிரகதீஸ்வர மாகாத்மியம்	43-00
ஜைனிஸம் கேட்லாக்	10-00
தக்ஷிணாமூர்த்தி ஸம்ஹிதை	35-00
காயத்ரீ கோசம்	30-00
கீதகோவிந்தம்	25-00
கல்பலதா (ஸ்ரீருத்ரபாஷ்யம்)	22-00
பாணினீய தாதுபாடம்	30-00
விருத்தரத்னாவளி	30-00
பலவதி	120-00
நந்திநாகரி சுவடிகளின் அட்டவணை	25-00
பிரபஞ்சசாரசார ஸங்கிரஹம் (பாகம்-I)	180-00
பிரயோக ரத்னமாலா	55-00
ரத்ன பரீக்ஷை	40-00
சப்தம் தாளம் சொற்கட்டு	40-00
ஸாம்ராஜ்ய லக்ஷ்மீ தீபிகா	100-00
ஸ்தோத்ர ராமாயணம்	25-00
நாககுமார காவியம்	55-00
விமானார்ச்சன கல்பம் (பாகம்-II)	75-00
சூலினிகல்பம்	50-00
சூர்யசதகம்	50-00
தஞ்சை நாயக்கர் வரலாறு	205-00
யதிராஜவிஜயம்	35-00
பிரபோதசந்திரிகை	70-00

OUR OTHER PUBLICATIONS

Nauka Charitram	Sanskrit & Tamil	30-00
Sita Kalyanam	Sanskrit & Tamil	35-00
Gayatri Kosam	Sanskrit & Tamil	30-00
Ragaratnakaram	Sanskrit & Tamil	15-00
Dhanyakumaracharitram (Dharmaneri Kathai)	Sanskrit & Tamil	44-00
Kandukapura Mahatmyam	Sanskrit & Tamil	25-00
Ramachinthamani Aaruudam (Nandinagari Catalogue)	Sanskrit & Tamil	25-00
Vruttaratnavali (Chandas Sastram)	Sanskrit & Tamil	30-00
Kalanandakam	Sanskrit & Tamil	55-00
Prabodha Chandrika (Grammer)	Sanskrit & Tamil	70-00
Sirungarakosam	Sanskrit	12-00
Vedasara Siva Sahasram	Sanskrit	80-00
Stotra Ramayanam	Sanskrit	25-00
Mukunda Vilasam	Sanskrit	35-00
Vinatananda Vyayoga	Sanskrit	40-00
Kumaresa Satakam	Tamil	65-00
Lokaswarupam	Tamil	75-00
Kanakkathikaram	Tamil	150-00
ThiruvappanurPuranam	Tamil	50-00
Sowmiya Sagaram	Tamil	70-00
Jatakachandrika	Tamil	40-00
Marathi Lavani Songs	Marathi	35-00
Nakshatra Chinthamani (Part - I)	Tamil	200-00
Nakshatra Chinthamani (Part - II)	Tamil	100-00

வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள் அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும் பனை ஓலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவை பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் சரசுவதி மகாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவை மக்களுக்குப் பயன்படும்.

மகாலுக்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப்புகழை, பெருமைசால் சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயர் இடம்பெறுவதோடு, அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே, நாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம் என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

சரசுவதி மகால் நூலகம்.
தஞ்சாவூர்

மாவட்ட ஆட்சித்தலைவர்
மற்றும் இயக்குநர்